21562
to
21313.


அர்ஜுனர்மலம்
41
24
40
5-10-1939




21536
21536

215362

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3 0 OCT 1939
MADRAS

543

REGD No. M. 2913. ARYADHARMAM Estd. 1915
TAMIL WEEKLY.

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓணை.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்யஃ பரிபாலயந்தாம் ந்யாய்யேன மார்கேண மஹீம் மஹீசாஃ ।
கோப்ராஹ்மணேப்யஃ சுபமஸ்து நித்யம் லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகினோ பவந்து ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒருபத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஐ புரட்டாசி-மீ 19உ 1939 ஐ அக்டோபர்-மீ 5உ | வா-40

சென்னை ராஜதானி முழுவதும்
ஆலயப் பிரவேசத்துக்கு பலத்த எதிர்ப்பு

நாடெங்கும் நடந்த கூட்டங்களின் நடவடிக்கைகளின் விபரம்

மே. த. வைதிகர்களுக்கு ஆலயப்பிரவேச மசோதாவை எதிர்க்கவேண்டுகோள்

ஆலயப்பிரவேசத்துக்கு எதிர்ப்பு

காஞ்சியில் மாபெருங் கூட்டம்

மே. த இராஜப்பிரதிநிதிக்கு வேண்டுகோள்

பெரிய காஞ்சிபுரம் ஸ்ரீ சங்கர மடத்தில் 21-9-39 மகில 3-30 மணிக்கு காஞ்சிபுரம் ஆஸ்திக ஹிந்துக்களின் கூட்டம் நடைபெற்றது.

கவிவல்லப ஸ்ரீ டி. கே. பாஷ்யகாசாரிய ஸ்வாமிகள் தலைமை வகித்தார்.

ஆரம்பத்தில் தெய்வ வணக்கம் நடைபெற்றது.

தலைவர் ஆலயப்பிரவேச இயக்கத்தைப் பற்றி ஒரு விரிவுரை நிகழ்த்தினர்.

பின்னர் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டன:—

ஸ்ரீ M. K. ராமசந்திர சர்மா பிரேரேபித்து, ஸ்ரீ T. L. சடகோபாசாரியார் ஆமோதித்து, ஸ்ரீமதி M. V. மீனாக்ஷி அம்மாள் ஆதரித்துக் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேறியது:—

"பிரபல சட்ட நிபுணர்களாலும், அரசியல் வாதிகளாலும் கண்டிக்கப்பட்டதும், ஹிந்து மத சாஸ்திரங்களுக்கு விரோதமானதும், மாட்சிமைதங்கிய மன்னர்பிரான் மக்களுக்கு மனத்தாங்கலையும் வகுப்புவேஷத்தையும் மூட்டக்கூடியதாயிருக்கும் சென்னை ஆலயப் பிரவேசச்சட்டத்திற்கு மே. த. இராஜப்பிரதிநிதி அனுமதி அளித்ததை இக்கூட்டம் வன்மையாகக்கண்டிக்கிறது".

"ஆலயப்பிரவேசஇயக்கத்தினரும் காங்கிரஸ் மந்திரி சபையினரும், இந்தியர்களின் வரிப்பணத்தினாலும், ஹிந்துகோவில்களின் வருமானத்தினாலும் நடத்து வரும் ஹிந்து மத தர்ம பரிபாலன போர்டாரும் நடத்தி வரும் பிரசாரத்தால் ஸ்ரீரங்கம், மதுரை, திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத்தூர், முதலிய இடங்களில் நடந்ததுபோல் நாட்டில் பல இடங்களில் கலகமும், குழப்பமும் நடக்காமலிருக்க வேண்டி உடனே இந்த ஆலயப்பிரவேசச் சட்டத்தை அமுலுக்கு கொண்டு வராமல் நிறுத்திவைக்கும்படி மே. த. இராஜப்பிரதிநிதியை இக்கூட்டம் பிரார்த்தித்துக்கேட்டுக்கொள்ளுகிறது."

ஸ்ரீமதி எஸ். லக்ஷ்மி அம்மாளால் பிரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீமதி வி. ஸி. மங்களாம்பாளால் ஆதரிக்கப்பட்டு, ஸ்ரீமதி வெங்கட லக்ஷ்மி அம்மாளால் ஆமோதிக்கப்பட்டுக் கீழ்கண்ட தீர்மானம் நிறைவேறியது:—

"ஸ்ரீரங்கம், திருநெல்வேலி, ஸ்ரீ வில்லிபுத்தூர் முதலிய இடங்களில் சத்யாக்ரஹம் நடத்திய ஆஸ்திக ஸ்திரீகளை இக்கூட்டம் பாராட்டுகிறது.

ஹிந்து ஆலயங்களைப் பாதுகாக்க வேண்டி சத்யாக்ரஹம் செய்த ஸ்திரீகளை முரட்டுத்தனமாக அதிகாரிகள் நடத்தியதைக் கண்டித்தும், அவர்களுக்கு உதவி செய்யவும், ஆலயங்கள், மடங்கள் முதலியவைகளின் புனிதத்தன்மையைப் பாதுகாக்கவும் ஒரு தர்ம சம்ரக்ஷண சேவக படையை ஆரம்பிப்பதாகவும்" ஒரு தீர்மானம் ஏக மனதுடன் நிறைவேறியது.

ஸ்ரீமான் டி. கே. பாஷ்யகாசார்ய ஸ்வாமிகள் பிரேரேபித்து, மாஜி கூட்டுறவு ஐக்கிய சங்கங்களின் உதவி ரிஜிஸ்திராரான ஸ்ரீ கே. நாராயணஸ்வாமி முதலியார் ஆதரித்து, ஸ்ரீ ஆர். கே. வெங்கட்டராம சாஸ்திரியார் ஆமோதித்துக் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறியது.

"இக்கூட்டம் தனது ராஜவிஸ்வாசத்தை மாட்சிமை தங்கிய மன்னர்பிரானுக்குத் தெரிவித்துக்கொண்டு, ஐரோப்பா யுத்தத்தில் மா. த. மன்னர் பிரானுக்கு உதவி செய்வதாக வாக்குறுதி அளிப்பதை மன்னர் பிரான் கவனத்துக்குக் கொண்டு வரும்படி மே. த. இராஜப்பிரதிநிதியை வேண்டிக் கொள்ளுகிறது.

"ஹிந்து மதத்தையும், தர்மத்தையும் பாதுகாப்பதாகச் சொல்லி மா. த. மன்னபிரானின் முன்னோர்கள் விடுத்த பிரகடனங்கள், வாக்குறுதிகளின்படி மா. த. மன்னர்பிரான்

தொடர்ச்சி 3 பக்கம் பார்க்க

டாக்டர் ராஜன் கூற்றை நம்புவதா?

காந்திஜியின் பகூபாத அறிக்கை

குடந்தை கூட்டத்தில் கண்டனம்

ஸ்ரீரங்கம் தடியடி ஸம்பவங்களைப்பற்றியும் வேறு சில விஷயங்களைப்பற்றியும் காந்திஜி வெளியிட்டுள்ள பகூபாதம் நிறைந்த அறிக்கையைக் கண்டிப்பதற்காக செப்டம்பர் 30ஆ சனிக்கிழமை மாலை 7 மணிக்குக்கும்ப கோணம் ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோவில் கேபுரி வாசலில் பெரிய பொதுக்கூட்டம் ஒன்று கூடைபெற்றது. ஸ்திரீகளும், புருஷர்களும் ஏராளமாகக்கூடியிருந்தனர். விஸிஷ்டாத்வைத ஸபையை முன்னிட்டு வந்திருக்கும் அநேக வெளியூர் பண்டிதர்களும் வந்திருந்தனர்.

சோங்குளம் ஸ்ரீ அண்ணத்திரை கனபாடிஸ்வாமிகள் அக்ராஸனம் வஹித்தார்கள்.

ஸ்ரீ அஹோபில மடம் ஆந்தான வித்வானும், ஸ்ரீகார்யமுமான ஸ்ரீமான் அம்மணப் பாக்கம் நரஸிம்ஹாசாரியர் பேசுகையில் ஆலயப்பிரவேச விஷயமாக சாஸ்திர அபிப்பிராயங்களையும், பலவித யுக்தி நியாயங்களையும் எடுத்து நிரூபணம் செய்தார். நீண்டாதார் ஆலயப்பிரவேசத்தை வேண்டவில்லை யென்றும், அது அவர்களுக்கு இகபர நன்மைகளை தாதென்றும், காங்கிரஸ்காரர்கள் தங்கள் கக்ஷி வளர்த்திற்காக இந்த விபரீத காரியத்தைச்செய்வது நியாயமல்லவென்றும், சாஸ்திர தத்வங்களை அறிந்த பண்டிதர்கள் சொல்வதைக்கேளாமல் காங்கிரஸ்காரர்கள் தங்கள் மனம் போனபடி அபத்தமாக சாஸ்திரம் பேசுவதுஹித்திக்கூடியதாயில்லையென்றும், நீண்டாதார் கோவிலுக்கு வெளியிலிருந்து ஸ்வாமி தர்சனம் செய்வதால் எவ்விதக்குறைவுமில்லையென்றும், அப்படிச்செய்வதே அவர்களுடைய க்ஷேமமென்றும், சாஸ்திரமான தீண்டாதார் விஷயத்தில் மிகுந்த கருணை காட்டியிருப்பதாயும், மந்திரிகள் ஸரியான வழியில் போகவேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

பிறகு மன்னர்குடி ஸ்ரீ ராஜகோபால ஸ்வாமிகோவில் பட்டாசாரியாரான ஸ்ரீமான் ராஜகோபால தீக்ஷிதர் பேசுகையில் காங்கிரஸ் மந்திரிகளின் செய்கைகளை தீவிரமாகக் கண்டித்ததுடன், தேவாலயங்களில் நடக்கும் பார்த்தஸாரதி ஸ்வாமி தீண்டாதார் உள்பட எல்லா பிரஜைகளுடையதும், அரச னுடையதும் க்ஷேமத்திற்காகவே நடைபெறுகிறதென்றும், சைவ, வைஷ்ணவ ஆகமங்கள் நிட்டமாக ஆலயப்பிரவேசத்தைத் தடுத்திருக்கின்றனவென்றும், தேவாலயங்கள் பலாத்காரமாக அகத்த மார்க்கட்டால் பூஜகர்கள் ஆலயங்களை பஹிஷ்காரிக்கவேண்டுமென்றும், ஸத்யாக்ரஹத்தை கொண்டு ஸநாதர்மத்தை ஸம்ரக்ஷிக்க யாவரும் முன் வரவேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார்.

அதன் பின் ஸ்ரீராமானுஜதாத்தாசாரியர் பேசுகையில், ஸ்ரீரங்கத்தின் நிர்வாக விஷயமாக காந்திஜியின் அபிப்பிராயத்தை, யுத்த விஷயமாக ஸனாதர்மிகள் கொள்ளவேண்டிய விஷயங்களை விவரமாக எடுத்துக் கூறினர்.

ஸ்ரீரங்கத்தில் தடியடி நடத்த பிறகு கூடாஜனங்கள் பீதியடையாமல் உறுதியுடன் ஆலயப்பிரவேசத்தை எதிர்த்து வருவதாயும், பொதுஜன அபிப்பிராயத்தை அறிய முனிஸிபாலிடித் தீர்மானத்தை ஒரு கருவியாக உபயோகிக்க முன் வந்திருப்பது அக்கிரமென்றும், டாக்டர் ராஜன் முனிஸிபல் கூட்டத்திற்குப் போய் கௌன்ஸிலர்களை ஆலயப்பிரவேசத்துக்கு ஆதரவாகத் தீர்மானம் செய்யும்படி தூண்டி விடுவது அநியாயமென்றும், முனிஸிபல் வோட்டர்களிடம் கையெழுத்து வாங்கி வருவதில் மிக மிகப் பெரும்பான்மையோர் ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பது வெளியாகியிருக்கிறதென்றும், ஆலய தர்ம ஸம்ரக்ஷண ஸபையின் தலைவர் நிவான்பஹதூர் ஸ்ரீ ராகவ அய்யங்காரும் உபதலைவர் ஸ்ரீமான் மாஜி போலீஸ் ஸூபரண்டெண்ட் நாராயண அய்யங்கார் ஸ்வாமியும் தங்கள் பதவிகளை ராஜிகாமா செய்து விட்டதாக ஏகர்கள் பத்திரிகைகளில் வெளியிட்டது வெறும் பொய்யென்று வெளிப்பட்டு விட்டதாயும் கூறினர்.

மேலும் காந்திஜி அறிக்கையானது காங்கிரஸ் அதிகார வர்க்கத்தின் பொய்யுரைகளை அப்படியே காந்திஜி நம்பி வெளியிட்டதாயிருக்கிறதென்றும், அது பகூபாதமாயிருப்பதாயும், ஸாதனிகேதாந்திஜி கேவலமாகப் பேசுவது கண்டிக்கத்தக்கதென்றும் சொன்னார்.

யுத்த விஷயமாகக் காரியக்கமிட்டியின் போக்கைக்கண்டித்து, சக்கர்த்தியின் பிரஜைகளாகிய ஸனாதனிகள் யாவரும் இந்த யுத்தத்தில் பிரிட்டனுக்கு வெற்றியேற்பட பிரார்திக்கவேண்டுமென்றும் கூறினர்.

ஜஸ்டிஸ், சு. ம. கக்ஷியாரை விட காங்கிரஸ்காரர்களே இப்போது பெரிய வகுப்பு வாதிகளாயிருப்பதாயும் காங்கிரஸ் கூட்டங்களில் பிராம்மணர்களும், மதாசார்யர்களும் கண்டபடி தூஷிக்கப்படுவதாயும், ஸனாதன தர்மம் பரிஹஸிக்கப்படுவதாயும், ஹிந்து மத தூஷணம் செய்யப்படுவதாயும், இரண்டு வருஷ ஆக்ஷியிலேயே காங்கிரஸ்காரர்கள் இவ்வளவு தீமை செய்ய முற்பட்டு விட்டதால் இனி பிரிட்டிஷாருடைய ஆக்ஷியே விரும்பப்பட வேண்டி வரும் போலிருக்கிறதென்றும், ஜஸ்டிஸ் ஆக்ஷியில் கூட இவ்வளவு மத விரோத காரியம் நடைபெற்ற தில்லை யென்றும் கூறினர்.

பிறகு தலைவர் முடிவுரை கூறுகையில், ஆகமங்களில் பிராயச் சித்தாதிகாரத்தை இனி எடுத்து விடவேண்டியது தானென்றும் தீண்டாதார்கோவிலில் போகலாமென்றால், பஹிஷ்டாஸ்திரீகளும், சாவு தீட்டுக்காரர்களும், மற்ற அசுத்தர்களும் கோவிலில் புகுவதை எந்த சாஸ்திரத்தைக்கொண்டு தடுக்கமுடியுமென்றும், அதற்குமட்டும் ஆகமம் வேண்டியிருக்குமா? அல்லது சாவு தீட்டுக்காரர்களும் போகலாமென்றும் அதனால் தெய்வ ஸான்னித்யம் போகாதென்றும் காங்கிரஸ் மந்திரிகள் தீர்ப்புச் செய்வார்கள் போலிருக்கிறதென்றும் கூறினர்.

ஸ்ரீமான் அக்கிஹோத்ரம் சக்ரபாணி பட்டாசாரிய ஸ்வாமிகளால் யாவருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு இரவு 10 மணிக்குக் கூட்டம் முடிவுபெற்றது. க. நி

(3-பக்கம் தொடர்ச்சி)

கின விவேஷத்தில், நாம் தெரிந்துகொள்ள வேண்டியது:—

1. யார் யார், எந்த எந்தக் கோவில்களுக்கு சமீபத்தில் வசிக்கிறார்களோ அவர்கள் பிரஹ்மோத்ஸவம் கோவிலுக்குப் போய் ஸ்வாமி தரிசனம் செய்யவேண்டும்.

2. மனக்நோறும் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் 10 நிமிஷமாவது "பகவந்நாமாவை" ஏகாக்ர சித்தத்துடனிருந்து ஜெபிக்க வேண்டும்.

3. இயன்றமட்டும் கட்டாயம் தர்மம் செய்யவேண்டும்.

ஸ்ரீசங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்களுக்கு விஸ்வரூப யாத்ரா காலத்தில் அளித்த பத்ரம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் பீடத்தில் 68வது ஆசார்யாளாகத் தற்பொழுது அலங்கரிக்கும் பரமாசார்யாளே அனேகருக்கும் கன்கு தெரியும். ஸ்ரீஸ்வாமிகள் அவர்கள் 1907ஆ தனது 13வது வயதில் உலகப்பற்றைத் துறந்து, காவியுடை தரித்து "லோககுரு" என்னும் உன்னதபதவியை அடைந்தார்கள். கேரளத்தில் அநிஷ்டானம் அடைந்திருக்கும் இக்கப்பீடத்தைச் சேர்ந்த "பகவந்நாம போதேந்த்ராள்" மாதிரி, அநேக காலம் அமர்ந்து, நாம் அனைவரும் க்ஷேமமாயிருக்கத் தாம் ஒருவர், முக்காலங்களிலும் "ஸ்ரீநிரிபுரசுந்தரிஸமேத ஸ்ரீ சந்திர மௌளீசுவரருக்கு" பில்வார்ச்சனை செய்து வருகிறார்கள். தம்மிடம் வரும் லக்ஷகோடிகளுக்கு, "நமக்கு உடல் ஒரு வியாதி, இதைப்போக்க அத்வைத ஞானமே சிறந்த ஔஷதம்" என்று ஸதா ஸதுபதேசம் செய்து, நம் க்ஷேமத்தையே முக்கியமாகக் கருதுவர்கள்.

கும்பகோணத்தில் லக்ஷார்ச்சனை, லக்ஷ தீபம், லக்ஷ ப்ராமண சந்தர்ப்பணையும், திருவானைக்காவல் க்ஷேத்ரத்தில் ஸ்ரீ அகிலாண்டேசுவரிக்குத் தாடங்க ப்ரதிஷ்டையும், இமயம் முதல் ஸேதுவரையில் சென்ற 20 வருஷங்களாக அநேக க்ஷேத்ராடனம், தீர்த்தாடனம் செய்து, ஸ்ரீ சந்திர மௌளீசுவர பூஜை, ப்ரும்மண சந்தர்ப்பணை, வித்வத் சம்பாவனை, ஆலயத் திருப்பணி, கும்பாபிஷேகங்கள், வேத பாடசாலைகள் ஏற்படு செய்துவிட்டு, விஜய பூஜைக்கு இந்த வருஷம் நம் க்ஷேத்ரத்திற்கு, நாம் செய்த பாக்கிய விசேஷத்தால் வந்தார்கள். பிரிதருத்தில், ஸ்ரீ காஞ்சி காமாட்சி அம்மன் ஆலயத் திருப்பணியும், ஸ்ரீசக்ராகார மான வெள்ளித்த கைங்கர்யமும், பக்த கோடிகளின் க்ஷேமத்தை நாடிச் செய்து வருகிறார்கள். ஸ்ரீ நாகேசுவர் திருமஞ்சனவீதியென்ற மற்றொருபெயரால் அழைக்கப்படும் இந்த அக்ரஹாரம் இன்றைக்குத் தான் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அவர்கள் மடத்துக்கெதிரு என்பதாயிற்று. ஸ்ரீசங்காசார்ய ஸ்வாமிகள் என்ற பிரப்நாமம் அனேகருக்கும் 'குரு' நாம்அனைவரும் அவர்களுடைய சிஷ்யர்கள் என்பதுவும்நமக்கே தெரியாதிருந்த அநேகருக்கு இப்பொழுதுதான் நன்கு தெரிந்தது. சென்ற 90 நாட்களாய், 24 மணி நேரமும் ஓயாமல், மகாமக்கு கூட்டமாயிருந்த இந்தத் தெரு, நாளை முதல் சுமார் 15 நாளைக்கு சேஷஹோரம் அன வீடு மாதிரி இருக்கும்.

நிரம் செய்த ஜென்மாந்திர பாக்கியத்தால் ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்கள் "விசுவரூப யாத்ரை ஆரம்பித்து" திருவிடைமருதூர், கோவிந்தபுரம், திருவலம்காடு, அணைக்குடி, வேப்பத்தூர், திருவிசநல்லூர், முதலிய சுற்றுப்பக்க க்ராமங்களில் யாத்ரை செய்துவிட்டு, ஸ்ரீ நவராத்ரி பூஜைக்கு இங்கே வருகிறார்கள். நவராத்ரி 9 நாட்களிலும் அன்ன ஆகாரம் இல்லாமல் தேவியைப்பூஜை செய்யும் வைபவத்தையும், ஸுமங்கலிகளை ஆராதிக்கும் காட்சியையும் நாம் கேரில் பார்க்கப்போகிறோம்.

ப்ரபு அவர்கள் இங்கே 90 நாட்கள் தங்

தொடர்ச்சி 2-பக்கம் பார்க்க

1-பக்கம் தொடர்ச்சி

கடந்தமத விஷயங்களில் காங்கிரஸ் மந்திரி சபையின்ர் செய்துவரும் காரியங்களை மேற்கொண்டு செய்யாமலிருக்கச் செய்து ஹிந்து மதத்தையும், தர்மத்தையும் பாதுகாப்பார் என்று நம்புகிறது" என்ற தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேறியது.

மேற்படி தீர்மானங்களின் நகல்களை கனம் இந்தியாமந்திரி மே. த, வைசிராய், மே. த. சென்னை கவர்னர், அ. இ. வ. ஸ். சங்கம், தலைவர் அ. இ, ஹிந்து மகாசபை, எல்லா மடாதிபதிகளுக்கும், பத்திரிகைகளுக்கும் அனுப்புவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

பலவித்தில் உதவிசெய்துவரும் மே த. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி, ஸ்ரீ சிருங்கேரி மடாதிபதி, ஸ்ரீ அஹோபில மடாதிபதி ஸ்ரீ பூரி மடாதிபதி, ஸ்ரீ வானமாமலை மடாதிபதி, முதலிய அதிபர்களுக்கு வந்தனம் செலுத்துவதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது. வந்தனோபசாரம் கூறிபின் கூட்டம் கலைந்தது. (ஒ.நி)

ஆலயப்பிரவேச தீர்மானத்தின் கதி

ஸ்ரீரங்கம் நகரசபையில் எதிர்ப்பு,

அங்கத்தினர்கள் பெரும்பாலோரின் ஆட்சேபணை

"ஸ்ரீ ரங்கநாதஸ்வாமி தேவஸ்தான நிர்வாக அதிகாரிகள் பொதுஜன வேண்டுகோட்கிணங்கி ஸ்ரீ ரங்கநாதன் கோவிலை தீண்டாதாருக்குத் திறந்துவிட வேண்டுமென்றும், சென்னை மாகாண ஆலயப் [illegible] வழிவகுத்திருக்கின்றதும் இந்த சபை தீர்மானிக்கிறது." என்று டாக்டர் V. சுப்பிரமணிய அய்யர் கொண்டு வந்த அவசரத் தீர்மானத்தைப்பற்றி சபையில் விவாதிக்கவேண்டி 29—9—39 மாலை ஸ்ரீரங்கம் நகரசபையின் விசேஷக்கூட்டம் கூடிற்று.

சேர்மன் ஸ்ரீ K. வாசுதேவ ஐயங்கார் தலைமை வஹித்தார்.

டாக்டர் சுப்பிரமணிய ஐயர் தன் தீர்மானத்தை வாபீஸ்வாங்கிக் கொள்வதாக கூட்டத்தில் தெரிவித்தார்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீ ரங்கநாத ஸ்வாமி தேவஸ்தானத்து நிர்வாக அதிகாரிகள் சபைக்கு எழுதிய கடிதத்தில் "கோவிலுக்கு கைங்கரியம் செய்பவர்களில் பெரும்பாலோர் தீண்டாதார் ஆலயப்பிரவேசத்துக்கு ஆதரவு காட்டியிருப்பதாகவும், இந்த விஷயமாக, சபையின் அபிப்பிராயத்தை தாங்கள் அறிய விரும்புவதாக ஓர் கடிதம் எழுதி இருந்தார்கள். இந்தக் கடிதத்தைப்பற்றி சபையில் விவாதம் நடைபெற்றது.

உடனே ஸ்ரீ E-V.ஸ்ரீனிவாசாசாரியார் கிழ்கண்ட தீர்மானத்தை பிரேரேபித்தார். "நிர்வாக அதிகாரி கேட்கும்பக்ஷத்தில் நகரசபை அங்கத்தினர்கள் தங்கள் தனிப்பட்ட அபிப்பிராயத்தைத் தெரிவிக்கலாம்" தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேறியது. இந்த நகரசபைக் கூட்டத்தின் நடவடிக்கைகளை கவனிக்க ஏராளமாய் ஸனாதனிகள் கூடியிருந்தார்கள்.

ஸ்ரீரங்கம் நகரசபை அங்கத்தினர்களில் பெரும்பாலோர் ஆலயப் பிரவேசத்துக்கு எதிரிடையாக இருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஆலயப் பிரவேசத்துக்கு பலத்த எதிர்ப்பு

திருநெல்வேலி வனிதனிகளின் அறிக்கை

திருநெல்வேலி ஹிந்து தர்ம பரிபாலன சங்கத்தின் தலைவர் ஸ்ரீமதி S. ருக்குமணி அம்மாள் பூறிவிப்பதாவது:—

"தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தை திருநெல்வேலி பொதுஜனங்கள் எதிர்க்கிறார்கள்.

திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் மூலம் சென்னை ஹிந்து மத தர்மபரிபாலன போர்டாருக்கும், கனம் டாக்டர் ராஜனுக்கும், சென்னை கவர்ன்மெண்டுக்கும் 27—9—39 ஒரு மகஜர் அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த மகஜரில், ஆலயப்பிரவேசத்தை எதிர்த்து ஸ்ரீ நெல்லையப்பர் கோவிலைச் சேர்ந்த பரம்பரை தீக்ஷதர் குடும்பத்தைச் சேர்ந்த ஆறு தீக்ஷதர்களும், 26 அர்ச்சகர்களும் கையெழுத்திட்டிருக்கிறார்கள்.

அந்த மகஜரில்,

"அநேக அர்ச்சகர்களும், தீக்ஷதர்களும் பக்தர்களும் தீண்டாதார் ஆலயப் பிரவேசத்துக்கு எதிரிடையாயிருப்பதால் கவர்ன்மெண்டார் அவஸரப்பட்டு ஒரு நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளக்கூடாதென்றும், டிரஸ்டிகளுக்கு ஏதாவது உத்திரவு பிறப்பிப்பதற்குமுன் ஜில்லா கலெக்டர் முன்னிலையில் ஒரு பகிரங்க விசாரணை நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்வதாகக் குறிப்பிடப்பட்டிருக்கிறது."

இதே முறையில் திருநெல்வேலி ஹிந்து தர்மசபா கார்யதரிசியான ஸ்ரீ T. முத்துஸ்வாமி அய்யர் பத்திரிகைகளுக்கும், அதிகாரிகளுக்கும் ஒரு ஸ்டேட்மெண்ட் அனுப்பிஇருக்கிறார். (ஒ.நி.)

குற்றாலம்—தென்காசி நவராத்திரி மஹோத்ஸவம்

திருநெல்வேலி ஜில்லா தென்காசிக்கு அடுத்த திருக்குற்றாலத்தில் எழுந்தருளியிருக்கிற மடாதிபதிகள் ஸ்ரீ சித்தேஸ்வரி பீடாரோஹிஷ்டாபனாசார்ய ஸ்ரீமத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸ்ரீ சிவசிதானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள் என்னும் ஸ்ரீ மௌனானந்த ஸரஸ்வதி சுவாமிகளவர்களுடைய அனுக்ரஹத்தை முன்னிட்டு ஸ்ரீ தத்தாத்ரேய மந்திரத்தை ஸ்ரீ ராஜராஜேஸ்வரி ஸக்திபீடமும், ஸ்ரீ ஷண்முக சுவாமி ஸக்திபீடமும் 1939 ஆ அக்டோபர் மீ 13ஆ ஆரம்பித்து அக்டோபர் மீ 22ஆ வரையில் நடைபெறும். இம் மஹோற்சவத்தில் குமரி பூஜை, மஹாருத்ர குங்குமாபிஷேகம், ஸ்ரீ சக்ரமேரு நவாவரண பூஜை, ஸுவாஸினி பூஜை, ஸ்ரீ ஸஹஸ்ர சண்டி யாக ஹோமங்கள் முதலிய விசேஷ வைபவங்கள் கண்டுகளிக்கத்தக்கவை.(ஒ. நி)

இராமேஸ்வரத்தில் ஸநாதனிகளின் மாபெருங்கூட்டம்

ராவ்ஸாஹிப் நடேசய்யர் தலைமை வஹித்தார்

"சட்டத்தை நிறுத்தி வைக்கவும்"

இராமேஸ்வரத்தில் 29—9—39 மாலை 7 மணிக்கு ஒரு ஸநாதனிகளின் மாபெருங் கூட்டம் கூடிற்று. சுமார் இரண்டாயிரம் ஜனங்கள் கூடியிருந்தார்கள்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தலைவர் ராவ்ஸாஹேப் ஸ்ரீ என். நடேசய்யர் கூட்டத்தில் தலைமை வஹித்தார்.

ஸ்ரீமான்கள் சத்யவேல்பிள்ளை, பிருதிவிராஜ கபி அருண், வி. முக்தேஸ்வரபிரசாத், ராஜமணி அய்யர் முதலியவர்கள் கூட்டத்தில் பேசினர்கள்.

இராமேஸ்வரத்தில் அ. இ. வ. ஸ்வராஸ்ய ஸங்கக் கிளை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது.

தர்ம சேவாதளம் என்ற ஸ்தாபனத்தின் தொண்டர்களைப் பலர் இராமேஸ்வரத்தில் சேர்ந்தார்கள்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானம் ஏகமனதுடன் நிறைவேறியது:—

"ஐரோப்பாவில் நடைபெற்று வரும் மகாயுத்தத்தில் மாட்சிமை தங்கிய பிரிட்டிஷ் அரசாங்கம் வெற்றி பெறவேண்டி ஆலயங்களில் ஆஸ்திகர்கள் அபிக்ஷேகமும் பிரார்த்தனையும் செய்ய வேண்டியிருக்கிறது. முதலில் ஆலயங்களை சம்ப்ரோக்ஷணம் செய்யவேண்டும். இதற்காக ஐரோப்பா யுத்தம் முடிவு பெறும்வரையில் சென்னை ஆலயப் பாதுகாப்புச் சட்டத்தை அமுலுக்குக்கொண்டு வராமல் நிறுத்தி வைக்கும்படி இந்த மாபெருங்கூட்டம் மேன்மை தங்கிய இராஜப்பிரதிநிதியை வணங்கிக் கேட்டுக் கொள்ளுகிறது."

கூட்டம் இரவு 11 மணிக்கு முடிவு பெற்றது. (க. வி. நி.)

குடந்தையில் ஆஸ்திக மாதர் மகாநாடு

"காந்திஜீ நியாயத்தில் நம்பிக்கையில்லை"

கூற்றுகளை அவர் வாபீஸ் செய்ய வேண்டும்

மேற்படி ஸ்ரீ சாரங்கபாணி கோயில் த்வஜஸ்தம்பத்திற்கு முன்பாக ஆஸ்திக ஸ்திரீகளின் பொதுக்கூட்டம் கூடியது. தெய்வ பிரார்த்தனைக்குப்பின் ஸ்ரீமதி வி. சண்பகத் தம்மாள் தலைமை வஹித்தார். ஸ்ரீ காந்தி மந்திரிகள் பேச்சை நம்பிக்கொண்டு ஆதரவு கொடுக்கிறது கண்டிக்கத் தக்கதென்றும், ஸ்திரீகள் ஆலயப்பிரவேச விஷயமாகத் தூண்டிவிடப்பட்ட கருவிகளாக இருக்கிறதாக காந்திஜி கூறுவது மிகவும் வருத்தத் தக்கதென்றும் தலைவர் குறிப்பிட்டார்.

ஸ்ரீமதிகளான பவானி அம்மாள், சி. கே. கோமளத்தம்மாள், ஜானகி அம்மாள் முதலியவர்கள் பேசினர்கள்.

ஸ்ரீரங்கம் சம்பவ விஷயமாக மந்திரி கூறியதை காந்திஜி நம்பி ஸ்திரீகளை அவமதித்து பேசுவதால் காந்திஜி நியாயத்தில் நம்பிக்கை இல்லை என்றும், ஸ்திரீகள் இயக்கத்தை இழுவுபடக்கூறி தூண்டிவிளப்பிய ஆலயப் பிரவேச எதிர்ப்பு என்று காந்திஜி கூறியதை பலமாகக்கண்டிக்கிறதென்றும், அந்த வார்த்தைகளை உடனே அவர் வாபீசு வாங்கவேண்டும் என்றும், பிரிட்டிஷார் தர்மயுத்தத்திற்கு இக் கூட்டம் ஆதரவு அளிக்கிறதென்றும், காங்கிரஸ் காரியக்கமிட்டி சமய உசிதமின்றி பிரிட்டனிடம் போர் செய்ய முற்படுவதை பலமாகக்கண்டிக்கிறதென்றும், சுதேசமித்திரன், ஜூர்யதர்மம், தர்மராஜ்ய, முதலிய பத்திரிகைகள் ஆஸ்திகஸ்திரீகளின் இயக்கத்தைப்பற்றியசெய்திகளை பக்ஷபாதமின்றி பிரசுரம் செய்து உண்மை ஜனாசயக்த்தை ஸ்தாபிக்க முற்பட்டு நடத்து வருவதால் அப்பத்திரிகைகளை மட்டுமே ஸ்திரீகள் ஆதரிக்கவேண்டுமென்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. (ஒ. நி.)

பரித்ராணாய சாதூனாம் விநாசாய ச துஷ்கதாம்
தர்மஸம்ஸ்தாபனார்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸ்ரீ புரட்டாசி-மீ 19உ

மந்திரிகள் எலெக்ஷன் பிரசாரம் செய்வது நேர்மையா?

காரைக்குடியில் கனம் மந்திரி கோபால செட்டி ஜில்லா போர்ட் எலெக்ஷன் விஷயமாக செய்துள்ள பிரசாரத்தின் விவரமென்று சென்னை மெயில் பத்திரிகையில் பிரசுரிக்கிறது. இம்மாதிரிக் காங்கிரஸ் ஆர்யாகூலியின் போக்கு எந்த நிலைமைக்கு வந்துவிட்டதென்பதை அறிக்தகொள்ள அது ஓர் கருவியாயிருக்கும்.

அங்கு சட்டஸபை காங்கிரஸ் கக்ஷி மெம்பராயிருக்கும் ஸ்ரீ வெள்ளியப்ப செட்டியாரென்பவர் காங்கிரஸ் ஆதரவுடன் ஓர் அபேக்ஷகராக நிறுத்தப்பட்டிருக்கிறார். அவருக்குப் போட்டியாக மற்றொரு காங்கிரஸ்காரரே நிற்கிறார். இவருக்கு அங்கு வோட்டர்களின் ஆதரவு அதிகமிருக்குமென்று ஊஹிக்கப்படுகிறது. ஸபீபத்தில் அங்கு இருந்த ஓர் பஞ்சாயத்து ஸபையானது மந்திரிகளால் கலைக்கப்பட்டது. அதற்கு வெள்ளியப்ப செட்டியாரின் தூண்டுதல் காரணமாயிருக்லாமென்று பலர் ஸம்சயிக்கின்றனர். இதனால் அதிருப்திஉடைந்த காங்கிரஸ்காரர் பலரும் பொதுஜனங்களும் வெள்ளியப்ப செட்டியாருக்குப் போட்டியாகமற்றொரு காங்கிரஸ்காரரை நிறுத்தியிருக்கிறார்கள்.

இந்த நிலைமையில் அங்கு ஸ்ரீமான் கோபாலசெட்டி தாம் மந்திரி என்பதை மறந்தோ அல்லது வேண்டுமென்றேயோ தமது செல்வாக்கை உபயோகிக்க முயன்றிருக்கிறார். அங்கு நடந்த பொதுக் கூட்டத்தில், காங்கிரஸ் அபேக்ஷகரான ஸ்ரீவெள்ளியப்ப தேர்தலில் பத்திரிகைகளில் பெரியஎழுத்தில் இந்த அவமானமான ஸமாசாரம் வெளிவருமே என்று அவர் வருத்தப்பட்டுக் கேட்டாராம். அதற்கு அங்கு கூடியிருந்த காங்கிரஸ்காரர் அம்மாதிரி ஸமாசாரம் வெளி வந்தால் தாங்கள் ஸ்தோஷப்படுவோமென்று பதில் சொன்னார்கள். அதன் மேல் மந்திரி, அவர்களே கண்டித்து நீங்கள் காங்கிரஸ்காரர்களல்ல. கூட்டத்தைவிட்டு வெளிபேபோங்களென்று சொன்னாராம்.

மறுபடியும் ஸ்ரீமான் செட்டி பேசுகையில், பஞ்சாயத்து போர்டைக் கலைத்த விஷயமாக மனத்தாங்கல் இருக்குமானால் தாம் மீண்டும் அந்த போர்டை ஏற்படுத்தித் தாமுயற்சிப்பதாயும் அதன் பிறகாவது யாவரும் ஸ்ரீ வெள்ளியப்பாவை ஆதரிக்கவேண்டுமென்றும், ஸ்ரீமான் வெள்ளியப்ப தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியால் நிறுத்தப்பட்ட அபேக்ஷகரென்றும், சென்னை கவர்மெண்டாரின் ஆதரவுபெற்ற ஆபேக்ஷக ரென்றும், ஆதலால் யாவரும் அவரையே ஆதரிக்க வேண்டுமென்றும் கூறினாராம். மேற்படி ஸம்பவங்கள் யாவும் ஒரு பஹிரங்கக் கூட்டத்தில் நடைபெற்றதாக மெயில் பத்திரிகையிலிருந்து தெரிகிறது.

மேற்படி ஸம்பவத்திலிருந்து மந்திரி செட்டியார் எவ்வளவு பச்சை வெட்டாக எலெக்ஷன் பிரசாரத்தில் ஸம்பந்தப்பட்டு தங்கள் கக்ஷி அபேக்ஷகரை ஆதரிக்கும்படி நிர்பந்தமும், போரும் செய்து பேசியிருக்கிறாரென்பது கவனிக்கத்தக்கது. வெள்ளியப்பாவை ஆதரிப்பதாயிருந்தால், கலெக்டர் பட்ட பஞ்சாயத்து போர்டை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பதாக மந்திரி செட்டி பேசியிருப்பது பேசமல்லவா? ஓர் சர்க்கார் மந்திரியாயிருப்பவர் சர்க்கார் சார்பில் ஒரு அபேக்ஷகருக்காகப்பரிந்து பேசுவதும் ஸர்க்காரைக்கொண்டே நன்மை செய்து தருவதாக உறுதி கொடுப்பதும் எந்தநியில் சேர்ந்தது? ஓட்டர்கள் பணம் வாங்கி ஓட்டுச் செய்தால் ரகஸ்ய போலீசாரைக் கொண்டு கண்டு பிடித்து அவர்களைத் தண்டிப்பேனென்று அந்தக்கூட்டத்திலேயே கனம் மந்திரி பயமுறுத்தியிருக்கிறார். ஆனால் கனம் மந்திரியே பேரம் பேசும் முறையில் மறைமுகமான 'ஸம்மானம்' வழங்கத்தயாராயிருப்பதாகக்காட்டிக் கொண்டிருப்பதைப் பொதுஜனங்கள் எப்படி நினைப்பார்கள்? பேரம் என்பது பலரூபமாக இருந்தால் தான் குற்றமோ? ஓட்டர்களின் மனதைக் கவர்ந்து அவர்களுடைய வோட்டை வாங்கும் முறையில் கொடுக்கப்படும் எவ்விதபிரதிபிரயோஜனமும் போமாலோபஸ்தாபடுமல்லவா?

தங்களுக்குப்பிடித்தமான ஒரு பிரதிநிதியை வோட்டர் நிர்ணயித்துப் பொறுக்கிக் கொள்ளும்படி ஸ்வதந்திரமாக விட்டு விடுவதே ஜனநாயக முறையாகும். அப்படியின்றி ஓர் மந்திரி தமது அதிகாரச்செல்வாக்குடன் இதில் குறுக்கிட்டு, குறிப்பிட்ட ஒருவரையே பொறுக்கும்படி நிர்ப்பந்திப்பது வெகு விசித்திரமான செய்கையாகும். தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டியின் சார்பாக மந்திரி பிரசாரம் செய்யமுன் வந்து விட்டாரா?

இது மந்திரியின் கடமையா? ஸ்ரீ மான் வெள்ளியப்பாவென்பவர் சென்னை கவர்ன்மெண்டின் ஆதரவுபெற்ற அபேக்ஷகரென்று கனம் மந்திரி கூறியது முற்றிலும் ராஜீய நீதி வரம்பை மீறிய செய்கையல்லவா? காங்கிரஸ் அபேக்ஷகராக நிற்கிறவர்களுக்கெல்லாம் சென்னை கவர்ன்மெண்டார் ஆதரவு கொடுப்பது நிஜமா? இந்த மந்திரி கவர்ன்மெண்ட் பெயரைக் காட்டி வோட்டர்களை வசப்படுத்தியோ, நிர்ப்பந்தித்தோ ஜயம் பெற முயற்சிப்பது மிகவும் கண்டிக்கத் தக்க விஷயமாகும்.

மேலும் நிரம உத்யோகஸ்தர்கள்முதலாக ஸர்க்கார் ஊழியர்கள் எவரும் எலெக்ஷன்களில் கலக்கக் கூடாதென்று காங்கிரஸ் ஸர்க்கார் ஓர் உத்திரவு பிறப்பித்திருப்பதாகப் பெருமை பேசினரே! அது வெறும் எட்டுச் சுரைக்காய் தான் போலும்? ஸர்க்காரில் சம்பளம் வாங்கிக் கொண்டு ஊழியம் செய்யும் மந்திரிகள் மட்டும் ஸர்க்கார் ஊழியர்களல்லவோ? அவர்கள் எலெக்ஷன் பிரசாரத்தில் ஈடுபடுவது குற்றமில்லையா? காங்கிரஸ் மந்திரிகள் என்ன அநீதி செய்தாலும் அதற்குக் கேள்வி முறை கிடையாது போலும்? ஸர்க்கார் உத்திரவுக்கு விரோதமான வியாபாரமொன்றை நானே ராஜாஜி வெளியிடுவார். அதை ஆதரிக்க காங்கிஜி வரிக்கட்டிக்கொண்டு ஓடிவருவார். இதுதான் காங்கிரஸ் நீதி? இத்தகைய முறையில் ரஹஸ்யமாயும் பஹிரங்கமாயும் தென்றைகாடு எலெக்ஷனில் பிரசாரம் நடத்தி பாதி வெற்றி பெற்றதைக் கூட்டம் தவறுமல் மந்திரிகள் பெருமையடித்துக் கொள்ளுகிறார்கள்.

எப்படியும் கவர்ன்மெண்ட் அங்கத்தினராயிருப்பவர்கள் இவ்வாறு வோட்டர்களின் உரிமையிலும் ஸ்வதந்திரத்திலும் கலியிட்டு ஜனநாயகதத்வத்தைப் பாழ்படுத்துவதை ராஜீய வாதிகள் எவ்வளவு காலம் தான் பொறுக்கப் போகிறார்கள்? ஜனநாயகத்திற்காகக் காங்கிரஸ் வடிக்கும் ஜாலக் கண்ணீரை கண்டு இனி எவரும் ஏமாறமாட்டார்கள். சட்டத்தை உடைக்கப் போவதாகக் கூறி மந்திரி பதவி ஏற்றவர்கள் இப்போது ருசி கண்டு எப்படியாவது பதவியில் ஒட்டிக்கொண்டிருப்பதற்காகவும் தங்கள் நிலைமையை கெட்டிப் படுத்திக் கொள்ளும் வேலையில் நிருஷ்டியாயிருக்கிறார்களென்பதே இத்தகைய பிரசாரங்களால் நன்கு விசதமாகிறது.

ஸ்ரீரங்கத்தில் தடியடி நடந்ததா?

டாக்டர் ராஜன் உண்மைபேசியிருக்கிறாரா

"தடியடி நடந்ததாகச் சொல்லுவது முழுவதும், ஆதாரமற்றது. நான் அப்போது அங்கேயே இருந்தேன்" என்று மந்திரி டாக்டர் ராஜன் ஸ்ரீரங்கம்சம்பவங்களைப்பற்றி பத்திரிகைகளில் ஸ்டேட்மெண்ட்விட்டிருக்கிறார். ஸெப்டம்பர் 9உ இரவு ஸ்ரீ ராஜனோடு கூடவிருந்த போலீஸ் ஸர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஸ்ரீமான் டி. ராமானுஜம் அய்யங்கார் அன்று இரவே மிலிடரி ஹெட் குவார்டர்ஸுக்குள்ள ரிபோர்ட்டில் "போலீஸ்காரர்கள் மிதமாகவே (தடிகளை) உபயோகித்தார்கள். அவசியமான அளவுக்கு மாத்திரம் பலாத்காரப் பிரயோகம் செய்தார்கள். கூட்டத்தில் இருந்த சிலர்களுக்கு சிறிது காயங்கள் ஏற்பட்டன". என்று குறிப்பிட்டிருக்கிறார்.

டாக்டர் ராஜன் மெய் பேசியிருக்கிறார்? பொய் சொல்லியிருக்கிறார்? என்பது இதிலிருந்து நன்கு புலப்படும்.

டாக்டர் ராஜன் மொழிகளைக்கொண்டு ஸ்ரீரங்கத்தில் கடந்த தெல்லாவற்றையும் தான் தெரிந்துகொண்டுவிட்டதாயும், சீனாதனிகளெல்லாம் பொய் சொல்லுகிறார்களென்று காங்கிஜீ ஹரிஜன் பத்திரிகையில் எழுதிவிட்டார்....."

என்று திருச்சி அட்வகேட் ஸ்ரீ எஸ். கே. சர்மா, பி.ஏ, பி.எல்., பத்திரிகைக்கு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

இதுவோ காந்திஜி உபதேசம்?

மாணமதனையில் 4—10—39 கதர்தரித்த பலர் வக்கில் ஸ்ரீ எம். ஆர். கிருஷ்ணஸாமி அய்யர்வீட்டிற்கு அத்தமீறிசென்று தெருத் திண்ணையில் தங்கிக்கொண்டிருந்த அவருடைய குமாஸ்தாமீது சாணிஜலத்தை ஊற்றிவிட்டு ஆரவாரம் செய்தார்கள். சப்தத்தை கேட்டு ஸ்ரீ கிருஷ்ணஸாமி அய்யர் வெளியே வந்தபொழுது அவரை அவர்கள் தாக்கியதாக கூறப்படுகிறது. இந்த சம்பவத்தைக் கேட்டு ஸகலெங்கும் பரபரப்பு ஏற்பட்டிருக்கிறது. எல்லோரும் ஆத்திரங்கொண்டிருக்கிறார்கள்.

(மெயில்.)

காந்திஜியின் புதியமதம்

முன்பின் முரணுகப் பேசுவதில் பெருமை!

பிரமாணங்களை மீறியவர்களின் கதி!

ஸ்ரீமான் காந்தி இக்கலியுகத்தில் ஓர் புதிய மதஸ்தாபகராக முன் வரத்தீவிர முயற்சி செய்து வருவது யாவரும் அறிந்த விஷயமே. அவரிடம் நம்பிக்கை வைத்தவர்களும் அவரை மதாசாரியாராகக் கொண்டாடி வருகிறதுடன் மற்ற யாவரையும் அவருடைய வழிக்கு இழுக்கப் படாதபாடுபட்டு வருகிறார்களல்லவா? இக்கிலியில் காந்திஜியின் கொள்கைகளையும் அவரது முன்பின் விரோதமான பேச்சுக்களையும், ஹிம்மதத்தின் பிரமாணங்களை அவர் அலக்ஷியம் செய்யும் போக்கையும் உண்மையில் அவ்வப் போது அறிய வேண்டியது அவசியமாகும்.

காந்தியின் முன்பின் விருத்தப் பேச்சுக்கு ஸமீபத்தில் ஓர் உதாஹரணம் வெளிவக்கிறுக்கிறது. அஹிம்ஸா தர்மத்தைப் பற்றியும் யுத்த விஷயத்தைப் பற்றியும் காந்திஜி முன்னுக்குப்பின் முரணுகப் பேசுவதாக ஒரு நிருபர் அவர் மீது குற்றம் சாட்டிச் சில கேள்விகளைக் கேட்டிருந்தார். அவைகளுக்கு காந்திஜி தமது "ஹரிஜன்" பத்திரிகையில் ஸெப்டம்பர்மீ 30உ என்று விரிவான பதில் எழுதியிருக்கிறார். அதில் முக்யமான சில விஷயங்களை பொதுமக்கள் கவனிக்க வேண்டியது அவச்யமாயிருக்கிறது.

காந்தி தமது கியாஸத்தில் குறிப்பிடுகிறதாவது:—

"ஆனல் ஒரு விஷயம் மட்டும் நான் சொல்லுவேன், நான் ஒன்றை எழுதும் ஸமயத்தில், முன்னே என்ன சொல்லி யிருக்கிறேன் என்பதைப் பற்றி நான் எண்ணுவதேயில்லை. முன் செல்லியதற்கு முரண்படாமல் எதையும் சொல்ல வேண்டு மென்பதை நான் எனது நோக்கமாகக் கொள்வ தில்லை.

ஆனல் அந்தத் ஸமயத்தில் என்முன் தோன்றும் ஸத்யத்திலிருந்து நழுவாமலிருக்க வேண்டு மென்பதே எனது நோக்கம். ஒரு உண்மையிலிருந்து மற்றொரு உண்மைக்கு போய் கொண்டிருக்கிறேன். இதனல் எனது ஸத்ய உணர்ச்சி நாளுக்கு நாள் பலப் பட்டு வருகிறது.

என்மூளைக்கு நான் அதிக சிரமம் ஊட்டுவதில்லை"

மேற்கண்டபடி காந்திஜி எழுதியிருக்கும் பதிலில் ஒவ்வொரு வார்த்தையையும் காந்தி பக்தர்களே நன்கு ஊன்றி கவனிக்க வேண்டும். உலக சிரேஷ்டராகவும், சிறந்த வழிகாட்டியாயும் ஸத்ய நெறிதவறாத பெரியாராகவும் கருதப்படும் காந்திஜி தாம் ஒன்றைச் சொல்லும் போது அதற்கு முன் என்ன சொன்னோ மென்று கவனிப்பதில்லை யென்பதற்கு புகழ்ச்சி செய்து கொள்ளுவது எவ்வளவு கேவலமாயிருக்கிறது? முன்பின் விரோதமன்றிப் பேச வேண்டு மென்பதைப் பற்றி காந்திஜி கவலைப் படுவதே வழக்கமில்லையாம்: அந்த மாதிரி பேசுவதைத் தாம் ஒரு நோக்கமகவே வைத்துக் கொண்டவ ரல்ல வென்றும் காந்திஜி பெருமை யடித்துக் கொள்ளுகிறார். மேலும் அவ்வப் போது தன்மனதில் தோன்றும் ஸத்யத்தின்படியே தாம் நடப்பதாயும்; ஆகவே ஒரு உண்மையி லிருந்து மாறி மற்றொரு உண்மைக்குப் போய்க் கொண்டிருக்கிறோம்- தவிரவும் அவர் தமது மூளைக்கு அதிக சிரமம் கொடுப்பதில்லை யென்றும் சொல்லிக் கொள்ளுகிறார்:

இத்தகைய விசேதக் கூற்றுக்களை இக்கலியுக "காந்திய,,த்தில்லன்றி ஸ்தம் வேறு எங்கு தான் காணமுடியும்?

பொது ஜனங்களுக்கு, அதிலும் பாமர மக்களுக்கு வழிகாட்டியாயிருந்த அவர்களை முன்னேற்றப்படுத்துவதாகப்பெருமை பேசுகிறவர், தாம் முன் பின் முரணுகப் பேசுவதை ஓர் பெருமையாகச் சொல்லிக்கொள்ள லஜ்ஜை யேபடவில்லையே? ஒவ்வொருகாலத்தில் ஒவ்வொரு கூடத்திலும் தன் மனதில் தோன்றும் ஸத்யத்தின் படியே தேசத்தை இவர் கடத்திச்சென்றால் எது தான் நிலைத்திருக்கும்? பொதுஜனங்களை பெரிய படுகுழியில் தள்ளி விடவே இது உபயோகப்படுமேயன்றி சரச்வதமான, இஹ பர, நன்மையை இந்த "காந்தியம்" சாதிக்கக்கூடியதா? ஒருநாளும் இல்லை.

ஸத்யத்தை உயிராகக் கொண்டிருப்பதாக பவிக்கும் காந்திஜி மேற்கண்டதமது வார்த்தைகளில் ஸத்யத்தை எவ்வளவு தூரம் மதிக்கிறாரென்பது தெளிவாகிறது. எத்த மதஸ்தர்களும் ஸத்யத்திற்கு நேர்மையான அர்த்தம் கொண்டிருக்கிறார்கள். அது முன் பின் விரோதமில்லாமல் பேசவேண்டுமென்பதே.

நமது வைதிக ஹிந்து மதமானது ஸத்யம் மூன்று காலத்திலும் ஏகரூபநிரியாக இருப்பதென்றும், க்ஷணத்திற்கு க்ஷணம் மனிதபுத்திக்குத்தோன்றியபடி மாறக்கூடியதல்ல வென்றும் சொல்லுகிறது. ஆனல் "காந்திய"த்தின் ஸத்யத்திற்குகோ வென்றால் விரோதமான அர்த்தமும், கொள்கையும் இருக்கிறது.

காந்தீயமானது நமது ப்ராசீன உயர்ந்த தத்வங்களும், இதுபரநிரேயஸ்களும் நிரப்பிய வைதிக ஹிந்து ஸம்ப்ரதாயத்தை அழிக்கும் நோக்கத்துடன் தோன்றியதென்று அடிக்கடி வெளிப்பட்டு வருவதற்கு மேற்கண்ட கூற்றுகள் தக்க ருஜுவாயிருக்கின்றன. காந்தி மதத்திற்கு அவ்வப்போது அவர் மனதில் தோன்றும் உண்மைகளே ஆதாரமாம்! பிரமம், பிரமாதம் (தவறுதல்) பக்ஷபாதமாகிய குற்றம் நிறைந்த மனித புத்தியையே பிரமாணமாகக்கொண்ட "காந்திய" த்தால் தேசத்திற்கு எவ்வளவு தீங்கு ஏற்பட்டு வருகிறதென்றுதெளிவு! காந்திஜியின் நிலையற்றஸத்யத்தாலும், அதன் மூலமாக ஏற்படும் முடிவுகளாலும் இதுவரை நம் தேசம் அடைந்துள்ளகஷ்டத்திற்கு அளவுதான் உண்டோ?

நஹுஷன் கதை கற்பிப்பதென்ன?

இம்மாதிரி தனிப்பட்ட, அஹங்காரம் நிறைந்த மனித புத்தியினலும், பரம்பரையான தர்ம மரியாதைகளை மீறுவதாலும், அழிப்பதாலும், பிரமாணங்களை ரசமாக்குவதாலும் பெரிய அனர்த்தங்களை அடைந்த பலருடையசரித்திரங்களை நாம் படிக்கிறோம். முக்யமாக நஹுஷனென்ற அரசனுடைய கதியும் அவனுக்கு ரிஷிகள் கற்பித்த பாடமும் இச் சந்தர்ப்பத்தில் ஞாபகத்திற்குக் கொண்டு வருவது பொருத்தம். நஹுஷன் வேதாதிபிரமாணங்களை மதிக்கவில்லை. அதர்மத்தில் மூழ்கி யிருந்தான். தர்ம சித்தையிழந்தான். முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ள ஸத்யமார்க்கத்தை மீறினன். பெரியோர்களை அவமதித்தான். ரிஷிகளைக்கொண்டு தன் பல்லக்கைத் தூக்கச்செய்தான் அதனல் கடைசியில் அவன் பாம்பு ஜன்மத்தை ரிஷிகள் சாபத்தால் அடைந்தான்.

இவனுடைய சரித்திரத்தில் ரிஷிகள் இவனுக்குச் செய்த உபதேசமே இங்கு கவனிக்கத்தக்கது.

வேத மந்திரங்களையும் அர்த்தங்களையும் மீ பிரமாணமாக ஏற்கிறோமா, இல்லையா, என்று ரிஷிகள் நஹுஷனைக் கேட்டனர். அதற்கு அவன் அவைகளை பிரமாணமாக தாம் ஏற்க முடியாதென்றும் ரிஷிகள் பாப்பரகும்படி அவனை சபித்தார். அவர்கள் காரணம் கூறுகையில் :—

அர்மே ஸம்ப்ரவர்தஸ்வ தர்மஞ்ச விஜிஜுக்ஷஸி ।
ப்ரமாணமேதத்ஸமாகம் பூர்வம் ப்ரோக்தமஹர்ஷிபிஃ ।

என்பதால், முன்னோர்களான ரிஷிகளால் வேதாதிகள் நமகு பிரமாணமென்று கூறப்பட்டிருக்கிறதென்றும், அது தங்களுக்கு பிரமாணமென்றும், அந்த தர்மத்தை மீறி, நீ அதர்மத்தில் பிரவர்த்திக்க நிருப்பதால் உன்னை சபிப்பதாயும் நஹுஷனிடம் சொன்னார்கள்.

முக்யமாக அங்கு ரிஷிகள் நஹுஷனைக் கண்டிக்கையில் :—

"நீ நமது மூன்னோர்களால் ஏற்படுத்தப் பட்டதும், மஹரிஷிகளால் அநுஷ்டிக்கப் பட்டு வருவதும், நிதிதம் தோஷமற்ற தமான தர்ம வழியைத் தூஷிக்கிறாய்" என்று

யஸ்மாத்பூர்வைஃ க்ருதமார்க மஹர்ஷிபிரநுஷ்டிதம் ।
அதுஷ்டதுயஸி வை"

என்பதால் விளக்கியிருப்பதை கவனிக்க வேணும்.

இதிலிருந்து நமது முன்னோர்கள் ஸர்வக்ஞர்களாயிருந்த போதிலும் உலகிலமையை தங்களிஷ்டப்படி மாற்றும் சக்தி பெற்றவர்களாயிருப்பினும் கூட வேதாதி பிரமாணங்களுக்கும் முன்னோர்களால் ஏற்படுத்திய நல்வழிக்குப் கட்டுப்பட்டே நடக்கவேண்டும் என்றும், அதை மீறுவது இஹ, பர க்ஷேமத்திற்கு ஏற்றதில்லை யென்பதையும் நிரூபித்து வைத்து நமக்கு வழிகாட்டியுள்ளார்கள்.

இந்த லோகஹிதமான உபதேசத்தை ஐதரேயக ஸுருதியானது வெகு தெளிவாக நமக்கு வெளியிடுகிறது.

ஏவர்ஷயஃ ஏதத்கர்ம, ஏதத் ப்ரஹ்ம, ஏதத்ஸத்ய,
தஸ்மான்ந்ரமாவேத், தஸ்மான்னாதீயாத், நஹ்யஸ்யாயந்பூர்வே,
ஏடஸ்மாயந் தே பராப்வபூவுஃ ॥

"தர்மமே வழி. இதுவே கர்மம், இதுவே பிரம்மம், இதுவே ஸத்யம், இதிலிருந்து தவறக்கூடாது. முன்னோர்களான பெரியோர்களும் மீறவில்லை. எவர் மீறினார்களோ அவர்கள் அவமானமடைந்தார்கள்"

என்று சுருதியானது முன்னோர்கள் காட்டிய வழியையும், தர்மத்தையும் மீறக்கூடாதென்று சொல்லுகிறது. இத்த உயர்ந்த தத்வங்களை ஸ்ரீ பகவத் பாதாசாரியாளும் ஸ்ரீ ஸுஹஸ்ரகம பாஷ்யத்தில் பலமாக உபந்யாஸம் செய்கிறார்கள்.

நவீன "காந்தி" ப்பித்தப்பிடித்தவர்கள் இத்த நஹுஷன் கதையையும், அதையொட்டிப்பெரியோர்கள் செய்துள்ள தர்மோபதேசத்தையும் மதித்து காந்திய அபாயத்திலிருந்து தப்பி இஹபர நன்மையை அடைவார்களாக.

முக்கிய அறிக்கை

பலகண்பர்கள் காதிதத்தின் இரண்டுபக்கங்களிலும் பென்சலில் எழுதி ஆசிரியர்களுக்கும், மானேஜருக்கும் அவர்கள் சொந்த விலாசத்துக்கு அனுப்புகிறார்கள். இனி ஆர்யதர்மத்தில் பிசுகிக்கவேண்டி அனுப்பப்படும் கட்டுரைகள், செப்ஷன்யாவும் காகிதத்தின் ஒரே பக்கத்தில் மசியினல் தமிழில் தெளிவாக எழுதி "ஆசிரியர், ஆர்யதர்மம், கும்பகோணம் என்ற விலாசத்துக்கு அனுப்பவேண்டும்.

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்

விஸ்வரூப யாத்திரா வைபவம்

கும்பகோணம் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீமத் சங்கராசாரியஸ்வாமிகள் சென்ற மூன்று மாதகால மாக குடந்தை ஸ்ரீமடத்தில் சாதாமாஸ்ய வியாஸபூஜா கைங்கர்ய விசேஷ வைபவக் கடமை நடத்தி வந்தது யாவருமறிந்த விஷயம்.

சென்ற வாரம் வியாழக்கிழமை யன்று சாதுர்மாஸ்ய நியமம் பூர்த்தியாகி ஸ்ரீ ஸ்வாமிகள் விச்வரூப யாத்திரை புறப்பட்டத்திரு விடமருதூருக்கு விஜயம் செய்தார்கள்.

ஸ்ரீ ஸ்வாமிகள் புறப்படுவதை முன்னிட்டு வழக்கத்திற்கு அதிகமாக ஏராளமான கூட்டம் ஸ்ரீ ஸ்வாமிகளை தர்சிக்கக் கூடியிருந்தது. அன்று பூஜை பிரம்மஸ்ரீ ஸ்தர்ப்பணம் முதலியவை விசேஷமாக நடைபெற்றன. மாலையில் ஸ்ரீ ஸ்வாமிகள் ஸ்ரீ ஆதி கும்பேஸ்வரஸ்வாமி, ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி தேவஸ்தானங்களுக்கு சாஸ்டையாகச் சென்று ஸ்வாமி தர்சனம் செய்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளுடன் ஸஹஸ்ராசாபராயணிகள் செய்துகொண்டு ஏராளமாக பிரம்மசாரிகளும், மற்ற ஜனங்களும் பெருங்கூட்டமாகப்பின் தொடர்ந்தார்கள். தேவாலய அதிகாரிகளாலும், பரிஜனங்களாலும் ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு விசேஷமாக வரவேற்பு நடத்தப்பட்டது. கோவில் மரியாதைகளும் வழக்கப்படி நடந்தன.

இவ்வு மிருத்த வைபவத்துடன் பட்டணப் ப்ர வேசமும் நடந்தது. குடந்தை பொதுஜனங்கள் சார்பாக ஸ்ரீஸ்வாமிகளுக்கு ஸ்ரீமான் வி. எஸ். தீக்ஷிதரால் ஓர் உபசாரப் பத்திரம் ஸமர்ப்பிக்கப்பட்டது.

வெகு காழி ஆகிவிட்டதாலும், கணக்கற்ற ஜனங்கள் பின் தொடர்ந்து வந்ததாலும் ஸ்ரீ ஸ்வாமிகள் பாதிவழியில் ஓரிடத்தில் தங்க நேரிட்டது. பிறகு பின் மாலையில் திருவிட மருதூருக்கு விஜயம் செய்தார்கள்.

ஸ்ரீஸ்வாமிகள் திருவிடமருதூரில் வியாழக் கிழமை வரை இருந்து விட்டுப் பிறகு சில ராமத்தினரின் வேண்டுகோளுக்கு இணங்கி அங்கு சென்றுவிட்டு கவராத்திரி பூஜையை முன்னிட்டுக் கும்பகோணத்திற்கு மீண்டும் விஜயமாவார்கள்.

குடந்தையில் நவராத்திரி பூஜை வெகு சிறப்பாக நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக அறிகிறோம். ஸ்ரீ ஸ்வாமிகள் மௌன விரதத்தை இன்னும் நிறுத்தவில்லை. (ச. நி)

அஹிம்ஸையும் வ்ருத்திரிகளுக்கு உரிமையும்

("சர்மா" எழுதுகிறார்)

அஹிம்ஸையென்றும் ஸ்ரீஹரிகளுக்கு உரிமை என்றும் போராடுகிறதை காங்கிரஸ். ஆனால் கனம் டாக்டர் ராஜன் இதை நம்பவில்லை யென்றும் ஸ்ரீஹரிகள் பேச்சுக்கேட்பவரில்லையென்றும் ஸ்ரீரங்கத்தில் நடந்த சம்பவங்களால் தெரிகிறது. இவர் ஏதோ நம்பவில்லையென்றாலும் காங்கியடிகளும் ஸ்ரீஹரிகள் மனுவைத் தள்ளிவிட்டாரென்ற தில் நிகைக்கிறார்கள். அஹிம்ஸை என்ன பதப் உரிமை என்பதும் மனுஷ்யையைப்பொறுத்தவரை. தீண்டாமை ஒரு வியாதி என்றும் அதையிலக்குவதற்காக எத்தக்காரியம் செய்தாலும் ஹிம்ஸையாகாது என்றும் நிச்சயம் காந்தியடிகளுக்கு. ஆகையால், தீண்டாமை

காந்தியாரும் ஆலயப்பிரவேசமும்

"முகமதிய மதத்தில் தலையிட்டால் செல்வாக்கை இழக்க வேண்டி வரும்"

"தனக்கோரு நீதி பிறருக்கோரு நீதியா"?

சென்னை மாகாண வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கக் காரியதரிசி ஸ்ரீ டி. எஸ் ராமஸ்வாமி அய்யர் எழுதுவதாவது:—

"மகாத்மா காந்தி ஸ்ரீரங்கம் ஆலயப்பிரவேச இயக்கம் சம்பந்தமாகச் சமீபத்தில் தமது அபிப்பிராயத்தை வெளியிட்டிருந்தார். காந்திஜி தம்மைச்சேர்ந்த கோஷ்டியினர் செய்கையென்றால் ஒரு விதமாகவும், எதிராளிகள் செய்கையென்றால் வேறு விதமாகவும் பரிசீலிக்கிறார். தமது கோஷ்டியினர் பின் பற்றினால் நியாயமென அவர் நினைக்கும் முறைகளையே எதிராளிகள் பின் பற்றினால் அது உடனே வெட்கக்கேடாகப் போய்விடுவதாகக் கூறுகிறார். ஆலயப்பிரவேசம் பற்றி அவர்சமீபத்தில்வெளியிட்டுள்ள அறிக்கைக்கு இதுதான் சமாதானமாக விருக்கவேண்டும். மதுரை ஸ்ரீ மீனாக்ஷி ஆலயத்தில் ரகசியமாக ஒழுங்குசட்டத்திற்கு விரோதமாக ஹரிஜன ப்ரவேசம் நடத்தியவர்களை அவர் பிரமாதமாகப் புகழ்ந்திருக்கிறார். அதேமாதிரி ஸ்ரீரங்கத்திலும்கடைபெருவண்ணம் நடக்கவேண்டுமென்று ஜனதனிகள் முயலும்பொழுது அவர்கள் முயற்சியை வெட்கக் கேடான தெனக்கூறுகிறார். டாக்டர் ராஜன் சற்றுப் பொறுமைகாட்டியிருப்பாரையின் நிலைமையே வேறுவிதமாகப்போயிருக்கும். மதுரை சம்பவங்கள் வெறும் பகட்டென்பதை ஸ்ரீமான் பிரசாத் ராவ் நன்குவெளிப்படுத்தியிருக்கிறார், அவர் வெளியிட்ட அறிக்கை ராளது வரையில் மறுக்கப்படவில்லை. ஆகவே, காந்திஜி கூறியுள்ள வார்த்தைகள் அவர் கோஷ்டியினர் விஷயத்தில்உபயோகிக்கப் படுவதே பொறுத்தமாகும்.

விஷயமறியாத ஸ்ரீஹரிகளை இதற்குத்தஷ்பிரயோகஞ்செய்வதாகக் காந்திஜி கூறுகிறார் சட்ட மறுப்பில் ஸ்ரீஹரிகள் சேரும்படி காந்திஜியே வழிகாட்டியிருக்க, இப்பொழுது தங்கள் தர்மத்தைப் பாதுகாக்க வேறு வழியின்றி ஸ்ரீஹரிகள் ஸத்யாக்ரஹத்தைப் பின் பற்றுவதில் எவ்வித நியாயத் தவறும் கிடையாது.

காங்கிரஸ் ஒரு அரசியல் ஸ்தாபனமென்று கூறப்படுகிறது. அப்படியாயின் ஹிந்து மதத்தைப்பாதுகாக்கும் விஷயத்தில் காங்கிரஸ்காரர்கள் ஏன் இவ்வளவு பாடுபடவேண்டுமென்பது தெரியவில்லை. முஸ்லீம் விஷயத்தில் அவர்கள் அப்படி செய்கின்றனரா? காந்திஜி தமதுசெல்வாக்கை இழக்காமலிருக்கவே இது செய்யப்படுகிறது. ஆகவே, மத விஷயங்களில் இவ்விதம் குறுக்கிடுவதை அனுமதிக்க முடியாதென்பதை ஹிந்து மதாபிமானிகள் எல்லோரும் சேர்ந்து ஒரு மித்த

யைப்போற்றும் ஸ்ரீஹரிகள் ஸ்ரீஹரிகளேயல்ல. உரிமையேது!

தருக்கியில் கெமல்பாஷாஎன்பவர் கலிபா முதலான மூட நம்பிக்கைகளை வேரோடழித்து அந்த நாடு முன்னேற்றமடைந்திருக்கிறது. அதைப் பார்த்து ஸனாதன தர்மமும், ஒரு கட்டுமூட நம்பிக்கை என்று நினைத்து எதிர்க்கிறார்கள் போலும். எதிர்த்து வெற்றி பெற்றவர் மூவுலகிலுமில்லை என்று வணக்கத்துடன் சொல்லப்படுகிறது.

(ஒ. நி.)

"தீண்டாதார்களுக்கு கோவில்களைத் திறந்து விடக்கூடாது"

"புராதன வழக்கப் பழக்கங்களைப் புறக்கணிக்காதீர்கள்"

மே. த. நேபாள மகாராஜாவின் அபிப்பிராயம்

நேபாள ராஜ்யத்தின் மகாராஜாவான மே. தை ஓஜஸ்வி ராஜன்ய ப்ரேஜ்வல நேபாளதர, அதிபிரவல குருகதகஷிண்பாகு பிருதி அதீச, அதல் ஜோதின் மய, திருசக்தி பட்ட ஸ்ரீஸ்ரீஸ்ரீ மகாராஜா ஸர் ஜீடா ஷெம்ஷெர்ஜங்பகதூர் ராணா, (நேபாள ராஜ்யத்தின் பிரதம மந்திரி, சேனாதிபதி) அவர்கள்.

"தீண்டாதார்-ஆலயப்பிரவேசத்தைப்பற்றி கீழ்கண்ட அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார்:—

"இராமேஸ்வரம், காசி, துவாரகை, பூரி, முதலியக்ஷேத்திரங்களில் இருக்கும் கோவில் களைப்போல் பல கோவில்கள் இந்தியாவில் இருக்கின்றன. அவைகள் யாவும் அகில இந்தியாவிலிருக்கும் யாத்ரீகர்களுக்கு விசேஷமான க்ஷேத்திரங்களாகக் கருதப்படுகின்றன. இந்தக்கோவில்களின் புனிதத்தன்மை பாதுகாக்கப் பட வேண்டும். கோவில்களை ஹரிஜனங்களுக்குத் திறந்து விடக்கூடாது. கோபாளியர்களுக்குஇக்கோவில்கள் யாவும் சிலேஷ்டமானவை.

புராதன வழக்கப்பழக்கங்களை அனுஸரித்து இதுவரையில் இக்கோவில்களில் நடந்து வந்தது போல் இனியும் நடந்து வரவேண்டும். இல்லையேல் நாங்கள் இந்தக் கோவில்களில் ஒன்றைப்பற்றிக்கூட மனதில் நினைக்கமாட்டோம்." ஹிந்துக்கள் அனைவரும் இந்த விஷயத்தில் ஒரே உறுதியாயிருக்க வேண்டுமென்று நாங்கள் எச்சரிக்கை செய்கிறோம்."

அறிவிக்கவேண்டும்.

சீர்திருத்தக்காரர்கள் ஒழுக்கத்தையும் உண்மை நடத்தையும் கவனிக்க வேண்டுமென்று காந்திஜீஅறிவிக்கிறார்.போதிய தகவலும் சரியான தகவலும் இல்லாமல் ஜனதகினை அவர் கண்டித்ததை விட இந்த விஷயத்தை அவர் இன்னும் சற்று விரிவாக எழுதியிருந்தால் நலமாக இருந்திருக்கும். அவர் கூறும் வண்ணம் ஆலயப்பிரவேச இயக்கம் தாழ்ந்த வசமாக சில சீர்திருத்தக்காரர்களின் உயிருக்கு ஹானிவாக முடியுமானால் அது ஜனதனிகளின் கோபத்தினாலாகாது. சீர்திருத்தக்காரர்களிடம் அவர் கோரும் குணங்கள் இல்லாமலிருப்பதே அதற்குக் காரணமாகும்.

ஆலயங்களுக்குச் செல்லும் பொது ஜனங்கள் இந்த சீர்திருத்தம் வேண்டும் பொழுது அதற்குத்தடையேற்படுமாயின் அதை நீர்க்கவே சட்டம் உபயோகிக்கப்பட வேண்டுமென்று காந்தி தெரிவிக்கின்றார். அப்படிப் பார்க்கபோனால் கூட மதுரையில் ஆலய வழிபாடு செய்யும் பெரும் பான்மை ஜனங்கள் ராதாமேரியிருக்கும் பொழுது ஆலயப்பிவேசத்தையுண்டுபண்ணி அதைச்சரிப்படுத்த சென்னை மந்திரி சபை சட்டஞ் செய்தது பெரிய தவறாகும். அதிகார கர்வம் கொண்டவர் தவிர வேறு எந்தக்கவர்ன்மெண்டும் இத்தகைய சட்டம் செய்வதற்கில்லை. ஜஸ்டிஸ் மந்திரி சபையினர் கூட இப்படி மத விஷயத்தில் அதிகாரமாக நடக்கவில்லை. காங்கிரஸ் கவர்ன்மெண்டை விட வேறு எந்த கவர்ன்மெண்டும் மேல் என நீரூபிக்கும்படி இப்பொழுது ஒரு நிலைமை ஏற்பட்டிருப்பது மிக வருத்தக்கூடியதாகும்.

காங்கிரஸ் ஆக்ஷியில் காணுத காக்ஷி

(ஸ்ரீ P. M. பத்மனுபசர்மா)

காங்கிரஸ் ஆட்சியிலிருக்கும் நமக்கு ஓர் கதை ஞாபகத்திற்கு வருகிறது. அரசன் ஒருவன் தனக்கு ராஜயம் கிடைத்தவுடன்— மந்திரி! நமக்கு மிக்க சிரமப்பட்டு ராஜ்யம் கிடைத்திருக்கிறது. நாம் ஜனங்களுக்கு புதிய உணர்ச்சியை உண்டுபண்ணவேண்டும். நம் முன்னோர்கள் மாதிரி நல்வழியினுலேயே அரசுபுரிந்து வந்தால் நமக்கு ஒரு நாளும் நல்ல பெயர் கிடைக்கப்போவதில்லை. நம்மை ஒருவரும் விரும்பமாட்டார்கள். ஆகையால் தக்க பக்க பலங்களுடன் ஓர் புதிய காரியத்தைச் செய்யவேண்டும். அதை நம் பல பத்திரிகைகளைக் கொண்டு நல்ல ஜனங்களின் மனதையும் நாம் செய்கிற காரியம் நல்லது என்கிறதாக நினைக்கும்படி செய்ய வேண்டும். ஜனங்களும் நம்மையே புகழ்வார்கள். புதிய புத்தகங்களிலும், கதைகளிலும், நம்மை உதாரணமாகவும் சொல்வார்கள். அவ்விதமான காரியம் ஒன்று செய்து பார்க்கலாமெனக் கேட்டானும். அரசனுக்கேற்ற மந்திரியும்— அரசே! நம் முன்னோர்கள் காலத்தில் ஜனங்கள் பகலில் சிற்சிலகாரியங்களும் இரவில் சிற்சிலகாரியங்களும் செய்துவந்திருக்கிறார்கள். நாம் அதை மாற்றி பகலில் செய்யவேண்டியதை இரவிலும், இரவில்செய்யவேண்டியதை, பகலிலும் செய்யும்படிசெய்ல்லவேண்டும். அப்படிஜனங்கள

215262

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்திய மருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

உங்கள் நாக்கை ஏமாற்றுகிறீர்கள்

சாதாரணமாக மணத்திற்காகத் தயாரிக்கப்படும் பெருங்காயம் யாதொன்றுக்கும் பிரயோசனப்படுவதில்லை. உங்கள் நாக்கை ஏமாற்றுகிறது. புத்திசாலிகள் தங்கள் உணவுப் பொருள்களை வாங்குவதில் ஜாக்கிரதையாயிருக்கிறார்கள். அவர்கள் ஸயண்டிபிக் T. T. பெருங்காயத்தையே கேட்கிறார்கள். ஏனென்றால் அது கல்ல சாக்கு என்று அவர்களுக்குத் தெரியும். பதினைந வருஷ ஆராய்ச்சியின் பேரில் கண்டுபிடிக்கப்பட்டது.

ஸயண்டிபிக் T. T. பெருங்காயம் 20-20% அயத் சத்தினால் காப்பாற்றப் படுகிறது. அதற்கு நறுமணமும் நற்சுவையும் உண்டு.

ருசிகரமான சாப்பாட்டிற்கும் ஜீரணத்தை சுலபமாக்கவும் பரிசுக் கூப்பன்களுடன் விற்கப்படுகிறது.

ஒரு பவுண்டு. ரூ. 1—14—0



The Premier English Weekly Devoted to the cause of Sanatana Dharma.

"Dharmarajya"

(Official organ of the Dharma Sevaka Sabha.

Patron Founder & Spiritual Director: H. H. Sri Sankaracharya, of Puri.

Widely circulated in India, Burma & Ceylon.

Best Medium for Advertisement

Annual Subscription Rs. 3.

Apply to:—

The Manager, "DHARMARAJYA" Chandi Chowk, Delhi.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டக் கதையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்)

கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,

தர்மசாஸ்திரச் சுருக்கம்,

கீழவிடையல், திருச்சிரை.

&

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட்,

கும்பகோணம்.

ஸ்ரீ விசிஷ்டாத்வைத சபை

கும்பகோணம்

குடந்தையில் ஸ்ரீ வேதாந்த தேசிகர் உத்ஸவ காலத்தில் நடந்து வரும் விசிஷ்டாத்வைத சபை இவ்வருஷமும் வழக்கம்போல் நன்கு நடந்து புதன்கிழமை பன்று பூர்த்தியாயிற்று. அநேக பண்டிதர்கள் வந்திருந்தனர். வேதம், ஸ்ரீபாஷ்யம், ரஹஸ்யம், பிரபந்தம் முதலியவைகளில் பரீக்ஷைகள் நடைபெற்றன. ஒவ்வொரு தினமும் உபந்யாஸங்கள் நடைபெற்றன.

புதன்கிழமை மாலை ஸம்பாவனை நடத்தப்பட்டது. நிவான்பகதூர் ஸ்ரீ எஸ். ராகவ அய்யங்கார்ஸ்வாமிகள், ஸ்ரீமான்கள் வி. ஆர். லக்ஷ்மீவராஹவய்யங்கார், வி. ஆர். கிருஷ்ணசாமி அய்யங்கார், என். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் முதலியவர்கள் வந்திருந்தனர். ஸம்பாவனை நடந்த பின் ஸ்ரீ வி. ஆர். கிருஷ்ணசாமி அய்யங்காரால் வித்வான்களுக்கு உபசாரவார்த்தை கூறப்பட்டது. சேங்காலிபுரம் பிரஹ்மதாரணி ஸ்ரீ வைத்யநாத சாஸ்திரிகள் ஸபையை அபிவிருத்தி செய்யவேண்டியதைப் பற்றிப் பேசினார். வேத கோஷங்களுடன் மங்களகரமாக ஸபை பூர்த்தியாயிற்று.

வழக்கம்போல் நிவான்பகதூர் ஸ்ரீ ராகவ அய்யங்கார் ஸ்வாமிகளும், ஸ்ரீ சங்கர ராமானுஜ நிதி மானேஜிங் டைரெக்டர் ஸ்ரீ கிருஷ்ணஸாமி அய்யங்கார் அவர்களும் ஸபாகார்யங்களை கன்கு கவனித்து நடத்தினார்கள்.

வேத பாடசாலையின் அபிவிருத்தியைப் பற்றியும் ஸபாபண்டிதர்களும் அதிகாரிகளும் நிருப்தியடைந்தனர். (த.தி.)

மந்திரிகளுக்குப்பேச்சு சுதந்திரமில்லை

"சென்னை காங்கிரஸ் மந்திரி பத்து பேர்களும் பலவிடங்களில் பல விஷயங்களைப்பற்றி பேசுகிறார்கள். மந்திரிகள் பிரசங்கங்கள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கொன்று முறண்பட்டதாக இருக்கிறது. ஆகையால் அவர்களுக்குப் பேச்சு சுதந்திரமே கிடையாது. கனம் பிரதம மந்திரி ஒருவருக்குத்தான் பேச்சு சுதந்திரமுண்டு" .....என்ற விஷயத்தை கோயம்புத்தூர் நல உரிமை சங்க ஆதரவில் 30-9-39 உ கூடிய ஒரு கூட்டத்தில் ஒரு நண்பர் எடுத்துக்கூறினார். (மதராஸ் மெயில்)

தேவகோட்டை

1—10—39 மாலை தேவகோட்டை ஸ்ரீ ராமபெருமாள் கிருக்கோவில் முன்னிலையில் ஒரு ஸனாதனிகளின் மாபெரும் கூட்டம் கூடிற்று.

ஸ்ரீ க. ர. க. ஸ்வர்காதன் செட்டியார் (சிவன் கோவில் டிரஸ்டி) தலைமை வகித்தார். மதுரை ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யரும், தேவகோட்டை ஜில்லா வழக்கறிஞர் ஸ்ரீ S. சுப்பிரமணியரும் கூட்டத்தில் பேசினார்கள். (ஒ.கி.)

ஸ்ரீவில்லிப்புத்தூர்

ஸ்ரீவில்லிபுத்தூரில் 1—10—39 ஸனாதனிகளின் மாபெரும் கூட்டம் கூடிற்று. ஸ்ரீ வைத்திலிங்க நாயுடு தலைமை வகித்தார். அ. இ. வ. ஸ், சங்கம் ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. ஸ்ரீ வைத்தியலிங்க நாயுடு தலைவராகவும், ஸ்ரீ கே. சுப்பய்யா மூப்பனார் உபத்தலைவராகவும், ஸ்ரீ வி. எஸ். தேசிகம் ஐயங்கார் காரியதரிசியாகவும், ஸ்ரீ சங்கு செட்டியார் ஸ்ரீ வைத்தியலிங்க தேவர் பொக்ஷதார்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். (ஒ.கி.)

Printed by S. Kalyanasundram, at the Sri Janardhana Printing Works, Ltd., Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundram.

ஜெயதரம்
4 ல
24 41
12-10-1939

2 15303

215303

REGD No. M. 12913. ARYADHARMAM TAMIL WEEKLY. Estd. 1915

OFFICE OF THE REGISTRAR OF NEWSPAPERS 30 OCT 1939 MADRAS

555

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्याय्येन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஹூ புரட்டாசி-மீ 26உ 1939 ஹூ அக்டோபர்-மீ 12உ | ஹ-41

ஹிந்துதநிகளையும் கலந்து கொள்ள வேணும்

வைஸ்ராய்க்குத் தந்தி

மதுரையில் கூட்டம்

அக்டோபர்மீ 6வெள்ளி மதுரை சேதுபதி ஹைஸ்கூலில் பெரிய பொதுக்கூட்டம் நடைபெற்றது. மதுரை முஸ்லீம் லீக் காரியதரிசி ஜனாப்கின்னைக் காதியார் இப்ரஹிம் சாஹேப் தலைமை வகித்தார். எல்லா வகுப்பு ஜனங்களும் கூடியிருந்தனர்.

யுத்தத்தில் பிரிட்டனுக்கு எவ்விதபிபக்ஷமின்றி உதவி செய்ய இந்தியா தயாராயிருப்பதாக ஓர் தீர்மானம் செய்யப்பட்டது.

வைஸ்ராய் பற்பல கக்ஷித்தலைவர்களையும் அழைத்துப் பேசுவது போல் சென்னை மாகாண வாஸிகளையும் முக்யமாக ஸனாதநிகளையும் முன்னதாகக்கலந்து யோஜிக்க வேண்டுமென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. இவ்விஷயமாக வைஸ்ராயிடம் கலந்துபேச ஸ்ரீமான் கே. ஆர். வெங்கட்ராமய்யரை பிரதிநிதியாகக் கூட்டம் நியமித்தது.

"இந்திய தேசீயக் கக்ஷி" என்ற பெயருடன் தம் கக்ஷியை ஆரம்பிக்க முடிவு செய்யப்பட்டது. அத்தக் கூட்டத்திலேயே 300 பேர்கள் வரை புதிய கக்ஷியில் மெம்பர்களாகச் சேர்ந்தனர்.

'காங்கிரஹிடம் காட்டிக் கொடுக்காதீர்"

அதனிடம் எங்களுக்கு நம்பிக்கை யில்லை

பல கக்ஷிகள் வைஸ்ராயிக்குத் தந்தியடிக்கின்றன

காங்கிரஸ் தலைவர்களான காந்தி முதலியவர்களுடன் வைஸ்ராய் பேசி வருவதை முன்னிட்டு இந்தியாவிலுள்ள பற்பல ராஜீய ஸமூஹக் கக்ஷிகளும் வைஸ்ராயிக்கு தந்தி படித்து வருகின்றன. காங்கிரஸ் மந்திரியாகஷியில் தங்களுடைய உரிமைகள் பறிக்கப்பட்டு விட்டதாகவும் அதனிடம் தங்களுக்கு நம்பிக்கையில்லை. யென்றும் முஸ்லீம்லீக் வெளியிட்ட அபிப்பிராயத்தைப் போல், ஹிந்துமஹாஸபை, தாழ்த்தப்பட்டவகுப்பு ஸங்கங்கள், ஜஸ்டிஸ்கக்ஷி முதலியவைகளும் காங்கிரஸை மட்டும் கேட்டு எதையும் முடிவு செய்யக் கூடாதென வைஸ்ராய்க்குத் தந்தியடித்திருக்கின்றன.

ஹிந்து மஹாஸபைத் தலைவர், ஸ்ரீஸவர்க்காருக்கும் ஜஸ்டிஸ் கக்ஷியைச் சேர்ந்த ஸர் பன்னீர் செல்வத்திற்கும் வைஸ்ராய் பேட்டி யளித்துப் பேசினர். மிதவாதத் தலைவர் ஸ்ரீ ஸாப்ரூவும், ஸ்ரீமான் ஸாஸ்திரியாரும் வைஸ்ராயிடம், பேசினர்கள்.

நேர்மையற்ற முறை!

சிவகங்கை காங்கிரஸ் வாதிகள் காந்திஜியின் 71-வது தினத்தைக் கொண்டாட வேண்டி ஓர் ஊர்வலத்தை 2-10-39 மாலை நடத்தினர்கள்.

ஊர்வலம் சிவகங்கை ஸ்ரீ சுக்ர சிரௌதிகள் வீட்டு முன்னிலையில் வந்த பொழுது காங்கிரஸ்காரர்கள் ஸ்ரீ சிரௌதிகளை வசை புராணம் பாடிவிட்டுச்சென்றார்கள். ஏனென்றால் ராமநாதபுரம் ஜில்லாபோர்டுதேர்தலுக்கு ஸ்ரீ சுக்ர சிரௌதிகள் ஒரு அபேக்ஷகராக நிற்பது கோர்களதித்தே.

காங்கிரஸ்காரர்களின் இந்த அக்ரமமான செய்தையை சிவகங்கை வாசிகள் வன்மையாகக்கண்டித்து வருகிறார்கள். (மெயில்)

"தேர்தலில் அபேக்ஷகர்களை கண்காணிப்போம்"

மந்திரி கனம் கோபால ரெட்டியின் கூற்று

சென்னை காங்கிரஸ் அரசாங்கத்தின் ஸ்தல ஸ்தாபன இலாகா அமைச்சர் கனம்கோபால ரெட்டி 28-9-39 தேதி காரைக்குடியில் "ராமநாதபுரம் ஜில்லா போர்டுதேர்தலை ஒட்டி ஒருபிரஸங்கஞ்செய்தினர். அவ்வமயம் அமைச்சர் "ஜில்லாபோர்டு தேர்தலில் எந்த அபேக்ஷகராவது அல்லது அவரது ஏஜெண்டுகளாவது வாக்காளர்களுக்கு லஞ்சம் கொடுப்பதாகத்தெரிந்தால் அவர்கோரிக்கைகள் கட்டாயம் தள்ளுபடி செய்வோம். தண்டனையும் அபராதமும் அவர்களுக்கு விதிக்கப்படும்.

இதனை ஒட்டி தான் ஜில்லா போலீஸ் சூபரிண்டெண்டுக்கும், ஜில்லா மாஜிஸ்டிரேட்டுக்கும் தேர்தலில் அபேக்ஷகர்களையும் அவர்களது பிரதிநிதிகளையும் கண்காணிக்க ஏற்பாடு செய்திருக்கிறேன்.

செங்குப்பம் பஞ்சாயத்து போர்டை சென்னை சட்டசபை மெம்பரும், ஜில்லா போர்டுக்கு காங்கிரஸ் அபேக்ஷகராக நிற்கும் ஸ்ரீ வள்ளியப்ப செட்டியாரின் தூண்டுதலின் பேரில் கனம் மந்திரி கலைத்து விட்டார் என்ற அவதூறு ஒன்று மந்திரியின் மீது சுமத்தப்பட்டிருந்தது. அதற்கு மந்திரி பதிலளிக்கையில் தாம்ஸ்தலஸ்தாபன இலாகா டெப்டி இன்ஸ்பெக்டர் பொர்சின்படி தான் செங்குப்பம் பஞ்சாயத்து போர்டை கலைத்து விட உத்திரவு பிறப்பித்ததாகக் கூறிவிட்டு, செங்குப்பம் பஞ்சாயத்துபோர்டு வாக்காளர்கள் உடனே ஒரு தேர்தல் நடத்த விரும்பினால் அதற்குத்தான் சம்மதிப்பதாகவும், ஆனால் ஜில்லா போர்டு தேர்தலில் அத்தகைய தொகுதியில் காங்கிரசுக்குப் போட்டியாக நிற்கும் அபேக்ஷகரும் வாபிஸ் பெறவேண்டுமென்றும், 50% வாக்காளர்கள் தேர்தல் அவசியமென்று கூறவேண்டுமென்றும் கூறினார்.

மன்னர்பிரான் வெற்றி பெற வேண்டி

கோவிலில் அபிஷேகமும் பூஜையும் செய்ய

ஸனாதனிகளுக்கு அனுமதி இல்லை

திருநெல்வேலி ஹிந்து தர்ம பரிபாலன சங்கத்தின் தலைவர் ஸ்ரீமதி ருக்மணியம்மாள் நிருநெல்வேலி வாசிகள் சார்பாகத் தற்போதைய யுத்தத்தில் மன்னருக்கு வெற்றிகிடைக்க வேண்டுமென்று நெல்லையப்பர் கோயிலில் ருத்ராபிஷேகத்தை 9-10-39 முதல் 40 நாட்கள் வரை செய்ய வேண்டுமென்று அனுமதி கோரியிருந்தார். கோயிலின் கௌரவ தர்மகர்த்தர்களில் இருவரும் ஆலய சிப்பந்திகளே இதற்கு அனுமதி கொடுத்து வசதி செய்து கொடுக்கச் சொன்னார்கள். கோயில் பரனேஜர் நேற்று அபிஷேகத்தை ஆரம்பிக்கக் கூடாதென மறுத்து நிர்வாக தர்மகர்த்தர் ஊரில் இல்லையாதலின் அவருடைய உத்தரவிற்குத் தாம் அபிஷேகத்தை அனுமதிப்பதற்கில்லை யென்று சொல்லி விட்டார்.

(ஒ. நி.)

"தீண்டாதார்களுக்கு திறந்து விடாவிடில்"

"உண்ணாவிரதம் ஆரம்பிப்பேன்"

ஒரு ஸ்வாமியாரின் பயமுறுத்தல்

திருவெண்ணெய்நல்லூர் காந்தி சங்கத்தைச்சேர்ந்த ஸ்வாமி நிர்மலானந்த பிக்ஷு என்பவர் உள்ளூர் கோவில் வாசலில் 5-10-39 முதல் உண்ணாவிரதம் அனுஷ்டிக்க ஆரம்பித்திருக்கிறார்.

உள்ளூர் ஆலயத்தில் தீண்டாதார்களை அனுமதிக்க தர்ம கர்த்தா மறுத்து விட்டார்களாம். தர்மகர்த்தாக்கள் தீண்டாதார்களை அனுமதிப்பதாகச் சம்மதி கொடுக்கும் வரையில் தான் உண்ணாவிரதத்தை அனுஷ்டித்து வரப்போவதாக ஒரு பயமுறுத்தல் விடுத்திருக்கிறார். (ஒ. நி.)

அதர்ம செய்கைக்குப் பாராட்டு!

"திருவாங்கூர் ஆலயப்பிரவேச பிரகடனத்தை" ப்பற்றி காங்கிரஸ்காரர்கள் பிரமாதமாகப்பேசிக்கொண்டு வந்தார்கள். காங்கிரஸ் பத்திரிகைகள் பிரகடனத்தைப் புகழ்ந்தன. தலைவர்கள் எங்கெங்கும் இதற்கு ஆதரவு கூறினார்கள். இப்போது இந்தப் பிரகடனத்தின் கர்த்தாவான மே. தா. திருவாங்கூர் மகாராஜாவுக்கு மரியாதை செய்யப் போகிறார்களாம். அந்த மரியாதை சாஸ்வதமாகஇருக்குமாம்.

சென்னை சட்டக் கல்லூரிக்கு அடித்தமை தானத்தில் 28-10-39 சென்னை கவர்னர் மே. தா. லார்டு எர்ஸ்கின் திருவாங்கூர் மகாராஜா உருவச்சிலையைத் திறந்து வைப்பாராம்.

கனம் ஸி. ராஜகோபாலாசாரியார் இந்த உருவச்சிலையைத்திறந்து வைக்கும்படி கவர்னரை வேண்டிக்கொண்டு ஒரு பிரஸங்கம் செய்வாராம்.

சென்னை மேயர் ஸ்ரீ வேங்கடசாமி நாயுடு சென்னைமா நகர் பொது ஜனங்கள் சார்பாக உருவச்சிலையை ஏற்றுக்கொள்ளுவாராம்.

சென்னைக்கும் திருவாங்கூருக்கும் எந்த விதத்தில் சம்பந்தம். எந்த முறையில் திருவாங்கூர் ராஜாவின்உருவச்சிலையை சென்னை நகர் ஏற்றுக்கொள்ள வேண்டும்?

பல கொள்கைகளை புடையவர்கள் சென்னையில் வசிக்கிறார்கள். அவர்கள் இந்த உருவச்சிலை ஏற்படுவதை விரும்பவில்லை. ஆனால் காங்கிரஸ்காரர்கள்—சென்னை நகர பொது ஜனங்கள் ஒருங்கு சேர்ந்து மகாராஜா செய்த இந்த சீர்திருத்தத்தை வரவேற்றி—அதற்கு மரியாதையாக ஒரு சிலை ஏற்படுத்தினார்கள் என்று கூறுவது சரியாகாது. சென்னையில் "தனிப்பட்ட நபர்களால் ஏற்பாடுத்தப்பட்ட சிலை" என்று கூறினால் நன்றாக இருக்கும்.

"சென்னை மாகாணத்தில் ஆலயப்பிரவேச பாதகாப்புச் சட்டத்தை இயற்றி யிருக்கும் கனம் ஸ்ரீ ராஜகோபாலசாரியாருக்கு திருவாங்கூரில் ஒரு சிலை ஏற்படுத்தி, அதை மே. தா. மகாராஜா திறந்து வைத்து ஆலயப் பிரவேச பிரகடனத்துக்குக் காரணமான சர் C. P. ராமசாமி அய்யர் சிலையை நிறந்து வைக்கும்படி மகாராஜாவைக் கேட்டுக் கொண்டு ஒரு பிரசங்கம் செய்து, ஸ்ரீ பரமேஸ்வரன் பிள்ளை திருவாங்கூர் ஜனங்கள் சார்பாக சிலையை ஏற்றுக் கொண்டால் நன்றாக இருக்கும்". என்ற யோஜனையை "தர்ம ராஜ்யா" ஒரு குறிப்பில் எழுதி இருக்கிறது.

கர்ப்பத்தடைக்கு கடுந்தண்டனை

விவாகமாகாதவர்களுக்குப் புதியவரிகள்

பிரான்ஸ்தேசத்தில் நூதனச்சட்டங்கள்

பிரான்ஸ்தேசத்தின் ஜனத்தொகையை அதிகரிக்கவேண்டி பிரான்ஸ் சட்டியரசு அதிகாரிகள் சில நூதனச்சட்டங்களே விதித்திருக்கிறார்கள். இந்தச் சட்டங்களே மீறி நடப்பவர்களுக்குக் கடுந்தண்டனையும் அபராதமும் விதிக்க ஏற்பாடு செய்திருக்கிறார்கள்.

விவாகமாகி இரண்டு வருஷங்களுக்குப் பிறகு குழந்தையில்லாத இளம் தம்பதிகளுக்கு இரண்டு வரிகள் விதிக்கப்பட்டிருக்கின்றன.

"குடும்பச்சட்டம்" என்ற இந்தப் புதிய சட்டம் பிரான்ஸ் தேசத்தின் பிரஜாபிவிருத்தி செய்யவே இயற்றப்பட்டிருக்கிறது.

குழந்தையில்லாத விதவைகள், மணவிலக்கு இழந்தபுருஷர்கள், விவாகத்தை செய்து கொண்டவர்கள் யாவரும் இந்தச் சட்டத்தினால் பாதிக்கப்படுபவர்களாம்.

இந்த "குடும்பச்சட்டம்" 167 பிரிவுகள் கொண்டது.

பிரஜாபிவிருத்திக்கு எதிராகப் பிரசாரம் செய்பவர்களுக்கு அபராதங்கள் விதிப்பதைப்பற்றிய விவரங்களும் பிரசுரிக்கப்பட்டிருக்கின்றன.

சினிமா, பத்திரிகைகள், படங்கள் முதலியவைகளின் மூலம் எதிர்பிரசாரம் செய்பவர்களுக்குத் தண்டனை விதிக்கப்படும்.

கர்ப்பத்தடைக்காக மருந்துகள் உபயோகிப்பவர்கள்மீது அதிகக் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். சட்ட விரோத முறையில் காரியங்கள் நடத்துகிறவர்களுக்கு ஒருவருஷமுதல் ஐந்து வருஷம் வரை தண்டனையும், 300 லிருந்து 10,000 பிராங்குகளும் அபராதம் விதிக்கப்படும்.

ஸ்ரீரங்கம் கோவில் தடியடி வழக்குகள்

கனம் டாக்டர் ராஜன் ஸ்ரீரங்கம் தேவஸ்தானத்திற்குச் சென்றமாதம் 9-ம் தேதி விஜயம் செய்தபோது நடந்த கலவர விஷயமாக ஸ்ரீரங்கம் போலீசார் 28 நபர்களின் பேரில் தொடர்ந்திருக்கும் வழக்கு இன்று திருச்சி சப் டிவிஷனல் மாஜிஸ்ரேட் முன்பாக எடுத்துக்கொள்ளப்பட்டது. போலீசார் இ. பி. கோ. 147, 341, 332, 149, பிரிவுகள் படி வழக்கும் தொடர்ந்திருக்கிறார்கள். ஸ்ரீரங்கத்தம்மாள் என்ற25-வது எதிரி உடம்பு இன்னும் அசௌகரியமாயிருப்பதால் அவரைத்தவிர மற்ற 27 எதிரிகளும் கோர்ட்டில் ஆஜரானார்கள்.

வக்கீல்கள் ஸ்ரீமான்கள் சர் மாவும் ஸ்ரீகஸ்தூரிரங்கசாரியாரும் அவர்களுக்கு ஆஜரானர்கள்.

மேலும் ஸ்ரீமான் சர்மா, மனுவின்பேரில் "மதராஸ் மெயில்", "ஹிந்து" நிருபர்கள் தங்கள் பத்திரிகைகளுக்கு 10-ம் தேதி அனுப்பிய தந்திகளும் அதேதினம் அந்த பத்திரிகைகளுக்குடாக்டர் ராஜன் அனுப்பியதாக சொல்லப்படும் தந்திகளும் ஆஜர்படுத்த சம்மன் பிறப்பிக்கப்பட்டது.

ஸ்ரீரங்கத்தம்மாள் டவுன் கோர்ட்டில்போலீசார் மீதும்,கோவில் அதிகாரிகள்பேரிலும் தொடுத்தவழக்கும் இந்த கோர்ட்டுக்கு மாற்றப்பட்டு 20-ம் தேதிக்கு சம்மன் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

"எதிராளிகள் கொட்டை எழுத்துக்களில் போடுவார்களே"!

"தேர்தலில் நாம் தோற்றுப் போனால் எமது எதிராளிகளின் பத்திரிகைகள் கொட்டை எழுத்துக்களில் "காங்கிரஸ் தோ்தலில் தோற்றுப்போய் விட்டது" என்று எழுதுமே அப்படி சேரிடவேண்டுமா?" என்று கனம் கோபாலரெட்டி கரைக்குடி கூட்டத்தில் கேட்டார். கூட்டத்தில் ஒருவர் "ஆம். அப்படியே நடந்து பார்க்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன்" என்று கூறினர். உடனே மந்திரி கோபமூண்டு அம்மாதிரி விரும்புவர் காங்கிரஸ்காரரல்ல. அவர் கூட்டத்திலிருந்து விலகிப்போய்விடுமென்று கர்ஜித்தார்.

"தர்மமல்ல"

காங்கிரஸ் அபேக்ஷகரை தோற்கும்படிச் செய்வது தர்மமல்ல! அப்படிச் செய்வது பிற்போக்காளர்களுக்கு உதவி செய்வதாகும் என்று மந்திரி குறிப்பிட்டார். (மெட்ராஸ் மெயில்)

பிரஜாபிவிருத்திசெய்யும் குடும்பங்களுக்குப் பலசலுகையங்கள் இச்சட்டத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.

விவாகமாகி இரண்டு வருஷத்துக்குள் பிறக்கும் முதல் குழந்தைகளுக்கு 2000 லிருந்து 3000 பிராங்குகள், பிரிமியம் கொடுக்கப்படும்.

குழந்தைகளை 14-வது அல்லது 17-வது வயது வரையில் வீட்டில் பாதுகாக்கும் குடும்பங்களுக்கு உதவிசெய்யப்படும்.

விவசாயிகளுக்கு விசேஷ சலுகை காட்டப்பட்டிருக்கிறது.

பத்துவருஷகாலத்துக்கு நிலத்தைப் பாதுகாத்துக்கொண்டு விவசாயத்தைஅபிவிருத்தி செய்யும் தம்பதிகளுக்கு 5000-த்திலிருந்து 20,000 பிராங்குகள் கடன் கொடுத்து உதவி செய்யப்படும்.

ஸ்ரீரங்கம் வனுதனிகள் கூட்டம்

அகில இந்திய வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தின் ஆதரவில் 29—9—39 ல் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீரங்கம் திரு. டி. கே. பாலசுப்பிரமணிய அய்யர் தலைமை வகித்தார்.

ஸ்ரீமான்கள் தரைசாமி அய்யர், கஸ்தூரி ரங்கசாரியார், தா. மருதைச் செட்டியார், சுந்தராஜ் அய்யங்கார், ஜனப் சுல்தான் பக்தாஹி முதலியவர்கள் ஆலயப்பிரவேசச் சட்டத்தைக் கண்டித்தும், ஹரிஜனங்களைக் கோவிலுக்கு அனுமதிக்க நடத்தப்படும் இயக்கத்தை எதிர்த்தும் பேசினர்கள். அவசியம் ஏற்பட்டால் ஹரிஜனங்கள் கோவிலுக்குள் நுழைவதைத் தடுக்க தொண்டர்கள் சத்தியாக்கிரகம் செய்யத் தயாராக இருக்க வேண்டுமென்றும், அதன் பொருட்டு ஆண்களும் பெண்களும் சேர்ந்த ஒரு தொண்டர் படையை அமைக்க வேண்டுமென்றும் அவர்கள் பொதுஜனங்களிடம் சொல்லிக் கொண்டார்கள்.

ஆலயப் பிரவேசத் தீர்மானத்தை ஸ்ரீரங்கம் நகரசபையார்கள் கைநழுவிட்டதற்காக ஸ்ரீரங்கம் நகரசபை அங்கத்தினர்கள் கூட்டம் பாராட்டுவதாகத் தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. ஸ்ரீரங்கம் நகரசபையில் காங்கிரஸ்கட்சி மெம்பர்கள் அதிகமிருந்தும் சபை பொதுமக்களின் மனப்பான்மையை மதித்ததற்காக அதற்குக் கூட்டம் தன் வந்தனத்தைத் தெரிவித்துக்கொண்டதாகத் தீர்மானம் செய்யப்பட்டது. நகரசபை காங்கிரஸ் அங்கத்தினர்கள் அத்தீர்மானத்திற்கு உடன்தையாக இருந்ததற்காக அவர்கள் மீது தா. ரா. காங்கிரஸ்கமிட்டி ஒழுங்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டால் சனாதனிகள் காங்கிரஸ் கௌன்சிலரின் சார்பாக வந்து ஆதரவளிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. தற்போது நடைபெறும் ஜோ யுத்தத்தில் பிரிட்டனுக்கு வெற்றி கிடைக்கும்படி ஸ்ரீரங்கநாத சுவாமியை சனாதனிகள் பிரார்த்தனை செய்யவேண்டு மென்றும், அதை ஸ்ரீரங்கம் தேவஸ்தான நிர்வாக அதிகாரி தடைசெய்யக்கூடாதென்றும் கேட்டுக் கேட்டுக்கொள்வதாகவும் தீர்மானங்கள் செய்யப்பட்டன.

6000 வனுதனிகள்

பிரார்த்தனை

சென்ற நிங்கட்கிழமையன்று மாலை ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாத ஸ்வாமி கோவிலுக்குள் சுமார் 6000 சனாதனிகள் ஆடவரும் பெண்டிரும் ஒரு பெரிய ஊர்வலமாகச் சென்று, தற்போது நடைபெறும் ஐரோப்பிய யுத்தத்தில் பிரிட்டனுக்கு வெற்றிகிடைக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்தார்கள்.

திருநெல்வேலி அதிகாரிகளுக்குத் தந்தி

9-10-39 மாலை ஸ்ரீ சச்சிதானந்த ராஜயோகி தலைமையில் ஓர் பொதுக்கூட்டம் கூடியது. ஆலயத்தின் தர்மகர்த்தர்களின் உத்தரவுக்குக்கீழ்ப்படியாமல்அபிஷேகத்தை ஆரம்பம் செய்வதைத் தடுத்த கோயில் சிப்பந்திகளின் போக்கைக் கண்டித்தும் ஓர் தீர்மானம் செய்யப்பட்டது: இதசம்பந்தமாக ஹிந்துமத பரிபாலன போர்டுக்குத் தகவல் அனுப்பப்பட்டிருக்கிறது. (ஒ. நி)

ஸ்ரீரங்கம் ஆலய தர்ம சம்ரக்ஷண சபைக் கூட்டம்

ஸ்ரீரங்கம் ஆலய தர்ம சம்ரக்ஷண சபையின் ஆதரவில் ஸ்ரீ ரங்கத்தில் சென்ற 26—9—39- ந் தேதி ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீகண்ஜரி ரங்கசார்சாரியார் தலைமை வகித்தார். ஸ்ரீ ஆனந்தராவ், ஜனப் சுல்தான் பக்தாஹி ஆகியவர்கள் ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை எதிர்த்து சொற்பொழிவாற்றினர்கள். காங்கிரஸ் காரியக்கமிட்டியுத்த சம்பந்தமாகக்கொண்டுள்ள அபிப்பிராயத்தைக் கண்டித்தும், தற்போது நடைபெறும் யுத்தத்தில் பிரிட்டனுக்கு வெற்றிகிடைக்கவேண்டுமெனக் கடவுளை பிரார்த்தித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திருச்சி முனிசிபாலிட்டி தீர்மானக் கண்டனம்

ஸ்ரீரங்கத்தில் ஆஸ்திகர் கூட்டம்

சென்ற செவ்வாய்க்கிழமை மாலை ஸ்ரீரங்கம் டௌசரவில் ஒரு பெரிய ஆலயப்பிரவேச எதிர்ப்புக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு சுமார் 4000 பேர் வந்திருந்தார்கள். ஸ்ரீ கோ. கோவிந்தக்கோனர் கூட்டத்திற்கு தலைமைவகித்தார். ஸ்ரீமான்கள் தரைசாமி அய்யங்கார், திருச்சி தா. மருதை செட்டியார், ஜனப் எஸ். எம். சுல்தான் பக்தாஹி, சாது சங்கரஸ்வாமி, ராமசாமி அய்யங்கார், கிருஷ்ணமாச்சாரியார், டி. கே. பாலசுப்பிரமணி அய்யர், டாக்டர் சுந்தராஜ் ஐயங்கார் ஆகியவர்கள் பேசினர்கள்.

திருச்சி நகரசபை ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவளித்து நிர்மானம் செய்திருப்பதைக் கண்டித்தும், சனாதனகொள்கைக்கு மாறுக ஆதரவளிக்கும் பத்திரிகைகளே சனாதனிகள் பகிஷ்கரிக்க வேண்டுமென்றும் கடுகிலைமைப் பத்திரிகைகளான திருச்சி "சமரசம்," கும்பகோணம் "ஆர்யதர்மம்" ஆகிய பத்திரிகைகளே சனாதனிகள் ஆதரிக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

திண்டுக்கல்

ஸ்ரீ அபிராமி அம்மன் தேவஸ்தானம்

தீண்டாதார்களை ஒரு நாளும் அனுமதியோம்

தர்மகர்த்தாவுக்குப் பாராட்டு

நிண்டுக்கல் ஸ்ரீ அபிராமி அம்மன் தேவஸ்தான தர்மகர்த்தர் ஸ்ரீ எஸ். ராமசாமி அய்யர் (மாஜி என்ஜினீர்) பத்திரிகைகளுக்கு விடுத்த அறிக்கையில் "ஒரு நாளும் தீண்டாதாரை இந்தக் கோவிலில் அனுமதியோம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இதனை அறிந்த நிண்டுக்கல் ஆஸ்திக மகாஜனங்கள் 27—9—39 ஸ்ரீ சங்கர மடத்தில் "கூடி ஸ்ரீ S. ராமசாமி அய்யர் ஹிந்து தர்ம சாஸ்திரத்துக்கு விரோதமின்றி நடத்தை பாராட்டுவதாக" ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினர்கள்.

(சமது நிருபர்.)

ஆலயப்பிரவேச சீர்திருத்தம்

"பொதுஜன ஆதரவு பெற்று மெதுவாக செய்யவேண்டும்"

"தீண்டாதார் பிரச்னையைத் தீர்த்து வைப்பது கஷ்டமாகும்"

ஸ்ரீ S. சத்தியமூர்த்தி அபிப்பிராயம்.

"தீண்டாதார் பிரச்னை" என்ற விஷயமாக 9—10—39 ஸ்ரீஎஸ். சத்தியமூர்த்திசென்னை இந்திய ஊழியர் சங்கக் கட்டிடத்தில் பேசினர்.

ஸ்ரீ சத்தியமூர்த்தி பேசுகையில், மற்ற மாகாணங்களைக் காட்டிலும் தென்னிந்தியாவில் தீண்டாதார் பிரச்னையை தீர்த்துவைப்பது கஷ்டமாகுமென்றும், இந்திய விடுதலைபெற்றுத்தான் எந்த வகுப்பும் அதன் உயரிய நிலையை அடையுமென்றும், வயதுவந்த அனைவருக்கும் ஓட்டுரிமை கிடைக்க எல்லோரும் உழைக்கவேண்டுமென்றும், தீண்டாதார்களின்தொகுதியையும், பூனா ஒப்பந்தத்தையும் ஒழிக்க முற்படவேண்டுமென்றும் கூறிவிட்டு, ஆலயப்பிரவேச சீர்திருத்தம் கட்டாயமாக நடக்கவேண்டிதே. சிறிது காலத்தில் அது வெற்றி கரமாக விருக்குமென்பதில் சந்தேகமில்லை. "ஆனால், இந்த சீர்திருத்தத்தை பொதுஜன ஆதரவுடன் மெதுவாகச் செய்யவேண்டுமென்று ஸ்ரீ சத்தியமூர்த்தி எடுத்துக்கூறினர்".

கனம் கோபால ரெட்டிக்கு சமாரியான கேள்விகள்?

காங்கிரஸ் கமிட்டியே கேட்கிறது!

சேச்சிலில்பட்டிக்கு கனம் பி. கோபால ரெட்டி விஜயம் செய்த பொழுது நகர காங்கிரஸ் கமிட்டிப் பல கேள்விகளே அச்சிட்டதண்டுப் பிரசுரத்தை ஜனங்களுக்கு வழங்கிற்று. அந்தப் பிரசுரத்தைப் பற்றி கனம் மந்திரி கூட்டத்தில் விவரிக்கும் பொழுது "நகர காங்கிரஸ் கமிட்டியார், பஞ்சாயத்து போர்டினர், சிரம உத்யோகஸ்தர்கள் இவர்கள் யாவரும் மக்களுக்கு உதவ வேண்டும். ஒழுங்கு முறையை அனுஷ்டிக்க வேண்டும். இல்லையேல் காங்கிரஸ் முன்னேறிச் செல்ல முடியாது. எனவே, நகர காங்கிரஸ் கமிட்டி காங்கிரஸிடம் விஸ்வாசத்துடன் நடந்து கொள்ள வேண்டும். காங்கிரசுக்குத்தோல்வி ஏற்படக்கூடாது. காங்கிரசுக்காக வாபீஸ் பெறுவதை இழிவாகக் கருதக்கூடாது என்று" குறிப்பிட்டார்.

இராமேஸ்வரம்

ஆலயப்பிரவேசமா?

ஆலயப் பிரவேசம் நடக்குமென்ற அச்சத்தால் சனதிகளும், பொதுமக்களும் ராமேஸ்வரம் கோயிலை பாதுகாத்து வருகின்றனர். கோயிலின் நிர்வாக அதிகாரியும் இன்னும் இதர அதிகாரிகளும் ராமேஸ்வரத்தில் முகாம் செய்து வருகின்றனர். ஒருவிதமான பரபரப்பிருந்து வருகிறது இதுவரையில் எவரும்ஆலயத்துள் செல்லவில்லை. (ஒ. நி.)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸ்ரீ புரட்டாசி-மீ 27உ

காங்கிரஸிடம் அவநம்பிக்கை அதிகரிப்பதேன்?

சென்ற ஐம்பது வருஷகாலமாக பாரத தேச மக்களின் அளவற்ற நம்பிக்கையைப் பெற்றிருந்த காங்கிரஸ் மஹா ஸபையானது இன்று அதன் நிர்வாஹிகளாயிருப்பவர்களுடைய முறட்டுப் பிடிவாதத்தாலும், அசாதுர்யத்தாலும்' பதேச்சாதிகார ருசியாலும் பெரும் பான்மையோரின் நம்பிக்கையை இழந்து நிற்பது நன்கு வெளியாகிவிட்டது. உண்மையான காங்கிரஸ் அபிமானிகள் யாவரும் இதைக்கண்டு அனுதாபப் படாமலிருக்க மாட்டார்கள்.

வைஸ்ராய் அவர்கள் யுத்தவிஷயமாக காந்திஜியையும் சில காங்கிரஸ்காரர்களையும் ஸந்தித்துப் பேசினர்.

காங்கிரஸ்காரர்களின் பேரம் காரணமாக இந்தியாவுக்கு ஏதாவது அதிக அதிகாரம் கிடைக்கலாமோ வென்றும், அதில்காங்கிரஸ் ஆதிக்யம் ஏற்படுமோ வென்றும் ஸ்தேதகம் தேசத்தில் உண்டாகியிருக்கிறது. இவ்வளவு தான் தாமதம். காங்கிரஸிடம் நம்பிக்கை யிழந்த கணக்கற்ற ராஜீய, ஸமூஹஸ்தாபனங்களும், தனிப்பட்ட கபர்களும் முன் ஜாக்ரதையுடன் விழித்தக்கொண்டு காங்கிரஸுக்கெதிரான அபிப்பிராயத்தை வைஸ்ராய் அவர்களிடம் தெரிவிக்க முற்பட்டிருக்கிறார்கள். இதில் ஒரு கக்ஷியார் கூட பாக்கியில்லாமல் பாவரும் ஒருமுகமாக, தங்களுக்கு காங்கிரஸிடமிருந்த நம்பிக்கை போய் விட்ட தென்றும், இனியும் அதன் ஆதிக்கத்தில் தாங்கள் இருக்க விருப்பமில்லையென்றும் தெளிவாகக் கூறிவிட்டார்கள்.

காங்கிரஸுக்கு அடுத்த படியாக தேசத்தில் பெரிய செல்வாக்குப் பெற்றிருக்கும் ஹிந்து மஹா ஸபையானது காங்கிரஸை நம்பவில்லை. 8 கோடி ஜனங்களுக்கு பிரதிநிதியாக விளங்கும் முஸ்லீம் லீகும் தனது அழுத்தமான அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறது. காங்கிரஸானது எத்தனை நீண்டாத ஸமூஹத்தினருக்காகப் பாடுபடுவதாக கூறுகிறதோ, அத்தனை ஸமூஹத்தின் ஸ்தாபனங்களும், அதன் தலைவர்களாகிய டாக்டர் அம்பேத்கர், ராஜபோஜ், எம். கி. ராஜா ஸர், ஸ்ரீனிவாஸன் போன்றவர்களும் காங்கிரஸிடம் பூர்ண அவநம்பிக்கையை வெளியிட்டு அதன்போக்கையும் பலமாகக் கண்டித்திருக்கிறார்கள். இது போல் மிகவாகி ஸங்கம், ஜஸ்டிஸ் கக்ஷியும் ஸனாதனக்கக்ஷியும் காங்கிரஸ் நிர்வாஹத்தில் வெறுப்புற்று அதனிடம் நம்பிக்கையிழந்து விட்டதாக பஹிரங்கப்படுத்தியிருக்கின்றன. ஆதலால், காங்கிரஸை ஆதரிக்கக் கட்டுப்பட்டுள்ள ஒரு சில காங்கிரஸ்காரர்களைத் தவிர, மற்றெல்லா பிரிவைகளின் நம்பிக்கையை காங்கிரஸ் இழந்து விட்ட விஷயம் ஸ்பஷ்டமாகிவிட்டது. இத்தகைய நிலைமை சென்ற 50வருஷத்தில் காங்கிரஸில் ஏற்பட்டதில்லை. சென்ற இரண்டு வருஷ ஆகிக்குள்ளாகவே காங்கிரஸ் இப்படி தேச ஜனங்களின் நம்பிக்கையை அடியோடு இழந்துவிட்டதாக வெளியாகியிருப்பது மிகவும் வருத்தத்தக்கது.

இனி இந்த நிலைமைக்குக் காரணமென்ன? இதைத்தான் தற்கால காங்கிரஸ் தலைவர்கள் தீர்க்க திருஷ்டியுடனும், சாந்த மனதுடனும் அஹம்பாவத்தை விட்டும் பரிசீலனை செய்ய வேணும். அப்போதுதான் காங்கிரஸைக் காப்பாற்றமுடியும்.

காங்கிரஸ்காரர்கள் உத்தியோகம் ஏற்கு முன் வெளியில் பேசிய பேச்சிற்கும், தற்போது அரசாகியில் அவர்கள் அதற்கு மாறுக நடப்பதுமே தேசத்தில் பெரிய அதிருப்தியைக் கொடுத்திருக்கிறது. ஜனநாயத்தை ஸ்தாபிப்பதாகக் கூறும் காங்கிரஸானது முற்றிலும் பதேச்சாதிகாரப் போக்குடன் நடப்பதையே பலகக்ஷிகளும் எடுத்துக் காட்டுகின்றன. காங்கிரஸ் மந்திரிகளின் ஆகியில் வசனைக்குக்கூட ஜனநாயகத்வமில்லை. பொதுஜனங்களுடைய அபிப்ராயங்களை காங்கிரஸ் மந்திரிகள் கேட் பதில்லை, மதிப்பதுமில்லையென்பது 2 வருஷ ஆகியில் நிட்டமாக தெரிவிப்பட்டிருக்கிறது. காந்திஜியினுடைப்போ, அல்லது வேறு இரண்டு மூன்று காங்கிரஸ் தலைவர்களுடையவோ ஆக்ஞைப்படியே காங்கிரஸ் மந்திரிகள் நிர்வாஹம் நடத்திவருகிறார்களே யல்லது பொதுஜனங்களை மதித்து நடத்துகிறதில்லை. ஸமூஹத்தில் பிரபலஸ்தர்களாயிருப்பவர் எவ்வளவு ராஜீய, ஸமூஹ அநுபவமுள்ளவராயினும் ஸரி அவர்களுடைய வார்த்தையை காங்கிரஸ் மந்திரிகள் தரும்பவதுகூடலக்ஷ்யம் செய்வதில்லை. இம்மட்டுமா? அதிகாரத் நிமிர் படைத்த, அதனால் ஸுதேச அரசர்களை பயமுறுத்தியிருக்கிறார்கள். காங்கிரஸ் கட்டுப்பாடுபடியெல்லாம் அவர்கள் ஆடவேண்டுமாம். ஜமீன்தார்களை கடுங்கச்செய்கிறார்கள், நிலச்சுவான்தார்களையும் பணக்காரர்களையும் விரட்டுகிறார்கள். வியாபாரிகளை கசக்குகிறார்கள். தார்மிகர்களையும், ஸாதுக்களையும் கேலி செய்கிறார்கள். பேச்சு ஸ்வதந்திரம் ஸொத்து ஸ்வதந்திரம் முதலியவை பறிக்கப்படுகிறது. வெள்ளை அதிகாரவர்க்க ஆகியில் ஜனங்களுக்கு இருந்த கொஞ்ச நஞ்ச உரிமைகளும் காங்கிரஸ் "ஜனநாயக" ஆட்சியில் தொலைந்து போய்விட்டது. இந்த நிலைமையில் தேசத்தில் ஸகலப் பிரிவினரு டையும் விரோதத்தை காங்கிரஸ் மந்திரிகள் ஸம்பாதித்துக் கொண்டு அதன் மூலம் காங்கிரஸையே பாழ்படுத்திவிட்டார்கள். ஆதலால் தான் இன்று வைஸ்ராயிடம் எல்லாக் கக்ஷியாரும் காங்கிரஸைகம்பமாட்டோமென்று சொல்ல நேர்ந்திருக்கிறது. அதிகமேன்? காங்கிரஸுக்குள்ளேயே ஜனநாயகம் மரித்து ஒரு யதேச்சாதிகாரியின் செல்படியே கார்யங்கள் நடைபெறுகின்றன வென்பது நிரபுரா காங்கிரஸ் கடவடிக்கைகளாலும், ஸுபாஷ்போஸை விரட்டியதாலும் நன்கு வெளியாகிறது. தீவிரகாங்கிரஸ் வாதிகளான போஸ் முதலியவர்களே தற்கால காங்கிரஸ் நிர்வாஹிகளின் யதேச்சாதிகாரத்தையும், அஹம்பாவத்தையும் பஹிரங்கமாகக் கண்டித் திருக்கவில்லையா?

சுதேச ஸமஸ்தானங்களில் யதேச்சாதிகாரம் தண்டவமாடுவதாக காங்கிரஸ்காரர் பரிஹஸிக்கிறார்கள். ஆனால் காங்கிரஸ் மந்திரிகள் ஆகியில் ஜனநாயக வாசனையே இல்லை யென்றும், யதேச்சாதிகாரமும் அடக்கு முறையும் மலிந்து விட்டதாயும், ஸமஸ்தான நிவாஸிகள் சாட்சி கொடுக்கிறார்கள்.

ஆதலால் காங்கிரஸ் மீண்டும் பொதுஜன நம்பிக்கையைப் பெறவேண்டுமானால் காங்கிரஸ் மந்திரிகள் அகம்பாவத்தை விட்டே ணும். பொதுஜன அபிப்பிராயத்தை மதிக்க வேணும். அதிகார பலத்தில்எதையும் சாதிக்க முற்படக்கூடாது. உண்மையான ஜனநாயக தத்தை கடைபிடித்து நிற்கவேணும். காங்கிரஸ் மந்திரிகளைவிட எவ்வளவோ கௌரவமும் அந்தஸ்தும் ஸௌகரியங்களும் பெற்ற ராஜப்பிரதிநிதியாக இருந்துகொண்டு 40 கோடிமக்களை ஆண்டுவரும் வைஸ்ராயின் உன்னத குணங்களை நமது மந்திரிகள் பின் பற்றுவார்களா? ஒவ்வொரு கக்ஷியாரையும் மதித்து அவர்கள் மூலம் பொதுஜன அபிப்பிராயத்தை அறிந்துகொள்ள வைஸ்ராய் எவ்வளவு பாடுபடுகிறார் பார்த்தீர்களா? உத்தம நிர்வாஹகுணமும் ஒற்றுமை யுணர்ச்சியும், பொறுப்புங்கொண்ட இந்த முறையை நமது மந்திரிகளும் பின்பற்றி நடக்க ஆரம்பித்தால் அல்லது காங்கிரஸ் மநிப்பைக் காப்பாற்ற முடியாது. ஆதலால் பகவான் நமது காங்கிரஸ் மந்திரிகளுக்கு நற்புத்தி அளித்து தேச மஹா ஸபையான காங்கிரஸின் நிலையை னது தேசஹிதமான வழியில் திரும்பும்படி அருள்புரிவானென நம்புவோம்.

"உறுதியைப் பாராட்டுவோம்"

ஜில்லாபோர்டு எலெக்ஷனில் வனுதநிதிகள்

ராமநாதபுரம் ஜில்லாபோர்டு எலெக்ஷனில் சிவகெங்கை ஸர்க்கிளில் ஸுதன வீராகிய ஸ்ரீமான் ஸுந்தரேசசிளைஞிகள் அபேக்ஷகராக நின்றார். ஸ்ரீமான் சிளைஞிகளுக்கு 1373 ஓட்டுகள் கிடைத்திருக்கின்றன.

காங்கிரஸ் அபேக்ஷகர் மூவாயிரம் சொச்சம் வோட் பெற்று வெற்றிபெற்றாயினும் ஸ்ரீமான் சிளைஞிகளுக்கு ஆயிரம் சொச்சம் பேர் ஆதரவுகாட்டியது விசேஷமாகும். காங்கிரஸ் அபேக்ஷகரான ஸ்ரீமான் முகுந்தராஜய்யங்கார் அங்கு பிரபலவக்கீல். பணக்காரர்கள் ஆள்கூட்ட பலமும் காங்கிரஸ் பலமும் பெற்றவர். அந்த ஜில்லாவில் செல்வாக்குள்ளவர். இவ்வளவும் தெரிந்திருந்தும் ஸ்ரீமான் சிளைஞிகள் ஜயாபஜயத்தைக் கவனிக்காமல், கேவலம் கொள்கையை மட்டும் முன்னிட்டு இந்த எலக்ஷனில் தைரியத்துடன் போட்டிபோட முன்வந்ததையும், மந்திரிகளின் செல்வாக்குடன் நடைபெற்ற காங்கிரஸ் பிரசாரத்தினிடையிலும்கூட ஆயிரத்து முன்னூறு பேர்களுடைய ஆதரவை ஸ்தாவைநிகரும் எளியவாயு முள்ள ஸ்ரீ சிளைஞிகள் பெற்றதையும் பாராட்டுகிறோம். அவருடைய தைர்யத்தையும், உறுதியையும் மெச்சுகிறோம்.

ராமேஸ்வரம் ஸர்க்கிளில் நடைபெற்ற தேர்தலில் ஸ்ரீமான் பட்டர் என்ற ஸுதநி காங்கிரஸ் அபேக்ஷகரை எதிர்த்துப் போட்டி போட்டார். பத்து வோட்டுகள் வித்தியாசத்தினால் மட்டும் காங்கிரஸ் அபேக்ஷகர் தப்பிப்பிழைத்தார். மிகப் பெரும்பான்மையான வோட்டர்கள் ஸுதநி அபேக்ஷகரை ஆதரித்தது போற்றத்தக்கது.

காங்கிரஸ்காரர்கள் சர்க்கார் நிர்வாக பதவியிலிருக்கையிலேயே வோட்டர்கள் அவர்களிடம் சிறுகச்சிறுக அபிமானத்தைக் குறைத்துக்கொண்டுவிட்டது. இந்த எலெக்ஷன்களிலிருந்து வெளிப்படையாகவே முக்ய விஷயமாகும். இது காங்கிரஸ் மந்திரிகளுக்கு ஓர் எச்சரிக்கையாகும். மந்திரிகள் தங்கள் பதவியை ராஜிநாமா செய்துவிட்டு எலெக்ஷனுக்கு நின்றால் அவர்கள் கக்ஷி பெரும் தோல்வி அடைவது இலிலிருந்து நிச்சயமாகிறது.

(ஒரு நிருபர்)

ஹிந்து மத தேவாலய பரிபாலன போர்டு

சர்க்கார் சட்டத் ரிட்டங்கள் செய்ய வேண்டும்

(ஸ்ரீமான் எல். எஸ். மணி எழுதியது)

சென்னை மாகாணத்தில் ஹிந்து மத தேவாலய பரிபாலன போர்டு என்ற ஒரு ஸ்தாபனம் சென்ற சில ஆண்டுகளாக கடை பெற்றுவருகிறது. இந்த ஸ்தாபனத்தை ஏற்படுத்தியவர் காலம் சென்ற ஜஸ்டிஸ் கட்சித்தலைவரும் சென்னை மாகாணத்தின் பிரதம மந்திரியாக இருந்தவருமான பனகல் ராஜா.

ஆரம்பத்தில் இந்த ஸ்தாபனம் ஒரு கட்சியின் சார்பாக வேலை செய்வதற்காகவே ஸ்ருஷ்டிக்கப்பட்டது. ஜஸ்டிஸ் கட்சியின் தலைவர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு இந்த ஸ்தாபனத்தில் உயர்ந்த உத்யோகங்கள் அளிக்கப்பட்டன. இப்பதவியிலிருப்பவர்களுக்குக் கொழுத்த சம்பளம் அன்று முதல் அளிக்கப்பட்டு வருகிறது.

ஆரம்பத்தில்-இந்த ஸ்தாபனத்தை தலைவர்களும், பதிரிகைகளும் கண்டித்து, இதை "ஒரு உத்தியோக வேட்டை ஸ்தாபனம்" என்று கூறினர்கள். இதை இதர மாகாணங்களின் தலைவர்களும் கண்டித்து வந்தார்கள்.

"மாகாணத்தின் பல்வேறு பாகங்களில் இருக்கும் கோவில்கள் சரிவர நடைபெற்று வரவில்லை. அதன் வருவாய்கள் சரியான துறைகளில் செலவிடப்படவில்லை" என்ற காரணத்தைக்காட்டி பனக்கால் ராஜா போர்டை ஸ்தாபித்தார்.

பல கோவில்கள் போர்டு ஆதிக்கத்தின் கீழ் பல ஆண்டுகளாக இருந்தும், ஒருவிதப் பயனையும் அடையவில்லை. லெவிடங்களில் தேவஸ்தானக்கமிட்டிகள்மூலம் சில ஆலயங்களின் காரியங்கள் கவனிக்கப்படுகின்றன. இக்கக் கமிட்டிகள்மூலம் கோவில்கள் எந்த விதத்தில் நன்மை அடைந்திருக்கிறதென்பதை வாசகர்கள் முடிவுக்கு விட்டுவிடுகிறோம்.

போர்டாருக்கு கோவில்களிலிருந்து லக்ஷக்கணக்கில் வருமானம் கிடைக்கிறது. இந்தப் பணத்தை போர்டார் என்ன செய்கிறார்கள் என்ற அதிய ஆவலுடையவர்களாயிருக்கிறோம்.

இந்த ஸ்தாபனத்தினிடம் பொதுமக்களுக்கு ஒரு வித அறுவெறுப்பு இருக்கிறதனென்னால், இந்தஸ்தாபனத்தினுல் கோவில்கள் எத்தமுறையில் அபிவிருத்தி அடைந்து நிருக்கிறது? அந்த ஸ்தாபனத்தின் நிர்வாக அதிகாரிகளின் வேலைகளென்ன? அந்தஸ்தாபனத்தார் ஏன் அதிகச்சம்பளம் வாங்குகிறார்கள்? என்ற பல கேள்விகளைப்பொதுமக்கள் கேட்கிறார்கள்.

தனிர போர்டார் ஆலய விஷயங்களில் அதிக ஜாக்ரதையாயிருக்க வேண்டியிருக்க அவர்கள் பங்கமாய் நீண்டாதார் ஆலயப் பிரவேசத்தக்கு ஆதரவு காட்டிவருகிறார்கள். போர்டு தலைவர் ஸ்ரீ கொண்டப்பா மதுரை ஸ்ரீ மீனாக்ஷி கோவிலில் ஆதிந்திராவிடர்கள் அத்து மீறி நுழைவதற்கு உடன்பாடாக இருந்த நிர்வாக அதிகாரி நீ ஆர். எஸ். நாயுடுவைப்பாராட்டி ஒரு செய்தி அனுப்பியிருந்தார். இதுசரியான முறைபாகுமோ?

ஹிந்து தர்மங்களின் முறைப்படிக்கும், ஆகம சாஸ்திர முறைப்படிக்கும் ஆலயங்கள் நடத்தவரவேண்டுமென்பதே ஆஸ்திகர்களின் ஆசை. அப்படி இருக்க, போர்டார் ஒரு கட்சியைத் திருப்திசெய்விக்கவேண்டி, அவர்கள் ஆதாவை அடையவேண்டி, அக்கட்சியின் கொள்கைகளைப் பகிரங்கமாய் பிரசாரம் செய்வது நீதியாகாது. பின்பற்றவதும் சரியாகாது.

காங்கிரஸ்காரர் பதவி வகிக்குமுன் இந்த போர்டைப்பற்றி பலவிதத்தில் குறைகள் கூறியுள்ளார்கள். மந்திரி கனம் டாக்டர் ராஜனும் ஆரம்பத்தில் இந்தபோர்டை எடுத்து விடப் போவதாகக் கூறியிருக்கிறார். போர்ட் உத்தியோகஸ்தர்களின் தொழுத்த சம்பளத்தை அடியுடன் குறைக்கப்போவதாகப் பறைசாற்றினர். ஆனால் இன்ன அந்த போர்டைப்பற்றி டாக்டர் ராஜன் கொண்டுள்ள அபிப்பிராயம் யாது? போர்டைப்பற்றி காங்கிரஸ்காரர்கள் இப்பொழுது என்ன சொல்லுகிறார்கள் என்பதை வரி சையுத்துவோர் அறிந்துகொள்ள முடியவில்லை.

"கோவிலில் பூஜைசெய்பவர்களுக்கு வேதசாஸ்திரம் தெரியுமா?" என்று டாக்டர் ராஜன் கேலி செய்கிறார்.

ஹிந்துமத தேவாலய பரிபாலனி போர்டாரின் நிர்வாகஸ்தர்களுக்கு மதிப்பற்று, வேத சாஸ்திர ஆராய்ச்சி, புராணங்கள் யாவும் தெரியுமா? அவர்கள் இந்தி போர்டைப்பரிபாலிக்க வேண்டிய யோக்யதாம்சங்களை பெறுதிருக்கிறார்களா? என்று டாக்டர் ராஜனைக் கேழ்க்கிறோம்.

இந்தப் போர்டைப்பற்றி மக்கள் அதிகம் தெரிந்து கொள்ள வேண்டும். சென்னை காங்கிரஸ் சர்க்கார் இந்தப்படி இந்தப் போர்டு காரியங்களை செய்து வருகின்றன. நாளை மற்றொரு சர்க்கார் வரலாம். அப்பொழுது போர்டு வேறு கொள்கைகளைப்பின்பற்றும்படி இருக்கும். அடிக்கடி போர்டார் தங்கள் கொள்கைகளை மாற்றிக்கொண்டு நடப்பதை விட்டுவிட்டு, நிரந்தரமாக ஒரு கொள்கையுடன் நடக்க முயற்சிக்க வேண்டும். அப்பொழுது தான் போர்டு எக்காரியத்துக்காக ஏற்பட்டதோ அக்காரியத்தை சாதிக்கமுடியும். சட்ட நிட்டங்களினால் கட்டுப்படாத இந்த போர்டு தன் இஷ்டப்படி காரியத்தை நடத்தி வருகிறது.

இந்த போர்டுக்கு ஒரு நிரந்தர சட்டநிட்டங்கள் இயற்றிவைத்துவிடவேண்டுமென்று சர்க்காருக்கு நாம் யோசனை கூறுகிறோம்.

காசி ஹிந்து சர்வகலாசாலையின் புதிய உபத்யக்ஷர்

பண்டித மதன் மோஹன் மாளவியாவுக்குப் பிறகு டாக்டர் ஸர். எஸ். ராதாகிருஷ்ணன் காசி ஹிந்து சர்வ கலாசாலை உப-அத்யக்ஷராக நியமிக்கப்பட்டிருக்கிறார். டாக்டர் ராதாகிருஷ்ணன் இத்துடன் ஆக்ஸ்போர்டு சர்வ கலாசாலை தத்துவ ஆசிரியர் பதவியையும், கல்கத்தா சர்வ கலாசாலை தத்துவ போதாசிரியர் பதவியையும் வகித்து வருவார். ஒரே சமயத்தில் மூன்று பதவிகளை வகிக்கும் ஆசிரியர் இவர் ஒருவர் தான்.

மகா யுத்தம்

ஐரோப்பாவில் யுத்தம் தொடங்கி இன்று 39 நாளாகின்றன.

நந்தியாலில் ஆலயப்பிரவேச பிரதி

கோவில் வாசலில் பிரம்மாண்டக் கூட்டம்

காங்கிரஸ் கூட்டத்தின் இடம் மாற்றப்பட்டது

கர்நூலாவில் ஒரு தேவாலயத்தின் முன்பாக காங்கிரஸ்காரர்கள் பொதுக்கூட்டமொன்றை கடந்த ஏற்பாடு செய்திருந்தார்கள். அதற்காகோவிலில் தீண்டாதாரைப் புகவிட முயற்சி நடக்குமென்று பொதுஜனங்கள் சந்தேகப்பட்டு ஆயிரக்கணக்காக அங்கு கூடிவிட்டனர். ஜனங்கள் மிகுந்த ஆத்திரமும் பரபரப்பும் அடைந்தனர்.

கோவில் வாசலில் காங்கிரஸ் கூட்டம் நடப்பதை பொதுஜனக் கூட்டம் பலமாக ஆக்ஷேபித்தது ஆத்திரம் அதிகமாக காணப்பட்டதால் காங்கிரஸ் கூட்டம் அங்கு நடத்த முடியாமல் வேறிடத்திற்கு மாற்றப்பட்டது.

அந்தக் கூட்டத்திலும் சாதகிகளின் கட்சியை ஸ்ரீமான் வெங்கடராமய்யர என்பவர் வெகு பலமாக எடுத்தக்கூறி ஆலயப்பிரவேசத்தை எதிர்த்தார். அவர் பேசும்போதுகறல் விழுந்தன. கூட்டத்தில் குழப்பமும் கூச்சலும் அதிகரித்து ஒரே இரைச்சலாயிருந்தது. கூட்டத்தைத்தலைவர் சமாளிக்க முடியவில்லை.

திருப்பதியில் ஆலயப் பிரவேச முயற்சி

போலீசாரால் தடுக்கப்பட்டது

ஹரிஜனியினருக்து வந்த சில தீண்டாதார் திருப்பதி மலைமீது ஏறி ஸ்வாமி தரிசனம் செய்ய முயற்சித்தார்கள். பொது ஜனங்கள் தடுத்தும் அவர்கள் லக்ஷ்யம் செய்யாமல் ஏறினர்கள். கோவில் சிப்பந்திகள் தடுத்தும் பயனில்லை. சில காங்கிரஸ்வாதிகள் இந்த தீண்டாதாருக்கு ஆதரவளிக்க முன்வந்தார்களாம். காங்கிரஸ் கொடியுடன் சில தொண்டர்கள் வந்திருந்தனராம்.

கடைசியாக நிர்வாக அதிகாரிக்குத் தகவல் கிடைத்ததும், அவர் போலீஸுக்கு உடனே அறிவித்தார். போலீஸார் வந்து தீண்டாதாரை மேலேமேல் ஏறமல் தடுத்துத் திருப்பி அழைத்து வந்தார்கள். பிறகு தீண்டாதார் திருப்பி போய்விட்டனர்.

தஞ்சை ஜில்லா பிராசுதார் துயரம்

தஞ்சை ஜில்லா பிராசுதார் சிறைகளைப் பற்றி மாஜி பிரதம மந்திரி ராஜாஜி அவர்கள் பகதூர் ஸ்ரீ என். சாமிராதய்யர் 7-10-39 காலை தஞ்சைக்கு விஜயம் செய்த சென்னை சர்க்கார் ரெவின்யூமந்திரி கனம் டி. பிரகாசத்தைப் பேட்டி கண்டு கூறினர். கனம் மந்திரி சிறைகளை நிவர்த்திப்பதாகக் கூறினர்.

குடந்தைக் கல்லூரி படகுப் பந்தயம்

கும்பகோணம் ராஜாக்கக்கல்லூரி படகுப் பந்தயம் 9-10-39 மாலை நடைபெற்றது. கனம் ஸர். விஜயாகவாசாரியார் தலைமை வகித்தார். ஹிந்து சாஸ்திரப்படி தலைவர் தேங்காய்களை உடைத்து படகுகளை காவிரியில் மிதக்க விட்டார். பந்தயத்துக்குப் பின் ஜெயித்தவர்களுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

பூர்ண அஹிம்சை வேண்டாம்!

ஹிந்து தர்மத்தில் கூறியுள்ள அஹிம்ஸை என்ன?

ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாசய்யங்கார் பிரசங்கம்

பச்சையப்பன் கல்லூரி சம்ஸ்கிருத சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாஸய்யங்கார் 6-10-39மஃலி ஒரு பிரஸங்கம் செய்தார். தத்துவஜ்ஞான ஆசிரியர் ஸ்ரீ டி. எம். பி மகாதேவன் தலைமை வஹித்தார்.

ஸ்ரீ அய்யங்கார் பேசுகையில் "தேசிய புனருத்தாரணத்திற்கு பூர்ண அஹிம்ஸைத் தத்துவத்தைக் கைவிடுவதே சாதனமென்றும், பூர்ண அஹிம்சைக்கொள்கை ஹித்துக் கொள்கை யல்ல வென்றும், பௌத்த மதக் கொள்கை என்றும் ஜாதி ஒற்றுமை உணர்ச்சியைப் பெறுக்கவேண்டு மென்றும் கூறினர்.

ஜனங்களின் ராஜரீகத்திற்கு ஸமஸ்கிருதம் ஒரு சாதனமாக கிருப்பது போல் விட்டதென்றும், அதை அதிகமாகஆடம்பரப்படுத்த வேண்டா மென்று பிரம்மணர்களுக்குத் தாம் எச்சரிக்கை செய்வதையும், அப்படி அளவுக்கு மிஞ்சிய உற்சாகத்தைக்கட்டுவ தாகது ஜனங்களைப் பிளவு படுத்தி விடுகிற தென்றும், புராதனக்கொள்கைகளை விட்டு விடுவது உசிதமென்றும், சம்ஸ்கிருதஞானி கள் தாய்பாஷையாகிய தமிழ் அல்லது தெலுங்கில் தேர்ச்சி பெறுவது உசிதமென் றும் அவர் எடுத்துரைத்தார்.

மேலும், கட்சி முறையைக் கொண்டாட்சிக்காரை தாம் எப்போதும் எதிர்த்திருப்பதாயும், அம்முறையை ஒழித்துவிட வேண்டியதவசியமென்றும், அதுதான் வருப்புத் துவேஷத்திற்குக் காணமென்றும் அவர் கூறினர்.

பேலஸ்தை இப்பொழுது ஜர்மனியும் ரஷ்யாவும் பங்கு போட்டுக் கொண்டது நியாயமல்லவென்றும், சர்வ தேச சன்மார்க்க நெறியில்லாததே இதற்குக் காணமென்றும் அவர் கூறினர்.

அஹிம்சைப்பற்றி ஹிந்துதர்மம் கூறுவது என்ன ?

அஹிம்சைக் கொள்கை சம்பந்தமாக சமீபத்தில் காந்திஜி தம்முடைய அபிப்பிராயத்திற்கு வந்திருப்பது பற்றி சந்தோஷமென்றும், ஹிந்து தர்மத்திலுள்ள அஹிம்சைக்கும் பௌத்தம மத அஹிம்சைக்கும் வித்தியாசமுண்டென்றும், நியாயமான காரியங்களில் கட்டுபாடான பலாத்காரத்தை உபயோகிப்பதற்கு ஹிந்து மதம் என்றும் விரோதமாக இருக்கவில்லையென்றும், தை யோ மற்ற எந்த ஹிந்து வேத புத்தகமோ பூர்ண அஹிம்சையைப் போதிக்கவில்லையென்றும், சமுதாய குழந்தைகளின் க்ஷேமத்தை உத்தேசித்தும், பொருளாதார முன்னேற்றத்தை முன்னிட்டும், பூர்ண அஹிம்சைக் கொள்கையை இந்தியர்கள் கைவிட்டு விட வேண்டுமென்றும் ஸ்ரீ அய்யங்கார் எடுத்துரைத்தார்.

தலைவர் தமது முடிவுரையில் சமஸ்கிருதம் இன்னும் உயிருடன் தானிருக்கிறதென்று கூறினர்.

(ச. மி.)

காங்கிரஸ்மீது கோபம்

டாக்டர் மூஞ்சே சீறுகிறார்

டாக்டர் மூஞ்சே வெளியிட்டுள்ள அறிக்கையொன்றை ஹிந்துமகாசபை ஆபீஸ் பத்திரிகைகளுக்கு அனுப்பியிருக்கிறது. அவ்வறிக்கையில் டாக்டர் மூஞ்சே கூறியிருப்பதாவது:—

"இன்றுபத்திரிகைகளில் வெளியாகியுள்ள செய்தி உண்மையாக விருக்குமானால்— அது உண்மையாகவே யிருக்கும்— அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபை அதர பாதாளத்தில் வீழ்வது நிச்சயம். காங்கிரஸ் கிழவரும் சர்வாதிகாரியுமான மகாத்மா காந்தியின் கண்முன்னமே இத்தகைய வீழ்ச்சியை உண்டுபண்ணிய ஜனப் ஜின்னாவை நாம்பட்டவேண்டியதுதான்.

காங்கிரஸ் தானுகவே தன்னுடைய தேசியத் தன்மையை ஜின்னாவுக்காகவும் லீகுக் காகவும் விட்டுக்கொடுத்துவிட்டது. இப் பொழுது அது யாருக்குப் பிரதிநிதியாக விளங்குகிறது? அது ஹிந்துக்களுக்கும் பிரதிநிதியல்ல; முஸ்லீம்களுக்கும் பிரதிநிதியல்ல. காந்திஜியும், ஜவகரும் இன்று வகித்துவரும் உன்னதஸ்தானத்திற்குக் காரணம் ஹிந்துக்களின் நியாகமே. ஹிந்துக்கள் கிளர்ந்தெழுந்தால் காங்கிரஸ் தலைவர்கள் இருந்த இடம் தெரியாமல் போய் விடுவார்கள்.

காங்கிரஸ் ஹிந்துக்களின் பிரதிநிதிஸ்தான மல்லவென்றும், ஹிந்து மகாசபையைப் புறக்கணித்துவிட்டு முஸ்லீம் லீகுடன் ஏத்தகைய ஒப்பந்தமும் செய்துகொள்ள அதற்கு உரிமை இடையாதென்றும் ஹிந்துக்கள் சர்க்காருக்கு எச்சரிக்கை செய்கிறோம். இப் பொழுதாவது காங்கிரஸ் தலைவர்கள் காங்கிரஸைத் தற்கொலையினின்றும் காப்பாற்றுவார்களென நான் நம்புகிறேன்."

கும்பகோணம் ஓர் ஷஷ்டி பூர்த்தி கொண்டாட்டம்

கும்பகோணத்தில் மிக பிரஸித்த வைதிக சிரேஷ்டராக விளங்கி வந்தவரும், அநேக பெரிய யாகங்களைச் செய்தவருமான குண்டலி நீலகண்ட சாஸ்திரியின் குமாரரான மாஜி இஞ்ஜினீயர் ஸ்ரீமான் சிவ ராமகிருஷ்ண தீக்ஷிதரவர்களுடைய ஷஷ்டி பூர்த்தி கொண்டாட்டமானது சென்ற ஞாயிற்றுக்கிழமை வெகு சிறப்பாக நடந்தது. பலமான ஹோமம் ருத்ர ஹோமம், முதலிய வைதிக காரியங்கள் வெகு விசேஷமாக நடந்தது. உள்ளூர் வெளியூர் வைதிக சிரேஷ்டர்களும் வித்வான்களும் வெகு பேர் வந்திருந்தனர். பிரம்மணபோஜனம் விசேஷமாக நடந்தது. அன்றிரவு தக்க ஜமாக்களுடன் இனிய சங்கீதக் கச்சேரியும் நடந்தது.

(க. கி)

திருப்புல்லாணிக் கோவிலில் திகில்

திருப்புல்லாணி கோயிலுக்குள் நீண்டகாலமாக ஹரிஜனப் பிரவேசிப்பார்களென்ற திகில் ஏற்பட்டிருந்தது. ஹரிஜனங்களுக்கு 1-ந் தேதி அல்லது 2-ந் தேதி வரக்கில் திறந்து விடப்படும் என்றும் ஸ்ரீ வ. வைத்தியராதய்யர் குறிப்பிட்டிருந்த 5 ஆலயங்களில் இதுவும் ஒன்றாகும். இக்கோவில் ராமநாதபுரம் எல்லைக்குட்பட்டதாகும். கோவில் அதிகாரியை விசாரித்ததில் தனக்கு ஒன்றும் உத்தரவு வரவில்லையென்று கூறினர்.

(ஒ. நி.)

விழுப்புரம்

ஸ்ரீமத் பாகவத ஸப்தாகம்

விழுப்புரம் ரயில்வே இண்டியன் காலனியில் 2—10—39 முதல் சேங்காலிபுரம் பிரவசன தர்ய வைதிக தர்ம ஸம்ரக்ஷ ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரால் பாகவத ஸப்தாக உபன்யாஸம் நடத்தப்பட்டது. சங்கீயில் பாராயணம் முறைப்படி நடத்தப்பட்டது. ஸ்ரீ பரமஹம்ஸ சன்யாலிகளும், ஸ்ரீரெங்கேரி ஜகத்குரு மடத்தில் சன்யாஸ ஸ்வீகாரம்செய்து கொண்டவர்களான ஸ்ரீ விமலானந்த தீர்த்த ஸ்வாமிகள் அவர்கள் பரீக்ஷித் வரணத்தில் அமர்ந்து சரவணம்செய்தார்கள். ஒவ்வொரு தினத்திலும் ரயில்வே ஜில்லா இன்ஜினீயர் ஸ்ரீ சுந்தரமய்யர், விழுப்புரம் ஜில்லா முன்சீப், விழுப்புரம் ஸ்தாசபைத்தலைவரும், சட்டசபை அங்கத்தினருமான ஸ்ரீநிதம்பரய்யர், டாக்டர் மணி அய்யர் முதலிய ஆஸ்திகர்கள் விஜயம் செய்திருந்தார்கள். ஸ்ரீ தீக்ஷிதரவர்கள் உபன்யாஸத்தில் ஸனாதன தர்மத்தை வேதம், ஸ்மிருதி, சாஸ்வம்இவைகளிலிருந்து உபதேசம் செய்தானதுஒவ்வொரு மனிதர்களுடை சித்தத்திலும் பக்தி வரும்படியாக இருந்தது. 8—9—39 ஸமாப்தி தினத்தில் 1500 பிராம்மணர்களுக்கும் 1,000 கணக்கான அப்பிராமணர்களுக்கும் அன்னதானம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு தினமும் வேதபாராயணம் ரொம்பவும் அழகாக நடத்தப்பட்டது. மற்றும் காலனியில் உள்ள உத்யோகஸ்தர்கள் உபந்யஸத்தில் சொன்னதைக் கேட்ட உத்யோகஸ்தர்கள் ஆரம்பிப்பதற்கு நிரமானித்து நிகிமாக ஏற்பாடுசெய்து வருகின்றனர். பாட்சாலையில் ருக்வேதம் ஆரம்பிப்பதால் பிரம்மசாரிகள் அத்யயனத்திற்கு தேவையாய் இருக்கிறது. ஆஸ்திகர்கள் மேற்கண்ட விலாசத்திற்கு 14 வயதிற்குட்பட்ட பிரம்மசாரிகள் இருந்தால் "ஸ்ரீபி.மகாதேவய்யர் லேகே ஆபீஸ், "விழுப்புரம்" என்ற விலாசத்திற்கு தெரிவிக்கலாம். (ஒ. நி)

ஆழ்வார்திருநகரி

ஸனாதன தர்ம சபா ஆதரவில் 5-10-39 ஸ்ரீமத் ஆத்தான வடக்குத் திருமாளிகை ஆதீனம் ஸ்வாமிகள் ஸன்னிதியில் ஸனாதனிகளின் மாபெருங்கூட்டம் நடைபெற்றது. இனியவல்லி ஸ்ரீ சடகோபாசார் ஸ்வாமிகள் சாஸ்திர ஆதாரம் மூலமாக பல மேற்கோள்கள் காட்டி ஹரிஜன ஆலயப்ரவேசம் செய்வதால் தேசத்திற்கு ஸனாதனமேயில்லை யெனக் கூறினர்கள். 1—10—39 ஞாயிறன்று ஸ்ரீ என். ஹரஸர்ய ஐயர் இக்கருத்தில் நடைபெற்ற காங்கிரஸ் பொதுக்கூட்டத்தில் பேசுகையில் நிவ்யப்ரபந்தம் ஸ்ரீ வசனபூஷணம் முதலியவைகளில் ஹரிஜன ஆலயப்ரவேசத்திற்கு ஆதாரமிருப்பதாகத் தாறுமாறுகப் பேசினர். மஹாஜனங்கள் காங்கிரஸ் வாதிகளின் பிரசாரத்தின் போக்கை யறிந்து கொண்டு ஸனாதனிகளின் கூட்டத்தில் கண்டித்தார்கள்.

6—10—39 உபயவேதாந்த கலாசாலை மண்டபத்தில் நடைபெற்ற ஸ்திரீகள் கூட்டத்திலும் ஆலயப்ரவேசத்தைக் கண்டித்துப் பேசப்பட்டது.

(க. கி.)

கலி புருஷனின் கொடுமை

(ஸ்ரீ ஆர். ராமச்சந்திரன், மைலாப்பூர்)

இன்றைக்குக் கலிபுருஷனின் பிராபல்யம் உச்சஸ்தானத்தை யடைந்து விட்டது. அவனுடைய அட்டஹாசத்தையே நாம் எங்கும் பார்த்துக் கொண்டிருக்கிறோம். ஆனல் இத்தகைனான ராமோ நம்முடைய ஆசாரத்தை கைவிட்டதால் கலிபுருஷனுக்கு வசப்பட்டு ஒன்றும் செய்ய முடியாமல் மோஹத்தையடைந்திருக்கிறோம். நம்முடைய ஸ்வதந்திரமும் போய்விட்டது. நம் வசையில் தர்மத்தை ஆசரிக்க முயன்றாலும், பிறர் நம்மை ஆக்ரமித்துப் பலவந்தப்படுத்துவதுடன் நிற்காமல் நம்முடைய ஆசாரத்தையும் பழக்க வழக்கத்தையும் சீர்குலைத்து வருகின்றனர். 300 வருஷங்களுக்கு முன்னர் அரசாணிப் பாலை வித்வான் சொன்னது இன்று உண்மையாகவே ஆகிவிட்டது. பிராம்மண்யத்திற்கும் இந்த சமூகத்திற்கும் தர்ப்பணம் செய்யவே ஆரம்பித்து விட்டனர். நம்மை ரக்ஷிக்கவேண்டிய நாம் கே சக்தி யிடையாது. இதற்கெல்லாம் காரணம் "தர்மோ ரக்ஷதி ரக்ஷித:" என்ற வாக்யத்தை நாம் மறந்து நம் ஆசாரங்களையும் அநேகமாக கைவிட்டதால் தான்.

மதுரையில்நடந்த அரசியல்பற்றிக்கேட்டதும் நாம்எவ்வளவு சக்தியற்ற நிலைமையில் இருந்து வருகிறோம் என்பதைக்குத் தெரிய வரும். இந்த மதத்திற்கும், சமூகத்திற்கும் முக்கியமானவைகள் வேதம், இதிஹாச புராணங்கள், தர்மங்கள். இம்மூன்றையும் ரக்ஷிக்கவேண்டியவர்களும் விடத்தயாராயிருக்கிறோம். ஆனல் நம்முடைய ஆத்யாமிக பொருள்களை இழக்கத் தயாராயிருக்கமாட்டோம். "என்னுடைய பிதாமஹர் சேர்த்து வைத்த பொருள் எனக்கென்றுமில்லை. நானும் ஒருபொருளையும் சேர்க்கவில்லை. ஆனல் ஹஸ்திகிரியின் மேல் வரதராஜப் பெருமாள் என்னும் ஒரு கிலியுயர்ந்த வஸ்து என் பிதா மஹர் முதலான பெரியோர்களால் எனக்கு வைக்கப்பட்டிருக்கிறது." என்ற ஸ்ரீதேசிகனின் வாக்கே நமக்கு பிரமாணம். எந்த ஆலயம் என்ற வஸ்துவை ஸ்ரீ வேதாந்த தேசிகர் தனமென்று நினைத்தாரோ, அந்த ஆச்சர்யமிகமான தனத்தை நாம் இழக்க முடியுமா? நம்முடைய மதம், நம்முடைய தர்மம், நம்முடை ஆலயங்கள், என்றும் படியான பக்தி ஏற்படவிட்டால், தேச பக்தி ஏற்பட்டாலும் பயனில்லை. நம் தேசத்திலுள்ள தர்மங்கள் அழிந்த பிறகு நம் தேசத்தைப்பற்றிக் கவலையில்லை.

இந்த அக்ரமம் ஏற்பட்டதற்குக் காணம் என்னவென்று ஆலோசிப்போம். வாழிந்த ரிஷி மற்ற ரிஷிகளும் வாழிக்கும்படி செய்ய முயற்சி செய்தது போல் நம் தர்மாசார்ய ஸ்தாபகர்களை விட்ட ரிஷிகள் மற்ற ஆசார சீலர்களையும் கெடுக்க முயற்சிக்கின்றனர். ஆனல் நம் தர்ம பூமியில் ஒரே ஒருவர் இந்த சதாசரத்தைக்கைவிடாமலிருக்கும் வரையில் கம்சத்ருக்கள் ஒன்றும் செய்ய முடியாது.

இச்சமயத்தில் அதர்மம் சிறித தலைதூக்கி நின்றாலும், அதர்மம் தோற்கடிக்கப்படுவது நிச்சயம். அதர்மம் ஓங்கும் பொழுதுதான் கல்கி சங்கத்தின் பெயரை மாற்றி அ. இ. வ. ஸ். சங்கத்தின் நிலைக்கல் இயேசுகஸ்தாபிக்க முடிவு செய்யப்பட்டது.

பின்னர் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின:—

ராவ்பகதூர் ஒ. என். ராமசாமி ஐயர், (நிவான், கன்னிவாடி ஜமீன்) பிரேரேபித்த, ஸ்ரீ அபிராமி அம்மன் தேவஸ்தான டிரஸ்டியும் மாஜி என்ஜினீருமான ஸ்ரீ எஸ். ராமசாமியர் ஆதரித்து கீழ்கண்ட தீர்மானம் நிறைவேற்றியது.

"மா. கு மன்னர்பிரானிடம் இக்கூட்டம் தனது ராஜவிசுவாஸத்தைத் தெரிவித்து கொண்டு மஹாயுத்தத்திற்கு தங்களது போர் தளவையும், உதவியையும் அளிக்கிறது. அ. இ. தே. காங்கிரஸ் மகாசபையுத்த விஷயமாகக்கொண்டுள்ள மனப்பான்மையை கண்டு இக்கூட்டம் அதிருப்திப்படுகிறது"

"ஆலயப்பிரவேசத்துக்கு மே. த. வைஸிராய் சம்மதி அளித்ததை வன்மையாகக்கண்டிக்கிறது.

ஸ்ரீரங்கத்தில் ஸ்திரீ ஸத்சங்காஹ்வத்தைத் தாக்கியதைக்கண்டிப்பதாகவும், டாக்டர் ராஜன் மகாத்மாகாந்தி முதலியவர்களின் தவறான அபிக்கைகளை ஆட்சேபிப்பதாகவும், நிண்டுக்கல்லில் மஹர பாதத்திலிருக்கும் விசட பர்வத்தை வரிக்க வற்பாடு செய்ய வேண்டு மென்றும், அதற்கு நிண்டுக்கல் பிர பல ஆஸ்திக பிரமுகர்களும், கன்னிவாடி ஜமீன்தாருமான ஸ்ரீ ராம்தாஸ் அய்யர் அவர்கள் ஆதரவில் கடத்தவேண்டுமென்று தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்கள் நகல்களை மே. த. வைசிராய், மே. த. கவர்னர் முதலிய அதிகாரிகளுக்கு அனுப்பப்பட்டன.

(தமது கிருபர்)

பழனூர்
வேதாந்த பாடசாலை

திருச்சி பழனூர் வேதாந்த பாடசாலையின் ஏழாவதாண்டு அறிக்கை கமதபார்வைக்கு வந்திருக்கிறது.

"ஆண்டு ஆரம்பத்தில் மூன்று வித்யார்த்திகள் இருந்தனர். அவர்கள் தான்கு வருஷப் பயிற்சி முடிக்கபின் போய்விட்டார்கள். மறு படியும் தான்கு வித்யார்த்திகளும் ஒரு அத்யாபகரும் இருந்துவருகிறார்கள். வேத பாடசாலையில் 8மாணவர்கள்படித்துவருகிறார்கள். ஒரு அத்யாபகர் இருக்கிறார்.

ஆயுர்வேத வைத்யசாலை சிருகமணி சிறுமத்தில் நடத்தப்பட்டுவருகிறது. கினசரி 30 பேர்களுக்குக்குறையாமல் சிகித்ஸை செய்து கொள்ளுகிறார்கள்".

பாடசாலைக்கு தன்கொடையாக ரூ. 3628-10-3 வந்திருக்கிறது. இதர இனங்களில் ரூ. 3709-2-10 கிடைத்திருக்கிறது.

பாடசாலை தன்னுடைபெற்ற வரவேண்டுமான இறையை இறைஞ்சுகிறோம். (ச. கி.)

கதிராமங்கலம்
பசுபந்த யாகம்

ப்ரமாதிஸ்ரு புரட்டாசிமீ 12உ வியாழக்கிழமை பௌர்ணமி யன்று கும்பகோணம் தாலுகா கதிராமங்கலம் உத்தரவாதிரீ நாத்தில் கிராம அக்ஹார மகா ஜனங்களின் உதவியைக்கொண்டும் மற்றும் பல ஆஸ்திக சிரோமணிகளின் உதவியைக்கொண்டும் கங்காதரபும் ஸ்ரீ ம. கிருஷ்ணமூர்த்தி தீக்ஷிதரால் நகதேக சயனத்துடன் பசுபந்த யாகம் வெகு விமரிசையாய் நடத்தப்பட்டது.

திமிரகோசம்

("சர்மா" எழுதியது)

கடவுளே காந்தி காந்தியே கடவுள்.
சத்யமென்பது ஒட்டுக்கணக்கில்.
அஹிம்ஸையென்பது தன் மனம் நோகா [மை.
ஆனந்தமென்பது புராணம் பழித்தல்.
ஸ்வராஜ்யமென்பது வீட்டை யிடித்தல்.
சமத்வமென்பது பரயுவாலுண்ணல்.
நாகரீகமது மிருக கடை பற்றல்.
தொண்டென்பது இந்திரியத் தொண்டு.
நியாகமென்பது சான்றிதழ்த்தியாகம்.
கண் படைத்தது கறக்கலிடல் காண.
காது படைத்தது காதல் மொழி கேட்க.
நாசி படைத்தது நாசமிணமேற்க.
நாவு படைத்தது நாது புஷ்டிக்காக.
மெய் படைத்தது முத்தமிட்டணைக்க.
குறி படைத்தது கூடிக்குலாவ.
சொல் படைத்தது ஜெபி போல் சொல்ல
கை படைத்தது ஒட்டுக்கொடுக்க.
கால் படைத்தது ஒட்டுக்கூல.
ஒட்டுக் கொடுத்தது புலனேபோம்ப.
பொன் படைத்தது புலனேபோம்ப.
புலனுக்கன்றி விவாகமில்லை.
புலனேபோம்ப சட்டமியற்று.
கோவிலெதற்கு கடவுளைதற்கு.
ஒட்டுக்கணக்கு எடுத்துப்பாரு.
காரிய கமிட்டியை கண்மூடி நம்பு.
காரிய காரியம் கண் நிறந்து பாராதே.

செகந்திராபாத் மே. த. வைஸ்ராயுக்கு அவஸரத் தந்தி

"அலயப் பிரவேசப்பாதகாப்புச் சட்டத்தை" ரத்து செய்யும்படி மே. த. வைசிராயுக்கு ஐகாபாத் (செகந்திராபாத்) பிரமுகர்களான ராவ்பகதூர் ராமகோபால் ஸ்ரீகிஷன் ஸ்ரீகல்காபிஷன் மோஹன்லால், ராவ்சாகேப் பூரமஹாதேவ் சிருஷ்டிபிஷன்சந்த் மற்றும் 20 பேர்கள் கையெழுத்திட்டு ஒரு தந்தி யுள்ளார்கள். (ஒ. நி.)

திண்டுக்கல் ஹிந்துமதவங்கம்

திண்டுக்கல் ஹிந்து மதசங்கத்தின் விசேஷக்கூட்டம் ஸ்ரீசங்கர மடத்தில் 30—9—39 நடைபெற்றது. ஸ்ரீ V. R. வில்வராதய்யர் அட்வகேட் தலைமை வஹித்தார்.

சாச்வத தர்ம கோப்தாவான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவின் சகாயம் நமக்கு ஏற்படும். நாமும் நம் சதாசாரங்களே மிகவும் சிரத்தையுடன் ஆசரிக்கவேண்டும். பிராம்மணர்கள் சந்தியாவை அதிகமாக ஆவிருத்தி செய்ய வேண்டும். காயத்ரியின் பலத்தினுல் தான் நாம் சத்ருக்களே வெல்லவேண்டும். நம் சதாசாரங்களுக்குப்பிரதி கூலம் செய்ய முயற்சி செய்பவர் எவருமேமக்குச்சத்ருக்கள்தான். அவர்களுக்குச் சாஸ்திரங்களேப்பற்றித் தெரியாது. ஆனல் மத விஷயங்களில் அவர்களே ஆலோசனையின்றி அபிப்பிராயங்களைத் தெரிவிப்பார்கள்.

இவர்களேப்பற்றிதான் "லீடாலீட புராணத்தில் சகல வஷ்டம்ப ஸம்பாவனை பர்வத்தில் சிருஷ்டை கதைபிரகலாதன் கபிலனை: நீதே கலௌ ஸாக்ஷாத்தாம் என்ற ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர் சொல்லியிருக்கிறார். இவர்களால் நாம் நமக்கு ஆபத்து. இவர்களேத் தான் நாம் எதிர்த்துப்போராடவேண்டும்.

215303 சென்னை-600 004

ராஜாஜியும் ஹிட்லரும்

(ஸ்ரீ த. கிருஷ்ணமூர்த்தி, சென்னை)

ஹிட்லர் ராஜாஜிபிடம் தோற்றுவிட்டார் இருபது ஆண்டுகளாகப் போலந்தின் ஆங்கிலத்திலிருக்கும் டான்சிக்கைப் பற்றிமுதல் செய்ய முடியாமல் தவிக்க, கடைசியில்வெற்றி பெற்றார். பல்லாயிரக்கணக்கான ஆண்டுகளாக ஜாதி இந்துக்கள் ஆதிக்யத்திலிருக்கும் ஆலயங்களை ராஜாஜிநிறைவேற்றவிட்டார். தமக்கு வேண்டிய நபர்களையே ஆலய நிர்வாகக் குழியில் நிரப்பிக்கொண்டு ஆலய நிர்வாகத்தையும் தமதாட்களாகச்செய்து கொண்டு ஆலயங்களைத்திறந்து விட்டார். ஹிட்லர் 1939 ல் பதவிக்கு வந்தகாலே பாராளுமன்றத்தின் அவர் கட்சி மைனரிட்டி என்பதை கவனிக்க வேண்டும். பதவிக்கு வந்ததும் போலீஸ் இலாகாவில் பழைய அதிகாரிகளைத்தனக்கு வேண்டியவர்களைக் கொண்டு நிரப்பினர். பின்னர் தேர்தலை நடத்தினர். போலீஸ் படை தமக்காதாவாகவே தேர்தலில் வெற்றி பெற்றுவென்று சொல்ல வேண்டுமா? எனினும் அதிக மெஜாரிடி இல்லை. ஆகவே உடனே ஐந்தாண்டுகளுக்கு முழு அதிகாரத்தை பார்லிமெண்டிடம்பெற்று சபையைக்கலைத்து விட்டு எதேச்சாதிகாரத்தில் இறங்கித் தமது விரோதிகளை ஒழித்தார். அம்முறையையே இன்று அவசரக் கிரிமினல் சட்டத்தை உபயோகிக்கும் ராஜாஜியும் கையாளுகிறார். சட்ட விரோதமாகக் கோவில்களைத் திறந்த அதிகாரிகளைகைக்கவர்னரும் அவசர சட்டத்தை உபயோகித்து விட்டார்.

ஹிந்தி எதிர்ப்பை அடக்கக்கிரிமினல் சட்டத்தை உபயோகிப்பதைத் தடுக்க ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார் முயன்ற போது சரியான சட்டமில்லாததாலேயே அதை உபயோகிப்பதாகவும், சிக்கிரத்தில் வேறுசட்டத்தைத்தயார் செய்து கொண்டு அதனை விடுவதாகவும் பிரதம மந்திரி அன்று கூறினர். ஓராண்டு ஆகப்போகிறதுஅவர்கூறி.சட்டசபைகள்கூடிக்கலைந்தன. இன்னும்சட்டம் தயாராகவில்லை. ஆனால் சட்ட விரோதமான செய்கைகளை ஆதரிக்கச்சட்டம் உடனே வந்து விழுகிறது. இதுதான் நியாயம் போலும். ராஜாஜியின் ஆட்சியில் வைதிகர்களும் ஹரிஜனமதாபிமானிகளும் படும் அல்லல் கொஞ்ச நஞ்சமல்ல. பிரமணீயம் ஒழிய வேண்டுமென்ற கருத்துடனேயே அவர் தமது தோழர் ஸ்ரீ நாயக்கரை வெளிவிட்டிருக்கிறார். அவர் தம் தஷ் பிரசாரத்தை அடக்கவில்லை. ஹிந்துக்களின் ஜீவாதார உரிமையை அழிக்கும் நிஜாம் சர்க்காரின் அட்டூழியங்களைக்கண்டிக்கக்கூடிய கூட்டங்களைத்தடுக்கிறார். இந்துக்களை முஸ்லீம்கள் தாற்றும் வெளியீடுகள் அனுமதிக்கப்படுகின்றன. ஆனால் முசல்மானைப்பற்றி எவரேனும் எழுதினால் உடன் தடுக்கப்படுகிறது. இது தான் காச்சி தீர்மானம் போலும்.

"அமிருத சந்தேகம்" என்ற பத்திரிகையின் ஆசிரியர் ஸ்ரீ சி. வி. ரெட்டி என்பார், பிராம்மண ராஜாஜியின் கோட்டைபைப்பிராமணரல்லாத மக்களே வீழ்த்துவர் என அறிவுறுத்தியுள்ளார். அவரும் நாயகரும் பழைய உழுவலன்பர்கள். இருவர்நோக்கமும் ஒன்று மக்களை ஏமாற்றவே இருவரும் ஒருவருக்கொருவர் விரோதிகளெனக் காண்பிப்பது வெறும் வேஷம். இருவரின் காரியங்களின் முடிவு ஒன்றே.

இன்றுவரை மந்திரிசபை சாதித்தது என்ன? தாயக மக்களின் ஒருவருடையதை மற்றொருவருக்குப் பிடுங்கிக்கொடுத்ததே அல்லாமல் வெளியார் கொள்ளையை நிறுத்த ஏதேனும் செய்துள்ளாரா?

மதுரை கோவில் அதிகாரிகள் தங்கள் சட்ட விரோதமான செய்கைக்கு எதிர்ப்பில்லாமலிருக்கக் கோவில் நிருக்குளத்திலும் மற்ற இடங்களிலும் மக்கள் கூடாமலிருக்க முன்னேற்பாடுகள் செய்து கொண்டு போலீஸ் உதவியுடன் தீண்டாதார்களைக் காலே வேளையில் அதிகக் கூட்டமில்லாமலிருக்கும் போது உள்ளே விட்டார்கள். தங்களுக்கு சர்க்காரின் ஆதரவு இருப்பதால் அத்தைரியம். மதுத்த குருக்கள்மார்களை லீக்கினர். கோவில் கதவு நிறக்கப்படாதிருக்கவே மற்றொரு அப்பாகவும், சம்பந்தாகவும் தம்மை நினைத்து கதவுகளை உடைத்து தெய்வ வழிபாட்டைச் செய்தார். அதனை ஆதரிக்கச் சென்னை சர்க்கார் எழுந்துள்ளார்கள்ஹிட்லர் ஹாச்சா வேண்டுகோட்படியே ஜெக் நாட்டை எடுத்துக்கொண்டதாக்கூறவில்லையா? ஆஸ்திரியாவைக் கபளீகரம் பண்ணியதும் வாக்கு எடுத்துத் தமக்கு ஆதரவு காட்டவில்லையா? அதில் எந்த அம்சத்தில் ராஜாஜி குறைவுபட்டார். இந்த்க்களும். முக்கியமாக வைதிகர்களும் சாதுவானபடியால் இந்தத்தைர்யம் அவருக்கு. அதே முறையில் மற்ற செயல்களில்காட்டட்டுமே. பலிக்காது. நாட்டில் உண்மையாக ஜனநாயகம் நிலைக்க விரும்புவோர் இந்தச் செயலைக் கண்டிக்கவேண்டியது அவசியம். தீண்டாதார்களை ஆலயங்களில் விடுவதைப்படியிருப்பினும் ஆச்சாரியரின் மாஜி முறையை எவரும் கண்டிக்க முன்வர வேண்டும். கோவில் அதிகாரிகளையும் தண்டிக்க வேண்டும்.

சர்க்கார் அறிக்கையில் பொதுஜன அபிப்பிராயம் சாதகமாகவிருக்கும் பிரதேசங்களிலுள்ள கோவில்களில் நிர்வாகங்கள் கல்ல எண்ணத்துடன் வழக்கமாக அனுமதிக்கப்படாத மக்களை வழிபாட்டிற்கு அனுமதித்தால் அவர்களை வழக்குகளினின்றும் விடுவிக்கச்சட்டம் செய்வதாகக்கூறியிருக்கிறது. ஆனால் மதுரையில் மாதாமாதம் சம்பளம் பெறும் ஸ்ரீ ஆர். எஸ் நாயுடு தமதுமுதல்அதிகையில் ரகளை ஒன்றுமில்லாதிருக்கவே தாம் ஹரிஜனங்களுடன் கூடவிருந்ததாகக் கூறியிருக்கிறார் அதிலிருந்து அவர் அனுமதிக்கவில்லையென்றும் ஸ்ரீ வைத்தியநாதய்யரின் தூண்டுதலால் சில ஹரிஜனங்கள் சென்றனரெனவும் ஊகிக்க இடக்கொடுக்கிறது ஆனால் உண்மை எதுவோ?

நியாயத்திற்கு மெஜாரிட்டி மைனரிட்டி அபிப்பிராயம் உண்டா? இன்று சொத்து ரிமையும் பிறவும் வழக்கத்தாலன்றே மதிக்கப்படுகின்றன. வழக்கத்திற்கு மதிப்பில்லையேல் காட்டில் குழப்பமும், கலகமுமேற்படும். ஒரு வழக்கத்தை அவசியமிருந்தாலும் மாற்றக்கூடாது. அப்போதும் எல்லாருடைய சம்மதமும் பெற்று அவசிய அளவிற்கே மாற்றவேண்டும். அப்படியிருந்தா தான் அரசாங்கம் நடக்கும். ஜனநாயகமும் தான் டவமாடும். பிரதமமந்திரி ஸ்ரீ ராஜகோபாலாசாரியாரின் செயல் அரசியல் அடைப்படையைத்தகர்ப்பதாயிருக்கிறது. ஜனநாயகத்தை பறிப்பதாயிருக்கிறது. அவர்செயல் நியாயத்திற்கு உட்பட்டதல்ல. பனகாலரசரும் மற்றைய ஜஸ்டிஸ்கட்சியினரும், ஏன்? திருஸ்தவப்பிரிட்டிஷ் சர்க்காரும், முஸ்லீம் அரசர்களும் செய்யத் தயங்கிய செயலைக் ராஜாஜி ராஜி முறையில் செய்து விட்டார். ஆகவே அவர் கையாளும் முறையை ஜனநாயகப்பற்றுள்ள எவரும் கண்டிக்காமலிருக்க முடியாது.

இவரையே ஸ்ரீமதி ராமேஸ்வரி நேரு பக்திமான் என்கிறார். ஆலயவழிபாடு செய்வரா இவர். இல்லேயில்லே. உப்பு சத்தியாகிரகத்தின் போது கிராம ஜனங்களை ஏமாற்ற வேண்டி ராடோமும் தெற்றியில் காமம் தரித்து தம் படையை வேதாரணியம் ஓட்டிய இவர் சென்னையில் ஒரு காளேனும் தரிக்திருப்பாரா? அன்று ராம பஜனைசெய்தார். இன்று என்ன? காந்தி அந்த காளிலேயே இவரை "ராஜகோபலாச்சாரியார் சமூக சீர்திருத்த வாதியாயிருப்பதாலேயே அரசியல் வாதியாக விளங்குகிறார்" என்றார். அதன் படியே தமது சமூக சீர்திருத்தவேட்கையை நிறைவேற்றிக் கொள்ளத் தமது அரசியல் அதிகாரங்களை உபயோகிக்கிறார். அதனால் தானே மலபார் சட்டம் நிறைவேற்றப்படும் காலே அத்தடன் தமது வேட்கை முடிவு பெற்ற தென்றார்.

Mr. T. R. கணபதிராமய்யர் பிரசுரங்கள்.

பாகவதம் காலிகோபயிண்டு	2	0	0
ராப்பர்	1	8	0
இங்கிலீஷ்	2	0	0
7, 8, 9ஸ்கந்தங்களில் தமிழில்	0	8	0

இடைக்குமிடம் ஜனர்த்தன அச்சுக்கூடம்,
கும்பகோணம்.

பஞ்ச நிவாரணை அறிவிப்பு.

நமது பாரததேச மக்கள் அனைவரும் இப்பிரசுரத்தை முக்கியமாய் கவனிக்கவும்.

நமது தேசத்தில் மழையில்லாக் கொடுமையாலும் தொழிலில்லாக் கஷ்டத்தினாலும் நமது தாய்காட்டு ஏழை மக்கள் பசியால் வாடித் தவிக்கின்றனர். அதன்பொருட்டு எங்கள் கம்பெனியில் **15-9-39**ஆ முதல் **15-11-39**ஆ வரை **T.T.** ஸைண்டியிக் மார்க் பெருங்காய விற்பனையிலிருந்து பவுண்டு 1-க்கு **6** பைசா வீதம் பஞ்ச நிவாரணைக்கு அதில் இந்திய காதி சங்கத்தின் தமிழ்நாட்டு இலாபிடம் பஞ்சம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களுக்கு உதவிசெய்ய அளிக்கப்படும்.

ஆகையால் நமது தேச மக்கள் அனைவரும் எங்கள் ஸைண்டியிக் **T. T.** மார்க் பெருங்காயத்தையே அதிகமாக வாங்கி நமது தேச ஏழை மக்களுக்கு உதவி செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,
ரஷிட் ஜம்ஷெட் சன்ஸ் அண்டு கோ.

Printed by S, Kalyanasundram, at the Sri Janardhana Printing Works, Ltd., Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundram.





215304

REGD No.M. 2913 ARYADHARMAM
TAMIL WEEKLY.

30 OCT 1939 MADRAS

Estd. 1915

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

स्वस्ति प्रजाभ्यः परिपालयन्तां न्यायेन मार्गेण महीं महीशाः ।
गोब्राह्मणेभ्यश्शुभमस्तु नित्यं लोकास्समस्तास्सुखिनो भवन्तु ॥

விளம்பர விஷிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஐ ஐப்பசி-மீ 2உ 1939 ஐ அக்டோபர்-மீ 19உ | வ-42

காங்கிரஸ்காரர்களின் கல்லெறி எறிந்த 'கல்" 1000 ரூ

ஸனாதனிக்கூட்டத்தில் ஏலம் போயிற்று

எதிரிகள் வேட்கி போயினர்

ஸ்ரீரங்கம் வர்ணாச்ரம தர்ம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவில் 11—10—39 மாலை ஒரு ஸனாதனிகளின் மாபெருங்கூட்டம் கூடை பெற்றது.

ஸ்ரீ ராஜகோபல்முத்தாரா தலைமை வஹித்தார்.

ஸ்ரீமான்கள் பரசுராம பட்டர், ஸ்ரீ பக்தா முதலியவர்கள் கூட்டத்தில் பேசினர்கள்.

ஆலப்பிரவேசத்தைக் கண்டித்துப் பல தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன.

கூட்டத்தில் எதிராளிகளால் கலவரம் செய்யப்பட்டது. போலீஸ் தலையிட்டு சாரயனமுத்து ராஜா என்றவரையும் மற்றும் நால்வரையும் கைது செய்து போலீஸ் ஆக்ட் 75 பிரிவின் படி குற்றம் சாட்டியுள்ளார்கள்.

கூட்டத்தில் ஒரு கல் எதிரிகளால் எறியப்பட்டது. அந்தக் கல்லை ஏலத்திற்கு விட்டார்கள். ஆரம்பத்தில் காலணாவுக்கு ஏலம் ஆரம்பித்து 1ரூ, 10ரூ, 20ரூ, என்று கடையில் 100ரூ, 200ரூ என்று வந்து முடிவில் 1000ரூக்கு ஏலத்தக்கு விடப்பட்டது. தாங்கள் எறிந்த சாதாரண கல் ஆயிரரூபாய்க்கு ஏலம் போனதைக் கண்டு எதிராளிகள் வெட்கிப் போனார்கள்.

(ஹிந்து)

ஆலயபிரவேசத்திற்கு மருத்துவகுல சங்க எதிர்ப்பு

திருச்சி திருவரங்கக்கவல் மருத்துவ சங்கத்தின் விசேஷக்கூட்டம் ஒன்று சேர்ந்து 9-10-39-க் தேதி கடைபெற்றது. திரு போ. ஜெம்புலிங்கம் பண்டிதர். தலைமை வஹித்தார். அதசமயம் ஆலயப்பிரவேசத்தைக்கண்டித்து திருவாளர்கள் [illegible] திருப்பதி பஞ்சாங்க சிவலிங்க பண்டிதர் ம. சின்னதுரை பண்டிதர் ஆகியோர் பேசினர்கள். தங்கள் குலம் ஒதுக்கப்பட்டதாயிருந்த போதிலும் தற்கால நிலைமையில் தங்களுக்கு ஆலயப்பிரவேசம் விரும்பத் தக்கதல்ல வென்றும், கோவில் தழைவு தங்களுக்குத்தேவையில்லை யென்றும் அவர்கள் பேசி காங்கிரஸ் அரசியல் சூழ்ச்சி காரணமாகச் செய்யப்படும் இச்சீர்திருத்தத்தைத் தங்கள் ஏற்றுக் கொள்ள மறுப்பதாகவும் விளக்கினர்கள். முடிவாகக் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

பிரிட்டிஷ் மன்னர்பிரானுக்கு யுத்தத்தில் வெற்றிகிடைக்க வேணுமாய்க் கடவுளைக்கூட்டம் பிரார்த்திக்கிறது.

ஆலயப்பிரவேசத்தை எதிர்த்த ஸ்ரீரங்கம் வர்ணாச்ரம சுயராஜ்ய சங்கத்தார் செய்துவரும் பிரசாரத்தைக் கூட்டம் முழு மனதுடன் ஆதரிக்கிறது.

காந்தியாருக்கு ஏன் அழைப்பில்லை?

லண்டனில் சாம்ராஜ்ய மந்திரிகள் மகாநாடு கூடைபெறுகிறது. அதற்கு இந்திய சர்க்கார் ஸர் முகம்மது ஜாபருல்லாகானே இந்தியப்பிரதிநிதியாக அனுப்பியிருக்கிறார்கள். இந்தியாவின் 8 மாகாணங்களில் ஆட்சி நடத்தும் இந்தியாவின் ஏகப்பிரதிநிதி ஸ்தானமாகிய ஒப்பற்ற காங்கிரஸின் சர்வாதிகாரியாக விளங்கும் காந்தியாரை ஏன் இந்திய சர்க்கார் இந்தியாவின் பிரதிநிதியாக அனுப்பவில்லை? யாருக்காவது காரணம் தெரியுமா?

மன்னர்பிரான் யுத்த வெற்றிக்கு

1008 தங்கக்குட நீர் அபிஷேகம்

தற்போது கடைபெற்றுவரும் யுத்தத்தில் நமது மன்னர் பிரானுக்கு வெற்றி கிடைக்க வேண்டுமென்று பிரார்த்தித்து ராமேஸ்வரம் ஸ்ரீ ராமலிங்க ஸ்வாமிக்கு 6-10-39-க் தேதி 1008 தங்கக்குடங்களில் நீர் கொண்டு அபிஷேக ஆராதனைகள் கடத்தி சகதனிகள் வெகு ஆடம்பரமாகக் கொண்டாடினர்கள். அன்று மன்னரின் திருவுருவப் படத்தை யானை மேல் ஆரோகணிக்கச்செய்து ரௌவாத்தியங்கள் முழங்க ஜாம்ஜாமாகச்சென்றார்கள்.

(ஸ—ம்)

புதுக்கோட்டை ஓர் பெரியாரின் பிரிவு

புதுக்கோட்டை ஸமஸ்தானம் ராஜாங்கத்தில் கடத்தி வரும் சாரத கவருத்திரி வித்வத் ஸதஸ்ஸானது கள்ளது பிரமாதிஸ்ரு புரட்டாசிமீ 27உ (13—10—39) வெள்ளிக்கிழமை முதல் பண்டிகை தினம் வழக்கம் போல் கூடியதில் அங்கு கூடியிருந்த வித்வத் சிரேஷ்டர்களால அடியிற்கண்டபடி அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

"இந்த ஸதஸ்ஸில் ஸாமவேத வித்வானும், பரீக்ஷாதிகாரியும், சுமார் 35 வருஷ காலமாக இந்த ஸதஸ்ஸில் ஸம்மானம் பெற்று வந்தவரும் ஸாம வேதிகளுக்கே சிரோபூஷணமாக விளங்கி வந்தவரும், சிரௌதப்ரயோகத்தில் மிக்க அனுபவம் வாய்ந்தவரும் திருவானைக்காவல் ஸாமவேத பாடசாலை உபாத்பாயருமான முள்ளண்டம் பிரும்ம ஸ்ரீ ராமனுஜ சிரௌதிகள் அவர்கள் சுமார் 15 தினங்களுக்கு முன் காலஞ் சென்ற செய்தி கேட்டு இச்சபை மிக்க வருத்தமுறுகிறது. மேற்படி பெரியாரின் குடும்பத்தாருக்கு இச்சபை மிக்க அனுதாபத்தைக் காட்டுகிறது."

எஸ். ராமஸ்வாமி ஐய்யங்கார்,
வித்வத் ஸபா, காரியதரிசி.

ஹர். ஹி. பி. யின் சாட்டை

காங்கிரஸ் மந்திரி ஆக்ஷியில் ஹர்வாதிகாரி முறையில்லையா?

காந்திஜி கூற்றுக்கு ஆணித்தரமான பதில்

யுத்தம் முடியும் வரையில் திருவாங்கூரில் ராஜீயக்கோட்சேனை நிறுத்தி வைக்க வேண்டி நிவான் ஸர். ஸி. பி. ராமஸ்வமி அய்யர் ஒர் உத்திரவு பேட்டிருக்கிறார்.

இதைக்கண்டித்து காந்திஜி ஒரு வியாஸம் எழுதினர். அதில் காந்திஜி ஸர். ஸி. பி. யின் செய்கையைக் கண்டித்ததுடன், ஸ்ம்ஸ்தானங்களில் யதேச்சாதிகாரம் நடப்பதாயும், ஜனநயகமில்லையென்றும், இந்தியாவிலுள்ள 500 ஸுதேஶி அரசர்கள் யதேச்சாதிகாரம் நடத்திக்கொண்டு, ஜனநாயகத்தைக் கரப் பாற்றப் பாடுபடும் பிரட்டனுக்கு உதவிசெய் வதாகக்கூறுவதையும் காந்திஜி பரிஹாஸம் செய்திருந்தார்.

இக்கூற்றுகளுக்கு நிவான் ஸர். ஸி. பி. ராமஸ்வமி அய்யர் 9உ யன்று ஒரு பதில் கொடுத்திருக்கிறார். அதன் ஸாரமாவது:—

"சட்ட பூர்வமாக, எனக்குள்ள அதி வைக்கொண்டு நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிடுகிறேன். பிரிடிஷ் இந்திய மாகாணங்களில், பாதகரப்புச் சட்டம் அமுல் நடத்தப்படுவதையும் கக்ஸார் இயக்கம், பொதுவுடமை கக்ஷி, காங்கிரஸின் ராஜீய விரோதிகள் ஆகியவர்கள் நடத்தப்படும் விதத்தையும் நான் பார்த்தவருகிறேன்.

இந்த நிலைமையில் காந்திஜி, சுதேச ஸமஸ்தானங்கள் விஷயத்திலும், பிரிட்டிஷ் இந்திய மாகாண நிர்வாஹ விஷயத்திலும் ஏதாவும் மன்னோபாவத்தில் மிகுந்த வித்யாஸ மிருப்பதைப் பார்த்து ஆச்சர்யப்படுகிறேன். இந்த ஆச்சர்யத்திற்கே அவசியமில்லாமலிருக்கலாம். 1939 ஆகஸ்டு 26உ யன்று காந்திஜி சொன்னதென்ன தெரியுமா? "காங்கிரஸ் கவர்ன்மெண்டுகள் ராணுவ உதவியையும், போலீஸ் உதவியையும் நாடும்படி ஏற்பட்டிருந்தால், காங்கிரஸ் மந்திரிகள் அஹிம்ஸா தர்மத்தை ஆதாரமாக கொண்டு ஆக்ஷி நடத்துவதாகக் கூறுவது பிரிஹாஸத்திற்கு இடமாடும்" என்ற காந்திஜி கூறினர். காங்கிரஸை ஆதரிக்காத வர்களேவரையும், தன் விரோதிகளென்று கரிபாச முமற்சிப்பது காந்திஜிக்கு நன்கு தெரியாததல்ல. ஸமஸ்தானங்களை விட காங்கிரஸ் மந்திரி மாகாணங்களில்தான் யதேச்சாதிகாரம் மிகுந்த கண்டிப்பான முறையிலும் ஏற்பாடன வழியிலும் நடந்து வருகிறதென்பதை காந்திஜி உண்மையாக உணரவேண்டும். காந்திஜிபிடமிருந்துவிடைக் கும் ஒரு தலிப்பகூமான அறிக்கைகளைக் கொண்டு ஒருவரும் முடிவு செய்யமாட்டார்.

காந்திஜி திருவாங்கூரைப் பற்றி எதாவது பேசும் பேதெல்லாம் உண்மைக்கு மாறுகவே பேசுவது வழக்கமாயும் தர்ப்பாக்யமான தாகவுமிருக்கிறது.....

நிபயம் உண்மை. இவற்றின் வம்புக்கு உள்பட்ட காந்தி ஸிஷ்யர்கள் நடந்து கொள்ள மாட்டார்களென்பதை காந்திஜியே ஒப்புக் கொள்ளுவார்.

ஜனநயகத்தை பாதுகாக்கப்போவதாகச் சொல்லிக்கொள்ளும் ஹிரேபிரிட்டனுடன் 500 எதேச்சாதிகாரிகளான சுதேச அரசர்கள் சேர்ந்திருப்பது பிரட்டனுக்கு கௌரவ மளிக்காதென்றும், அது ஜனநாயகத்திற்கே விருத்தமென்றும் காந்தஜ [illegible] ஆனல் தாம் மட்டும் எவ்வித நிபந்தனையின்றி ஹிரேட் பிரிட்டனுக்கு உதவி செய்பதாக ராயிருப்பதாக சொல்லிக்கொண்டாரே?

குடந்தையில்

ஸ்ரீ ஈ. வி. ராமசாமி நாயகர்

ஆலயப்பிரவேசத்தைப்பற்றி அபிப்பிராயம்

ஜஸ்டிஸ் கக்ஷித்தலைவரான ஸ்ரீமான் ஈ. வி. ராமஸ்வமி நாயகர் சென்ற சனிக்கிழமை யன்று கும்பகோணம் வந்தார். பலவிடங்களில் உபசாரமும் பெரிய ஊர்வலமும் நடந்தது. மாலை 7 மணிக்கு காங்கேயன் பார்க்கில் பிரம்மாண்டமான கூட்டத்தில் பேசினார். ஒலி பரப்பும் கருவி அமைக்கப்பட்டிருந்தது.

காங்கிரஸ் மந்திரிகளின் ஆட்சி நிர்வாஹங்களைப்பற்றி ஒவ்வொன்றாக எடுத்துக்கண்டித்தார்.

தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தைப்பற்றி அவருடைய அபிப்பிராயமென்ன வென்று ஒரு காங்கிரஸ்காரர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லுகையில் அவர் கூறியதாவது:—

"தீண்டாதார் ஆலயப்பிரவேச விஷயத்தில் எனக்கு நம்பிக்கை யில்லை. தீண்டாத சமூஹத்தினருக்கு இப்போது ஆலயங்களிலும், தெய்வத்தினிடமும் நம்பிக்கை போய் விட்டது. அவர்கள் தெய்வநம்பிக்கை கொண்டிருந்த காலத்தில் ஆலயப்பிரவேசம் உபயோகமாயிருக்கலாம். ஆனல் இப்போது ஆலயப்பிரவேசம் பிரயோஜனமில்லை.

மேலும் ஆலயப்பிரவேசத்தினுல் ப்ராம்மணரஹிக்யமே வலுப்படும். தீண்டாதார் கோவிலுள் போய் அங்குள்ள பரப்பனப் பூஜகரிடம் தான் கெஞ்சி நிற்கவேண்டும்.

ஆலயப்பிரவேசத்தால் பூஜகர்களின் வருமானம் அதிகரிக்கவே [illegible] சூழ்ச்சி நடக்கறது.

தவி, மந்திரி கனம் [illegible] காங்கிரஸில் முன்பு கூறினர். பொதுஜன அபிப்பிராயத்தை நன்கு தெரிந்துகொண்டு அதன்படியே நடக்கப்போவதாகச் சொன்னரே? இப்போது பாலைக் கேட்டார்? பாருடன் இதைப்பற்றி யோஜனை செய்தார்? ஸநதனிகளுடையவோ, பொதுஜனங்களுடையவோ அபிப்பிராயத்தை அறிந்து செய்தார? ஒன்றுமில்லை. மதுரை மீனுக்ஷி கோவிலில் பரிவாரத்திரியில் பூட்டை உடைத்து திருட்டுத்தனமாக ஹரிஜன ஆலயப்பிரவேசம் நடத்திவிட்டு அதற்குப் பின்பலமாக அவஸரச் சட்டம் செய்தார், இதுதான் பொதுஜன அபிப்பிராயமா? ஆலயப்பிரவேசத்திற்கு இன்னும் பக்வகாலம் வரவில்லை சென்று சென்று வருஷம் தான் கனம் ஆசரியார் சொன்னர்.

இந்த புதிய சட்டத்தில் என்ன இருக்கிறது? இப்போது நிறுத்து விட்ட கோவில்களே மறுபடியும் பூட்டாமலிருக்க இந்தச் சட்டத்தில் ஒரு வழியும் இல்லை யென்பது கவனிக்கத்தக்கது.

ஸநதனிகளை நம்புகிறேன்

தான் ஸநதனிகளுக்குப் பரிந்து பேசுவதைப் பற்றிக் காங்கிரஸ் வாதிகளும், என் கக்ஷியிலேயே சிலரும் என்னைக் கண்டித்தார்கள், ஆயினும், தான் இப்போதும் ஸநதனிகளை நம்புகிறேன், அவர்கள் ஒளி மறைவின்றி தங்கள் அபிப்பிராயத்தை வெளியிட்டு விட்டார்கள், ராஜீய வாதிகளான காங்கிரஸ் பிரமுகர்களைப்போல் ஸநதனிகள் மனதிலொன்றும், பேச்சுலொன்றும் கர்ப்பத்திலொன்றுமாக ஏமாற்றிக் கழுத்தை அறுக்கவில்லை. இந்தியா சட்டசபை எலக்ஷன் கால்த்தில், டாக்டர் ராஜனை ஆதரிக்க வேண்டாமென்றும், ராஜா பஹதூர் கிருஷ்ணமசாரியாரையே ஆதரிக்க வேணுமென்றும் என்னுடைய சுயமரிதைக் கக்ஷி யாருக்கு நான் யோஜனை கூறியதா உண்மையே. இப்போதும் அப்படியே செய்வேன்.

கனம் சங்கராசாரியாரும், ஸ்ரீ ராஜகோபாலசாரியாரும் எலெக்ஷனுக்கு நின்றுல் நான் ஸ்ரீ சங்கராசாரியாரையே ஆதரிப்பேன், ராஜகோபாலசாரியாரை ஆதரிக்கமாட்டேன் காங்கிரஸ்காரர்கள் கழ்க்கத்தில் கத்தியை மறைத்து வைத்துக்கொண்டு உறவாடிவிட்டு கடைசியில் குத்தினிட சூழ்ச்சி செய்கிறார்கள் ஸநதனிகளோ அப்படியில்லை. அவர்கள் சூதுவாது இல்லாமல் பேசுகிறார்கள். ஸநதனிகளுடன் ஜஸ்டிஸ் கக்ஷிக்கு அபிப்பிராய பேதமுள்ள விஷயம் தவிர மற்றவைகளில் நாமும் அவர்களும் ஒத்துழைக்க முடியுமென்பதே எனது அபிப்பிராயம்" என்று சொன்னர்.

(ஒருநிருபர்)

"ஆர்யதர்ம்ம்"

வாழ்த்துப்பா

(வரகவி, திரு அ. சுப்ரமண்ய பாரதி)

அகவல்

குவலயம் போற்றுங் குரு பீடங்கொள்
உவமையில் ஈகென ஓங்கிய குடக்கயில்
நற்முறை தோக்கு சீலக் கொழுந்தும்
லேமன்மை சாற்ற விப்பிர் கொடுக்கும்
மந்திர அர்க்ய மணியில் விளங்கும்
சுத்தா ரவியெனத் தோன்றியில் வுலகம்
சீரிய ஸத்திநிகத் தெளிவடைத் துய்ய
கேரியல் காட்டும் கேமம் பூண்டு
தமிழ்விரா "ஆர்யதருமம்" எனும்பேர்
தாங்கும் கீலியில் ஓங்கும் வாரம்
பத்திரிகை தினசரிப் பத்திரை யாகிச்
சத்ரு வெறுமைத் தாக்குங் கலியுகக்
கொடுமையி னின்றும் விடுபடும் வழியை
நடுநிலை புடனே நாட்குபெக் காளும்
ஆதரித் தருளுமோர் ஆதிய மடையப்
பூதலத்த வர்க்குப் பொய்யாத் தெய்வ
மாம்
கர்த்த காதன் கருணைபா லிக்கச்
சத்தை மவறிக தாள்மலர் சூடுவாம்

வெள்ளெழுத்து

("சர்மா")

ஒரு புராணக்கதை. மூதேவிக்கு பஞ்ச கோசன் என்ற ஒரு பிள்ளையுண்டு. அவன் அருணம்மயர் ஸ்ரீ தேவியால் வளர்க்கப்பட்டு அவள் வசிக்குமிடமாகிய பெருஞ் முதலான பதவி பெற்றவரிடம் வசிக்கிறான்—அவன் தன் கோச்சங்களில் இரண்டை கண்களிலும் இரண்டை காதுகளிலும், ஒன்றை வசியிலு மாகஹஸ்தையும் கோசங்களால் மூடிவிடுகிறான் அதனல் பதவி பெற்றோர் எளிதேசரைக்கண் டால் கண் தெரிவதில்லை, காது கேட்பதில்லை வாய் பேசுவதில்லை, மனமெங்கிருக்கும்? பெருஞ் முதலியன இப்பொழுது காங்கிரஸிற்கு இருப்பதால் அதனிடம் ஸ்ரீ தேவி வசிக்கிறாள்.

கும்பகோணம் ஸ்ரீமடத்தில் நவராத்திரி வைபவம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகள் விச்வரூப யாத்திரையை முன்னிட்டு ராமங்களில் சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டு சென்ற வியாழக்கிழமை இரவு கும்பகோணத்திற்கு திரும்பி விஜயமானார்கள்.

மறுநாள் வெள்ளிக்கிழமையன்று நவராத்திரி பூஜை ஆரம்பமாயிற்று. இதை முன்னிட்டு ஸ்ரீ மடத்தில் விசேஷ முன்னேற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

ஒவ்வொரு தினமும் பூஜைபைத்தரிக்க ஆயிரக்கணக்கான ஸ்திரீ புருஷர்கள் வந்து கூடுகிறார்கள். பூஜைகள் வெகு விசேஷ வைபவத்துடன் நடைபெறுகின்றன. பிரம்மண்ஸ்தர்ப்பத்தின் விமர்சையை சொல்லிமுடியாது. ஸுமங்கலிகளுக்கு விசேஷ மாக மங்கள வஸ்துக்கள் தானம் செய்யப் படுகின்றன. வைதிகமான ஹோமங்களும் விதிப்படி நடக்கின்றன.

லக்ஷ தீப வைபவம்

நவராத்திரியை முன்னிட்டு லக்ஷ தீபம் போட ஸ்ரீ மடத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு தினமும் 10 ஆயிரம் தீபம் ஏற்றப்படுகிறது. இதில் ஸ்ரீ மடம் கைலாஸகிரி போல பிரகாசிக்கிறது. இதை தரிசிக்க வருஜனக்கூட்டத்திற்கும், அதன் உற்சாகத்திற்கும் அளவில்லை. பெரும்பாலும் பிரம்மணரல்லாத ஜனங்களும் வாளாமாக வந்து தரிசிக்கிறார்கள். வெளியூரிலிருந்தும் அனேக பிரமுகர்கள் இதற்காகவே வந்து ஸ்ரீ ஸ்வாமிகளை நமஸ்கரித்துப் போகிறார்கள்.

(ஏ. கி)

மஹாமஹோபத்யாய ஸ்ரீ ம. வி. ராமானுஜாசாரியரின் உருவப்படத் திறப்பு

பாஷர பாரத தாரக்ர, மஹாமஹோபாத்யாய, ம. வி. ஸ்ரீ ராமானுஜாசாரியர் அவர்களுடைய உருவப்படமானது கும்பகோணம் கோபால ராவ்-சேஷய்யர, லைப்ரரி ஹாலில் சென்ற 9உ யன்று நிறுத்து வைக்கப் பட்டது. இந்த வைபவத்தை முன்னிட்டு நகர பிரமுகர் பலர் அங்கு விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீமான் ஆசாரியாரின் சிஷ்யர்கள் சிலரும் வெளியூர்களிலிருந்து வந்திருந்தனர்.

நிவான்பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் இந்த வைபவத்தில் தலைமை வகித்த ஸ்ரீமான் ஆசாரியாரின் குணங்களை புகழ்ந்த பேசினர்.

உருவப்படத்தை நிறுத்து வைத்த மஹாமஹோபாத்யாய, பண்டிதராஜ, வித்வத் கவி, ஸ்ரீ ரிருஷ்ணமசாரியர். பேசுகையில் ஸ்ரீ ராமானுஜாசாரியர் பாத மொழி பெயர்ப்பு கைங்கர்யம் செய்த பெறுமையைப் புகழ்ந்து கூறினர்.

ஸ்ரீமான்களான கே. பாலஸுப்ரமண்ய அய்யர், சென்னை, தாவத்தர, சிங்காரம் செட்டியார், சடகோபாசாரியர், முதலிய அனேகர் ஸ்ரீ ஆசாரியாரைப் புகழ்ந்து பேசினர்கள்.

வெளியூரிலிருந்து பலபிரமுகர்கள் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கடிதமெழுதியிருந்தார்கள்.

இந்தப்படம் மாஜிஜில்லா ராஜின்தாரும், ஸ்ரீ ஆசாரியரின் மாணவருமான ஸ்ரீமான் ஜி. நாதாசாரியரால் கொடுக்கப்பட்டது. வந்தனோபசாரத்துடன் வைபவம் முடிந்தது.

(ஒ. கி.)

தேவாலயப்பிரவேச நிரஸந விஷயம்.

(காஞ்சிபுரம்கோவில், குருவர்ய, வேதாந்த. ஸ்ரீ உ வே கிருஷ்ணமாசாரியார் ஸ்வாமி எழுதியது.)

"ராகஷாத்தாக சாஸ்திரத்தான் உனக்கு பிரமாணம். செய்யவேண்டிய கார்யங்களில் சாஸ்திரவிதானத்தில் சொன்னபடியே ஆசரிக்கவேண்டும்" என்று தை நியமித்துள்ளது. ஆதலால் பகவதாக்ஞாரூபமான சாஸ்திரங்களின் விதிகளை உல்லங்கனம் செய்க ஸ்ரீபகவத் த்ரோகிகளாகி தேவாலயத்திலும் பிரவேசிக்கும் பஞ்சமர்கள் ஆஸ்திக்களாக, வும் பக்தர்களாகவும் ஆகமாட்டார்கள் அத்தகைய எண்ணங்கொண்டவர்கள் விஷயத்தில் வேறு லௌகிக வ்யவகாரங்களில் தயைபை பாராட்டலாமே தவிர கம்முடைய மதத்திற்கே முக்ய நிலயான ஆலயத்தில் அவர்களை வேறு தயைபாகாது. மேலும் நமது சாஸ்திரங்களே பகவானுடைய பரிபூர்ண தயைபின் ஸ்வரூபங்களாகவிருக்கின்றனவென்பது ஸாதாரணமாவலம்பிகளின் கொள்கையாகபடியால் மனுஷ்ய ப்ரவிருத்தியில் சாஸ்த்ர விரோதமாக நடக்கும் நடத்தி வைப்பதும் தயையாகாது. அவ்வித அசாஸ்திரிய நடத்தையில் அவர்களுக்கு இஹபரலாபமுமில்லை என்பதே சாஸ்த்ரத்தின் கருத்து.

ஆகவே இவ்விதம் பகவானே நிருவாய் மலர்ந்தருளியபடி நடவாமல், சாஸ்திர ஸம்பிரதாயங்களுக்கு முறண்பட்டு எதிர்ப்பவர்களைக் கண்டிக்கக் கடமைப்பட்டவனுக பகவான் கண்ணங்கட்டிக்கொண்டு அர்த்தமையா ஜகுஜ்ஜனகூட்டத்திற்கும், அதன் உற்சாகத்திற்கும் அளவில்லை. பெரும்பாலும் பிரம்மணரல்லாத ஜனங்களும் வாளாமாக வந்து தரிசிக்கிறார்கள். வெளியூரிலிருந்தும் அனேக பிரமுகர்கள் இதற்காகவே வந்து ஸ்ரீ ஸ்வாமிகளை நமஸ்கரித்துப் போகிறார்கள். (ஏ. கி)

மஹாமஹோபத்யாய ஸ்ரீ ம. வி. ராமானுஜாசாரியரின் உருவப்படத் திறப்பு

பாஷர பாரத தாரக்ர, மஹாமஹோபாத்யாய, ம. வி. ஸ்ரீ ராமானுஜாசாரியர் அவர்களுடைய உருவப்படமானது கும்பகோணம் கோபால ராவ்-சேஷய்யர, லைப்ரரி ஹாலில் சென்ற 9உ யன்று நிறுத்து வைக்கப் பட்டது. இந்த வைபவத்தை முன்னிட்டு நகர பிரமுகர் பலர் அங்கு விஜயம் செய்திருந்தனர். ஸ்ரீமான் ஆசாரியாரின் சிஷ்யர்கள் சிலரும் வெளியூர்களிலிருந்து வந்திருந்தனர்.

நிவான்பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் இந்த வைபவத்தில் தலைமை வகித்த ஸ்ரீமான் ஆசாரியாரின் குணங்களை புகழ்ந்த பேசினர்.

உருவப்படத்தை நிறுத்து வைத்த மஹாமஹோபாத்யாய, பண்டிதராஜ, வித்வத் கவி, ஸ்ரீ ரிருஷ்ணமசாரியர். பேசுகையில் ஸ்ரீ ராமானுஜாசாரியர் பாத மொழி பெயர்ப்பு கைங்கர்யம் செய்த பெறுமையைப் புகழ்ந்து கூறினர்.

ஸ்ரீமான்களான கே. பாலஸுப்ரமண்ய அய்யர், சென்னை, தாவத்தர, சிங்காரம் செட்டியார், சடகோபாசாரியர், முதலிய அனேகர் ஸ்ரீ ஆசாரியாரைப் புகழ்ந்து பேசினர்கள்.

வெளியூரிலிருந்து பலபிரமுகர்கள் தங்கள் சந்தோஷத்தைத் தெரிவித்துக் கடிதமெழுதியிருந்தார்கள்.

இந்தப்படம் மாஜிஜில்லா ராஜின்தாரும், ஸ்ரீ ஆசாரியரின் மாணவருமான ஸ்ரீமான் ஜி. நாதாசாரியரால் கொடுக்கப்பட்டது. வந்தனோபசாரத்துடன் வைபவம் முடிந்தது.

(ஒ. கி.)

(சிவன் அல்லது விஷ்ணுவினுடைய ஆலயத்தில் பிரகாரத்தில் ராஜஸ்வலையான ஸ்திரீயோ, சண்டாளர் முதலியவர்களோ பிரவேசிதகாலும் உத்ஸவகாலத்தில் மாடவீதி முழுதாகத்திற்குள் பிம்பத்திடம் கொடுக்கலாம், அந்த தெய்வத்திற்கு சக்திலோபம் ஏற்படும், அரசனுக்கும் உபத்திரவம் கேரும், அந்த கிராமத்திற்கு ரோகம் ஏற்படும், பயிர்களும் நாசமடையும் இது நிச்சயம்.)

காரிகாவ்ருத்தி நீலகண்டாசார்யர்

வேஶ்யானாமபி ஶூத்ராணாம் பத்ரமண்டபஸேவனம்।
இதரேஷாஞ்சவர்ணானாம் கோபுரான்து விதியதே ॥
சண்டாலபதிதாதீனாம் கோபுராத் பஹிரேவஹி ॥

(வைச்யர்களும் சூத்ர்களுக்கும் பத்ர மண்டபத்திலிருந்து தர்சனம் விதிக்கப்படுகிறது, மற்ற ஜாதிகளுக்கு கோபுரவாசலிலிருந்து தர்சிக்கஅதுமதியுண்டு. சண்டாளர், பதிதர் முதலியவர்களுக்கோ வென்ருல் கோபுரத்திற்கு வெளியில்தான் நிற்கும்படம்.)

வ்ருத்தமனு: தர்மவ்ருத்தியில்

கர்பிகாராத் பஹிः ஸ்தித்வா ததா ப்ராகாரதோऽந்ததः
சண்டாலஶ்வபாகாஸ்ச: தேவோ பிபாத் பலாயதே ॥

(சண்டாளர்கள், கர்ப்ப க்ருஹத்திற்கு வெளியிலும், ப்ராகாரத்திற்குள்ளும் நின்று தெய்வதர்சனம் செய்தால் உடனே அந்த பிம்பத்தினிலிருந்து தெய்வசக்தி விலகிப்போய் விடுகிறது.)

408 வ்ருத்தஹாரீத ஸ்மிருதி

ப்ராஸாதாதேவ ஹர்ம்யாணாம் சண்டாலபதிதாதிஷு ।
அந்தःப்ரவிஶ்ய தயாஶுத்ஸ்யாத்தன கர்மணா ॥
கோபிः ஸங்க்ரமணம் க்ருத்வா கோமூத்ரேணைவ லேபயேத் ।
புண்யாஹ் வாசயித்வா து தத்தோயैः தர்பஸंயுதैः ॥
ஸம்ப்ரோக்ஷ்ய ஸர்வதः பஶ்சாத் தேவம் ஸமபிஷேசயேத் ।

(கோபுரம், மண்டபம், முதலியவைகளில், சண்டாளன் பதிதன் முதலியவர்கள் உள் நுழைந்தால், என்ன வழியால் சுத்திசெய்வது? அத்தகயிடங்களில் பசுமாடுகளை ஸஞ்சாரம் செய்யச்செய்து, கோமூத்திரத்தினுல் மெழுகியும், புண்யாஹவாசனம் செய்து கெடுக ப்ரோக்ஷணம் செய்து, பிறகு பகவானுக்கும் ஸம்புரோக்ஷண அபிஷேகம் செய்யவேண்டும்.)

பாத்மஸம்ஹிதா சர்யாபாத: 18வது அத்யாயம்

சண்டாலैः புல்கஸैர்வாபி பதितैர்மद्யபैस्तथा ।
ஶ்வபசैर्மन्दिராभ्यन्तः प्रवेशे मृण्मयान्त्यजेत्॥
தत्रस्थान् க்ஷாலये दन्तः கவாடादि महीतலम् ।
आलिप्य गोमयाम्भोभिः: पुण्याहमपि வாचயेत् ॥

(சண்டாளர்கள், புல்கஸர்கள், பதிதர்கள் குடிப்பவர்கள் நாய் மாம்ஸம் புஜிப்பவர்கள் முதலியவர்கள் தேவாலயத்திற்குள் பிரவேசித்தால் அங்குள்ள மண்பாண்டங்களை எறிந்துவிட்டு, அங்குள்ள கதவுகள், மற்ற பாத்ரங்கள், பூமி இவைகளையும் கோமய (பசுமாடுசாணி) ஜலத்தால் அலம்பினபிறகு புண்யாவாசனமும் செய்யவேண்டும்.)

தமிழில் தினசரி பாராயணார்த்தமான தேவீ ஸ்தோத்ரங்கள்

ஸ்ரீ ஆசாரியாள் அருளிய அம்பா பஞ்ச ரத்னம், ஸ்ரீ லக்ஷ்மீ ஸ்தோத்ரம் லக்ஷ்மீ அஷ்டகம், அன்னபூர்ணாஷ்டகம, ஸ்ரீ ராஜராஜேச்வரி அஷ்டகம், காமாக்ஷி ஸ்தோத்ரம், வரலக்ஷ்மி வ்ரத ஸ்தோத்ரம், வரலக்ஷ்மி அஷ்டகம், ஸ்ரீ துளஸீஸ்தோத்ரம் முதலியன சேர்க்கப்பட்டிருக்கிறது. விலை அணு 2 கிடைக்குமிடம்:-

ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட்

கும்பகோணம்

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஸ்ரீ ஐப்பசி-மீ 2உ

வைஸிராய் அறிக்கை.

இந்தியாவிலுள்ள ஸகல ஜனங்களாலும் வெகு ஆவலுடன் எதிர்ப்பார்க்கப்பட்டிருந்த வைஸ்ராய் அறிக்கையானது வெளியாகி விட்டது. அதில் முக்யமாக மூன்று அம்சங்கள் அடங்கியிருக்கின்றன, இந்தியாவுக்கு ஜனநாயக முறையில் ஸ்வராஜ்யம் கொடுப்பதைப்பற்றி உடனே எதாவது உறுதிமொழி யளிக்கப்படவேண்டுமென்று காங்கிரஸும் சில ராஜீயக் கக்ஷிகளும் கேட்டிருந்தன, அதற்கு வைஸ்ராய் அறிக்கையில் பதில் சொல்லப்பட்டிருக்கிறது. யுத்தம் முடிந்த பிறகு இந்திய விஷயமான ராஜீய மார்க்கத்தைப்பற்றி யோஜிக்க பிரிட்டிஷார் தயாராக இருப்பதாயும், அப்போது பற்பல ராஜீயக் கக்ஷிகளுடையவும் ஸமூகஜனங்களுடையவும் பிரதிநிதிகளைக் கலந்து பேசப்படுமென்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

இரண்டாவதாக புத்தவிஷயத்தில் ஆலோசனை கூறுவதற்காக மைஸ்தான மன்னர்களையும், ராஜீயக்கக்ஷிப் பிரதிநிதிகளையும் கொண்டதொரு ஆலோசனை ஸபை நியமிக்கப்பட்டு அதன்படி பொதுஜன அபிப்பிராயம் கலந்து கொள்ளப்படுமென்றும் கூறப்பட்டிக்கிறது.

மூன்றாவதாக, இந்திய ஸம்பந்தப்பட்ட வரையில், 1919ம் வருஷத்திய அரசியல் சட்டபூர்வ பிடிகையிலும் 1935ல் வெளியிட்ட அறிக்கையிலும் கொடுக்கப்பட்ட உறுதிமொழிப்படியே ராஜீய முன்னேற்றம் செய்து வைக்கப்படுமென்றும், அதற்குக் கொள்கையே இன்னும் பின்பற்றப்படுமென்றும் வைஸ்ராய் அறிக்கை கூறுகிறது. இந்த அறிக்கையை முன்னிட்டு வைஸ்ராய் அவர்கள் செய்துள்ள வேண்டுகோளில் இந்தியாவிலுள்ள ராஜீயக்கக்ஷிகள் உத்ஸாஹத்துடன் வரவேற்கக்கூடிய அளவு தமது அறிக்கை இல்லாத போனாலும் இச்சமயத்தில் யாவரும் ஒற்றுமையுடன் ஒத்துழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார். பெரிய யுத்த நெருக்கடியில் இங்கிலாந்து காமதமன்னரின்மந்திரிகள் கவலையடைந்திருக்கிறகையில், இந்திய அரசியல் விஷயத்தில் உடனேயே ஒரு முடிவைச் செய்துவிட வேண்டுமென்று கேட்கவோ, அவ்வாறு நடக்குமென்று எதிர்பார்க்கவோ எவ்விதநியாயமும் இல்லை. இப்படியிருப்பினும், காலம் வைஸ்ராய் தாராள நோக்கம் கொண்டு ஒற்றுணர்ச்சி காட்டி இந்தியாவின் எதிர்கால நிலையைப் பற்றி நமக்கு ஒருவாறு ஆறுதல் கூறியிருப்பது கொண்டாடத்தக்கதேயாகும்.

இந்த அறிக்கையினுல் மற்றக் கக்ஷியாரை விட காங்கிரஸ் கக்ஷியாரே ஏமாற்ற மடைய வேண்டியவர்களாயிருப்பார்கள். ஏனெனில் அவர்கள் ஸட்டு மாகாணங்களை ஆளும் மந்திரிபதவியும், ராஜீய நெருக்கடி யுண்டுபண்ணை ஸைகளர்ய மிருப்பதாலும், காங்கிரஸுக்கு தேசத்தில் அதிக ஆதரவு இருக்கிறதென்ற செல்வாக்காலும், இச்சமயம் உடனே பெரிய ராஜீய ஸ்வாதந்திரியத்தைப் பெற்று விடலாமென்று நினைத்தார்கள். கார்யக்கமிட்டி வெளியிட்டுள்ள அறிக்கையில் பிரிட்டிஷ் வாக்குறுதிகளில் தங்களுக்கு நம்பிக்கை யில்லையென்றும், ஆதலால் இப்போதே நம்பிக்கை கொள்ளும்படியான ஒரு ஸம்க்ஞை செய்யாதவரையில் காங்கிரஸ் ஒத்துழைக்க விரும்பவில்லையென்றும் சொல்லியிருக்கிறார்கள். இப்போது வெளிவந்துள்ள வைஸ்ராய் அறிக்கையில் காங்கிரஸ் எதிர்பார்த்திருந்த அம்சமெதவும் காணப்படவில்லை. இந்தியாவின் சுதந்திர விஷயமாக இப்போதே ஒன்றும் செய்யமுடியாதென்றும், யுத்தம் முடிந்தபிறகுதான் ஏதாவது யோஜிக்கப்படுமென்றும் நிட்டமாக வைஸ்ராய் அறிக்கையில் கூறிவிட்டது. மேலும் 1919ம் வருஷத்திலும், 35ம் வருஷத்திலும் வெளியிடப்பட்ட கொள்கைப்படியே கார்யம் நடக்குமென்றும் தெரிவிக்கப்பட்டுவிட்டது. ஆதலால் காங்கிரஸ் விரும்பிய ஸ்வ நிர்ணயக் கொள்கையோ வேறு அவரை மாறுதல்களோ அங்கீகரிக்கப்படாவென்பதும் தெளிவாகிவிட்டது.

காங்கிரஸானது தாம் பெரிய ராஜீய ஸபையாயிருப்பதால், தனது வாத்தைக்கு பிரிட்டன் இச்சமயம் கட்டுப்பட வேண்டுமென்றுநினைத்திருக்கலாம் [illegible] ராவின் கனவுநிறைவேறுவதற்கு காங்கிரஸில் இறுமாப்பும், அலக்ஷ்யமும் தான் காரணமென்று இச்சமயம் நாம் சுட்டிக்காட்டுவது அநுசிதமாயிருக்காது. உண்மையில் தேஸ ஜனங்கள் யாவருடைய நன் மதிப்பையும் நம்பிக்கையும்பெற்றிருந்து காங்கிரஸ் தனது கொள்கையை வற்புறுத்துமானால் அப்போது பிரிட்டனும் அதன் வார்த்தைக்குக்கட்டுப்படகேரிட்டிருக்கும். காங்கிரஸானது தேஸ ஜனங்களின் பிரதிநிதித்வம் பெற்றநில்லையென்றும், அதனிடம் பெரும்பாலோருக்கு நம்பிக்கையுமில்லையென்றும் வெளிப்பட்ட உண்மையை பிரிட்டன் நன்கு தெரிந்து கொண்டுவிட்டது. ஆதலால் அது காங்கிரஸ் மனோநத்தையறிவதவரைக்கவனிக்கவில்லை. இந்நிலைமையை உண்டுபண்ணிக்கொண்டது காங்கிரஸேயாகும். மந்திரி பதவி யேற்றவுடன் அது அடங்காத கர்வம் கொண்டு தேசத்தலைவர்களையும், அறிவாளிகளையும், பொதுமக்களையும் அலக்ஷ்யம் செய்து வருகிறது. இதனால் வெறுப்புக் கொண்ட கணக்கற்ற கக்ஷிகளும், ஸமூஹங்களும் வைஸ்ராய் அவர்களிடமும் உண்மையை வெளியிட்டு, காங்கிரஸ், பிரதிநிதித்வபனமல்லவென்று சொல்லிவிட்டார்கள். இதனால் காங்கிரஸ்கார பெருமைப்பட இடமின்றி பற்பல கக்ஷித் தலைவர்களையும் வைஸ்ராய் கூப்பிட்டுப் பேசலானர். காங்கிரஸ் தனக்கே போய்விட்டதும் காங்கிரஸ் ஆக்ஷேபம்பற்றி வதை விரும்பி, அதை கேட்கும் உறுதிமொழி னை அளிக்கும்படி மிதவாதிகள், ஹிந்து ஸபையோர், நிலச்சுவான்தார், [illegible] கள் தார்மிகர்கள் ஆகிய ஸகல கக்ஷியினரும் அப்போது கவர்னருக்கும் கவர்னர் ஜனரலுக்கும்சிபார்சு செய்தார்கள். அப்படிப்பரிந்து பேசியவர்களிடம்கூடகாங்கிரஸ் மந்திரிகள் கன்றிகெட்டமுறையில் நடந்திருக்கிறார்களென்றால் அவர்களிடம் யார்தான் நம்பிக்கை வைப்பார்கள்! ஆகவே தற்போது காங்கிரஸ் அபேக்ஷை நிறைவேறுவதற்கும் தக்க ஸமயத்தில் தேசம் நன்மையடையாமல் போனதற்கும், தங்களுடைய கன்றிகெட்ட முறையும், அலக்ஷ்யபுத்தியும், அஹம்பாவமுமே காரணமென்பதை கீனத்து, இனியாவது தேசமக்களுடன் ஒற்றுமையுடனிருக்கக் காங்கிரஸ் முயற்சிக்குமென்ற நம்புவோம்.

குருவாயூர் கோவில் தப்பிப்பிழைத்தது

மதஸ்தாபன போர்டின் ஆக்ரமண முயற்சி பலிக்கவில்லை

ஹைகோர்ட் தீர்ப்பு

மலையாளத்தில் குருவாயூர் கோவிலை அகத்மார்க்க காந்தி ஸிஷ்யர்களும், காந்தியும் வெகு காலமாகப் பாடுபட்டு வருவதாயாவரும் அறிந்த விஷயம். அத்தக்கோவிலின் பரம்பரை டிரஸ்டியான ஜமோரின் அவர்கள் ஆலயப்பிரவேசத்திற்கு ஆதரவு கொடுக்காமல் பலமாக எதிர்த்து கோவிலைக் காப்பாற்றி வருகிறார். காங்கிரஸ் ஸர்க்கார்கள் வசமுள்ள மதஸ்தாபன போர்டு என்கிற பெரும் பூதத்தைக்கொண்டு அக்கோவிலை கபளீகாரம் செய்து தங்களிஷ்டப்படி அதை ஆட்டி வைக்கலாமென்ற ஆசையுடன் வேலைசெய்தார்கள்.

ஜமோரின் அதிகாரத்திலிருந்து கோவிலை ஆக்ரமணம் செய்து விட வேண்டுமென்றே கோர்க்கத்துடன் கோவில் கேட்டிபை செய்தார்கள். அதற்கு ஒரு நிர்வாஹ அதிகாரியை நியமித்துவிடவும் முயற்சித்தார்கள்.

இதை ஆக்ஷேபித்து ஜமோரின் அவர்கள் சென்னை ஹைகோர்ட்டில் வழக்குத் தொடர்ந்தார். ஹைகோர்ட் ஏற்படுத்திய ஸ்கீம்படியே கோவில் நிர்வாஹமடப்பதாயும், இதில் மதஸ்தாபன போர்டார் பிரவேசிக்க அதிகாரமில்லையென்றும் வாதித்தார்.

நீதிபதி கனம், ஸோமய்ய அவர்கள் சென்ற வாரம் தீர்ப்புக் கூறினர். குருவாயூர் கோவில் விஷயத்தில் மதஸ்தாபன போர்டார் பிரவேசிப்பது நியாயமில்லையென்றும், அதற்கு அதிகாரமில்லையென்றும், ஏற்கனவே விவில் கோர்ட் ஏற்படுத்திய ஸ்கீமை அழிக்க மதஸ்தாபன போர்டு முயற்சிப்பதைத் தாம் ஸஹிக்க முடியாதென்றும், அப்படிச் செய்வது ஸிவில் கோர்ட்டுகளின் அதிகாரத்தில் பிரவேசித்த தஷ்பிரயோகம் செய்வதாகுமென்றும் ஆதலால் ஜமோரினின் மனுவை ஏற்றுக் கொள்ளுவதாயும் தீர்ப்பில் சொல்லியுள்ளார்.

காங்கிரஸ் ஆட்சியில் வலமஸ்கிருத்தத்திற்கும் ஆபத்தா?

சென்னையில் கண்டனம்

சென்னை லெஜிஸ்லேடிவ் அஸெம்பிளி விவகாரணைக் கமிட்டியார் 3 வது பாயிண்ட் வரையில் ஸம்ஸ்கிருதத்தை கட்டாயமாக இருப்பதை எடுத்துவிட்டு இஷ்டபாடமாக வைக்கலாமென்று கவர்ன்மெண்டுக்குச்சிபார்சு செய்திருப்பதை கண்டிப்பதற்கும், அம்மாதிரி செய்யக்கூடாதென்று கேட்டுக்கொள்வதற்கும் சென்னையில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

அட்வகேட் ஜனரல், ஸர்- அல்லாடி கிருஷ்ணஸ்வாமி அய்யர் தலைமை வஹித்தார்.

ஸ்ரீமான்கள் ஸ்ரீ- ஆர்- ரெட்டி, ஸர் சிவஸாமி அய்யர், கே- வி ரங்கஸாமி அய்யங்கார் முதலியோர்கள் கூட்டத்தில் கோகதத்தை ஆதரித்துச் செய்நியனுப்பியிருந்தார்கள் பிரிருத உத்தேசத்தைக் கண்டித்துச்சில தீர்மானங்கள் செய்யப்பட்டன.

மீனாக்ஷி கோவிலில் அஹிம்ஸா யுத்தம்.

22-ந்தேதி ஞாயிற்றுக்கிழமை ஆரம்பம்.

தேசமெங்கும் கூட்டமும் பிரார்த்தனையும் நடத்த வேண்டுகோள்

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தலைவராகிய ராவ் ஸாஹிப் ஸ்ரீ நடேசய்யர் நமக்கு அனுப்பியுள்ள அறிக்கையில் கூறுவதாவது:—

ஏற்கனவே வெளியிட்டபடி 22-ம் ஞாயிற்றுக்கிழமை முதற்கொண்டுமதுரை ஸ்ரீ மீனாக்ஷிகோவிலில் ஸனாதனிகளின்ஸத்தியாக்ரஹமென்ற அஹிம்ஸாயுத்தத்தை ஆரம்பிக்கப்படும். இந்தஸத்தியாக்ரஹம் தற்போது மதுரையில் மட்டுமே நடக்கும்.பாரத தேசத்தில், சுருதி, ஸ்மிருதி, புராண ஆகமாதிகளில் நம்பிக்கையுள்ள ஆஸ்திக ஜனங்கள் யாவரும் 22, 23-ம் தேதிகளில் ஆங்காங்கு கூட்டம் நடத்தி இந்த சத்தியாக்ரஹத்திற்கு தங்களுடைய ஆதரவை வெளியிடவேண்டும்.

22-ந் தேதி யன்று ஊர்வலம் நடத்திப் பொதுக் கூட்டம் போட்டு ஸத்யாக்ரஹத்தை ஆதரித்தும், ஆலயப்பிரவேச சட்டத்தை கண்டித்தும் தீர்மானங்கள் நிறைவேற்றி வைஸ்ராய், கவர்னர், பிரதம மந்திரி, பத்திரிகை ஆகிய இடங்களுக்கு அனுப்புவதுடன் எனக்கும் அனுப்பவேண்டும்.

23-ந் தேதி யன்று ஆஸ்திகர்கள் யாவரும் உபவாஸமிருந்து ஆலயப்பிரவேசதினங்களுக்கு ஒவ்வொரு கோவில்களிலும் விசேஷ அர்ச்சனை முதலியவைகளை நடத்தவேண்டும்.

ஆழ்வார்திருநகரில் ஆலயப்பிரவேச எதிர்ப்பு அறிவிப்பு

நிரனை ஜனக்கூட்டம்

ஜில்லாக்கலெக்டரின் விஜயம்

[நமது விசேஷ நிருபர்]

பிரபல ஸ்ரீவைஷ்ணவ க்ஷேத்ரமான ஆழ்வார் திருநகரில் 9-10-39 நிகளன்று காலை திருநெல்வேலி ஜில்லா கலெக்டர் ஸ்ரீ டி. பாஸ்கரராவ் ஐ- லி- எஸ் விஜயமானர். கோவில் எக்ஸிகுடிவ் ஸ்தலத்தார்கள் யாவரும் மேள தாளவ்களுடன் வரவேற்ற ஆலயதர்சனம் செய்து வைத்தனர். ஆலயப்பிரவேச விஷயமாய் தங்களது அபிப்ராயம் தெரிவிக்க வேண்டி ஸனாதனிகள் தேவஸ்தான கேபுபு வாசலில் நிராகக்கூடியிருந்தனர். ஸனாதனிகளை கனம் கலெக்டர் சந்தித்துப்பேசினர். ஹரிஜன ஆலயப்பிரவேசம் சாஸ்த்ர விரோதமாயிருப்பதுடன் மகா ஜனங்கள் பெரும்பாலோர் எதிர்க்கிறார்களென்பதையும் ஸனாதனத்தலைவர்களால் எடுத்துரைக்கப்பட்டன. நிராகரவக்குகூடி அமைதியுடன் கூட்டமாயிருந்துள்ள பெண்மணிகளும் தங்களது எதிர்ப்பை கனம் கலெக்டரின் மூலம் தெரிவித்துக்கொண்டனர். ஸனாதன தர்மஜே!

மே.த. சக்ரவர்த்திக்கு ஜே என்ற கோஷங்களுடன் கனம் கலெக்டர் யாவராலும் வழியனுப்பப்பட்டு பிரயாணப்பட்டார் ஸனாதனத் தொண்டர் தலைவர் வர்தமானதம் ஸ்ரீ எஸ். ஸூர்.பி.டி. ஐயங்கார் (மாஜி காங்கிரஸ் பிரசாரகர்) நிளான ஜனக்கூட்ட மத்தியில் ஹரிஜன ஆலயப்பிரவேசம் வேண்டாமென்பதாகவே பெரும்பாலான ஜனங்கள் அபிப்ராயப்படுவதாகவும் கனம் ரமணீயமாய் கனம் பூல நிருபருடன் வழியனுப்பினர்.

வனஜனத் தலைவர்கள் சொற்பொழிவு

பிருமாண்டமான பொதுக்கூட்டம்

9—10—39 நிகளன்று இரவு ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆண்டாள் தேவஸ்தான வாசல் முன் மண்டபத்தில் சனாதனிகளின் பிரமாண்டமான பொதுக்கூட்டம் நடைபெற்றது ஸ்ரீமத் ஆத்தான் வடக்குத் திருமாளிகை ஆதீனம் ஸ்வாமிகள் தலைமை வஹித்தார். இளையவில்லி சடகோபாசாரியார் ஆத்தான் ஸ்ரீ வெங்கடாசாரியார் முதலிய ஸனாதன் தலைவர்களான ஆசார்ய ஸ்வாமிகளால் சான்ற் மூலமாயும் யுக்தி வாதம் மூலமாயும் ஹரிஜனக்களுள்பட எவர்க்குமே ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியில் நம்மையேற்பட்டதென மிகமாணியமாக பிரசங்கம் செய்யப்பட்டு ஸனாதனிகள் யாவரும் ஒற்றுமையாயிருந்து ஆலயபிரவேச அநிக்ம பாதகாப்பு மஸோதாவை அமுலுக்கு வரவெட்டமல் செய்யவேண்டுமென சொற்பொழிவும் நிகழ்த்தப்பட்டன. ஸனாதனிஸ்ட் ஸ்ரீ டி. ஸ்ரீநிவாஸுலு கவனிடத்தில் பறையர் ஒரக பரச்சிருப்போமோ என்ற ஆலயப்பிரவேச எதிர்ப்பு பாக்கள் பாடப்பட்டபின் ஸனாதன தர்மமேஜே என்ற கோஷத்துடன் கூட்டம் இனிதுமுடிவுவெய்தின

3-பத்தி தொடர்ச்சி

தமான கார்யம் செய்வதாயும் ஆலைல் கனம் வைஸ்ராய் அவர்கள் இந்தியாவிற்குப் புதிய சீர்திருத்தம் வழங்கும் விஷயத்தில் மேற்கண்ட விஷயங்களை தலமுமன் கவனிக்கவேண்டுமென்றும் அத்தத்தீர்மானியில் சொல்லப்பட்டிருக்கிறது.

வானமாமலை

வனஜன தர்மம் வம்ரக்ஷணீ வபா

ஆலயபிரவேசக் கண்டனம்

10-10-39ல் இவ்வூர் ஸ்ரீமான் காதமுனி செட்டியார் சத்திரத்தில் இரவு 9 மணிக்கு தின்டாதாரின் ஆலயப்பிரவேசாதிக்கிரமத்தை எதிர்க்க ஒரு மாபெருங்கூட்டம் கூடிற்று கூட்டத்தில் ஆயிரக்கணக்கான ஆண்திகர்கள் குழுமியிருந்தார்கள். கூட்டத்திற்கு ஸ்ரீ உ. வே. வித்வான் ஏ. கோபால அய்யங்கார் தலைமை வஹித்தார். அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் சார்பாக் பல விடங்களில் ஸனாதன தர்ம்மப்பிரசாரம் செய்து வருகிற, குராரு, வேதாந்தி, ஸங்கர்ஷணச்சார்யஸ்வாமிகள் ஹிந்தியில் ஆச்சர்யமான பல விஷயங்கள் உபந்யஸிக்கப்பட்டு ஸ்ரீமான் கோ. கிருஷ்ணய்யங்காரால் தமிழில் மொழி பெயர்த்து எளிய நடையில் எல்லோருக்கும் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. அக்கிராஸனாதிபதியால் அவையில் உள்ளார் ஆகந்த ஸாகாத்தில் முழுகும்படி, காலத்தக்கேற்ப அரிய உபன்யாஸம் செய்யப்பட்டு ஸனாதன தர்மத்துக்கு ஜே என்ற கோஷத்துடன் கூட்டம் முடிவு பெற்றது.

(ஒ. நி)

சேலத்தில் காங்கிரஸ் தோல்வி

காங்கிரஸ்-ஜஸ்டிஸ் அடிதடி

ஊர்வலத்துக்கு தடை

சேலம் டவுன் ஸ்க்களில் ஜில்லா போர்டுக்கு அபேக்ஷகராக நிறுத்தப்பட்டிருந்த காங்கிரஸ் அபேக்ஷகர் தோல்வியடைந்தார் ஜஸ்டிஸ் அபேக்ஷகர் வெற்றியடைந்தார் இந்த ஸம்பவம் அங்கு விசேஷமாகப் பேசப்படுகிறது.

காங்கிரஸ்கார்கள் தங்களுக்கு மெஜாரிட்டி ஸ்தானங்கள் கிடைத்த வெற்றியைக் கொண்டாட ஓர் ஊர்வலத்தை ஏற்பாடு செய்து நடத்தினர்கள். ஜஸ்டிஸ்காரர்களும் தங்கள் வெற்றியைக் கொண்டாட ஊர்வலம் நடத்தினர்கள், இருகக்ஷியாருக்கும் சண்டை மேற்பட்டு பலத்த அடிதடி நடந்தது. போலீஸார் வந்து கலகத்தைத் தடுக்கவேண்டியதாயிற்று. இரண்டு ஊர்வலத்தையும், குறிப்பிட்ட ஒவ்வொரு வழியாகப் போகச் செல்ல குறிப்பிட்ட விடத்தில் உடனே அதை கலைக்க வேண்டு மென்று போலீஸார் உத்தரவிட்டனர். அப்படியே இரண்டு ஊர்வலங்களும் கலைக்கப்பட்டன.

ஹிந்துக்களுக்கு காங்கிரஸ்பிரதிநிதியல்ல

வைஸ்ராய்க்குத் தந்தி

ஸ்ரீயுத ஜிவாஜிகனூர், கோகிக்தகர், சதர்புஜதாஸ் அவர்கள் டில்லியிலிருக்கும் கனம் ராஜப்பிரதிநிதியவர்களுக்கு இரண்டு தினங்களுக்கு முன் ஓர் அவஸரத்தந்தி அனுப்பியுள்ளார்.

அதில், ஹிந்து ஸமூகத்திற்கு மெஜாரிட்டியாயிருப்பவர்கள் ஸனாதனிகள் தானென்றும், அவர்களுக்கு காங்கிரஸ் ஸபையானது பிரதிநிதி ஸ்தானமல்லவென்றும் காங்கிரஸின் நடவடிக்கைகளுக்குமுக்யமாக ஸமூக மதவிஷயங்களில் காங்கிரஸ் பிரவேசிப்பதற்கு பெரும் பாலோரான ஹிந்துக்கள் எதிராயிருப்பதாயும் காங்கிரஸ் ஹிந்துமதத்திற்கு விரோ

தொடர்ச்சி 2-பத்தி பார்க்க

ஆஸ்திகர்களின் கடமை

(எஸ். கணேச அய்யர் மைலாப்பூர்)

ஆலயம் என்பது கோவில்களுக்கும் வீடுகளுக்கும் ஒரே பெயர். வீடுகளுக்குள் ஓர் கட்டுப்பாடு உண்டு. சொந்தக்காரர் எவ்வளவு கார்யம் செய்பவரும், பந்தக்கள் பிரவேசித்து எவ்வளவு கார்யம் செய்பவரும், சுத்தம் பேர்க்யதை முதலானவைக்குத்தக்கபடி இத்தர்கள் எவ்வளவு தூரம் பிரவேசிக்கலாம். அசுசியுள்ளவர்கள் தூரவிருந்து எப்படி கார்யம் நடத்தவரம். இவை போன்று இன்னும் பல வேறு விஷயங்களுக்குத் தனித்தனி வியவஸ்தை ஏற்பட்டு அப்படியே நடந்து வருகின்றன. இதுபோலவே கோவில்கள் விஷயத்தில் "ஆகமம்" என்னும் சட்ட மூலம் அவரவர் பிரவேசிக்கக்கூடிய இடங்களும் செய்ய வேண்டிய கைங்கர்யங்களும், தரிசிக்கவேண்டிய ஸ்தானங்களும் சொல்லப்பட்டிருக்கின்றன. ராஜாங்கத்தின் சட்டத்தை மீறினால் எவ்வளவு கோபத்தோடு தம்மை தண்டிக்கிறார்களோ, அதுபோல் தேவதைகளின் கோபத்திற்குப்பாத்திரமாகாமல் ஆலயத்தின் சட்டத்திற்குக் கட்டுபடத்தான் வேண்டும். ஆகமமாகிற சட்டத்தை ரக்ஷிக்கவே ஆஸ்திகஸ்தலத்தில் அரசர்கள் குறைவில்லாமல் கட்டித்தந்தார்கள். இது வரையில் அப்படியே நடக்கும் ஜனங்களால் பூரிக்கப்பட்டும் வந்தது. இப்போது கலியின் கொடுமையால் "ராஜாஹ்யத்தப்ரஜாஹ்:" என்பது சொன்னபடி அரசாங்கத்தார் ஆலயத்தையும் பணத்தையும் பெரிதாகவெண்ணித்தங்களுடைய கௌரவத்தை யுத்தேசித்து பஞ்சமர்கள் ஆலயப்பிரவேசம் நடத்திவிட்டும். நடத்தியும் இதன் காரணமாக ஸாதக்களின் மனதை புண்படுத்திவருகிறார்கள். "ஸாது ஜன ஸந்த்ராபம் கிமச்சர்யம் குலக்ஷயம்" என்று மகத்துக்கள் சொல்லியிருக்கிறார்கள். சாஸ்திராநுகூலம் பூர்ணமாயில்லாதவர்கள், தெய்வமிருக்கால் கேட்காதானென்று சொல்லக்கூடியவர்கள், ஸ்ரீ ராமணரிஷியே சம்மதித்து விட்டார் என்று வாய்ப்பறையடிக்கக்கூடிய ஆஸ்திக வேஷமுள்ள நாஸ்திக்கர்கள் இதுசமயம் அதிகமாக உண்டாயிருக்கிறார்கள். இந்தஹிம்ஸை ஒவ்வொரு யுகத்திலும் உண்டாகிறது. வேலியே பயிரைபழித்தால் வீணாவதெப்படி என்ற பிரகாரம் ராஜாங்கமே இப்படிச்செய்து விட்டால் ப்ரஜைகள் என்ன செய்வார்கள்? ஆனால் ஆஸ்திகர்கள் இதைப்பற்றிக் கவலைப்படவேண்டியதில்லை. தபஸ், யோகம், ஜபம், ஹோமம், தானம் இதைவிட ஆயுத மூலம் ஸாதனைகள் தங்கள் கார்யத்தைச்சாதித்துக் கொள்ளலாம். நாம் முயற்சி செய்தால் "ஸாச்வத தர்மகோப்தா" வான பகவான் நம்மை அனுக்ரஹிக்கவும் நம் தர்மத்தை ரக்ஷிக்கவும், "சம்பவாமியுகே யுகே" என்ற பிரகாரம் ப்ரத்யக்ஷமாகி அனுக்ரஹம் செய்வார் என நம் பெரியோர்களின் அபிப்ராயம். ஆகவே நமக்கேற்பட்ட கர்மாக்களைச் சரிர அனுஷ்டிப்பதே நம் கடமையாகும்.

ஆர்ய தர்ம அபிமானிகளுக்கு

ஒரு வேண்டுகோள்

இதற்கு முன்னர் "செய்வதென்ன" என்ற கட்டுரையிலும் "ஆஸ்திகர்களுக்கு வேண்டுகோள்" என்பதிலும் எழுதியிருப்பதை ஞாபகப்படுத்திக்கொள்ள ப்ரார்த்திக்கிறேன். தர்மத்திற்கு கேடும் ரக்ஷணைப் பிறரால் வருவதல்ல. தர்மம் என்பது ஸத்யமும் ஸாதனமுமான ஆத்மாவிற்கு யாதொரு சுகமோ துக்கமோ இல்லைன்பதுபோன்றது. தர்மமும், அஜ்ஞானத்தால் ஸம்ஸாரபந்தம் சுகதுக்கம் ஏற்படுவது போன்றது அதர்ம ப்ரவிருத்தியும். ஒவ்வொரு தர்மாபிமானியும் தன்னைத்தான் கல்வழியில் சாஸ்திராசாரம்புமீறாது வைத்துக்கொள்ள வேண்டியதைத் தவிர செய்யவேண்டியது வேறொன்றுமில்லை அதுவே ஸ்ரீ கிருஷ்ணாவதாரம். அதுவே தர்ம ஸம்ஸ்தாபனம். வேறு ப்ரசார்கங்கிரஸோ, ஆங்கிலேயரோ நமக்குச்செய்ய முடியவே முடியாது. செய்வரென்று எதிர்பார்த்தச் செய்வதெல்லாம் கம்பை அதர்ம வழியிலே சேர்ப்பிக்கும். தர்மாநுஷ்டானங்களை முழுமனதுடன் செய்யுங்கள் பெரியோர் ஆசார்யர்களை வழிபடுங்கள். ப்ரம்மதேஜஸை வளர்த்துங்கள். வேறு வழியில்லை. ஒரு அரசனிடம் யாசகத்திற்குப்போனவன் அவ்வரசன் கடவுளை யாசித்துக் கொள்ளலாமென்று திரும்பிய கதை கவனிக்க.

காளையார்கோவிலில்

கண்டனக் கூட்டம்

அகில இந்திய வர்ணச்ரம ஸ்வதருஜ்ய சங்கத்தின் முக்கிய அங்கத்தினர்களின் கூட்டம் 13—10—39உ சங்க தலைவர் ரா. ராமலிங்கக் குருக்கள் அவர்கள் தலைமையில் கடைபெற்றது. அவ்வமயம் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டன.

தீர்மானம் (1) 17—9—39ல் கனம் ஸகாரா மந்திரி டி. எஸ். எஸ். ராஜன் அவர்கள் காளையார்கோவிலுக்கு விஜயம் செய்திருந்தையத்தில், ஹரிஜன ஆலய ப்ரவேசத்துக்கு ஜே டாக்டர் ராஜனுக்கு ஜே என்று கோஷமிட்டதாக 20—9—39உ தினமணி பேப்பர் பக்கம் (7) பத்தி 2ல் யெழுதியிருந்தையும் சனதனிகள் ஸம்பந்தமாக நிகம்ந்த உண்மையான விஷயங்களை பிசகாமல் பிசகாமல் செய்யாமல் பிசகாமல் பிசகாமல் பிசக

21530 4

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்
கும் கைண்ட இந்தியமருந்து
இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

ழியே" (ஸ்ரீ ஸங்கி ஜ வாழித்திருநாமம்); "தயமரப்பும் புரிதலும் வாழியே" (ஸ்ரீமக வாளமாமுனிவாழித்திருநாமம்) என்பனவும் சேர்க்குக.

வேதாந்த தேசிகரருளிச்செல் (நிருவல்லிக்கே ணித்தமிழ்ச்சங்க ஆறுவது வெளியீடு) "தூ லெனமும் மறைநலமே உம் குலவ" (5) என வருதல் உணர்ப்பாற்று.

சூர்ப்பனகை இராவணனிடத்துக் கூறும் விடையில் "வற்கலியர் வார் கழலர் மார்பின னிதாலர்" (ஆரணிய, மாரீசன் வதைப். 54) என்று சுடப்பட்டுள்ளதன்றோ, (மாவுரியாடை தரித்தவர்கள், நீண்ட வீரக்கழலுடையவர் கள், மார்பிலே தரித்த அழகிய முப்புரி நூலை யுடையவர்கள்.)

இத்தகைய பெருமை வாய்ந்த பூணூல் மிகப்பவித்திரமானது. அதனைப் பூணுகெறி யிற் பூண்டு பேணு நெறியில் பேணவேண்டு வது கம்மனோர் முதற்கடமை. தற்காலத்தி லோ இதன் கீர்மையுணர்வார் அருகிவருகின் றனர். பூணூலே பிரும்ம ஸூத்ரம்

பிரும்மோபதேசத்துக்குப் பூர்வமாகி பூணூலணிதல், நிருமலியில் பிரும்மோப தேசம் செய்து வைக்கும் அதட்டானம் மிக வரியதோர் சூக்குமப் பொருளுடைத்து அவசிய காலங்களில் பூணூல் மாற்றவேண் டும். ஸைகியன்றி பூணூற்காப்பு பிரயோ சனமில்லை. இல்லறத்தினர் சர்வாங்கஸ்நா னம் செய்து கொண்டதன்பின் அன்றே புதுப் பூணூல் முறைப்படி தரித்தல் வேண்டும் பூணூல்பெட்டி சாவிகள் முதலியன மாட்டி வைக்கும் கருவியாக உபயோகித்தல் கூடாது. கூடுமான ஒவ்வொரு பிராஹ் மணனும் தானே நூற்றுப் பிரதிட்டை செய்து சம்பிரதாயப்படி அணியில் நல்லது. வேத உபாத்தியாயர்களும் அறுவக்களுங் தங்களைச் சார்ந்தோருக்கு சுத்தமான யஜ் ஞோப வீதம் கொடுத்துதவல் மேம்பாடு டைத்து. பூணூல் விற்பனை செய்தல் தகாது. லௌகிகர்கட்கு வேண்டுமான உபகரணங்களை வைதிகர்கள் அவ்வப்போது அளித்து வந்தால் தாமாகவே அவர்களுப் இவர்களது தேக யாத்திரைக் கவனிப்பர் என்பதில் ஐயமுன்று, அவர்களுக்கு சித் தை உண்டாக்குவதும், உள்ளதை விருத்தி செய்விப்பதும் வைதிகர்களுடைய முதற் கடமையாக கொண்டுகடந்தால் காட்டில்

பஞ்ச நிவாரண
அறிவிப்பு.

நமது பாரததேச மக்கள் அனைவரும் இப்பிரசுரத்தை
முக்கியமாய் கவனிக்கவும்.

நமது தேசத்தில் மழையில்லாக் கொடுமையாலும் தொழிலில்லாக் கஷ்டத்தினாலும் நமது தாய்நாட்டு ஏழை மக்கள் பசியால் வாடித் தவிக்கின்றனர். அதன்பொருட்டு எங்கள் கம்பெனியில் 15—9—39 உ முதல் 15—11—39 உ வரை T. T. ஸைண்டியிக் மார்க் பெருங்காய விற்பனையிலிருந்து பவுண்டு 1-க்கு 6 பைசா வீதம் பஞ்ச நிவாரணத்துக்கு அகில இந்திய காதி சங்கத்தின் தமிழ்நாட்டு ஜோயிடம் பஞ்சம் ஏற்பட்டுள்ள பிரதேசங்களுக்கு உதவிசெய்ய அளிக்கப்படும்.

ஆகையால் நமது தேச மக்கள் அனைவரும் எங்கள் ஸைண்டியிக் T. T. மார்க் பெருங்காயத்தையே அதிகமாக வாங்கி நமது தேச ஏழை மக்களுக்கு உதவி செய்யும் படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,

ரஷித் ஐம்ஷெட் கான்ஸ் அண்டு கோ.

ஸம்பந்தமாக விபரம்

எங்கும் என்றும் மங்கலம் மலிந்து நிற்கும் உபகர்மத்தன்று வைதிகமான பூணூலையே கொடுப்பதென வைதிகர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும். பரியோர் போன வழியைப் பின் பற்றித் தான் பிறர் செல்வர். அந்தணன் மார்பை அலங்கரிப்பது பூணூலே. பூணூலை அறுத் தெரிவேன் என்பது மிக்க கடோமான சூளுரை, அது சாட்சியாகப் சபதம் செய் தலும் உண்டு. எனவே அதனை உயிருக்கு யிராயேம்பவேண்டும் என்பதாயிற்று. பெற்றோரால் குல முறைப்படி போட்டு வித்த முப்புரி நூலை ஜாதித் தவேஷம் முற்றுமிறதாகக் குற்றங் கூறி அதனைப் பலரறிய அறுத் தெறிந்தனரே மகானுப் விளங்குபவரும் இக்காலத்து உளர். இவர் களது உண்மை மனோநிலை ஈசர்க்கும் அறிய வொண்ணாதே. அந்தணனது விசேஷ அடையாளங்கள் ஸிகை, யஜ்ஞோபவிதம், கச்சம் முதலியன, இவற்றைப் புறக்கணித் திருப்பதாற்றான் நம் நாடு ஒற்றுமை இழந்து அல்லலுறுகின்றது. சர்வ விதத் தினும் நமக்குஹிதத்தையே உபதேசிக்கும் மறை இவற்றைக் கொண்டாடி நமக்கு விடுத் திருக்க அவற்றைப் போற்றுகிறபின் நமக்கு ன்மை எங்ஙனம் உண்டாகும்? வேத புருடன் விதியை அதசரித்த விதிப் படி நடக்க வேதனே போம்; மங்களம் மல் கும்; ஆரோக்கம் அதிகரிக்கும்; அமலன் மல ரடி சிட்டும்; நித்திய நிரதிசய இன்பம் நிறவும்;

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்" என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங் களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர் க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம ணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரசேயகம்.)
கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,

தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை
&
ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்

The Premier English Weekly Devoted to the cause of Sanatana Dharma.
"Dharmarajya"
(Official organ of the Dharma Sevaka Sabha.
Patron Founder & Spiritual Director: H. H. Sri Sankaracharya, of Puri.
Widely circulated in India, Burma & Ceylon.
Best Medium for Advertisement
Annual Subscription Rs. 3.
Apply to:—
The Manager, "DHARMARAJYA"
Chandi Chowk, Delhi.

Printed by S, Kalyanasundram, at the Sri Janardhana Printing Works, Ltd., Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundram.





215305

OFFICE OF THE ... OF BOOKS
28 NOV 1939
MADRAS

REGD No.M. 2913. ARYADHARMAM TAMIL WEEKLY. Estd. 1915

ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஒரணு.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

விளம்பர விரிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்

ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ

மதுரை ஸத்தியாக்ரஹத்துக்கு

தமிழ் நாடெங்கும் போராதரவு

காஞ்சீபுரம்

காஞ்சீபுரம் ஸ்ரீ ஸனாதன தர்ம சேவா சங்கத்தின் ஆதரவில் 23-10-39 மாலை ஸ்ரீ ஏகாம்பரநாத ஸ்வாமி சன்னதிக்கு முன் ஓர் ஸனாதனிகளின் மாபெருங் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ ராமசாமி சாஸ்திரிகள் தலைமை வகித்தார். மதுரை சத்யாக்ரஹத்துக்கு ஆதரவு காட்டுவதாயும் ஆலயப்பாதுகாப்புச்சட்டத்தைக் கண்டிப்பதாகவும் தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின. (ஒ. நி.)

இராமேஸ்வரம்

22-10-39 மாலை இராமேஸ்வரத்தில் அ. இ. வ. ஸ். சங்க ஆதரவில் ஒரு ஸனாதனிகளின் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீ ராமசாமி சாஸ்திரிகள் தலைமை வகித்தார். மதுரை சத்யாக்ரஹத்துக்கு ஆதரவு காட்டுவதாயும் ஆலயப்பாதுகாப்புச்சட்டத்தைக் கண்டிப்பதாகவும் தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின. (ஒ. நி.)

காரைக்குடி

காரைக்குடி ஸனாதன தர்ம ஸம்ரக்ஷண சபையின் சார்பில் ஸனாதனிகள் 500 பேர்கள் வரை நாகநாதபுரம் பெருமாள் கோவிலிலிருந்து பஜனை கோஷ்டியுடன் மெ. செ. மெ. வீதி வழியாக வந்து, கல்லுக்கட்டி நான்கு விதிகளிலும் பிரதக்ஷிணமாய் ஏகாதசி மடம், கொப்புடையம்மன் கோவில்களில் தரிசனம் செய்து கொண்டு அம்மன் சந்நிதி வழியாக நகரச்சிவன்கோவிலுக்குச் சென்று ஸ்வாமி தரிசனம் செய்தபின் அநுபத்துமூவர் குருபூஜை மடம் வந்தது.

பிறகு ஸ்ரீ முத்த. வெ. செட்டியார் தலைமையில் ஓர் கூட்டம் நடைபெற்றது. அதில் ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்து ஓர் தீர்மானம் நிறைவேறியது.

மதுரை மீனாக்ஷியம்மன் கோவிலில் ராவ் சாகேப் ஸ்ரீ எஸ். நடேசய்யர் அவர்களால் ஆரம்பித்துள்ள ஆலயப்பிரவேச எதிர்ப்பு அஹிம்ஸா தர்ம ஸத்யாக்ரஹத்தை இக்கூட்டம் முழுமனதுடன் ஆதரிக்கிறது. (ஒ. நி)

திருக்கோவிலூர்

மதுரை ராவ்சாகேப் ஸ்ரீ எஸ். நடேசய்யர் வேண்டுகோட்டிணங்கி 22-10-39 ஸ்ரீ பிருஹந்நாயகாம்பாள் ஸன்னிதியில் ஓர் விசேஷக்கூட்டம் நடைபெற்றது. அதில் ஸ்ரீ சேஷா கனபாடிகள் ஆலயப்பிரவேசத்தைக்கண்டித்தும் ஸ்ரீ நடேசய்யர் அவர்களால் நடத்தப்படும் ஸத்யாக்ரஹத்தை ஆதரித்தும் ஒரு தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. (ஒ. நி.)

ஆத்தன்குடி

22-10-39 கோவில் பஞ்சமூர்த்திகளுக்கு விசேஷ அர்ச்சனை நடத்தியபின் ஸ்ரீ சு. வீர. கதிரேசன் செட்டியார் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் அடியில் கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஸ்ரீ மான்கள் ஜெகதீசய்யர், கணேச கனபாடிகள் தீர்மானங் குறித்து சொற்பொழிவாற்றினர்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத் தலைவர் ஸ்ரீ நடேசய்யரவர்கள் தலைமையில் மதுரையில் விஜயதசமி அன்று ஆரம்பிக்கப்பட்டுள்ள சத்தியாக்ரஹத்தை இச்சமயம் பெரிதும் ஆதரிக்கின்றன. சத்தியாக்ரஹிகளைப் பாராட்டுகின்றது. அவசியமான இடங்களில் சத்யாக்ரஹம் புரிய நாட்டிலுள்ள ஸாதனிகள் அனைவரையும் வேண்டுகிறது. கருதிய கருமம் கைகூட இறைவனை இறைஞ்சுகின்றது.

2. வேதாகம சாஸ்திர விருத்தமான தீண்டாதார் ஆலயப்பிரவேசச் சட்டத்தை ரத்து செய்து நாட்டின் அமைதியைக் காக்கும்படி மே. த. வைஸ்ராயைக் கேட்டுக் கொள்ளுகிறது. (ஒ. நி.)

சிதம்பரம்

ஸனாதனிகளின் உபவாஸம்

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத் தலைவர் ராவ்சாகேப் ஸ்ரீமான் நடேசய்யர் அவர்களது அறிக்கையின் படியும், தென்னாற்காடு ஜில்லா ஸனாதன தர்ம பிரசார மஹா சபையார் கோரிக்கைக்கு இணங்கியும் மதுரை கோவிலில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் அஹிம்ஸா யுத்தம் வெற்றியடையவும் ஆலயப்பிரவேசத் தீங்கு ஏற்படாமலிருக்கவும், வேண்டி சிதம்பரம் ஆஸ்திகர்களில் 20 பேர்கள் 23—10—39 உபவாச மிருந்து தெய்வப் பிரார்த்தனை செய்தார்கள். மாலை 6-மணிக்கு ஒரு ஸனாதனிகளின் கூட்டம் நடை பெற்றது. (ஒ. நி.)

சிதம்பரம்

23—10—39 காலை சிதம்பரம் ஸ்ரீமந் நடராஜர் ஸன்னிதியில் ஆஸ்திக பிராம்மணோத்தமர்களால் இப்போது மதுரையில் நடக்கும் ஆலயப்பிரவேச எதிர்ப்பு ஸத்யாக்ரஹம் நிறை வேறி ஸனாதனிகளுக்கு ஜெயம் கிடைக்க வேண்டுமாய் மஹாருத்ர ஸஹஸ்ர ஏகாதச ருத்ர பாராயணமும் ஸ்வாமி ஸன்னிதியில் விசேஷ அபிஷேக ஆராதனைகளும், பக்தி சிரத்தையுடன் நடைபெற்றன.

தென்னற்காடு ஜில்லா ஸனாதன தர்ம மகா ஸபையின் ஆதரவில் 23—10—39 மாலை தெம்பரம் மேல சன்னதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் அடியிற் கண்ட தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின:—

பிரிட்டிஷ் கவர்மெண்டார் யுத்தத்தில் வெற்றியடைய வேண்டிய வண்ணம் மா. த. விக்டோரியா மகாராணியார் மத சம்பந்தமான விஷயங்களில் கவர்மெண்டார் தலையிடுவதில்லை என்று கூறி விடுவித்த பிரகடனத்துக்கு மீறி காங்கிரஸ் கவர்மெண்டார் ஆலயப் பிரவேச சட்டத்தையும் இயற்றி ஸனாதன தர்மத்திற்கு இழைத்து வரும் அநீதிகளை கண்டித்தும், ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்யும் படி வைஸ்ராயைக் கேட்டுக் கொள்வதாகவும், சென்னை ஹிந்து மத தர்ம பரிபாலன போர்டார் பொதுஜன அபிப்பிராயங்களைக் அறிந்து கொள்ளாமலும் வேதாகம, புராண, ஆகம சாஸ்திரங்களில் கொஞ்சம் கூட நம்பிக்கை இல்லாத நிர்வாக அதிகாரி நியமித்து அவர்கள் மூலமாக ஹிந்து மதத்தையும் ஹிந்து மத தர்மங்களையும், அழித்து வருவதை கண்டிப்பதாகவும்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தலைவர் ராவ்சாகேப் ஸ்ரீ நடேச அய்யரால் மதுரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் சத்தியாகிரஹம் பூரண வெற்றியடைய வேண்டி இறைவனை இறைஞ்சுவதாகவும் தீர்மானங்கள் நிறைவேறின. (ஒ-நி)

சீசந்தன்குடி

"ஹாலாஸ்ய மகாத்மியம்"

மாயூரம் பிரும்மோத்ஸவத்தை முன்னிட்டு வள்ளலார் கோவிலுக்கருகாமையிலுள்ள சேந்தன்குடியிலிருக்கும் ஸ்ரீ துர்க்கையம்மன் கோவிலில் ஐப்பசி 20ம் வ முதல் உற்சவம் முடிகிறவரையில் தினம் ஹாலாஸ்ய மகாத்மியத்தில் ஒரு சரித்திரமும் பெரிய புராணத்தில் ஒரு நாயன்மார் சரித்திரமும் ஆலய வழிபாட்டின் முறையும் சைவம் திருநீறு குருலிங்க லிங்கம, பக்தி வைராக்கியம் எனும் பொருள்களோப் பற்றி மேல்கண்ட தேதிகளில் மாலை 3 மணி முதல் 6-30 மணி வரையில், தக்க பெரும் புலவர்களால் அரிய சொற்பொழிவுகள் நடைபெறும். (ஒ. நி.)

அகரமாங்குடி

ராஜாங்க கைலாஸ வேத பாடசாலை.

இப்பவும் ஷை பாடசாலையின் ஆதரவில் ஒரு கூட்டம் 22-10-39 காலை கூடியது. அச்சமயம் ஷை பாடசாலை டிரஸ்டி ஸ்ரீ திருமலை அய்யர் "வேதாத்யயனமும் அதன் மகிமையும்" என்பது பற்றி உபந்யாஸம் செய்தார். மாணவன் கிருஷ்ண மூர்த்தியால் நல்லிச்சேரி ராமசந்திர கனபாடிகளுக்கு குருதக்ஷிணை ஸமர்ப்பிக்கப்பட்டது. பிரதம டிரஸ்டி ஸ்ரீ சின்னசாமி அய்யர் வித்யார்த்தியை ஆசீர்வதித்து ஸர்டிபிகேட்டை கொடுத்தார். டிரஸ்டி ராஜாங்க கைலாஸய்யர் சாஸ்திர பாடசாலை டிரஸ்டிகளில் ஒருவரான ஸ்ரீ தர்மராஜய்யர் வேத ஸம்ரக்ஷணம்" என்பது பற்றி பேசினர். வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது. (ஒ-நி)

"சத்யாக்ரஹத்தை தொடர்ந்து நடத்துக"

ஸனாதனத் தலைவர்களின் கர்ஜனை

மதுரையில் மாபெருங் கூட்டம்

ஒருமைல் நீளமுள்ள ஆஸ்திகர்களின் ஊர்வலம்

கண் கொள்ளா காட்சி

மதுரை சத்தியாக்ரஹத்துக்கு போராதரவு காட்டவேண்டி 22-10-39 மாலை ஆஸ்திகர்களின் ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தில் 20000 (இருபதாயிரம்) மக்கள் (ஸ்திரீகள் உள்பட) கலந்து கொண்டார்கள். ஊர்வலம் ஒரு மைல் நீளமுள்ளதாயிருந்தது கண்கொள்ளா காக்ஷியாயிருந்தது.

ஊர்வலமுன் ஸ்ரீ கிருஷ்ண பகவான் விக்ரஹம் நன்கு அலங்கரிக்கப்பட்டு இரண்டு வெண்ணிறமான அழகிய குதிரைகளினால் இழுக்கப்பட்ட தேரில் வைக்கப்பட்டிருந்தது. ஊர்வலத்தில் பிராம்மணர்கள் வேத கோஷம் செய்து கொண்டு வந்தார்கள். பிராம்மண இளைஞர்கள் ஜே கோஷம் போட்டு வந்தார்கள். இந்த ஊர்வலத்தினால் போக்கு வரத்து ஒரு மணி நேரம் தடை செய்து நின்று விட்டது.

மதுரையில் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்ட ஸ்ரீ மீனாக்ஷி கோவில் (ஸனாதன வித்யாலயம்) முன்பு ஒரு மாபெருங் கூட்டம் நடைபெற்றது.

"பிராம்மண குல ரத்னம்" ராவ்சாகேப் ஸ்ரீ எஸ். நடேசய்யர் தலைமை வகித்தார். அவர் கரகோஷங்களுக்கிடையில் எழுந்திருந்து பேசியதாவது:—

"மதுரையில் அஹிம்சா யுத்தம் நடந்து வருகிறது. அதை "தொடர்ந்து நடத்துக". சென்னை ஆலயப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்கிற வரையில் இந்த சத் இயக்கம் நடந்து வரும். (கரகோஷம்) இந்த சத் இயக்கம் சட்டநிட்டங்களுக்குள்ளே படிந்து நடக்குமே தவிர, ராஜாங்க சட்டதிட்டங்களை (காங்கிரஸ் சத்யாக்ரஹங்களை நடத்தியது போன்றல்ல) எதிர்த்து சமர்தானத்துக்கு பங்கமேற்படாமல் பார்த்துக் கொள்ளும். ஆரம்பத்தில் ஊர்வலங்களும், உபவாசமும் மட்டும் சத்யாக்ரஹிகள் நடத்துவார்கள். ஆஸ்திநிராவிடர்களால் அசுத்தப்பட்ட ஆலயங்கள் முன் சத்யாக்ரஹிகள் உபவாசம் இனி நடத்துவர்.

ஜில்லா பிரதமன—உதவி போலீஸ் சூபரன்டெண்டு ஜில்லா மாஜிஸ்திரேட்டுகளும் சேரில். இந்த ஊர்வலங்களை வந்து பார்க்கட்டுமே. பார்த்த அவர்கள் நிலைமையை நன்கு தெரிந்து கொள்ளமுடியும்" என்று கூறினர். (நீண்ட கரகோஷம்)

டெப்டி சூபரிண்டெண்ட், 2 இன்ஸ்பெக்டர்கள் 2 சப்இன்ஸ்பெக்டர்கள், ஏராளமாய் போலீஸ் கான்ஸ்டேபில்கள் கூட்டத்திற்கு பந்தோபஸ்து செய்திருந்தார்கள். கூட்டம் அமைதியுடன் முடிந்தது.

(நமது விசேஷ நிருபர்)

மதுரை சத்யாக்ரஹம்

ஸ்ரீ நடேசய்யர் அறிக்கை

29—10—39 இன்று ஸனாதனிகள் உபவாஸம் ஆரம்பித்து 8 வது நாளாகும்.

28. ஆடவர்
27. பெண்டிர்
20. சிறுமிகள்
6. சிறுவர்

இந்த உபவாஸத்தில் சிறுவர் சிறுமிகள் காட்டும் உற்சாகம் குறிப்பிடத்தக்கது. அமைதியாக ஆண்டவனை வழிபட்டு கொண்டு உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகிறார்கள். இவர்களைக்கண்டு பலருக்கு உற்சாகம் ஏற்படுவது நான்கு குறிப்பிடவேண்டியதவச்யமாகும்.

மதுரை ஸத் இயக்கம்

உண்ணாவிரதம் அனுஷ்டிக்கும் சத்யாக்கிரஹிகள்

இன்று எட்டாவது தினம்

23—10—39 மதுரையில் சத்யாக்ரஹம் ஆரம்பிக்கப்பட்டது. தினசரி உபவாசம் ஆஸ்திக அபிமானிகளால் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

24—10—39 ந் தேதி 78 ஸ்திரீகளும், 26 புருஷர்களும் (104 பேர்கள்) உண்ணாவிரதம் அனுஷ்டித்தார்கள்.

மதுரை அட்வகேட்டான ஸ்ரீ கே. ஆர். நாராயணசாமி சாஸ்திரிகள் ஸ்ரீ ஸ. நாராயண அய்யர் பி. ஏ. எல். டி. ஸ்ரீ வைகுண்ட அய்யர், ஓவர்சியர் முதலியவர்கள் உண்ணாவிரதம் அனுஷ்டித்தார்கள். ஸ்ரீ காராய்ண சாமி அய்யர் தாயார் மீனாக்ஷி, வெண் ணாவ உண்ணாவிரதம் அனுஷ்டித்தார்கள்.

25-ந் தேதி 26-ந் தேதிகளில் 111 பேர்களும் 27-ந் தேதி 75 பேர்களும் உபவாசமிருந்தார்கள்.

அஹிம்ஸாயுத்தத்திற்கு ஆதரவு

குடந்தையில் கூட்டம்

வைஸ்ராய் அறிக்கைக்கு வரவேற்பு

மதுரையில் ஸ்ரீமீனாக்ஷி கோவில் ஆலயப்பிரவேசத்தை நிர்த்து ஆரம்பித்திருக்கிற அஹிம்ஸா யுத்தத்திற்கு ஆதரவு அளிக்கவும், ராஜீய நிலைமையைப்பற்றி வைஸ்ராய் அவர்கள் விடுத்த அறிக்கையை ஆமோதிக்கவும் குடந்தை ஆஸ்திகப் பொது ஜனங்களின் கூட்டமொன்று சென்ற வாரம் வியாழக்கிழமை ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி கோபுர வாசலில் கூடப்பெற்றது. ஏராளமாக ஸ்திரீகளும், புருஷர்களும் வந்திருந்தனர். பிரம்மஸ்ரீ பண்டிட் அக்னிஹோத்ரம் கோபாலதேசிகாசாரிய ஸ்வாமிகள் அக்ராஸனம் வஹித்தார்.

தலைவர் கூட்டத்தின் நோக்கத்தை விளக்கிக்கூறுகையில், வைஸ்ராய், கவர்னர் போன்றவர்கள் கூட மத உரிமைகளை ரக்ஷித்தக்கொடுக்கத் தவறிவிட்டதால் இனி அஹிம்ஸா யுத்தத்தைத்தவிர வேறு இல்லை யென்றும், மதுரையில் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் இயக்கத்திற்கு ஆஸ்திகர்கள் பல வழிகளிலும் ஆதரவு கொடுக்கவேண்டுமென்றும், பழனி கோவில் பாழாக்கப்பட்டு விட்டதென்றும் இன்னும் நான்கு கோவில்களின் கதி என்ன ஆகுமோ தெரியவில்லை யென்றும், இச்சமயத்தில் ஆஸ்திகர்கள் இன்னும் தீவ்ரமாகத் தினர்ச்சி செய்வது அவச்யமென்றும் பேசினர்.

பிறகு ஸ்ரீ பெரும்பூதூர் ஸ. சடகோபாசாரியர் ஆலயப்பிரவேச இயக்கத்தைக் கண்டித்து வெகு தீவ்ரமான முறையில் பேசினர். ஆகம சாஸ்திரங்களின் படி ஆலயங்களின் அமைப்பையும், தெய்வ பிம்பங்களின் நிலைமையையும் விவரித்துக் கூறி நீண்டகாலம் கோபுர தர்சனத்தினாலேயே முக்தியடைய வழியிருப்பதாகக்கூறினர்.

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க).

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஐ ஐப்பசி-மீ 16உ

மந்திரி லபையின் மறைவு

காங்கிரஸ் காரியக் கமிட்டியின் தீர்மானத்தை அநுஸரித்து ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியாரும், மற்ற மந்திரிகளும் ராஜிநாமா செய்து விட்டனர். ராஜிநாமா அங்கீகரிக்கப்பட்டச் சிறிது காலமாகு மென்று எதிர்பார்க்கப்பட்டதாயினும் கவர்னர் சிக்கிரமேயே அதை அங்கீகரித்து 93-வது மிரிவுப்படி மாகாண விவகாரங்களை ஏற்றுக்கொண்டு விட்டார். கவர்னர் இம்மாதிரி செய்ததற்கு இந்தியா மந்திரி வைஸ்ராய் ஆகியவர்களின் அநுமதி இடைத்திருப்பதிலிருந்து முன்னேற்பாடாக ஆழ்ந்தயோஜனையுடனும் உறுதியுடனுமே பிரிட்டிஷ் மந்திரிகள் நடக்க நிச்சயித்திருக்கிறார்களென்பது தெளிவாகிறது. சட்டலபையை அடியோடு கவர்னர் கலைக்காமலிருப்பதிலிருந்தும், மறுபடியும் காங்கிரஸ் வைஸ்ராய் ஸந்திப்பு ஏற்பட்டிருப்பதிலிருந்தும் மீண்டும் ஏதோ நம்பிக்கை யிருப்பதாகச் சிலர் நினைக்கிறார்கள். காங்கிரஸ் கோரிக்கையானது ஆரம்பத்தில் தீவ்ரமான தாயும், பிறகுள்ளதாயுமிருந்த போதிலும், இப்போல் படிப்படியாக அதன் வேகம் குறைந்து வருவதைப் பார்க்கிறோம். ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியார் வெளியிட்டுள்ள அறிக்கையே இதற்குப் போதிய ருஜுவாகும். இந்தியாவுக்கு சுயநிர்ணயச் சுதந்திரமளித்து அதை ஒரு சுயேச்சை பெற்ற நாடாக அங்கீகரிக்க வேண்டுமென்பதே காங்கிரஸின் முக்யக்கொள்கையாகும். ஆயினும் பிரிட்டிஷ் மந்திரிகள் இதற்கு இப்போது செவிசாய்க்கமாட்டார்களென்பது தெரிந்த வுடன் காங்கிரஸ் வாதிகள் சிறிது பிழே இறங்கவேண்டியதாயிற்று. ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியார் தமது அறிக்கையில், யுத்தம் முடிந்த பிறகு ஸ்வேச்சை அளிப்பதாகச் சொன்னால் போதுமென்றும், இப்போதே அதைக்கொடுக்கவேண்டுமென்பதில்லையென்றும் சொல்லுகிறார். யுத்தம் முடிந்த பிறகு மைனரிடி ஸமூஹத்தின் பிரதிநிதிகளுள்பட இந்தியர் அடங்கிய பிரதிநிதிக்கூட்டத்தில் இந்தியாவின் சுதந்திரம் நிர்ணயிக்கப்பட்டால் போதுமென்றும் ஸ்ரீ ஆசாரியார் சொல்லுகிறார். ஆகையால் பிரிட்டனின் வாக்குறுதிகளில் தங்களுக்கு நம்பிக்கையில்லை யென்றும், ஆதலால் இப் போதே ஒரு முடிவு செய்து தீரவேண்டு மென்றும் காங்கிரஸ் கூறியதை அவர்கள் கைவிட்டு விட்டதாகத் தெரிகிறது. மேலும் மத்ய கவர்ன்மெண்டில் தாற்காலிகமாகத் எதாவது சிறிய சீர்திருத்தம் கொடுத்தால் கூட தாங்கள் ஸந்தோஷப்படத்தயாராயிருப்பதாகவும் ஸ்ரீமான் ஸி. ஆர். கூறியிருக்கிறார். இப்போது காந்திஜி, ஜின்னு முதலியவர்கள் சேர்ந்து மறுபடியும் வைஸ்ராயை பேட்டி காண்பதானது மேற்கண்ட விஷயத்தை ஆதாரமாகக்கொண்டதென்றே பிரஸ்தாபிக்கப்படுகிறது. ஆகவே மத்யகவர்ன்மெண்டில் காங்கிரஸுக்கும், லீகுக்கும் எதாவது பிரதிநிதி ஸ்தானம் கொடுக்கப்பட்டாலே காங்கிரஸ்காரர் திருப்தி யடைந்து விடுவார்களென்று ஊஹிக்கப்படுகிறது. ஆகவே சுயேச்சைக் கோரிக்கை, ராஜி நாமா முதலிய நாடகங்கள் சீக்கிரத்தில் முடிவு பெறுமென்று ராஜீயவாதிகள் பலர் நினைக்கின்றனர். ஸுபாஷ் போஸ் முதலிய தீவ்ரவாதிகளோ திருப்தி செய்யவும், காங்கிரஸின் ஒத்துழையாமை வாஸனை மறையவில்லையென்பது உலகத்திற்குக் காட்டவும் அதிகார ஆசையில் மூழ்கி விட்டதாக வந்துள்ள புகாரை மறைக்கும் நோக்கத்தடனுமே இந்த ராஜிநாமா ஆர்ப்பாட்டங்கள் நடப்பதாக ராஜீய அறிவாளிகள் நினைக்கிறார்கள். இதன் உண்மை சீக்கிரத்தில் வெளியாகலாம்.

காந்திஜியின் தலைமையிலுள்ள தற்போதிய காங்கிரஸானது அஹிம்ஸையை பிரத்தானக் கொள்கையாக ஏற்றுக்கொண்டிருக்கிறது. இந்த நிலைமையில் அது இந்தியாவிற்கு பூர்ண சுயேச்சை கேட்பது பொருத்தமாவென்று பலர் ஸம்சயப்படுகின்றனர். காங்கிரஸ் விருப்பப்படி இன்று இந்தியாவுக்கு பூர்ண சுயேச்சை கொடுத்துவிட்டால் அஹிம்ஸா ஆயுதத்தைக்கொண்டு இந்தியாவை காங்கிரஸ் காத்துக்கொள்ளுமென்பது நகைப்புக்கே இடமாகும். ஜப்பானே, ஜர்மனியோ, வேறு எதிரி நாடோ இந்தியா மீது படையெடுத்தால் பிரிட்டனின் உதவியின்றி இன்றையதினம் காங்கிரஸ் என்ன செய்ய முடியும்? அஹிம்ஸா மந்திரத்தை ஜபித்தால் போதுமா? ஆகவே காங்கிரஸ் தற்போது கொண்டுள்ள கொள்கைப்படி அது பூர்ண சுயேச்சை கேட்க அர்ஹதையுள்ளதல்லவென்று பிரிட்டனும், வேறு ராஜதந்திரிகளும் நினைப்பதாகத் தெரிகிறது.

சிறு பான்மை ஸமூஹ விஷயமாக காங்கிரஸ் கொண்டுள்ள மனப்போக்கும், அது சுயேச்சை கேட்க லாயக்கில்லை யென்பதை வெளிப்படுத்துவதாக பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் கருதுகிறார்கள். இதில் சிறிது உண்மையில்லாமல் போகவில்லையென்று சென்னை மந்திரி ஸபையின் சில கார்யங்களால் வெளிப்பட்டிருக்கிறது.

காங்கிரஸுக்கு எதிராகவுள்ள ஸ்தாபனங்களை யெல்லாம் ஒன்று சேர்த்துப் பார்த்தால் காங்கிரஸே மைனரிடி ஸ்தாபனமாயிருக்கிறதென்று காந்திஜி இப்போது புதிய தர்க்கம் செய்ய ஆரம்பித்திருக்கிறார். இதெல்லாம் கார்ய ஸாதனத்திற்காகப் பேசப்படும் பசப்பு வார்த்தையே யல்லது ஊற்றுக்கு நிற்கக்கூடியதல்ல. மைனரிடி ஸமூஹங்களின் ராஜீய, ஸமூஹ, மத உரிமைகளை ஸம்ரக்ஷிக்க,தற்போது பேசப்படும் சுயநலம் கலந்த பரிஹாரங்களைவிட தர்மமே, முக்யமான பரிஹாரமென்பதை ஸுதந்த தர்மிகள் அநுபவபூர்வமாக நிரூபணம் செய்யக் கூடும்.

ஆதலால் இந்தியாவிலுள்ள சிறுபான்மை ஸமூஹத்தினரின் உரிமைகளுக்கு சரியான பந்தோபஸ்து எற்படாத வரையில் எந்த சீர்திருத்தமும் பயன்படா தென்பதற்கு தற்போதிய ராஜீய முட்டுக்கட்டையே ஓர் உதாஹரணமாயிருக்கிறது. இதை கவனித்து வைஸ்ராய் நடந்து கொள்வாரென்று நம்புவோம். எப்படியும் இன்னும் சில தினங்களில் காங்கிரஸ் மந்திரிகளின் ராஜா நாடகத்தின் முடிவு நிர்மாணிக்கப்பட்டு விடுமென்று எதிர்பார்க்கப்படுகிறது.

குறிப்பு

திருவாங்கூர் அரசர் சிலை

ஆலயப் பிரவேச அதர்மத்தைச் செய்து வழிகாட்டிய திருவாங்கூர் அரசரின் ஞாபகம் என்னலும் அழியாமலிருப்பதற்காக அவருடைய சிலை யொன்று சென்னையில் சீர்திருத்த வெறிபிடித்தவர்களின் முயற்சியால் ஸ்தாபிக்கப்பட்டது. அதன் நிறப்புச் சடங்கை சென்னை கவர்னர் ஏற்று நடத்தினார். சென்னையில் இத்தகைய சிலை ஏற்படுவதை ஏற்கனவேயே நாம் ஆக்ஷேபித்துள்ளோம். சென்னையில் வாழும் பிரஜைகளில் பெரும்பாலோர் இந்தச் சிலையை விருக்க விரும்ப வில்லை யென்பது ஏற்கனவே வெளிப்பட்ட விஷயம். இந்தச் சிலையை நாட்டுவதற்குச் சென்னையை தேர்ந்தெடுத்ததில் எவ்வித நியாயமுமில்லை. நற்காரியம் செய்தவருக்கு ஞாபகச்சின்னம் ஏற்படுத்தி கௌரவப்படுத்துவதுபோல் சீர்திருத்தவாதிகள் நினைத்தாலும், இச்சிலையானது திருவாங்கூர் அரசர் தம் முன்னோர்களின் தர்ம வழியை அழித்த சாஸ்திர சம்பிரதாய நியமங்களை மீறி பெரிய அதிக்ரமம் செய்ததை தலை முறை தலைமுறையாகப் பொது ஜனங்கள் மறக்காமலிருப்பதற்கே உதவுவதாயிருக்கும். இல சீர்திருத்த வெறியர்களுக்கு இது வெறுப்பையே கொடுக்குமென்பதில் ஸந்தேஹமில்லை.

இந்தச் சிலையை நமது மாகாண அதிபதியான கனம் கவர்னர் அவர்கள் திறந்து வைக்க இசைந்தது தாழ்நிருஷ்டமேயாகும்.

அந்த மஹாராஜாவை கௌரவிக்க கவர்னரவர்களுக்கு வேறு பல ஸந்தர்ப்பங்களுண்டு. பொது ஜனங்களால் வெறுக்கப்படுவதும், மிருந்த ஆக்ஷேபத்திற்கு இடமுள்ளதுமான ஆலயப்பிரவேச விளம்பரத்திற்கு ஆதரவுகொடுக்கும் இந்தத் திறப்புச் சடங்கில் கவர்னர் ஸம்பந்தப்பட்டது பொது ஜனங்கள் மனதில் தப்பெண்ணத்தை உண்டாக்கக்கூடியது. ஆலயப்பிரவேசத்தை எதிர்க்கும் கோடிக்கணக்கான மக்கள் நமது கவர்னரின் ஆளுகையின் கீழ் இருந்து வருகிறார்களல்லவா? ஆகையால் இம்மாதிரி சீர்திருத்த விஷயங்களில் மாகாணத்தலைமை அதிகாரி ஸம்பந்தப்படாமலிருப்பதே நியாயமாகும்.

ஆயினும் கவர்னரவர்கள் சிறிது ஜாக்கிரதை காட்டியிருப்பது பாராட்டத்தக்கதே. ஆலயப்பிரவேசமானது ஸுபீக காலத்தில் ராஜீய ஸம்பந்தம் பெற்றுவிட்டதாக கவர்னர் கூறியிருக்கிறார். ஆயினும், ஆலயப்பிரவேச விஷயத்தில் பலத்த விவாதமிருந்து வருவதால் அவ்விஷயமாகத்தாம் எவ்வித அபிப்பிராயமும் கூற முற்படவில்லை யென்று கனம் கவர்னர் சொல்லியிருக்கிறார். ஆகவே, திருவாங்கூர் ஆலயப்பிரவேசத்தையோ தாம் ஆதரிப்பதாகக்காட்டிக்கொள்ள கவர்னர் ஸம்மதப்படவில்லை. இது சீர்திருத்தவாதிகளுக்குச் சிறிது ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கலாமாயினும் கவர்னர் இதில் ஸம்பந்தப்பட்டது, பொதுவாக ஸாதாரண ஜனங்களுக்கு மனத்தாங்கலை கொடுக்கக் கூடியதே.

திருவாங்கூர் அரசர் ஸ்வய ஆக்ஷி அளிக்காததற்காக காங்கிரஸ்கட்சித்தார் அவரை படுத்தும் பாடு கொஞ்ச நஞ்சமல்ல. அரசரை ஒரு பொம்மையாகச் செய்துவிட காங்கிரஸ்காரர் பாடுபடுகின்றனர். பயமுறுத்துகின்றனர். ஆதலால் காங்கிரஸ் காரர் கூட இப்போது இச் சிலையை விரும்பமாட்டார்கள்.

அரசரோ வென்றால் தமது அதிகாரத்தையும் செல்வாக்கையும் ஸௌகரியங்களையும் விட்டுக்கொடுக்க மனமின்றி சுய ஆக்ஷி அளிக்க மறுக்கிறார். தனது கௌரவத்தை பாதுகாக்கவேண்டி ஸ்ரீ பத்மநாபனே பலியிடத் துணிந்தார். ஆலயப்பிரவேசத்தைக் காட்டி, ராஜீய சீர்திருத்தத்தை வழங்காமல் ஏமாற்றச்சூழ்ச்சி செய்தார். இத்தகைய செய்கையை, சிலை நாட்டிப் பாராட்ட வேண்டுமா?

காங்கிரஸ் மந்திரி லபை ராஜிநாமா

இனி ஆலோசனை சபை
ஆட்சிநடத்தும்

இந்திய சட்டத்தின் 93-வது பிரிவின்படி புதிய நிர்வாகம்

(ஸ்ரீ எல். எஸ். மணி)

ஐரோப்பாவில் கடைபெறும் மகாமகா யுத்தத்தில் பிரிட்டன் கலந்துகொண்டிருக்கிறது. இந்தப் போரில் எல்லோரும் பிரிட்டனுக்கு ஆதரவு காட்ட முன்வந்திருப்பது குறிப்பிடத் தக்கது. காங்கிரஸ்காரர்களும் எல்லா கட்சியினரும் பிரிட்டனுக்கு ஆதரவு காட்டினார்கள். ஆனல் காங்கிரஸ் காரர்கள் மட்டும் சில நிபந்தனைகளை விதித்து அதற்கு ஒப்புக்கொண்டால் தான் உதவி அளிப்போம் என்று கூறினர்கள்.

ஆனல் மே. த. இந்தியா மந்திரி லார்டு செட்லண்டும், மே. த. வைஸ்ராய் லார்டு லின்லித்கோவும், யுத்தம் முடிந்த பின் எல்லா கட்சியினரையும் கலந்துகொண்டு ஒரு அரசியல் நிட்டத்தை நிர்மயம் செய்ய முற்படலாம். 1935 ஞ்ரு இந்தியாமந்திரியினல் வாக்குறுதி அளிக்கப்பட்ட குடியேற்ற நாட்டந்தஸ்தே இந்தியாவின் எதிர்கால ராஜீயநிட்டமாகுமென்று பதிலளித்தார்கள். இதற்கு காங்கிரஸ்காரர்கள் உடனாமல் பிரிட்டனுடன் ஒத்துழைக்க முடியாதென்று கூறினர்கள். இதனை ஒட்டி இந்தியாவின் ஒன்பது மாகாணங்களில் அரசாட்சி நடத்தி வந்த காங்கிரஸ் மந்திரிசபை ராஜிநாமா செய்துவிட வேண்டும் என்று அ. இ. தே. கா. மகாசபை காரியக்கமிட்டி தீர்மானித்தது. அதன்படி மந்திரிசபை ராஜிநாமா செய்ய ஒப்புக்கொண்டது. முதலில் சென்னை மந்திரிசபையும், பின் பம்பாய், ஐக்ய மாகாண மந்திரி சனீயும் ராஜிநாமா செய்திருக்கின்றன. விரைவில் மற்ற மந்திரிசபைகள் ராஜிநாமா செய்துவிடும்.

மே. த. கவர்னர் 1935ஞ்ரு இந்திய சட்டத்தின் 93வது பிரிவுப்படி மாகாண அரசாட்சியை நடத்துவார்.

"இந்தியா கவர்ன்மெண்டு சட்டத்தின் 93-வது பிரிவின் விவரம் வருமாறு:—93 1) இச்சட்டப்படி எந்த மாகாணத்தின் ருவாகமாவது நடைபெற முடியாதென்று ஒரு நிலைமையேற்பட்டிருப்பதாகக் கவர்னர் கருதும்பக்ஷத்தில், கவர்னர் பின்கண்ட முறையில் ஒரு பிரகடனம் வெளியிடலாம்.

(அ) பிரகடனத்தில் குறிப்பிட்டுள்ள பிரகாரம் அவரது கடமைகளை அவரே வகித்து, உசிதப்படி நடத்திவருவார்.

(பி) ஒரு மாகாணசபை அல்லது அதிகாரி செலுத்தக்கூடிய அல்லது செலுத்தும் அதிகாரங்களை இவரே ஏற்று நடத்துவார்.

மாகாணம் சம்பந்தப்பட்டவரையில் அச்சட்டத்தின் முழுவதையுமோ அல்லது ஒரு பாகத்தையோ நிறுத்திவைத்து இந்தப்பிரகடனத்தின் நோக்கத்தை நிறைவேற்றி வைக்குமாறு அவசியமான மாறுதல்களையும் இதில் அவர் குறிப்பிடலாம்.

ஆனல் இந்தப்பிரிவில் குறிப்பிட்டுள்ள அதிகாரப்படி ஹைகோர்ட்டு சம்பந்தமான அதிகாரம் கடமையைக் கவர்னர் ஏற்பதற்கில்லை.

(2) இவ்விதம் வெளியிடும் பிரகடனத்தை மற்றோர் பிரகடன மூலம் மாற்றலாம்.

(3) (அ) இதன்படி வெளியாகும் பிரகடனத்தை உடனே இங்கிய மந்திரிக்கு அனுப்பவேண்டும். அவர் அதை பார்லிமெண்டு சபை முன் ஆஜர் செய்யவேண்டும்.

(பி) இந்தப்பிரிவின்படி வெளியிடப்படும் பிரகடனம் ஆறு மாதத்திற்குப்பின் முடிவடையும்.

இத்தகைய பிரகடனத்தை நீடிப்பதாக பார்லிமெண்டு சபைகள் நிர்மானித்திருக்கும் பக்ஷத்தில், அப்பிரகடனம் அதன் தேதியிலிருந்து மற்றும் 12 மாதங்களுக்கு இது அமுலிலிருக்கும். ஆனல் எச் சந்தர்ப்பத்திலும் இப்பிரிவுப்படி வெளியிடப்படும். பிரகடனம் மூன்று வருஷங்களுக்கு மேல் நீடிக்கப்படுவதில்லை.

(4) இந்தப் பிரிவுப்படி கவர்னர் ஒரு பிரகடனம் வெளியிட்டு சட்டஞ் செய்வதற்கான சட்டசபை அதிகாரத்தை கவர்னர் ஏற்கும் பக்ஷத்தில், இவ்வதிகாரத்தை அநுசரித்து அவர் இயற்றும் சட்டங்கள் பிரகடனம் ரத்தாகும் தினத்திலிருந்து இரண்டு வருஷங்களுக்கு செல்லுபடியாக அமுலிலிருக்கும். ஆனல் மாகாண சட்டசபைகள் இக் காலத்திற்கு முன்னதாக இச்சட்டசபை மாற்றவோ ரத்து செய்யவோ கூடும்

(5) இந்தப் பிரிவுப் படியான கடமைகளை கவர்னர் யதோசிதப்படி செலுத்தப்படும். கவர்னர் ஜெனரலுடைய சம்மதியின்றி கவர்னர் இத்தகைய பிரகடனத்தை வெளியிடக்கூடாது."

இதன்படி ஒரு ஆலோசனை சபையை நியமித்திருக்கிறார். இதில்மூன்றுஸ. ஸி. எஸ். காரர்கள் இருக்கிறார்கள்.

மே. த. கவர்னர் மேற்கண்ட அறிக்கையை வெளியிட்டுள்ளார்:—

1935-ம் வருஷத்திய இந்தியா சட்டத்தின் பிரிவு 62 உட்பிரிவு 2 கிளாஸ் பி. படி அக்டோபர் மாதம் 29-ந்தேதி முதற்கொண்டு சென்னை ஜனப்பிரதிநிதி சபை ராஜாங்க சபை ஆகியவற்றின் கூட்டங்களைக் கலைக்க கவர்னர் உத்தரவிட்டிருக்கிறார்.

(62) (2) எ பிரிவு சட்டசபைகளைக் கூட்டவோ (பி) சட்டசபைக் கூட்டங்களைக் கலைக்கவும் (ஸி) சட்டசபைகளையே கலைக்கவும் கவர்னருக்கு அதிகாரம் அளிக்கிறது.

சந்தாதார்களுக்கு அறிவிப்பு

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடத்தில் பழைய அச்செழுத்துக்களை மாற்றிப் புதிய எழுத்துக்கள் வந்ததின் காரணமாகச் சென்றவாரம் ஆர்யதர்மம் பத்திரிகையை வெளியிட முடியாமல் போய்விட்டது. சந்தாதார்களுக்கு முன்னறிவிப்பு செய்துகொள்ள முடியாமல் போனதற்கு வருந்துகிறோம்.

மானேஜர், ஆர்யதர்மம்.

ஸ்ரீசங்கராச்சாரிய ஸ்வாமிகள்.

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரிய ஸ்வாமிகள் கும்பகோணத்தை அடுத்துள்ள ஸ்ரமங்களில் சுற்றுப் பிரயாண விஜயம் செய்துவருகிறார்கள். சில தினங்களாக கல்லூர், சிவபுரம் முதலிய விடங்கள் சென்றுவிட்டு புதன் கிழமை முதல் 2, 3 தினம் உமையாள்புரத்தில் எழுந்தருளி யிருப்பார்களெனத் தெரிகிறது.

ஸ்ரீ ஸ்வாமிகள் நவராத்திரி பூஜை முடிந்த வுடன் மௌனவிரதத்தை முடித்து விட்டார்கள்.

இரண்டு தினங்களுக்கு முன் ஸ்ரீ மடத்தில் "குருபக்தி" என்ற விஷயத்தைப் பற்றி ஸ்ரீ ஸ்வாமிகள் ஆச்சர்யமான பிரசங்கம் செய்தார்கள். ஏராளமான கூட்டம் வந்திருந்த மிகுந்த சிரத்தையுடன் கேட்டு கிருதார்த்தர்களானார்கள்.

மஹோபாயாஸக்தின்

சம்புவே சங்கராரம் சத்தியமச்
[சங்கரே
சம்பு தனிலதிகம் சாற்றக்கேள் — சம்பு
[தன்பால்
சென்றே ருருள் பெறுவர் தேகிகாரற்
[சங்கரரே
சென்றருள்வர் கொள்வாய் கிரம்.

(ஸ. சா. வே.)

ஸ்ரீ வானமாமலை மடம் ஜீயர் ஸ்வாமிகள் பரமபதமடைந்தார்

நாங்குனேரி ஸ்ரீ வானமாமலை மடாதிபதிகளான ஸ்ரீமத் ராமானுஜஜீயர்ஸ்வாமிகள் அர்ப்பசி மீ விஜயதசமி ஞாயிற்றுக்கிழமை யன்று பரமபதம் எழுந்தருளினார்கள். உள்ளூர் வெளியூர்களிலிருந்து ஆயிரக்கணக்கான சிஷ்யர்கள் கூடியிருக்க ஸ்ரீ ஸ்வாமிகளுடைய பிரதம தின கைங்கர்யங்கள் வெகு வைபவத்துடன் நடந்தேறின.

ஸ்ரீ ஜீயர் ஸ்வாமிகள் நல்ல வித்வானுகவும் அநுஷ்டான வைராக்ய ஸம்பன்னராகவும் எழுந்தருளியிருந்ததுடன் ஸநாதன தர்மப் பிரசாரத்தில் மிகுந்த சிரத்தை காட்டி வந்தார்கள். ஆலயப்பிரவேசக் கிளர்ச்சியை வெகு பலமாக எதிர்த்து வந்தார்கள். இச்சமயம் ஸ்ரீ ஸ்வாமிகளுடைய வியோகமானது தார்மிக சமூஹத்திற்கு ஓர் பெரிய நஷ்டமாகுமென்பதில் ஸந்தேஹமில்லை.

புதிய ஜீயர் நியமனம்

பரமபதம் எழுந்தருளிய ஜீயர்ஸ்வாமிகள் தமக்கு பிறகு மடாதிபதியாக இருக்கும்படி வித்வான் ஸ்ரீவானமாமலை அய்யங்கார் ஸ்வாமிகளை நியமனம் செய்து தண்டி ஸ்வாமிகளும் ஸன்யாஸம் பெற்று ஆஸ்தானத்தை ஏற்றுக்கொண்டார். (ஒ. நி)

'சத்யாக்ரஹத்தை தொடர்ந்து நடத்துக''

(3-ம் பக்கத் தொடர்ச்சி).

பின்பு ஸ்ரீ அக்னிஹோத்ரம் ராமானுஜ தாதாசாரியர் பேசுகையில், யுத்த விஷயமாகக் காங்கிரஸ கொண்டுள்ள மனோபாவத்தை இங்கியர் எவரும் ஆதரிக்கமுடியாது வைஸ்ராய் காங்கிரஸை மட்டும் கலந்து பேசியதுடனில்லாமல், வேறு பல கக்ஷித்தலைவர்களையும் கலந்து பேசி காங்கிரஸானது இந்திய ஜன சமூகத்திற்கு ஏகப் பிரதிநிதி என்ற கூற்றை அங்கிகரிக்க மறுத்தது விசேஷ மென்றும் யுத்தம் முடிந்த பிறகு ராஜீய ஸ்வராஜ்யத்தை விரிவு படுத்துவதாக வைஸ்ராய் கூறியதை வரவேற்கத் தக்கதென்றும், காங்கிரஸின் ராஜினாமா பயமுறுத்தலை அதிகாரிகள் லக்ஷ்யம் செய்வதாயில்லை யென்றும் யாவரும் வைஸ்ராய் அறிக்கையை ஆதரிக்க வேண்டுமென்றும், கூறினார்.

தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரத்துடன் சபை கலைந்தது. (ந.நி)

மதுரையில் மகாபிஷேகம்.

27—10—39. காலை மஹாபிஷேகம் நடைபெற்றது. சுமார் 50 கனபாடிகள், ஸ்ரௌதிகளும் வேதபாராயணம் செய்தார்கள்.

12 மணியளவில் சுவாமி ரதாரோஹணம் நடைபெற்றது. மாலை 5 மணிக்கு ஸ்வாமி புறப்பாடாகி ரதத்தில் எழுந்தருளினார். ரதம் இரவு 10 மணிக்கு இருப்பிடம் வந்து சேர்ந்தது. இரவு 10 மணிக்கு ரதத்தின் முன்பாகவே சுவாமி சந்நிதியில் சுமார் 2 மணி நேரம் நாதஸ்வரம் வாசிக்கப்பட்டது. பிறகு ஸ்வாமி உள்ளே எழுந்தருளினார். பிறகு ஸ்வ

215305

ஹிமாலயம், திபேத், நேபால்
கஸ்தூரி, சிலாஜிட், குங்குமம்

(சுத்தமானதென்றும், கலப்பற்றதென்றும் உத்திரவாதம் செய்கிறோம்).

கஸ்தூரி	ஒரு தோலா.	ரூ 25—0—0
சிலாஜிட் (புடமிட்டது)	,,	ரூ 1—0—0
குங்குமம் (கேசர்)	,,	ரூ 2—8—0

(ஒரு தோலா என்பது ஒரு ரூபாய் எடையாகும்) ஏற்படும் தபால் சார்ஜ்—பாக்கிங் சார்ஜ் தனியாக உண்டு. கடிதப் போக்குவரத்து ஹிந்தியாலாவது, ஆங்கிலத்திலாவது நடத்தவும்.

கிடைக்குமிடம்:— PREM LAL SHAHALMRA CANGOLA,
ALMORA (Himalayas) U. P.

நாகூர்

பிராம்மண ஸங்கம்.

அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தலைவர் ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள் விடுத்த அறிக்கைக் கிணங்க அக்டோபர் மீ 22, 23 உ களிலும் மதுரையில் நடந்து வரும் ஸநாதனிகள் ஸத்யாக்ரஹமென்கிற அஹிம்ஸா யுத்தத்தை ஆதரிக்கவும் அதன் வெற்றிக்காக பிரார்த்தனை புரியவும் இச்சங்கத்தின் விசேஷ கூட்டங்கள் ஒவ்வொரு தினமும் இரவு மணி 8க்கு நடைபெற்றன. இச்சங்கத் தலைவர் ஸ்ரீ என். எஸ். இராஜகோபாலய்யா அவர்களாகும். இச்சங்கத்து காரியதரிசி ஸ்ரீ N. நாராயணசாமி ய்யர் நம்து சமூகத்தின் தற்கால நிலைமையைப பற்றியும் நம்முன் முக்கியமாக வேண்டியதான ஒற்றுமையின் அவசியத்தைப்பற்றியும், ஆலயப்பிரவேச எதிர்ப்பு விஷயமாக நம் ஸநாதனப் பிரதிநிதிகளான ராவ்சாகேப் ஸ்ரீ N. நடேசய்யர், ஸ்ரீ K. R. வெங்கட்டராமய்யர் செய்து வரும் ஒவ்வொரு மகத்தான வேலைகளைப். பாராட்டியும், ஆலயப்பிரவேச சட்டத்தைக்கண்டித்தும் விரிவாகப் பேசிய பின் கீழ்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

சமீபத்தில் சென்னை சட்ட சபையில் நிறைவேறியுள்ள ஆலயப்பிரவேச பாது காப்புச்சட்டமானது தர்மத்துக்கும், சாஸ்திரத்துக்கும் தொன்றுதொட்ட வழக்கத்துக்கும் விரோதமாயிருப்பதால் அது இச்சங்கம் பலமாக கண்டிப்பதோடு, ஆலயப்பிரவேச எதிர்ப்பு விஷயமாக 22-10-39 முதல் மதுரையம்பதியின்கண் ஸ்ரீ மீனாக்ஷி கோவிலில் ஸநாதனிகளின் ஸத்யாக்ரஹமென்ற அஹிம்சா யுத்தம் நம் ஸநாதனப் பிரதிநிதியான ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யரால் ஆரம்பிக்கப்பட்டு நடப்பதை இச்சங்கம் பூர்ணமாய் ஆதரித்து நிற்பதுடன் இப்புனித இயக்கத்தின் பரிபூர்ண வெற்றிக்கு எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றது.

ஸநாதன தர்மப்பிரதிநிதிகளான ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யர், ஸ்ரீ கே. ஆர். வெங்கட்டராமய்யர் நம் ஸமூகத்திற்கும் ஸர்வஜன க்ஷேமத்திற்கும் தங்கள் உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்து புரிந்துவரும் ஒவ்வொரு மகத்தான வேலைகளையும் இச்சங்கம் மிகவும் பாராட்டுவதுடன், அன்னவர்களுக்கு இவ்விதமான புனிதகாரியங்களில் மென்மேலும் ஈடுபட்டுபாடுபட்டுழைக்க சகல ஆற்றலையும், அரோக திடகாத்திரத்தையும், சர்வ சம்பத்தையும் தீர்க்காயுளையும் கொடுத்தருள அவ்யாஜகருணை மூர்த்தியும். அகிலேசனுமாகிய பரந்தாமனை பிரார்த்திக்கின்றது.

குடந்தையில் நவராத்திரி உத்ஸவம்.

பதி ஸ்ரீ ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார் ஸ்வாமிகள் அவர்களின் திருபடாலயத்தில் அம்மன்களுக்கு [லக்ஷார்ச்சனைகளும், லக்ஷ தீபங்களும், ஸுமங்கலி பிராமணர்களுக்கு சந்தர்ப்பணைகளும் மிக்க விசேஷமாகவே நடத்தினர்கள். 1 வயது முதல் 9வயது வரையிலுள்ள பாலிகளுக்கு பூஜை முதலானவைகளும் நடந்தன. எராளமான ஸ்திரீகளுக்கு ரவிக்கைகளும், ஸ்ரீ மடத்தின் சின்னங்களுடைய ஓர் காசும், தக்ஷிணைகளும் கொடுத்தார்கள். சில சுமங்கலிகளுக்குப்புடவைகளும் கொடுத்தார்கள். இராத்திரி தீபாலங்காரங்களும் தீபாராதனைகளும் விசேஷமாய் நடந்தன. ஸ்ரீ மடத்தில் பகலிலும் இரவிலும் ஜனக்கூட்டங்கள் தரிசனார்த்தம் ரொம்பவும் கூடியிருந்தார்கள். ஸரஸ்வதி பூஜையன்று, ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகள் தரிசனத்திற்காக, ஸ்ரீ சாரங்கபாணி ஸ்வாமி ஆலயத்திற்கும், ஸ்ரீ ஆதி கும்பேசுவர ஸ்வாமி ஆலயத்திற்கும், விஜயஞ் செய்தார்கள். ஸ்ரீ ஜகத்குரு ஸ்வாமிகளவர்கள் இவ்வூரைவிட்டு விஜயதசமியன்று மாலையிலேயே கும்பகோணத்திற்கு வடக்குப்பாரிசத்திலுள்ள கல் லூருக்கு விஜயமானார்கள். அங்கிருந்து பின்னும் சில ஊர்களுக்கும் விஜயஞ் செய்வார்களெனவும் தெரியவருகிறது. (இ.கே.)

மன்னார்குடி

"அர்ச்சனை"

அ.இ.வ.ஸ். சமன்னார்குடி கிளை ஆதரவில் 22-10-39 ல் மதுரையில் நடைபெறும் ஸத்யாக்ரஹத்திற்கு ஆதரவு காட்ட வேண்டி காலையில் ஸ்ரீ ருஜகோபாலஸ்வாமி கோவிலில் பெருமாளுக்கும், தாயாருக்கும் சஹஸ்ரநாமார்ச்சனை, நிவேத்யம் முதலானதுகள் வெகு விமரிசையாய் நடந்தது. பிறகு பெரியதொரு ஸஹஸ்ரநாம கோஷ்டி பாராயணத்துடன் கோபாலசமுத்திரம் நாலு வீதிகளுடன் திருமஞ்சன வீதியாக ஹரித்திருநதி நாலு வீதிகளுடனும் அன்னவாசல் வீதி வழியாக வந்து கோவிலில் முடிவடைந்தது.

ஸ்ரீ ருஜகோபாலஸ்வாமி கோவிலிலிருந்து ஒரு பெரிய கூட்டம் சஹஸ்ரநாமபாராயணத்துடன் பெரிய கடைத்தெரு அக்கிரஹாரம் முதல் தெரு, புதுத்தெரு முதலான முக்கிய வீதிகளின் வழியாக வந்து ஸ்ரீ கோபிநாதஸ்வாமி கோவிலில் பூர்த்தியாகி நடந்த பிறகு அங்கு ஒரு பெருங் கூட்டம் நடைபெற்றது. மீடி கூட்டத்தில் ஸ்ரீ ராமாயா பாகவதர் தலைமை வகித்தார். ஸ்ரீ ருமபத்ரர்ச்சார் சுவாமி தற்காலம் நடந்து வரும் ஹரிஜன ஆலயப்பிரவேச சட்டத்தை கண்டித்து மதுரையில் ஸநாதனிகளின் ஸத்யாகிரஹத்துக்கு ஆதரவு காட்டியும் உபன்யாஸம் செய்தார். மதுரையில் ஸநாதனிகள் நடத்தும் ஸத்யாக்ரஹத்திற்கு பூர்ண வெற்றியும் கீர்த்தியும் அடையும் பொருட்டு ஸ்வாமியைப்பிரார்த்திப்பதாகவும், ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை கண்டிப்பதாகவும் யுக்தத்தில் மா. த. மன்னருக்கு வெற்றி ஏற்படவேண்டுமென்று பிரார்த்திப்பதாகவும் மடாதிபதிகளும், ஆசாரியர்களும், ஆஸ்திக்களும் ஏகோபித்து பிரசார முதலானதுகளுக்கு பூர்ண உதவி புரிய முன் வரவேண்டுமென்றும் தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேற்றப்பட்டன. (ஒ. நி.)

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆறுகாண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்)
கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,
தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை
&
ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்

Printed by S, Kalyanasundram, at the Sri Janardhana Printing Works, Ltd., Kumbakonam,
Published by A. Gopaladesikachariar, and S. Kalyanasundram,

J 1536.



925 | 7 | 215306 | 591

REGD No. M. 2913. ARYADHARMAM Estd. 1915
TAMIL WEEKLY

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்யஃ பரிபாலயந்தாம் ந்யாய்யேன மார்கேண மஹீம் மஹீசாஃ ।
கோப்ராஹ்மணேப்யஃ சுபமஸ்து நித்யம் லோகாஸ்ஸமஸ்தாஸ்ஸுகினோ பவந்து ॥

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஹே ஐப்பசி-மீ 23 உ 1939 ஹே நவம்பர்-மீ 9உ | வ-44

மதுரை ஸத்யாக்ரஹம்

மன்னர்பிரானுக்கு அவஸரத் தந்தி.

"ஆலயங்களில் ஸம்புரோக்ஷணம் நடத்த அனுமதி தருக."

மதுரை ஆஸ்திக ஸத்யாக்ரஹ இயக்கத் தலைவர் ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யர் அவர்கள் மேற்கண்ட அவஸரத் தந்தியை சமுத சக்கரவர்த்தியான மாட்சிமை தங்கிய ஆறாவது ஜார்ஜ் அரசருக்கு 3-11-39 அனுப்பிவுள்ளார். அத்தந்தியில்:—

"ஸனாதனிகள் தங்கள் ராஜ பக்தியை மீண்டும் ஒரு முறை தங்களுக்கு வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறார்கள். காங்கிரஸ்காரர்கள் மந்திரி பதவிகளை ராஜிநாமா செய்ததைக் கேட்டு ஸந்தோஷமடைகிறோம். நாங்கள் 19—4—1918ஆம் மகாயுத்தத்தில் பிரிட்டன் வெற்றியடையவேண்டி பிரார்த்தனை செய்ததுபோல் இந்த மகாயுத்தத்திலும் பிரிட்டன் வெற்றி பெற வேண்டுமென்று ஆண்டவனை வழிபாடு செய்ய விரும்புகிறோம். சென்னை காங்கிரஸ் சர்க்கார் ஆலயங்களைத் தீட்டுப் படச் செய்துவிட்டார்கள், மதனதந்திரத்தில் பிரவேசம் செய்ததைக் கண்டிக்க வேண்டி மதுரை ஸனாதனிகளில் 300 பேர்கள் சென்ற 10 நாட்களாக உண்ணாவிரதம் அனுஷ்டித்து வருகிறார்கள். ஆலய சம்ரோக்ஷணம் செய்யும்படி எங்களது சக்கரவர்த்தியான மாட்சிமை தங்கிய தாங்களை வணங்கிக் கேட்டுக்கொள்ளுகிறோம்.

ஆலயங்களில் நாங்கள் வழிபாடு செய்ய வேண்டி எங்களுக்கு அனுமதி அளிக்கவேண்டும். தாங்கள் மாட்சிமை தங்கிய விக்டோரியா மகாராணியார் கொள்கைளைத் தொடர்ந்து அனுஷ்டிக்கும்படி வேண்டிக் கொள்கிறோம்"

(ஒப்பம்) ராவ்சாகேப் நடேசய்யர் (தலைவர் அ. இ. வ. ஸ. ச ங் க ம்) என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இத்தந்தியின் நகல்களை மே. த. வைஸ்ராய் மே. த. சென்னை கவர்னருக்கும், மே. த. கவர்னரின் ஆலோசனையாளர் மிஸ்டர் போக், மிஸ்டர் ஹாட், மிஸ்டர் ரூதர்போர்டு இவர்களுக்கும் அனுப்பப்பட்டிருக்கின்றன

ஸ்ரீரங்கம் தடியடி தர்பார்

பம்பாயில் கண்டனம்

பம்பாயில் கூடிய ஸனாதனிகளின் மாபெரும் கூட்டத்தில் ஸ்ரீரங்கம் ஆஸ்திக ஸ்திரீகளின்மீது போலீஸார் தடியடி செய்ததைக் கண்டித்து ஒரு தீர்மானம் ஏகமனதாய் நிறைவேறியது. தலைவர் ஸ்ரீ மஹாமோகன தாஸ் ராம்ஜி கூட்டத்தில் பேசும்பொழுது பிரிட்டிஷ் அரசாங்கம் இந்தியாவில் இவ்வளவு வருஷங்களாக இருந்தும் ஒரு நாளும் அவர்கள் ஸ்திரீகளின் மீது தடியடி பிரயோகம் செய்ததில்லை. ஆனால், காங்கிரஸ் சர்க்கார் ஆட்சியில் இந்த தடியடி சம்பவம் நடந்தது வருத்தத்தக்கது என்று குறிப்பிட்டார். (ஒரு கிருபர்.)

ஸ்ரீரங்கம் கோவில் வழக்கு வாபீஸ்.

ஸ்ரீரங்கம் ஸ்ரீரங்கநாதஸ்வாமி கோவிலில் சென்ற செப்டம்பர் மாதம் டாக்டர் ராஜன் விஜயம் செய்தபோது நடந்த கலவர விஷயமாக ஸ்ரீரங்கம் போலீஸார் 28 நபர்கள்மீது தொடர்ந்திருந்த வழக்கு சென்னை காங்கிரஸ் சர்க்கார் உத்தரவுப்படி போலீஸாரால் வாபீஸ் வாங்கிக் கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது. (ஒ.வி.)

மதுரை வ்யாக்ரஹம்.
ஸ்ரீ பூரி சங்கராசாரிய ஸ்வாமிகள் ஆசீர்வாதம்

மதுரையில் நடைபெற்றுவரும் ஆஸ்திகர்களின் ஸத்யாக்ரஹத்தை ஆசீர்வதித்து ஸ்ரீ பூரி கோவர்தன மடாதிபதி ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள் ராவ்சாகேப் ஸ்ரீ நடேசய்யருக்கு ஒரு ஸ்ரீமுகம் அனுப்பி இருக்கிறார்கள்.

"தர்மராஜ்யா" பாராட்டு

மதுரை அஹிம்ஸா யுத்தத்தைப் பாராட்டி "தர்மராஜ்யா" ஒரு குறிப்பு எழுதியுள்ளது. "ஹிந்து பக்தர்களின் பிரார்த்தனை ஒரு நாளும் வீண்போகாது" என்று குறிப்பிட்டிருக்கிறது.

சீர்திருத்த வாதிகளும் ஜாதி மதப்பிரிவுகளும்

(தே. ரா. சா.)

ஹிந்து மதத்தை ஒன்றுகவே கருதும் தத்வஞானிகள் உலகிலுள்ள பல மதங்களிலுமிருந்து வரும் பேதத்தை யறியாதவர்களல்ல. இப்பாரத தேசத்தில் யிருக்கும் மதங்களில் முக்யமானது இந்து மதம், முகம்மதிய மதம், கிருஸ்து மதம், பௌத்த மதம் ஆகும்.

இம்மதங்கள் ஒவ்வொன்றிலும் பல பேதங்களுமிருந்துதான் வருகின்றன. இஸ்லாமானவர்கள், எல்லோரும் ஒரே வகுப்பினராக நடந்துகொள்ள முடியாது. கிருஸ்தவர்களில் எல்லா வகுப்பினரும் ஒன்றுகவே போகச்சம்மதியார்கள். அதைப்போலவே ஹிந்துக்களிடையும் சில பேதங்களிருந்து வருகிறது.

ஹிந்து மதத்திலுள்ள வகுப்புகளில் கூட அந்தரமாகத் தனி வகுப்புகளுமிருக்கிறது. சுருங்கச் சொன்னல் சைவ, வைஷ்ணவ மதமென்றே சொல்லி விடலாம். முதலில் ஹிந்து மதம். அதற்குள்பட்டது பிராமணனென்ற வகுப்பு. இவ்வகுப்பில் பல பேதங்கள். இந்த பேதங்களில் சைவ, வைஷ்ணவ பிரிவினையொன்றிருக்கிறது.

இச்சைவ வைஷ்ணவ வகுப்பிலும் பல பேதங்களிருந்து வருகிறது. ஒவ்வொரு வகுப்பிலும் தன்தன் வகுப்பல்லாது, வேறு வகுப்பில் பெண்ணைக்கொடுப்பது, அல்லது மணப்பது, உணவைப்பெறுவது முதலியது தடைபட்டே யிருந்து வருகிறது. இவ்விஷயமெல்லாம் எவரும் சொல்ல இயலாது.

மேலும் வைஷ்ணவ மதத்தில் இவ்வாசாரங்கள் கடுமை. ஒரு பிற மதஸ்தரோ, பிற வகுப்பினரோ, தொட்ட பாத்திரம் முதலியதைக்கூட கேரில் தொடுவதில்லை. அப்பாத்திரத்தை நன்கு சுத்தி செய்யாதகையிலெடுக்கவே மாட்டார்கள். ஆனல், இக்காலத்தில் உத்யோகப்பற்றுள்ளவர்களிடம் இந்த முறை கொஞ்சம் குறைந்திருக்கலாம். இருந்தாலும் இக்கடும் ஆசாரமில்லையெனக்கூறவே முடியாது.

ஹிந்து மத உள் பேதங்களிலேயே பல வித பேதமிருக்க, இம்மதத்தை ஒரே மதமாகவும், ஒரே ஜாதியினராகவும் செய்வதுதான் இந்து தேசத்திற்கு சுபீக்ஷமென்றும், இதுவே ஸ்வராஜ்ய பிராப்திக்கு வழியென்றும் தீர்மானித்த நவீன வித்வத் சிரோமணிகள் அரசாங்க அதிகாரிகளாயிருந்து கொண்டும், தனியான மார்க்கத்திலிருந்து கொண்டும் சீர்திருத்த முன்வந்திருப்பது அபூர்வ செய்கையே.

ஒருவராலும் செய்யமுடியாத காரியத்தைச் செய்துவிடுவது போலெண்ணங்கொண்டு சில தலைவர்கள் "சாதியிரண்டொழிய வேறில்லை" என்ற திருப்பாட்டுக்குள்ள பொருளை நடை முறையில் கொண்டுவரத் தீர்மானித்துவிட்டார்கள் போதும்.

புராதனமாய் நடந்து வரும் ஜாதிக்கட்டுப்பாட்டின் முறையென்ற வரம்பை மதப் பெயரென்ற மழுங்கிய மண்வெட்டியால் தகர்த்தெறிவது சுலபமானதல்ல. ஹிந்துக்களெல்லோரும் ஒரே ஜாதியினராக வேண்டுமென்று எண்ணுவது ஆகாயத்தில் கோட்டை கட்டுவதேயாகும்.

மேலும் ஒதுக்கி விடப்பட்டிருக்கும் ஜாதிகளிடமே தேவாலயங்களை அர்ப்பணம் செய்துவிடின் தேவஸ்தான நிர்வாகமென்பது விசித்திரமாகத்தான் நடைபெறும். ஹரிஜன பிரவேசமான ஆலயத்தில் எவ்வித சிரஸானம் போட்டுப் பார்த்தாலும் ஆஸ்தீக புத்தியுள்ள ஹிந்துவுக்கு அவ்வாலயத்தில் நுழைவதற்கு மனம் துணிந்து விடவே விடாது.

நீண்டதார் என்ற உயர்தர நாமதேயம் பெற்று விளங்கி வரும் ஜாதியினர்களே பெரிய தேவஸ்தான நிர்வாகத்தை ஏற்றுக்கொண்டு விடுவார்களென்றும், இதர ஜாதி ஹிந்துக்கள் அலக்ஷியம் செய்தால் பாதகமில்லை யென்றும் எண்ணுவதா யிருந்தால் அது பகற் கனவே யாகும். ஹிந்துக்களின் ஒற்றுமைக்கு ஆலயப்பிரவேசமே காரணம். தேச முன்னேற்றத்திற்கு ஹிந்துக்களின் ஒற்றுமையே காரணமென்று நிணைக்கும் தலைவர்கள் இதற்கு மாறுதலான பலனையே இறுதியிலடைவது நிண்ணம். வட இந்தியாவில் ஹிந்து மஹாஸபைச் சண்டை. தென்னிந்தியாவில் ஹிந்துக்களுள் சச்சரவு.

சொந்த சொத்துக்கள் எதேஷ்டமாயுள்ள ஆலயங்களில் ஹரிஜனங்கள் பிரவேசித்தற்காக இதரஹிந்துக்கள் அவ்வாலயத்தை பஹிஷ்கரித்தாலும் குற்றமில்லையென சிலர் அபிப்பிராயமடையலாம். எவ்வளவு சொந்த ஐவேஜிபாகமுள்ள தேவாலயங்களும் தன் சொத்தைக்கொண்டே நிர்வாகம் செய்து கொள்ளமுடியாதவையென நாடோடி ஜனங்களும் அறிவர். அநேகமாக வெளி ஜனங்களைக் கொண்டேதான் தேவஸ்தான நிர்வாகம் நடந்துவருகிறது. தீண்டாதார் புகுந்த தேவாலயத்தை வேண்டாமென்றே ஒதுக்குவார்கள் இதரர்கள்.

சில நவீன வேதாந்திகள் எல்லா ஜனங்களும் எல்லா ஜாதியும் ஒன்று, எல்லா மதமும் ஒன்று, என்பதாக எதைப்பார்த்தாலும் ஒன்றுகவே எண்ணியிருப்பதாகச் சொல்லிக் கொண்டு ஜீவன் முக்தர்களைப்போல் நடித்துக்காட்டிவருகிறார்கள். அக்கருணைமூர்த்திகள் தீனர்களை ரக்ஷிக்கவேணுமென்றே நினைத்து, வழக்கமில்லாவழக்கம் செய்ய மாட்டோமென்று சொல்லும் உத்தம தீண்டாதார்களைக்கூட பிரியைக்கட்டியிழுத்துக் கொண்டுபோய், தேவாலயங்களில் தள்ளுகிறார்கள்.

இப்படி தீனதயாளுவர்க்கங்கள் சிறுபான்மையோர்களான தீண்டாதார்களை தேவாலயங்களுக்கு அழைத்துச் சென்று பெரும்பான்மையோர்களான இதரர்களைக் கண்ணும் கண்ணீருமாகக் கதறவடிக்கிறார்கள். இவ்வித உத்தம காரியத்திற்கு எவ்வளவோ சட்டங்கள். இராஜாங்க ஒத்தாசைகள் கடுமையாயிருக்கிறது.

இக்கருணைக்கடல்கள் ஒரு பக்கம் பலர் கதறுவது, ஒருபக்கம் சிலர் ஆனந்திப்பதை யுங்கண்டு பரமானந்தத்தில் மூழ்கட்டுமே. சில பிராமணர்களுக்கு தன் வகுப்பினிடம் துவேஷபுத்தி உதித்துவிட்டது. அதனல் தான் ஆலயப்பிரவேசமே இப்பிராமணர்களை அடக்கும் வழியென தீர்மானித்திருப்பதாகத்தெரிகிறது. பிராமணர்களுக்கு ஆலயத்திற்குப் போய்த்தான் கடவுளின் வந்தனை வழிப்பாடு செய்யவேணுமென்பதில்லை. இருக்குமிடத்திலேயே பகவானிடம் அன்பு செலுத்தலாம். பிராமணர்லாதார்களுக்கு குத்தான் ஹரிஜன ஆலயப்பிரவேசம் ஆபத்தாய்முடியும். இவ்வேஷியிலிறங்கும் தலைவர்களுக்கு பகவத்கீதையென்னும் ஹிந்துசாஸ்திரத்தில் நம்பிக்கை இருக்குதான் வருகிறது. பகவானுடைய உபதேசம் பிராம்மணர்களைத் தூண்புறுத்த வேண்டுமென காணப்படவில்லை. அத் தலைவர்களை யனுசரிக்கும் மக்கள் ஆலயத்தில் பஞ்சமர்களை விட்டால் பிராமண ஜாதியே பூண்டத்துப் போய்விடுமென்று குருட்டு யோசனை செய்வதை நிறுத்தும்படி செய்வது தலைவர்களின் கடமை. இதை விட்டு தரும்மும் நியாயமும் மில்லாத செய்கையிலிறங்கும் ஜனங்களுக்குக் கால் கொடுத்து நீங்கள் எதைவேண்டுமென்றாலும் செய்யுங்கள். எவனும் உங்களைச் சீண்டாமல் நான் பார்த்துக்கொள்ளுகிறேனென்று முறட்டாக்ஷை செய்வது தர்மம், சாந்தம், தயை, இவ்வரிய குணமுள்ளவர்களாகத் தன்னைச் சொல்லிக் கொள்ளும் தலைவர்களுக்கு உசிதமாகாது.

பசுவின் தோலால் மூடப்பட்டிருக்கும் வேங்கைப் புலியைக் கண்ட ஒருவன் பசுவென்றெண்ணி ஏமாறுவதுபோல் இக்காலத்தில் அதர்மத்தை தர்மமாகவே நன்கு பகுத்தறிவுள்ளவர்களும் எண்ணிவிடுகிறார்கள். இன்னும் சிலர் தீவிர எண்ணமடையலாம். தீண்டாதார்களும் பிராமணர்களின் பூணூலை எடுத்துப் போட்டுவிட்டு இருப்பிடத்தையும் கூட பரிவர்த்தனை செய்துவிடச் சட்டம் செய்துவிடலாமா வென்று கூட நினைத்துக் கொள்ளலாம். இவ்வித சீர்திருத்த யோசனை இரவைப் பகலாகவும் பகலை இரவாகவும் செய்த் அரசன் கதையாகவே முடியும் என்பதில் சக்தேகமென்ன?

பம்பாயில் பிரமாண்டமான லனுதனிகள் கூட்டம்

சென்னை ஆலயப் பாதுகாப்புச் சட்டம் கண்டிக்கப் பட்டது

சென்னை ஆலயப் பிரவேச பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டிக்க 26—10—39 மாலை பம்பாயில்மாதவ பாக்கில் ஒருசனதனிகளின் பெருங் கூட்டம் கூடிற்று. ஏராளமாய் ஆஸ்திகர்கள் கூடியிருந்தார்கள்.

ஸ்ரீ சேத் பகவான்தாஸ் மனமோகன்தாஸ் ராம்ஜி ஜே. பி. தலைமை வகித்தார்.

ஸ்ரீ மனுபாய் சி. பாண்டிய அ. இ. வ. ஸ். சங்கபம்பாய் கிளை காரியதரிசி) சென்னை ஆலயப்பிரவேச பாதுகாப்புச் சட்டத்தைக் கண்டித்து கீழ்க்கண்ட தீர்மானங்களைப் பிரேரேபிக்க அவைகள் ஏகமனதுடன் நிறைவேறின:—

நிறைவேறிய தீர்மானங்கள்.

"சென்னை ஆலயப் பாதுகாப்புச் சட்டத்தை இக் கூட்டம் வன்மையாகக் கண்டிக்கிறது. ஹிந்து சாஸ்திரங்களுக்கு விரோதமான இச் சட்டத்தை உடனே ரத்து செய்யும்படி அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ளுகிறது.

அ. இ. ஹிந்து மகாசபா, பிராமணசபா, இதர சனதன சபைகள் யாவும் ஒருங்கு சேர்ந்து ஹிந்து மதத்துக்கு ஏற்பட்டு வரும் இம்மாதிரி ஆபத்துகளை அடியுடன் எதிர்க்க வேண்டுமென்றும், மதராவில் கோ சம்ரக்ஷணத்திற்காகப் படுபட்டு வரும் அகில இந்திய கோபால சங்கத்தைப் பாராட்டுவதாகவும்" தீர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேற்றப் பட்டது. வந்தனோபசாரம் கூறிய பின் கூட்டம் கலைந்தது.

(ஒரு விசேஷ நிருபர்)

[மூகபஞ்சசதி "ஆர்யதர்மத்தில்" தொடர்ந்து வெளிவந்தது. ஆனல் ஆலயப்பிரவேச எதிர்ப்பைப்பற்றி செய்திகள் அதிக இடம் பெறவேண்டியிருந்ததால் சிறிது காலத்திற்கு மூகபஞ்சசதி வெளியிடமுடியவில்லை. இனி ஒவ்வொரு வாரமும் மூகபஞ்சசதி வெளிவரும்.

ஆசிரியர்.]

உ

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

மூக பஞ்ச சதி.

மந்தஸ்மித சதகம்.

(22—6—39. தொடர்ச்சி)

70. ச்ரோணீ சஞ்சலமேகலா முகரிதம் லீலாகதம் (மந்தரம் |
ப்ருவல்லீ சயனம் கடாக்ஷவலநம் மந்தாக்ஷவீக்ஷா (சணம் |
யத்வைதக்ய முதேந மன்மத ரிபும் ஸம்மோஹத் (யஞ்ஜலா ஸ்ரீ காமாக்ஷி !
த்வஸ்மிதாய வதம் தஸ்மை நமஸ்குர்மஹே॥

ஸ்ரீ காமக்ஷி ! காமாக்ஷியே, ச்ரோணிசஞ்சலமேகலாமுகரிதம்- இடுப்பிலுள்ள ஒட்டியாணத்தினது, தத்தக்காடு கடிபடுதம லீலா கதம் - அழகானகடையும், மந்தரம் - மனேக்ஞமான ப்ருவல்லீ சலனம் - புருவக்கொடியின் அசைவும், மந்தாக்ஷவீக்ஷா சணம் - வெட்கத்தோடுகூடிய பார்வையுள்ள கடாக்ஷவலநம் - கடைக் கண் சுற்றலும், யத்வைதக்யமுகேன - எந்தப்புன்சிரிப்பின் ஸாமார்த்தியமடியாக. மந்மதரிபும் - மன்மதசத்ருவான பரமசிவனை ஸஞ்ஜலாலம்மோஹயதி - சீக்கிரத்தில் மோஹிக்கும்படி செய்கிறதோ, தஸ்மை அப்படிப்பட்ட தவ ஸ்மிதாய - உனது புன்சிரிப்பின் பொருட்டு, நமஸ்குர்மஹே - நமஸ்கரிக்கின்றோம்.

71. ஸ்ரீ காமாக்ஷி! மனேக்ஞமந்தஹஸிதஜ்யோதிஷ் (ப்ரரோஹே தவ |
ஸ்மீதச்வேதிம ஸார்வபௌமவஸரணி ப்ராகல்ப்ய (மப்யேயுஷி |
சந்த்ரோயம் யுவராஜதாம் கலயதே சேடீகரம் (சந்த்ரிகா |
கங்கா ஸாச ஸுதாஜுஷீ ஸஹசரீ ஸாதர்ம்ய (மாலம்பதே॥

ஸ்ரீ காமாக்ஷி ! காமாக்ஷியே, தவ - உனது மனேக்ஞமந்தஹஸிதஜ்யோதிஷ்ப்ரரோஹே - அழகிய மந்தஹாஸ காந்தியின் அங்குரமானது, ஸ்மீதச்வேதிமஸார்வபௌம ஸரணிப்ராகல்ப்யம் - அடர்ந்த வெளுப்பாகிய ராஜ்யத்தின் அரசன்போன்ற காம்பீர்யத்தை, அப்யேயுஷி - அடைந்திருக்கும்போது, அயம் சந்த்ர: - இந்த சந்திரன், யுவராஜதாம் - இளவரசனுயிருக்கும் தன்மையை, கலயதே - அடைகிறான், சந்த்ரிகா - நிலாவானது, சேடீகரம் - வேலைக்காரியின் நிலைமையை அடைகிறது, ஸுதாஜுஷீ - அம்ருத ப்ரவாஹமுள்ள, ஸாகங்கா ச - அந்த கங்யையும், ஸஹசரீஸாதர்ம்யம் - தோழிபாயிருக்கும் ஸமதையை - ஆலம்பதே - அடைகிறது.

72. ஜ்யோத்ஸ்நா கிம் தநுதே பலம் தநுமதா (மௌஷ்ண்ய ப்ரசாந்திம் விநா |
த்வன்மந்தஸ்மிதரோசிஷா தநுமதாம் காமாக்ஷி (ரோசிஷ்ணுநா |
ஸந்தாபோபி நிவார்யதே நவவச: ப்ராகர்ய (மங்கூர்யதே |
லௌந்தர்யம் பரிபூர்யதே ஜகதி வா கீர்த்திச்ச (வஞ்சார்யதே॥

காமாக்ஷி - காமாக்ஷியே, ஜ்யோத்ஸ்ந - நிலாவானது, தநுமதாம் - மனிதர்களுக்கு, ஔஷண்யப்ரசாந்திம் விநா - உஷ்ணத்தைக்குறைப்பதைத்தவிர, கிம்பலம் - வேறு என்ன பலனுள்ளது? த்வன்மந்தஸ்மிதரோசிஷா - உனது புன்சிரிப்புக் காந்தியால், ஸந்தாபோபி - ஸந்தாபமும், நிவார்யதே - நிவிருத்திக்கப்படுகிறது. நவவச: ப்ராகர்யம் - புதிய பேச்சும் வன்மையும், அங்கூர்யதே - ஆவிர்ப்பவிக்கிறது, லௌந்தர்யம் - அழகும், பரிபூர்யதே - நிரம்பப்படுகிறது, ஸா கீர்த்திச்ச - அந்தக் கீர்த்தியும், ஜகதி - உலகில், வஞ்சார்யதே - பரப்பப்படுகிறது.

73. வைமல்யம் குமுதச்ரியாம் ஹிமருச: காந்த்யைவ (வஸ்தக்ஷதே |
ஜ்யோத்ஸ்ந ரோசிரபி ப்ரதோஷஸமயம் (ப்ராப்யைவ ஸம்பத்யதே |
ஸ்வச்சத்வம் நவமௌக்திகஸ்ய பரமம் ஸ்மிஸ் (காரதோத்ருச்யதே |
காமாக்ஷ்யா: ஸ்மித தீதிதே: விசதிமா நைவாந்தி (கோ பாவதே॥

குமுதச்ரியாம் - ஆம்பலகளுக்கு, வைமல்யம் - வெண்மையானது, ஹிமருச: - சந்திரனுடைய, காந்த்யைவ - காந்தியாலேயே, ஸம்தக்ஷதே - அதிகரிக்கிறது, ஜ்யோத்ஸ்நாரோசிரபி - நிலாவின் காந்தியும், ப்ரதோஷஸமயம்ப்ராப்யைவ - ஸாயங்காலவேளையை அடைந்தேதான், ஸம்பத்யதே - உண்டாகிறது, நவமௌக்திகஸ்ய - புதிய முத்துக்கு, பரமம் ஸ்வச்சத்வம் - உயர்ந்த வெண்மையும், ஸ்மிஸ்காரத: - பாடம் செய்வதினலேயே, த்ருச்யதே - காணப்படுகிறது. காமாக்ஷ்யா: - காமாக்ஷியின், ஸ்மித தீதே: - புன்சிரிப்பினுடைய, விசதிமா - வெண்மையானது, நைவர்க்க: - ஸ்வபாவத்தில் ஏற்பட்டதாக, பாஸதே - விளங்குகிறது.

74. ப்ராகர்யம் பரமேச்வர ப்ரணயிநி ! த்வன்மந்த (ஹாஸ ச்ரிய: |
ஸ்ரீ காமாக்ஷி ! மமக்ஷிணேது மமதா வைசக்ஷணீ (மக்ஷயாம் |
யத்பீத்யேவ நிலீயதே ஹிமகரோ மேகோதரே (சுக்திகா |
கர்ப்பே மௌக்திகமண்டலீ ச வஸதேவோ மத்யே (ம்ருணாளீ ச வா॥

பரமேச்வரப்ரணயிநி ! பரமசிவன் பத்நியான, ஸ்ரீகாமாக்ஷி! காமாக்ஷியே, த்வன்மந்தஹாஸச்ரிய: - உனது புன்சிரிப்புக்காந்தியின், ப்ராகர்யம் - வெண்மையானது, மம - என்னுடைய, அக்ஷயாம் - அழியாமலிருக்கிற, மமதாவைசக்ஷணீம் - அஹங்காரத்தை, க்ஷிணேது - நிவர்த்தி செய்யட்டும், யத்பீத்யேவ - எந்த புன்சிரிப்பினிடம் பயத்தால், ஹிமகர: - சந்திரன், மேகோதரே - மேகங்களின் மத்தியிலும், மௌக்திகமண்டலீ - முத்துக்களின் கூட்டமானது, சுக்திகாகர்ப்பே - முத்துச்சிப்பிகளின் மத்தியிலும், ஸா ம்ருணாளீ - அந்த தாமரைத்தண்டும், ஸரஸோமத்யே - குளத்தின் மத்தியிலும், நிலீயதே - ஒளிந்துகொள்ளுகிறதோ.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஹ ஐப்பசி-மீ 23உ

மீண்டும் ராஜீய நெருக்கடி

காங்கிரஸ்காரர்களால் உண்டுபண்ணப்பட்டுள்ள ராஜீய நெருக்கடியைத் தீர்த்து வைத்து அமைதியை ஏற்படுத்த கனம் வைஸ்ராய் அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சி பலிக்காமல் போய் ராஜீய நிலைமையில் மீண்டும் கெடுதல் ஏற்பட்டிருக்கிறது. இவ்விஷயமாக வைஸ்ராய் ரேடியோ மூலம் வெளியிட்ட அறிக்கையில் ஆயிரோ கூறியிருப்பதுடன், தமது முயற்சி பலிக்காமற்போனதற்கு வருத்தமும் வெளியிட்டிருக்கிறார்.

மந்திரிகளின் ராஜிகாமா மூலம் காங்கிரஸானது சண்டை தொடர்ந்திருப்பதையும் கனம் வைஸ்ராய் பொருள்படுத்தாமல் தமது நல்லெண்ணத்திற்கும், கண்யத்திற்கும், கடமைக்கு மேற்படி மற்படி காங்கிரஸ்காரர்களுடன் ஸமரஸப் பேச்சைத் துவக்கினர். அப்படியிருந்தும் காங்கிரஸானது நல்ல சந்தர்ப்பத்தை நழுவ விட்டு விட்டது. கனம் வைஸ்ராய் வெறும் மேல் வேஷத்திற்கு மாத்திரமன்றி உள்ளூர நல் உணர்ச்சியுடனுமே இதில் இறங்கினரென்பது அவரது அறிக்கையை வாசிப்பவர் யாவரும் ஒப்பக்கூடியது.

இந்த ஸமரஸ முடிவுக்கு முக்ய காரணமாயிருந்தது சிறுபான்மையோர் பிரச்சனையே என்று தெரிகிறது. இந்தியாவில் மாகாண ஸ்வய ஆசி எற்பட்ட பிறகு, காங்கிரஸ் மந்திரிகளின் பலவித காரியங்களினால் சிறுபான்மை ஸமூஹத்தினரின் பாத்யங்களுக்குப் போதிய பந்தோபஸ்து இல்லையென்பது தெளிவாகியது. இந்த விவாதம் இப்போது உச்சஸ்தானத்தை அடைந்து விட்டது. ஸிம்லாவில் வைஸ்ராய் பற்பல ஸமூஹத்தினரையும் அழைத்துப்பேசியதிலிருந்து இந்த விவாதம் ஊர்ஜிதப்பட்டு நிற்கிறது. ஆகவே, சிறுபான்மை ஸமூஹத்தினருக்கு மெஜாரிடிக் கக்ஷியாரால் நீங்கு தோமல், தக்க பந்தோபஸ்து செய்து கொடுக்காதவரையில், ஜனநாயக முறையில் இந்தியாவில் ஸ்வாதந்திரியத்தை விரிவுபடுத்துவது கூடாதென்று பலத்த ஆக்ஷேபம் எற்பட்டது.

ஆதலால் தேசத்திற்கு அதிக சுதந்திரம் எற்படுவதற்கு முன்னே வைஸ்ராய் அவர்கள், அதற்குப் பூர்வாங்கமாகச் சிறுபான்மை ஸமூக விஷயமாக ஒரு சமரஸ முடிவு செய்துவிட விரும்பினர். ஆயினும் இவ்விஷயத்தில் காங்கிரஸ் கட்டுப்படாத மனப்பான்மையை காட்டியிருக்கிறது. சிறுபான்மை சமூக விஷயம்போன்ற சிறிய அம்சங்களெல்லாம், நமக்குள் நாமாகவே சமரஸமாகத் தீர்த்துக்கொள்ள வேண்டிய விஷயமென்றும், தேசத்திலுள்ள சகல வகுப்பாருக்கும் பொதுவாகவுள்ள ராஜீய சுதந்திர விஷயத்திற்கு சிறு பான்மை விஷயம் குறுக்காக நிற்பதாய் ஒப்புக்கொள்ள முடியாதென்றும் காங்கிரஸ் சொல்லிவிட்டது. ஆதலால் இந்தியாவிற்கு குடியேற்ற நாட்டந்தஸ்துபோன்ற கீர்திருத்தம் வழங்கும் விஷயமாக பிரிட்டனின் நோக்கம் என்ன தென்பதை முதலில் வெளியிட்டாலெழிய, வகுப்பு சமரஸ விஷயத்தில் விவாதிக்கத் தாங்கள் தயாராக இல்லையென்றும் காங்கிரஸ் தலைவர்கள் கூறிவிட்டனர். சிறுபான்மையோரோ வென்றால், தங்கள் உரிமைக்கு பாதுகாப்புச் செய்து கொடாதவரையில், ஒரு அணுவளவுகூட ராஜீயத் திருத்தம் செய்ய சம்மதிக்க முடியாதெனச் சொல்லி விட்டனர். ஆதலால் வைஸ்ராய் செய்த சமரஸ முயற்சி பலிக்காமல் முறிந்து போய் விட்டது.

இவ்விஷயத்தில் காங்கிரஸ்காரர் நடந்து கொண்ட மாதிரியை ராஜீய அறிவாளிகள் மெச்சமுடியாது. இப்போது நடந்த மாகாண ஸ்வய ஆசி உதாஹரணத்திலிருந்து சிறு பான்மை ஸமூஹத்தினர் மிகுந்த பீதியடைந்திருக்கின்றனரென்பது மறுக்க முடியாத விஷயம். மெஜாரிடி ஓட்டு பலமிருப்பதைக் கொண்டு மிகுந்த புரட்சிகரமான மாறுதல்களையும் செய்யத்துணிந்து, பிரஜைகளின் உரிமைகளை காங்கிரஸ் வாதிகள் பறிக்க வில்லையா? ஹிந்துக்களுள்ளேயே ஜமீந்தார்கள் நிலச்சுவான்தார்கள், மதாபிமானிகள், தாழ்ந்த வகுப்பார்போன்ற பற்பல வகையார்களின் பாத்யங்களை வெகு லேசாக மதித்தும் பயமுறுத்தியும் மாகாணச் சட்ட ஸபைகளில் காரியங்கள் நடத்திருக்கினறன வென்பதை மறுக்க முடியுமா?

காங்கிரஸ்காரர்கள் இன்னும் அதிகஸ்வாதந்திரியம் வாங்கிக்காண்டு தாங்களே நிர்வாஹத்திலுமர்ந்து தங்களிஷ்டப்படி யெல்லாம் சிறுபான்மையோரின் உரிமைகளை அழிக்க கூடுமென்ற சங்கையும் ப்பமும் பலவாருக இருக்கிறது.

மத்ய கவர்ன்மெண்டில் காங்கிரஸ்காரரை அதிகாரத்தில் உட்கார வைத்து விட்டால் ஸ்தேச அரசர்களின் நிலைமை யென்ன வாகும்? தங்களுடைய பிரபல எதிரிகளாகிய அரசர்களை காங்கிரஸ்காரர்கள் கீழே இறக்கி அழிக்க முயற்சிக்கமாட்டார்களா? இப்போதே ஸ்தேச அரசர்களை வெளியிலிருந்து ஆட்டிவைக்க முயற்சிக்கும் காங்கிரஸ்காரர்கள் அதிகாரம் கிடைத்தால் எங்ஙனம் விடுவார்களா?

சென்னை மந்திரிகள், ஆங்கிலோ ஸமூஹத்தினரின் உரிமைகளை அழித்து வருவதும் உலகமறிந்த விஷயமல்லவா? ஆதலால் இத்தகைய விஷயங்களுக்கு ஓர் தக்க பாதுகாப்பு எற்படாத வரையில் ஜனநாயகத்தை விரிவு படுத்துவது அபாயமென்றே நினைக்க வேண்டியிருக்கிறது.

இத்தகைய நிலைமையை திருஷ்டித்துக் கொண்டது காங்கிரஸ்காரர்களேயன்றே? மந்திரிகள் சிறுபான்மை ஸமூஹத்தினரை ஒழுங்காக நடத்தி, அவர்களுடைய நம்பிக்கையைப் பெற்றிருந்தால், இந்த நிலைமை எற்பட்டிருக்காதல்லவா? நீதி வரம்புகளை மீறி, பிரஜைகளை உபத்ரவிக்க முயன்ற மந்திரிகளே, தற்போது அதிக ஸ்வாதந்திரியம் எற்படத் தடை செய்தவராகிறார்கள். சிறுபான்மை ஸமூஹத்தினரை இதற்கு ஜவாப்தாரிகளாக்க முடியாது.

மதுரை ஸத்யாக்ரஹம்

மூன்றாவது வாரம் ஆரம்பம்

ராவ்ஸாகேப்.ஸ்ரீநடேசய்யர் அறிக்கை

மதுரை அஹிம்ஸா யுத்தம் ஆரம்பித்து 15 காளாகிறது. 5-11-39 தேதி மதுரை சரித்திரத்தில் ஒரு புனித நாள். அன்று 400 புருஷர்களும், ஸ்திரீகளும், சிறுவர்களும், சிறுமிகளும் இரத்தம் சிந்தாத யுத்தத்தில் நியாகம் செய்ய வேண்டி முன் வந்தார்கள். அவர்கள் யாவரும் பிரார்த்தனையும், உண்ணாவிரதமும் அனுஷ்டித்தது பாராட்டத்தக்கது.

இந்த சத்யாக்ரஹம் இந்தியாவின் நானா பாகங்களில் பரவி வருகிறது. நாகப்பூர், புனு, பம்பாய், டெல்லி, காஷி, கல்கத்தா முதலிய விடங்களிலுள்ள ஆங்கிலர்களுக்கு எட்டியிருப்பது குறிப்பிடவேண்டிய அவசியமாகும். லண்டனுக்கும் இந்த சத் இயக்கம் எட்டியிருக்கிறது.

இங்கிலாந்திலிருக்கும் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் பிரதம மந்திரி, இந்தியா மந்திரி, வைசிராய் முதலியவர்களின் மனதை இந்த இயக்கம் நிறைய மாற்றியிருக்கிறது. ஆயுப்பிரவேச எதிர்ப்புக் கிளர்ச்சியின் பலனுகத்தான் சென்னை, ஐக்ய மாகாணம் பிஹார், பம்பாய் முதலியவிடங்களிலிருந்த காங்கிரஸ் மந்திரி சபைகள் ராஜீனாமா செய்யும்படி ஏற்பட்டது. மேற் கூறிய மாகாணங்களிலிருக்கும் கவர்னர்கள் இந்த காங்கிரஸ் மந்திரிகளின் ராஜீனாமாவை அங்கீகரிக்கும்படியும் செய்திருக்கிறது. இப்பொழுது மந்திரிகளில்லை. இனிமேலாவது இவர்கள் தங்கள் தவறை அறிந்து கொள்வார்களாக!

ராஜன், ராஜாஜி அஜ்ஞாதவாஸம்

இனி மந்திரியாக வரமாட்டார்களாம்

ராஜனின் கூற்று

நவம்பர் மீ 3 உயன்று திருச்சியில் இ. ஆர். உயர்தரக் பாடசாலையில் நடந்த கல்வி வரக்கூட்டத்தில் டாக்டர் ராஜன் பேசியபோது குறிப்பிட்டதாவது:—

"சென்னை மந்திரி ஸபையின் கூட்டம் கடையாக நடந்த போது ஸ்ரீமான் ராஜகோபாலாசாரியார் மந்திரிகளிடம் பேசுகையில், காங்கிரஸானது மறுபடியும் மந்திரி பதவியை ஏற்க முடிவு செய்தாலும் கூட, தம்மை (ராஜகோபாலாசாரியாரை) மீண்டும் தலைவராக இருக்கும்படி நிர்ப்பந்திக்க வேண்டாமென்றும் தாம் பொது விஷயங்களிலிருந்து ஓய்வு எடுத்துக் கொள்ள போவதாயும் ஸ்ரீ ஆர். சொன்னார். என் அவர் அப்படி விலகப் போவதாகச்சொன்னாரோ தெரியவில்லை. ஸ்ரீ ஆர். மீண்டும் மந்திரியாக வந்தாலும், வராவிட்டாலும் என்னை (ராஜனை) பற்றிய விஷயம் நிச்சயம். அதாவது மந்திரி பதவிப் பொறுப்பு இனி ஏற்பதில்லையென்று முடிவு செய்து நிருச்சி வந்த பிறகு இந்த எண்ணத்தை ஊர்ஜிதப்படுத்திக் கொண்டு விட்டேன். இனி நான் ஒரு பொறுப்பும் ஏற்க முடியாதென்று ராஜகோபாலாசாரியருக்கு கடிதம் எழுதித் தெரிவித்துவிட்டேன்"

மந்திரிகளுக்கு நமது பிரிவுபசார மொழிகள்

(தேவதத்தன் எழுதுவது)

ஆஹா! என்ன காலம்? என்ன மாறுதல்? என்ன நிலர் ஸம்பவம்? கனவில் கூட நினைக்கவில்லையே? 27 மாத வாழ்வு தானு? இன்னும் ஒரு தலைமுறைக்கு காங்கிரஸ் நிர்வாஹம் நடக்குமென்று மார் தட்டினார்களே! ஒரு ஐந்து வருஷமாவது நிலைத்திருக்கக்கூடாதா? என்ன பரிதாப முடிவு? நேற்று மந்திரியாக இருந்து அதிகார அட்டஹாஸம் செய்தவர்கள், இன்று தெருவில் போகும் ஒரு நாடோடி மனிதராகி விட்டனரே?

ஆம்! தெய்வம் ஒன்று இருக்கிறதல்லவா? "மனிதன் ஒன்று நினைக்க, தாமொன்று செய்வேன்" என்றல்லவோ அத்தெய்வம் கூறுகிறது. அது சமயம் பார்த்து வேலை செய்தது போலும்?

ராஜாஜியே இதைச் சொல்லி விட்டாரே? தெய்வமொன்றிருப்பதாயும், அதை மீறி எதுவும் நடக்காதென்றும், தமது ராஜிநாமாவும் தெய்வச் செய்கையால் ஏற்பட்டதென்றும் வெங்கிடஸாமி கிருஷ்ணஸ்வாமி ராஜாஜி சொன்னர். மந்திரி பதவி இழந்த பிறகாவது தெய்வமிருப்பது அவருக்கு ஞாபக்ம் வந்தது விசேஷமல்லவா?

ஆனல் இப்பாழும் தெய்வம் இப்படிச் செய்யலாமா? நல்ல ஸந்தர்ப்பத்தில் கெள்ரவமாக இவர்களை விலக்கக்கூடாதா? ஸுப்பேபோர் கண் முன் சாகும் வரையில் விலகமாட்டார்களா? நல்ல மந்திரி ஆஜியேற்படாதா? என்று எங்கும் ஒரே பிரார்த்தனை நடக்கையில்- ராஜாக்கள் தவம் புரிகையில் இப்படி நேர்க்கதே! "ஆலயங்களை அழித்த பாவிகள் தொலைந்தார்கள்" என்று அவச்சொல்லுக்கிடையிலா இப்படி நேர வேண்டும்?

எங்கும் ஒரே மகிழ்ச்சி. எங்கும் குதுகலம்! மதுரை வாலிகள் தமது ராஜீகாமா வால் மிகுந்த மகிழ்ச்சியடைவார்களென்று ராஜாஜி உணர்ந்து ஏமாற்றத்துடன் வருத்த மடைந்து பேசிவிட்டார். தமது எதிராளிகள் முன்பு தனக்கு ஏற்பட்ட கதியை அவரே உணரும்படியாயிற்றே!!

மந்திரிகள் திரும்பிவரமாட்டார்களா? அதற்குள் என்ன இவ்வளவு ஸந்தோஷம், என்று கேட்கலாம். ராஜீய நிலைமையை தீர்க்கதிருஷ்டியுடன் யோஜித்தே நாம் பேசுகிறோம். காங்கிரஸ் கனவு பலிக்கப் போகிறதா? ஒருநாளுமில்லை. எதிர்கால மெப்படியாயினும் இன்று விலகிப்போகும் மந்திரிகளுக்கு பிரிவுபசாரத்தை நடத்திவிட வேண்டியதுதான். அதிலும் முக்யமாக, ராஜாஜியும், ராஜனும் இனி ஒருக்காலும் மந்திரியாக வரப்போவதில்லையென்று வைராக்யம் கொண்டுவிட்டார்கள். அவர்களிருவரும் அஞ்ஞாதவாஸம் செய்யப் போகிறார்களாம்!

இந்த இருவருக்கு மட்டும் குறிப்பாக நமது பிரிவுபசாரத்தை நடத்தவேண்டாமா? அவர்களை மறப்பது நன்றிகெட்ட செய்கையல்லவா?

* * * * *

நேயர்களே! சென்ற நான்கு மாதங்களில் ராஜன், ராஜாஜி நடத்திய லீலைகளை, இப்போது ஒரு தடவை நினைத்துப்பாருங்கள். உங்கள் உடல் நடுங்கும். மனம் குமுறும், கல்லும் கரையும், வஜ்ரமும் உடைந்துபோகும். நாம் எவ்வளவு மற்கடித்தாலும் அத்தீவினைகள் மறையா. ஆஹா! இந்த ஒன்றே முக்கால் நாழி வாழ்விற்குள் இவர்கள் புரிந்த அட்டூழியங்கள் தான் என்ன? பரம்பரை பரம்பரையாக ராஜவம்சத்தில் வந்த சாஸ்வத அர்சகர்களாகவே தங்களை நினைத்துக்கொண்டு விட்டனர். என்ன அதிகாரத்திமிர்? என்ன அலக்ஷ்யம்? என்ன மமகாரம்? எல்லாம் ஆண்டவனாகவே இருந்தது. எவ்வளவு பெரிய அத்தஸ்திலுள்ள பெரியோரும், தாழ்ந்தோரும் அலக்ஷ்யம் செய்யப்பட்டனர்!

மதுரையில் திருட்டுத்தனமாக ஆலயப்பிரவேசம் செய்ய மந்திரிகள் வேஷம்செய்தனர். சாதுக்களான ஸனதனிகள் ரத்த வெள்ளம் பெருகும்படி இவர் முன்னிலையில் அடிக்கப்பட்டனர். அடிபட்டு உயிருக்குத் துடிப்பவர்களிடம் அநுதாபம் காட்டாமல் கல் நெஞ்சம் படைத்துக் கேலிசெய்தார். ஆலயத்தை அழிக்கச் சட்டமியற்றினர். லக்ஷக் கணக்கான ஆஸ்திகர்களுடையவும் மதாசாரியர்களுடையவும் நியாயவாதத்தை அதிகாரத்திமிரால் உதறித் தள்ளிப் பெருமையாகப் பேசினர். இத்தகையவரோ மந்திரியாயிருப்பது? இத்தகையவர்களையிலோ, பிரஜைகளின் உரிமைகளும், தேஷமங்களும் பந்தோபஸ்தாயிருப்பது? தெய்வத்திற்கே ஸஹிக்கவில்லை போலும்? டாக்டர் ராஜனின் ஆலயப்பிரவேசச் சுற்றுப் பிரயாணத்தில் நடந்த அட்டூழியங்களை வர்ணிக்க வேண்டுமா?

இனம்பினர் வீரர். டிரஸ்டிகளைக் கண்டு ஆலயப்பிரவேசம் செய்யாவிடில் தொலைத்து விடுவேன் என்று விரட்டினர். தன் கை சுழற்சி செய்தார். பொதுஜன ஆதரவு இருப்பதாகப் பொய் கூறும்படி ஏற்பாடு நடந்தது. சிதம்பரத்தில் பிட்டர்களை நிட்டினர். ஸனதன ஸ்திரீகளைப் பரிஹஸித்தார். மடாதிபதிகளையும் ஆசார்யர்களையும், பண்டிதர்களையும், ஆஸ்திகர்களையும் அவமதித்தார். ஸ்ரீ ரங்கத்தில் ஸாத்விகளான ஸ்திரீகளைப் படுத்திய பாடு மறக்கக்கூடியதா? கோவில்களையெல்லாம் ஒரு நொடியில் தீண்டாதார் மயமாகச் செய்து விட்டு மறுகார்யம் பார்ப்பேன் என்றாரே? அப்பப்ப! அவர் சொல்லியகுரூரமொழிகளையும், செய்த தீங்குகளையும் அஹம்பாவம் நிறைந்த அதிகாரத்திமிறையும் நினைத்தால் உடல் நடுக்கமெடுக்காதவரிருக்கமாட்டார். இந்தக் கொடுமை தாங்காமலல்லோ ஸ்ரீ வி. வி. ஸ்ரீ அய்யங்கார் போன்ற பெரியோர்கள் காங்கிரஸ் மந்திரி ஆகி ஒழியும் காலம் சீக்கிரத்தில் வர வேண்டுமென்று வேண்டினர்?

ஐயா! டாக்டர் ராஜனே! ஸனதனிகளை நசுக்கி விடுவதாக நீர் சொன்னீரே? "கவர்னரோ, வைஸ்ராயோ, இங்கிலாந்து மந்திரியோ, என் பக்கத்திலிருக்கிறார்கள். ஸனதனிகள் ஒரிட்டும் பொர்சுக்குப்போக முடியாது. கப்பலேறி லண்டனுக்குப் போவதாயிருந்தாலும், நடுவில் ஜர்மன் ஸுங்க வெடிகளால் மாண்டு போகவேண்டியதுதான்" என்று பயமுறுத்தினீரே! இன்று உமது கதியென்ன? நிலைமை யென்ன? கவர்னரோ, வைஸ்ராயோ, இன்று உம் வார்த்தைக்கு மதிப்பு வைப்பாரா? உம்மைச் சிந்துவார்களா? திருச்சி ரோட்டில் போகும் ஒரு ஸாதாரணக் கூலி கூட உமது வார்த்தையை இன்று மதிப்பானு? ஐயோ! பாவம்! உம்மைப் போல் அதிகார பதவியிலிருக்கும் ஒரு வெள்ளைக்காரன் இப்படி யெல்லாம் தாறுமாறுப் பேசுவானு? அவர்களிடம் நீர் ராஜதந்திரம் கற்கவேண்டாமா? அற்பத்திற்கு பலஷ வந்தால் அர்த்தராத்ரியில் குடைபிடிக்கும்" என்ற மொழியை நிஜமாக்கி விட்டீர்களே!

மந்திரி பதவி மிக பொறுப்பு வாய்ந்தது. நீண்டகால அநுபவமும், ராஜதந்திரமும் அடைந்த ராஜதந்திரிகளாலேயே நிர்வாஹிக்கப்படவேண்டியது. நீதி சாஸ்திரம், அர்த்த சாஸ்திரங்களில் நிபுணர்களாயிருக்கவேண்டும். உங்களுக்கு இதெல்லாம் சூன்ய மல்லவா? காச்சந்தஹஸ்தகாரும் காங்கிரஸ் கூட்டத்தில் மனம்போனபடி யெல்லாம் பேசி விட்டால் போதுமா? ஹிந்துக்களை வந்து விடலாமா? மந்திரிகளின் பொறுப்பைப் பற்றி மனு கூறுவதை கவனியுங்கள் மந்திரி பதவி வஹிக்க நம்மவர்கள் தகுதியற்றவர்களென்ற அவச்சொல்லை நீங்கள் வாங்கி வைத்தது தான் மிச்சம்! இனி நீங்கள் முடிவு செய்தபடி அஜ்ஞாத வாஸத்திலேயே காலம் கழியுங்கள்! பகவான் உங்களுக்கு இனி நல்வழி காட்டுவார்.

ஐயா! ஆலஸ்யமே! பூவராஹமே! சுப்பையாவே! இனி நீங்கள் என்ன செய்வீர்கள்? உங்கள் மந்திரிகள் போய் விட்டார்களே? அவர்களுடைய அதிகாரப்பின் பலத்தைக் கொண்டு, நீங்கள் சக்திக்கரைக் கூட்டங்களில், மதங்களையும், மதசாரியர்களையும், தர்மங்களையும், ஸாதுக்களையும், வாயில் வந்தபடி யெல்லாம் பேசிக் கைதட்டி சிரித்தது போல் இனி நடக்குமா? கவர்னர் சும்மாயிருப்பாரா? உங்கள் வாழ்வு அற்பமென்பதை உணர்ந்தீர்களா?

தினமணியே! இனி உனக்குத் திண்டாட்டம் தான்! ஆனந்த விகடனே! உனது ஆனந்த மெல்லாம் ஒப்பாரியாக முடிந்து விட்டதே! இனி நீங்கள் யார்ரைப் புகழ்ந்து பாடிப்பிழைப்பது? வேறு புகழ்ந்து பாடிப்பிழைப்பது? வேறு புதிய ஆள்பிடியுங்கள். போய்வருகிறேன்.

ஆஸ்திக ஸ்திரீகள் கூட்டம்

குடந்தை

குடந்தையில் 22உ செவ்வாய் கிழமை மாலை 6-30 மணிக்கு ஆஸ்திக ஸ்திரீகள் கூட்டம் ரங்க விலாஸ் மண்டபத்தில் நடைபெற்றது. பலத்த மழையிலும் ஸ்திரீகள் கூடியிருந்தது விசேஷமானது. வி. ஜம்பகதம்மாள் கலைமை வஹித்து தற்கால நிலைமையை மிகவும் அழகாக விளக்கிக் கூறினர். ஸ்ரீமதி கோமளவல்லியம்மாள் பிரேரிக்க ஸ்ரீ. கே. கோமளத்தம்மாள் முதலியவர்கள் ஆதரித்து பேச. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டன. மதசுயையில் கே. ஆர், வி. அய்யர் ஸம்ஸாரம் காலம் சென்றதை குறித்து வருந்துவதாகவும், அவருடைய குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அநுதாபத்தை தெரிவிப்பதாகவும் வைஸ்ராய் இனி எந்த விஷயமான அரசியல் மாறுதல் செய்வதாகவிருந்தாலும் ஆஸ்திகர்களையும் கலந்து கொள்ளவேண்டுமென்றும், இப்பொழுதுள்ள மாகாண சுயாசுயை ரத்து செய்யவேண்டுமென்றும், காங்கியோ மற்ற காங்கிரஸ்காரர்களோ ஹிந்து மத நம்பிக்கையில்லாதவர்களாததால் அவர்கள் பேசும் எந்த ராஜீயும் எற்கக் கூடியதல்ல வென்றும், மதுரை ஸாதகிகள் ஸத்தியாக்ரஹத்தை பூர்ணமாக ஆதரித்து அநுதாபம் தெரிவிப்பதாகவும், தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. ஸ்ரீமதி பவானிகோபாலய்யர் மிகவும் அழகாக ஸ்திரீகள் கடமையை எடுத்துக் கூறினர்.

வாரக்குறிப்புகள்

ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா.

இரண்டு பலன்கள்! மதுரை மீனாக்ஷி ஆலயத்தை அசுத்தப்படுத்தியவுடன் மேனேட்டில் சண்டை கோர்த்தது. பழனி கோவிலே பாழாக்கியவுடன் காங்கிரஸ் மந்திரி பதவியை இழக்க கோர்த்தது. இன்னும் திருந்தாமென. இது ஓர் எச்சரிக்கையாகும். பாடிஷாவும் ஜயிக்கும். ஈசுவரனையும் பதவி ஏறகலாம். ஆனால் எச்சரிக்கையை கவனித்து மறுபடியும் தர்மார்க்கத்திலிறங்கக் கூடாது என்பது நமது கோறிக்கை.

நவராத்ரியில் எங்கு சிறப்பு? மதுரை ஆலயம் பாழடைந்து இருள் சூழ்ந்திருப்பது உலகப்ரஸித்தம். புதிதாக ஸ்ரீமான் நடேசய்யர் ப்ரதிஷ்டை செய்தவிட்டதில் நவராத்ரியில் ஸ்ரீ மீனாக்ஷி தாண்டவமாடினாள். புதிய தர்மம் ஒன்றும் செய்யாவிடினும் உள்ள தர்மத்தை அழிக்க காங்கிரஸ் இவ்வளவு பிடிவாதம் செய்திருக்க வேண்டாம். நாம் கூறியபடி சண்டாளரும் மற்றவரும் போவதில்லை.

ஹிந்துக்களைக் காட்டிக் கொடுப்பாரா? காந்திஜியின் தவம் அஹிம்ஸை ஸத்யம் பிரார்த்தனை என்று பல பேசினாலும் செயலில் ஹிந்துக்களுக்கு த்ரோஹம் செய்பவர் அந்த பேச்சு கூட இல்லாமலே ஸ்வராஜ்யம் வந்தால் போதுமென பல மந்திரிகளவர்க்குண்டு என்ன ஏற்படுமோ இவர்கள் ராஜியால் பார்ப்போம்.

பல்லாண்டு பத்திரிகை புலம்பல்!! மந்திரிகளுக்குப் பல்லாண்டு கூறும் கோமாளி பத்திரிகை ஒன்று ஆலயத்தைக் கெடுத்த தால் சண்டையும் பதவி இழப்பும் கோர்த்தென்ற பொதுஜன வாக்கை கறைக்க பல கோணவாதம் சொல்கிறது. வைஸ்ராய் நமது தலைவரை அழைக்காததால் அந்த வாதம் சரியல்ல —என்கிறது! ஜஸ்டிஸை அழைத்தாரே!!

விருந்தில் மாஜி மந்திரி!! கவர்னர் நியமித்த ஆங்கிலேயர் ஆகாயத்தில் மின்னலால் தாக்கப்பட்டும் பிழைத்தும், ஆலயத்தைக் கெடுத்த மந்திரி வேலை போனதும் தர்ம த்ரோஹத்தின் பலன் என வைதிகர் மகிழ்வரென கூறுகிறார்! அதற்கென்ன ஸ்தேஹமென்பதே ஆஸ்திகர் வாக்காம்!

பக்ஷி தீர்த்தத்தில் குருகுலம்! பணயூராச்ரமத்தைச் சார்ந்த குருகுலம் ஷெ ஊரில் நவராத்ரிக்குப் பிறகு விஜயதசமியில் ஆரம்பிக்கப்பட்டது. நான்கு மாணவர் முற்றிலும் பண்டைகால வழக்கப்படி பழக்கப்படுகிறார்கள். இதற்கு உபகரிக்க விருப்பமுள்ளோர் குருகுல தலைவர், பக்ஷி தீர்த்தம் போஸ்டுக்கனுப்பவும்.

அறிக்கை

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், கும்பகோணம்.

[ஸ்ரீஜனார்தன அச்சுக்கூடவிஷயமாகவும், புஸ்தகங்கள் விற்பனை விஷயமாகவும், "மானேஜர், ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் கும்பகோணம்" என்ற விலாஸம் எழுதியே கடிதப்போக்குவரத்து நடத்தவேண்டும். மானேஜர், ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், கும்பகோணம்.]

திருஷ்ணராயபுரம் நிருட பசுபத்தம்

மேற்படி கிராமத்தில் வசித்து வரும் சோமயாஜி ஸ்ரீ சங்கர சாஸ்திரிகளால் ஐப்பசிமீ 9உ 3வது வருஷத்திய சாதுர் ஹோத்ரிய சயனக்ரமத்துடன் விமரிசையாய் நடைபெறுகிறதுவானது ரொம்பவும் விமரிசையாய் செய்யப்பட்டது. யாகத்துக்கு ஆஸ்திகர்கள் ஏராளமாய் விஜயம் செய்திருந்தார்கள்.

உலகத்தில் பேசப்பெறும் முக்கிய பாஷைகள்.

பெயர்	பேசுவோர் தொகை சுமார்	
சீனம்	40	கோடி
இங்கிலீஷ் ,,	20	....
ருஷ்யா ,,	14	....
ஹிந்தி ,,	11	....
ஜெர்மன் ,,	8	....
பிரெஞ்சு ,,	7	....
ஸ்பானிஷி ,,	7	....
ஜப்பானியம் ,,	6½	....
போர்த்துகீஸ் ,,	6	....
இத்தாலியம் ,,	5	....
வங்காளி ,,	5	....
தமிழ் ,,	204	லட்சம்
தெலுங்கு ,,	263	....
மஹாராஷ்டிரம் ,,	203	....
கன்னடம் ,,	112	....
குஜராத்தி ,,	108	....
மலையாளம் ,,	91	....

நமது நியாகம்,

சென்ற மகாயுத்தத்தில் இங்கிலாந்து 14 கோடியே 60 லட்சம் பவுன் ரொக்கமாகவும், 8 கோடி பவுன் பொருள்களும் பத்து லட்ச ஜனங்களையும் பிரிட்டனுக்கு உதவியாகக் கொடுத்தது. யுத்தத்தில் ஒரு லட்சத்து ஓராயிரம் இங்கிலாந்து உயிரிழந்தனர்.

புதிய கமிஷனர்

ஸ்ரீ ஒ. புல்லா ரெட்டி ஐ. ஸி. எஸ். சென்னைக் கார்ப்பரேஷனின் புதிய கமிஷனராக நியமிக்கப்பட்டிருக்கிறார். இவருக்கு மாதச்சம்பளம் ரூ. 2000.

ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதாவர்களின் நூற்றுதான்காவது

வார்ஷிக மஹோத்ஸவம்

நம் தேசத்தில் கர்நாடக ஸங்கீத வாக்கேயகாரர்களில் மேன்மைபெற்று விளங்கிய ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷதர் அவர்களின் 'நூற்றிநான்காவது வார்ஷிகமஹோத்ஸவம்' சென்னை மைலாப்பூர் தெற்கு மாட வீதி வன்னி ஸத்திரத்தில் 1939ஞ உ நவம்பர்மீ 9, 10, 11, தேதிகளில் பிரதினமும் மாலை கொண்டாடப்படும்.

9—11—39 வியாழக்கிழமை காலையில் பூஜையும் ஸமாராதனையும் நடைபெறும்.

(ஒரு திருபர்)

"பிராமணர்களும் தமிழர்களுதான்"

"நாங்கள் தமிழர்கள் இல்லையானால் வேறு எந்த பாஷையினராக இருக்கமுடியும். எங்களுக்குத் தாய்ப்பாஷையே கிடையாதா? நாங்களும் தமிழை நேசித்து அபிவருத்தியை பல முறைகளிலும் விரும்புகிறோம். தாய் பாஷையில்லாத ஜனங்கள் இருப்பதாகக் கேள்விப்பட்டதேயில்லை. நாங்களும் தமிழர்கள்தான்" என்று மகாகனம் டாக்டர் வி. எஸ். சீனிவாஸ சாஸ்திரியார் சென்னையில் கூடியப் ஒரு பொதுக்கூட்டத்தில் 28—10—39 மாலை கூறினர்.

காலமானர்

மதுரை அட்வகேட் ஸ்ரீமான் கே. ஆர் வேங்கடராமய்யரின் மனைவி ஸ்ரீமதி சீதம்மாள் 2—11—39 காலை 7-30 மணிக்கு மதுரையில் காலமானார். ஸ்ரீமதி சீதம்மாள் சென்ற மூன்று நாட்களாக நோய்வாய்ப்பட்டிருந்தார். அவர் மிகவும் தர்ம சிந்தனையுள்ளவராகவும் ஆசாரமுடையவராயும் இருந்தார். ஆலயப் பிரவேச ஏற்பாடுகளில் தீவிரமாகப் பங்கெடுத்துக் கொண்டிருந்தார். அவருக்கு வயது 54. நான்கு புத்திரர்களிருக்கிறார்கள்.

(ஒ. நி.)

ஸ்ரீ வாஞ்சியம்

வேதபாராயணதர்மம்.

ஸ்ரீ வாஞ்சியமென்ற க்ஷேத்திரமானது காவேரி தீரத்திற்கு சமீபத்திலும், நன்னிலம் ஸ்டேஷனிலிருந்து சுமார் ஒருமைல் தூரத்திலும் உள்ளது. இந்த க்ஷேத்திரமின்மையை அறியாதவர்கள் அதிகமாயிருக்க மாட்டார்களு. ஸ்காந்தம் முதலான மகா புராணங்களில் இந்த க்ஷேத்திர வைபவத்தை மஹா முனிவரான ஸ்ரீ வியாஸர்ச் சரியாள்வர்ணித்திருக்கிறோர். இந்த க்ஷேத்திரத்திற்கு ஒரு தடவை சென்று குப்தகங்கை என்னும் தீர்த்தத்திலும் யம தீர்த்தத்திலும் ஸ்நானம் செய்து மங்களாம்பிகா சகித ஸ்ரீவாஞ்சேஸ்வரரை தரிசித்தால் அப்பொழுதே புலப்படும். யமதீர்த்தத்தில் ஸ்நானம் செய்கிறவர்களுக்கு யம பாதை தயே இடையாதென்பது புராணங்கள் கூறியிருக்கின்றன. அதிலும் கார்த்திகை மாதம் ஞாயிற்றுக்கிழமைகளில் அந்த தீர்த்தங்களில் ஸ்நானம் செய்தால் பஞ்சமஹாபாதங்களும் விலகிவிடும். கோடிக்கணக்கான ஜனங்கள் அந்த புண்ணிய காலத்தை ஒவ்வொரு பானுவாரமும் வருகின்றனர். அப்பொழுது உத்ஸவமும் வருஷந்தோறும் நடந்துவருகிறது. உத்ஸவத்தில் வேதபாராயணம் சாதுக்களுக்கு சந்தர்ப்பணை ஸ்ரீ தீக்ஷதர் அவர்கள் நடத்திவந்தார். அவர்கள் தன்னுடைய 90வது வயதில் சன்னியாசம் செய்து கொண்டு லித்தியான பிறகு அவருடைய புத்திரர் ஸ்ரீராமசந்திர தீக்ஷதர் நடத்தி வருகிறார். பிரமாதி-ஞ கார்த்திகைமீ 16உ தேதி முதற்கொண்டு ஆரம்பமாகி 10 நாள் பெரிய மஹோத்சவத்தில் வேதபாராயணமும் சந்தர்ப்பணையும் ஷெ தீக்ஷதர் நடத்திவருகிறார் வேதாராதனையை பண்ணுகிற சாதுக்கள் குகிகளில் நமது அன்னம் சேர்த்து ஜீர்ணமாஞல் நமது பாபங்கள் எல்லா ஜீர்ணமாகி விடும். அக்ஷதமாகவோ அல்லது நிரவ்யமாகவோ கொடுத்து உபகாரம்செய்யலாம்.

பணஉதவியை ஸ்ரீ ராமசந்திர தீக்ஷிதர், பனங்குடி போஸ்டு, நன்னிலம் என்ற விலாஸத்துக்கு அனுப்பலாம். (ஒ. நி.)

மகாவித்வான் ஸ்ரீமுத்துஸ்வாமிதீக்ஷிதர்

104வது வார்ஷிகமகோத்ஸவம். அவரது வாழ்க்கை வரலாறு.

(ஸ்ரீ எஸ். எஸ். மணி.)

காளது 1939ஞ நவம்பர்மீ 9தேதி கார்ஞடக சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான மகாவித்வான் ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷதரின் 104 வது வார்ஷிக மகோத்ஸவம் காடெங்கும் கொண்டாடப்படும். 1935ஞ நவம்பர்மீ ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷதரின் நூற்றுண்டு விழா இந்தியாவின் பல பாகங்களில் கொண்டாடப்பட்ட விவரம் நேயர்களுக்குத் தெரிந்திருக்கும். இவருடைய சரிதை இங்கு சுருக்கமாக விவரிக்கப்பட்டிருக்கிறது.

நாதஜ்யோதி ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷதர் 1775ஞ மார்ச்சுமீ சோழநாட்டில் திவ்விய க்ஷேத்திரங்களில் ஒன்றெனக் கருதப்படுவதும் வடமொழியில் ஸ்ரீபுரமென்றும் தென்மொழியில் திருவாரூர் என்று கூறப்படும் பாடல்பெற்ற ஸ்தலத்தில் பிறந்தார்.

இவருடைய பிதா ஸ்ரீ ராமஸ்வாமி தீக்ஷதர் சங்கீதத்தில் பாண்டித்யமுடையவர். மகாவித்வான். அநேக சாஹித்தியங்கள் இயற்றி இருக்கிறார். இவருக்கு மூன்று புதல்வர்கள். மூத்தவர் நமது முத்துஸ்வாமி தீக்ஷதர்.

தந்தை, பிள்ளைகள் மூவருக்கும் சங்கீத ஞானதை ஊட்டினார். மூவருமவிரைவில் பெரிய வித்வான்களானார்கள். ஒரு சமயம் ஸ்ரீ சிதம்பரநாதஸ்வாமிகளுடன் நமது தீக்ஷதர் வட இந்தியா முழுவதும் சுற்றுப் பிரயாணம் செய்துவிட்டு ஸ்ரீகாசியில் 6 ஆண்டுகள் தங்கிவிட்டுத் தமிழ்நாடு வந்தார். தென்னிந்தியாவில் பல க்ஷேத்திரங்களைத் தரிசித்து க்ஷேத்திரங்களிலுள்ள மும்மூர்த்திகளைப் பாடிவந்தார்.

இவரை எட்டையபுர சமஸ்தான அதிபதி கௌரவித்து ஆதரித்துவந்தார். பக்தியும் வைராக்கியமுடையவர். சர்வேஸ்வரனைத்தவிர மானிடர்களின்மீது பாடமாட்டார். (பாடவில்லை.)

தீக்ஷதர் வாய்ப்பாட்டிலும், வீணையிலும் நிறமையுடையவர். தமிழ் தெலுங்கு சமஸ்கிருதம் ஹிந்துஸ்தானி இவைகளில் மகாபாண்டித்யமுடையவர்.

தனக்குத் தெரிந்த சில ஆங்கிலத்தைக் கொண்டு சில "கோட்டுகள்" நியாகராஜர் கீர்த்தனைமீது பாடியிருக்கிறார்.

"ஜம்பூபதே" "சௌந்தராஜம் ஆச்ரயே" என்ற கீர்த்தனைகளில் ஹிந்துஸ்தானியைப் பொறித்திருக்கிறார்.

அநேக திவ்யக்ஷேத்திரங்களைத் தரிசித்துப் பல பாடல்களைப் பாடியுள்ளார்.

முக்கியமாய் ஸ்ரீரங்கம், நில்லை, காஞ்சி திருவாரூர், மதுரை, திருவானைக்காவல், மாயூரம் போன்ற ஸ்தலங்களில் வீற்றிருக்கும் மூர்த்திகளின்மீது கீர்த்தனங்களை இயற்றியுள்ளார்.

1835ஞ நவம்பர்மீ தீபாவளியன்று எட்டையபுரத்தில் ஸ்ரீ தீக்ஷதர் காலமானர்.

இவருக்குக் குழந்தையில்லை. தம்பி பேரனை ஸ்வீகாரம் செய்துகொண்டார்.

இவர் இயற்றியுள்ள கீர்த்தனைகள் சுமார் 510 எனச் சொல்லப்படுகிறது.

மதுரை ஸத்யாக்ரஹம்

பலவிடங்களில் கண்டனக்கூட்டம்

மேல்மங்கலம்

30—10—39 இரவு ஸ்ரீ பிலாஞ்சேரி சுப்பிரமணிய அய்யர் தலைமையின் கீழ் ஸ்ரீ வெங்கடாசலஸ்வாமி ஆலயத்தின் முன்பாக ஸ்ரீ பிரஹ்லாத ராவ் மதுரையில் நடைபெற்ற தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தைப்பற்றியும் 31உ மாலை மதுரை, பழனி முதலிய இடங்களில் நடைபெற்ற தீண்டாதார் ஆலயப் பிரவேசத்தைக் கண்டித்தும் மஹா ஜனங்கள் யாவரும் அகில இந்திய வாணிசரமஸ்வராஜ்யஸங்கத்தின் அங்கத்தினர்களாக சேர்ந்து வெளிச்சம் செய்ய வேண்டுமென்றும், உடல் பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்து தர்ம வீரத்தளத் தொண்டர்களாகச் சேர்ந்து கோவிலின் புனிதத்தன்மையைக் காப்பாற்ற வேண்டுமென்றும், விரிவாகப் பேசினர். அ. இ. வ. ஸ். சங்கதின் மேல் மங்கலத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அங்கத்தார்கள் சேர்ந்து வருகிறார்கள்.

(ஒ. நி)

திருவிடமருதூர் ஒரு பிரசங்கம்

திருவிடமருதூர் ஜியோதிர்மயமஹாலிங்கஸ்வாமி நியமாத்யய பாடசாலையில் ஸர்ஸ்வதிபூஜை அன்று மாலை சேங்காலிபுரம் பிரவசன தூணை வைதிக தர்ம ஸம்ரக்ஷக ஸ்ரீ அனந்தராம தீக்ஷிதரவர்களால் "வேத மகிமை" என்ற பொருள்பற்றி பிரசங்கம் செய்யப்பட்டது. தீக்ஷிதர் அவர்கள் வேத மகிமையை நன்கு பிரவசனம் செய்து தர்மத்தின் பெருமையை எடுத்துரைத்து ஆலயப்பிரவேச அதர்மத்தைக் கண்டித்தார். மதுரையில் ஸ்ரீ என். நடேசய்யரவர்கள் நமது தர்மத்திற்காக பாடுபட்டு வருவதையும் ஸ்ரீ மீனாக்ஷியை புனிதமாக பிரதிஷ்டை செய்த வைபவத்தையும் நன்கு எடுத்துச் சொல்லி இந்த வேத பாடசாலையிலும் மற்றுமுள்ள ஆஸ்திக சபைகளிலும் ஸ்ரீ நடேசய்யருடைய உருவப்படத்தை திறந்து வைக்க வேண்டு மென்றும் ஸ்ரீ நடேசய்யரவர்களை ஒவ்வொரு இடங்களிலும் அழைத்து பிரவசனம் செய்ய சொல்ல வேண்டுமென்றும் உபன்யஸித்தார். 4—11—39 முதல் பத்து நாட்கள் ஸ்ரீமத்பாகவத உபன்யாஸம் நடைபெறப்போகிறது. (ஒ. நி)

ஆழ்வார்திருநகரி மதுரை ஸத்யாக்ரஹத்திற்கு ஆதரவு

அகில இந்திய வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய சங்கத் தலைவர் ராவ்சாஹிப் ஸ்ரீ என் நடேச அய்யர் வேண்டுகோளின்படி விஜயதசமியன்று ஆழ்வார் திருநகரி ஸ்ரீ வைகுண்டம் முதலிய ஊர்களிலும் சனுதனி பொதுக் கூட்டம் ஊர்வலம் முதலியன நடைபெற்றன, கூட்டத்தில் மதுரை சத்யாக்ரஹத்தைக் ஆதரித்தும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. ஸனுதனிகளின் பொதுக் கூட்டத்திலும் வீதிகளிலும் சிலர் வீட்டிலும் இன்று நமது தமிழகத்தில் சங்கீத வித்வான்கள் இவருடைய கீர்த்தனங்களைக் கற்று மக்களிடம் பரவச்செய்வதே இவருக்கு நாம் காட்டும் மரியாதையும் ஞாபகச் சின்னமும் ஆகுமென்று நாம் கூறத்தேவையில்லை.

வாழ்க தீக்ஷதர் திருநாமம்!

முக்கிய அறிக்கை

["ஆர்யதர்மம்" பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டிய கட்டுரைகள், செய்திகள் யாவும் ஆசிரியர் "ஆர்யதர்மம்," கும்பகோணம் என்ற விலாஸத்துக்கு அனுப்பவேண்டும். கட்டுரைகள், செய்திகள் யாவும் மசியினால் காகிதத்தின் ஒரே பக்கத்தில் எழுதி அனுப்பவேண்டும். தனிப்பட்டவர் பெயருக்கு ஒருவரும் அனுப்பக்கூடாது. நிர்வாக சம்பந்தமான விஷயங்கள்—சந்தா விளம்பரம் மட்டும் மானேஜர் 'ஆர்யதர்மம்' கும்பகோணம்என்ற விலாஸத்துக்கு அனுப்பப்பட்டவேண்டும். எல்லா கடிதங்களும் பிரதி செவ்வாய்கிழமைக்குள் அனுப்பினால் அந்தந்த வார வெளியீட்டில் பிரசுரிக்கமுடியும். எல்லாவற்றையும் தமிழிலேயே எழுதியனுப்பவேணும். ஆசிரியர்]

கற்கள் எறியப்பட்டுள்ளதாயும், இதனிஷயமாய் போலீஸார்களால் சில வர்பர்கள் எச்சரிக்கை செய்யப்பட்டிருப்பதாயும் தெரிகிறது. 1—11—39-ல் ஆழ்வார் திருநகர் தேவஸ்தானத்தில் சிஞ்சினிகள் பிரார்த்தனைகள் நடத்தினர். ஆலயப்பிரவேச அதிகாரம் சட்டம் செய்து ஆர்பாட்டம் செய்துவந்த காங்கிரஸ் மந்திரிகள் விலகி ஒழிந்ததுபோல் சட்டமும் விரைவில் ஒழியவேண்டியும் பிரார்தீக்கப்பட்டது. ஆலயப்பிரவேச விஷயம்பற்றி மிகத் தீவிரமாய் எதிர்ப்பு நடவடிக்கைகளை செய்து ஆதரவளித்துப் பேச முன்வந்த நம்மது மடம் ஆஸ்தான வித்வான் பட்டம் தற்க்கச்செய்தும் விசேஷம்பற்றி சஞ்சனை தர்மாக்ஷரைத்தமாய் ஊக்கம் காட்டிவந்த ஸ்ரீ வான்மாமலை பீடாதிபதி ஸ்ரீ மத்சின்ன மதுரகவி ஸ்ரீ ராமரநுஜஜீயர் 23-வ்து பட்டம் ஸ்வாமிகள் நல்ல நெருக்கடியான் இந்த சமயத்தில் காலஞ் சென்றதற்கு வருந்துவதாகவும் அன்னாரக்கடைபெற்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டன. (ந. நி.)

சென்னை ஸ்ரீ கந்தசாமி கோவிலில் லக்ஷார்ச்சனை

சென்னை கோட்டமெனும் ஸ்ரீ முத்துக்குமார ஸ்வாமியார் ஆலயத்தில் ஸ்ரீ கந்தப் பெருமானெனை வழங்கும் ஸ்ரீ முத்துக்குமார ஸ்வாமியாருக்கு, ஸ்ரீ ஷண்முக ஸ்வாமியார் உற்சவ மூர்த்திக்கும், பிரமாதி ஞ ஐப்பசிமீ 25உ (11—11—39) துடங்கி கார்த்திகைமீ 1உ (16—11—39) (ஸ்கந்த ஷஷ்டி) ஆறு நாட்களில் லக்ஷார்ச்சனை நாள் ஒன்றுக்கு மூன்று காலமாகவும், காலமொன்றுக்கு ஆறு ஸஹஸ்ர நாமங்களாகவும், அவ்வாறு நாட்களில் 18 காலங்களுக்கு 108 சகஸ்ர நாமார்ச்சனைகளை ஆகம சிவாச்சாரியர்களைக் கொண்டு விமரிசையாக லக்ஷார்ச்சனையை முடிவுபெற்றும் ஒவ்வொரு காலபூஜைகளிலும் அபிஷேக புஷ்ப அலங்கார நைவேத்ய தூப தீபாராதனைகளாகிய சோடசோபசார வேதபாராயண ஜபஹோமாதி சந்தர்ப்பணை முதலிய வைபவங்களையும், தெய்வத் திருவுளப்பற்று நடத்த ஏற்பாடு செய்து இருக்கிறது. (ஒ. நி.)

நாகபட்டிணம்.

"மதமும் நமது கடமையும்"

நாகபட்டினம் ஹிந்து மதாபிமான ஸங்கத்தின் ஆதரவில் சென்ற 30—10—49 திங்கட்கிழமைதினம் திருநெல்வேலி அட்வொகேட் பிரும்மஸ்ரீ ஆர். கிருஷ்ணசாமி அய்யர் எம். ஏ. பீ. எல். அவர்கள் 'மதமும் நமது கடமையும்' என்ற விஷயத்தைப்பற்றி அரியதோர் உபன்யாசம் செய்தார்கள்.

ஓர் சித்திர வேலைக்காரன் எவ்விதம் தான் எழுதப்போகும் சித்திரத்திற்கு முதலில் மனதில் சங்கல்பம் செய்துகொண்டு பின் சூக்ஷ்மமாக ஒரு கோடுகிழித்துகொண்டு அதற்கு பின்னரே ஸ்தூலமாக சித்திரம் எழுதி அதற்கு பலவிதமாக கலர்கள் கொடுத்து எற்பாடு செய்வானோ, அவ்விதமே ஈச்வரன் முதலில் சிருஷ்டியை சங்கல்பித்தவனுக சூக்ஷ்மமான ஒரு ஏற்பாட்டை செய்து பின்பு ஸ்தூலமான ப்ரபஞ்சத்தை சிருஷ்டிக்கிறான் என்றும், அந்த சங்கல்பத்தை அறிவதே மதமென்றும், எவ்விதம் ஈச்வரன் அனுஷ்டிப்பானோ அவ்விதமே அவனுடைய ஆக்ஞாரூபமான வேதமும் அனுஷ்டிக்கின்றதென்றும், ஈச்வரனுடைய சட்டமானது ஸநாதனமான சட்டமானதால் அதை மாற்றுவதற்கு ஒருவருக்கும் அதிகாரமில்லையென்றும்; இரண்டும் இரண்டும் நான்கு என்பது எப்படி நிரிகாலத்திலும் சத்யமோ, நான்கு என்பதை இனி ஐந்து என்று சொல்லவேண்டுமென்று வேண்டுமானால், ராஜாங்கத்தில் சொல்லலாமே தவிர இரண்டும் இரண்டும் நான்கு என்ற தத்வத்தை ஒருவராலும் மாற்றமுடியாதென்று [illegible] இருக்கவேண்டுமானால் அவைகளை அனுஷ்டிக்கவோ தன் எஜமான் ஸ்வாதந்தரியம் அவச்யமிருக்க வேண்டுமென்றும், ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட கர்மாக்களை குறைக்கவோ கூட்டவோ யாருக்கும் அதிகாரமில்லையென்றும், ஒருவனுல் எவ்வளவு கர்மாக்கள் செய்யப்படுகிறதோ அவ்வளவிற்கு பலன் தித்திக்குமென்றும், சொல்லி நிஷ்காம்யகர்மாவின் தத்வத்தையும் அவச்யத்தையும் அழகாக எடுத்துக்காட்டினார்கள்.

பிறகு தற்காலம் எற்பட்டிருக்கும் ஆபத்துக்களில் சாரதா சட்டமும், ஆலயப்பிரவேசமும் முக்யமாக இருப்பதாகவும் அதிலும் ஆலயப்பிரவேசத்தினுல் அடிப்படையாக தர்மத்திற்கு க்ஷயனி எற்படக்கூடிய நில்லையென்றும், கோவில்கள் அசுத்தமாகப் போகும்பக்ஷத்தில் கிரஹங்களிலேயே ஆராதனத்தை முடித்துக்கொள்வது சாத்யமென்றும், ஆனுல் சாரதா சட்டத்தால் தர்மத்திற்கு மகத்தான ஆபத்து எற்பட்டிருப்பதாகவும், ராஜாக்ஞையைவிட பகவானுடைய ஆக்ஞையானது விசேஷமென்றும், ராஜாக்ஞையை அதர்மமென்றும், நம்பி மீற் தைர்ய முள்ளவர்கள் மீறி பகவானுடைய ஆக்ஞையை நிறைவேற்றுவது மகத்தான சிரேயஸ் கரமென்றும், அதற்கு தைர்யமில்லாதவர்கள் ஆபத்தர்மமாக கட்டுப்பட்டு அவைகளுக்காக ஸ்மிருதிகளில் சொல்லப்பட்ட பிராயச்சித்தங்களை பச்சாத்தாபத்துடன் அனுஷ்டானம் செய்து சபலபம்சக் செய்துகொள்ள வேண்டுமென்றும், ஜீவன் முக்தனுடைய நிலையை மாத்திரம் அபேக்ஷித்து அதற்கு வேண்டி சாதனங்களை அனுஷ்டிக்க மனமில்லாமலிருந்தால் பிரயோசனமில்லையென்றும், கர்மானுஷ்டானங்களை கூடியவரையில் சிரத்தையுடன் செய்யவேண்டுமென்றும், சுலபமான உதாரணங்களுடன் வெகு அழகாக உபன்யசித்தார்கள். ஸங்கத்தின் கார்யதரிசியால் வந்தனோபசாரங்கள் கூறப்பட்டு சபையானது இனிவு முடிவுபெற்றது.

என். சாம்பசிவ அய்யர்
பீ.ஏ.,பீ.எல்.,
நாகப்பட்டிணம்.

மைசூர்

பிரார்த்தனை

மைசூர்தேசத்திய ஸ்ரீ மகாராஜா சாகேப் பவரத்தூரவர்கள் நவராத்திரி மஹோத்வத்துக்கு நிமித்தமாக நடந்தேறிய ஊர்வலம் நடந்த மற்ருநாள் என்ருல் 23-10-1939 வது திங்கட்கிழமை தினம் இரவும் பகலும் உபவாஸமிருந்து சுத்தாந்த காரணராய் தங்கள் உத்திரவின் பிரகாரம் மைசூர் தேசத்தில் வசிக்கும் ஸ்ரீ உத்திராதி மடத்திய ஸ்ரீ வியாஸராய மடத்திய பீடர்களான புருஷ ஸ்ரீ மக்களுள்பட சுமார் 2,000 பிராம்மண ஜனங்கிகள் அவரவர் இருப்பிடத்தில் தற்போது பிராப்தமாயிருக்கும் ஐரோப்பிய யுத்தத்தில் பிரிட்டனுக்குச் ஜயமாகட்டுமென்று மனப்பூர்வமாக திக்விஜயராமரை பிரார்த்தித்தார்கள்.

ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும் என்ற பழமொழி போல் சாரதாச் சட்டத்தாலும், தேவஸ்தான பிரவேச அக்கிரம சட்டத்தாலும் தொந்தரவில் அகப்பட்டுக் கொண்டு பாடுபடும் பிரிட்டிஷ் இந்தியா தேசத்து ஸநாதனிகளுக்கு சகாயமாகட்டுமென்றும் அடுத்த வீட்டிற்கு வந்த தீ நம் வீட்டிற்கும் வராமல் அப்படியே சாந்தமாகட்டுமென்றும், இந்த கூக்குரல், காயத்ரி முதலான மகாமந்திரங்களை ஒலி கூக்குரலாகையால் பாரமார்த்திக சகாயம் மேற்படாமென்ற தீர்க்காலோசனையினுலும் தங்கள் கௌரவ வாக்கை சன்மானிப்பதற்காகவும், பகவான் நடத்திய இக்கார்யத்தை தங்களுக்குத் தெரியப்படுத்த சந்தோஷிக்கிறேன்.

ஜூலை, [illegible] இந்த சாதா சட்டத்தின் வாஸனையும்கூட இல்லாமல் 8-வது வயது கன்னிகைக்கு ஆனவுடன் பிள்ளைக்கு 14-வது வயது ஆனவுடன், கல்லியாணம் செய்ய நம்ம ஸநாதன மகாராஜா அனுமதி கொடுத்திருக்கிறார்.

தவிர, இந்த தேவஸ்தானத்திற்குள்ளும் மாமூலுக்கு விரோதமாய், ஆஜிஸ்ராவிடர் முதலானவர்கள் பிரவேசிக்க அனுமதி கொடுத்தில்லை. இந்த விஷயத்தில் நம்ம மகாராஜாவிற்கு இருக்கும் ஊக்கமும், பிரஜையும், தைர்யமும் மிக்க மெச்சத் தக்கதாயிருக்கின்றன.

இதனுல் நமக்கு உண்டாகும் சுக முதலானதுகள் தங்களுக்கும், தங்கள் அனுயாயிகளுக்கும் மற்றும் பிரிட்டிஷ் இந்தியாவிலுள்ள எல்லா ஸநாதனிகளுக்கும் வெகு சீக்கிரத்தில் ஸ்ரீ திக்விஜயராமர் அளிப்பாரென்று நம்புகிறேன். (ஒ. நி)

சென்னை

ஸ்ரீ பாஷியம் நாயுடு உருவ சிலை திறப்பு விழா

ஸ்ரீமான் உ. வே. வி. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் திறந்து வைத்தார்

சென்னை மேற்பாக்கம் பாஷிய நாயுடு பார்க்கில் அழுக்காக நுதனமாய் கட்டின மண்டபத்தில் ஸ்ரீ பாஷியம் நாயுடுவின் உருவ சிலையை நவம்பர்மீ 4உ மாலை 5-10 மணிக்கு ஸ்ரீமான் உ. வே. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் சுவாமி திறந்து வைத்தார். போது சுமார் 200 சென்னையை சேர்ந்த பிரமுகர்கள் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் அய்யங்கார் ஸ்ரீ பாஷியம்நாயுடுவை தமக்கு அநேக காலமாய் தெரியும் என்றும் அவர் தர்மிஷ்டர் என்றும் மஹா குணவானுயும் ஆசாரவந்தராயும், ஸ்ரீ வெங்கிடசாமிநாயுடுவின் தகப்பனர் என்றும், ஸ்ரீபொரும்பூதூர் உடையவர் சன்னதியில் அனேக கைங்கர்யம் செய்தவரென்றும் சென்னை பிரமுகர்களில் இவர் முக்கியமானவர் என்றும் இவரை போல் தர்மவான்களுக்கு எற்படுத்தும் உருவச்சிலை என்றைக்கும் பார்க்கும் ஜனங்களை தர்மசிந்தனை உள்ளவராக்கும் என்றும், அதிர்மிஷ்டர்களுக்கு செய்யும் சிலை அதை பார்க்கும் ஜனங்களால் நிந்திக்கும்படியாய் இருக்கும் என்று சொல்லி கரகோஷத்தினிடையே நிறைந்து வைத்தார். அனேக கனவான்கள் பேசின பிறகு சந்தன தாம்பூலம் கொடுத்தின் கூட்டம் இனிது முடிந்தது. (ஒ. நி.)

திண்டுக்கல்

சத்யாக்கிரஹத்துக்கு ஆதரவு.

திண்டுக்கல் அ. இ. வ. ஸ். சங்க ஆதரவில் சென்ற ஞாயற்றுக்கிழமை அட்வகேட் ஸ்ரீ V. R. விஸ்வநாதய்யர் தலைமையில் ஒரு ஸஜாதனிகளின் கூட்டம் நடந்தது மதுரை சத்யாக்ரஹத்துக்கு ஆதரவு அளிப்பதாகவும், மகாயுத்தத்தில் பிரிட்டனுக்கு வெற்றி எற்படவேண்டி கடவுளை பிரார்த்திப்பதாகவும், ஆலய அவசர சட்டத்தை ரத்து செய்யும்படி அதிகாரிகளைக் கேட்டுக் கொள்வதாகத் தீர்மானங்கள் நிறைவேறின. (ந. நி.)

திருத்துரைப்பூண்டி

நவராத்ரி உத்ஸவம்.

திருத்துரைப்பூண்டி ஸ்ரீருமகிருஷ்ணஸ்வாமிமடத்தில் கீடித்து நடந்துவருகிற நவராத்ரி உற்சவமானது திருவாரூர்புதுத்தெரு, பிரும்மஸ்ரீ எஸ். வி. சந்தானரும பாகவதர் விளங்குடி மிருதங்கம் பிரும்மஸ்ரீ எஸ். ருமனுத பாகவதர் அவர்களாலும் இன்னும் இதர பாகவத கோஷ்டிகளுடனும் விமரிசையாய் நடந்தது. (ஒ. நி.)

புத்தக வரவு.

1) ஆழ்வராசாரியாள் அபிதான விளக்கம்.— ஸ்ரீ டி. டி. இராமஸ்வாமி இராமனுஜதாஸரால் தொகுக்கப்பட்டது. விலை அணு 0-4-0.

2) ஸ்ரீலக்ஷ்மீந்ருஸிம்ம ஸ்தவம் (முதல் பாகம்) ஸ்ரீ ஏ. ஸ்ரீநிவாஸராகவன் எம். ஏ., அவர்களால் தொகுக்கப்பட்டது.

[இட்மில்லாததால் விமர்சனம் செய்யப்படவில்லை. பின்னர் விரிவாக எழுதுவோம். ஆசிரியர்] விலை. ரூ. 0—4—0

ஸ்ரீ ஸ்தவம்.

மூலம் ஸகரத்திலும் தமிழிலும்
ஸ்ரீமணி ஸ்ரீநிவாஸராகவாசாரியாரால்
எழுதிய உரையுடன்
விலை அணு 0—4—0

கிடைக்குமிடம்:- ஸ்ரீ ஜனார்தன பிரிண்டிங் ஒர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

நமது மதம்

(ஸ்ரீ L. சுப்பிரமணிய சாஸ்திரி, வீணை வித்வான், சேர்மாதேவி)

மனிதர்களின் நடவடிக்கைகளும், சட்டதிட்டங்களும், விபரீத நிலையில் வந்து உலகமே புரண்டு கொண்டிருக்கின்றதை நாம் கண்களால் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

இவ்வுலகில் மனித வர்க்கம் நான்கு வகையாய் பிரிந்திருக்கின்றன என்று அறிவு முதிர்ந்த பெரியோர் கூறுவதாவது: "கேஷிதக்ஞானதோ நஷ்டா:" சிலர் தர்மத்தின் உண்மையையும், நியாயத்தின் தத்வத்தையும் அறியாமலே கெட்டுவிட்டனர். கேசிந்நஷ்டா: ப்ரமாதத:" மற்றும் சிலர் மேற்கூறிய தத்வங்களை விபரீதமாக தெரிந்து கெட்டுவிட்டனர். கேசித்க்ஞாத விவேபேன" மற்றும் சிலர் உண்மை தெரிந்தும் அதுவுங்காரமமகாரங்களினுலே கெட்டுவிட்டனர். "கேசிந் நஷ்டைஸ்து காசிதா:" பாக்கியுள்ள சிலர் மேற்கூறிய மூன்று வர்க்கத்தாருடன் சேர்ந்து கெட்டுப்போயினர்.

இவ்விதம் புரண்டுருண்டு நிரண்டு கொண்டு வருகிற உலகத்தில் தர்மத்தின் தத்வத்தையாவது நியாயத்தின் நீதியையாவது சொன்னுல் ஏறுமா? வேதமாவது புராணமாவது ஸ்மிருதிகளாவது, எல்லாம் அவரவர்கள் சௌகர்யத்திற்காகவும், வயிறு வளர்க்கவும், தாங்கள் உயர்ந்த ஜாதிகள் என்று தங்கள்சௌகர்யத்திற்காக எழுதிக் கொண்ட சாஸ்திரங்கள் என்று பலவாறு தங்கள் மூளைகலக்கத்திற் கேற்றவாறு பிதற்றிக்கொண்டு ஒத்து ஊதுபவர்கள் [illegible] அறிவு குருட்டுத்தனமையை வளர்த்து செய்யும் விபரீத மனப்பான்மையுள்ள சில பத்திரிகைகளும் கிளம்பி விட்டன. என்ன விபரீத உலகம்! என்ன அக்கிரமம். மற்றும் மதத்வேஷம், ஜாதித்வேஷம் அதிலும் பிரும்மத்வேஷம், ஸ்ரீவம் த்வேஷமயம் ஜகத் என்று எற்பட்டுக்கொண்டிருக்கிறது.

ப்ரம்மம் என்ருல் வேதத்திற்கும், பரதத்வமாகிய பரமேசுவரனுக்கும், தபஸ்ஸுக்கும் பிராம்மணனுக்கும், பிரம்மதேவனுக்கும், பெயர்கள் என்று நிகண்டு படித்தவரறிவார்கள். மேற்கூறிய ஐந்து பொருள்களும் ஒன்றுக்கொன்று இன்றியமையாத ஸம்பந்தமுள்ளவை.

"வேதமானது ஈசுவரனே முக்கிய கருத்தினுல் அறிவிக்கின்றது. அந்த ஈசுவரனே தபஸ்ஸினுல் அதாவது அவ்வேதத்தில் விதிக்கப்பட்ட கர்ம, ஞான, யோகாதிகளினுல் அடைவிக்கின்றது. அவ்வேதம் அதற்கு அதிகாரிகளான விப்ரர்களினுல் அத்யயனம் செய்யப்பட்டுவருகின்றது. அவ்வேதம் ஈசுவரனுல் பிரம்மதேவனுக்கு கொடுக்கப்பட்டு அதின் மந்த்ரதந்த்ராதிகளினுல் பிரம்மதேவன் ஸ்ருஷ்டித்தொழில்செய்கிறான்" என்று ஒன்றுக்கொன்று ஸம்பந்தமிருக்கின்றது. இவ்வைகளில் எதிலாவது ஒன்றில் த்வேஷம் ஏற்பட்டால் இவ்வைகளிலும் த்வேஷமேற்பட்டு வேதத்வேஷம், தபோத்வேஷம், ஈசுவரத்வேஷம், பிராம்மணத்வேஷம்; பிரும்தேவனிடத்தில் த்வேஷம் ஏற்பட்டு அதோகதியாய் போவதற்கு ஹேதுவாக ஆகின்றதென்பது நிச்சயம். இப்போதிய நிலை இவ்விதம் பரவிவருகின்றது.

நம்மவருள் சிலர் "ராக்ஷஸா: கலிமாச்ரித்ய ஜாயந்தே ப்ரம்மயோனிஷு" ப்ராம்மணனேவபாதந்தே, தத்ராபி ச்ரோத்ரியுகம்க்ருசாந்" என்றபடி ராக்ஷஸர்கள் கலிபுருஷனே ஆச்ரயித்து சிலர் ப்ராம்மணர்களாக பிறக்கின்றனர். ப்ராம்மணர்களையே பீடிக்கின்றனர். அதிலும் வேதமறிந்த ச்ரோத்ரியர்களை ஹிம்ஸிக்கின்றனர் என்றபடி சில ப்ராம்மணர்களே மேற்கூறிய அனர்த்தங்களை விளைவித்துக்கொண்டு தானும் உருப்படாமல் பிறரையும் உருப்படாமல் செய்து வருகின்றனர். ஒரு குருங்கு தான் கெட்டதுமல்லாமல் வனத்திலுள்ளவைகளை எல்லாம் கெடுக்கப்பார்த்ததுபோலாய்விட்டது.

ஆஸ்திகர்களே! இந்த அனர்த்தபரம்பரைக்குக் காரணமென்ன? நம்மவர்கள் நம்முடைய ஆசார விசாரங்களைக் கைவிட்டுவிட்டனர். நம் குழந்தைகளுக்கு நம் சாஸ்திர ஆராய்ச்சி] கற்பிக்கப்படவில்லை. மேல்நாட்டு நடையுடைபாவனை மோஹத்தில் சுடுபடாமல் தடுக்கவில்லை. நமக்குள் சிலர் புத்தியில்கல்பங்களைப் பண்ணி நாஸ்திக வாதம் பேசத் தொடங்கி விட்டனர். நல்ல பழக்கவழக்கங்களே போய்விட்டன. "ஒரார்த்தம்" என்ற கர்மம் சிலவிடத்தில் மாத்திரம் தொங்கிக்கொண்டிருக்கிறது. அதையும் கிழக்கே வங்காளக்கடலில் போடுவோமா? அல்லது மேற்கே அரபிக்கடலில் தூக்கி எறிவோமா? என்று ஸமயம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கின்றனர். தர்வழக்கங்களும் ஸாசாரங்களும் தலைப்பட்டுவிட்டன. இந்நிலைமையில் தர்மமாவது நியாயமாவது, வேதமாவது என்று நம்மவர்களில் சிலர் நம்மையே கேலி பண்ணி வரும் நிலையில் வந்து விட்டது. போதாக்குறைக்கு முந்திரிக்கொட்டை போலும் பின மரத்தில் படரி அல்பாயுஸாக வாடிப்போகும் ஒணங் கொடிபோலும். நாஸ்திக புத்தியை வளரச்செய்யும் சில பத்திரிகைகளும், கிளம்பிவிட்டன. அர்சாங்கத்தின் தற்போதிய நிலைமையோ கூறவே வேண்டாம். வேதஸம்ரக்ஷணார்த்தமாகவே ஏற்பட்டிருந்த ராஜாங்கத்தினர்களின் மார்க்கத்திற்கு "சப்பாத்திக்கள்ளி" முள்ளுகள் பரப்பப்பட்டு நடக்கமுடியாத நிலைமையில் ஏற்பட்டு விட்டது.

நமது இதிஹாஸபுராணங்களே நன்கு ஆராய்ந்து கவனித்தோமானுல் முன்னுளில் இருந்த இப்பரதகண்டத்துச் சக்ரவர்த்திகளும், அவர்கள் சிற்றரசர்களும் வேதம் ஸ்மிருதிகளின் மார்க்கத்தைப் பின்பற்றியே ப்ரஜைகளை பரிபாலித்து அவரவர் தர்மத்தினின்று தவருகாமலும் நடத்திவந்தார்கள். ப்ரஜைகளும் அவ்வாறே நடந்துவந்தார்கள். இக்காலத்தில் கூறப்படும் ஜனநாயகதத்வமோ அக்காலத்தில் தனிப்பட்டு இல்லாமல் சுருதி ஸ்மிருதிகளுக்கு அடங்கியே எகாபிப்ராயமாகவே இருந்ததென்பதற்கு அனேக சரித்ரங்களே சான்ருகும். (தொடரும்)

ஹிந்துஸ்திரீ சொத்துரிமைச் சட்டம்

மீண்டும் திருத்தப்படும்

1937 ஐ ஹிந்துஸ்திரீகளின் சொத்துரிமை சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று ஒரு திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. அதை மத்திய சட்டசபை அங்கத்தினர்களுக்குப் பரிசீலனை செய்ய அனுப்பப்பட்டிருக்கிறது. இந்த மசோதாவைப்பற்றி டெல்லியில் இருப்பவர்கள் அபிப்பிராயம் சொல்லவிரும்பினுல் நேரடியாக மத்ய சட்ட சபைக்கோ அல்லது இந்திய சர்க்காருக்கோ அனுப்பாமல் "டெல்லி பிரதம கமிஷனர்" என்ற விலாசத்துக்கு அனுப்பினுல் கவனிக்கப்படும்.

ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள்

கோவித்தபுரத்துக்கு விஜயம்

ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள் சென்ற 23-10-39 முதலாக இந்நகருக்கு வடகிழக்கேயுள்ள கல்லூர்கிராம வாசிகளின் ப்ரார்த்தனைக்கு இணங்கி எழுந்தருளியிருந்தார்கள். கவராத்திரி பூஜைகளுக்குப்பின் விஜயம் செய்த முதல் ஊர் இதுவேயாகும். ஸ்ரீ ஆசார்யாள் இப்பொழுது மௌன விரதம் கீங்கி பக்த கோடிகளுடன் ஸம்பாஷிக்கிறார்கள். வியாஸ பூஜைக்குப் பிறகு வில்வரூப யாத்திரை சென்றிருக்கையில் வேப்பத்தூரில் 26-10-39-ல் எழுந்தருளியிருந்தார்கள். அதற்குச்சமீபமாக கோவித்தபுரத்தில் மேற்படி பீடத்தின் பூர்வகமாக எழுந்தருளியிருந்த பூர்வ ஆசார்யாள் திருநக்ஷத்திரம் நடந்த அன்று ப்ரம்மண சுகர்ப்பணியும் நடந்தது. வேப்பதூரில் பூஜை, தீர்த்தம் வழங்கியபின் ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாள் நிஜரென்று ஒருவரும் அறியாமல் கோவித்த புரம் புறப்பட்டார்கள். யாரும் உடன் செல்லவில்லை. மழையோ அபாரமாய் பெய்து கொண்டிருந்தது காவிரியிலும் வீராசோழனிலும் இருகரையும் வெள்ளப்பெருக்கு. ஸ்ரீ ஆசார்யாள் தன் குருவிடம்கொண்ட பக்தியே பக்தி! கொட்டும் மழையில் ஆறு இரண்டையும் கடந்து கோவித்தபுரத்தில் சமாராதனை நடக்கிற இடத்திற்கு வந்தார்கள். அங்கிருந்த பக்தகோடிகள் ஆசார்யாளைக்கண்டு ஆனந்தமுற்றார்கள். பக்தகோடிகளை அனுக்ரஹித்து பூரிகொடுத்துவிட்டு உடனே வேப்பத்தூருக்குத் திரும்பி வந்தார்கள். ஸ்ரீ ஆசார்யாளை நிஜரெனக்காணுமல் வேப்பத்தூர் முகாமில் விசேஷமான பரபரப்பு உண்டாகி விட்டது. சிறிது நேரத்திற்கெல்லாம் ஸ்ரீ ஆசார்யாள் வந்துவிட்டதும் அவர்களுக்கு எற்பட்ட ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

(ஒ. நி)

மதுரை

வத்யாக்ரஹத்துக்குப் பாராட்டு

மே. த. கோகுல்நாத் மகாராஜ் தந்தி

ஆலய சம்ரக்ஷண ஸமிதி தலைவர் ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யருக்கு பம்பாயிலிருக்கும் மே. த. கோகுல்நாத் கோஸ்வாமி திகூஷித்ஜீ பவசாகேப் மகாராஜா 28-10-39 தேதி ஒரு தந்தி அனுப்பியுள்ளார். அதில் அவர் "நின்சரி மதுரை சத்யாக்ரஹத்தைப் பற்றிய அறிக்கைகளைப் பார்த்து வருகிறோம். ஆட்வரும் பெண்டிரும் சத் இயக்கத்துக்கு ஆதரவு காட்டிவருவது போற்றுதற்குரியது. கனம் ஸ்ரீ ராஜகோபாலாசாரியாரின் அடக்குமுறையைக் கண்டித்து அஹிம்ஸா யுத்தத்தில் ஸனதனிகள் நியாகம் செய்வதைப் பாராட்டுகிறேன். உண்ணவிரதக்கொள்கையை நான் ஆதரிக்கிறேன். ஸ்ரீ நடேசய்யர் கலைமையில் ஸனதனிகள் தைர்யமாக போராடவேண்டும். வெற்றி கிடைக்க ஆண்டவன் அருள் புரிவாராக.

இந்த இயக்கத்துக்கு என்னுல் ஆன உதவியை அளிக்கத் தயாராயிருக்கிறேன்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியமருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

ஹிமாலயம், திபேத், நேபால்

கஸ்தூரி, சிலாஜிட், குங்குமம்

(சுத்தமானதென்றும், கலப்பற்றதென்றும் உத்திரவாதம் செய்கிறோம்).

கஸ்தூரி	ஒரு தோலா.	ரூ 25—0—0
சிலர்ஜிட் (புடமிட்டது)	,,	ரூ 1—0—0
குங்குமம் (கேசர்)	,,	ரூ 2—8—0.

(ஒரு தோலா என்பது ஒரு ரூபாய் எடையாகும்) எற்படும் தபால் சார்ஜ்—பாக்கிங் சார்ஜ் அனியாச உண்டி கடிதப்போக்குவரத்து ஹிந்தியிலாவது, ஆங்கிலத்திலாவது நடத்தவும்.

கிடைக்குமிடம்:— PREM LAL SHAH GANGOLA,
ALMORA (Himalayas) U. P.

ஸரஸ்வதி பூஜையும் விஜயதசமியும்

(ஆங்கரை ஸ்ரீ ரங்கஸ்வாமி சாஸ்திரிகள்)
வேதாந்த உபாத்யாயர், ராமமந்திரம்
பாடசாலை, கும்பகோணம்.)

மரக்கண்டேய புராணத்தில்

शरत्काले यापूजा क्रियते याच वार्षिकी ।
तस्यां ममैतन्माहात्म्यं श्रुत्वा भक्ति समन्वितः ।
सर्वबाधाविनिर्मुक्तः धनधान्यसमन्वितः । मनुष्यो
मत्प्रसादेन भविष्यति न संशयः ॥

என்று ஆசுவயுஜ சுக்கில பக்ஷத்தில் செய்வதாகக்கூறியுள்ள பூஜையே ஸரஸ்வதி பூஜை எனக் கூறப்படுகின்றது. இஃது ஆஸேது ஹிமாசலம் பரத வர்ஷத்தில் பெரும்பாலும் எல்லா மதத்தினராலும் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது. வேறு புராணத்திலும்

मूलेनावाहयेदेवीं पूर्वाषाढा सुपूजनं । उत्तरासु
बलिं दद्यात् श्रवणेन विसर्जयेत् ॥

என்று இந்தப்பூஜையின் கிரமம் கூறப்பட்டிருக்கின்றது, அநேகர் மூல நக்ஷத்திரத்தில் ஸரஸ்வதியை ஆவாஹனம் செய்து பூராட நக்ஷத்திரத்தில் பூஜை முறையே நடத்தியும் அஷ்டமியன்று பலிப்பிரதானம் செய்துவருவதும் வடதேசங்களில் காணலாம். இங்காட்டில் பெரும்பான்மையோர் நவமியன்றே ஆவாஹனம் செய்து நடத்தி தசமியில் விஸர்ஜனம் செய்யாநிற்கின்றனர். சிலர் துர்க்காலக்ஷ்மி ஸரஸ்வதிபூஜையென்ற பெயருக்கிணங்க ஒன்பது நாளும் நியமத்துடனிருந்து முதல் மூன்றுநாட்கள் துர்க்கா தேவியையும் இடையில் மூன்று நாட்கள் லக்ஷ்மீதேவியையும் கடைசி மூன்று நாள் ஸரஸ்வதிதேவியையும் வழிபடா நிற்கின்றனர். ஒரே நாள் பூஜிக்கின்றவர்கள்கூட தமது மனையில் அம்மன் கொலுவிருக்கையென விழா நடத்தி விசித்திரமான பொம்மைகளால் நிறைக்கின்றனர். உண்மையில்

विद्या प्रदानसमये शरदिन्दु शुभ्रां लक्ष्मी प्रदानसमये नवकुंकुमाभां । विद्वेषिवर्गविजये वितमालनीलां देवीं त्रिलोक जननीं शरणं प्रपद्ये ॥

என்றபடி மூன்றுவித சக்திவடிவமான ஒரே தேவதையையே ஒன்பதுநாளும் மூன்று நாளும் ஒரு நாளுமாக யதாசக்தி பூஜித்து வருகின்றார்களென்பது பொருத்தம். ஆயுத பூஜையென்பதாகக் கருதித் தொழிலாளிகள் தந்தம் கருவிகளையும், கடைக்காரர்கள் படி மரக்கால் தராசு முதலியவைகளையும் பூஜித்து வருவதும் இதை வலியுறுத்தும். ஸ்ரீ துர்க்கா தேவியானவள் தவம்புரிந்து மஹிஷாஸுரமர்த்தனம் செய்ததாகவும் பெரியோர்களுரைப்பர். மதகைடபர்கள் மஹிஷாஸுரன் தூம்ரலோசனன் சண்டமுண்டர்கள் ரக்தபீஜன் சும்பநிசும்பர்கள் என்ற அஸுரர்களை வதம் செய்த ஸ்ரீ பரதேவதையின் திருலீலையாடலை அனுசந்தித்தலெனவும் ஒரு சாரார் கூறுகிறார். இங்ஙனமிருக்க, விஜயதசமியைச் சிறிது ஆராயலாம். பெயரினாலேயே விஜயத்தைக்கொடுக்கவல்ல இத்தினத்தில் எல்லோரும் தத்தம் காரியங்களில் ஜயம் பெறவேண்டி தொடங்குகிறார்கள். விப்ரர்கள் வேதமோதுகிறார்கள். அரசர்கள் விஜயயாத்திரை புறப்படுகிறார்கள். வணிகர்கள் வியாபாரங்களை ஆரம்பிக்கிறார்கள். மற்றவர்களும் மற்றைய காரியங்களைச் செய்ய யத்தனிக்கின்றார்கள். சூன்னியமாதம் என்று எவ்வித சுபகாரியங்களுக்கும் அனர்ஹமாய் நிஷேதிக்கப்பட்டுள்ள புரட்டாசி மாதத்தில் உத்தராயணத்தில் செய்யும்படி விதிக்கப்பட்டுள்ள அக்ஷராப்பியாஸத்தை மாணவர்களுக்கு ஆன்றோர்கள் ஆரம்பிப்பதால் விஜயத்தை முன்னிட்டேயன்றோ? சமீயென்ற அசுரனைக்கொன்ற தினமென்றும் அது பற்றியே தேவாலயங்களினின்றும் ஸ்வாமியை அம்புபோடவேண்டி சமீ மரத்தடிக்கு எழுந்தருளச் செய்கின்றனரென்றும் ஆகமமறிந்த பெரியோர் சாற்றுவர். ஆதலால் சமீ பிரார்த்தனையின் பொருளையும் விஜயதினத்தில் பட்டாபிஷேகம செய்யும் பான்மையையும் உணர்ந்து பாரதமக்கள் யாவரும் க்ஷேமத்திற்காகவும் பிரதிவருஷம் இல்லங்கள்தோறும் கொண்டாடுவார்களாக!

Printed by S, Kalyanasundram at the Sri Janardhana Printing Works, Ltd., Kumbakonam,
Published by A. Gopaladesikachari and S. Kalyanasundram,





926 926

REGD No. M. 2913. ARYADHARMAM TAMIL WEEKLY Estd. 1915

215307 605

ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஒரணா.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

தி-24 | கும்பகோணம் பிரமாதி-ஐ கார்த்திகை-மீ 1உ 1939 ஐ நவம்பர்-மீ 16உ | ஸ-45

வைசிராயிக்கு விக்ஞாபனம்

ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யர் அறிக்கை

"ஆலயப்பிரவேச பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்க"

அகில இந்திய வர்ணச்ரம சுயராஜ்ய சங்கத்தின் தலைவர் ராவ்சாகேப் என். நடேச அய்யர் இராஜப்பிரதிநிதிக்கு ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக நீண்டதோர் விக்ஞாபனத்தைச் அனுப்பித்திருக்கிறார். சென்னையிலிருந்த மாஜி மந்திரி சபை மதவிஷயங்களில் தலையிட்டுப் புரட்சி புண்டுபண்ணிய தன் காரணமாக இந்த விக்ஞாபனத்தை இராஜப்பிரதிநிதிக்கு அனுப்ப வேண்டி வந்தது. காங்கிரஸ் பிரதிநிதித்துவம் வாய்ந்த சபையல்லவென்பது சென்ற 2, 3 வாரங்களாக நிகழ்ந்துவரும் சம்பவங்களிலிருந்து தெரியவரும். காந்தியே 'காங்கிரஸ் ஹிந்துக்களின் பிரதிநிதியல்ல வென்று' 'ஹரிஜனில்' கூறியிருப்பதாகச் சொல்லப் படுகிறது ஆகவே காங்கிரஸ் சனுதனிகளின் பிரதிநிதியல்லவென்றும், இந்திய ஸனுதனிகளின் பிரதிநிதி வர்ணச்ரம சுயராஜ்ய சங்கமே தான் என்றும், இதை முன்பிருந்த ராஜப் பிரதிநிதி வெல்லிங்டன் பிரபு அங்கீகரம் செய்திருக்கிறார் என்றும், அவர் விக்ஞாபனத்தில் கூறியுள்ளார்.

"காங்கிரஸ் மந்திரி சபையார் செய்த விவசாயக் கடன் சட்டம், மதுவிலக்குச் சட்டம், விற்பனைவரிச் சட்டம், புகையிலை வரிச்சட்டம் முதலியவற்றால் ஜனங்களுக்கு அனுகூலமில்லை. அவை கெடுதியையே விளைவித்திருக்கின்றன. இத்துடன் ஆலயப் பிரவேசச்சட்டமும் கொண்டுவரப்பட்டது. இதற்காக புதிதாக சர்க்கார் ஓர் அவசரச் சட்டத்தையும் கொண்டு வந்தார்கள். அது விநோதமான சட்டம். கவர்னர் அரசியலின் படி தாம் ஒன்று செய்ய முடியாது போகவே, எங்களுக்கு உதவி செய்ய முடியாமற் போய்விட்டது. மந்திரி சபை வேண்டு மென்றே அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்திருக்கிறது. இதைப்போல எப்பொழுதும் செய்தது கிடையாது. இதற்கு தேசம் பூராவும் எதிர்ப்பிருக்கிறது. மதுரை மீனாட்சி கோவிலுக்குத் தரிசன நிமித்தம் சென்று கொண்டிருந்த பக்தர்கள் ஆலயப்பிரவேசத்துக்குப் பின்பு அங்கு போவதில்லை. யாருக்காக இந்த ஆலயப்பிரவேசம் கொண்டு வரப்பட்டதோ அவர்களே இந்த ஆலயப் பிரவேசத்தை எதிர்க்கின்றனர்.

யுத்தம் முடியும்வரையில் ஆலயப்பிரவேச சட்டத்தை நிறுத்திவைக்கும் படி வேண்டுகின்றனர். இனிமேற்கொண்டு எந்தக்கோயில்களையும் நிறக்கக்கூடாது. சென்னை சர்க்காருக்கும், ஹிந்து மதபரிபாலன போர்டாருக்கும் உத்தரவிடவேண்டும். ஆலயப்பிரவேசம் கடந்த கோயில்களில் ஸம்ரோக்ஷணம் செய்யும்படி நிர்வாக அதிகாரிகளுக்கு உத்தரவிடவேண்டும். பிரிட்டிஷ் பார்லிமெண்டுக்கும், மன்னர்பிரானுக்கும் இச் சட்டத்தை உடனே ரத்து செய்யும்படி பொர்சு செய்யவேண்டும்." என்று விக்ஞாபனத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.

(ஈ. நி.)

கும்பகோணம் பாங்கி, லிமிடெட்
கும்பகோணம்.
1904-ஐ ஆரம்பித்தது
மூலதனம் (வரவு வந்த பங்கு தொகை) ரூ. 2,82,575
ரிஸர்வ்பண்டுகள் ரூ. 1,96,205
ஜே ஆபீஸ்கள்:
மன்னார்குடி, நாகப்பட்டணம், நன்னிலம், அய்யம்பேட்டை.
தவணை டிபாஸிட்டுகள்: நிச்சயிக்கப்பட்ட வட்டி வீதத்திற்கு வாங்கிக்கொள்ளப்படும்.

3 மாதத்திற்கு	3	பர்சென்டு	வீதம்
4	"	3½	"
6	"	4	"
12	"	4½	"

S. Mahalinga Iyer, B.A., B.L.,
Managing Director.

காந்திஜி ஹிந்துக்களின் பிரதிநிதியல்ல.

ஹிந்து மஹாஸபையின் ஆக்ஷேபம்

வைஸ்ராய் அவர்கள் காந்திஜியுடனும் காங்கிரஸுடனும் கடந்தவரும் ஸமரஸப் பேச்சு விஷயமாகத் தங்களுடைய ஆக்ஷேபத்தைத் தெரிவிக்க நாகபுரி ஹிந்துக்களின் கூட்டமொன்று கடந்தது.

டாக்டர் மூஞ்சே தலைமை வஹித்தார். காங்கிரஸும் காந்தியும் ஹிந்துக்களின் பிரதிநிதிகளல்ல வென்றும், ஹிந்துக்கள் சார்பாக அவர்கள் பேச உரிமை கிடையாதென்றும், ஹிந்து ஸபையைக் கேளாமல் வருப்பு பிரச்னை ஸம்பந்தமாகச் செய்யப்படும் எந்த முடிவும் ஹிந்துக்களைக் கட்டுப்படுத்தாதென்றும் தீர்மானம் செய்து வைஸ்ராயிக்கு அனுப்பப்பட்டது.

மந்திரிகளின் தற்கொலை

(என். சாம்பசிவய்யர், பீ ஏ, பீ. எல்.,)

மந்திரிகள் ராஜீநாமா செய்து விட்டார்கள். அவ்விதம் ராஜீனமா செய்தது நியாயமா, அவச்யமா வென்ற விஷயத்தில் அபிப்பிராய பேதங்கள் இருக்கலாம். ஆனல் நீர்மானமானது காங்கிரஸ் காரிய கமிட்டியாரால் செய்யப்பட்டிருக்கிறபடியால் அது பிசகென்று அபிப்பிராயப்பட்டாலும் கூட காங்கிரஸ் கமிட்டிகளைச் சேர்ந்தவர்கள் அதை ஆக்ஷேபிப்பதற்கில்லை, அவ்வித அசக்தர்ப்பமான ஸ்திதியில் நாம் இல்லாததால் அதனுடைய நீதியைப் பற்றி கொஞ்சம் கவனிக்கலாம்.

முதலில் எதற்காக ராஜீகாமா செய்தார்கள் என்று சற்று கவனிப்போம். ஆங்கிலேய ராஜாங்கத்தார் தாங்கள் எதற்காக இந்த யுத்தத்தில் சம்பந்தப் பட்டார்களென் பதை வியக்தமாக சொல்ல மறுத்து விட்ட படியாலும் யுத்தம் முடிந்தவுடன் இந்தியாவுக்கு ஸ்வராஜ்யம்கொடுக்க வாக்குத்தத்தம் செய்யமாட்டோம் என்று சொன்னபடியாலுமென்று தெரிகிறது. எதற்காக யுத்தத்தில் இடுபட்டிருக்கிறார்களென்பது நமக்கு தெரியாவிட்டாலல்லவோ அவர்களை நாம் கேள்க்கவேண்டும்? அல்லது இப்போது கேள்க்கிறார்களே, அவர்களுக்குத்தான் தெரியவில்லையா? இவர்கள் கேள்பதற்காக அவர்கள் இல்லாத விஷயத்தைச் சொல்லி அதைக்கேட்டுக்கொள்வதில் இவர்களுக்கு என்ன நிருப்தி? அல்லது இவர்களே தாங்கள் மந்திரி பதவிகளை ஏற்றுக்கொள்வதற்கு முந்தி சொன்ன வார்த்தைகளை கொஞ்சமும் கவனியாமல், மந்திரி பதவியை அடைந்த பிறகு காரியங்களை செய்யும்போது, அவர்களும் இவர்களுடைய நிருப்திக்காக ஏதாவது சொல்லிவிட்டு பிந்தி அந்த வார்த்தைகளை நிறைவேற்றத்தான் வேண்டுமென்று சொல்வதற்குத் தான் இவர்களுக்கு என்ன பாத்யமிருக்கிறது?

ராஜீனமா செய்வதில் ஏதோ பெரிய தத்வம் இருப்பதாகச் சொல்லுகிறார்கள். சாதாரணமான வியக்திகளுக்கு அந்ததத்வம் வெளிப்படாதது போலிருக்கிறது. ராஜீகாமாவுக்குப்பிறகு முக்ய மந்திரிகள் பேசுவதைப்பார்த்தால் எந்தக் காரணத்தை கொண்டாவது காரிய கமிட்டியில் இவ்விதம் தீர்மானம் செய்யமாட்டார்களா வென்று ஆவலுடன் எதிர்பார்த்து வந்திருப்பது போல் தோற்றுகிறது. இவர்களுடைய ராஜீநாமா சிறிய பள்ளிக்கூடங்களில் படிக்கும் குழந்தைகள் ஏதோ காரணத்திற்காக பள்ளிக்கூடத்தை சாத்தினுல் சந்தோஷப்படுவது போல் இருக்கிறதே தவிர, பெரிய காரியத்தை பொறுப்புடன் ஒப்புக்கொண்டவர்கள் அதை சரிவர சாதிக்கவேண்டுமென்ற எண்ணத்துடன் இருப்பதாகத் தெரியவில்லை. இதுவரையில்அவர்கள் மந்திரிகளாக இருந்து நடத்தியிருக்கும் காரியங்களைப்பார்க்கும் போதும் குழந்தைகள் விளையாடினது போல் இருக்கிறதே தவிர ராஜ்யபாரம் வகித்தவர்களாகத் தெரியவில்லை. கட்டுப் படுத்த முடியாத காரியத்தில் உத்சாகத்துடன் குழந்தைகள் பிரவர்த்திப்பதுபோல் இருக்கிறது அவர்கள் குடியை நிறுத்தச் சட்டம் செய்தது. தகப்பனுக்கு அதிருப்தியாக இருந்தாலும் தாயாருக்கு திருப்தியாக குழந்தைகள் பேசுவது போல் இருக்கிறது, அவர்கள் விவசாயிகளுக்கு சௌகர்யமான மசோதா ஏற்பாடுசெய்தது. தெய்வம் ஒன்று இருப்பதை அறியாத குழந்தைகள் தகாத காரியத்தில் இடுபடுவது போல் இருக்கிறது. அவர்கள் ஆலயப்பிரவேசத்திற்காக பாடுபட்டது. செய்வதாகச் சொல்லி வந்து, அவச்யமாகவும் நியாயமாகவும் செய்ய வேண்டியதான காரியங்களுக்கேற்பாடு செய்து வருவதாகச்சொல்லி வந்து, தொப்பென்று போட்டுவிட்டு வெளியில் ஓடி வந்து விட்டார்கள். இவைகளெல்லால் பொறுப்பு என்ற பதத்தை லவலேசமாவது உணர்ந்தவர்கள் செய்யக் கூடியகாரியமா?

குத்தமுள்ளநெஞ்சம் குறுகுறு வென்கும் என்று சொல்லுவது போல் ராஜீகாமா செய்தவுடன் பேசுகையில், தாங்கள் ஆலயப்பிரவேச விஷயமாக நடத்தின காரியங்களின் பலனுக ராஜீனமா செய்யும்படி நேர்ந்ததென்று சனதனிகள் சந்தோஷப்படுவார்களென்று சொல்லுகிறார் ராஜாஜீ. சாவகாசமாக சம்பந்தியுடன் மேல் யோசனைகள் செய்கிறார் போதும்? கூடியவரையில் அவச்யமான காரியங்களில் இடுபடமுடியாமல் தன் காரியங்களை கவனித்து வந்தார் ஸ்ரீ பிரகாசம். ராஜீய காரியங்களில் முக்யமான நோக்கமேதுவிர அவருக்கு, ஸ்ரீமான்கள் ராஜாஜி ராஜன் இவர்களைப்போல் ராஜாங்கத்தில் நியாயமான காரியங்களை இரண்டாம் பக்ஷமாக வைத்து அட்டூழியங்கள் செய்ய தக்கமில்லாமல் அல்லவில்லை.

தாயார் பொறுத்திருந்தால் வீரனை குமரனுக்கு பொறுக்க முடியவில்லை. பூர்வ ஜன்மங்களில் தன்னுடைய சொந்த அபிப்பிராயத்திற்கில்லாமல் தன்னுடையயஜமானனுடைய உத்தரவை நிறைவேற்ற வேண்டியஜமானனுடைய சத்துருக்கள் வீட்டில் போய் ஊணினை அவர்கள் தேகங்களில் ஏற்றிகொன்னையடித்து இம்சை செய்தவர், தன்னுடைய் அபிப்பிராயத்திற்கோ, சௌகர்யத்திற்காகவோ வல்லாமல் எஜமானனுடைய உத்தரவை நிறைவேற்றுவதென்ற சங்கல்பத்தோடுமாத்திரம் செய்த இம்சையை தானே முருகன் சன்னதியில் சந்தோஷமாக தேகத்தில் ஊசியை ஏற்றிக்கொண்டு காவடியெடுத்து பாபத்தை பிராய்சித்தம் செய்துகொள்வதுபோல் இப்படிப்பட்ட அக்ரமங்களை செய்ததின் பலனுக தாங்களே அனுவச்யமாக ஓர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக்கொண்டு வெகு ரௌரவப்பட்டு பலருடைய அபிப்பிராயங்களையெல்லாம் ஸ்ரீமான் சத்யமூர்த்தியினுடைய வாக்கின் சாதுர்யத்தைக்கொண்டு சமாதானப்படுத்தி எலக்ஷன்களில் படாதபாடுகள் பட்டு கிடைத்த உத்யோகங்களை யாரோ தன் தலியில் தானே மண்ணேவாரிப்போட்டுக்கொள்ளுவதுபோல் ஒரு நிமிஷத்தில் உதறி எறிந்துவிட்டு வந்ததுமன்னியில் இனி எனக்கு அந்த பதவி வேண்டாமென்று கதறுகிறார்கள். அவ்விதம் கதறுவதும் ஸ்ரீமான்கள் ராஜனும் ராஜாஜியுமே. இது தற்கொலையா அல்லவா நன்முக யோஜிக்க வேண்டியதுதான்.

(3ம் காலம் தொடர்ச்சி)

மொழிபெற முயற்சிக்கலாம். இவ்வாறு செய்தால் புதிய அனர்த்தம் ஏற்படாமல் தடுப்பதுடன் பழையதிங்கையும் பரிஹரிக்க வழி பிறக்கும்.

தாற்றுக்கணக்கான் கடிதங்களும் தந்திகளும் கவர்னர், கவர்னர் ஜனரல் ஆகியவர்களிடம் குவியும்படி செய்யவேணும்.

முக்யமாக, மாகாண சுய ஆட்சி நிட்டத்தில் மத விஷயத்திற்கு தகுந்த பாதுகாப்பு அளிக்கும்படி இந்தியா கவர்ன்மெண்ட் சட்டத்தை உடனே திருத்தவேண்டுமென் பதை நாம் கட்டுப்பாடாக வற்புறுத்திக்கிளர்ச்சி செய்யவேண்டும்.

கவர்னரிடம் உறுதிபெற வேண்டும்

இந்தியாவின் ராஜீய நிலைமையானது அடியோடு மாறி நிற்கிறது. காங்கிரஸ் மந்திரிகளிருந்த மாகாணங்களில் மாகாண சுய ஆக்ஷி முறிந்து போய் கவர்னரின் ஆக்ஷியே நடைபெறுகிறது. இந்த நிலைமை எவ்வளவு காலம் நீடிக்குமென்பது தெரியவில்லை. ஆயினும் வைஸ்ராய் நடத்திய ஸம்ரஸ்பேச்சு முறிந்து விட்டதிலிருந்து சீக்கிரத்தில் ஸாதாரண நிலைமை ஏற்பட வழியில்லையென்பது நிச்சயமாகிறது. மாகாணங்களில் மறு எலெக்ஷன் நடத்தவேண்டிய நிலைமை ஏற்பட்டபோதிலும் எந்தக் கக்ஷியார் அதிகாரம் வஹிக்க வருவார்க ளென்பதும் நிச்சயிக்கக் கூடியதல்ல.

ஆகவே கவர்னர் ஆக்ஷியே நீடிக்குமென் பதில் ஸந்தேஹமில்லை.

நம்மை மாகாணத்தில் ஆலயப்பிரவேசச் சட்ட நிமித்தமாக அதிருப்தி அதிகரித்து காங்கிரஸ் மந்திரி ஸபை மாறவேண்டுமென்று பலர் எதிர்பார்த்தனர். ஜமீன்தார்கள், நிலச்சுவான்தார், வியாபாரி, லேவாதேவிக்காரர் போன்ற வேறுபல பிரிவினரும் காங்கிரஸ் மந்திரி ஸபை மாறுவதை அபேக்ஷித்தனர். தெய்வ கதியாக இப்போது அதுமாறியிருக்கிறது.

இந்த நிலைமையில் ஏற்கனவே மந்திரிகளால் பொது ஜன அபிப்பிராயத்திற்கு விரோதமாக, மெஜாரிடி பலத்தால் நிறைவேற்றப்பட்டு ஆக்ஷேபத்திலிருந்து வரும் சட்டங்களையோ, நீர்மானங்களையோ தற்போதிய கவர்ன்மெண்டார் மாற்றுவார்களா? அதற்கு அதிகாரமுண்டா, என்ற விஷயம் ஆலோசிக்கப்படவேண்டும். முக்யமாக பதித்த விவரத்திற்குள்பட்டிருக்கும் ஆலயப்பிரவேச சட்டத்தைப் பற்றியும், அதன் அநுஷ்டானத்தைப்பற்றியும் இனி என்ன நடக்கும்? எதாவது மாறுதல் நடக்குமா?

இதைப்பற்றி ஸுதேசமித்திரன் எழுதுகையில்,ஏற்கனவே ஆலயப்பிரவேசம் நடந்த கோவில்களின் நிலைமை அப்படியே இருக்குமென்றும், புதிதாக எந்தக்கோவிலிலும், ஆலயப்பிரவேசம் நடத்த கவர்னரும் அவர்துணைகளும் இசைவது கஷ்டமென்றும் ஸூசனம் செய்திருக்கிறது.

கவர்னரின் நிலைமை ஏற்கனவே ஒரு மாதிரியானது. இப்போதோ வேறுமாதிரியானது.மூன்று காங்கிரஸ் மந்திரிகள் சொற்படி தாக்ஷிண்யத்திற்குக் கட்டுப்பட்டு நடக்க வேண்டியிருந்தது. இப்போதோ இப்படியில்லை. இப்போது அவர் ஸ்வதந்திரமாக ஒரு விஷயத்தை முடிக்க ஸ்வாதீனமுள்ள நிலைமையிலிருக்கிறார்.

நமக்கு இப்போது வேண்டியது இரண்டு. புதிதாக கோவில்களைக் கெடுக்காமலிருக்க வேண்டும். ஏற்கனவே இழந்த கோவில்களை மீட்கவேண்டும். இரண்டு காரியத்திற்கும் நாம் இப்போது மீண்டும் அமைதியான முறையில் தீவ்ர இளர்ச்சி நடத்த வேணும். காங்கிரஸ் மந்திரிகளைப்போல் அதம்பாவமாக கவர்னர் பொதுஜன அபிப்பிராயத்தை அலட்சியம் செய்யக்கூடியவரல்ல. நம்முடைய இளர்ச்சியின் பலத்தைப் பொறுத்து தகுந்த பலன் கிடைக்குமென்று தோன்றுகிறது.

ஆகையால் மடாதிபதிகள், தனிப்பட்ட பெரிய மனிதர்கள், பொதுஜனங்கள் யாவரும் கடிதமூலமாயும், பொதுக்கூட்டமூலமாயும் முன்போல் பலத்த இளர்ச்சி செய்வதுடன், தூதுகோஷ்டி சென்றும் கவர்னரைக்கண்டு அவரிடமிருந்து தக்க உறுதி

(தொடர்ச்சி 2ம் காலம்.)

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

மூகபஞ்சசதி.

மந்தஸ்மித சதகம்.

9—11—39. தொடர்ச்சி)

75. ஹேரம்பேச குஹேச ஹர்ஷ பரிதம் வாத்ஸல்ய மங்கூரயன். மாத்ரோஹிணி பூருஷே ஸஹ
[புவம் ப்ரேமாங்குரம் வ்யஞ்ஜயன் |
ஆநம்ரேஷு ஜநேஷு பூர்ண கருணைவதக்ய முத்தாளயன் காமாக்ஷி! ஸ்மிதமஞ்ஜரீதவ கதம்
[காரம் மயா கத்யதே ||

காமாக்ஷி! காமாக்ஷியே. ஹேரம்பேச, விநாயகரிடத்திலும், குஹேச- ஸுப்ரமண்யரிடத்திலும் ஹர்ஷ பரிதம்- ஸந்தோஷம் நிறம்பிய. வாத்ஸல்யம்- அன்பை, அங்கூரயன்- வெளிப்படுத்திக் கொண்டு. மாத்ரோஹிணி- மன்மத சத்ருவான. புருஷே, பரமசிவனிடம். ஸஹபுவம்- சரீரத்தோடு பிறந்த. ப்ரேமாங்குரம்-பிரியை. வ்யஞ்ஜயன்- வெளிப்படுத்திக்கொண்டு, ஆனம்ரேஷு- நமஸ்கரிக்கிற ஜனேஷு- ஜனங்களிடம். பூர்ணகருணைவதக்ஷ்யம்- பரிபூர்ணமான கருணையின் மஹிமையை. உத்தாளயன்- அதிகப்படுத்திக்கொண்டுமிருக்கிற. தவ- உன்னுடைய. ஸ்மித மஞ்ஜரீ- புன்சிரிப்பானது. கதம் காரம்- எவ்விதமாக. கத்யதே- வர்ணிக்க முடியும்.

76. அச்ராந்தம் பரதந்த்ரித: பசுபதி: த்வன்மந்தஹாஸாங்குரை: ஸ்ரீ காமாக்ஷி! ததீயவர்ண ஸமதா
[ஸங்கேத சங்காமஹே |
இந்தும் நாகதுநீம்ச சேகரயதே மாலாம்ச தத்தே நவை: வைகுண்டை ரவகுண்டனம்ச குருதே
[தூளீசயை: பாஸ்மநை: ||

ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே! அச்ராந்தம்- எப்போதும். த்வன் மந்தஹாஸாங்குரை;— உனது புன்சிரிப்புக்களால். பரதந்த்ரித:— பரவசனுக்கப்பட்ட. பசுபதி:— பரமசிவனுனவர். தத்தீயவர்ண ஸமதா ஸங்கேத- அந்தச்சிரிப்பின் நிறத்துக்கு ஸமமாக நிறத்தை அடைய வேண்டு மென்ற எண்ணத்தால். இந்தும்- சந்திரனையும். நாகதுனீம்ச- கங்கையையும். சேகரயதே- சூடிக்கொண்டிருக்கிறன். நவை:— புதிதான. வைகுண்டை;— கபாலங்களால் மாலாம்ச- மாலையையும். தத்தே- தரித்துக்கொள்ளுகிறன். பாஸ்மநை:— விபூதியினுடையதான, தூளீசயை:— தூளிகளால் அவகுண்டனம்ச, கவசத்தையும், குருதே- செய்து கொள்ளுகிறனென்று சங்காமஹே- நினைக்கிறேம்.

77. ஸம்க்ருத்த த்விஜ ராஜ கோபி அவிரதம் குர்வன் த்விஜை; ஸங்கமம், வாணீ பத்ததி தூரதோ
(பிஸ்ததம் தத்ஸாஹ சர்ய்ம் வஹன் |
அச்ராந்தம் பசுதூர்ல போபி கலயன் பத்யௌ பசூனும் ரதிம், ஸ்ரீ காமாக்ஷி! தவஸ்மிதா ம்ருத
(ரஹஸ்யந்தோமயி ஸ்யந்ததாம் |

ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே, ஸம்க்ருத்தத்விஜ ராஜகோபி- த்விஜ ராஜனுடை (சந்திரனுடை) கோபமுள்ளதாயிருப்பினும், அவிரதம்- எப்போதும், த்விஜை;- த்விஜர்களோடு (பற்களோடு) ஸங்கமம்- சேர்க்கையை. குர்வன்- செய்கிறதாயும் வாணீ பத்ததி தூரதோ- பி- வாக்கின் வழிக்கு தூரத்திலிருந்த போதிலும். ஸததம்- எப்போதும், தத்ஸாஹசர்யம்- அந்த வாணியின், அதாவது ஸரஸ்வதியின் ஸாம்யத்தை, வஹன்- வஹிப்பதாயும், அச்ராந்தம்- எப்போதும், பசுதூர்லபோ- பி- பசுக்களுக்கு (அக்ஞானிக்கு) தூர்லபமாயிருக்கதபோதிலும், பசுநாம் பத்யௌ- பசுபதியான பரமசிவனிடம், ரதிம் கலயன்- பிரீதியைச் செய்வதாயுமிருக்கிற, தவ- உன்னுடைய, ஸ்மிதாம்ருதஸ்யந்த:— புன்சிரிப்பாகிற அமிருதத்தின் ரஸப்பெருக்கானது, மயி- என் பேரில், ஸ்யந்ததாம்- வருஷிக்கட்டும்.

78. ஸ்ரீ காமாக்ஷி! மஹேச்வரே நிருபமப்ரேமாங்குர
[ப்ரக்ரமம் |
நித்யம் யஃ ப்ரகடீகரோதி ஸஹஜா முந்நித்ரயன்
[மாதுரீம் |
தத்தாத்ருக் தவ மந்தஹாஸலஷ்மா மாதஃ
[கதம் மானிதாம் |
தந்மூர்த்ஞ ஸ்ரநிம்நகாம்ச கலிகா மிந்தோச்ச
[தாம் நிந்தஜி!

மாத:- தாயாரான ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே ஸஹஜாம்- ஸ்வபாவத்திலுள்ள, மாதுரீம்- இனிப்பை உந்நித்ரயன்-வெளிப்படுத்துகிற ய:- யாதொரு மந்தஹாஸமானது. நித்யம்- எப்போதும் மஹேச்வரே- மஹேச்வரனிடத்தில், நிருபமப்ரேமாங்குர- ப்ரக்ரமம்- நிகரற்ற அன்பின் அங்குரத்தை, ப்ரகடீகரோதி- வெளிப்படுத்துகிறதோ, தாத்ருக்- அப்பேர்ப்பட்ட, தவ- உனது மந்தஹாஸலஷ்மா- புன்சிரிப்பின் காந்தியானது, தந்மூர்த்ஞ- அந்த சிவனின் சிரஸ்ஸால், மாகிதாம்- வெகுமானிக்கப்பட்ட, ஸ்ரநிம்நகாம்ச- தேவநதியான கங்கையையும், இந்தோ:- சந்திரனுடைய, தாம் கலிகாம்ச- அந்த கலையையும், கதம்நிந்தி- என் நிந்திக்கிறது.

79. யே மாதுர்ய விஹார மண்டப புவ: யேசைத்ய முத்ராகரா: யே வைசத்ய தசா விசேஷ ஸுப
[காஸ்தே மந்தஹாஸாங்குரா: |
காமாக்ஷ்யா: ஸஹஜம் குணத்ரய மிதம்பர்யாயத:
குர்வதாம் வாணீ கும்பனடம்பரேச ஹ்ருதயே
[கீர்த்தி ப்ரரோஹே சமே ||

யே- எந்த புன்சிரிப்புக்கள், மாதுர்ய விஹார மண்டபுவ:- மாதுர்யத்தின் விஹாரமண்டப ஸ்தானங்களோ, யே- எந்த புன்சிரிப்புக்கள், வைசத்யதசா விசேஷ ஸுபகா:- நிர்மலமாயிருப்பதாகிய நிலைமையால் மனேக்ஞங்களாயிருக்கின்றனவோ. தே- அந்த காமாக்ஷ்யா:- காமாக்ஷியினுடைய, மந்தஹாஸாங்குரா:- புன்சிரிப்பின் அங்குரங்கள், ஸஹஜம்- ஸ்வபாவத்திலேற்பட்ட, இதம் குணத்ரயம்- இனிமை, குளிமை, பரிசுத்தி, என்ற இந்த மூன்று குணத்தையும், பர்யாயத:- வரிசையாக, மே- எனது வாணீ கும்பனடம்பரேச- வசனம் செய்வதிலும், ஹ்ருதயேச, மனதிலும், கீர்த்தி ப்ரரோஹேச- யசஸ்ஸின் அபிவிருத்தியிலும், குர்வதாம்- ஏற்படும்படி செய்யட்டும்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

பிரமாதி-ஹு கார்த்திகை-மீ 1ஆ

நமது பிரசாரம் பலிக்க வழியென்ன?

ஸனாதன தர்ம பிரசாரமானது காரியகரமாகப்பலிக்கவேண்டிய நிமித்தம் சிலமுக்ய யோஜனைகளைத் தெரிவித்து மான்ய நிருபர் ஒருவர் நமக்கு எழுதியுள்ளார். அவர் சொல்லியுள்ள யோஜனைகள் நிறந்தவைகளாயிருப்பதால் அவைகளை ஸனாதந பிரசாரகர்கள் கவனிப்பது அவச்யமென்று நாம் கருதுகிறோம். ஸனாதன தர்ம பிரசாரத்தை நம்மவர்கள் எவ்வளவோ தீவ்ரமாகத்தான் நடத்திவருகிறார்கள். ஆயினும் அதன் ப்ரயோஜனமானது மிகச் சிறியதாக இருக்கிறது. அல்லது சில ஸமயங்களில் ப்ரயோஜனமே யில்லாமல் போய் விடுகிறது. இந்த நிலைமைக்குக் காரணத்தைப் பலர் பலவாறுகக் கூறலாம். ஆயினும் நமது எதிரிகள் நம்மை எந்த வழியில் தாக்குகிறார்களென்பதைக் கவனித்தது அந்த வழியிலேயே நாமும் பயிற்சி பெற்றும் பதில் செய்வது அவசியமென்பதை ஒருவரும் அக்ஷேபிக்கமுடியாது. நமது எதிரிகள் தற்போது கையாண்டு வரும் முறையில் நமது தர்ம சாஸ்திரங்களையும், நீதிகளையும், கொண்டே நம்மைத் தாக்கி வருவது யாவரும் அறிந்த விஷயமே. பிறப்பு ஜாதிபேதம். தீண்டாமை விவாஹ நியமங்கள், போன்றவைகளில் நமது சாஸ்திரங்களையே தங்களுக்கு ஆதாரமாகக் காட்டுகிறார்கள். சண்டாள ஜாதி ஜன்ம வித்தமா, அது கோவில்களில் போகத்தடை உண்டா, என்பன போன்ற விஷயங்களில் சீர்திருத்த வாதிகள் நமது சாஸ்திரத்தைக் கொண்டே நம்மை மடக்கப் பார்க்கவில்லையா? ஆதலால் பரமரஜனங்களுக்கும், நடுத்தர வகுப்பினருக்கும் நமது தர்மக் கிரந்தங்களிலும் நீதிக் கிரந்தங்களிலும் பொதுவாக அச்சரத்தையும் அவநம்பிக்கையும், உண்டாயிருப்பதுடன் ஸனாதனிகள் மீதும் வெறுப்பு எற்பட்டு வருகிறது சாஸ்திரத்திலுள்ள உண்மையை நாம் மறைப்பதாக அநேக லௌகிகர்கள் நினைக்கிறார்கள்.

ஆதலால், நமது தர்ம சாஸ்திரங்களின் விதிகளையும், அவைகளின் நோக்கங்களையும் தக்க ஆராய்ச்சியுடன் பொது ஜனங்களுக்கு நிரூபித்துக் காட்டவேண்டியது அவச்யமாகிறது. வர்ணச்ரம முறையை அநுஸரித்த ராஜ நீதியால் ப்ரஜைகளுக்கு ஏற்படக் கூடிய ஐஹிக நன்மை, ஒற்றுமை ஆகியபலன்களை நன்கு எடுத்து ப்ரசாரம் செய்தால் மிகுந்த பலனுண்டென்பதை அந்த நிருபர் வற்புறுத்துகிறார். அப்படியானால் தர்ம சாஸ்திரங்களிலும், நீதி சாஸ்திரங்களிலும், மிகுந்த பயிற்சி பெற்ற ப்ரசாரகர்கள் ஏராளமாக வேண்டியிருக்கும். ஆதலால் இப்போது மற்ற கார்யங்களை விட தர்ம சாஸ்திரப் பயிற்சியையும், ப்ரசாரத்தையும் அதிகரிப்பதே முக்ய வேலை யென்று அந்த நிருபர் எடுத்துச் சொல்லுகிறார்.

வைதிக மதத்தினருக்கு வேதாந்தமானது வெகு முக்ய மென்பதை ஒருவரும் மறுக்க முடியாது. ஐஹிக ஸௌகர்யங்களை வெறுத்து உன்னதமான நிலைமை பெற்று நிம்மதியாக வாழ விரும்பும் யாரோ ஒரு ஆதிகாரிக்குத்தான் வேதாந்தம் ஏற்றதாயிருக்கும், ஐஹிக வாழ்வில் வைராக்யத்தையும், வெறுப்பையும் கொடுக்கக் கூடிய வேதாந்த விசாரத்தால், ஸமூஹ ஒற்றுமைக்கும், ஸமூஹ க்ஷேமத்திற்கும் ப்ரயோஜனமேற்பட வழியில்லை. வேதாந்தமானது மனிதர்களையும், அவர்களுடைய போக்கையும் பிரித்து ஒவ்வொரு வரையும் தனிப்படுத்தி வைப்பதாயிருக்கிறது.

ஆகையால் தாற்காலிக இந்தியாவின் க்ஷேமத்தை நிலைநிறுத்தவேண்டுமானால் நம்மவர்கள் வேதாந்த வித்தையில் தீவ்ர பரிச்ரமம் செய்வதை நிறுத்திக்கொண்டு, தர்ம சாஸ்திரம் போன்ற பொதுவிஷயத்தில் அதிக பரிச்ரமம் எடுக்கவேண்டியது அவச்யமென. அந்த மான்ய நிருபர் நினைக்கிறார். எங்கும் தர்மசாஸ்திர பாடசாலைகளை நிறுவி அந்தக்கிரந்தங்களை கற்பித்துப் பொதுஜனங்களுக்குப் ப்ரசாரம் செய்ய ஏற்பாடுபண்ணவேண்டுமென்கிறார். தர்மசாஸ்திரங்களிலும், நீதி சாஸ்திரங்களிலும், ஜாதி ஒற்றுமை, ப்ரஜைகளின் பற்பலவித க்ஷேமங்கள், தொழில்பிரிருத்தி, ஒருவருக்கொருவர் விரோதமின்றி ஜீவனம் செய்யவழி, நிரவிய ஸம்பாதனம், நியாயமான வரிகள், போன்ற தார்மிகமான ராஜீய முறைகளும் ஸமூக முறைகளும் வெகுஅழகாகப் போதிக்கப்பட்டிருக்கின்றன.

மனு, யாக்ஞவல்க்யாதி ஸ்மிருதிகளைப் பார்த்தால் இந்த அதிசயம் வெளியாகுமென்றும் அவர் நிருபணம் செய்கிறார். அவர் கூறியுள்ள மேற்கண்ட விஷயங்களிலிருந்து இன்னும் பல வித எண்ணங்களும், நன்மைகளும் நமது புத்திக்குத் தோன்றுகின்றன. ஆதலால், தர்மசாரியர்களும் ஸனாதந ப்ரசாரகர்களும் மேற்கண்ட ஆலோசனைகளை நன்கு கவனித்துத் தக்கது செய்வார்களென்று நம்புகிறோம்.

குறிப்புகள்.

ஸனாதநிகளைப்பற்றி காந்திஜி!

ஆலயப்ரவேசத்தை எதிர்த்தத் தென்னிந்திய ஆஸ்திகர்கள் செய்த கிளர்ச்சியானது உலகமெங்கும் ப்ரவிவிட்டது. ஸனாதநிகளைத் திரும்பாக மதித்து அலக்ஷ்யமாயிருந்தவர்கள் கூட ஸனாதநிகளைப்பற்றிப் பேசும்படி செய்திருக்கிறது. முக்யமாக, காங்ரஸின் பலமானது ஸனாதநிகளின் எதிர்ப்பினால் வெகுவாக பாதிக்கப்பட்டுவிட்டதை காந்திஜி போன்றவர்களே இப்போது உணர ஆரம்பித்திருக்கிறார்கள்.

நவம்பர் 5ஆ-ன்று காந்திஜி டில்லியிலிருந்து வெளியிட்டுள்ள ஓர் கட்டுரையில் பின் வருமாறு கூறியிருக்கிறார்:—

"தென்னாட்டில் ஆலயப்ரவேச எதிர்ப்பு இயக்கத்தின் போது நாம் கண்டது என்ன? காங்கிரஸ்காரர்களாயுள்ள ஹிந்துக்களைத் தவிர, காங்கிரஸில் சேராத ஹிந்துக்களும் இருக்கிறார்களென்பதே. உதாஹரணமாக, ஸனாதநிகள் சொற்பத் தொகையின ராயினும், பெரும்பாலும் காங்கிரஸ்காரர்களாயுள்ள சீர்திருத்த வாதிகளுடன் போராடி, அவர்கள் தங்கள் மதத்தின் துரோகிகளெனத் திட்டியிருக்கின்றனர்"

மேற்கண்டவாறு காந்திஜி கூறிவிட்டு, காங்கிரஸுக்கு எதிரிகள் அதிகரித்து விட்டதாயும், ஹிந்து மகாஸபை, ஸனாதநிகள் முதலியவர்களால் காங்கிரஸின் பலமும் கௌரவமும் குன்றிவருவதாயும் சுட்டிக் காட்டி, காங்கிரஸ்காரர்கள், எதிரிகளிடம் மரியாதையாக நடக்காமல் பலாத்காரமாக நடந்து கொள்வதாலேயே விரோதிகள் அதிகரிப்பதாகச் சொல்லுகிறார். எப்படியும் ஸனாதநிகளால் காங்கிரஸுக்கு கஷ்டம் ஏற்பட்டிருப்பது காந்திஜி மனதில் நன்றாகத் தைத்திருக்கிற தென்பது வெளியாகிறது. இது யார் செய்த குற்றமென்பதை மட்டும் காந்திஜி யோஜிப்பதில்லை.

இந்தியாவில், மைனரிடிகள் யார், மெஜாரிடிகள் யார் என்பதில் காந்திஜிக்குப் பெரும் குழப்பமேற்பட்டிருக்கிறது. இவ் விஷயத்தில் நியாயற்ற பலவித்வேஷ அபிப்பிராயங்களை அவர் வெளியிட்டு வருகிறார்.

காங்கிரஸ்காரர்கள்தான்மைனரிடியென்று ஒரு ஸமயம் வாதித்தார்.

இப்போது ஸனாதிகள் மைனரிடி என்கிறார். இதை அவர் எப்படிக்கண்டு பிடித்தார்? பத்திரிகைகளின், காங்கிரஸின் பொய் ப்ரசாரத்தாலல்லவா? காந்திஜி தன் குடும்பத்தில் கலப்பு விவாஹம் செய்தார். விதவைகளுக்கு விவாஹம் வேண்டுமென்றார். இவைகளை யாராவது ஆதரித்தார்களா? ஹிந்துக்களில் எந்த ஸமூஹமாவது இதை ஏற்று அனுசரிக்கிறதா? இதிலிருந்து சீர்திருத்தக்காரர் அதிகமா, ஸனாதிகள் அதிகமா, வென்பது தெரியவில்லையோ? தீண்டாமைவிலக்குப்போன்றஆசாரத்திருத்தங்களை கோடிக்கணக்கான ஹிந்துக்கள் இன்று வரை ஆசரிக்க உடன்படவில்லையென்பது காந்திஜிக்கே தெரியாதோ? அப்படியிருக்க ஸனாதநிகள் சிறுபான்மையோர் என்று கூறுவது தந்திரமா? விஷமமா?

"ப்ரயோக குலாமாவளி"

ஸாமவேதிகளின் பூர்வாபரபிரயோகமென்ற இது மஹநீயர்களால் மதிக்கப்பெற்றது.

(வீலை 2-8-() தபால் சிலவு தனி

ஸ்ரீ ராமாயணம் ஸ்வாமி சாஸ்திரிகள் மேழ ஆண்டாள் வீதி, தெப்பக்குளம் P.O. திருச்சி என்ற இடத்திலும், குடந்தை ஜனார்தந அச்சுக்கூடத்திலும் கிடைக்கும்.

காங்கிரஸ் மந்திரிகள் சாதித்ததென்ன?

இரண்டரைவருஷகாலம் கூத்து அடித்து விட்டு காங்கிரஸ் மந்திரிகள் திடீரென ஓடிப்போய் விட்டார்கள். இவர்களுடைய ஆஹி காலத்தில் ப்ரஜைகளுக்கு ஏற்பட்ட நன்மையென்ன வென்பதை ஓட்டர்களும் பொது ஜனங்களும் பரீக்ஷிக்க முன்வந்துள்ளார்கள். இச்சமயத்தில் காங்கிரஸ்காரர்கள் தாங்கள் ஆஹிநடத்தியப் பெருமையை? தங்களுக்கு இயற்கையாய் அமைந்துள்ள ப்ரசார மாயையால் மிகைப்படுத்திப்பேசி பாமரர்களை ஏமாற்ற முற்பட்டிருக்கிறார்கள் ஆதாபாத்தில் 6ஆ-ன்று ஸ்ரீ மான் படேல் பேசுகையில், அடித்துக் கொண்ட பெருமையாவது:—

"காங்கிரஸ் மந்திரிகள் பாமர ஜனங்களுக்குப் பலவித நன்மைகளைச் செய்திருக்கிறார்கள். இப்போதுள்ள நிலைமையில் தெய்வங்கள் கூட இதற்கு மேல் செய்ய முடியாது. காங்கிரஸ் மந்திரிகள் சுயநலமில்லாமலும், பரிசுத்த உணர்ச்சியுடனும், கார்யங்கள் செய்து வந்தார்கள்"

என்று ஸ்ரீ படேல் மந்திரிகளை மெச்சிக் கொண்டார். பார்லிமெண்ட்ரி கமிட்டியின் தூண்டுதல்படியே மந்திரி பொம்மைகள் ஆடிவந்தனவென்பது ப்ரஸித்த விஷயம்.

அக்கமிட்டியின் தலைவரான ஸ்ரீ படேல் தற்புகழ்ச்சி செய்து கொள்ளுவது இயற்கையே. ஆனல் உண்மையை ஊன்றிப்பார்த்தால் காங்கிரஸ் மந்திரிகள் ப்ரஜைகளுக்கு ஹிதமாகச் செய்த கார்யமொன்றும் உருப்படியாக இல்லை. என்னென்ன நன்மைகள் செய்யப்பட்டிருக்கின்றன வென்பதை ஸர்தார் படேல் வெளியிட்டுக்காட்டியிருந்தால் நலமாயிருக்கும். மூலாம் பூசிய தளுக்கான அறிக்கைகள் மூலம் மந்திரி ஆஹியை எழுத்தளவில் புகழலாமே ஒழிய, அநுபவத்தில் ப்ரஜைகளுக்கு எவ்வித அநுகூலத்தையும் காணோம்.

கஸுக்கோட்பாடுகளாயுள்ள சிலவிஷயங்களை மந்திரிகள் நிறைவேற்றி யிருக்கலாம். அதாவது தேசியக் கொடியை எங்கும் போடவேணுமென்பது, கதர் அபிவிருத்தி, தேசீயப்பாடல், கைதிகளுக்கு மோர் கொடுப்பது போன்ற அனேக விஷயங்களில் மந்திரிகள் எதாவது வேலை செய்திருக்கலாம். இந்தியாவின் தற்கால அவஸரத் தேவைக்கு மேற்கண்ட நிர்மாண நிட்டங்கள் தான் அவஸரமா? அவைகளை நிறைவேற்றிக்கொண்டிருந்தால் ஸகல ப்ரஜைகளுக்கும் ஸௌக்யம் கிட்டி விடுமா? வரிப்பளு குறைந்து விடுமா? பாரதி பாடல்களையோ வந்தேமாதர கீதத்தையோ எங்கும் பாடும்படி செய்து விட்டோமென்று மந்திரிகள் சொன்னல் இவைகளால் பொது ஜன க்ஷேமமென்ன எற்பட்டு விட்ட தி? இந்த நிர்மாண வேலையை மந்திரிகளாயிருந்து கொண்டு தான் செய்ய வேணுமா? உண்மையில், காங்கிரஸ் ஆஹி எற்பட்டால் தேன் ஆறும், பால் ஆறும் ஓடப்போவதாக ஓட்டர்களை வஞ்சித்தார்களே, அந்த ஸங்கதி என்ன? சென்ற 27 மீ ஆஹியில், ஜனங்களின் வரிப்பளுவில் எகதேசமாவது குறைந்ததா? ஸுகாதார அபிவிருத்தி உண்டா? கல்வி விஷயமாக ஜனங்களுக்கு ஏற்பட்ட முன்னேற்றமென்ன? எல்லாம் பூஜ்யம் தான்?

ராஜநீதியாவது தெரியுமா?

ராஜாங்கத்திற்கு கோசபலம் அதாவதுபொக்ஷ்யபலம் மிகவும் முக்யம். ராஜதந்திர சூன்யர்களான காங்கிரஸ் மந்திரிகள்முதல் முதலான கோசபலத்தை நாசமாக்கிக்கொண்டனர், காந்தி மனம் குளிர வேண்டி மதுவிலக்கு வேலையில் மாட்டிக்கொண்டு பலலக்ஷக்கணக்கான பணத்தை இழந்து ராஜ்யம் நடத்த வழியில்லாமல் தவித்தார்கள். இதற்காக ப்ரஜைகள் மீது புதிய அதிகவரிகளைப்போட்டு ஹிம்சை செய்ய வேண்டியதாயிற்று. அதுவும் நன்கு பலித்தபாடில்லை.

வீட்டு வரி, நிலவரி, வருமான வரி, முதலியவைகளில் ஏதாவது ஒரு அணுவளவாவது குறைந்து ப்ரஜைகள் சுகப்பட நேர்ந்ததா? மிராசுதார்களுக்கு நன்மை செய்வதாக ஏமாற்றி அவர்களுடைய வோட்டை பெற்ற மந்திரியாக வந்தார்களே? இரண்டரை வருஷ காலமாக மிராசுதார் வரிப்பளுவை குறைக்க என்ன வேலை செய்தார்கள்? நகரங்களிலுள்ள ரோட்டுகளின் நிலைமையை எங்கேயாவது ஓரிடத்திலாவது சீர்படுத்தியிருக்கிறார்களா? எப்போதும்போல வே படுகுழிகளும், ஜலத்தேக்கமும் எங்கும் காணப்படுகிறது. சாக்கடைத்தேக்கங்களுக்கோ, கொசுக்களுக்கோ எங்கேயாவது விமோசனம் உண்டா? எல்லாம் முன் போலவே நகரங்கள் நாற்றமுற்றுக்கிடக்கின்றனவே. ஸுகாதாரம் எந்த அம்சத்தில் அபிவிருத்தி செய்யப் பட்டிருக்கிறது? ஒன்றுமில்லை. கல்வி விஷயத்திலும் ஒன்றும் செய்யப்படவில்லை. எழை மக்கள் ஏராளமான சம்பளம் கொடுக்கமுடியாமல் தவிக்கின்றனர். மாணவர்களுக்கு நல்ல தல்வி மூறை கிடையாது. எல்லாம் முன் போலவே கிடக்கிறது. இவ்வாறு ஒவ்வொன்றையும் அலசிப்பார்த்தால் பொதுவாக எல்லா ப்ரஜைகளும் ஸௌக்யப்படும்படியான கார்யமொன்றையாவது மந்திரிகள் செய்தார்களா?

ஒன்றுமில்லையே! எதற்காக வீண் பெருமை? தேவாலயங்களைக் கொள்ளையடித்தும், தெய்வங்களை அசுத்தமாக்கியதும்தான் பெருமை போலும்? "தெய்வங்கள் கூட இதற்குமேல் நன்மை செய்திருக்க முடியாது" என்கிறார் படேல். காங்கிரஸ் மந்திரியாதை தெய்வத்திற்கு ஸமமாக ஒப்பிட்டதோடு இவர் நின்று விட்டாரே! ஏன்? அவர்கள் தெய்வத்திற்கும் மேற்பட்டவர்களல்லவா? தெய்வங்களையே நடுங்கும்படி செய்தவர்களல்லவா? தெய்வத்தைவிட இவர்கள் அதிக நன்மை செய்திருக்கலாமே?

காங்கிரஸ் மந்திரிகள், "பரிசுத்தத்தன்மையுடனும், சுயநலமில்லாமலும் கார்யம் செய்தார்கள்" என்றுபடேல் சொல்லுவது நமக்கு வியப்பை கொடுக்கிறது. உண்மையை அறிந்தவர்கள் மேற்படி வார்த்தைகளை கேட்டு வெட்கித்தலை குனிவார்களன்றோ? காந்தி கூட இதை ஏற்கமாட்டாரே! காங்கிரஸ் வாதிகளிடம் பரிசுத்தம் கிடையாதென்று காந்தியே தினமும் பறையடித்து வருகிறாரே?

திப்பிராஜபுரம்

ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளவர்களின் விஜயம்.

3—11—39ஆ ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதியாகிய ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளவர்கள் திப்பிராஜபுரம் கிராமத்தார்களால், மேளம், வேதகோஷம், பூர்ண கும்பம் முதலியவைகளுடனும், வெகு உத்ஸாஹத்துடனும், பக்தி ச்ரத்தையுடனும் நன்கு வரவேற்கப்பட்டார். 3 தினங்கள் பிக்ஷையும், அநேக பாத பூஜைகளும் நடத்தப்பட்டன.

ஸ்ரீமடி. எஸ். வெங்கிட்டராமய்யர் கிருஹத்தில் முதல் நாளன்று 2 காலமும் ஸ்ரீ திருபுர சுந்தரீசமேத ஸ்ரீ சந்த்ரமௌளீச்வரருக்கு பூஜையை நடத்தி, இரவில் பூஜார்த்தத்தில் ஸ்ரீ ஆதி சங்கராசாரியாள் அருளிய ஸ்ரீ ஸௌந்தர்ய லஹரியில் "பவானித்வம் தாஸே மயி விதரதக்ருஷ்டிம்" என்றும் ஸ்லோகத்தைச் சொல்லி வேதாந்த ரஹஸ்யத்தின் முக்கிய தத்வமான கிருபுடி ஐக்யம் என்னும் விஷயத்தைப்பற்றி வெகு அழகாக உபந்யஸித்தார்கள்.

ஸ்ரீ ப்ரும்ம வித்யா ஸபா:—

மறுநாள் 4—11—39ஆ சனிக்கிழமையன்று வழக்கம்போல், மடி ஸபாவின் ஆதரவில், கிராமத்தார்களுடைய ப்ரார்த்தனைக்கு இருபை கூர்ந்து, ஏராளமான பக்த ஜனங்களின் முன்பு ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ சங்காசாரியஸ்வாமி அவர்கள் தமது ஆஸனத்தில் அமர்ந்து, காசி அனித்தார்கள் ஸ்ரீ ஆசாரியாளின் ஆஜ்ஞைப்படி அவ்விடம் கூட வீற்றிருந்த 2 யதீச்வரர்களில் ஒருவர், முதலில் தீர்வண பாஷையின், சொற்பொழிவு செய்தார்கள். பிறகு சேங்கலிபுரம் பிரும்மஸ்ரீ வைத்திஸ சாஸ்திரிகளவர்கள் "ப்ரும்ம வித்யை" ப்பற்றி சிறிது நேரம் ஸம்ஸ்கிருத பாஷையில் பேசினவுடன் ஸ்ரீ சன்னிதானத்தின் ஆஜ்ஞைப்படி கும்பகோணம் வேதாந்த பாடசாலை அத்யக்ஷகர் ப்ரும்மஸ்ரீ ஆங்கரை சென்னாமி சாஸ்திரிகளவர்கள் ப்ரும்ம வித்யைப்பற்றிப் பேசினர்கள்.

ப்ரும்மஸ்ரீ நாராயணச்ரௌதிகள், மந்திர மூர்த்தி கிருஷ்ண சாஸ்திரிகள் அவர்கள் சற்று பேசிப் பிறகு, டி. எஸ். வெங்கிட்ட ரமய்யரால் மிகுந்த வணக்கத்துடன் வந்த ஜனோபசாரம் தெரிவிக்கப்பட்டு ஸபை கலைந்தது.

பிறகு ஸ்ரீ மகா ஸன்னிதானத்தின் ஆஜ்ஞைப்படி ஸ்ரீ வாஹிரூபாகவதர் அவர்களால், தருந்த பக்தஜனாக்களுடன் ஹரிகதா காலக்ஷேபம் இனிது நடத்தப்பட்டது.

(நமது நிருபர்)

சிதம்பரத்தில் ஜய ப்ரார்த்தனை

ஸனாதன தர்ம அபிவிருத்தியை முன்னிட்டும், ப்ரிட்டிஷ் கவர்ன்மெண்டாருக்கு தற்போதைய யுத்தத்தில் விரைவில் ஜெயம் கிடைக்க வேண்டுமென்ற நோக்கத்துடனும் தென்னாற்காடு ஜில்லா ஸனாதன தர்ம ப்ரசார ஸபாவின் ஆதரவின் மேழ் தெய்வ ப்ரார்த்தனைகள் சிதம்பரத்தில் சென்ற வாரத்தில் நடைபெற்றன. வைஸ்ராய் அவர்கள் ஆலயப்ரவேச சட்டத்தை உடனே ரத்து செய்வதுடன், விக்டோரியா மஹாராணியாரின் வாக்குமுறி ப்ரகாரம் இந்தியாவில் கவர்ன்மெண்டார் மதவிஷயங்களில் தலையிடுவதில்லை என்று ஓர் அறிக்கையை உடனே வெளியிட்டு நிறபான்மைக் கட்சியினரின் உரிமைகளையும் காப்பாற்றி, ஸனாதன தலைவர்களையும் கலந்து ஆலோசிக்க முன் வருவார்கள் என்று அநேக இடங்களில் பேசிக்கொள்ளப்படுவதாக அறிகிறேன். (ஒ.)

ஆலயப்ரவேச கண்டனம்

திருச்செந்தூர்

ஆலயப்பிரவேச எதிர்ப்புக்கூட்டம்

திருச்செந்தூர் பொதுமக்களின் ஆலயப் பிரவேச எதிர்ப்புக்கூட்டமொன்று, ஸனாதன சபையின் ஆதரவில் சனிக்கிழமை மாலை 5 மணிக்கு திருப்புகழ் மண்டபத்தில் ஸ்ரீ ஆர். கிருஷ்ணசாமி சாஸ்திரிகள் அக்கிராஸனத்தின் கீழ் கூடியது. அச்சமயம் ஏராளமான ஸ்திரீகள் கூடியிருந்தார்கள். மத்ய நிருவாக ஆதிக்கம் கிடைக்க ஓர் சந்தர்ப்பம் நேர்ந்ததை காங்கிரஸ் தலைவர்கள் கைநழுவவிட்டதற்கு வருந்தவேண்டும். ஜனபிரதிநிதி சபை ஏற்படுத்தி ஓர் அரசியலே நிர்ணயிக்க உரிமை வேண்டுமெனக் கேட்பதற்கு இது ஏற்ற சமயமல்ல வென்றும், மத்ய கவர்ன்மெண்டு நிருவாஹ சபையில் காங்கிரஸ் கலந்துகொண்டிருந்தால் பலரையும்ஒன்று திரட்டி சமரஸத்திற்கு வரமுடியும். காங்கிரஸ் ஒத்துழைக்காமல் போனதால், ஜனப்பிரதிநிதி சபை ஓட்டர்கள் நிர்ணயம் செய்யும் விஷயத்திலும், மைனரிட்டி விஷயத்திலும் முக்கியமாய் ஹிந்துக்கள் (பிராமணர்கள்) ஸனாதனிகள் விஷயத்திலும் தகராறு ஏற்படுமென்பது நிச்சயம். கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு கூட்டம் கலைந்தது.

இந்தியா வெளுக்குள்ள ஜனங்களின் சார்பாகவோ, அல்லது ஹிந்துக்கள் சார்பாகவோ, கனம் ராஜப்பிரதிநிதி காந்தியுடன் செய்யும் எவ்வித ஒப்பந்தமும் ஹிந்துக்களை கட்டுப்படுத்தாது. ஹிந்துக்களையும் (ஸனாதனிகளை) கலந்துகொண்டு தான் செய்யவேண்டுமென்றுக் கேட்டுக் கொள்கிறது.

ஆலயப்பிரவேச அதிக்கிரம பாதுகாப்பு மசோதா சட்டத்தை ஆஸ்திகர்கள் அனைவரும் எதிர்க்கிறார்கள். இந்த சட்டத்தை ஓர் மாதக்காலத்தில் சட்ட புத்தகத்திலிருந்து எடுத்து விட வேண்டுமென்றும், அப்படிக்கில்லா விட்டால் ஸனாதனிகள் சர்க்கார் காரியாலயத்தில் சத்தியாக்கிரஹம் செய்ய வேண்டி வருமென்றும் இதற்கு வேண்டிய வழிகளை முயற்சிக்க வேண்டுமென்றுக் கேட்டுக் கொள்ளுகிறது.

ஜில்லா மகாநாடு ஆழ்வார்திருநகரில் டிசம்பர் மாதத்தில் கூடுவதால் அதில் கலந்துக்கொண்டு இது விஷயமாய் மஹாநாடு வெற்றிகரமாக நடைபெற முயற்சிக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறது.

ஸ்ரீமதி தோலகூமி அம்மாள் அகால மரணத்தைப் பற்றி அனுதாபப் படுவதாக தீர்மானிக்கப்பட்டதும் கூட்டம் கலைந்தது.

ஆழ்வார் திருநகரி

வர்ணச்ரம சுயராஜ்ய சங்க ஆதரவில் ஸ்ரீமான் வெங்கட்டாச்சாரியார் மையில் ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. ஸ்ரீமான்கள் சடகோபாசாரி ஆனந்தராவ் முதலியவர்கள் சர்க்கார் மானிகை முன்பாகச் சத்தியாக்கிரகம் செய்ய ஸ்த்ரீகள் தொண்டர்களாகச் சேர வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள் ஆலயப்பிரவேசச் சட்டத்தை ரத்து செய்யக் கேட்டுக்கொள்வதாயும் டிசம்பர் மாதக் கடைசி வாரத்தில் ஸனாதனிகள் மகாநாட்டை நடத்துவதென்றும, ஸ்ரீமதி கே. ஆர். வேங்கட்டராமய்யர் காலமான தற்கு வருந்துவதாயும், தீர்மானங்கள் நிறைவேறின.

சிதம்பரம்.

ஸனாதன மகாநாடு

தென்னற்காடு ஜில்லா ஸனாதன தர்ம மஹா ஸபாவின் இரண்டாவது மகாநாடு வருகிற சிதம்பரம் ஆருத்ரா உற்சவத்தின் போது டிசம்பர் மீ 2த்தில், நடைபெறப் போவதாகவும், ஷை மகாநாட்டிற்கு அநேக பிரபல ஸனாதன தலைவர்கள் விஜயம் செய்யப் போவதாகவும், அறிவிக்கிறோம். ஷை மகாநாடு விஷயமாக ஷை ஜில்லா ஸபாவின் காரியக்கமிட்டி இவ்வாரத்தில் நடைபெறப் போவதாகவும், அவ்வமயம் முழு விபரமும் அறிவிக்கப்படுமென்றும் கூறப்படுகிறது.

ஆலயப் பாதுகாப்பு லங்கம்

தென்னற்காடுஜில்லா ஆலயப்பாதுகாப்பு சங்கத்திற்கு ஸ்ரீமத். இ. சடகோபாசாரியார், ஹைகோர்ட் வக்கீல் (கூடலூர்) தலைவராகவும், பண்டிட் விஜயராகவாசாரியார், (சிதம்பரம்), கே. ராஜா பாலசுப்பிரமணிய ஜடாவல்லபர், (சிதம்பரம்) காரியதரிசிகளாகவும், மற்றும் 12 கனவான்கள் காரியக் கமிட்டி அங்கத்தினர்களாகவும் நியமிக்கப் பட்டிருப்பதாக அறிகிறோம். (ந. நி)

வாரக்குறிப்புகள்.

ஸ்ரீவத்ஸ வே ஸோ சர்மா.

இதே தக்கஸமயம்!! தக்க ஏற்பாடும் ப்ரசாரமுமில்லாத பெருங்குறை நமக்குண்டு. மதத்ரோஹிகளைவிட அபிமானிகளே அதிகமென்பது மிக ப்ரஸித்தம். இந்த ஸமயம் தக்க ப்ரசாரம் செய்து தலைவர் காட்டிய வழியைப் பின்பற்றி அதிகாரிகளிடம் நமது குறையை முறையிடவேண்டும்!

ஸத்யாக்ரஹத்தை நிறுத்துக!! வேலை செய்பவரைத் தடுப்பதாக நினைத்தலாகாது. நமது பலத்தை நன்றாக நிரட்டிக்கொண்டு ராஜப்பிரதிநிதிக்கும் மாகாமை தங்கிய மன்னருக்கும் மற்றோருக்கும் ஒரு மாதத்திற்குள் இந்த அதர்மத்தைத் திருத்தாவிடில் உபவாஸமிருந்து உயிரை விடுவதாகத் தெரிவித்துவிட்டு ஆரம்பித்தல் நலம். போகிய பின்பலமிருக்கிறதென்று தலைவர் நினைத்தால் எவரும் குறுக்கே நிற்கமுடியாது.

யார் மைனரிடி? ஒவ்வோர் ஜாதியினரும் தாங்கள் சிறுபான்மையோர் என்று பேசி எல்லைகடந்த சலுகை பெறுகின்றனர். சென்னை புதிய மேயர் கூறியபடி ப்ராமணர்களே அத்தகையோர். ஆனால் மேயர் உத்யோகவேட்டை வேண்டாரமென்று நமக்குபதேசிப்பதுதான் நியாயமில்லை? பிழைப்புக்கு யார் படியளப்பார்?

ஏற்பாரா? ஸர். ராதாகிருஷ்ணன் வடக்கே ஸஞ்சரிருத ஸபையில பேசும் போது இப்பாஷையில் கூறப்பட்ட ஜனநாயகமே இந்தியாவிற்குச் சிறந்ததென்கிறார்? அன்ய நாட்டுத் தலை அமைந்த தேசிய தலைவர் மூளையிலிது எறுமா?

எப்போ தோலையுமிந்த துன்பம்? சென்னையில் ஜலக்கஷ்டம், சண்டைக்கு பயந்து இருள்! வீலை ஏற்றம்! புது வரி தொல்லை! டைபாட் ஜுரம் முதலிய

சிதம்பரத்தில் கண்டனம்

தென்னற்காடு ஜில்லா ஸனாதன தர்ம ப்ரசார ஸபாவின் ஆதரவின் கீழ் சென்ற சனியன்று (10-11-39) மாலை மேழ ஸன்னதியில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது. பஜனை டி. ராஜரத்ன தீக்ஷிதர் அவர்கள் ஷை கூட்டத்திற்கு தலைமை வஹித்தார். முதலாவதாக ஸ்ரீமான் பண்டிட் விஜயராகவாசாரியார் பேசிய போது, மாஜிகாங்கிரஸ் மந்திரி சபையார் ஜனநாயகம் என்ற பெயரை வைத்துக்கொண்டு சட்ட சபைகளிலும் வெளியிடங்களிலும் தங்களது அதிகாரங்களை ஜனநாயகத்திற்கும், நமது ஆசார அனுஷ்டானங்களுக்கும், மதச்சட்ட நிட்டங்களுக்கும் விரோதமாய் துஷ்ப்ரயோகம் செய்ததினால் ஸனாதனிகள் தெய்வ ஸன்னதிகளில் ஆங்காங்கு உபவாஸ ப்ரார்த்தனை செய்தார்கள். ப்ரார்த்தனையின் பலனாக, மந்திரி சபை மலையேறி விட்டது. இனியும் ஸனாதனிகளாகிய நாம் தீவ்ரமாக பெரு முயற்சிகள் எடுத்து ஆங்காங்கு சபைகளை நியமித்தும், ப்ரசாரம் செய்தும், தர்மத்தை ஓங்க வைக்க முன்வரவேண்டுவது அத்யவச்யம் என்றும், தக்க ஆதாரங்களுடன் மேல்நாட்டுகீழ்நாட்டு கலைகளின்உதாரணங்களுடனும், விஸ்தாரமாகப்பேசினார்.

பின்னர் ஏ வி சௌரிராஜ பட்டாசார் பேசியபோது கோயில் விஷயமாக ஆகமங்கள்தான் சட்டமென்றும், அச்சட்டத்தை மீறுபவர்களை கடவுள் தண்டிப்பது நிச்சயமென்றும், "ஹரிஜன்" ஆலயப் பிரவேசத்திற்கு எவ்வித ஆதாரமும் இடையாதென்றும் ராமாயணம், சிவாகமம், விஷ்ணு ஆகமம், முதலான பல கிரந்தங்களிலிருந்தும் மேற்கோள்களுடன் எடுத்துரைத்தார்.

தலைவர் முடிவுரையுடனும், ஸ்ரீமான் ராஜா பாலசுப்ரமணிய ஜடாவல்லபர், தென்னற்காடு ஜில்லா ஸனாதன தர்மப்ரசார ஸபைக் காரியதரிசி, அவர்களது வந்தனோப்சாரத்துடனும் கூட்டம் கலைவுற்றது.

ஸ்ரீ கே ஆர் வெங்கட்ராமய்யர் மீனவி காலம் சென்றதற்கு வருந்தியும், மந்திரிகள் விலகியதில் திருப்தியடைவதாயும், ஸ்ரீ மீனாக்ஷி கோவிலிலில் ஸம்புரோக்ஷணை நடத்தும்படி உத்தரவிட கவர்னரை வேண்டிக் கொண்டும், ஆலப்பிரவேச சட்டத்தை ரத்துசெய்யக் கோரியும் பல முக்ய தீர்மானங்கள் நிஸ்பவேற்றப்பட்டன.

தொல்லை பொறுக்க முடியவில்லை. காங்கிரஸ் ஆகி நின்றும் அதனால் உண்டான தீமை அகலவில்லை! சண்டையும் அகலவில்லை! பொறுக்க முடியாத துன்பம்!

தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்

ப்ரமாணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்த்ரத்தின் ஆதிகாண்டம் கனியும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு ப்ரமாணக் குடும்பஸ்தனிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. ப்ரத்யேகம்.)

கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,

தர்மசாஸ்த்ரச் சுருக்கம்,

கீழவிடையல், திருச்சிரை

&

ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட்,

கும்பகோணம்.

நமது மதம்

(ஸ்ரீ எல். சுப்பிரமணிய சாஸ்திரி, வீணை வித்வான், சேர்மாதேவி)

[சென்ற வாரத் தொடர்ச்சி]

அவரவர் மனதுக்கேற்றபடி உளறுதல் கனே எவ்விதம், ஸத்யம், தர்மம் நியாயமென்று சொல்லமுடியும்? முன்னுளில் ஜாதி த்வேஷமுண்டா? மதத்வேஷ முண்டா? இவைகள் எங்கேயோ இருந்து, நெற் பயிருக்குக் கெடுதி செய்யும் களைப்புற்கள் போல் வளர்ந்து தர்மப்பயிரை வளரவொட்டாமல் செய்யத்தலைப்பட்டுவிட்டன. நம் முடைய இதிஹாஸ புராணங்களை ஒரு முறையாவது பூர்ணமாகப்படித்துபேசுகின்றார்களா? இவைகளில் சிரத்தையே கிடையாது. இல்லாமல் போனது அவரவர்களின் பெற்றோர்களின் குற்றத்தால் ஏற்பட்ட அனர்த்தமேயாகும். முன் காலத்தில் குற்றம் செய்தவர்களுக்குத் தண்டனையாக வித்திக்கப்பட்ட "கிராப், அரைமீசை, கால்மீசை முக க்ஷவரம் முதலிய கோரங்களை இக்காலத்தில் ஸகஜமாகக் கொள்கின்ற மைனர்களைக்கண்டு பெற்றோர்கள் மகிழ்கின்றார்கள். சிலபெண்களை கூறவே வேண்டாம். நீங்களே இவர்கள் பற்பலநியாயப்பேய் கொண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு வருகின்றீர்கள். இப்படி அவரவர் மனம் போன போக்கில் விட்டு விட்ட படியால் தான் நம்முடைய ஸனாதன தர்மத்திற்கு வத்தி வைக்க ஆரம்பித்திருக்கிறார்கள்.

ஒரு வைதிகப் ப்ராம்மணன் தன் பிள்ளையை நன்றாக படிக்க வைத்து உத்யோகத்தையும் வாங்கிக்கொடுத்தார். பிள்ளையோ இக்காலத்து நாகரீகத்தை அனுஷ்டித்தவன் தான். அவனிடம்அவனுடைய நண்பன் ஒரு சமயம் வந்தான். அப்போது அவன் தந்தை ஸ்நாகம் செய்து பூஜை செய்யும் தருணத்திலிருந்தார். வந்த நண்பர் அவனைப்பார்த்து "இதோ நின்றுகொண்டிருக்கிற பெரியவர் யார்" என்று கேட்டான். அதற்கு அவன் என் வீட்டில் பூஜை செய்யும் ப்ராமணன் என்று பதில் சொன்னனும். இதைக்கேட்ட தகப்பனுர் அவன் முகத்தில் இடித்தக்காட்டுவது போல் பதிலைச்சொன்னர். தானும் தன் மனைவியும் உலகவாழ்வை வெறுத்து காசியாத்ரை போனதாக ஒரு கதையுண்டு. இவர் என் தகப்பனுர் என்று சொன்னால் இவன் கௌரவம் கெட்டு விடுமா? அல்லது அவமானமா? இவ்வுத்யோகஸ்தன் செய்து கொண்டதூராசாரங்களைக் கண்டு செல்லப் பிள்ளையென்று பெற்றோர்கள் ஸந்தோஷித்துக்கொண்டிருந்ததினலல்லவா? பெற்றோர்களுக்கே துஷ்பணியாக வந்து முடிந்தது.

மற்றொரு குழந்தை, கத்தரித்தோட்டத்தில் கத்தரிக்காய்களைத் திருடி தன் தாயிடத்தில் கொண்டுவந்து கொடுத்து திருடின ஸாமர்த்தியத்தைச் சொல்லிற்று. தாயானவள் அப்பொழுதே அச்செயலைக் கண்டிக்காமல் சந்தோஷித்தாள். இப்படி நாளுக்கு நாள் திருடிவருகையில் ஒருநாள் தோட்டக்காரன் கண்டு அப்பையனைப் பிடித்து மரத்தில் கட்டி அவன் தாயிடம் வந்து உன் பிள்ளை பலகாள் என் தோட்டத்தில் கத்தரிக்காய்கள் திருடினதற்காக உன் கண் முன் பாக மரத்தில் கட்டி அடிக்கிறேன் என்று சொல்லி நன்றாய் அடித்து பலத்த காயங்களுடன் மூர்ச்சையாகும்படி செய்தான். அத்தாயின் மனம் அப்பொழுது எப்படி இருந்திருக்கும். அதுபோல் நம் குழந்தைகள் ஸ்வதர்மத்துக்கு மாறான வழியில் நடக்கும் நடவடிக்கைகளைக் கண்டு சந்தோஷித்துக்கொண்டிருந்தால் முடிவில் தாய் தகப்பன் கண் முன்பாகவே அதர்மத்தின் பலனை கொடிய வியாதிகள் முதலான ஆபத்துக்களை அனுபவிக்கும்படிசுவரன் செய்து விடுவர். என்பது சாஸ்திரத்தின் தத்வம். இப்படி எவ்வளவோ ஆபத்துக்களை கண்ணால் பார்த்துக்கொண்டும், கேட்டுக்கொண்டும் வருகின்றோமல்லவா?

நாஸ்திகர் என்பவர் ஒருதனிஜாதியாரல்ல. எல்லா ஜாதிகளிலும் எல்லா தேசங்களிலும் நாஸ்திகர் இருக்கின்றனர். இவர்களில் சிலர் அரை நாஸ்திகர், முக்கால் நாஸ்திகர், முழு நாஸ்திகர், இவர்கள் பிதற்றுவதெல்லாம் எவ்விதத்திலும் ஆதாரமற்றிருப்பதோடல்லாமல் வேதமார்க்கத்தை தாழ்விப்பதிலேயே முக்கியநோக்கமுள்ளவர்கள். முன்பின் விரோதமாய் ஸம்யோசிதமான விவஹார முள்ளவர்கள். கேட்ட கேள்விக்கு பதில் சொல்லத் தெரியாத மூர்க்க குணமுள்ளவர்கள். இவர்கள் தான் நாஸ்திகர் எனப்படுவார்கள். எனென்றால் வைதிக மார்க்கமானது இவர்கள் செய்யும் அட்டூழியங்களுக்குத்தடங்காலாயிருக்கின்றதல்லவா?

திருடனுக்கு ஸகல ஜன மனோஹரமாய் ஆகாயத்தில் விளங்கும் சந்திரன் சத்துரு வாய்த்தோன்றும். கள்ளக்கணவன், கொண்ட கணவனைப் பகைக்கிறான். தீய வொழுக்கமுள்ளவன் நல்லொழுக்கமுள்ளவனை நிந்திப்பான். வியபிசாரி ஸ்திரீக்கு கற்புடைய மங்கை சத்துருவாய்த் தோன்றும். என் என்றால் இவர்கள் செய்யுங் காரியங்களுக்கு பெரிய தடங்கலல்லவா!

இந்நாஸ்திகர்களுக்கு தன் முதலும், தன் முகமும் கருப்போ, சிவப்போ தெரியவில்லை. கண்ணாடி மூலமாகவோ, ஆப்த வாக்யத்தின் மூலமாகவோ தெரிந்துக் கொள்ளவேண்டியிருக்கின்றது. இப்படி பிறர் தெரிவித்து அறிந்து கொள்ளும் இந்நாஸ்திகப் பதர் கூறியும். "எங்காத்துக் காரர் கூட கச்சேரிக்குப் போகிறார்" என்றது போல் நானும் ஒரு தேசீயப் பத்திரிகை என்று விளம்புகின்றன. இது ஆரம்பத்தில் நல்லது போல் தோன்றி வர வர யோக்யப் பொறுப்பில்லாமலும் மனுஷ்ய தன்மையுமில்லாத மூர்க்க அசட்டுத் தனத்தை வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றன, இது எது போல வென்றால்?

ஒரு வண்ணன் தன் கழுதைக்கு புலித்தோல் போர்த்து விட்டு நெல் அறுவடையாகிற ஸமயத்தில் தான் அபகரிக்கும் சோக்கத்துடன் வயலில் மேயவிட்டான் வயலின் சொந்தக்காரன் ஆள்க்களுடன் வந்து பார்க்கையில் "புலி" என்று பயந்து ஓடுங்கிக்கொண்டிருந்தார்கள். இப்படி பயத்தால் ஓடுங்க ஒதுங்க எங்கேயோ ஒரு கழுதை கத்திற்று. ஒரு கழுதை கத்தினால் மற்றொருகழுதை பிரதித்வனி கொடுக்குமல்லவா? அந்த ஜாதி ஸ்வபாவப்படி புலி தோல் போர்க்கப்பட்ட கழுதை கத்திற்று, உடனே ஜனங்கள் "சேச்சே" இது கழுதை யல்லவா? என்றறிந்து அதை தடியால் அடித்து கொறுக்கிவிட்டார்கள். பிறகு வண்ணன் செய்த வேலையென்று தெரிந்து வண்ணனுக்கும் ஸரியான தண்டனை ஏற்பட்டது. அதுபோல சில கூலி பத்திரிகைகள் ஆரம்பத்தில் தேசீய ஊக்கம் காட்டுவதுபோல் ஆரம்பித்து வர வர, மத தவேஷத்தில் இறங்கி "கண்ணு பின்னு" வென்று உளறுகிற த்வனியினுல் தன்மனதில் கபடமாய் மறைத்துக்கொண்ட ஜாதிக் குறும்புத் தனத்தை வெட்ட வெளிச்சமாக்கிக்கொண்டு வருகிறது. தவிரவும், தமிழ் பாஷையின் அழகுகளை பாழ்படுத்தி வருகின்றன, இதனுல் ஏற்கனவே பொது ஜனங்களுக்கு இருந்துவரும் மதாபிமானம் தேசாபிமானமும் கெட்டு விடுகின்றது. இவைகள் சொல்லும் உபமான உபமேயங்களோ, தடப்பக்கட்டைக்கு பட்டுக்குச்சு கட்டியது போலவும், அல்லாப்பண்டிகையில் வேஷங்கள் போலவும் தானிருக்கின்றது என்பது உண்மை உணர்ந்தோரறிவார்கள். ஏறும்பானது தான் கடித்த சாகவேணுமென்று வரம் பெற்று தானழிந்து வருவதுபோல், நம் சாஸ்திரங்களிலுள்ள உபமானங்களைப்பொறுக்கி நம்மையே குதர்க்கம் செய்கின்ற துர்புத்தி நிறைந்த ஜனங்களுக்கு ஊடுகள் கொடுப்பதைத்தவிர வேறுவழியில்லை.

(தொடரும்)

முஸ்லீம் லீகின் அந்தஸ்து.

காங்கிரஸ் ஒப்புக்கொண்டு விட்டது.

இந்தியாவிலுள்ள ஸகல முஸ்லீம்களின் சார்பாகப் பேச முஸ்லீம் லீகிற்கே அதிகாரமுண்டென்றும், லீக் ஒன்று தான் முஸ்லீம்களின் ப்ரதிநிதி ஸபையென்றும் காங்கிரஸ் ஒப்புக்கொண்டாலல்லது காங்கிரஸோடு ராஜி பேச முடியாதென்று ஜின்னா சொல்லிவிட்டார். அதன் மேல் காந்திஜியும், மற்ற காங்கிரஸ் தலைவர்களும், லீக்தான் பெரும்பாலான முஸ்லீம்களின் ப்ரதிநிதி ஸ்தாபனமென்பதை ஒப்புக்கொண்டார்கள். இதன் மூலம் காங்கிரஸானது முஸ்லீம்கள் சார்பாகப் பேச அர்ஹதையற்றதென்பதை காங்கிரஸ்காரர்களே எற்றுக்கொண்டு விட்டதாக ஆகிறது இப்படி சரணுகதி செய்தும் கூட ஜனப்ரதிநிதி காங்கிரஸை மதிக்கவில்லையே?

நிர்வாக அதிகாரி மீது டிரஸ்டிகள் தாவர்

ஆலயப்பிரவேசம் செய்துவைக்க அதிகாரியில்லை

ஸ்ரீரங்கம் கோவிலின் பரம்பரை தர்மகர்த்தாவும், மற்றொரு டிரஸ்டியும் சேர்ந்து கோவில் நிர்வாஹ அதிகாரி மீது ஓர் சிவில் தாவா செய்திருக்கிறார்கள்.

நிர்வாக அதிகாரியானவர் ஸ்ரீ ரங்காசார் கோவிலில் நீண்டாதாரைப்புகவிட எவ்விதமான அதிகாரமும் சட்டப்படி உள்ளவரல்லவென்றும், அதன்படி அவர் மீது ஓர் தடையுத்தரவு போடவேண்டுமென்றும் டிரஸ்டிகளின் பிராதில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

அத்வைத ஸபை

வித்யார்த்திகள் தேவை.

கும்பகோணம் அத்வைத ஸபை ஆதரவில் நடந்துவரும் அய்யுவய்யர் லக்ஷ்மி அம்மாள் அத்வைத வேதாந்தபாடசாலைக்கு வித்யார்த்திகள் தேவை.

ஷை பாடசாலையில் வித்தியார்த்திகள சேர விருப்பமுள்ளவர்கள் வேதாந்த சிரோமணியகவும் கல்வியல்லாமல் தர்க்க சிரோமணியகவும் இருக்க வேண்டும். வித்யார்த்தியாக சேர விருப்பமுள்ளவர்கள் தங்கள் யோக்யதை, வயது, இவைகளை கண்டு ஸபை செக்ரடரி அவர்களுக்கு 25—11—39க்குள் மனுசெய்து கொள்ளவேண்டும்.

M. K. வைத்தினுதய்யர், B.A. BL.,
காரியதரிசி.

215307

ஹிமாலயம், திபேத், நேபால்
கஸ்தூரி, சிலாஜிட், குங்குமப்பூ

(சுத்தமானதென்றும், கலப்பற்றதென்றும் உத்திரவாதம் செய்கிறேம்).

கஸ்தூரி	ஒரு தோலா.	ரூ 25—0—0
சிலாஜிட் (புடமிட்டது)	,,	ரூ 1—0—0
குங்குமப்பூ (கேசர்)	,,	ரூ 2—8—0.

(ஒரு தோலா என்பது ஒரு ரூபாய் எடையாகும்) ஏற்படும் தபால் சார்ஜ்—பாக்கிங் சார்ஜ் தனியாக உண்டு கடிதப்போக்குவரத்து ஹிந்தியிலாவது, ஆங்கிலத்திலாவது நடத்தவும்.

கிடைக்குமிடம்:— PREM LAL SHAH GANGOLA,
ALMORA (Himalayas) U. P.

நாச்சியார் கோவில்
ஷஷ்டி அப்தபூர்த்தி வைபவம்

நாச்சியார் கோயில் லக்ஷ்மீ மந்திரம் ஸ்ரீஉபயவேதாந்தாசார்ய ஸிம்ஹாஸனாதிபதி வித்வான் அபிநவஸர்வஜ்ஞ வாங்மூக ரத்ன கோச: வித்வத் சிரோமணி: பண்டிதராஜ: குருவர்ய: ஸ்ரீ நடாதூர் கிருஷ்ணமாசார்ய ஸ்வாமிக்கு ஷஷ்டியப்தபூர்த்தி கல்யாணம் இத்தலமாதம் 24உ வெள்ளிக்கிழமை ஸ்வாதீ நக்ஷத்திரங்கூடிய சுபதினத்தில் நடைபெற்றது. இதற்கு பூர்வாங்கம் 4 நாள் முன்னதாக அஜிதவ்ய வேதம் பூராவையும் சாகை ஸம்ஹிதா கோஷ்டிகளே இரண்டு விதமாகப் பிரித்து பாராயண ஜபங்களுடன் கங்கா தீர்த்த கடத்தை வைத்து பரிஷ்காரமாக பாராயணம்செய்து மேற்கண்ட சுபதினத்தன்று அபிஷேகம் பண்ணிவைத்த பெருமையும், ஸாக்ஷாத் வேதபுருஷ மகிமைக்கிணங்க வேதகோஷம் விளங்கி பாராயண ஸ்வாமிகள் முதலான விஷயம் செய்திருந்த சிறந்த ஸ்வாமிகளுக்கு அலங்கார வஸ்திர ஸம்பாவனைகள் செய்த விஷயமும், ஸ்ரீ அஹோபிலம் ஸ்வாமிகள் செய்த ஸம்பாவனையும் ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் உயர்ந்த ஜரிகை பீதாம்பர சாதரா வழங்கிய பெருமையும் ஸ்ரீ துவாரகா, தர்ப்பங்கா மஹாராஜாக்கள் முதலிய மஹான்களும், பல சிஷ்யர்களும், ஸமஷ்டி கோர்டு ஜட்ஜ் ஸர். எஸ். வரதாசாரியார் வெங்கடரமண அய்யங்கார். எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் முதலியவர்களும் செய்த ஸம்பாவனைகளின் மேன்மைகளைப் பற்றியும் புகழத்தக்கதாயிருக்கிறது. (ஒ.நி.)

மதுரை
காலஞ்சென்ற மதுரை சிரவுதிகள்

மதுரை சோமஸுந்தரபுரம் ஸ்ரீ யக்ஞஸாமி சிரவுதிகள் சென்ற வியாழனன்று திடீரென தேகவியோகமான துக்கச்செய்தியை அறிக்க வருந்துகிறேன். ஸ்ரீ சிரவுதிகள் பரமேச்வராவதாரமென புகழ்கொண்ட ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதர் குலத்திலுதித்தவர். 45 வருஷங்களாக பாண்டிய நாட்டிலுள்ள மதுரை ஸ்ரீ ராமாராயர் ஸமவேத பாடசாலையில் பிரதானாசிரியராயிருந்து பல சிஷ்யர்களைத் தயார்செய்து வந்தனர். பாண்டிய நாடு முழுவதிலும் அவரது வேதம் புகழ்பெற்று விளங்கி வருகிறதென்பது மிகையாகாது.

ஸ்ரீ சாஸ்திரிகளவர்களுக்கு ஆஹிதாக்நிகளான அத்தாழநல்லூர் ராமஸ்வாமி சாஸ்திரிகளும். யக்ஞதீக்ஷிதர் முதலிய 39 பிடர்கள் இயாதியுடன் பிராகாசிக்கின்றனர். இயற்கையான அறிவும் ஊக்கமும் நிர்வாகத் திறமையும் வைதிக லௌகிகர்களுடைய நன்மதிப்பையும் பெற்று விளங்கிவந்தார். ஆசாரம் தர்மசிந்தை உள்ளவர். மாணவர்களுக்கு வித்யை போதிப்பதில் மிக நாவன்மை உடையவர். ச்ரௌத விஷயங்களில் விசேஷத்திறமையுடையவர். பல தடவை புதுக்கோட்டை திருவனந்தபுரம் மைசூர் பரோடா முதலிய இடங்களில் பரீக்ஷை கொடுத்து ஸால்வைகள் பெற்றவர். சோழ நாட்டில் பல க்ரதுக்களில் ஔதக்காதரம் முதலிய பொறுப்புஸ்தானம் வகித்து மிக அழகாக நடத்தியிருக்கிறார்கள். வேதத்தில் விசேஷ சிரத்தையிருந்தபோதிலும் சாஸ்திரங்களிலும் ஸாஹித்யங்களிலும் தேர்ச்சியடைந்தவர். ஸநாதனதர்மத்தில் விசேஷ அபிமானமுண்டு. மதத்தைக்காப்பதற்காகவே பல ஆண்டுகளாக வேத ஆசிரியர்ஸ்தானத்தை ஏற்றுக்கொண்டனர். அதன் காரணமாகவே ஸகோதரரைக்கொண்டு பல பழைய ஓலைப் புத்தகங்களைப் பரிசீலனை செய்து பிரயோக குஸுமாவளி என்னும் ப்ரயோகத்தை வெளியிடும்படி செய்திருக்கிறார். பாண்டிய நாடு ஸ்ரீ சிரவுதிகளின் ஞாபகத்தை என்றும் மறக்கமுடியாது. குமாரருக்கும் அவரது ஸஹோதரர்கள் வித்வான்களான ஸ்ரீ ராமாயணம் ஸ்வாமி சாஸ்திரிகளுக்கும் பண்டிட் கே. வீ. சுப்பிரமணிய சாஸ்திரிகளுக்கும் கமது அநுதாபத்தை அறிவிக்கிறோம். ஒ. நிருபர்.

ஸ்ரீ முத்துசாமி தீக்ஷிதரின் வார்ஷிக மஹோத்ஸவம்

இம்மஹோத்ஸவம், மைலாப்பூரில் நவம்பர் மீ 9, 10, 11 தேதிகளில், பூஜை, ஸமாராதனை, பாட்டுக்கச்சேரிகள், வீணைக்கச்சேரிகள், புல்லாங்குழல் கானத்தினலும் உபன்யாஸம், இவைகளால் வெகு விமர்சையாய் நடைபெற்றது. இதுவரை கேட்டிராத தீக்ஷிதரவர்களின் அபூர்வமான பல கீர்த்தனங்கள் பல வித்வான்களால் பாடப்பட்டனவென்பதும் உண்மையான ஸங்கீதத்தின் ரஸ, பாவங்கள இன்றுஅறியப்பட்டன வென்பதும் வந்திருந்த மஹாஜனங்களெல்லாராலும் புகழப்பட்டது முக்கியமாய் குறிப்பிடத்தக்கது.

இவ்வுத்ஸவத்தின் கடைசி தினத்தில் வீணைவித்வான் (சேர்மாதேவி) எல். சுப்பிரமணிய சாஸ்திரிகள் ஷை ஸ்ரீ தீக்ஷிதரவர்களின் பெருமையைக்குறித்து சிறந்த உபன்யாஸம் செய்தார். (ஒ. நி)

ஈச்சங்குடியில் ஸ்ரீபாகவத பிரவசனம்

திருவையாற்றுக்கு சமீபமாயுள்ள கர்ஜூரபுரம் என்கிற ஈச்சங்குடியில் ஸ்ரீமத் பாகவத பிரம்ம சத்ஸ்ர மஹோத்ஸவ வைபவம் பிரமாதி ஐப கார்த்திகை மீ 5உ (20–11–39) முதல் மீ 11உ (26–11–39) முடிய 7 நாளைக்கு பிரதினமும் காலை 7 மணி முதல் 10½ மணி வரையில் ஸ்ரீமத் பாகவத ஸ்ரந்த மூலபாராயணமும் மாலை 3 மணி முதல் 9 மணி வரையில் மாயவரம் பிரும்ம ஸ்ரீ கிவராமகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களைக்கொண்டு கதாப்ரவசனமும் ஈச்சங்குடியில் ஸ்ரீ லெட்சுமீ நாராயணப் பெருமாள் ஸந்நிதானத்தில் நடைபெறுவதால் ஆங்காங்குள்ள ஸாதுக்கள் அனைவரும் வந்திருந்து கதாச்ரவணம் செய்து க்ருதார்த்தர்களாகும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். (பக்தர்கள்.)

ஓர் ஆஸ்திகோத்தமரின் தேக வியோகம்

ஆடுதுரைக்கு ஸமீபமாயுள்ள அம்மங்குடி என்னும் கிராமத்தில் வஸித்துவந்தவரும், வைதிக கர்மானுஷ்டானத்திலும் ஆசாரத்திலும் விசேஷ சிரத்தை உள்ளவரும், யஜுர்வேதத்தை ஸாங்கமாக அத்யயனம் செய்தவரும் பல சிஷ்யர்களுக்கு வேதாத்யயனம் செய்வித்தவருமான ஸ்ரீ ராமவைத்யநாத சாஸ்திரிகள் நாளது ஐப்பசிமீ 24ம் உ (10–11–39) வெள்ளிக்கிழமை காலை 5-30 மணி சுமாருக்கு தேகவியோகமடைந்ததை யறிய மிகவும் வருந்துகிறோம். அவரது குடும்பத்தாருக்குநமது அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

(மேற்படியாரின் சிஷ்யர்களுள் ஒருவர்)

கொத்தமங்கலம்

ஸ்கந்தஷஷ்டி சுபதினத்தில் வள்ளியம்மை தெய்வானை சமேத ஷண்முகப்பெருமானுக்கு நடைபெறும் அபிஷேக அலங்காரங்களையும் ரதத்தில் திருவுலா காஷிகளையும் அன்பர்கள் அனைவரும் வந்திருந்து தரிசிக்கும் வண்ணம் விரும்புகிறோம். (ஒ. நி.)

Printed by S, Kalyanasundram at the Sri Janardhana Printing Works, Ltd., Kumbakonam,
Published by A. Gopaladesikachari and S, Kalyanasundram.



927
927
215308
67

REGD No.M. 2913. ARYADHARMAM TAMIL WEEKLY Estd. 1915

ஆர்யதர்மம்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்ச 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

சுவஸ்தி ப்ரஜாப்4ய: பரிபாலயந்தாம் ந்யாய்யேன மார்கே3ண மஹீம் மஹீஸா:।
கோ3ப்ராஹ்மணேப்4யஶுப4மஸ்து நித்யம் லோகாஸமஸ்தாஸுகி2நோ ப4வந்து ॥

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஐப்பசி கார்த்திகை-மீ 8 உ 1939 ஐப்பசி நவம்பர்-மீ 23உ | வ-46

காந்திஜீ—பிரஸாத் ராவ் கடித போக்குவரத்து.

"காந்திஜீ மழுப்புகிறார்!"

பிரசாத்ராவ் கண்டனம்

மதுரை ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோவில் தேவஸ்தான மாஜி சூபரண்டெண்ட் ஸ்ரீ V.N. பிரஸாதராவ் காந்திஜீக்கு மதுரையில் நடந்த தீண்டாதார் ஆலயப்பிரவேசத்தைப் பற்றி ஒரு நீண்ட கடிதம் எழுதினர். அதற்கு காந்திஜி ஒரு பதில் எழுதினர். அக்கடிதத்திற்கு ஸ்ரீ பிரசாதராவ் மீண்டும் காந்திஜீக்கு ஒரு கடிதம் வரைந்தார். அதற்கு காந்திஜி பதில் எழுதினர். இந்தக் கடிதப் போக்குவரத்தின் வாசகங்களை நேயர்கள் வாசிக்க வேண்டி இங்கு விவரிக்கப்பட்டிருக்கிறது:-

பிரஸாதராவ் முதல் கடிதம்.

மதுரை,
26—8—39.

அன்புள்ள மகாத்மாஜீ,

"தங்கள் கவனத்துக்குக் கீழ்கண்ட விஷயங்களைக் கொண்டுவர விரும்புகிறேன். என் ராஜிநாமா கடிதத்தின் நகலைத் தங்கள் பார்வைக்கு அனுப்பியிருக்கிறேன். அதிலிருந்து தாங்கள் தீண்டாதாரின் ஆலயப் பிரவேச விஷயம்மாக மதுரையில் நடந்த உண்மை சம்பவங்களை அறிந்து கொள்ள முடியும் என்று நினைக்கிறேன். 8—7—39 மதுரையில் எவ்வளவு தூரம் காங்கிரஸ் காரர்கள் அஹிம்சா தத்துவத்தையும், உண்மையையும் அனுஷ்டித்தார்களென்பது நன்கு புலப்படும்.

தாங்கள் இந்த சிறிருத்த வாதிகளின் காரியங்களை வன்மையாகக் கண்டிக்க முன் வருவீர்கள் என்று நம்பினேன். இந்த குழம்பிக் கிடக்கும் காரியங்களில் கலந்து கொண்ட ஆலய நிர்வாக அதிகாரியின் காரியத்தையும் கண்டிக்க முன் வருவீர்களென்று நினைத்தேன். ஆனால் தான் ஏமாந்து போனேன். நீங்களும் பல விதத்தில் ஏமாற்றப்பட்டீர்கள்.

14—7—39, 17—7—39 தாங்கள் மதுரை ராவ்சாகேப் ஸ்ரீ N. நடேசய்யருக்கு அனுப்பிய இரண்டு தந்திகளில் காணப்படும் அவதூறுகளைத் தாங்கள் மீண்டும் யோசித்துக் கவனிக்கவும்.

அவைகளை [illegible] ஏஸ். ராமனுதன் மற்றும் சிலர் கூறிய விஷயங்களை நம்பிக்கொண்டு எழுதியிருக்கிறீர்கள் போலும்!

ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யர் இந்த பக்கத்தில் யாவராலும் மதிக்கப்படுபவர். அவரது உண்மை ஊழியத்தை உலகம் அறியும். மாசற்ற குணமுள்ளவர். உண்மை களஞ்சியம். என்னை நம்புங்கள். மகாத்மாஜீ! நான் கூறுவதை கேளுங்கள்! அந்த ஸ்ரீ நடேசய்யரை அவரது விரோதிகளும் எவ்விதம் மதிக்கிறார்கள் என்பதை அறிந்துகொள்க. எவ்விதம் உங்கள் விரோதிகள் உங்களை மதிக்கிறார்களோ அதே மாதிரிதான் அவரையும்அவரது விரோதிகள் மதிக்கிறார்கள். உங்களுக்கு அவரைப் பற்றி ஒரு விஷயமும் தெரியாது. அப்பேர்ப்பட்ட மனிதரைத் தாங்கள் அலட்சியமாகப் புறக்கணித்துவிட்டீர்கள்.

இன்று கோவிலில் நடக்கும் உண்மை ஸம்பவங்கள் இவைகளே:—

"மதுரை மாநகரில் இருக்கும் அந்தணர்கள் யாவரும் (ஒரு இலைத் தவிர—என்! அவர்களை விரலினால் கூட கணக்கிட்டுச் சொல்லமுடியும்) கோவிலைப் பகிஷ்காரம் செய்து விட்டனர்கள். என்! பிராமணர்களாத ஸ்திரீகளும் - வைதீகப்பற்றுள்ள தமிழர்களும் கோவிலுக்குப்போவதில்லை.

கோவிலுக்குப் பூஜை செய்ய பரம்பரை பட்டர்கள் வரவில்லை. அதிகப் பணச் சலுகையில் வெகுதூரத்திலிருந்து பட்டர்கள் தருவிக்கப்படுகிறார்கள். இந்த அக்ரமத்தை அறிந்து மதுரை வாசிகள் மனம் புண்பட்டு ஆத்திரம் கொண்டிருக்கிறார்கள். அகில இந்திய தேசிய காங்கிரஸ் மகாசபையின் காரியக் கமிட்டி கூட்டத்தில் மதுரை ஆலயப் பிரவேச விஷயமாக கிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் கண்டிருக்கும் வாசகம் முழுவதும் பொய்.

அன்புள்ள மகாத்மாஜீ! நீங்கள் முடியாத காரியத்தை முடித்திருக்கிறீர்கள். நீங்கள் உண்மைக்களஞ்சியம். உங்கள் சிஷ்யர்களும், கண்பர்களும், ஏன்?- இந்தவிஷயம் அறியாத பிரபஞ்சமும் நீங்கள் உண்மைக்கு மாறுபட்டு காரியங்கள் செய்ததை உணர்ந்து அதைத்திருத்திக்கொள்ளும்சுபாவம் உடைய உங்களைப் பார்த்து ஏளனம் செய்கிறார்கள். உண்மைக்கு மாறுபாடில்லாமல் காரியங்களை செய்துவருவதாக எண்ணி உம்மை உலகம் புகழ்கிறது. ஆனால் உங்களுக்கு மக்கள் மகத்தான மரியாதைகள் செய்கிறார்கள்!

இப்பொழுது இங்கு நடந்த சம்பவங்களைச் சற்று நோக்குங்கள். இந்தத் தவறுகளை மாற்ற முயற்சி செய்யுங்கள். காலம் கடந்துவிடவில்லை. இந்த விஷயத்தில் உங்கள் "உண்மை தத்துவம்" உங்களை சரியான பாதையில் செல்ல வழிவிடவேண்டுமாறு கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு,
உங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்) V. M. P. ராவ்.

காந்திஜீ பதில்

மேற்கண்ட கடிதத்துக்கு 30—8—39 செவகிராமத்திலிருந்து காந்திஜீ ஸ்ரீ பிரசாதராவுக்கு ஒரு பதில் விடுவித்துள்ளார். அந்தப்பதிலாவது:—

"நண்பரே! உங்களுடைய கடிதத்தையும், இதர கடிதங்களையும் ஊன்றி படிக்கலானேன். யார் மீது நீங்கள் கடுமையாகக் குற்றம் சாட்டுகிறீர்களோ அவர்களின் அபிப்பிராயத்தை அறியாமல் நான் என்னை முடிவை அறிவிக்கவேண்டுமென்று நீர் விரும்பமாட்டீர்.

எனவே, உமது கடிதங்களையும் இதர பேப்பர்களையும் நான் ஸ்ரீ ஏ. வைத்திநாதய்யருக்கு அனுப்பியுள்ளேன். நீங்கள்யார்மீது குற்றம்சாட்டினீர்களோ அவர்கள்யாவரும் இவ்வளவுநாள் உமது சகாக்களாகஇருந்து வந்திருக்கிறார்கள் என்பதை நான் கவனித்தேன். ஆகையினல் நீங்கள் அவர்களுடைய அபிப்பிராயத்தை அறிந்துகொண்டு பொதுவான சேவைக்குரிய வேலைகளைக் கண்டுபிடிக்கவேண்டுமென்று உமக்கு யோசனை கூறுகிறேன். அத்துடன் அம்மாதிரி செய்வது உமது கடமையாகும். இந்த வழியை மீண்டும்நீங்கள் தொடர்ந்துசெய்ய

(தொடர்ச்சி 2-ம் பக்கம் பார்க்க)

காந்திஜீ—பிரஸ்தாராவ் கடிதப் போக்குவரத்து

காந்திஜீ பதில்.

(1-ம் பக்கம் தொடர்ச்சி.)

வேண்டும். ராவ்சாகேப் நடேசய்யரைப் பற்றி, நான் அவர் கூறிய பிரமுகர்களையே விசாரித்தேன். அவர்கள் ஒரே வார்த்தையில் ராவ்சாகேப் நடேசய்யரின் அபிக்கையை ஆட்சேபித்துவிட்டார்கள். நான் அவர் வார்த்தையை மதித்து நான் அவரால் கூறப்பட்ட பிரமுகர்களின் முடிவை நம்பினேன்"

உங்கள், உண்மையுள்ள
(ஒப்பம்) M. K. காந்தி.

ஸ்ரீ வி. பிரஸாத்ராவ் காந்திஜீக்கு 29—9—1939 மீண்டும் கடிதம் எழுதினார். அதில் அவர் காந்திஜீ அவரது ஹிஷ்யர்களால் ஏமாற்றப்பட்டிருப்பதாகவும், அவர் "ஹரிஜன்" சஞ்சிகையில் 23—9—39 தேதி எழுதிய "ஆலயப்பிரவேசம்" என்ற கட்டுரை ஸனாதனிகளின் மனதை புண்படச் செய்து விட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அதன்விபரமாவது;—

இரண்டாம் கடிதம்

அன்புள்ள காந்திஜீ,

"30—8—39 கடிதம் கிடைத்தது. ஸ்ரீமான் என். நடேசய்யர் கூறிய பிரமுகர்களிடம் மதுரை சம்பந்தமாக விசாரித்ததாகக்கூறுகிறீர்கள். அவர்கள் முடிவை நம்பினதாகக்கூறுவது தவறும். எனென்றால் "15—7—39 மகாத்மா காந்திஜீக்கு ஒரு தந்தி அடித்தார" ஸ்ரீ நடேசய்யர் என்னிடம் கூறினார். அதில் கனம் ஸ்ரீ எஸ். ராமநாதன் ஸ்ரீ கே. ஆர். வேங்கட்டராமய்யர், மதுரை ஜில்லா கலெக்டர் இவர்களை விசாரிக்கும்படி ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யர் கூறியுள்ளார்".

17—7—39 நீங்கள் பதில் கொடுத்த தந்தியில் கனம் ஸ்ரீ எஸ். ராமநாதன் அந்த கூற்றுக்களை மறுத்து விட்டதாகக்குறிப்பிட்டிருக்கிறீர்கள்.

ஆனால் நீங்கள் ஜில்லா கலெக்டரையும், ஸ்ரீகே. ஆர். வேங்கட்டராமய்யரையும் விசாரிக்கவில்லை. உங்கள் 17-7-39 தந்தியே உண்மையை சொல்லவில்லையா? ஸ்ரீ கே. ஆர். வேங்கட்டராமய்யர் தனக்கு மகாத்மா காந்திஜீயிடமிருந்து ஒரு கடிதமாவது தந்தியாவது வரவில்லை என்று என்னிடம் கூறுகிறார். என் சகாக்களின் அபிப்பிராயப்படி நடந்துகொள்ளும் படிஎனக்கு புத்தி மதி கூறினீர்கள். அவர்கள் என்னுடைய சகாக்கள் அல்ல. சாத்வீகப் போராட்டத்தில் சேர்ந்த நான் சிறை சென்றகாலத்தில் அவர்களும் சிறை சென்றவர்கள். ஆகவே, அவர்கள் எனக்குச் சிறையில் ஏற்பட்ட தோழர்களே தவிர வேறு விதத்தில் ஏற்பட்ட நண்பர்களல்ல. அவர்கள் அபிப்பிராயமும் என் அபிப்பிராயமும் முரண்பட்டதாக இருப்பதால் இனி பொதுசேவை செய்ய இடமேற்படாது.

நீண்டாதார் ஆலயப்பிரவேச விஷயமாக என்னுடைய அபிப்பிராயம் இப்போதுமாறுபட்டிருக்கிறது. 1934ஜூத்திய அரசியலிருந்து விலகினேன். பின்னர் தோ பிரசாரம் செய்து வந்தேன். பிறகு நான் இந்த கோவில் வேலையில் அமர்த்தப்பட்டேன். நான்ஸனாதனபிரமுகர்களின் நட்பை இந்தக் காலத்தில் பெற்றேன். அதன் மூலம் நமது புராதன வழக்கப் பழக்கங்களே அதிகம் அறிந்து கொள்ள சந்தர்ப்பம் ஏற்பட்டது. அதனால் நீண்டாமையுண்டுஎன்று அறிந்தேன். அதைபாபம்என்றுநீங்கள்கூறுகிறீர்கள். பாபம் அல்ல என்று நான் முடிவுக்கு வருகிறேன். நீண்டாமை உண்டென்பதை பல விஞ்ஞான சாஸ்திரத்தில் விற்பன்னராய் விளங்கும் அறிஞர்களும், ஆசிரியர்களும் கூறுகிறார்கள். சாஸ்திரங்களும் கூறுகின்றன. அதற்கு அத்தாட்சியாக நான் பல ஆதாரங்களைத் தங்கள் மேலான பார்வைக்கு அனுப்பி இருக்கிறேன். (காந்திஜிக்கு அனுப்பி இருக்கும் தஸ்தாவேஜ்களுடன் ஆதாரங்களையும் அனுப்பி இருக்கிறார்). இவைகளை யெல்லாம் பார்த்து—கேட்டுவிட்டபின் நீண்டாமை விஷயமாக என் முன் கொள்கையை நான் மாற்றிக்கொண்டேன். "ஆலயப்பிரவேசம்" என்ற தங்களுடைய கட்டுரை ஒன்று 23—7—39 "ஹரிஜன்" சஞ்சிகையில் வெளிவந்திருக்கிறது.

அந்தச் கட்டுரையின் ஒரு பாகம் 'ஹிந்து' தினசரியிலும், "மதராஸ் மெயில்" தினசரியிலும் வெளிவந்திருக்கிறது.

அக்கட்டுரையைப் படித்த எனக்கு மனம் வருத்தமுற்றது. நீங்கள் ஹரிஜன் யாத்திரையாக 1934ஜூ தென்னிந்தியாவுக்குப்புறப்பட்ட காலையில் எற்பட்ட விஷயங்களைப்பற்றி கூறுகிறீர்கள்.

அந்த விஷயங்களைக் கொண்டு இப்போது நடக்கும் சம்பவங்களை ஆதரிப்பது சரியாகாது. தவிர ஸ்ரீரங்கத்தில் நடந்த சம்பவங்களைப் பற்றி டாக்டர் ராஜன் கூறுவதை தான் நம்ப வேண்டியிருக்கிறது என்று அறிவித்திருக்கிறீர்கள்.

இத்துடன் "மதராஸ் மெயில்" பத்திரிக்கையில் (14-7-1939) கனம் டாக்டர் ராஜன் தடியட்ட நடக்கவில்லை யென்று கூறியதை மறுத்து ஒரு ஸ்ரீரங்கம் வாசி யெழுதியிருக்கிறார். தவிர, ஸ்ரீரங்கம் தடியடியை கண்டித்து 13-9-1939 ஸ்ரீரங்கத்தில் ஒரு பொதுக் கூட்டத்தில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பட்டிருக்கிறது.(அதையும் தங்கள் பார்வைக்கு அனுப்பி இருக்கிறேன்) இந்த இரண்டு அறிக்கைகளும் கூறுவதென்ன?

மந்திரி கனம் டாக்டர் ராஜன் (இப்போது மந்திரியல்ல) சம்பவம் நடந்த அன்று, சம்பவத்தை கூப்பிடு தூரத்திலிருந்து நின்று கொண்டு பார்த்துக்கொண்டிருந்தாரே ஒழிய, அதை நிறுத்த ஒருவித எற்பாடும் செய்யவில்லை. ஸ்ரீ வைஜிநாதய்யரை ஸனாதனிகள் கண்டபடி குறைகூறி கண்டனம் செய்வதாகக் கூறுகிறார்கள். உண்மையில் அப்படி இல்லை. ஸனாதனிகளே ஸ்ரீ வைஜிநதய்யர் கண்டபடி தூஷித்து அவர்களைப் பற்றிப் பல அவதூறுகளைப் பரப்பி வருகிறார்.

ஸ்ரீ வைஜிநதய்யரின் நண்பர்களில் பனிரெண்டு பேர் எனது தெருங்கு பிரார்த்தனையைப் பற்றி தப்பர்த்தமாக ஒரு துண்டு பிரசுரம் மூலம் வெளியிட்டிருக்கிறார்கள். எனது பிரார்த்தனை நன்றாக தமிழில் மொழி பெயர்த்து சுதேசமித்திரனில் வெளி வந்தும் கூட, பிரசாரத்துக்காக தவறான அர்த்தம் செய்து கேலி செய்கிறார்கள்.

தாங்கள் "ஸனாதனிகளின் ஆட்சேபனைகள் அதிகமில்லை. ஒரு சிலர் தான் ஆலயப்பிரவேசத்தை எதிர்க்கிறார்கள்" என்று கூறுவது சரியல்ல.

தென்னாட்டிலுள்ள பல பெரிய கோவில்களுக்கு மந்திரி கனம் டாக்டர் ராஜன் சென்ற பொழுது நடந்த எதிர் ஆர்பாட்டங்களைக் கவனிக்க வேண்டும்.

மதுரையில் தினசரி பல பொதுக் கூட்டங்கள் நடந்து வருகின்றன. இம்மாதிரி மூன்று மாதங்களாய் நடந்து வருகின்றன. பத்தாயிரக்கணக்கான ஆஸ்திகர்கள் கூட்டங்களில் கலந்து கொள்வதை கவனிக்கவும். ஸ்திரீகள் ஆயிரக்கணக்கில் கூடி ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்து வருகிறார்கள்.

சென்னையில் இருக்கும் தினசரிகள் கூட்டங்களைப் பற்றியோ, எங்கள் ஊர்வலங்களைப் பற்றியோ பிரசுரிப்பது கிடையாது. உங்களைப் போன்ற தலைவர்-உலகம்போற்றும் உத்தமராகிய நீங்கள் உங்கள் பக்கத்தில் இருந்து வருகிறவர்களின் கூற்றுகளை நம்புகிறீர்கள். ஆனால் எதிர் பக்கத்து பேர்வழிகள் கூறும் கூற்றுகளை நம்பமறுக்கிறீர்கள்.

நீங்கள் பிறரால் ஏமாற்றப் பட்டிருக்கிறீர்கள். ஒரு தினம் உங்களுக்கு உண்மை புலப்படும். ஆண்டவன் உங்கள் கண்களைத் திறந்து உண்மைகளைக் காட்ட வேண்டும் என்று பிரார்த்தித்தவருகிறேன்.

இதற்குப் பதில் போடவேண்டும். உங்கள் கடிதத்தின் நகல்களையும் எனது கடிதங்களையும் நான் பத்திரிகையில் பிரசுரிக்க விரும்புகிறேன். தயவு செய்து அனுமதிதரவும்.

இப்படிக்கு,
(ஒப்பம்) பிரசாத ராவ்.

காந்திஜீயின் கடைசி கடிதம்

காந்திஜீ மேற்கண்ட கடிதத்துக்கு 5—11—39 வார்தாவிலிருந்து பதில் எழுதியுள்ளார். அதில் காந்திஜீ :—

"உங்கள் காகிதத்தைப் படிக்க அவகாசம் இல்லை. அசையும் ரயிலிலிருந்து இக்கடிதம் எழுதுகிறேன். உங்களுடைய அவதூறுகளுக்கு ஸ்ரீ ஏ. வைஜிநாதய்யர் தக்கப்படி பதில் கூறி விட்டார்.

இந்த விஷயத்தைப் பற்றி ஸ்ரீ என். நடேசய்யர் எனக்கு எழுதி கனம் ஸ்ரீ எஸ். ராமநாதனிடம் விசாரிக்கச் சொன்னார். நானும் விசாரித்தேன்.

இப்பொழுது ஸ்ரீ மீனாக்ஷி கோவில் நிண்டாதாருக்குத் திறந்து விட்டதை பெரும்பாலோர் ஆதரித்து வருகிறார்கள் என்ற முடிவுக்கு நான் வந்திருக்கிறேன்.

நீர் கடிதப் போக்கு வரத்துக்களைப் பிரசுரம் செய்வதில் எனக்கு ஒருவித ஆக்ஷேபமும் இல்லை.

இப்படிக்கு,
உங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்) M. K. காந்தி.

தனிப்பட்டவர் சுதந்திரத்துக்குத் தடை

சர்மையற்ற முறை!

கால்ம சென்ற தாவர சாஸ்திர அறிஞர் டாக்டர் ஸர். ஜே. ஸி. போஸ் மனைவி ஸ்ரீமதி அபால போஸ் சமீபத்தில் தனது கணவர் ஞாபகார்த்தமாக ரூ50,000 (ஐம்பதாயிரம்) கல்கத்தா சர்வகலாசாலை அதிகாரிகளிடம் கொடுத்து, அதன் வட்டியைக் கொண்டு இரண்டு ஹிந்து மாணவர்களுக்கு ஆண்டு தோறும் உபகாரச் சம்பளம் அளிக்கும் படிக் கேட்டுக்கொண்டார். அதை முஸ்லீம் லீக் மந்திரி சபையினர் ஏற்றுக் கொள்ள மறுத்து விட்டனர். காரணம் "ஹிந்து" மாணவர்களுக்கு மட்டும் உபகாரச் சம்பளம் கொடுப்பது கூடாதாம். தனிப்பட்டவர்பிரியத்தைக்கட்டுபடுத்த ஒரு அரசாங்கம் முன் வருவது நேற்மையற்ற முறையாகும்? (பிரி இந்தியா)

ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களின் உபன்யாஸம்

(P. சங்கரநாராயணன், கவர்ன்மெண்ட் காலேஜ் லெக்சரர், கும்பகோணம்.)

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகளான ஸ்ரீ ஆசார்யஸ்வாமிகளால் கும்பகோணம் மடத்தில் 12—11—1939. திங்கள் கிழமை தினம் செய்யப்பட்ட உபன்யாஸமாவது:—

यस्सौख्याम्बुधि लेशलेशत इमे शक्रादयो निर्वृताः। यच्चित्ते निवसन्प्रशान्तकलने लब्ध्वा मुनिर्निर्वृतः। यस्मिन्नित्यसुखाम्बुधौ गलितधीर्ब्रह्मैव न ब्रह्मवित् यः कश्चित् ससुरेन्द्रवन्दितपदो नूनं मनीषा मम ॥

இந்த ச்லோகம் நம்முடைய ஆசார்யரால் சொல்லப்பட்ட மனீஷா பஞ்சகம் என்கிற ஐந்து ச்லோகங்களில் ஒன்று.

இந்த ச்லோகத்தின் அர்த்தத்தை விசாரிப்போம். यत्.....निर्वृताः எந்த நித்ய சுகம் என்கிற சமுத்ரத்தினுடைய மிகவும் ஸ்வல்பமான ஒரு திவிலையினால் இந்த தேவேந்திரன் முதலியவர்கள் சுகத்தையடைகின்றார்களோ. பிரும்மானந்தம் என்று சொல்லப்பட்ட அழிவில்லாத நித்யசுகம் என்கிற சமுத்ரத்தின் மிகவும் சிறிய திவிலை இந்திரன் முதலியவர்களின் சுகம். இந்திரன் முதலியவர் என்ன சொன்னதால் மற்ற தேவதைகள், கந்தர்வர்கள், யக்ஷர்கள், கின்னரர்கள், கிம்புருஷர்கள், வித்யாதரர்கள், எல்லாரையும் குறிக்கும். த்ரைலோக்ய ராஜ்யாதிபதியான இந்திரன் முதல் எல்லா தேவதைகளும் சாதாரண மனிதர்களைவிட மிகவும் அதிகமான ஆனந்தத்தை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். தைத்தீய உபனிஷத்தில் ப்ரும்மாநந்தவல்லியில்

सैषाऽऽनन्दस्य मीमांसा भवति॥ युवास्यात्साधु युवाऽध्यायकः ॥ आशिष्ठो दृढिष्ठो बलिष्ठः। तस्येयं पृथिवी सर्वा वित्तस्य पूर्णा स्यात् ॥

ஒருவன் யுவாவாய் இருந்து சாதுவான அத்யாபகனும் இருந்தால் அவன் அஷ்டனும், த்ருஷ்டனும், பலவானுமிருந்து அவனுக்கு இந்த பூலோகம் முழுவதும் சொந்தமாய் அதற்கு முழுவதும் அவன் அதிபதியாய் இருந்தால் என்ன ஆனந்தத்தை அடைவானோ.

स एको मानुष आनन्दः।

அது ஒரு மனுஷ்யானந்தம். அது ஒரு அளவு (unit). இந்த அளவிற்கு 100 பாகம் மனுஷ்யகந்தர்வாநந்தம்.

ते ये शतं मानुषा आनन्दाः॥ स एको मनुष्यगन्धर्वाणामानन्दः॥

இந்த மனுஷ்ய கந்தர்வர்களுடைய ஆனந்தத்தின் 100 மடங்குகொண்டது தேவகந்தர்வர்களின் ஆனந்தம்.

ते ये शतं मनुष्यगन्धर्वाणामानन्दाः॥ स एको देवगन्धर्वाणामानन्दः॥

இந்த மாதிரி படிப்படியாக ஒவ்வொன்றிலும் நூறு மடங்காக

पितॄणां चिरलोकलोकानामानन्दः, आजानजानां देवानामानन्दः, कर्मदेवानामानन्दः, देवानामानन्दः, इन्द्रस्यानन्दः, बृहस्पतेरानन्दः, प्रजापतेरानन्दः।

அதின் நூறு மடங்கு

स एको ब्रह्मण आनन्दः।

இப்பேர்ப்பட்ட

सौख्याम्बुधिलेशलेशतः।

பிரும்மானந்தம் என்னும்: நித்ய சுகானந்தத்தின் ஒரு திவீலியினால் இந்த த்ரைலோக்யாதிபதியான இந்திரன் முதலியவர்கள் சுகத்தை அனுபவிக்கிறார்கள்.

இதில் ஒரு விசேஷம். மனுஷ்யானந்தத்தை ஒரு unit என்று சொன்னோம். அதின் 100 மடங்கு மனுஷ்யகந்தர்வானந்தம். இது

श्रोत्रियस्यचाकामहतस्य (आनन्दः)

ஆசையே இல்லாமல், ஆனல் வைதிக கர்மாவில் சிரத்தையுள்ள ச்ரோத்ரியன் இதை அனுபவிக்கிறான். அதேமாதிரி,

देवगन्धर्वाणामानन्दः, श्रोत्रियस्यचाकामहतस्य .....देवानामानन्दः श्रोत्रियस्यचाकामहतस्य ....इन्द्रस्यानन्दः श्रोत्रियस्यचाकामहतस्य....ते ये शतं प्रजापतेरानन्दाः॥ स एको ब्रह्मण आनन्दः श्रोत्रियस्यचाकामहतस्य॥

என்றபடி இம்மாதிரி ஒவ்வொரு கிலியிலும்ள ஆநந்தத்தை அகாமஹதனான, அதாவது ஆசையில்லாத, ஆனலும் வைதிக கர்மாவில் ச்ரத்தையுள்ள ச்ரோத்ரியன் அனுபவிக்கிறான். இப்படி மனுஷ்யானந்தத்தை ஒரு அளவாகக்கொண்டு, அதிலிருந்து துபல 100 க்கணக்கு அதிகமுள்ளது ப்ரும்மானந்தம். எந்த ப்ரும்மானந்தமாகிய சமுத்ரத்தின் ஒரு சிறு திவீலியினால் தேவேந்திரன் முதலியவர்கள் சுகத்தை அனுபவிக்கிறார்களோ.

2

यच्चित्ते निवसन्प्रशान्तकलनेलब्ध्वा मुनिर्निर्वृतः। कलनं

என்றால் ஆட்டம் ஓட்டம்

प्रशान्त कलने।

ஆட்டம் ஓட்டம் அடங்கிய சாந்தத்தை, எந்த நித்ய பரமசுகத்தை அடைந்து முனியானவன் ஆநந்தத்தை அனுபவிக்கிறானோ முனி என்றால் மௌனத்தோடு கூடியவன். மௌனம் என்றால் சாதாரணமாக வாயால் பேசாதிருப்பது என்று அர்த்தம் புண்ணாகிறோம். மௌனம் என்பது அது மாத்திரம் இல்லை. கண், காது, மூக்கு, நாக்கு, ஸ்பரிசம் என்ற ஞானேந்திரியம் ஐந்து, வாக், பாணி, பாத, பாயு உபஸ்த மென்கிற கர்மேந்திரியம் ஐந்து ஆகிய 10 இந்திரியங்களையும் வெளி வ்யாபாரமில்லாமல் இழுத்து வித்தவருத்தி இல்லாமல் இருக்கும் ஸ்திதிக்குத்தான் மௌனம் என்று பெயர்.

प्रशान्तकलने என்றதால் இந்திரியங்களின் ஆட்டம் ஓட்டம் இல்லாமல் சித்தம் சாந்தமாய் இருப்பதைக் காட்டுகிறது. அப்படிப்பட்ட சித்தத்தோடு கூடினவன் தான் மௌனி.

மனஸ், இந்திரியங்கள் மூலமாய் வெளி வ்யாபாரங்களில்லாமல் தன்னுள் அடங்கி பிருந்ததேயானால், அப்பொழுது அது தன் சொந்த காரியத்தை செய்து கொள்ளும். மனஸின் சொந்த காரியம் ஆநந்தானுபவம். சில சமயத்தில் துக்காநுபவம் ஏற்பட்டாலும், மனஸின் ப்ரயோஜனம் துக்கத்தை அனுபவிப்பது என்று சொல்லமாட்டோம். சுகத்தை அனுபவிப்பது தான் மனஸின் ப்ரயோஜனம். இப்படி தன் காரியத்தை செய்ய மனஸ், இந்திரியங்களின் வ்ருத்திகளில் ப்ரவேசிக்காமல் சாந்தமாய் இருக்க வேண்டும்.

உதாரணமாக ஒரு நதியில் ப்ரவஹிக்கும் ஜலம், பல வாய்க்கால்களின் மூலம் நாநா தேசங்களுக்குப் போகிறது. ஒரு வாய்க்காலை அடைத்து விட்டால் மற்றவைகளில் அதிக ஜலம் வேகமாய்ப்பாயும். அதுபோல் உலகத்தில் சில மனிதர்களுக்கு, வாக், அல்லது சக்ஷுஸ் அல்லது ச்ரோத்ரம் ஜனமாய்ப்போய்விட்டால், அவர்களுக்கு மற்ற இந்திரியங்களைவெகு ஸூக்ஷ்மமாய் இருப்பதை ப்பார்க்கிறோம். எல்லா வாய்க்கால்களையும் அடைத்துவிட்டால் நதியின் வேகமும், ப்ரவாஹமும் அதிகமாவதுபோல், இந்திரியங்களாகிய எல்லா மார்க்கங்களையும் அடைத்து சித்தத்தை இழுத்துக் கொண்டுவிட்டோமானால், அது வெளியில் ஆட்டம் ஓட்டம் ஒன்றும் இல்லாமல் प्रशान्तकलनமாய் சுகத்தை அனுபவிப்பதாகிய தன் சொந்தமான வேலையைச் செய்யும். यच्चित्ते निवसन्प्रशान्त कलने लब्ध्वा मुनिर्निर्वृतः எந்த பரமசுகத்தை வெளி ஆட்டம் இல்லாமல் சாந்தம் அடைந்த சித்தத்தில்நிவஸன் ஸுகம் லப்ஷ்வா முனியானவன் ஆநந்தத்தை அனுபவிக்கிறானே.

3

यस्मिन्नित्य सुखाम्बुधौ गलितधीः ब्रह्मैव न ब्रह्मवित्

இப்படி ப்ரசாந்தமான மனதோடு கிர்வ்ருதியை அடைகிற முனியை ப்ரம்ஹவித் என்கிறோம். இந்த சுகானுபவத்தில் சுகம் என்று ஒன்று, அனுபவம் என்று ஒன்று, அனுபவிக்கும் சித்தம், ஆகிய மூன்று இருக்கவேண்டும். இந்த மூன்றும் நியதமானவைகளா? முனியானவன் ப்ரம்மவித் என்னும்பொழுது அறிகிறவன், அறியப்படும் வஸ்து அறிவு என்ற மூன்று உண்டு; இவை மூன்றும் எப்பொழுதும் உண்டா? இருக்கவேண்டுமா என்று கேட்டோமானால், அவை அவஸ்யமில்லை, நியதமானவைகள் இல்லை என்று ஏற்படும். ப்ரும்ம ஞானத்துக்கு காரணமாயுள்ளது धीः அல்லது புத்தி. இந்த புத்தியின் ஸ்வரூபம் என்ன வென்று பார்த்தோமானால் அது அந்த நித்ய सुखाम्बुधिயில் மறைந்து விடுகிறது. यस्मिन्नित्यसुखाम्बुधौ गलितधीः இருட்டின் ஸ்வரூபத்தை கண்டுபிடிக்க தீபத்தைக் கொண்டு பார்த்தால் இருட்டு மறைந்து விடுகிறது. பானகத்தில் சர்க்கரைப் பொம்மையைப் போட்டால் கொஞ்சகாலம் அது கடினமாய் இருக்கிறது. அதன் தன்மையை தெரிந்துகொள்ள அதை கையால் பிசைந்தோமானால் அதன் ஸ்வரூபம் பானகத்தில் கரைந்து மறைந்து விடுகிறது. ஒருவன் கயிற்றைப் பார்த்து பாம்பு என்று நினைத்து பயப்படுகிறான். உற்றுப் பார்க்கும் பொழுது அது பாம்பு இல்லை, கயிறு என்று தெரிந்து கொள்ளுகிறான். அப்பொழுது பாம்பு எங்கு போய்விட்டது? பாம்பு கயிற்றில் மறைந்து விட்டது. அதேமாதிரி வித்யை யாகிய தீபத்தால் பார்க்கும் பொழுது அவித்யை, இருட்டைப் போல, சர்க்கரை பொம்மையைப்போல, பாம்பைப் போல மறைந்து விடுகிறது. இந்த प्रशान्त कलनமான சித்தங்கூட அதன் ஸ்வரூபத்தை விசாரிக்கும்பொழுது सुखाम्बुधियil மறைந்து விடும். அப்பொழுது அந்த மனிதனுக்கு பரம்ஹவித் என்று பெயரில்லை. அவன் பிரம்ஹமாகவே ஆய்விடுகிறான். ब्रह्मैव न ब्रह्मवित். ச்ருதியில் கூட ब्रह्मविद्ब्रह्मैव भवति என்று சொன்னபடி அவன் முதலில் பிரம்ஹவித்தாக இருந்து, பிறகு ப்ரும்மமாகவே ஆகிறான்.

4

यः कश्चित् स सुरेन्द्रवन्दितपदो नूनंमनीषा मम

இப்படி பிரம்ஹவித்தாக இருந்து பிறகு ப்ரும்மமாகவே ஆன ஞானி எவனை

(6 பக்கம் பார்க்க.)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஹ கார்த்திகை-மீ 8உ

கனம் சாஸ்திரியாரின் பிரஸங்கம்

கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் சென்ற வாரம் சூடத்தையில் "பிறப்புரிமை" என்ற விஷயத்தைப்பற்றி ஓர் பிரஸங்கம் புரிந்தார் இந்தியாவிலுள்ள ஒவ்வொரு சிறிய பெரிய வகுப்பாரும் தங்களுடைய பிறப்புரிமையை அதிகம் வற்புறுத்திப் பெரிய குழப்பம் உண்டாக்கி வருகிற சமயத்தில், கனம் சாஸ்திரியார் இவ்விஷயத்தில் விவேகிகள் மதிக்கத்தக்க ஓர் நிர்ணயத்தை வெளியிட்டுப் பேசுவாரென்று யாவரும் எதிர்பார்க்கக் கூடியது ஸஹஜம். ஆயினும், சாஸ்திரியாரின் பிரஸங்கமான்று பலருக்கு ஏமாற்றத்தை கொடுத்ததாகவே தெரிகிறது. பிறப்புரிமை விஷயமாக ஒரு முடிவான அபிப்பிராயத்தைச்சொல்லி ஸங்கடத்தில் மாட்டிக்கொள்ள கனம் சாஸ்திரியார் விரும்பவில்லைபோலும். பிறப்புரிமைப்பேச்சுகள் மூலமாக தற்போது ஏற்பட்டுள்ள இளர்ச்சிகளை அவ்வப்படியே வர்ணித்துவிட்டு நின்று விட்டார். தமது திட்டமான அபிப்பிராயத்தைக் கூறவில்லை.

பழையகாலங்களில் ஸ்திரீகளின் நிலைமை கேவலமாயிருந்ததாயும், பெண் குழந்தை பிறந்தால் அதைக் கொன்றுவிடும் வழக்கமிருந்ததாகவும் கனம் சாஸ்திரியார் குறிப்பிட்டார்.

பெண் குழந்தைகளைக் கொலைசெய்யும் க்ரூர மனோபாவம் பழைய காலத்தில் இருந்ததோ இல்லையோ, இருக்கட்டும். தற்காலம் நாகரிகத்தின் உச்சஸ்தானத்தில் இருப்பதாக மதிக்கப்படுவதும், உலகத்துக்கே நாகரிகத்தைக் கற்றுக்கொடுத்ததாயுமுள்ள ஐரோப்பாவில் இன்று நடப்பதைப் பற்றி இவர் என்ன நினைக்கிறார்? இந்த நிமிஷம் அங்கு ஆகாயவிமானவெடிகுண்டு மூலமாயும், ஸப்மெரின் கப்பல் மூலமாயும், விஷவாயு முதலிய கொடிய ஸாதனங்கள் மூலமாயும் நிரபராதிகளான ஆயிரக்கணக்கான ஸ்திரீகளும் குழந்தைகளும் கொல்லப்பட வில்லையா? இதை சிந்தித்துப் பார்த்தால், நாகரீகமென்பதுவெறும் வார்த்தையென்பது விளங்கும். முற்காலத்திலும், இக்காலத்திலும், காமக்ரோதங்களுக்கு வசப்பட்டு மனிதர்கள் அநீதங்களும் க்ரூரங்களும் செய்கிறார்கள். நாகரீகவளர்ச்சியால் மனிதஸ்வபாவம்மாறி வருகின்றதென்று சொல்வதுசரியல்ல.தெய்வ பயத்துக்கும் தர்மநியமங்களுக்கும் எந்த அளவுக்கு மனிதர்கள் கட்டுப்பட்டிருக்கிறார்களோ அந்த அளவுக்குத்தான் மனிதர்களிடம் நன்னடக்கையும் நியாயமும் காணப்படும்.

பிறப்புரிமையைப்பற்றி எங்கும் எற்பட்டுள்ள இளர்ச்சியை கனம் சாஸ்திரியார் குறிப்பிட்டுப் பேசுகையில், மாணவர்கள் ஸ்திரீகள், தீண்டாதார் ஆகியோருடைய வாதத்தையும் குறிப்பிட்டார்.

தற்கால மாணவர்கள், பள்ளிக்கூடச் சட்ட திட்டங்களும், பாடம், பரீக்ஷா முறைகளும் தங்களிஷ்டப்படியே நடக்க வேண்டுமென்று கேட்பதாயும், அது தங்களுடைய பிறப்புரிமையென்று வாதிப்பதாயும் சொன்னார்.

தீண்டாதார், ஆலயங்களில் பிரவேசிப்பது தங்களது பிறப்புரிமையென்று கூறுவதாயும், இதற்கு ஸனாதனிகள் என்ன பதில் சொல்லுவார்களென்றும் கனம் சாஸ்திரியார் கேட்டார். இச்சமயம் அவர் கும்பகோணமே ஸனாதனத்திற்கு ஓர் காயகமாக வீருப்பதாயும் குறிப்பிட்டார். ஆலயப் பிரவேசம் பிறப்புரிமையாவென்பதைப்பற்றியும், அவ்விஷயமாக முடிவு கூறுவது பற்றியும் ஸனாதனிகளின் வழி வெகு தெளிவாயிருக்கிறது. மற்றவர்களைப்போல் ஸனாதனிகள் குழப்பமடைந்து நிற்கவில்லை.

இப்போது நடந்து வரும் ஆலயப்ரவேசக் இளர்ச்சியில் தீண்டாதார் அதிகம் பங்கு எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரியவில்லை. ஆதலால் அவர்கள் பிறப்புரிமையென்று வாதிப்பது உண்மையா வென்ற விஷயம் யோஜிக்கத்தக்கது. திருத்தக்காரர்களின் இடைவிடாத விஷமத் தாண்டுதலின்மேல் சில தீண்டாதார்கள் அப்படி கக்ஷி பேசினாலும், அது பிறப்புரிமையல்ல வென்று நாம் தெளிவாகக் கூற முடியும். ஆனால்அதுநமது அபிப்பிராயமன்று. நிஷ்பக்ஷபாதமான சாஸ்திரத்தின் கட்டளையேயாகும். உலகத்தில் ஏற்படும் எந்த த்தகராறிலும், மனித புத்திக்கு உட்பட்டாத சாஸ்திரவிதியே நியாயமான தீர்ப்புச் சொல்லக் கூடிய தென்கிற நியமத்தை ஸனாதனிகள் அவலம்பித்திருக்கிறார்கள். : உண்மையில் எல்லோருக்கும் இதுவே கதி. ஸ்திரீகளோ மாணவர்களோ, ஒன்றைத் தங்களது பிறப்புரிமையென்று சண்டைபிடிவுதாக வைத்துக்கொள்வோம். எதிர்க்கக்ஷியார் அதை அங்கீகரிவில்லையானால் ,அப்போது என்ன செய்வது? யாருடைய தீர்ப்பை ஏற்பது? அண்ணமலை யூனி வர்ஸிடியில், சட்டம் ஒழுங்கு என்ற நியமங்களைக் காட்டியே மாணவர்களின் பிறப்புரிமை வாதத்தை மறுக்க வேண்டிய தாயிற்று.

ஆதலால் தார்மிகர்கள் இத்தகைய வீவாதங்களிலோ, வேறு எவ்வித லோக வியவஹாரங்களிலோ, சாஸ்திர விதியையே சரணமாக ஏற்றவர்கள். பிரமம் பக்ஷபாதம், தவறு ஆகியவை நிறைந்த மனித புத்தியை அவர்கள் பிரமாணமாக ஏற்காமல் தெய்வ ஆக்ஞா ரூபமான சாஸ்திர விதிப்படியே ஆசரிப்பவர்கள். அத்தகைய மனிதனின் தர்மத்தை அதுதெளிவாகவருத்துள்ளது. அதன்படி ஹிந்து மத விதிகளுக்குச் கட்டுப்பட்டு நடக்கக் கடமைப்பட்ட தீண்டாதார் எவரும் ஆலயப்பிரவேசத்தை தனது பிறப்புரிமையாகப் பேசமுடியாது. இதுதான் ஸனாதனிகள் கனம் சாஸ்திரியாருக்குச் சொல்லும் தெளிவான பதிலாகும்.

அய்யுவய்யர்-- லக்ஷ்மி அம்மாள்

அத்வைத வேதாந்த பாடசாலை

வருஷாந்திர விழா

கும்பகோணத்தில் ஸ்ரீமான் பழமாநேரி அய்யுவய்யர் அவர்களுடைய நிர்வஹத்தை கொண்டு ஸ்தாபிக்கப்பட்டு நடந்து வரும் அத்வைத வேதாந்த பாடசாலையின்வார்ஷிக உத்ஸவ மானது ஹிங்கட்கிழமை 20-11-39 மாலை மேணிக்கு ஸ்ரீசங்கராசாரியார் ஸ்ரீமடத்தில் நடைபெற்றது.

ராவ்ஸாகேப் பிரம்மஸ்ரீ ஆர். ஸாமிநாதய்யர் அவர்கள் தலைமை வகித்தார்.

அநேக கனவான்களும், பண்டிதர்களும் விஜயமாகி யிருந்தனர்.

ஆரம்பத்தில் தேவதா ஸ்தோத்திரம் நடந்த பிறகு, ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளால் அநுக்ரஹத்துடன் அனுப்பப் பட்டிருந்த பிரஸாதங்களுடன் உயர்ந்த பீதாம்பரமும் ஸ்ரீமான் அய்யுவய்யர் அவர்களுக்கு வேதகோஷ புரஸ்ஸராமாகக் கொடுக்கப்பட்டது. பாடசாலை மாணவர் ஸ்ரீ மகாதேவனுல் ஸ்ரீ அய்யுவய்யரவர்களுக்கு ஸம்ஸ்கிருதத்தில் ஓர் உபசாரப் பத்திரம் படித்துக்கொடுக்கப்பட்டது.

அத்வைதசபா கார்யதரிசியான ஸ்ரீமான் எம். கே. வைத்தியநாதய்யரவர்களால் இந்தப்பாடசாலையைப் பற்றிய சரித்திரத்தை விவரித்துச்சிறிய அறிக்கையொன்று கூறப்பட்டது. அதன்படி ஸ்ரீமான் அய்யுவய்யரால் 63 ஆயிரம் ரூபாய் தர்மத்திற்காக வைக்கப்பட்டிருப்பதாயும், அதன் வட்டியைக்கொண்டு வேறு சில தர்மங்களும் இந்தப் பாடசாலையும் நடத்தப்பட்டு வருவதாயும், இதைஸ்தாபிப்பதில் ஸ்ரீமான் அய்யுவய்யரவர்களின் தர்ம பத்நிணீயான ஸ்ரீ லக்ஷ்மியம்மாள் தனது அந்திய காலத்தில் மிகப்பல மாக வற்புறுத்தியதாகவும், ஸ்ரீ அய்யரின் குமாரத்தி ஸ்ரீமதி சிவகாமி அம்மாளும், மாப்பிளை, மாஜி முன்ஸீபு ஸ்ரீமான் பி. எஸ். ஸுப்பிரமண்ய அய்யரவர் களும் இதை ஸ்தாபிப்பதில் மிகுந்த சிரத்தை எடுத்துக்கொண்டதாயும், 8 வருஷ காலமாக அத்வைத சபை கமிட்டியாரின் மேற்பார்வையில் பாடசாலை வெகு சிறப்பாக நடந்து வருவதாயும், தனவான்கள் இதற்கு இன்னும் உதவிபுரிந்து வலுப்படுத்த வேண்டுமென்றும், இத்தகைய தர்மத்தைச் செய்த ஸ்ரீ அய்யுவய்யர் குடும்பத்தினருக்கு பகவான் ஸகல க்ஷேமங்களையும் அளிக்கவேண்டுமென்றும்"ஸ்ரீமான் வைத்யாதய்யர் கூறினார்.

இதையநுசரித்து அத்வைத ஸபை பிரதான பண்டிதரான சாஸ்திர ரத்னகரம் பிரமஸ்ரீ விச்வநாத சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர், மஹாமஹோபாத்யாய ஸ்ரீ எம். வி. ராமாநுஜாசாரியர், ஸ்ரீமான்கள் அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார், ஊ. சா. வேங்கடராமய்யர், ஆங்கரை ரங்கசாமி சாஸ்திரிகள், வக்கீல் என். ஹரிராவ், ராமசந்திர சாஸ்திரிகள், வரஜுபேயம் ஸ்ரீநிவாசதாதாசாரியார் முதலியவர்கள் ஸ்ரீ அய்யுவய்யரின் உதாரச் செய்கையைப் புகழ்ந்து பேசினர்கள்.

ஸ்ரீமான் அய்யுவய்யர்சார்பாக ஷெயர் மாப்பிள்ளை ஸ்ரீமான் பி. எஸ். ஸுப்ரமண்ய அய்யரவர்களால் ஸபையோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

தலைவர் வேதாந்த வித்யையைஅபிவிருத்தி செய்யவேண்டியதைப்பற்றிச் சொல்லி ஸ்ரீ அய்யுவய்யர் செய்கையைப் பாராட்டி முடிவுரை கூறினர்.

ஸ்ரீமான் ஜீ. வி. வெங்கடராமய்யரவர்களால் தலைவருக்கும், மற்றவர்களுக்கும் உபசார வார்த்தை கூறப்பட்டபின் சந்தனம், தாம்பூலம், பழம், கற்கண்டு வழங்கப்பட்டு விழா பூர்த்தியாயிது. (க.மி.)

ஆலயப்பிரவேசத்துக்கு எதிர்ப்பு

"சட்டத்தை ரத்து செய்க"

இல்லையேல் ஸத்யாக்ரஹம் தொடங்குவோம்

திருநெல்வேலி ஜில்லா ஸனாதனிகளின் கூட்டம் 13—11—39 மாலை ஸ்ரீ சாஸ்தா கோவிலில் நடைபெற்றது. ஜில்லாவின் பல்வேறு பாகங்களிலிருந்து ஏராளமாக ஆஸ்திகர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸ்ரீ அய்யா அய்யர் தலைமை வகித்தார்.

"ஆலயப்பிரவேசத்தை எதிர்ப்பதாகவும் ஆலயப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்யவேண்டு மென்றும், இல்லையேல் நாடேங்கும் சத்யாக்ரஹம் ஆரம்பிக்கப்படும்" என்ற கூட்டத்தில் தீர்மானங்கள் ஏகமன தடன் நிறைவேறின.

அடுத்த வாரத்தில் திருநெல்வேலிக்கு விஜயம் செய்யப்போகும் ஹிந்து மததேவாலய சொத்து பரிபாலன போர்டு கமிஷனரைக் கண்டு ஸ்ரீ செல்லையப்பர் கோவிலில் ஹரிஜனப் பிரவேசத்தை எவ்வாறு உள்ளூர் வாசிகள் ஒருங்கு சேர்ந்து எதிர்க்கிறார்கள் என்பதை சொல்ல வேண்டு மென்று தீர்மானிக்கப்பட்டது.

திருநெல்வேலி ஹிந்து மத சங்கத்தை அ. இ. வ. ஸ. சங்கத்தின் கிளையாக மாற்றுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

"கோவில்களை தமிழர்கள் ரக்ஷிக்க வேண்டும்"

மதுரையில் தலைவர்கள் கர்ஜனை

மதுரைமா நகரில் 18—11—39 மாலை ஒரு ஸனாதனிகளின் மாபெரும் கூட்டம் ஸனாதனதர்ம வித்யாலயத்தில் நடைபெற்றது.

ஜோதிர் மடாதிபதி ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் அக்ராஸனம் வகித்தார்கள்.

"தமிழர்கள் கோவில்களை ரக்ஷிக்க வேண்டும். அது அவர்கள் கடமையாகும், என்று ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகள் தமது தலைமை பிரசங்கத்தில் கூறினர்கள்.

ஸ்ரீமான்கள் கே. ராமய்யங்கார், அய்யாசாமிய்யர், பிரஸாதராவ் முதலியவர்கள் கூட்டத்தில் பேசினர்கள்.

ராவ்சாகேப் ஸ்ரீ என். நடேசய்யர் அ. இ. வ. ஸ. சங்கத்தின் வேலைகளை எடுத்துக் கூறினர்.

ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள் தமது முடிவுரையில்:— "தமிழர்களின் மூதாதையர் தென்னிந்தியாவில் இருக்கும் எல்லா கோவில்களையும் கட்டினர்கள். அந்தக் கோவில்களில் சரிவரபூஜைகள் நடக்க வேண்டி கோவில்களுக்கு நிரந்திரமாக சொத்துக்களை வைத்துவிட்டுப் போயிருக்கிறார்களென்றும், எனவே கோவில்களை ரக்ஷிக்க தமிழர்கள் முன்வரவேண்டுமென்றும், அவர்கள் (தமிழர்கள்) யாவரும் ஒருங்கு சேர்ந்து "ஆலயப்பிரவேசம் கூடாது" என்று நாடெங்கும் பிரசாரம் செய்தால், அடுத்தமாதம் ஆலயப்பிரவேசக் கிளர்ச்சி நின்றுவிடும். அப்படி செய்யாவிடில் தான் ஒன்றும் அதிகம் சொல்லுவதற்கில்லையென்றும், தன்னை ஒத்தவர்கள் ஸ்ரீ மீனட்சி அம்மனைப் போய் தரிசிக்கமுடியாமல் போய்விடுமென்றும், தன்னைப் போன்றவர்களுக்குரிய பாத்யதையை பறி முதல்செய்வதாகுமென்றும், கூறிமுடித்தார் வந்தனோபசாரம் கூறியபின் கூட்டம் கலைந்தது.

மதுரையில் மற்றொரு கூட்டம்

மதுரை வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் ஆதரவில் 19—11—39 இரவு ஒரு பொதுக்கூட்டம் கூடிற்று.

ஸ்ரீ கே. ராம ஐயங்கார், அட்வகேட், தலைமை வகித்தார்.

ஸ்ரீமான்கள் சுந்தரேஸ அய்யர், துளஸி ராம், நரஸிம்மய்யங்கார், ராமய்யா பிள்ளை, கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் முதலியவர் கூட்டத்தில் பேசினர்கள். தலைவர் தமது முடிவுரையில்:—

"ஆலயப்பிரவேசம் என்பது அரசியல் புரட்டாகும். காங்கிரஸில் எனக்குள்ள மதிப்பு போகவில்லை. விரைவில் காங்கிரஸ் காரர்கள் தங்கள் தவறை உணர்வார்கள் என்பதில் சந்தேஹமில்லை உண்மையில் ஹரிஜனங்கள் பக்தி சிரத்தையுடன் கோவிலுக்கு வருவதில் எனக்கு ஒருவித ஆட்சேபமும் இல்லை என்று "கூறிமுடித்தார்.

(ஹிந்து)

பாபநாசம்—மிலட்டரி பெருமழையினால் ஏற்பட்ட நஷ்டம்

15-9-39ல் வண்ணார், வடவார் ரயில்வே ஸ்டேஷனுக்கருகாமையிலும், அதன் கிழக்கேயும், வடபுறம் உடைப்பும் களஞ்சேரிக்கு மேற்கே தென்கரையிலும் உடைப்பு ஏற்பட்டு ஏராளமாய் ஜலம் புகுந்து சம்பா பயிர்களின் மேல் சுமார் 4 அடி ஜலம் ஓடிக்கொண்டிருக்கிறது. சாலியமங்கலம் பாபநாசம் கப்பிரஸ்தாவில் ரோட்டுக்கு மேல் 3 அடி ஜலம் ஓடிக்கொண்டிருக்கிறது. ஆற்றங்கரை பள்ளத்தெருவிலுள்ள சுமார் 100 வீடுகளில் இரண்டு தவிர ஜாடா விழுந்துவிட்டன. மெம்மேலி பள்ளத் தெருவில் சுமார் 40 வீடுகள் விழுந்து விட்டன. ஜனங்கள் ஜாடாவும் ஆற்றங்கரையில் உட்கார்ந்து கொண்டு கஷ்டப்படுகிறார்கள். இது இப்படியிருக்க, வட்டாற்றில் அரசூருக்கு அருகாமையிலும், மற்றும் சில இடங்களிலும். எற்பட்ட உடைப்பால் ஏராளமான வீடுகளுக்குச் சேதம். ஜனங்கள் மேடு கண்ட இடங்களில் தங்கியிருக்கிறார்கள். எங்குபார்த்தாலும் ஒரே ஸமுத்திரம் போல் தெரிகிறது. அவரவர்கள் எங்கு அகப்பட்டுக் கொண்டார்களோ அங்கங்கேயே இருப்பதால் ஒருவர்க்கொருவர் விஷயத்தைத் தெரிந்துகொள்ள முடியவில்லை. இந்த உடைப்புகளால் தற்போது இருக்கும் நிலைமையில் ½ வாசி மகஸூல் கூடத் தேறாது.

(ஒ. நி.)

சிதம்பரம் தென்னற்காடு ஜில்லா ஸனாதனதர்ம மகாஸபா

தென்னற்காடு ஜில்லா ஸனாதன தர்ம மகா ஸபை, பிராம்மண மகாஸபா, இவைகளின் ஆதரவின் கீழ் 17—11—39 மாலை மேலவீதியில் ஸ்ரீ எஸ். எஸ். வெங்கடேச தீக்ஷிதர் (ஆறுமுக நாவலர் கலாசாலே டிரஸ்டி,) அவர்களின் தலைமையின் கீழ்ஓர் பொதுக் கூட்டம் நடந்தேறியது. அதசமயம் அடியிற்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின.

"இன்று முதல் தென்னற்காடு ஜில்லா ஸனாதன தர்ம மகா சபையை "தேன்னற்காடு ஜில்லா வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்க ஸபா"வாக பெயர் கொடுக்கப் பெற்றிருக்கிறது. இச்சபையை அகில இந்திய வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்க ஸபையோடு இணைக்கும்படி தலைவர்கள் அவர்களை வேண்டிக் கொள்ளுகிறது. வருகிற டிசம்பர் மாதம் கடைசி வாரத்தில் நடத்த வேண்டிய இரண்டாவதுஜில்லாமகாநாட்டை சென்னை மாகாண மகாநாடாக கூட்டவேண்டுமென்று அகில இந்திய வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்க தலைவர் அவர்களை கேட்டுக்கொள்ளுகிறது. ஷெட்யூல மகாநாட்டிற்கு விஜயம் செய்து உதவி புரிந்து சிறப்புடன் நடத்தி வைத்து ஸனாதன தர்மத்தை அபிவிருத்தி செய்யவும் ஒவ்வொரு இடத்திலும் ஹிந்துஸ்தாபனங்கள் தோற்றுவிக்கவும் இம்மாகாண ஆஸ்திகர்களையும் கனதனவான்களையும் இக்கமிட்டி வேண்டிக்கொள்ளுகிறது. ஷெட்யூலமகாநாட்டிற்கு மாகாணத்தின் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும், சுதேச சமஸ்தானங்களிலிருந்தும், சைவ, வைஷ்ணவ, மத்வ மடங்களிலிருந்தும் பிரதிநிதிகளையும் அனுப்புவிக்கும்படி இக்கூட்டம் ஷெட்யூல்ஸ்தாபனங்களை வேண்டிக்கொள்ளுகிறது." (ந.மி.)

அறிக்கை.

[நாடெங்கும் நடக்கும் ஸனாதனிகளின் கூட்டங்களின் நடவடிக்கை விபரங்களைச் சுருக்கமாக காங்கிரஸின் ஒரே பக்கத்தில் மகியினுல் தமிழில் எழுதி பிரதி செய்வாய்க் கிழமைக்குள் அனுப்பினுல் ஆர்யமதர்மத்தில் அந்தவாரம் பிரசுரிக்க வகுகரியமாயிருக்கும். — ஆசிரியர் ஆ. த.]

ஸ்ரீ சங்கராச்சார்யஸ்வாமிகள் உபன்யாஸம்.

(3 பக்கம் தொடர்ச்சி)

ருவனே அவன் எவனுய் இருந்தாலும் தே வேந்திரனும் நமஸ்கரிக்கப்படுகிறான். இந்திராதி ஸகல தேவர்களும் அவனடியில் வீழ்ந்து புரள வேண்டியவர்கள் என்று நிச்சயமாய் என்னுடைய அபிப்ராயம்.

5

இப் பேர்ப்பட்ட நித்ய சுகமான ப்ரும்மாநந்தத்தை சற்று விசாரிப்போம். வ்யாகரணத்தில் ஸ்ரோட வாதம் என்று ஒரு வாதம் உண்டு. சப்தம் என்பது எப்பொழுதும் உள்ளதா, அல்லது ஒரு வஸ்து மற்றொரு வஸ்துவோடு உறையும் பொழுது மாத்திரம் உண்டாகிறதா என்ற ஒரு கேள்வியுண்டு. சப்தம் நியதமாய் எங்கும் வ்யாபித்துக் கொண்டிருக்கிறது. இந்த சர்வ வ்யாபியான சப்தத்திற்கு நாதம் என்று பெயர். இது எங்கும் வ்யாபித்துக் கொண்டிருப்பதால் நாதப்ரம்மம் என்றும் சொல்லுகிறோம். ப்ரும்மம் என்பது ब्रह्म வினிருந்து வந்தது. ब्रह्म் என்றால் बृह् बृद्धौ பெரியது, எங்கும் வ்யாபித்துள்ளது என்ற அர்த்தம். இந்த எங்கும் வ்யாபித்துள்ள சப்தம் நமது சரவணேந்திரியத்தால் அபியக்கூடியதாய் ஆவதற்கு ஒரு குறிப்பிட்ட ப்ரதேசத்தில் ஒரு வஸ்து மற்றொன்றோடு உறையும் பொழுது ஏற்படும் சலனங்களால், அந்த ப்ரதேசத்திலிருந்து உண்டாவதாகத் தோன்றுகிறது.

அல்லது வேறொரு உதாரணம் சொல்லுவோம். உதகமண்டலம் போன்ற ஒரு மலையின் உச்சியில், சூர்யன் ப்ரகாசிப்பதாய் வைத்துக்கொள்வோம். அதனால் உண்டாகும் வெய்யில் மலையின் கீழ்ப்ரதேசங்களில் அடிக்கிறது. ஆனால் வெட்ட வெளியில் அந்த வெய்யிலின் ஸ்வரூபம் தெரிவதில்லை. அது வெய்யிலாகத் தெரிய பக்ஷி யொன்று பறந்தால் அந்த பக்ஷியால் அந்த வெய்யில் தடங்கல்பட்டு, அதன் ப்ரகாசம் நமக்குத் தெரிகிறது.

ஒரு வீட்டின் கூரையிலுள்ள த்வாரத்தின் வழியாய் சூர்யரச்மி உள்ளே விழுந்தால் த்வாரத்தின் உருவம்போல் இருக்கும் உள்ளே விழும் வெய்யிலின் உருவம். ஆனால்வாஸ்தவமாக சூர்யப்ரகாசத்துக்கோ வெய்யிலுக்கோ ஆகாரம் கிடையாது. த்வாரம் சதுரமாகவோ, வட்டமாகவோ, அர்த்த சந்த்ராகவோ இருந்தால் அதே மாதிரி தோன்றுகிறது உள்ளே விழும் வெய்யில்.

ஒரு குடத்தினுள் தீபத்தை வைத்தால் தீபப்ரகாசம் வெளியே தெரியாது. ஆனால் குடத்தில் சிறிய த்வார மொன்றை செய்தால் உள்ளே இருக்கும் தீபப்ரகாசம் தெரியும்.

இந்த மாதிரி யெல்லாம் சர்வ வ்யாபகமாய் இருக்கும் வஸ்து, இந்திரியங்களுக்கு கோசரமாகாது. அதை ஒரு குறிப்பிட்ட தேசத்தில் ஆகாரத்தை உண்டாக்கினுல் தான் அது இந்திரியங்களுக்குத் தெரியும். சர்வ வ்யாபியாய் இருப்பதற்கு உருவம் கிடையாது. அதை அறிய அதை ஹ்ரஸ்வப்படுத்தினுல் தான் முடியும்.

ஆத்மாவைப்பற்றிப்பேசும்பொழுது மூன்றுவிதமாகச்சொல்வதுண்டு. பரமாத்மா, ஜீவாத்மா, கௌணாத்மா. பரமாத்மாவென்பது பரபிரம்மம் என்று வ்யவஹரிக்கப்பட்டது. ஜீவாத்மா என்பது தான் நம் தேகங்களில் உள்ளே இருப்பது. அதற்கு மித்யாத்மா என்றும் சொல்வதுண்டு. கௌணாத்மா என்பது ஒரு மனிதனுக்கு சம்பந்தமான களத்ர புத்ர, மித்ராதிகள், க்ராமம், ஜிருகம் தனம் இவைகளைகுறிக்கும். ஒருவன் தனம் போய்விட்டால் "நான் போய்விட்டேன்" என்கிறான். இந்த வஸ்துக்களே தானாகி ஜீவாத்மா கௌணாத்மா இவைகள் அனுபவிக்கும் ஆகாரம் அநித்யமானது. இந்த சுகமெல்லாம் மிகவும் குறைத்தலானவை. நித்யமில்லாதவை. இவைகிறிய அளவுக்குட்பட்டவை. நிலையில்லாதவை. ப்ரும்மாநந்தம் தான் நித்யமாய் ஸர்வ வ்யாபியாய் ஸத்யமாய் விளங்குவது.

நாதம் எங்கும் எப்பொழுதும் இருப்பது போல், இந்த ப்ரும்மாநந்தம் எப்பொழுதும் நம்முள் இருக்கிறது. ஆனால் சர்வ வ்யாபியாய் எப்பொழுதும் இருப்பதால் சாதாரணமாக நமக்குத் தெரியவில்லை. இரண்டு வஸ்துக்கள் உறைந்தால் தான் சப்தம் ச்ரோத்ரேந்திரியத்திற்கு கோசரமாவது போல், நம் சித்தம் பாஹ்யமான வஸ்துக்களோடு சம்பந்தப்படும் பொழுது இந்த ஆநந்தம் ஒரு சிறிதாவது நமக்குத் தெரிகிறது. ஆனால் அவித்யை என்னும் நிரையினுல் மறைக்கப்பட்டிருக்கிறது. அந்த நிரையை சற்றுத் தூக்கினுல் அந்த ஆனந்தம் தெரிகிறது. குடத்தில் ஒரு சிறிய த்வாரம் பண்ணினுல் உள்ளே இருக்கும் தீபத்தின் ப்ரகாசம் கொஞ்சம் தெரியும். தீபத்தை மறைக்கும் குடத்தையே உடைத்துவிட்டால் தீபத்தின் ஜோதிஸ்முழுவதும் நன்றாய் தெரியும். அது போல் அவித்யை என்ற நிரையை கொஞ்சம் நீக்கினுல் கொஞ்சம் ஆநந்தம் தெரியும். கொஞ்சம்கொஞ்சமாக மேன்மேலும் விலக்கினுல் மனுஷ்யானந்தம் முதல் ப்ரஜாபதியின் ஆநந்தம் வரைக்கும் தெரியும். இந்தத் நிரை முழுவதும் நீங்கினுல் ப்ரும்மாகாத்தை அனுபவித்து ப்ரும்மமாகவே ஆய்விடலாம்.

எந்த ப்ரும்மாநந்தமாகிய நித்ய சுக சமுத்திரத்தின் ஒரு சிறு திவலையால் தேவேந்திரன் முதலியவர்கள் ஆநந்தத்தை அனுபவிக்கிறார்களோ, எந்த ஆநந்தத்தை ஆட்டம், ஒட்டமில்லாமல் சாந்தமடைந்த சித்தத்தில் அறிந்த முனியானவன் சுகத்தை அடைகிறானே, எந்த நித்ய சுகம் என்கிற சமுத்ரத்தில், அந்த புத்தியும் மறைந்தால் அந்த முனி ப்ரும்ம வித்தாகமாத்திரம் இல்லாமல் ப்ரும்மமாகவே ஆய்விடுகிறானே, அப்பேர்ப்பட்டவன் (சண்டாளனுய் இருந்தாலும் த்விஜனுயிருந்தாலும்) யாராலுமும் தேவேந்திரனல் நமஸ்கரிக்கத்தகுந்தவன் என்று என்னுடைய நிச்சயமான அபிப்ராயம்:— என்று நம்முடைய ஆசார்யர்ள் சொல்லுகிறார்கள்.

ஓம் தத் ஸத்.॥

பஞ்சாக்ஷர அகவல்
ஷடாக்ஷர அகவல்

அகத்திய மகா முனிவர் அருளிச்செய்த இவைகள் குரு உபதேச முறைப்படி பரிசோதித்து சுத்தப்படுத்தப்பட்டச்சுரம் நேடிவ் டாக்டர் ஸ்ரீமான் எம். கே. ஸ்ரீ ராமஸ்வாமி சர்மா அவர்களால் பதிப்பிக்கப் பெற்றன. விலை அணு 4.

கிடைக்குமிடம்:— ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம் லிமிடெட், கும்பகோணம்.



ஏறிந்து மத வம்பிரதாயங்கள்

மே. த. வைசிராய் அனுஷ்டிக்கிறார்

"என் குழந்தையை ஆசீர்வதிக்கவும்"

மே. த. வைசிராய் லார்டு லின்லித்கோ சமீபத்தில் தன் நான்காவது பெண்ணுக்கு விவாகம் செய்தார். விவாஹத்தை ஒட்டி 5000 ஏழைகளுக்கு ஹிந்து முறைப்படி அன்னதானம் செய்தார்.

ஸ்ரீமான் காந்தி மே. த. வைசிராயைப் பேட்டி காண வைசிராய் மாளிகைக்குச் சென்ற காலையில் மே. த. வைசிராய் தன் "பெண் ஸ்ரீ மதி அன்ஹோப்பையும் தன் மாப்பிளை ஸ்ரீ சௌத்பியையும் காந்திஜீயிடம் அறிமுகம் செய்து விட்டு "என் குழந்தையை ஆசீர்வதிக்கவும்"..... என்று கேட்டுக்கொண்டார்.

"காந்திஜீ புன்னகை புரிந்து கொண்டு மணமக்களை ஆசீர்வாதம் செய்தார்".

மே. த. வைசிராய் தேசசம்சரணம் செய்து வருவது யாவரும் அறிவர். டெல்லியில் பசுக்களை கொலை செய்யும் இடம் லட்சக்கணக்கில் சிலவிட்டப்பட்டு கட்டப்பட்டது. அதைக் கேட்ட மே. த. வைசிராய் மனம் இரங்கி அந்தக் கட்டடத்தை தரை மட்டமாக்கின விஷயத்தைக் கேட்ட ஹிந்துக்கள் வைசிராயை மனமாற வாழ்த்தினர்கள்.

(ராய்ஸ் வீக்லி)

இந்தியக் கலைகளின் தனிச் சிறப்பு

மைசூர் யுவராஜா வர்ணனை

மே. த. மைசூர் யுவராஜா இங்கிலாந்தில் வீண்பொழுது போக்காமல், ஸ்தாலேஷ பங்கள் நடத்தி வருகிறார். சமீபத்தில் அவருடைய தலைமையில் டார்செஸ்டரில் ஒரு பொதுக் கூட்டம் நடந்தது. அதற்கு பல பிரபுக்களும், ஸோஷ்டிகளும், பார்லிமெண்டு அங்கத்தினர்களும், பெரிய அறிவாளிகளும், வேதாந்த தத்துவ ஆராய்ச்சிக்காரர்களும் விஜயம் செய்திருந்தார்கள்.

மே. த. யுவராஜா, "ஓங்காரத்தின் மஹிமையையும், மற்றும் இந்திய சங்கீதம், பாரமார்த்திகசின்னம், திரிமூர்த்தி தத்துவம், ஆத்மாவின் நித்தியம் இவைகளைப் பற்றியும்"பேசினார்.

இந்தியாவுக்கு மகான்களால் அருளப்பட்ட "தைய்வீக சங்கீதம், யோகாப்பியாசம்" இவைகளின்மூலம் கிழக்கத்தி நாடுகளையும், மேற்கத்தி தேசங்களையும் இணைக்கத் தாம் கங்கணம் கட்டிக்கொண்டிருப்பதாய்ச் சொன்னவுடன் சபையோர் கரகோஷம் செய்து வரவேற்றனர். (ஹிந்து)

புத்தக வரவு

சினிமா உதயம்—"தஸரா மலர்" ஆசிரியர்:-ஸ்ரீ ஜோ. ஜ. மணி. விலை 3அணு. கிடைக்குமிடம் :— சினிமா உதயம் ஆபீஸ் கும்பகோணம்.

நமது பார்வைக்கு வந்திருக்கும் தஸரா மலரில் பல படங்கள் உள. கட்டுரையாளர் பலர் பல விஷயங்களைப்பற்றி எழுதியுள்ளார்கள். விலை சற்று குறைத்து வைத்திருக்கலாம் என்பது எமது அபிப்பிராயம்.

ஐம்பெரு வேள்வி

(ஸ்ரீ ப. ரெ. நிருமலை ஐயங்கார்)

உலகம் போற்றும் பெற்றியான மநுபகவான் தமது தர்ம சாஸ்திரம் மூன்றுமத்யாயத்திற் கூறுவதாவது:—

"நிருகஸ்தன் யக்ஞம் அல்லது முறம், அம்மி, துடைப்பம், உரல், உலக்கை, தண்ணீர்க்குடம் என்னும் இவ் வைந்தினையும் உபயோகப்படுத்திக்கொள்ளுவதால் அவற்றுல் அவனுக்கு ஐவகைக்கொலைப்பாவங்கள் உண்டாகின்றன." (68) "அவ்வைந்து பாவங்களையும் போக்குவதற்காக மகரிஷிகளால் நினைந்தோறும் ஐந்து மகாயக்ஞங்கள் நிருகஸ்தனுக்குக் நிரமமாக விதிக்கப்பட்டிருக்கின்றன". (69) அவ்வைந்து யக்கியங்களில் வேதமோதுதல் ப்ரமயக்கியம். அன்னத்தினுலாவது ஜலதர்ப்பணத்தினுலாவது பிதிர்க்களைக்குறித்து நிருப்தி செய்வது பிதிர் யக்ஞம். தேவதைகளைக்குறித்து அக்யினியில் ஒமஞ் செய்வது தேவயக்ஞம், வாயச (காக்கை) பலி முதலானவை வைப்பது பூதயக்ஞம். அதிதிகளுக்கு உணவிடுவது மானுட யக்கியம். ஆக மகாயக்கியங்கள் ஐந்து. (70); இவ்வைந்து மகாயக்கியங்களையும் தன் சக்திக்குத் தக்கபடியே வன் செய்கிறானே அவன் நிரகஸ்தாசிரமத்திலிருந்த போதிலும் மேற்சொன்ன ஐந்து கொலைகளின் தோஷங்களையும் அடைவதில்லை.(71); நில பெரியோர்கள் இவ்வைந்து மகாயக்கியங்களுக்கு அஹுதம், ஹுதம், ப்ராஹுதம்,ப்ராமியஹுதம், ப்ராசிதம் என வேருன நாமதேயங்களைச் சொல்லுகிறார்கள். (73); இவை முறையே ப்ரம்மயக்கியம், தேவயக்கியம், பூத யக்கியம், மானுடயக்கியம், பிதிர் யக்கியம் என்க." (74)

"பஞ்ச மகா யக்கியங்கள்" என்பதை "ஐம்பெரு வேள்வி" எனத்தமிழர் கூறுவர். ப்ரம யாகம், தேவயாகம், பூதயாகம், பிதிர் யாகம், மனித யாகம் என்பன ஐம்பெரு வேள்வி. "ஒண் ப்ரமமே வேதமோதுதலோமம் வளர்த்தல், எண்டெய்வமீதல்பலியே பூதம்— ஒண்டொடியீர், எண்ணீர்க்கடற்றோலே பிதிர் வீருந்தோம்பல், அண்ணீர் மைமானுடயாகம்" என்னும் வெண்பாவினுல் ஐம்பெரு வேள்வியின் தன்மை உணர்தற்பாற்று. "இனைத்துணைத்தென்ப தொன்றில்லை வீருந்தின், துணைத்துணை வேள்விப்பயன்"(நிருக்குறள். அறத்துப்பால்,7.)என்ற குறட்பாவுக்கு பரிமேலழகியார், "வீருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் இன்ன ளவிற் றென்பதோரளவுடைத்தன்று; அதற்கு அவ்வீருந்தின்றகுதியனவே அளவு. ஐம்பெரு வேள்வியினென்றகலின்'வேள்வி, என்றும்.... கூறினர்" என உரை வகுத்துள்ளமை காண்க.

"வேதாத்யயநத்தாலே ருஷிகளையும், ஓமத்தினுலே தேவர்களையும், சிராத்தத்தினுலே பிதுர்க்களையும், போஜநத்தினுலே அதிதிகளையும், பலி போடுவதினுலே பூதங்களையும், நிருப்தி செய்விக்க வேண்டியது" (மூன்றுவது அத்தியாயம், 81) என்பது மநுநீதி. "புதல்வரைப்பெறுதல் அஸ்தாவது இருபிறப்பாளர் மூவராலும், இயல்பாக இறுக்கப்படுங் கட்டின் மூன்றனுள் முனிவர் கடன் கேள்வி யாலும், தெய்வர்கடன் வேள்வியாலும், தென்புலத்தார்கடன் புதல்வரைப் பெறுதலாலும் அல்லது இறுக்கப்படாமையின் அக்கடனிறுத்தற்பொருட்டு நன் மக்களைப் பெறுதல்' என்பது பரிமேலழகியாருரை.

"அருமறையின் நிர்ள்நான்கும் வேள்வியைந்தும், அங்கங்களவையாறும், இசைகேளும், தெருவில் மலிவிழா வலமும் நிறக்கும் காழிச்சீராம விண்ணகரேசோமினீரே"

என்பது சங்கமுகத்தமிழ் மாலை பத்தின் முதற்பாட்டு. [பெரிய திருமொழி 3-4-1. திருமங்கையாழ்வார் பாசுரம்]

ஐம்பெரு வேள்வி இயற்றிய அரும்பேறெய்தினர் ஐயர். மநுவை இகழ்பவன் வள்ளுவரை இகழ்பவனுவன். அவரை உண்மைத்தமிழனுகான். உண்மை ஒன்றுதானே. அன்று அவன் மநுவாகி வடமொழியிற் கூறினன். பின்னர் அவனே வள்ளுவனுகி தென்னமொழியிற் பகர்ந்தான். இவ்வொற்றுமை நயம் உணர்பவரே உயர்ந்தோர். அவர் மாட்டே இவ்வுலகு என்பது நற்றமிழர் கொள்கை. ஆரியமும் செந்தமிழும் இனிது வாழ்க:—

ஸ்ரீ வைதிக வர்த்தினீ ஸபா
புதுக்கோட்டை

வேத புருஷனை ஸ்ரீபரமேச்வரனுடைய அளயாஜ கருணையால் நமது சமஸ்தானத்தில் கூஷாம க்ஷேமாதிகள் நிலவுதியாகி நமது சமஸ்தான மன்னரும், அவரது ப்ரஜைகளும் அரோக த்ருட காத்திரர்களாக ஸர்வாபீஷ்ட லித்தியுடன் ஸுகித்து வாழ வேண்டி இச்சபையின் ஆதரவில் சென்ற வருஷங்களைப் போலவே 5-வது வருஷமான இவ்வருஷத்திலும் ரிக் (க்ருஷ்ண) யஜுஸ், (ப்ரசனக்ரம பாரயணமும் சாகையும்) ஸாம, ஆகிய மூன்று வேத பாராணமும், ஸ்ரீ சாந்தாத ஸ்வாமி ஸன்னிதானத்தில் 16—11—39 முதல் 30—11—39 முடிய ஒரு மண்டலத்திற்கு ப்ரதி தினம் மாலை 6 30 மணி முதல் 7 30 மணி வரை நடத்தப்படும். ப்ரதி தினம் ஷை பாராயணம் முடிந்தவுடன் யஜுர் வேதத்தில் அன்றைய பாராயணம் செய்யப்படும் ப்ரச்னத்தின் அர்த்தத்தையும், அதன் வினியோகம் முதலியதுகளைப் பற்றியும் விஸ்தாரமாக பலப்ரமுக பண்டிதர்களால் உபந்யாஸிக்கப்படும். ஷை பாராயண ஸமாப்தி தினமான 30—12—39 அன்று வழக்கம் போல் ஸ்ரீ வேதராயகி ஸமேத ஸ்ரீ சாந்தாத ஸ்வாமிக்கு ஸ்ரீ மஹாக்யாஸ ஏகாதசருத்ரஜப பூர்வமாக சங்காபிஷேக மஹாபிஷேகம் முதலியதும். விசேஷமாக ப்ராம்ஹண ஸ்தர்ப்பணீயும் நடத்துவதாக உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

(ஒ. கி.)

கோவிலூர்
ஸனாதன தர்ம ஸம்ரக்ஷண சபை

11—11—39 ஷை சபையின் ஆதரவில் ஓர் பொதுக்கூட்டம் ஸ்ரீ வரகூர் ரெங்கனுதசாஸ்திரிகள் தலைமையில் நடைபெற்றது. ஸ்ரீமான்கள் யோக சுந்தராஜ அய்யர், ஆர். எஸ். கிருஷ்ணசாமி அய்யர் மத்தில் புகுந்து காங்கிரஸ் மந்திரிகள் சட்டஞ் செய்ததால் மந்திரி பதவி இழக்க நேரிட்டதென்றும், தர்மத்தின் மேன்மையையும் விரிவாக எடுத்துக் கூறினர்கள்.

பிறகு ஸ்ரீ கே. ஆர். வேங்கட்டரமய்யரின் பார்யை தேம்பாள் காலம் சென்றதற்கு வருந்துவதாக ஒரு தீர்மானம் நிறைவேறியது. வந்தனோசாரம் கூறிய பின் கூட்டம் முடிந்தது.

(ஒ. கி.)

பெண்களுக்கு விவாக ரத்து உரிமை

பஞ்சாப்பில் முயற்சி

ஸ்ரீ திக்காஜக்ஷி பேடி கொண்டு வரப் போவதாக நோட்டீஸ் கொடுத்திருக்கும் தீர்மானத்தின் விவரம் செப்டம்பர் 21 உ வெளியிடப்பட்டிருக்கிறது. இப்பொழுது பஞ்சாபி சமூகத்தையே புதுப்பிக்கும்படியான மற்றொரு சமூகசீர்திருத்த மசோதாவை அடுத்த சட்டசபைக் கூட்டத்தில் கொண்டுவரப் போவதாக காப்டன் ஜோஜி ஹர்னம் சிங் என்பவர் அறிவித்திருத்திருக்கிறார்.

இது சம்பிரதாயமாக அனுஷ்டிக்கப்பட்டு வரும் வரதட்சிணை, விதவா விவாகம், விவாகரத்து, விவாகங்களில் படாடோபச் செலவுகள் இவைகளை அடியோடு மாற்றுகிறது.

இதன் விதிகளின்படி யாரும் விவாககாலத்திலோ, மூன்றியோ பிற்பியோ ஸைதலில் ஸ்ரீ தனங்கள் வைக்க, அனுமதிக்கப்படமாட்டார்கள். சம்மானங்கள், நகை, வீடு, நிலம் முதலான எதையும் யாரும் வாங்கவும் கூடாது; கொடுக்கவும் கூடாது. சதிர் கச்சேரி, தமாஷ், குடி, வாணவேடிக்கைகளும் கூடாது. 20 வயது வித்யாசமுள்ள எந்த ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்யாணம் செய்யக்கூடாது. ஆணுகளுக்கு விவாகரத்துச் செய்ய உரிமையுள்ள குடும்பங்களில் நிலநிபந்தனைகளின் கீழ் பெண்களுக்கும் மறுவிவாகம் செய்து கொள்ள உரிமையுண்டு.

(ப்ரிட் இந்தியா)

புஸ்தக விமர்சனம்

"ஆழ்வார் ஆசாரியாள் அபிதான விளக்கம்"

வைணவமதத்தை வளர்த்தவர்களில் தலை சிறந்தவர்கள் ஆழ்வார்கள் பதின்மரும் மற்றும் ஆசாரியர்களில் பலரும் ஆவார்கள். வைதிக மதத்திற்குத்தாய் போன்ற வேதம் முக்தி நெறியைக்காட்டவற்றேயாகிலும், அதை அத்தியயனம் செய்ய யோக்யதையற்ற பல பகவத்ப்ராப்தியை இழந்தார்கள். அதை அதிகரிக்கும் யோக்யதையுடைய சிலர் "அனந்தா வை வேதா:" என்றபடியால் அவைகளை அறிவதும் அறிந்தபடி அநுஷ்டிக்கவும் காலமும் ஆற்றலும், இல்லாதபடியால் இவர்களும் முக்தி பெருவதற்கில்லை. இக்கிலேமையில் இறைவன் தன் பேரருளால் ஆழ்வார்களை அவதரிப்பித்தான். இவர்கள் அவ்விறைவனுல் 'மதகலம்' அருளப்பெற்று வேதத்தை தென்மொழியில் பலபாக்களாக வெளியிட்டனர். இப்படி ஜாதி விபாகமற யாவரும் அவகாஹிக்கும் கங்கையைப்போன்று, பலரும் பயன் பெற்று பகவானை அடைவதற்கு அரிய பெரிய நூலாயின. இதை "நாலாயிரப்பரபந்தம்" என்றும் "த்ராவிட வேதம்" என்றும் அருளிச்செய்யல் என்றும் உலகில் வழங்குகின்றன.

இவ்வேதத்தைப் பெண்களும் பேதைகளும் எளிதில் அறிந்து உஜ்ஜீவிக்குமாறு பல வியாக்யானங்களை வெளியிட்டும், பிறருக்கு பதேசித்தும் தாங்களும் அநுஷ்டித்தும் காட்டினவர்களையே இங்கு ஆசாரியர்களெனக் கூறப்பட்டிருக்கிறது.

இவர்கள் அவதரித்த போதே ஊரும் நாடும் உலகமும் திருந்தி மக்கள் உயர்வுற்றனர். இப்பெரியார்கள் ஞான அநுஷ்டானங்களைச் சரித்திர ரூபமாகக் கொண்டுள்ளது "குரு பரம்பரை" என்னும் க்ரந்தம். இந்த, அவர்கள் வைபவங்களை விரிவாகக் கொண்டிருப்பதாலும், வடமொழிகள் விரவி கடின நடையிலிருப்பதாலும் ஆவலுடன் கற்றுக் களிக்கத் தடையாயின.

இக்குறைகளைக் களைந்து, அவர்களுடைய பெயர்களை அகராதி முறையில் வகுத்து, "ஆழ்வார் ஆசாரியாள் அபிதான விளக்கம்") என மகுடமிட்டு வெளியிடப்பட்டிருக்கிறது. திருப்புறம்பயம்-பிரதான வித்வான் T. D. ராமஸ்வாமி நாயுடு இத்நூலின் ஆசிரியராவார். இதன் விலை நான்கணு. புத்தகம் ஆசிரியரிடம் கிடைக்கும்.

(ஒரு வைஷ்ணவன்

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியமருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,

படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

ஹிமாலயம், திபேத், நேபால்

கஸ்தூரி, சிலாஜிட், குங்குமப்பூ

(சுத்தமானதென்றும், கலப்பற்றதென்றும் உத்திரவாதம் செய்கிறோம்).

கஸ்தூரி	ஒரு தோலா.	ரூ 25—0—0
சிலாஜிட் (புடமிட்டது)	,,	ரூ 1—0—0
குங்குமப்பூ (கேசர்)	,,	ரூ 2—8—0.

(ஒரு தோலா என்பது ஒரு ரூபாய் எடையாகும்) ஏற்படும் தபால் சார்ஜ்—பாக்கிங் சார்ஜ் தனியாக உண்டு. கடிதப்போக்குவரத்து ஹிந்தியிலாவது, ஆங்கிலத்திலாவது நடத்தவும்.

கிடைக்குமிடம்:— PREM LAL SHAH GANGOLA,
ALMORA (Himalayas) U. P.

நமது மதம்.

(ஸ்ரீ எல். சப்பிரமணிய சாஸ்திரிகள் வீணை வித்வான்)

(முன்வார தொடர்ச்சி)

இவர்கள் கூறுவதான குதர்க்கம் என்ன வெனில் எல்லாம் ஒரே ஜாதியாம். உயர்வு தாழ்வு கிடையாதாம். எல்லாம் ஒரே ஸமமாம். வேதம் புராணங்கள், தங்கள் வயிறு வளர்க்கவும், ஸௌகர்யத்திற்காகவும் ஏற்படுத்திக்கொண்டவை. இன்னும் பல பிதற்றுகின்றார்கள்.

இந்த குதர்க்கிகள் அடியில்கண்ட விஷயங்களுக்கு என்ன பதில் உரைப்பார்கள்?

உலகில் எத்தனையோ கோடி ஜனங்களிருக்கின்றார்கள். அவர்களில் ஒருவர் முகம்போல் ஒருவர் முகமிருக்கின்றதா? அப்படி ஒரு ஸ்ருஷ்டி ஏற்பட்டால் ஆபத்தல்லவா?

தோலினால் பெல்ட், ரிஸ்ட்பேண்ட், தொப்பி, மணிபர்ஸ், பூட்ஸ். முதலியவைகள் தன் தன் ஸ்தானங்களைத்தவிர மற்ற இடங்களில் உபயோகப்படுத்திக்கொள்கிறார்களா? எல்லாம் ஒரே தோல்தானே? என் ஸமமாக பாவிக்கிறார்களில்லை?

தாயாரும் பெண்ணும் ஸகோதரியும், ஒரே ஸ்திரீ ஜாதிதானே? ஒன்றை நீங்கத் தக்கொள்ளலாமா?

ஒரே வீட்டில் பூஜை அறை, சமையல் அறை, படுக்கை அறை, ஸ்நான அறை, முதலியவைகளில் அந்தந்த இடங்களுக்குத் தக்க கார்யங்களை, இடங்களை மாற்றி, ஸமமாக அனுபவிக்கின்றார்களா? என் ஒரே வீடுதானே? அபேதமாய் என் இருக்கக் கூடாது?

நம் சரீரத்தில் தலை, புஜம், தொடை, பாதம், முதலியவைகள் [தன் தன் தொழிலைத் தவிர்த்து எல்லாம் ஸமந்தானே என்று விபரீதமாக அனுஷ்டானத்திலிருக்கிறதா? என் ஒரே சரீரந்தானே? ஸமமாக எனிருக்கக்கூடாது?

ஒரு குளத்தின் ஜலத்தில் தாமரை, ஆம்பல், தவளை, மீன்கள், புற்களும் உண்டாகின்றன. அந்தந்த பொருள்களின் ரூபம், குணம், வெவ்வேறாக இருக்கின்றதல்லவா? என் இருக்கவேண்டும்? ஒரே ஜலத்தில் உண்டானவைகள் தானே?

குதிரை வர்க்கத்தில் பட்டத்துக் குதிரைகள், நாட்டியக்குதிரைகள், பட்டாளத்துக் குதிரைகள், பந்தயக்குதிரைகள், ஸவாரிக் குதிரைகள், டங்கா வண்டிக் குதிரைகள், ஜட்கா வண்டிக்குதிரைகள், இவைகள் ஒரே ஜாதிதானே? ரத்தமும் ஒன்றுதானே? ஜட்கா வண்டிக்குதிரைகளை பட்டத்துக் குதிரைகளாக என் வைத்துக்கொள்ளக் கூடாது? அப்படி ஏதாவது எங்கேயாவது வைத்துக்கொள்கிறார்களா?

இவைகளுக்கு என்ன பதில் கூறமுடியும்? இப்படி எவ்வளவோ இருக்கின்றன. இவைகளுக்கு குதர்க்க வாதிகளால் பதில் கூறமுடியாமல் இஞ்ஜின்ற குரங்குபோல் வாயை இளிக்கவேண்டியதுதான்.

மேற் கூறிய திருஷ்டாந்தங்கள் போல், வர்ணச்ரமங்களையும், வர்ணச்ரம தர்மங்களையும், அவரவர்களுக்கு விதித்திருக்கிற படி நடவாமல் விபரீத புத்தியைக்கொண்டு எல்லாம் ஒரே ஜாதி என்று ஸ்வதர்மத்தை விட்டு அன்னிய தர்மங்களை அவலம்பிப்பதினால் ஆபத்துக்கள் பரம்பரையாகவே ஏற்பட்டு அவரவர்கள் குடும்பங்களையும் மனித உலகையும் வாட்டும் என்பதை அவரவர் அனுபவத்தில் கண்டு கொள்ளலாம்.

உலகில் மனிதர்களுக்கு பொது தர்மமென்றும், விசேஷ தர்மமென்றும், இரு வகை ஏற்பட்டிருக்கின்றது. பொது தர்மம் எல்லா வர்ணத்தாருக்கும், விசேஷ தர்மம் சில வர்ணத்தாருக்கும் ஏற்பட்டிருக்கின்றது. இவ்விதிகள் அனாயாசமாகவே ஈசுவரனால் விதிக்கப்பட்டவை என்று வேதங்களால் அறியப்படுகின்றன. வேதங்கள் ஈசுவரனுடைய ஆக்ஞாரூபமானது.

"ஜானந்தி பசவோ கந்தாத்" பசுக்கள் வாஸனையினால் விஷயங்களை அறிகின்றன. "வேதாஜ்ஜானந்தி பண்டிதா:" வேதத்தால் இகலோக, பரலோக, விஷயங்களை பண்டிதர்கள் அறிகின்றனர். "சராஜ் ஜானந்தி ராஜாந:—" அரசர்கள் வேவுகாரர்களாலே (அதாவது வி. ஐ. டி. டிபார்ட்மெண்டாராலே) உலகின் மர்மங்களை அறிகின்றார்கள், என்று லோகானுபவம். வேதம் புராணங்கள், நம் முன்னோர்களால் செய்யப்பட்டதா?

(தொடரும்.)

Printed by S, Kalyanasundram at the Sri Janardhana Printing Works, Ltd., Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundram,

৯৩৯৫



215309

THE REGISTRAR OF BOOKS -3 JAN 1940 MADRAS

629

REGD No.M. 2913. ARYADHARMAM TAMIL WEEKLY Estd. 1915

ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை)

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஒரணா.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விபரம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்யः பரிபாலயந்தாம் ந்யாயேன மார்கேண மஹீம் மஹீசாः ।
கோப்ராஹ்மணேப்யஶுபமஸ்து நித்யம் லோகாஸமஸ்தாஸுகினோ பவந்து ॥

பு-24 || கும்பகோணம் பிரமாதி-ஹூ கார்த்திகை-மீ 15 உ 1939 ஹூ நவம்பர்-மீ 30உ || வ-47

அகில இந்திய வர்ணாஸ்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

பம்பாயில் காரியக்கமிட்டி கூட்டம்

ஸத்யாக்ரஹத்திற்கு ஆதரவு.

அ. இ. வ. ஸங்கத்தின் காரியக்கமிட்டி 1939ஹூ நவம்பர்மீ 2, 3, 4,தேதி பம்பாயில் கூடிற்று.

ஸ்ரீ சேத் விஜயகாந்த் பஜோரியா (மத்ய சட்டசபை அங்கத்தினர்) தலைமை வகித்தார்.

இந்தியாவின் முக்கிய நகரங்களிலிருந்து பல பிரதிநிதிகள் விஜயம் செய்திருந்தார்கள்.

கீழ்க்கண்ட நிர்மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின:—ஸனாதன பிரசாரத்திற்காக தற்போது புதிய பத்திரிகையை ஆரம்பிக்கவேண்டியதில்லையென்றும், ஏற்கனவே நடந்துவரும் பத்திரிகைகளுக்கு உதவி செய்வதாயும் "காசி ஸாங்கவேத வித்யாசாலையினரிடம் சம்ஸ்கிருத சர்வகலாசாலை நிட்ட விஷயத்தை ஒப்படைப்பதென்றும், ஒரு ஹிந்தி தினசரியை ஆரம்பிக்கும் விஷயத்தை அடுத்த கூட்டத்தில் கவனித்துக்கொள்ளவேண்டுமென்றும், ஸ்ரீ என். நடேசய்யரும், இதர ஸனாதனிகளும் மதுரை ஆலயப்பிரவேசத்தைக் கண்டித்து நடத்தும் காரியங்களை கமிட்டி பாராட்டுவதாகவும், அவர்களுக்கு பண உதவியும் ஆள் உதவியும் செய்வதாகவும் 1939 ஹூ டிசம்பர் மீ கல்கத்தாவில் "அகில இந்திய ஸனாதன ஹிந்து மகாநாட்டை" கூட்டுவிக்கவேண்டுமென்றும், ஹிந்து மகாசபையுடன் ஒத்துழைப்பதென்றும், ஹிந்து தர்ம சாஸ்திரங்களுக்கு விரோதமான காரியங்களில் தலையிடாமலிருப்பதாய் உறுதி கூறினால் பிரட்டனுக்கு இந்த யுத்தத்தில் ஸனாதனிகள் யாவரும் உதவி செய்வதென்றும், தற்சமயம் இருக்கும் வெள்ளை, சிகப்பு, மஞ்சள், நீலம் வர்ணமுள்ள கொடியே சங்கக் கொடியாக இருக்கவேண்டுமென்றும்" தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

(காரியதரிசி அ. இ. வ. ஸ். சங்கம் பம்பாய்

இந்திய பிராம்மண மகாநாடு

டிசம்பரில் சென்னையில் கூடும்

பிராமண வகுப்பினரின் முன்னேற்றத்தைக் கவனிக்க 1939ஹூ டிசம்பர்மீ கடைசி வாரத்தில் சென்னையில் ஒரு "இந்திய பிராம்மண மகாநாடு" கூட்ட யோசிக்கப்பட்டிருக்கிறது.

இம்மகாநாடு நன்கு நடைபெற விரைவில் வரவேற்புக் கமிட்டி நிறுவப்படும்.

கமிட்டியினருக்கு யோசனைகள் கூற விரும்புகிறவர்கள்; ஸ்ரீ என். சுப்பிரமணி அய்யர் ஆசிரியர் இந்தியன் திங்கர் திருவனந்தபுரம் (Editer Indian Thinker) என்ற விலாசத்துக்கு எழுதவும்.

திருநெல்வேலி ஆலயப் பிரவேசத்துக்கு ஆக்ஷேபம்

ஹிந்துமத பரிபாலன போர்டு கமிஷனர் ஸ்ரீமான் கே நாராயணமேனன் இங்கு விஜயம் செய்து ஸ்ரீ நெல்லையப்பர் தேவஸ்தான காரியாலத்திற்குச் சென்றார். தேவஸ்தான சூப்பிரன்டெண்டு ஸ்ரீ மான் ஏ.எம். சோமசுந்தரம் இடைகால நிர்வாக தர்மகர்த்தா தொடர்ந்து பதாகையும் அவரை விசாரிக்கச் சொன்னார்.

ஹரிஜனங்கள் ஆலயப் பிரவேசம் செய்வதற்கு திருநெல்வேலியில் எதிரிடையான அபிப்பிராய மிருப்பதாக கமிஷனரிடம்தெரிவிப்பதென்று ஹிந்து தர்மபரிபாலன சங்கக் கூட்டம் 27—11—39 நடைபெற்ற போது தீர்மானிக்கப்பட்டபடி தெரிவிக்கப்பட்டது.

வஸந்தமண்டபத்திற்குத் தேவஸ்தானக் காரியாலயத்தை மாற்றியதை எதிர்ப்பதாகவும் தெரிவிக்க முடிவாயிற்று. சங்கத்தின் சார்பாகக் கமிஷனரிடம் தூதுக்கோஷ்டியொன்று சென்றது, அவரிடம் ஓர் விஞ்ஞாபனமும் சமர்ப்பிக்கப்பட்டது. ஒரி

ஸ்ரீரங்கம் தடியடி கேஸ்.

ராஜியாகியது!

ஸ்ரீரங்கத்தில் டாக்டர் ராஜன் வந்த போது நடந்த கலவர விஷயமாகச் சிலர் மீது லாக்கார் தொடர்ந்திருந்த வழக்கை கவர்ன்மெண்டார் ஏற்கனவேயே வாபீஸ் பெற்றார்கள்.

இப்போது ஸ்ரீரங்கத்தம்மாள் என்றவள் தம்மையும் இதரர்களையும் தடியடி செய்ததாக ஸப் இன்ஸ்பெக்டர்மீதும் கோவில் நிர்வாக அதிகாரிமீதும் கொடுத்திருந்த வழக்கும் வாதி பிரதிவாதிகளுள் ராஜியாகிவிட்டதன் காரணமாக வாபீஸ் பெறப்பட்டது.

"எங்களுக்கு ஆலயப் பிரவேசம் வேண்டாம்"

வைஸ்ராய்க்கு தீண்டாதார் மகஜர்

அடியிற்கண்ட மகஜரை தென்னற்காடு ஜில்லா ஆதித்நிராவிட சமூக சீர்திருத்த சங்கத்தினர்கள் மே த வைஸ்ராயுக்கு அனுப்பி வைக்கும் பொருட்டு கையெழுத்துக்களை வாங்கி வருவதாக அறிகிறோம்:—

இதனடியில் கையொப்பமிட்டிருக்கும் தென்னற்காடு ஜில்லா ஆதித்நிராவிட சமூக சீர்திருத்த சங்கத்தின் அங்கத்தினர்களும் மற்ற ஷெ ஜில்லா ஆதித்நிராவிடர்களுமாகிய நாங்கள் தாழ்மையுடன் தெரிவித்துக் கொள்வது என்னவென்றால்:—நாங்கள் இதுவரை வழக்கமாய் பிரவேசம் செய்யாமல் இருந்துவரும் ஹிந்து ஆலயங்களில் வழக்கத்திற்கு விரோதமாய்ப் பிரவேசித்து கோவிலுக்குள்ளே இருந்து ஸ்வாமி தரிசனம் செய்யவேணுமென்ற அவா எங்களுக்கு ஏற்படவில்லை. சாஸ்திரப்பிரகாரம் பிரதிஷ்டை செய்திருக்கும் புராதனமான கோயில்களின் மகிமை குறையும்படி எவ்வித காரியமும் செய்ய எங்களுக்குக் கொஞ்சமேனும் எண்ணமில்லை.

சென்னை 1939ம் வருஷத்திய 1வது அவசரச் சட்டத்தை நாங்கள் பலமாய்க் கண்டிக்கிறோம். அதனால் எங்களுக்கு அணுகூலம் இல்லாதது மட்டுமல்ல, வீண் த்வேஷங்கள் ஹிந்து வர்க்கத்தினர்களுக்குள் ஏற்பட்டுவிட்டது. சென்னை சட்டசபைகளில் சென்ற ஆகஸ்டு 4, 5, 7, 8, தேதிகளில் பாஸ் ஆகி இருக்கிற மதரஸ் ஆலயப் பிரவேச அனுமதி பாதுகாப்பு மசோதாச் சட்டத்தை மேன்மை தங்கிய தாங்கள் ரிப்பீல் செய்யவேணுமாய் நாங்கள் மிகவும் ஆர்வத்துடன் பிரார்த்திக்கிறோம். இதற்கு மாறுக வாதம் செய்து வருபவர்களோ நாங்கள் எங்கள் தலைவர்களாக கோரவுமில்லை, ஒப்புக்கொள்ளவுமில்லை. ராஜீய சூதாட்ட சூழ்ச்சிக்கு பாச்சிகைகளாக இருக்க இணங்கவில்லை. தென்னற்காடு ஜில்லா சம்பந்தப்பட்டவரை சாமி சகஜானந்தா எம். எல். ஏ. அவர்களை எங்கள் தலைவராக நாங்கள் ஒப்புக்கொள்ளவுமில்லை. ஷெ ஜில்லா வாக்காளர்களுடைய நம்பிக்கைக்கு அவர் இனி ஒரு நிமிஷங்கூட பாத்திரரும அல்ல. இப்பொழுது, அவர் சட்டசபை அங்கத்தினர் உத்தியோகத்தை ராஜீநாமாச்செய்து மறுபடி தேர்தலில் அபேக்ஷகராக நின்றால் அவருக்கு கொஞ்சங்கூட ஆதரவு இந்த ஜில்லா வாக்காளர்களிட மிருந்து கிடைக்காதென்று நாங்கள் நிண்ணயமாய் வற்புறுத்துகிறோம்.

எங்கள் சமூகத்திற்கு முன்னேற்றம் ஏற்படத் தக்க விதமாய் வியாபாரம், கைத்தொழில், மில் வேலைகள் .சர்க்கார் ஸ்தல ஸ்தாபன வகையறா இலாக்காகளில் உத்தியோகம் விவசாயத்திற்கு போதுமான பொருதவி அளித்தல், எங்களுக்குக் கடன் மேன் மேலும், ஏறுமல் சர்க்கார் பாங்குகளிலிருந்து உதவி அளித்தல், எங்கள் சொந்த நிலங்களுக்கு குறைந்த சர்க்கார் கிஸ்தியும், ஜமீன் பட்டா நிலங்களுக்கு குறைத்த வரியும் ஏற்படுத்தல், தர்காஸ்து, ஜாரி உதவி, ஆஸ்பத்திரி, பாதை குடித்தண்ணீர், இணுவகையறு ஸ்நான வசதிகள் படிப்புக்கு போதுமான உதவி இவைகள் என்ன, அன்றூடம் நாங்கள் பாடுபடுவதற்குத்தக்க கூலியும் விசேஷ அருந்தல்காலங்களுக்கு வேண்டிய இருப்புத்திட்ட பொருளுதவி அமைப்பும் அடங்கிய ஒத்தாசைகள் என்ன இவைகளும், இனி இவை போன்ற முன்னேற்றத்திற்குரிய இதர சாதனங்களும், ஏற்படுத்திக் கொடுத்தலே எங்களுக்குப் போதுமானது.

இப்பொழுது ஸ்தல ஸ்தாபனங்கள் சட்டசபை இவைகளுக்கு ஏற்படும் தேர்தல்களில் எங்கள் வகுப்பு அபேக்ஷகர்கள் டிபாசிட் தொகை கட்டாமலே தேர்தலுக்கு நிற்க சௌகர்யமும், எங்கள் சமூகத்திற்கு எங்கள் ஜனத்தொகைக்குத் தக்கபடி போதுமான அங்கத்தினர் ஸ்தானங்கள் கட்டாயமாய் "ரிசர்வ்" செய்துவைத்தலும், கிராமங்களில் கிராம நவுக்கர் வேலைகள் எங்களுக்கும் கிடைக்கும்படியாகவும், கோர்ட்டு கட்டளை நிறைவேற்றமும் உத்தியோகங்களும் அவைகள் போன்ற எங்களுக்கு லாபகரமான போலீஸ் வகையறு உத்தியோகங்களும் கொடுத்து, உதவி அளிக்கவேணுமாய்ப் பிரார்த்திக்கிறோம். ஒ. நி.

வாரக் குறிப்புகள்.

ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா.

எல்லோரும் தாக்குவது யாரை!! பொதுவாக தார்மிகர்களுக்கும் விசேஷமாக ப்ரமணர்களுக்கும் போராத காலமிது! சில வெள்ளையர், காங்கிரஸ்காரர், ஜஸ்டிஸ்காரர் சுயமரியாதை, பஞ்சமர் ஆகியவரும் மற்றும் சிலரும் பற்பல காரணங் கொண்டு பிராமணரையே தாக்குகின்றனர். பெரியோர் செய்த தர்மம் அந்த ஜாதியைச்சிறிது காக்கிறது, அதை உணர்ந்து பிராமணர் தர்மத்தைச் செய்வாரா?

ராஜப்பிரதிநிதிக்கு ஒந்தி:- நமது தலீவர் வேண்டியபடி மதுரை, பழனி ஆலயங்களுக்குஸம்புரோக்ஷணம்செய்யவும் ஆலயப் பிரவேச சட்டத்தை திருத்தி வைக்கவும் சென்னை முதல்மேபேட் வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தலீவர் ராஜப்பிரதிநிதிக்குத்தந்தி கொடுத்தார். இங்ஙனம் பல ப்ரமுகர்களும் சங்கங்களும் தந்தியடித்தால்சிறிதபயனுண்டாகும்.

பொதுஜ வாக்கு!! சென்னை தற்கால மேயர் "காங்கிரஸ்காரன் மந்திரி வேலையை விட்டான். மழை பெய்கிறது. என்று சிலர் கூறுகிறார்கள்" என வருந்துகிறார். உலே வாயை மூடலாம். ஊர்வாயை யார் எப்படி மூடுவது? "அவர்களிருந்த இடத்தை அலம்பித்தள்ளுகிறது மழை" என்று சென்னை மக்கள் பலர் கூறுகின்றனர்.

ப்ராயச்சித்தமா? ஸர். ஸி. பி. ராஜகோபாலாசாரியார் விஷயத்தைக் கருதி அவச்யமென்று பஞ்சமருக்கு ஆலயத்தை அளித்ததாக சொல்லப்படுகிறது. ராஜாங்க செலவில் நடந்தாலும் அவரது ஷஷ்டியப்த பூர்த்தியில் அவர் ஸ்வதேச ப்ராம்மணர்களை அழைத்து பூர்ண வைதிகச்சாத்தை நடத்தி இவர்களே ராஜ சபையிலும் பூஜித்தது ஸ்ரத்தைகள் கொண்டாடுகின்றனர்.

ப்ரதிதிரமும் ஸம்புரோக்ஷணமாம். காலை 7 முதல் 8 வரையே பஞ்சமருக்கு பத்மநாப ஸ்வாமி ஆலயம் திறக்கப்படும். பிறகு ஸம்புரோக்ஷணம் நடந்த பின்பே ராஜ ஸேவை. பூஜை முதலியன நடப்பதாக நேரில் பார்த்தவர் கூறுகின்றனர். இதை தீவர திருத்தக்காரரும் வைதிகரும் எற்கமாட்டார்கள்!

ஹிந்து ரக்ஷகர்! என திருவாங்கூரில் ஸர். ஸி. பி. எல்லோராலும் அழைக்கப்படுகிறாரம். எல்லையில்லாத இருஸ்தவர்களது ஸாஹஸச் செயல்கள் நிவர்த்திக்கப் பட்டு ஹிந்துக்கள் தைர்யமாக நடமாட வஸதி செய்தாரென அவரைப் போற்றுகின்றனர் ஆலயத்தை அசுத்தப்படுத்தாதிருந்தால் நாமும் போற்றலாம்.

காலமும் பணமும் வீண்!! உலகமோ சாரகிகழ்ச்சிகளை அளிக்கும் பத்திரிகை சில உள. மதப்ரசாரம் செய்பன சில. இரண்டும் செய்பவை சில. அன்றன்று நாமனுபவிக்கும் வாழ்க்கையை சித்தரித்து முடிவில் ஒரு காரியத்திற்கும் பயனில்லா விஷயங்களை நிறப்பி கேவல அர்த்தார்ஜநத்தில் நோக்கமுள்ள பத்திரிகைகளைப் படிப்பதா வீணு!! கழுள்ள பத்திரிகைகளைப் படிப்பதா வீணு!!

சண்டைக்கா புத்தி வளர்ச்சி! தற்காலபுத்தியும் ஆராய்ச்சியும் முடிவில் எதேனும் ஒரு அநர்த்த சண்டையை விளைவிப்பதாக இருக்கிறது, அளவு கடந்து ஸங்கீதவே கேள்க்கு இடமளித்து திருச்சி ரேடியோவில் ஸம்ஸ்கிருத பாட்டு மெட்டு போல் தமிழில் எழுதுவது தப்பென்று ஒருவர் கூற ஓபசண்டை ஆரம்பமாகிவிட்டது.

"ஆலயப் பாதுகாப்புச் சட்டம் ஒழிக"

80,000 கையெழுத்துக்கள் கொண்ட மகஜர்

ஜோதிர் மடாதிபதி அறிக்கை

"ஆலயப் பாதுகாப்புச் சட்டத்தை ரத்து செய்து விடவேண்டும்" என்ற ஒரு மகஜர் தயாரித்து மதுரையில் 80,000 (எண்பதாயிரம்) கையெழுத்துக்கள் வாங்கி அதிகாரிகளுக்குஅனுப்பவேண்டுமென்று 19-11-39 மதுரையில் கூடிய ஒர் மாபெரும் ஸனதனிகளின் கூட்டத்தில் ஜோதிர் மடத்து அதிபதி ஸ்ரீ சங்கராசாரியார் சுவாமிகள் கூறினர்.

"இப்படி 80,000 கையெழுத்துக்கள் வாங்குவது, எவ்விதம் மதுரையில் ஆலயப்பிரவேசத்துக்கு பொதுமக்களின் ஆட்சேஷபம் இருக்கிற தென்பதை அதிகாரிகள் நன்கு அறிந்து கொள்ள முடியும் என்று கூறிமுடித்தார். (ந. நி.)

காரைக்குடி

19-11-1939 மாலை ஸ்ரீ கே நிருமலை அய்யங்கார் ஸ்வாமி அக்ராஸனத்தின் கீழ் ஒரு பொதுக் கூட்டம் கூடிற்று. முத்துபட்டினம் அக்ரஹாரம் விஷ்ணு ஸஹஸ்ராம பாராயண சபா என்ற ஒரு சபா ஸ்தாபிக்கப் பட்டது. ஸ்ரீ. உ. ப. ய. வெ. வேதவாத்தியார். கி. ராஜகோபாலய்யங்கார் ஸ்வாமி அக்ராஸனதிபதியாகவும் ஸ்ரீ எஸ் ஆர் ராஜகோபாலன் கார்யதரிசியாகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றார்கள். சபையின் விதிகள் தயாரிக்கப்பட்டன. ஒ. நி.

பழுவூர்

கீர்வாண வாணி பரிஷத்

12—11—39 மாலை 3-30 மணிக்கு பரிஷத்தின் கூட்டம் முத்தரசநல்லூர் திருமத்தில் மைதிகோத்ம மகாஜனங்களின் பிரார்த்தனையின்பேரில் நடைபெற்றது. அவ்வமயம் அம்மனகுடி ஸ்ரீ வெங்கிட்டரும சாஸ்திரிகள் தலைமை வகித்தார். பழுவூர் வேதாந்த பாடசாலை அத்யாபகர் ஸ்ரீ எஸ். வி. சுப்பிரமணிய சாஸ்திரி "ஸநாதன தர்மத்தின் மேன்மை" என்ற விஷயம்பற்றி தமிழில் கிரிவாக சொற்பொழிவாற்றினர். ஒ. நி.

ஸ்ரீ சங்கராச்சார்ய ஸ்வாமிகள் அவர்களின் உபன்யாஸம்.

கும்பகோணம் டபீர் தெரு ஸ்ரீ ராஜாமணி சாஸ்திரிகள் கிருஹத்தில் சேனற 11-11-39 செய்த பிரஸங்கமாவது:—

(A. கோபாலய்யர்.)

ஸ்ரீ ஜகத்குரு அவர்கள் பின்வருமாறு ஓர் ஏற்பாட்டைச் செய்யத் தீர்மானித்திருக்கிறார்கள். ஒவ்வொரு கிராமத்திற்கும், நகரங்களில் வீதிகளைப் பல பிரிவுகள் செய்து, ஒவ்வொரு பிரிவிற்கும், அந்தந்த இடத்திலுள்ளவர்களின் பெரும்பான்மையான அபிப்பிராயத்தை அறிந்தித்து, ஒவ்வொருவரை நியமனம் செய்கிறது. அவ்விதம் நியமன மானவர்கள் கௌரவ வேலை செய்ய வேணும். அந்தந்த இடத்தில், சுப ஆசீர்வாத காலங்களில் செய்யப்படும் ஸ்ரீ ஆசார்ய சம்பாவனையை வசூலித்து, அந்தந்த அதிகாரி ஸ்ரீ மடத்திற்குச் சேர்ப்பிக்க வேண்டியது. வருஷத்திற்கொரு முறை மேற்படி அதிகாரிகள் அவர்வர் அதிகார எல்லையில் வசிக்கும் பிராமண குடும்பங்களின் ஸங்கியை எடுத்து, ஸ்ரீ மடத்திற்கு அனுப்பவேண்டியது. மேலும், ஸ்ரீ மடத்திலிருந்து தொகுதிகளுக்கு அவ்வப்பொழுது அனுப்பப்படும் ஸ்ரீ முகங்களை, அந்தந்த அதிகாரி, தம்தம் தொகுதியின் வாசிகளை ஒர் பொது இடத்தில் கூட்டி, தெரியப்படுத்தவேண்டியது. ஒவ்வொரு தொகுதியிலுள்ள வாசிகளுக்கு ஸ்ரீமுகமாகவோ, அல்லது வாசிகளில் எவரேனும் தனி முறைமையிலோ, ஸ்ரீ மடத்திலிருந்து தெளிவு செய்து கொள்ளவேண்டிய சந்தேகங்களை தம்தம் அதிகாரிமூலம் ஸ்ரீமடத்திற்குத் தெரியப்படுத்தித் தெரிந்து கொள்ள வேண்டியது.

மேற்படி ஏற்பாட்டை அனுசரித்து டபீர் அக்ரஹாரங்களுக்கு ஓர் சபரை நியமனம் செய்ய, டபீர் கீழத்தெரு வாசியான ஸ்ரீ எஸ். ராஜாமணி சாஸ்திரிகளின் கிரஹத்தில், 11-11-39-ந் தேதி இரவு 8 மணிக்கு அக்ரஹார வாசிகளின் கூட்டம் ஸ்ரீ ஆசார்யாள் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. (ஸ்ரீ எஸ். ராஜாமணி சாஸ்திரிகளின் கிரஹத்தில் சென்ற 9, 10, 11-ந் தேதிகளில் ஸ்ரீ ஆசார்யாள் அவர்களின் பிக்ஷை நடைபெற்றது.)

கூட்டத்தின் நோக்கத்தைப் பற்றி மஹாஜனங்களுக்கு ஸ்ரீ ஆசார்யாள் அவர்கள் சுருக்கமாகச் சொன்னார்கள். அதை யாவரும் ஆமோதித்தார்கள்.

டபீர் கீழத்தெருவில் வசிக்கும் கோவிந்தபுரம் ஸ்ரீ வாசுதேவ சாஸ்திரிகள் மிடி கௌரவ பதவிக்கு ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்

பிறகு, மஹாமஹோபாத்தியாய ஸ்ரீமான் ம. வீ. ராமானுஜாசாரியார், சாதுர்மாஸ்யத்தில் சொல்லப்படும் 'பக்ஷம்' என்பதன் சங்கியை மாதமா, அல்லது 15தினங்களா என்னும் சந்தேகத்தைக் கேட்டார். ஸ்ரீ ஆசார்யாள் அவர்கள் ஸ்லோக பூர்வமாக பதிலளித்தார்கள். மாதமாகவும், பக்ஷதினங்களின் கணக்காகவும், வைத்துக்கொள்ளலாம். ஸௌகர்யம்போல். எவ்விதமாகையையும் சாதுர்மாஸ்யதை அனுஷ்டிக்கலாம்.

பின்பு, ஸ்ரீ ஆசார்யாள் அவர்கள் ஓர் அருமையான உபன்யாஸம் செய்தார்கள். அதன் சாராம்சம் பின்வருமாறு:—

ஜனங்கள் ச்ரேயஸ், மோக்ஷம், இரண்டையும் அடைவற்கு ஸ்ரீ பகவத்பாதாள் அவர்கள் அனேக அறிய நிரந்தங்களையும் உபதேசிப்பதற்கு சிஷ்யர்களையும் ஏற்படுத்தியிருக்கிறார்கள். அவர்களின் உபதேசங்களை அனுஷ்டிப்பதால் நற்கெதி பெறுவது நிச்சயம்.

முக்கியமாக ஒவ்வொருவருக்கும் சரீரம் ஆரோகியமாக வந்து கொண்டேயிருக்கிறது. எண்ணத்தின் மேல் எண்ண தோன்றிக் கொண்டேயிருக்கிறது. எண்ணங்கள் நல்லதாகவிருக்குமேயானால் புண்ணியம் உண்டாகிறது. கெடுதலானால் பாபம் சம்பவிக்கிறது. நல்ல எண்ணங்கள் உண்டாவது நிரம்பவும் சிரமம். கெடுதல் எண்ணங்கள்தான் ஜாஸ்தி. அதனால் காமக்குரோதாதிகள் அதிகரிக்கின்றன. ஸம்ஸார பந்தத்தில் கட்டு உண்டாகிறது. எனவே, பாபம் மூட்டை மூட்டையாக சேருகிறது. சரீரம் நம்முடையது என்கிற அகங்காரபாவம்மேலிடுகிறது. பார்ப்பவையெல்லாம் நிஜம் என்று நினைக்கிறோம். அதன் மூலகாரணத்தை அறியப் புகுந்தால், பொய்என்று தோன்றும். ஜீவன் முக்தநிலை என்ற ஒன்றில் இருக்கிறது; அதுதான் உண்மை என்று சொன்னால், அது பொய்யாகத் தோன்றுகிறது. உண்மையில் அதுதான் உண்மை. ஒவ்வொரு சரீரத்திலும் பரமாத்மாவின் அணு, அதாவது அம்சம் இருந்து வருகிறது. அதைப் பார்க்க வொட்டாமல் மனது தடைபடுத்துகிறது. இந்திரியங்களின் போக்குக்கு மனதுதான் ஜவாப்தாரி. எண்ணங்களுக்கு (ஸங்கல்பம்) இருப்பிடம் அதுதான். மனோயம் எற்பட்டால்,(சங்கல்பம் வேறுடன் அகன்றால்) ஆத்மப் பிரகாசம் ஏற்படுகிறது. கண்ணாடியில் நம் உருவத்தைப் பார்க்கிறோம். கண்ணாடியை எடுத்துவிட்டால் தோன்றிய உருவம் இல்லை. கண்ணாடிபோன்ற மனது நசித்தால் இவ்ய அம்சம் தன்மயமாய்ப் பிரகாசிக்கிறது. ஜீவனிடத்தில் ஈஸ்வரனின் சக்தி விசேஷங்கள் தோன்றக்கூடும். எப்படியென்றால், கண்ணாடியில் பிரதிபிம்பிக்கிற சூர்யனின் பிரகாசம் கிரகத்திற்குள் விழும் காலத்தில் பிரதிபிம்ப சூர்யனிடத்திலும் எப்படி பிரகாசம் காணப்படுகிறதோ, அதே மாதிரி பிரதிபிம்பத்தினிடத்திலும் பிம்பத்திலுள்ள குணங்கள்எற்படுமென்பதில் ஆக்ஷேபணையில்லை. பல கண்ணாடிகளை வைத்துக்கொண்டு சூர்யனைப் பார்க்கிறோம். அப்பொழுது எல்லாக் கண்ணாடிகளிலும் சூர்யன் தெரிகிறான். கண்ணாடிகளை எடுத்துவிட்டால், தெரிவது ஒரு சூர்யன்தான். அதுபோல், பரமாத்மா ஒருவர்தான். பல கண்ணாடிகளில் பல சூர்யன்கள் தெரிவதுபோல், அந்தப் பரமாத்மஸ்வரூபம் பல ஜீவராசிகளினிடத்தும் வியாபித்திருக்கிறது. வியாதி வந்தவன் மருந்து சாப்பிட்டுக் கொண்டேயிருக்கிறான். ஆனால், குணம் தெரியவில்லை. என்? மூலகாரணத்தை அறியவில்லை. அறிந்துவிட்டால், வியாதி போய்விடுகிறது. மருந்து தேவையில்லை. பத்தியமாகவிருந்தால், நோய் இல்லை. பத்தியமாக வில்லாமல் இருப்பது நோய்க்கு மூலகாரணம். நமக்கு இந்த சரீரமாகிய நோய் எப்படி வந்தது. அதன் மூலகாரணமென்ன, அதை மறுபடியும் உண்டாகாமலிருக்க என்ன செய்து கொள்ள வேண்டியது, என்பதை நாம் ஆராயவேண்டும்; அதை ஆராய்ந்து, அதைப்போக்க வழி இருக்கிறது. நோயைத் தடைப்படுத்துவதற்கு பத்தியமாக விருத்தல் போன்று, கர்மாக்களைச் சரிவர செய்யவேணும்; ஈஸ்வரார்ப்பணமாகச்செய்யவேணும்; உபநிஷத்துக்கள், ச்ருதிஸ்மிருதிகள், புராணங்கள், இவைகளைப் படித்தோ, சிரவணம் செய்தோ, அதனாலில் சொல்லியபடி நடக்கவேணும்; எப்பொழுதும்எத்ஸங்கங்களில் இருந்துவரவேணும்; ஈஸ்வர தரிசனம் செய்ய வேணும்; எப்பொழுதும் பகவத்தியானம் செய்து கொண்டே யிருக்கவேணும்; நல்லகுருவை அடைய வேணும். இதுகளினால், சித்த சுத்தி ஏற ஏற, ஸங்கல்பம் வரவர அறுபடும். மனது நாளடைவில் நசிக்கும். முடிவில் பரமாத்மஸ்வரூபம் பிரகாசிக்கும். அதுதான் ஜீவன் முக்திநிலை. அந்தநிலையில் எப்படி வெள்ளரிப் பழம் பழுத்தவுடன், காம்பு விடுபட்டு தனியாய்ப் போய்விடுகிறதோ, அப்படியே ஆசாபாசங்களையுடைய பந்தம் தானுகவே விலகிவிடுகிறது.

பிரம்மசர்யத்தில் குருகுலவாசம் செய்து. அலவணமாக ஆகாரம் உட்கொண்டு, வேதாத்தியயனம் செய்ய வேணும்.

கிரகஸ்த தர்மத்தில் ஸம்ஸார அலுவல்களைச் சாத்தியமான வரையில் குறைத்துக் கொண்டு, அலுவல் நேரம், தூங்கும் நேரம் போக, மற்றநேரங்களில்,பரம்பிரம்மஸ்வரூபத்தை அறிய வேண்டி, நியானித்துக் கொண்டே இருக்கவேணும். கர்மாக்களையும் ஈஸ்வரப் பிரியாயச் செய்து வரவேணும். ஸங்கல்பங்கள் உண்டாகாத வண்ணம் செய்து வரவேணும். இதனல், மரணசமயத்தில் மனம் கலங்காதிருக்கும். அதிகக் காற்றோட்ட மில்லாத இடத்திலுள்ள தீபம் எப்படி அசை வற்றிருக்குமோ, அதையொத்த மனது அசை வற்றிருக்கும். மரணசமயத்தில், சரீரத்தில் வலி அதிகமாகவிருக்கும் அத்துடன், சரீர அபிமானமும் அதிகம். பாபிகளுக்கு அதுசமயம் மனம் கலங்கியிருக்கும். அச்சமயத்திலுள்ள மனோபாவத்திற்குத் தகுந்தபடி மறுபிறப்பு உண்டாகிறது. மனோலயம் வந்தவன் மரணசமயத்தில் தீரத்துடன் இருப்பான். எவ்வளவோ பாபங்கள் செய்திருக்கிறோம், நாம் சித்தையுடன் கர்மாக்களையும், பகவத்தியானத்தையும், செய்துவந்தால், இந்த ஜனமத்திலேயே நாம் கடைத்தேறலாம்.

ஸ்திரசர ஆச்ரமம் உயர்ந்தது. மோக்ஷ நிலையை அடைவதற்கும், அதற்கான நிரந்தங்களைப் படித்து நடந்து கொள்ளவும், அதில்தான் அவகாசம் ஜாஸ்தி. யதிகளுக்குக் கவலைப்பட வேண்டியது ஒன்று மில்லை. ஆகாரம் ஒரு வேளை. அதுவும் அலவணத்துடன் செய்ய வேணும். யதிகளை ரக்ஷிப்பதற்காக கிரஸ்தர்கள், தங்களுக்காகத் தயாரிக்கப்படும் போஜன பதார்த்தங்களில் ஒரு பங்கை அவர்களுக்காக வைத்துவைக்கவேணும். சித்தையுள்ள யதிகளுக்கு பரமாத்ம ஸ்வரூபம் சுலபத்தில் விளங்கும். ஒர்யதி ஒவ்வொரு ஊரிலும் மூன்று நாள்களுக்கு மேல் தங்கக் கூடாது. அப்படித் தங்கினல், அந்தக் கிராமத்தவர்களின் ஆசாபாசங்களில் யதிக்கு சம்பந்தமுண்டாக ஹேதுஉண்டு. காசி முதலான சில ஜீவன்முக்த க்ஷேத்திரங்களில்,எதேஜமொன்றில் ஆயுள் பரியந்தம் தங்கியிருப்பதாக ஒர் யதி நீர்மானித்துக் கொண்டால், அவ்விதம். செய்து கொள்ளலாம். யதிகளுக்கு முக்கியமானது சாதுர்மாஸ்யம். வியாஸர், சுகர், முதலான ரிஷிசிரேஷ்டர்களும், மற்றமுள்ள ஆசார்யர்களும், ஆவாஹனம் செய்து பூஜிப்பதுதான் சாதுர்மாஸ்ய ஆரம்பத்தில் செய்யும் வியாஸ பூஜையாகும். வியாஸபூஜை ஆரம்பதினத்திலிருந்து 4பக்ஷங்கள் ஒரே இடத்தில் தங்கியிருக்கவேணும். யதிகள் வேதகிரந்தங்களைப் படித்தமனனம்பண்ணவேணும். சாதுர்மாஸ்ய ஆரம்பத்தில், ஒர் இடத்தில் பல யதிகள் சேர்ந்தால், அவர்களில் அதிக சாதுர்மாஸ்யங்களைச் செய்தவர், பூஜை முதலான முக்கிய கார்யங்களைச் செய்ய வேணும். மற்றயதிகள் கூடவிருந்தால், போதும். யதிகள் பிரார்த்தனையை அனுஸரித்து, சாதுர்மாஸ்ய காலம் முழுமைக்கும் அவர்களை ரக்ஷிப்பதாக, கிராமத்தவர்கள் அவர்களுக்கு வாக்குறுதி செய்து கொடுக்கவேணும். பிரம்மத்

(6-ம் பக்கம் பார்க்க)

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஹூ கார்த்திகை-மீ 15உ

மதமும் ராஜீயமும்

அலகாபாத்தில் கூடிய காங்கிரஸ் கார்ய கமிட்டியானது, தீண்டாமை விலக்கு உள்பட நிர்மாண நிட்டத்தை தீவ்ரமாக நடத்திக்கொண்டு போக வேண்டுமென்று கட்டளை யிட்டிருக்கிறது. தீண்டாமை விலக்குக்கு தங்கள் இஷ்டப்படி விரிவான அர்த்தம் செய்து கொண்டு மதவிஷயத்தில் புரட்சியை காங்கிரஸ்காரர்கள் செய்ய முற்பட்டார்கள். இதன் மூலம் தேசத்தில் பொதுமக்களுக்கு காங்கிரஸிடம் பலத்த அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது. காங்கிரஸானது தங்களது பிரதிநிதிஸ்தாபனமல்ல வென்று ஒரே முகமாக யாவரும் சொல்ல முன் வந்துவிட்டார்கள். இதன் மூலம் காங்கிரஸின் செல்வாக்கும் பலமும் குன்றி விட்டதென்பதை காந்திஜீயே தெளிவாக ஒப்புக்கொண்டிருக்கிறார். இப்படியெல்லாமிருந்தும் கார்யக்கமிட்டியானது மீண்டும் தீண்டாமை விலக்கு வேஷியில் மும்முரமாக ஈடுபடபிடிவாதம் செய்வது அவிவேகமானதென்பதை உணரவில்லை.

தீண்டாமை விலக்குப்போன்ற ஸமூகச் சீர்திருத்தங்களையும் காங்கிரஸில் ஆலோசிக்க எற்பாடு செய்திருப்பதை பலமாக ஆதரித்து காந்திஜி ஸமீபத்தில் ஓர் கட்டுரையும் வெளியிட்டிருக்கிறார். ராஜீய விஷயத்தைமட்டும் காங்கிரஸ் ஆலோசிப்பதுடனில்லாமல் ஸமூக சீர்திருத்த விஷயத்தையும் அதில் ஆலோசிக்க முற்பட்டிருப்பதால் விசேஷனமைஎற்பட்டிருப்பதாக காந்திஜி சாதனை செய்கிறார்.

ஆதலால் காந்திஜி தலைமையில் காங்கிரஸ் சிக்கிக்கொண்டிருக்கும் வரையில் ராஜீயத்தையும், மதத்தையும், சேர்த்துக் குழப்பி, மத நாச வேலையில் அது முனைந்து நிற்குமென்றே தெரிகிறது.

ராஜீயத்தையும், மதத்தையும் பிணைப்பதால் தேசத்தில் பெருத்த அதிருப்தி யேற்பட்டு ராஜீய வேலை குந்தகப்படுகிறதை பல ராஜீய அறிவாளிகள் தற்போது அதிகம் உணர ஆரம்பித்திருக்கிறார்கள். தென்னிந்தியாவில் ஆன்திக்கர் செய்த கிளர்ச்சி உலகமெங்கும் வியாபித்துள்ளது. ஆதலால் மத விஷயத்தில் ஓர் நியமம் ஏற்பட வேண்டுமென்பது எங்கும் உணரப்பட்டு வருகிறது. பிரபல காங்கிரஸ் தலைவர்கள்கூட மதத்தையும், ராஜீயத்தை பிரித்து விடவேண்டுமென்று யோஜனை சொல்ல முன் வந்துள்ளார்கள். ஸ்ரீமான் ஸுபாஷ் போஸ் காங்கிரஸுக்குள்ளேயே ஏற்படுத்தியிருக்கும் "முன்னேற்ற கக்ஷி" யின் கொள்கையில், மதத்தை ராஜீயத்தில் கலப்பதில்லையென்ற முக்யமான அம்சத்தைச் சேர்த்திருக்கிறார். இதன் மூலம் ஸுபாஷ் கக்ஷியில் சேர்ந்துள்ள காங்கிரஸ் காரர்கள் யாவரும் காங்கிரஸில் மத ஸம்பந்த விஷயத்தைப் பேசுவதை ஒப்பர்தவர்களென்பது தெளிவாகி விட்டது, மேலும் நமது மாகாண தலைவரான ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்களும் இவ் விஷயத்தை பற்றி ஸமீபகாலமாக அடிக்கடி ஓயாமல் வற்புறுத்திவருவதும் யாவருமறிந்த விஷயம். பம்பாயில் சில தினங்களுக்கு முன், நடந்த கபிகாயகத்தினக் கூட்டத்தில் ஸ்ரீமான் புலாபாய் தேசாய் பேசுகையிலும், மதத்தை ராஜீயத்துடன் ஸம்பந்தப்படுத்தக் கூடாதென்று சொல்லியிருக்கிறார்.

ஆதலால் தற்போதுள்ள நிலைமையில் தேசத்தில் ராஜீய வேலைகள் தங்கு தடையின்றி நடக்க வேண்டியதற்காக மத விஷயத்தில் ராஜீய வாதிகளோ, ராஜீய ஸ்தாபனங்களோ குறுக்கிடக்கூடாதென்கிற விஷயத்திற்கு பலத்த ஆதரவு எற்பட்டு வருகிறது. காந்தி சிஷ்யர்களான சில காங்கிரஸ் வாதிகள் மத விஷயத்தைப் பிரிக்க இஷ்டப்படாவிட்டாலும் மற்ற காங்கிரஸ்காரர்களும் இதரர்களும் சேர்ந்து புதிய கக்ஷி அமைத்து அதன் மூலம் காந்திய காங்கிரஸின் கொள்கையை எதிர்க்க வேண்டியதவச்யமாகும். ஸுபாஷ் போஸ், அல்லது ஸ்ரீநிவாஸய்யங்கார் தலைமையில் புதிய ராஜீயக் கக்ஷியை அமைக்கச் செய்தால் இச்சமயம் மத விஷயத்திற்கு எதாவதுபாதகாப்பு எற்படலாம்

தற்போதுள்ள ராஜீய நெருக்கடி எப்படி திருமென்று தெரியவில்லை. ஒருக்கால் மறு எலெக்ஷன் நடத்த நேரலாம். நமது மாகாணத்தைப்பற்றிய வரையில் ஸ்ரீ மான் ஸ்ரீநி வாஸ அய்யங்கார் தலைமையில் புதிய ராஜீயக் கக்ஷி அமைக்க நல்ல ஸந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கிறது. தேச நிர்வாக விஷயமாக ஸ்ரீமான் அய்யங்கார் வெளியிட்டுவரும் கொள்கைகளுக்கு நல்ல ஆதரவு இருந்துவருவதை நாம் பார்த்து வருகிறோம். ஆதலால் மதத்தையும், ராஜீயத்தையும், பிரிப்பதென்ற கொள்கையுடன் புதிய ராஜீயக்கக்ஷியேற்பட்டால் ஜனதகிகள் உள்பட யாவரும் அதை எலெக்ஷனில் ஆதரிக்கத் தயாராக இருப்பார்கள்.

அலஹாபாத் தீர்மானத்தை அநுஸரித்து காந்தீய காங்கிரஸ் வாதிகள் பிரசாரம் ஆரம்பிப்பார்களாகையால் அதற்குள் சென்னையில் ஓர் புதிய ராஜீயக்கக்ஷியை அமைப்பது அவச்யமென நினைக்கிறோம்.

குறிப்புகள்.

தண்டச்சம்பளம்!

மாகாணச் சட்ட சபைகளைக் கலைத்து விட்டபோதிலும் சட்டசபை மெம்பர்களுக்குக் கொடுக்கப் பட்டு வரும் 75 ரூ சம்பளமானது இனியும் கொடுக்கப்பட்டு வருமென்று நிச்சயமாகி இருக்கிறதாம். இதைப் பற்றி நமது மாகாணத் தலைவர் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீநிவாஸய்யங்கார் அவர்கள் வெளியிட்டுள்ள அபிப்பிராயம் கவனிக்கத் தக்கது. சட்ட ஸபை கலைக்கப்பட்டிருக்கையில் மெம்பர்களுக்கு வேலை ஒன்றும் கிடையாது. அப்படியிருக்க அவர்களுக்கு எதற்காகச் சம்பளம் கொடுக்க வேண்டுமென்று ஸ்ரீமான் அய்யங்கார் ஆக்ஷேபிக்கிறார். கவர்ன்மெண்டார் கொடுத்தாலும் காங்கிரஸ் சட்ட சபை மெம்பர்கள் எப்படி அந்தத் தொகையைப் பெறலாமென்றும் ஸ்ரீ அய்யங்கார் வினவுகிறார். தேசிய நலத்தை உத்தேசித்து ஷை தொகையை மெம்பர்கள் வாங்காமல் நியாகம் செய்து விட வேண்டு மென்றும் ஸ்ரீ அய்யங்கார் யோஜனைகூறுகிறார். சட்ட சபை மெம்பர்களுக்கு 75 ரூ சம்பளம் எற்படுத்தியது நியாயமா அவச்யமாவென்ற விவாதம் ஒருபுறமிருக்க அவர்கள் வேலையொன்று மிராமல் வீட்டில் தூங்கும் போது கூட அவர்களுக்குச் சம்பளம் கொடுக்க வேணுமா? நமது மாகாண ஏழை ஜனங்களின் வரிப்பணத்தை மெம்பர்கள் அகாரணமாகப் பெற்று தாங்கள் ஸுகிப்பது தர்மமா?

ஸர்க்கார் ஊழியர்கள் இரவு பகலாக சரீரத்தை உழைத்துச் சம்பளம் பெறுகிறார்கள். பென்ஷதார்களும் தங்கள் ஜீவித காலம் முழுவதும் ஸர்க்காருக்கு உழைத்து அதன் பிரதி பிரயோஜனத்தைப் பெறுகிறார்கள். இந்த சட்டசபை மெம்பர்கள் என்ன செய்கார்கள்? எந்த ஊழியத்திற்காக அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பது? சட்ட சபை கற்காலியில் ஆனந்தமாகத் தூங்குவதற்கா?

மேலும் ஸர்க்கார் ஊழியர்களாக வருகிறவர்கள் தங்கள் படிப்புக்காக ஏராளமாகப் பணச்செலவு செய்தவர்கள். சட்ட சபை மெம்பர்களுக்கோ அந்த நிரமமுமில்லை, அவர்களுக்கு உயர்ந்த படிப்போ, சிறந்த ஞானமோ, அநுபவமோ ஒரு யோக்கியதையும் வேண்டியதில்லையல்லவா? ஸாதாரணமாக ஓட்டுள்ள ஒரு மனிதராக மட்டு மிருந்தால் போதும். அவர் சட்ட ஸபை மெம்பராக வந்து 75 ரூ சம்பளம் பெற ஸாத்யமாகிவிடுகிறது. அதுதான் தொலைகிறதென்றால் வேலையற்ற வீட்டுத் தண்ணியில் தூங்குகிற ஸமயத்திலும் ஏன் சம்பளம் கொடுக்க வேணும்?

காங்கிரஸகார்கள்தான் எப்படி இந்தச் சம்பளத்தை வாங்கத்துணிந்தார்களோ? அவர்களது மனச்சாக்ஷி எப்படி இடம் அளித்ததோ? தேசத்தின் தரித்ர நிலைமையையும், ஏழை ஜனங்களின் கஷ்டத்தையும் கருதி மந்திரிகளுக்கு 500 ரூ சம்பளமே போதுமென்று நியாகம் செய்த காங்கிரஸகார்கள் இந்த 75 ரூ. சம்பளத்தை மட்டும்பெற லஜ்ஜோசப்படவேண்டாமா? ஸ்ரீமான் ஸ்ரீநிவாஸ அய்யங்கார் கூறுவதுபோல் தேசிய நலத்தைக் கருதியோ, அல்லது கவர்னரிடம் பணம் பெறுவதை ஊனமாக நினைத்தோ இந்தச் சம்பளத்தை வாங்க மறுப்பதே தன்மநிப்புக்கேற்ற செய்கையாகும். மந்திரிகளாயிருந்தவர்களுக்கும் இந்த 75 ரூ சம்பளமிருக்குமாகையால் அவர்கள் நியாகம்செய்து மற்ற மெம்பர்களுக்கும் வழிகாட்டுவார்களா?

இந்த நெருக்கடி இன்னும் எவ்வளவு காலம் நீடிக்குமென்று சொல்லமுடியவில்லை. நெருக்கடி நீரும்வரையில் இந்த 75 ரூ சம்பளத்தைக் கொடுத்துக் கொண்டேவருவது நீதியாகாது. ஆதலால் கனம் கவர்னரவர்கள் அடியோடு சட்டஸபையைக் கலைத்து மெம்பர்களை விலக்கிவிடுவதே இப்போது செய்யவேண்டிய கார்யமாகும். நிலைமை ஸரிப்பட்டால் மறு எலெக்ஷன் நடத்திக்கொள்ளலாம். அப்படியின்றி பொதுஜனப் பணத்தை வீரயமாக்குவது உசிதமாயிராது.

நேசு தேசங்களுக்குத் தபால்

அதிகாரிகள் அறிக்கை

"அனுசரிக்க வேண்டிய முறை"

சென்னை மாகாண பிரதம போஸ்ட் மாஸ்டர் ஜெனரல் கீழ் கண்ட அறிக்கையைப் பொதுமக்கள் அறிய வேண்டி விடுத்திருக்கின்றனர்:—

"நேசதேசங்களு (ஜர்மனியைத் தவிர) க்கு அனுப்பவேண்டிய தபால்களின் கீழ்காணும் முறைப்படி அனுப்பவேண்டும் இன்னும் பொதுமக்கள் "அனுசரிக்க வேண்டிய" முறைகளை தெரிந்துக்கொள்ளவில்லை.

அச்சிட்ட பேப்பர்கள், சாம்பில்கள், பார்சல்கள் மற்றும் இதர அறிக்கைகள் யாவும் பிரிட்டிஷ் ஏகாதிபத்யம் (எயர், தென் அயர்லந்து நீங்கலாக) பிரஞ்சு தேசத்துக்கு, குருட்சகாயத்துக்காக அனுப்பும்போது 'பிரதம தணிக்கை அதிகாரி' அனுமதி பெற்று அனுப்பவேண்டியதில்லை. (The chief consor India) மற்ற இடங்களுக்கு அனுமதி பெற்றே அனுப்பவேண்டும்.

"தணிக்கை அதிகாரி புதிய டெல்லி (சிம்லா)" என்ற விலாசத்துக்கு (The chief Cenjor, Army Head quarters, New Delhi (Simla) த் தெரியப்படுத்தினால் "அனுமதிச் சீட்டு" அளிக்கப்படும். பிரிட்டிஷ் ஏகாதிபத்யத்துக்கு (எயர் தேசம் நீங்கலாக) ம், பிராஞ்சு தேசத்துக்கும் இத்தகைய "அனுமதிச் சீட்டு தேவையில்லை'.

ஜர்மனிக்கு தபால் இல்லை.

ஜர்மனி, போலந்து, டான்லிக் முதலிய தேசங்களுக்கு தபால் போக்குவரத்து கிடையாது.

வெளி தேசங்களுக்கு மணியார்டர் அனுப்ப அனுமதி பெறவேண்டாம். வெளி தேசங்களுக்கு (ஜர்மனி, போலந்து நீங்கலாக அனுப்பும் மணியார்டர்கள் கீழ்க்கண்ட விதிகளின்படி அனுப்பவேண்டும்:-

(1) கிரேட் பிரிட்டனுக்கும் வட அயர்லாந்துக்கும் 40 பவுனுக்குமேல் தினசரி அனுப்பக்கூடாது. இதர தேசங்களுக்கு 5 பவுன்கள் அல்லது ரூ 70-க்கு மேல் அனுப்பக்கூடாது.

(2) மணியார்டர் கூப்பன்களின் மீது "எதற்காகப் பணம் அனுப்பப்படுகிறது" என்பதை அனுப்புபவர் எழுதவேண்டும்.

முக்கிய அறிக்கை:—

(Business papers) வேலை சம்மந்தமான பேப்பர்களை "அச்சிட்ட அறிக்கை" போல் பாவிக்கப்படமாட்டது.

இதற்கு அனுமதிச் சீட்டு அவசியமில்லை. தபால் ஆபீஸ்களில் இது விஷயமாகக் கட்டுப்படுத்த மாட்டார்கள்.

இந்த விஷயமாக 1839ஹூ செப்டம்பர் மீ "தபால்—தந்தி குறிப்புப் புஸ்தகத்தில்" 166-பிரிவுகளையும் 174 பிரிவுகளையும் பொது ஜனங்கள் படித்துப் பார்க்கவேண்டும்.

உண்மையில் வேலை விஷயமான பேப்பர்களை அனுப்புவதாய் இருந்தால் அவைகளுக்கு அனுமது அவசியமில்லை. ஆனால் அது இதர கடிதங்கள் தணிக்கை செய்யப்படுவது போல் தணிக்கை செய்யப்படும்.

மந்திரிகள் பொம்மைகளே!

காரியதரிசிகளே ஆட்டி வைக்கிறார்களாம்

ஸ்ரீ பிரகாசத்தின் கூற்று.

மாஜி மந்திரி ஸ்ரீமான் டி. பிரகாசம் சென்னையில் 24உ பேசுகையில் மாகாண ஸ்வய ஆக்ஷியில் தமக்கு எற்பட்ட அநுபவங்களைக் கூறினார். மாகாண ஸ்வய ஆக்ஷி அதிகாரம் உண்மையில் எற்பட வில்லை யென்றும், அநேக விஷயங்கள் மந்திரிகளுக்குத் தெரியாமலேயே ஸர்க்கார் கார்யதர்சிகளால் நடத்தப்படுவதாயும், உண்மையில் அந்த கார்யதர்சிகளே மாகாண ஆக்ஷியை நடத்துகிறவர்களாயிருப்பதாயும் மந்திரிகள் அந்த ஐ. லி. எஸ். கார்யதர்சிகள் சொன்னதை அநுசரித்தே நடக்க வேண்டியதாயிருப்பதாயும், தனது ரவீந்து இலாகாவில் தமக்குத் தெரியாமலேயே அனேக உத்யோகஸ்தர்கள் யுத்தத்தை முன்னிட்டு நியமிக்கப்பட்டனரென்றும் இந்த நிலைமையில் கூட மந்திரிகள் ராஜினாமா செய்யாமல் எப்படி இருக்க முடியுமென்றும் ஸ்ரீ பிரகாசம் கூறினர்.

இந்த அவமானம் வாஸ்தவமானால் 2½ வருஷகாலமாக காங்கிரஸ் மந்திரிகள் இதை மறைத்து வைத்த தேன்? அப்போதே என் ராஜீனாமா செய்யவில்லை? இப்போது "அந்தப் பழம் புளிக்கிறது" என்று வைராக்கியம் பேசுகிறார் போலும்?

மந்திரி பதவியிலேயே திருஷ்டியா?

ஸுபாஷ் பாபுவின் ஏளனம்!

அலஹாபாத்தில் கூடிய கார்யக் கமிட்டியின் தீர்மானத்தை பலமாக ஆக்ஷேபித்து ஸ்ரீமான் ஸுபாஷ் போஸ் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறார். காங்கிரஸ் மந்திரிகள் மீண்டும் பதவிபெற ஆசையுள்ளவர்களாகவே தீர்மானத்தினுள் தெளிவாகவே தீர்மானத்தினுள் தெளிவாகவே தீர்மானத்தினுள் தெளிவ

ஸ்ரீ மகாபாரதம்

சாந்தி பருவம்

(வம்பாவதூணி)

(வித்வான் ஆங்கரை ஸ்ரீ ரங்கஸாமி சாஸ்திரிகள்)

ராமன்:— கிருஷ்ண! நேற்று இரவில் ஸ்ரீ சக்கிரபாணிஸ்வாமி கோவிலில் சாந்தி பருவம் படித்தார்களாமே. போயிருக் தாயா, நிறம்ப தருமம் நிறைந்த பருவ மாகும் அது.

கிருஷ்ணன்;— சாந்திபர்வம் என்றால் என்ன? ராமா!.

ரா:— ஆகா, இந்த பாரத பூமியில் ஜனித் தும் பாரதக்கதை தெரியாமல்இருக்கிறியே? மிகவும் ஆச்சரியம், அது மகாபாரதத்தில் ஓர் பாகம்.

கி:— ஆனல் அதில் இம்மாதிரி எவ்வளவு பாகங்கள் இருக்கின்றன?

ரா:—பதினெட்டுப் பருவங்களுள்ளன. ஒவ்வொரு பருவமும், ஒன்றை விட ஒன்று மிக்க ஸாரமுள்ளதாகவே யிருக்கும்.

கி:—பதினெட்டுப் பருவங்களின் பெயரையே பெரும்பாலோர் அறியார் என கிணைக்கிறேன். உனக்குத் தெரிந்தால் சொல்.

ரா:—அந்தோ! பாரத நாட்டாரின் சிரத் தைக் குறைவு, என்னே? பல நீதிகளடங் கிய பாரத கதையின் பர்வங்களே யறியா தாருமுளரோ. நானே சொல்லுகிறேன் கேள். 1. ஆதிபர்வம். இதில் பாண்டவர் களின் பிறப்பு வளர்ப்பு முதலானவை கூறப்படுகின்றது. 2. ஸபா பர்வம். இதில் தான் நிரௌபதிமணமும் மாயையால் நிர் மாணம் செய்யப்பட்ட சபையில் சூதாடு தல் முதலான கதைகள் கூறப்படுவதுடன். ராஜஸூயயாகம், சிசுபால வதம் முதலான வையும. 3. வனபர்வம். இதில் பஞ்ச பாண்டவர்கள் பனிரண்டு வருஷ காலம் நிரௌபதியுடன் வனவாசம் செய்த கதை யும், மகரிஷிகளால் தருமருக்குபதேசிக்கப் படுமுத்தம சரிதங்களும் உரைக்கப்படு கின்றன. யக்ஷப்பிரச்னமுமிதனிறுதியில் தான். 4. விராட பருவம். இதில் பாண் டவர்களும் நிரௌபதியும் ஒரு வருஷ காலம் மாறுவேடத்துடன் அக்ஞாதவாசம் செய்த சரிதம் நிருபிக்கப்படுகிறது. இது பலவித நியாயம் நிறம்பியுள்ளது. மழை இல் லாத தேசத்தில் இந்தப் பருவம் படித்தால் உடனே மழை பொழிகின்றதப்பா!

5. உத்தியோக பருவம். இதில் பாரத யுத்தத்திற்காக உத்யோகம் செய்தல், ஸ்ரீ கிருஷ்ணன் தூது, விதுர நீதி, ஸனத்ஸு ஜாதீயம் இவை அடங்கி யிருக்கின்றன இது பற்றியே 'விராடோத்யோகஸாரவான்' என்பர் பெரியோர் 6. பீஷ்ம பர்வம். இதில் பீஷ்மருக்கும் அர்ச்சுனனுக்கும் நடந்த பத்து நாள் யுத்தம் பகரப்படுகிறது. இதில் தான் பார்த்தசாரதியினல் காண்ட பனுக்குபதேசிக்கப்பட்டதும், பகவத் கீதை யெனப் பல் வேறு மத்தினராலும் போற்றப்பட்டதுமான உபதேச மொழி கள் உறைந்து கிடக்கின்றன. 7. த்ரோண பர்வம். இதில் த்ரோணசாரியாருக்கும் விஜ யனுக்கும் நடந்த போர். 8, 9. கர்ண பர் வங்கள். சல்லிய பருவங்கள். அவரவர்களு டன் யுத்தம் 10. ஸௌப்திகம், அசுவத்தா வின் அட்டூழியம் சதருதீயமகிமை. 11. ஸ்திரீ பருவம்:—புத்திரமரணத்தினல் தவிக்கும் திருதராஷ்டிரஜி தேற்றுதல் நமக்கடன் முடித்தல், ஸ்திரீகள் புலம்பல் முதலானவை:—

12. இதுவே சாந்தி பருவம். இதில் பதி னெட்டு அக்ஷௌஹிணி ஸைன்யங்களையும் மாமன் மைத்துனன் முதலான பந்துக்களை யும் நாசமாக்கக் காரணமாயிருந்த எனக்கு நற்கதியேது துக்கமறவெல்லையெனவென முறையிடும். யுதிஷ்டிரருக்கு சரதல்பத்தில் ச யனித்திருக்கும் பிஷ்மரால் தருமோபதேசம் செய்யப்படுகின்றது. இ த ற் கடு த் தது அனுசாஸன பருவம். இதில் வி ஷ் ணு ஸஹஸ்ரநாமம் விளங்கா நிற்கின்றது.

கி:— பாக்கிப் பருவங்களைப் பின்னர் தெரிந்து கொள்கிறேன். எல்லாப் பருவங் களிலும் தருமம் விசேஷமாகக் கூறப்படு கையில் சாந்தி பருவத்திற்கு மாத்திரம் தருமங்களை நிருபிப்பதில் என்ன சிறப்பு?

ரா:— கிருஷ்ண! கவனமாகக்கேள்! மகாபாரதம் முழுதும் தருமத்தையே பிரதி பாதிப்பதாயினும் சாந்தி பருவம் புருஷ னுக்குப் பரம புருஷார்த்த சாதனமான நிவிருத்தி தர்மத்தை நிறம்பக் கூறுத லாலும் சு த ர் ம ம முக்கியமாகக் கூறப் படுவதாலும் எனவறிவாய்.

கி:—மோக்ஷதர்மமென்றுயே! மோக்ஷத் திலிருப்பவனுக்கு தருமமேது.

ரா:— நன்கு வினவினுய், முன்னர் ராஜ தர்மம், ஆபத்தருமம் என்று கூறிவந்த வரிசையில் சமதமாதிகளே மோக்ஷதருமம் மென்றார் **சமதமாத்யுபேத:** என்பது பிரும்ம ஞ்ஞ்திரம் 'அமாநித்வமதம்பித்வம்' என்னும் நீதையும் மோக்ஷசாதன ஞானத்துக்குரிய தருமம் மோக்ஷதரும மென்றபடி.

கி:—அங்ஙனமாயின் ராஜ தருமத்தை யும் ஆபத்தருமத்தையும் முன்னர் மொழி ந்த பின்னர் பகரப்படும் மோக்ஷதரும மடங்கிய இப்பருவம் எங்ஙனம் சாந்தி பருவமெனவமையும்.

ரா:—**'ப்ராதாந்யேந வ்யபதேசா பவந்தி'** என்ற நியாயத்தாலென்னு. எதில் எது அதி கமாக இருக்கிறதோ அதன் பெயராலயே அது வழங்கப்படுவது சகஜம் வைசேஷ்யா த்து தத்வாதஸ்தத்வாத்:' என்னும் பிரும்ம சூத்திரம் படிக்கவில்லையா. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் ஐந்து பூத ங்கள் ஒவ்வொன்றிலும் பஞ்சீகரணப் பிரக்கியையினுல் வியாபித்திருந்த போதி லும் அர்த்தாம்ச ரூபமான விசேஷத்தை கொண்டேயன்றே பிருதிவி, முதலான வியவகாரம் என்றார் மகரிஷியும்.

கி:— நல்லது. நேற்று என்ன விஷயம் நடந்தது சொல். கேட்போம்:

ரா:—ஸேனஜித்து என்ற அரசனின் உபாக்கியானம், அப்ஸரஸஸ் புத்திர சோகத் தினுல் தவிக்கையில் ஓர்மகரிஷி தத்துவோப தேசத்தால் ஆற்றுகிறார், ஆதலடையவு பாயமென்ன சொன்னராம்.

ரா:—**'நஷ்டே – தநேவா புத்ரேவா – அஹோகஷ்டமிதி த்யாயந் துःகஸ்யாபசிதிம் சரேத்'** என்றுபதேசித்தாரம் அதாவது அதோந்யதார்த்தம் என்ற உபநிஷத்தின்படி சர்வம் நாசமுள்ளதெனத் தீர்மானித்து துக்கத்தை விலக்கிக்கொள்ளமாட்டுவான் என்றபடி.

கி:—அப்படியானுல் ரொம்ப ஸாரமாக வேயிருக்கிறது. இனந்தோறும் போய் சிரவணம் செய்து. நான் விமரிசம் செய் வோம். (தொடரும்.)

சென்னை

திலபுராண பூர்த்தியும் நாகரகண்ட ஆரம்பமும்

பதிணெண் புராணப்ரவசந ஸபையினுதர வில் சென்னை ஸ்ரீசங்கரமடத்தில் பிரும்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ ஸோமதேவ சர்மாவால் நடத்தப் பட்டுவந்த திலபுராணம் பூர்த்தியா கி மஹா ஸ்காந்தத்தில்உள்ள நாகர கண்டம் உபன்யஸிக்கப்படுகிறது. (ந.தி)

தமிழ் நாட்டில் பெரு மழை

ரயில் போக்குவரத்துக்குத்தடை

விவசாயிகளுக்கு மகத்தான நஷ்டம்

சென்ற ஒரு வார காலமாக தமிழ் நாட் டில் பல விடங்களில் பெரு மழை பெய்த்து. இதனுல் எங்கும் உடைப்புகள் ஏற்பட்டன். ரயில் போக்கு வரத்துக்குத் தடை ஏற்பட டிருக்கிறது. வயல்கள் யாவும் வெள்ளத் தில் மூழ்கியிருக்கிறது. கால்நடைகள் அ நே கம் உயிர் துறந்தன. விவசாயி களுக்கு மகத்தான நஷ்டம் ஏற்பட்டிருக் கிறது. நமது ஸ்ல்லா (தஞ்சை)யில் மழை மிகக் கடுமை. பட்டுக்கோட்டையில் வெள் ளத்தில் மூழ்கி ஏழு பேர் உயிர் இழந்தார் கள். புதுக்கோட்டையிலும், சென்னை யிலும் மழை வேண்டுமென்று பிரார்த்தனை நடத்தினர்கள். அங்கு மழை பெய்து விட்டது. சென்னையில் ஜலப்பஞ்சம் 18—11—39 ஒழிந்து விட்டது. சர்க்கார் ஊழியர்கள் வெள்ளச்சேதத்தில் அல்லல்பட் டவர்களுக்கு மக்த்தான ஸேவை புரிந்தது பாராட்டத்தக்கது.

(ஒ. கி.)

யாருக்குப் பிரதிநிதி?

காங்கிரஸ் பாத்யதை கண்டனம்.

பம்பாய் ஆஸ்திக்கர்கள் கூட்டம்

பம்பாய் மாகாண வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்க ஆதரவில் மாதவ பாக்கில் 5—11—39 மாலை ஒரு மாபெரும் ஆஸ்திகர்கள்கூட்டம் நடந்தது. ஆயிரக்கணக்கில் ஆஸ்திகர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

ஸ்ரீ விஜயராதவஜோரியா (மத்ய இந்தியா சட்டசபை அங்கத்தினர்) தலைமை வகித் தார்.

மே. த. ஸ்ரீ கோஸ்வாமி ஸ்ரீ கிருஷ்ண ஜீவான்ஜீ மகாராஜ், ஸ்ரீ சேத் கோவிந்த லால் பான்கஜீ, பண்டித ஸ்ரீதர சர்மா, ஸ்ரீ மனுபாய் கி. பாண்டியா (சொலிசிட்டர்) ராவ்பகதூர் ஜெயராமதாஸ் தேடியா பக தூர் முதலிய பிரமுகர்கள் கூட்டத்துக்கு விஜயம் செய்திருந்தார்கள்.

தலைவர் பிரசங்கத்துக்குப் பின் பல தீர் மானங்கள் ஏகமனதுடன் நிறைவேறின.

"காங்கிரஸ் யாருக்கு பிரதிநிதி. ஸனதனி களின் சார்பாக பேச காங்கிரஸ் பாத் யதை கொண்டாடுகிறதை இக்கூட்டம் கண்டிக்கிறது. என்ற தீர்மானம் கூட்டத் தில் ஏகமனதுடன் நிறைவேறியது.

(3-ம் பக்கம் தொடர்ச்சி)

கியானம் எப்பொழுதும் செய்து கொண் டேயிருப்பதற்கும், அதன் பலனை அடைவ தற்கும் யதி ஆச்ரமத்திலுள்ள ஸௌகர்யம் வேறெங்கிலுமில்லை.

ஆகவே, நம்முடைய பரமாசார்யாள் அவர்கள் நமக்குக் காட்டியிருக்கிற வழிக ளைப் பின்பற்றி, கர்மாக்களைச் செய்து, பக வத்தியானம் மூலம் மனதை நிர்க்கச் செய் தது, பிரம்மஸ்வரூபத்தை அறிய, நம்மெல்லோ ரும் அனுக்ரஹிக்க வேணுமாய், நாம் எல்லோரும் ஸ்ரீ சந்திர மௌளீஸ்வரரைப் பிரார்த்திப்போம்.

இறைவனது இன்னருள்

காணிக்கை சமர்ப்பிவித்த விந்தை.

தேன்காசியில் நடந்த சம்பவம்.

தென் காசிக்கருகில் நிருமலே கேஷத்திரம் உளது. அங்கு ஒரு சுப்பிரமணிய ஸ்வாமி ஆலயம் இருக்கிறது. அங்கு சென்ற வாரம் 10—11—39 நடந்த சம்பவம் நாஸ் திகர்களுக்கு ஆச்சரியத்தை அளிக்கும்.

'ஒரு ஆஸ்திகர் நீண்டநாள் அதெனக்கிய மாயிருந்தார். சொஸ்தமடைந்பின் தனது நாக்கையறுத்துக் காணிக்கை சமர்ப்பிப் தாக பிரதிக்ஞை செய்துகொண்டார்.

இறைவனது இன்னருளால் ஆஸ்திகர் குணமுற்றார்.

10—11—39 வெள்ளிக்கிழமை நிருக் கோவிலில் நிரளன பக்தர்கள் கூடியிருந் தார்கள். கோவில் நிர்வாக அதிகாரியும் அவ்வமயம் அங்கு விஜயம் செய்திருந்தார். பிரதிக்ஞை எடுத்துக்கொண்ட ஆஸ்திகர் அவரை ஆனந்தத்துடன் அங்கு வந்தார். மனம் மாறவில்லே. எடுத்த பிரதிக்ஞையை மீறிவிடவில்லே. தெய்வம் உண்டு. சத்யம் உண்டு என்று எண்ணி தனது நாக்கை இரண்டு அங்குலம் அறுத்து பகவான் பாதார விந்தத்தில் சமர்ப்பித்தார். ரத்தம் கொட்டி யது காட்சி கோரமானதுதான். யாவரும் அவரது சத்தியத்தைப் போற்றினர்கள்.

இரண்டு மணி நேரத்திற்கெல்லாம் அறு பட்ட நாக்கு வளர்ந்துகொண்டே வந்தது. முடிவில் நாக்கு முன்போலாகிவிட்டது. இதைக்கண்ட நாஸ்திகர்கள் மனம் மாறி னர். இக்த கலிகாலத்தில்கூட இம்மாதிரி சம்பவம் நடந்துவருவதிலிருந்து ஆண்ட வன் ஒருவன் இருக்கிறான். அவனன்றி ஓரணுவும் அசையாது என்பது பொய்த் தப் பேராது.

(இந்தியன் எக்ஸ்ப்ரஸ் 18-11-39.)

நிலவரி வஜா

ரூ. 75 லக்ஷம் தள்ளுபடி

"நமது சென்னை மாகாணத்தில் இந்த பசலியில் (1939-40) நிலவரியில் ரூ 75 (எழுபத்தைந்து) லட்சம் வஜா செய்வ தென்று சென்னை சர்க்கார் முடிவு செய் திருக்கிறார்கள்.

இதனே ஒட்டி விரைவில் சர்க்கார் உத்தி ரவு பிறப்பிக்கப்படும் என்று ஒரு சர்க்கார் அறிக்கை கூறுகிறது. (ஹிந்து)

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆதாரங்களுக் களையும் சங்ரகமாய் தமிழில் மொழிபெயர் க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராம ணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலே ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்)

கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,

தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை
&
ஸ்ரீ ஜனர்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்.

மாயவரம்

ஸாமவேதபாராயணம்

காலஞ்சென்ற மருதூர் சிவரும சாஸ்திரி களவர்களால் சென்ற 40 வருஷகாலமாக நடத்தபபட்டுவந்த ஷெ. ஸாமவேத பாரா யணம் ஷெடியார் குமாரர் பிரும்மஸ்ரீ அண் ணுசாமி சாஸ்திரிகளவர்களாலும், ஷெடியார் ஜாமாதா பிரும்மஸ்ரீ விசுவதீக்ஷதர் அவர் களாலும் இவ்வருஷம் வெகு சிறப்பாகவும் பூர்வம் நடத்துவந்தபடிக்கும் சுமார் 16 வேதாத்யாபகர்களைக் கொண்டு மஹாநாத ஸ்வாமிக்கு நடத்தப்பட்டது. பிரமணர் களுக்கு ஸ்வஸ்திவாசனம் பூர்ணமாகவும் நடுவில் தீபாவளி கோர்த்தால் தலா 1க்கு ஒரு 10, 6 ஜோடி வேஷ்டியும் சம்மானமாக அளிக்கப்பட்டது. ஒரு முக்கியமான அம் சம் திப்பிரழபுரம் பிரும்மஸ்ரீ நாராயண ச்ரௌதிகளவர்கள் தினக்தோறும் ஒவ்வொ ரு ஸாமா அர்த்தத்துடனும் பாவத்துடனும் சொல்லி கடைசி தினத்தில் ஸ்தர்ப் பணிக்குப் பிறகு சுமார் 1 மணி நேரம் வேதமஹிமையைப்பற்றி நன்கு உபன்ய சிக்கப்பட்டது. (ஒ-நி)

சென்னை

ஸ்ரீ வித்யோல்லாஸனீ ஸபா

சென்னை சம்ஸ்கிருத ஹைஸ்கூல் ஹாலில் மேற்படி ஸபைக்கூட்டம் 20—11—39ல் நடைபெற்றது. காரப்பங்காடு (ஐயாய வேதாந்த வித்வான்) ஸ்ரீ தேசிகவரதாச்சாரி யர் ஸ்வாமி அவைத்கலேமை வகித்தார். பாட்சாலே உதவியாசிரியர் ஜி. பக்ஷிராஜ அய்யங்கார் [ஸாஹித்ய சிரோமணி] கலேவ ரவர்களுக்கு ஓர் வரவேப்பு பத்ரம் வட மொழியில் வாசித்தளித்தார். ஸுபாஷித கதயபத்யங்களும் படிக்கப்பட்டன். ஸ்ரீ டி. வி. ரங்கராமாநுஜன் என்னும் மாண வன் "காவ்யங்களின் பெருமை" என்ற விஷயத்தைப் பற்றி பேசினர். வேறு பல மாணவர்களும் பேசினர்கள். முடிவாகத் தலேவர் "இப்போது கீர்வாண பாஷையைச் சிலர் ம்ருத பாஷையென பிதற்றுகின்றனர், இப்படியவர்கள் சொல்லியபோதிலும்சம்ஸ் கிருத பாஷையை உயிர்ற்ற பாஷையெனப் புகலுமவர்கள் அப்பாஷையின் சுவடறியா தவர்களாய்க் கொண்டு தக்கமறியாமையை உலகுக்கு தெரிவித்துக் கொள்கிறார்களென்றே எண்ணுகிறேன். இப்பாஷையின் அபி விருத்திக்காகவே பல மஹாகவிச் சிரேஷ் டர்கள் ராமாயணம் முதலான மஹா காவ்யங்களேயியற்றிப் பெரியதும் அரியது மான தொண்டுகளேச் செய்திருக்கிறார்கள்.

தற்போது இதுபோன்ற சபைகளாலும் கீர்வாண பாஷைக்கு ஓர் பெரிய வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இது எனக்கு மிதவும் மகிழ்ச்சியை அளிக்கின்றது. மேலும், நாம் யாவரும் இத் தேவபாஷையைப் பெரி தும் ஆதரித்துப் பயிலவேண்டும். ஆங்கில பாஷையை வயிற்பு பிழைப்புக்காக நாம் கைக்கொண்டாலும் தேவபாஷையை நாம் அவசியம் பயின்றே தீரவேண்டும் என் பதை ஒவ்வொரு ஸம்ஸ்கிருதாபிமானியும் தன் அநுஷ்டிப்புடன் பிறருக்குமிதை உணர்த்தவேண்டும். கீர்வாண பாஷை யின் ஒப்புயற்வற்ற பெருமையானது காவ் யங்களின் முகமாகவே கவிகளால் வெளிப் படுத்தப் பட்டிருக்கிற தென்று கூறினர். ஸ்கூல் வித்யார்த்தியான ஸ்ரீ ராமபத்ரனுல் கல்பனை செய்யப்பட்ட சில ஸுலோகங்கள் படிக்கப்பட்டன. ஷெ. ஸ்கூல் தலேமை ஆசிரியர் டி. எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார் வந்தனோபசாரம் கூறியபின் சபை இனிது கலேந்தது. ஒ-நி.

திப்பிரழபுரம்.

ஸ்ரீ ப்ரும்ம வித்யாஸபா :—22—11—39உ புதன கிழமை தினம், திருவிசல்லூர் ஸ்ரீ தர அய்யாவாள் உத்ஸவத்தில் ப்ரதி வரு ஷமும் நடத்து வருகிறதில் விசேஷ சிரத் தையும், ஊக்கமும் உடையவாரான பிரபல ஹாஸ்ய வித்வான், விகடம் பிரும்மஸ்ரீ ராமஸ்வாமி சாஸ்திரிகள், அவர்கள், சகல சராசரங்களிடத்தும் ப்ரகாசிக்கிறவனும், அனந்தையும் தன்னில் அடக்கிக்கொண்ட வனுமான பரத்தாமனின் லீலாவிநுதிகளே ஒருவாறு வர்ணித்து, அவருடைய கருணைக் குப் பாத்திரர்களாக வேண்டி, அவர் ஆணேயை நாம் கடை பிடித்து நடத்திக் கொண்டாடவேண்டும் என்று விரிவாகச் சொல்லி, ஸ்ரீதர அய்யாவாள் உத்ஸவத் துக்கு விசேஷமாக எல்லோரும் சுடுபட வேண்டிய ஆவச்யகத்தையும் கொல்லிக் கேட்டுக் கொண்டு, தன்னுடையதான சில ஹாஸ்ய ரஸக்கலேகளினுல் ஸரளமாக நாலாபக்கத்திலுமிருந்தும் வந்து கூடியிருந் தலேயோர்களே ஆனந்தத்தில் மூழ்கடித் தார்.

25—11—39உ சனிக்கிழமை தினம், கும்பகோணம், ஸ்ரீராம மந்திரம் வேதாந்த பாடசாலே அத்யக்ஷர் ஆங்கரை பிரும்ம ஸ்ரீ ரெங்கஸாமி சாஸ்திரிகளவர்களால், ஸ்ரீ ப்ரும்ம ஸூத்ரத்தில் "சதஸ் ஸுத்ரீ" என்று சொல்லக்கூடியதான அதாதோ ப்ரம் ஜிஜ்ஞாஸா என்று ஆரம்பித்து முதல் நான்கு ஸூத்ரங்களுக்கு ஸ்ரீ பரமா சாரி யர் பாஷ்யார்த்தத்துடனும், விஷயம், ஸம்சயம், பூர்வபக்ஷம், சித்தாந்தம், ஸங் கதி, முதலிய ஐந்து வீதமான அதிகரண ங்களுடனும், அதிக கோட்பாடுகளுடனும், பூர்வ பீடிகையாக அ த ப் த் தி ற் கு லாதன சதுஷ்டய ஸம்பத்து அடைந்த பிறகு என்னும், ஷெ. காரணங்களினுல் ப்ரும்ம தத்வத்தை அறிய ப்ருஹதாண்யத் தில் சொல்லியிருக்கிறபடி

"த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்ய: மந்தவ்ய: நிதித்யாஸிதவ்ய:

இத்யாதி நிரமப்படிக்கு யத்னிக்க வேண்டும் என்றும், அத்வைத மத தத்வ ஸாரத்தையும், அதேக ஆக்ஷேப ஸமாதா னங்களுடனும் அருமை விஷயமாயிருந்த பேரதிலும், தெளிவாக எடுத்துச் சொல்லியும், தன்னுலியற்றப்பட்ட 'ப்ரும்ம சூத்ரத்தை 300 ச்லோகங்களால் பாஷ் யக்காருடைய தாத்பர்யங்களுள்பட ஒருங்கே ஜோடித்திருக்கிற க்ரந்தத்தில்" [இன்னும் அச்சுப்போடவில்லே] சிலவற்றை ஸபையோர்களுக்கு அறிமுகப்படுத்தியும் பேசினர்.

27—11—39 திங்கட்கிழமை தினம் ஷெ. ஸபையின் ஆதரவில் சேங்காலிபுரம் வைதிக தர்மரக்ஷக ப்ரும்மஸ்ரீ அனந்தரும தீக்ஷிதர் அவர்கள், நமது வைதிக மதத்தின் பெருமையையும், ராமகிருஷ்ணஜி அவதா ரங்களின் தத்வங்களேயும் ஸுகப்ரதமான தர்மரக்ஷணத்தின் ஆவச்யகத்தையும், அதற்கு ஸகல வேத சாஸ்த்ரார்த்தங்களும் நிரம்பிக்கிடக்கிறதான ஸ்ரீமத் பாகவதநி திரந்தங்களின் பரிசீலனமும், அல்லது கதா ச்ரவணமுமே நாம் கடைத்தேற முக்கிய ஸாதனமென்றும் ஸ்ரீ கிருஷ்ண பகவான் வைகுண்டம் போகிறதற்கு முந்தி உத்தவ, மைத்ரேயர்களுக்கு சொன்னதான 'ப்ருது யயாதி 24 குருக்களிடம் தெரிந்துகொண் டது முதலான உபதேச ஸாரத்தையும், அவச்யம் ஸத்ஸங்கம் நாடி பகவத் குணங் களேக் கேட்டு மனம் உருகவேண்டும் என் றும் வெகு அழகாக சொன்னர். ந-தி

215309

ஹிமாலயம், திபேத், நேபால்
கஸ்தூரி, சிலாஜிட், குங்குமப்பூ

(சுத்தமானதென்றும், கலப்பற்றதென்றும் உத்திரவாதம் செய்கிறோம்).

கஸ்தூரி	ஒரு தோலா.	ரூ 25—0—0
சிலாஜிட் (புடமிட்டது)	,,	ரூ 1—0—0
குங்குமப்பூ (கேசர்)	,,	ரூ 2—8—0.

(ஒரு தோலா என்பது ஒரு ரூபாய் எடையாகும்) எற்படும் தபால் சார்ஜ்—பாக்கிங் சார்ஜ் தனியாக உண்டு. கடிதப்போக்குவரத்து ஹிந்தியிலாவது, ஆங்கிலத்திலாவது நடத்தவும்.

கிடைக்குமிடம்:— PREM LAL SHAH GANGOLA,
ALMORA (Himalayas) U. P.

நமது மதம்.

(ஸ்ரீ எல். சுப்பிரமணிய சாஸ்திரிகள் வீணை வித்வான்)

(முன்வார தொடர்ச்சி.)

இவ்வேத விஷயமாய் ஜர்மன் பண்டிதர் "மேக்ஸ் மில்லர்" ஃரீக் பண்டிதர் "பார்த்" மற்றும் "அரிஸ்டாடல்" பிரஞ்சு பண்டிதர் முதலியவர்கள், வேதம் எக்காலத்தி லுண்டானதென்று மிக மிகச் சர்ச்சை செய்து ஒரு கால நிர்ணயமும் கண்டுபிடிக்க முடியாமல் திணறித்திணறிக் கால நிர்ணயம் கூறமுடியாத விஷயமென்று தீர்மானித்து விட்டார்கள். ஆகவே வேதம் அனுதியென்றும் ஈஸ்வரனுடைய ஆக்ஞா ரூபமென்றும் முடிவு. ஆகவே. ஸனாதன தர்மங்களே அறிவிக்கின்ற ஸனாதனமாகிய வேதம் ஸனாதனனுகிய ஈஸ்வரனுடைய ஆக்ஞாரூபமென்றே ப்ரமஸித்தாந்தம். பிரமாண புத்தியுள்ளவனுல் இதைப் புரட்டிப் பேசமுடியாத காரியம்.

நீட்டு என்பது, மங்கள பூர்வகமாய் விதிக்கப்படும் ஈச்வராராதனை முதலிய மஹா பரிசுத்தமான சுப கார்யங்களுக்கு எவ்வித யோக்யதை யில்லாத சரீரத்தின் ஓர் வகை "அசுத்தி." இத்தீட்டு தாத்காலிகமாகவும், நாள் கணக்காகவும், பிறவிமுதல் ஜன்மாந்தரியமாகவும் எற்பட்டிருக்கிறது. அதில் ஸ்திரீ ஜாதிக்கு "மாதவிடாய்" என்று மூன்று நாட்கள் தீட்டு, இத்தீட்டு எந்த ஜாதியாருக்கும் எந்த மதத்தினருக்கும் நாஸ்திக பதார்களுக்கும் உண்டென்பதை மறுக்க முடியாது. நாஸ்திகர் இத்தீட்டு இல்லையென்று பிதற்றினுலும் அவரவர் மனைவியர்கள் மனமாகஒப்புக்கொள்ள மாட்டார்கள். ஆனல் அதை அனுஷ்டிக்கும் முறை வேறு வேருக இருந்து வருகிறது.

மற்றும் ஜனன மரண காரணமாக எற்படும் தீட்டு. பஞ்சமர்களுக்கு ஜன்மாந்தியம் தீட்டு. என்று எற்பட்டிருக்கின்றது. இதற்குத்திருஷ்டாந்தம் எதுபோல வென்றல் மனித வர்க்கத்தில் கண், செவி, முதலிய அங்கங்களுக்கு எற்படும் நோய்கள் தாத்காலிகமாகவும், நாள் கணக்காகவும், பிறவி முதல் ஜன்மாந்தியம் வரை எற்படக்கூடிய தாக அனுபவத்தில் காண்கிறோம். இது அவரவர்கள் பூர்வ ஜன்ம பாப கர்மத்தால் எற்படக்கூடியதென்று சாஸ்திர முடிவு. எற்பட்டதென்ற அசுத்தியும் அவ்விதமே. உதாரணமாக கண் நோய் தாத்காலிகமாகவும் நாள் கணக்காகவும், எற்பட்டால் நல்ல மருந்துகளால் நிவிருத்தியடையலாம். பிற விக்ருடனுக்கு எப்படி நிவிருத்தியாவது? ஈசுவரானுக்ரஹத்தால் மாத்ரம் நிவிருத்தியடையலாம்.

மேற்கூறிய தீட்டுள்ளவர்கள் பரிசுத்தமான வஸ்துக்களே ஸ்பர்சிக்கவோ, ஆலயப் பிரவேசம் முதலான கார்யங்களேச் செய்யவோ, கூடாதென்று விதியிருக்கின்றது. முழு நாஸ்திகர்களுக்கு இவைகளேப்பற்றி கவலையே கிடையாது. ஏனென்றல் "யஸ்ய நாஸ்திஸ்வயம் க்ருத: ப்ரத்யக்ஷம் தஸ்ய கரோதிகிம்" எவனுக்கு ஸ்வயமான அறிவு இல்லையோ சாஸ்த்ரம் என்ன பண்ணும். லோசனப்யாம் விஹீனஸ்ய தர்ப்பண: கிம் கரிஷ்யதி" உதாரணமாக ஸ்வயமாக கண்களில்லாதவனுக்கு கண்ணடி என்ன பண்ணும்?

தற்காலகுதர்க்கவாதிகளுக்கு வேதமென்றல் பிடிக்கவில்லே. "ஆர்யம்" என்ற சொல்லேக் கேட்டதும் மிரளுகிறார்கள். "ஆர்ய" என்ற பதத்திற்கு என்ன அர்த்தம்? ஆர்யர் என்பவர் யார். இந்தியாவிலே இருந்தார்களா. அல்லது இந்தியாவிற்கு வெளியேயிருந்து வந்தார்களா என்பதை கொஞ்சமும் உணராமல் உளறுகின்றனர். இவர்களுக்கு உண்மையைச் சொன்னலும் அதிகமாக மிரளுகின்றனர். பொட்டைக்குதிரைகளுக்கு செட்டை நீவட்டிகள் போட்டால் தானென்ன? மிரண்டு விடும். தவிரவும் அருகிலுள்ளவர்களே கடித்தும், மிதித்தும், உதைத்தும், விடுகின்றது. இவர்களுக்கு விஷயம் புரியாவிட்டாலும் ஆஸ்திகர்களின் ஞாபகத்துக்கு வரவேண்டுமென்று விளக்குகிறேன்.

ஆர்யர் என்ற சொல்லுக்கு பூஜிக்கத்தகுந்தவர், மேலானவர்என்பதபதப்பொருள். இந்த ஆர்யன் என்ற பதத்திற்கு ஈசுவரன் என்று பொருள். ஜகன்மாதாவாகிய ஈசுவரிக்கும் "ஆர்யா" என்று பொருள். சூரியனுக்கும் "ஆர்யன்" அர்யமா" என்று பிரயோகம் வேதத்திலிருக்கின்றது. இவ்வுலகில் ஆர்யர் எனப்படுவோர் மூவர்ணத்தார் அதாவது, பிரம்ம, க்ஷத்ரிய, வைசியர் என்பவர். ஆர்யரெனப்படுவார்கள். இவர்கள் இப்பரத கண்டத்திலேயே (இந்தியாவிலேயே) வசித்து வந்தவர்கள். ராஜ்ய தந்திரத்திற்காக மாற்றப்பட்டதற்கால ஸ்கூல் பாடங்களேப்படித்து, ஆசியாவிலிருந்தும், திபேத்திலிருந்தும் இங்கு குடிவந்தார்களென்று உளறுவது "என் தாயார் மலடி" என்றது போலிருக்கின்றது. சுமார் இரண்டாயிரம் வருஷங்களுக்குமுன் இந்தியாவில் பிரஸித்தமான "அமரஸிம்ஹன்" என்ற நிகண்டு செய்தவன் "ஆர்யா வர்த்த: புண்ய பூமி: மத்யம் விந்த்யஹிமாசயோ:" என்று கூறியிருக்கிறன், இவனே ஜைன மதத்தை சேர்ந்தவன். நிஷ்பக்ஷபாதமாகக்கூறியிருக்கிறன். "ஆர்யா வர்த்தம்" என்ற புண்ய பூமியானது, இமயமலேக்கும் விந்தியமலேக்கும் நடுவிலுள்ள பூமி என்ற சொல்லு பரம்பரை பரஸித்தமாயிருக்கின்றது. அதாவது இந்தியாவின் மத்ய பாகம் ஆர்யர்களால் சுற்றிலும் விசேஷமாய் சஞ்சரிக்கும் தேசமென்று பொருள். மற்ற பாகங்களில் கொஞ்சமாயும் மேற்கூறிய இடத்தில் விசேஷமாயும் ஆர்யர்கள் வசித்து வருகின்றனர் என்றபொருள். உதாஹரணமாக ஒரு காட்டில் ஏராளமாக மான்கள் ஸஞ்சரிக்கின்றன என்றல் மற்ற காட்டில் மான்களே இல்லே யென்று அர்த்தமா? அந்தக்காட்டில் விசேஷமாயிருந்தால், இந்தக் காட்டில் கொஞ்சமாயிருக்கின்றனவென்றர்த்தம்.பண்டையகாலம்முதல் (க்ருதயுகம் முதல்,) நம் பரதகண்டத்தில் 56 தேசத்து அரசர்களிருந்தார்கள். இப்போதும் அத்தேசங்கள் பிரஸித்தியாகவே இருந்துவருகின்றன. அதில் சேர, சோழ, பாண்டிய அரசர்களும் ஆர்யர்களல்லவா? அந்தந்த அரசர்கள் பிரம்ம, க்ஷத்ரிய, வைசிய, சூத்ரர்கள் எல்லாரையும் அன்புடன் பரிபாலித்து வந்ததாக, சரித்ர ஆராய்ச்சிக்காரர்கள் கூறுகின்றனர். இப்படி எல்லாருக்கும் அனுபவ பரம்பரையாய் அறிந்துவருகிறதை விட்டு, திபெத்திலிருந்தும், ஆசியாவிலிருந்தும் வந்து தமிழர்களே விரட்டினார்களென்று ஏன் மிரண்டு உளறவேண்டும்? ஆர்யம் என்ற பதத்தைக் கேட்டதும், தமிழரில் சிலர் மிரளுகின்றனர். ஆர்ய பாஷையாகிய வடமொழியின் இலக்கணத்தை "பாணினி மஹரிஷிக்கும், தென்மொழியின் இலக்கணத்தை அகஸ்திய மஹரிஷிக்கும் ஈஸ்வரன் உபதேசித்ததாக" ஸ்காந்தம் கூறுகின்றது. ஆகையால், வடமொழியும் தென்மொழியும் இரண்டு கண்கள் போல்வனவாகும். ஒரு கண்ணுக்கு நோய்வந்தால் மற்ற கண்ணுக்கும் வலி எற்படுமல்லவா? தவிரவும் இரண்டு கண்களும் ஒரே வஸ்துவை ஐக்யமாயிருந்து பார்க்கின்றதல்லவா? ஆகையால் ஒன்றை ஒன்று நிந்திப்பதற்கு காரணமே இடையாது.

(தொடரும்.)

Printed by S, Kalyanasundram the Sri Janardhana Printing Works, Ltd., Kumbakonam,
Published by A, Gopaladesikachariar and S. Kalyanasundram.

அனுப்புநர்:

T. 12. 1939

4 ன

24 48

215310.

215310

-3 JAN 1940 MADRAS

641

REGD No.M. 2913 ARYADHARMAM Estd. 1915
TAMIL WEEKLY

ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்ய: பரிபாலயந்தாம் ந்யாய்யேன மார்கேண மஹீம் மஹீசா: ।
கோப்ராஹ்மணேப்யஶுபமஸ்து நித்யம் லோகாஸமஸ்தாஸுகினோ பவந்து ॥

விளம்பர விஷயம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஹை கார்த்திகை-மீ 21 உ 1939 ஹை டிசம்பர்-மீ 7உ | ஸ-48

பட்டர் மரணத்தின் மர்மமென்ன?

மீனாக்ஷி கோவில் ஆலயபிரவேச எதிரொலி

வழக்கு போலீஸ் விசாரணைக்கு அனுப்பப்பட்டது.

சென்ற ஜூலை மாதத்தில் மதுரையில் ஆலயப்பிரவேசம் நடந்த பிறகு மதுரை கோவிலில் பூஜை செய்வதற்காக சொக்கலிங்க புரத்திலிருந்து ஸுப்ரமண்ய குருக்கள் வந்தார். மதுரை வந்த சில நாட்களுள் அவர் இறந்து விட்டார். இது ஸம்மந்தமாக இறந்தவரின் ஸஹோதரர் ஸ்ரீ மீனாக்ஷிசுந்தர பட்டர் மதுரை நகர மாஜிஸ்ட்ரேட்டிடம். மதுரை காங்கிரஸ்காரரும் ஆலயபிரவேச இளர்ச்சிக்காரருமான நியாகராஜசிவம் என்பவருக்கு எதிராக ஒரு வழக்கு கொடுத்தார். அதில், இறந்த பட்டர் ஸஹோதரர் பின்வருமாறு கூறுகிறார். இறந்த ஸஹோதரரின் பிரேதம் சொக்கலிங்கபுரத்தில் ஜூலை 14உ நியாகராஜ சிவத்தினால் கொடுக்கப்பட்டதென்றும். அப்பொழுது சிவம், அவருடைய ஸஹோதரரிடம் ஸுப்ரமண்ய குருக்கள் ஸ்பாவமாகவே இறந்ததாக சொன்னார் என்றும், ஆனால் தன்னுடைய ஸஹோதரர் எதிர்பாராத வகையில் மரணமடைந்ததாக தாம் கேழ்விப்படுவதாகவும் ஆகவே இது விஷயத்தில் விசாரணை நடக்க உத்திரவு இடவேண்டுமென்றும் பிராதில் கூறப்பட்டது.

ஸ்ரீ C. H. ராமக்ருஷ்ணர் நகர மாஜிஸ்ட்ரேட் பிராது கொடுத்தவரிடம் 29உ பிரமாண வாக்கு மூலம் வாங்கினர். அப்பொழுது மீனாக்ஷிசுந்தர பட்டர், தன்னுடைய ஸஹோதரரை யார் சொக்கலிங்கபுரமிருந்து மதுரை அழைத்தக்கொண்டுபோனதென்று தெரியாது என்றும், தன்னுடைய ஸஹோதரர் இறந்த நான்கு நாட்களுக்கு பிறகு நியாகராஜ சிவத்தை கேட்டதற்கு இறந்த குருக்கள் ஸ்பாவமாகவே மரணமடைந்ததாகக் கூறினரென்றும் கட்டந்த வியாழக் கிழமை எப்படியும் தான் மேலகோபுர வாசல் வீதியில் ஒரு கோயில் காரரை விசாரித்ததாகவும் அப்பொழுது அவருடைய ஸஹோதரர் ஆலயப்பிரவேசத்திற்காக பலியாக கொண்டுவரப்பட்டதாக சொல்லப்பட்டதாகவும், அதற்கு முன் தன்னுடைய ஸஹோதரர் மரணத்தைப்பற்றி தான் ஸந்தேஹித்ததில்லை என்றும் கூறினர்.

கோர்ட்டார் கேழ்விக்கு மீனாக்ஷிஸுந்தர பட்டர் பின்வருமாறு பதிலளித்தார். ஹோட்டலில் நடந்த ஸமாசாரங்களைக் கேட்டதும் நியாகராஜ சிவத்தை பார்க்க தான் விரும்பவில்லை என்றும் ஹோட்டலில் தன்னிடம் மேழி விஷயத்தை சொன்னவர் யாரென்று தெரியாதென்றும் சொன்னர்.

பிராதில் கண்ட விஷயங்கள் தப்பான தென்று வெளியானல் பிராதுகாரர் நஷ்டம் கொடுக்க நேரிடுமென்று பிராது காரரை மாஜிஸ்ட்ரேட் எச்சரித்தார்.

பிராது காரரின் வக்கீல் இதை ஒப்பினர். மாஜிஸ்டேட் பிராதை போலீஸுக்கு அனுப்பி விசாரணைக்கு உத்திர விட்டார்.

(ஹிந்து.)

ஹி. ஆர். நம்பிக்கை!

ஸமரஸம் ஏற்படுமாம்

மாஜி அவஸரச் சட்ட மந்திரியான ஸ்ரீமான் ஸி. ஆர். பம்பாயில் பொதுக் கூட்டத்தில் பேசுகையில் "பிரிட்டிஷ் கவர்மெண்டார் காங்கிரஸ் கோரிக்கைகளைப் பற்றி யோஜித்து வருவதாகவும், அடியோடு நிராகரித்து விடவில்லையென்றும், ஆதலால் தாங்களும் பிரிட்டனுடன் பூர்ண மாக ஒத்துழைத்து ஸமரஸம் செய்து கொள்ள விரும்புவதாகவும், குறிப்பிட்டார்.

"அரியல் நிர்ணய ஸபையை இப்போதே கூட்டவேண்டியதில்லை யுத்தம் முடிந்த பின் கூட்டுவதாக ஒப்புக் கொண்டாலே போதும்"

என்றும் அவர் நிபந்தனை கூறினர்.

ஸர்க்கார் மாவிகை முன் ஸத்தியாக்ரஹம் செய்வோம்

ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்க"

வைஸ்ராய்க்கு அவஸர வேண்டுகோள்

மதுரை ஜனதிபதியும், சிறந்த பிரசாரகரு மாகிய ஸ்ரீமான் ஆர். ஆனந்தராவ் வைஸ்ராய்க்கு ஓர் அவஸர விண்ணம் அனுப்பியுள்ளார்.

ஆலயபிரவேச சட்டமானது ஹிந்து மத உணர்ச்சிக்கு கேடு விளைப்பதாயும், நடுநிலைமை வாக்குறுதிக்கு விரோதமானதென்றும், மதங்களுக்கு பாதுகாப்பளிப்பது வைஸ்ராய் கடமையென்றும், ஆதலால், 2 மாத காலத்திற்குள் ஆலயப் பிரவேச சட்டத்தை ரத்து செய்யா விட்டால் தாமும், வேறுபலரும் சேர்ந்து சென்னை கவர்னர் வீட்டு வாசலிலும், வேறு பலவிடங்களிலும்ஸத்தியாக்ரஹத்தை ஆரம்பிக்கப் போவதாயும் குறிப்பிட்டிருக்கிறார். (ரு. நி.)

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆதாரவண்டங்களையும் சங்கிரகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி: பி. பிரத்யேகம்)
கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,
தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை
&
ஸ்ரீ ஜனர்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்

மாகாண வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்க மாகாநாடு

ஸம்மேளனம் சிதம்பரத்தில் கூடும்

சென்னை மாகாண வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க சம்மேளனம் டிசம்பர்மீ கடைசி வாரத்தில் சிதம்பரத்தில் நடைபெற வேண்டிய ஏற்பாடுகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. தென்னாற்காடு ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத் தலைவரான பிரம்மஶ்ரீ டி. ஈ. சடகோபாசாரியார், ஹை கோர்ட்டு வக்கீல், மிஷி சங்கக் காரிய தரிசி ஶ்ரீமான் கே. ராஜா பாலசுப்ரமணிய ஐடா வல்லபர், பண்டிட் விஜயராகவாசாரியார் கூடலூர் வக்கீல்கள் ஶ்ரீமான்கள் எ. டி. கிருஷ்ணசாமி அய்யர், ரகுபதி சாஸ்திரிகள், முதலானோர்களும், சிதம்பரம் ஶ்ரீ நடராஜர் கோயில் பொது தீக்ஷதர்கள் மற்றும், ஶ்ரீமான்கள் வெங்கிட சுப்ரமணிய தீக்ஷதர், எஸ். எஸ். வெங்கடேச தீக்ஷதர், முதலானோர்களும், அநேக பிராமணரல்லாத நண்பர்களும், மிஷி ஏற்பாடுகளில் உற்சாகத்துடன் கலந்து கொண்டிருப்பதானது குறிப்பிடத் தக்கது. மிஷி மகாநாட்டிற்கு நமது அரும் பெரும் தலைவர்களான ஶ்ரீமான்கள் கடேசய்யர், கே. ஆர். வெங்ட்டரமய்யர், டி. எஸ். ராமசாமி அய்யர், சக்திவேல் பிள்ளை, கோவிந்ததாஸ் சதுர்புதாஸ், வி. வி. ஶ்ரீனிவாச அய்யங்கார், எஸ். லெக்ஷ்மிநரசிம்மாசார்யர், எஸ். இ. சங்கர அய்யர், வி. எம். பிரசாதராவ், ஹரிதாஸ் கிர்தரதாஸ், என். சுப்ரமணிய அய்யர், Editor, Indian Thinker, கொல்லங்கோடு ராஜா, சேலம் அட்வகேட் ஜி. கே. சேஷ அய்யர், முதலானோர்களும், இன்னும் இந்த ராஜதானியிலுள்ள எல்லா ஆஸ்திக, இதர மகாஜனங்களும் விஜயம் செய்வார்களென்றும், மகாநாட்டு வரவேற்புக் கமிட்டியார் இங்கு எநிர் நோக்கிய வண்ணமயாய் இருக்கிறார்கள். மகாநாட்டை நடத்த வேண்டிய சம்மதத்தையும் ஶ்ரீமான் ராவ்சாகேப் நடேசய்யரிடமிருந்து காரியதரிசி பெற்றுவிட்டதாகவும், ஹிமாசலம் பதரிகாஸ்ரமம் ஜோதிர்மடம் ஸ்வாமிகள மிஷி மகாநாட்டிற்குத் தலைமை வஹிக்கக்கூடுமெனவும், கோவிந்ததாஸ்சதுர் புஜதாஸ் புருஷோத்தம தாஸ் கோகுல்தாஸ் மகாநாட்டைத் திறந்து வைக்கப்போவதாகவும் பேசிக்கொள்ளப்படுகிறது. இம்மகாண ஆஸ்திகர்கள் யாவரும் மிஷமகாநாட்டிற்குவிஜயம் செய்து மகாநாட்டை சிறப்பிப்பதுடன் நமது இயக்கத்தையும் இன்னும் பலப்படுத்த முன் வரவேண்டுமென்று இச்சிலல்லா வாசிகள் வேண்டிக்கொள்கிறார்கள். (க. கி.)

கிர்வாணவாணீ பரிஷத்

பழுவூர்

26—11—39 ஞாயிறு மாலை 2-30மணிக்கு மேலேகண்ட பரிஷத்தின் கூட்டம் நடந்தது.

அம்மாள் அக்ரஹாரம் ஸாமவேத வித்வான் பிரம்மஶ்ரீ ஸ்வாமி சாஸ்திரிகள் அவர்கள் தலைமைவகித்தார்கள்.

திருச்சி ஜோஸப்காலேஜ் ஸம்ஸ்கிருத பண்டிதர் நியாயமீமாம்ஸா சிரோமணி பிரம்மஶ்ரீ ஶ்ரீநிவாச சாஸ்திரிகள். "காளிதாஸஸ்" எனற விஷயம் பற்றி ஸம்ஸ்கிருத

அ. இ. வ. ஸ். ஸங்கம்

நமது மாகாணத்தில் ஆங்காங்கு தற்போது ஏற்படுத்தப்பட்டு நடைபெற்று வரும் "சனாதந தர்ம ஸபை" ஆலயப்பிரவேச எதிர்ப்புச் சங்கங்கள், "ஆஸ்திகர்ஸபா" முதலான ஸங்கங்களே யெல்லாம் ஒற்றுமையையும், அபிவிருத்தியையும் உத்தேசித்து, ஒரே பெயரால் அதாவது "வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கம்" பெயரால், "அகில இந்திய வர்ணச்ரம ஸ்வராஜ்ய" கிளைச் சபைகளாக்கி மிஷி அகில இந்தியா சபையோடு தாமத மன்னியில் இணைக்க ஏற்பாடு செய்யும் படியும், மேலும், மிஷி வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தை ஒவ்வொர் நகரங்களிலும், கிராமங்களிலும், சீக்கிரத்தில் ஏற்படுத்தி வேலை செய்து வரவேண்டுவதுஆஸ்திகர்களின் ஒத்துழைப்பால் தான் நடக்க வேண்டு மென்றும், இம்மாதிரி இனைச்சபைகளே தோற்றுவித்தல், முதலிய, சிறிய காரியங்களுக்கு முதற் கொண்டு, நாம் நமது உலக பெரியாரான ஜகத்குரு ஶ்ரீ ஆச்சாரியார் ஸ்வாமிகளே யோ, அல்லது நமது உலக உத்தமராகவும், பிராமண—ஆஸ்திக நிலகமாகவும் விளங்கிவரும் பிரம்மஶ்ரீ நடேசய்யரையோ இது விஷயத்தில் எநிர்பார்க்கக் கூடாதென்றும், ஆகையால் ஆங்காங்கு ஒவ்வொரு இடங்களிலும், இருக்கும் ஆஸ்திகர்கள் அவ்வவ்விடங்களிலும் ஒவ்வோர் "அகில இந்திய வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்க" கிளைச் சபைகளை வெகு தீக்கிரத்தில் தோற்றுவித்து மிஷி சபைகளின் விவரங்களை நமது ஜகத்குரு ஶ்ரீ ஆச்சார்ய ஸ்வாமிகளுக்கும், பிரம்மஶ்ரீ நடேசய்யருக்கும், தெரிவிக்கும்படி, "தென்னாற்காடு ஜில்லா வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்க"த்தின் அங்கத்தினர்கள் நமது மாகாண ஆஸ்திகர்களைக் கேட்டுக்கொள்வதானது குறிப்பிடத் தக்கது. நமது மாகாண ஆஸ்திகர்கள் மிஷி ஒரே பெயருள்ள சங்கத்தின் கிளைச் சபைகளே ஏற்படுத்தி, அது விஷயமாக அவைகளின் நடவடிக்கைகளை, நமது "ஆர்ய தர்மம்" பத்திரிகை வாயிலாகவும் இதரர்களுக்கும் தெரிவிக்கக்கூடும்.

ஒரே பெயர் கொண்டு அதனுடன் இணைக்கப்பெற்ற கிளைச் சபைகள் அடங்கிய, அ. இ. வ. ஸ்வராஜிய சங்கத்தின் பலம் எவ்விதம் இன்னும் அதிகமாகும் என்பதை நாம் அதிகம் கூறத்தேவையில்லை. அகில இந்திய வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் விவரமான வரவாறு, வேலைகள், கடைசி வருஷாந்திர ரிபோர்ட்டு, முதலானவைகளை "ஆர்யதர்மம்" பத்திராதிபர் இத்துடன் பிரசுரம் செய்து, ஒரே கொள்கை, ஒரே பெயருடைய, மிஷி கிளைச் சபைகளை ஆங்காங்கு தோற்று விக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியும் எடுத்துரைப்பார் என எல்லோரும்இங்கு எநிர்பார்த்து வருவதாகவும், அ.கிறோம்,

(க.கி.)

தில் மிக லலிதமான நடையில் அழகாக உபன்யாஸம் செய்தார்கள். பல கனதனவான்கள் விஜயம் செய்திருந்தார்கள். பிறகு வந்தனோபசாரத்துடன் ஸபை இனிது கலைந்தது. வரப்போகிற 10—12—39 ஞாயிறு அன்று முத்தரசனல்லூரில் கூட்டத்தை நடத்த தீர்மானிக்கப்பட்டது.

எஸ். வி. சுப்ரமணிய சாஸ்திரிகள்.
அத்யக்ஷர்.

ஶ்ரீ காஞ்சீபுரத்தில் ஶ்ரீ நம்பிள்ளை வந்தித்து திருப்பரிஷ்டை

ஶ்ரீவைஷ்ணவ ஸம்ப்ரதாய பரமாசார்யர்களில் ஶ்ரீராமநுஜருக்கு (உடையவர்) நான்காவது ஆசார்ய பீடத்தை அலங்கரிப்பவரான நம்பிள்ளை என்னும் ஆசார்ய சிகாமணியின் வைபவம் ஜகத் பிரஸித்தமானது. பகவத் விஷய வியாக்யானங்களுக்கு இவ்வாசார்யரே மூல புருஷர். ஶ்ரீரங்கத்தில் ஶ்ரீரங்கநாதன் ஸந்நிதிக்குள்ளே நம்பிள்ளை கோஷ்டி என்று நாளைக்கும் கொண்டாடப்பட்டு வருவது பிரஸித்தம். "நம்பிள்ளை கோஷ்டியே" நம்பெருமாள் கோஷ்டியோ என்று இரண்டு கோஷ்டிகளையும் சேர்த்தே அநுஸந்திப்பது வழக்கம். நம்பிள்ளை கோஷ்டிக்கு மஹிமை உண்டாக்க வேண்டி செல்வர் புறப்பாடு ஶ்ரீரங்கத்தில் நிறுத்தப்பட்டது. அந்த அநுஷ்டானம் நாளைக்கும் ஶ்ரீரங்கத்தில் உண்டு. இவ்வாசார்யரிடத்தில் ஆயிரக்கணக்கான மஹான்கள் சிஷ்யர்களாக இருந்து பிரஸித்தி பெற்றார்களென்றும், வடக்கு திருவீதிப்பிள்ளை பெரிய வாச்சான் பிள்ளை என்கிற மஹான்கள் மட்டுமே அந்தரங்க சிஷ்யர்களாய் இருந்து சூர்யசந்திரர்கள் போன்று விளங்கினர்கள் அவர்கள் அருளிய திவ்யப் பிரபந்த வியாக்யானங்களே உலகில் மேம்பட்டும் பொன்னே போல் போற்றப்பட்டும் விளங்கி வருகின்றன. இவ்விரண்டு ஆசார்யர்களோடும் நம்பிள்ளையென்கிற மஹாசார்யரோடு கூட சின்ன காஞ்சீபுரம் வரதராஜ ஸ்வாமி ஸந்நிதி அடிவாரத்தில் ஓர் ஆலயம் நிர்மாணம் செய்யப்பட்டு சென்ற 20—11—39 முதல் 23—11—39 வரையில் திருப்பரிஷ்டையும் வெகுசிறப்பாக நடந்தேறியது. இவ்வாலய நிர்மாண விஷயமாகவும். திருப்பரிஷ்டை விஷயமாகவும் நம் ஶ்ரீவைஷ்ணவ ஆசார்ய சிகாமணியாய் உலகம் புகழும் ஶ்ரீ காஞ்சீ பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசார்ய ஸ்வாமிகள் எடுத்துக்கொண்ட பெரு முயற்சியானது ஶ்ரீவைஷ்ணவரிகளின் பாக்யமென்று சொல்லலாமத்தனே போக்கி வேறு மன மொழிகளால் நினைக்கவும் சொல்லவு மரிது. இக்கைங்கர்ய விஷயத்தில் மனமுவந்து பெரும் பொருளுதவி செய்து ஆதரித்த ஶ்ரீமான் ஜார. ஶ்ரீராமுலு செட்டியாரவர்களுக்கு ஶ்ரீவைஷ்ணவ உலகம் நன்றி செலுத்த கடமைப் பட்டுள்ளது. திருப்பரிஷ்டையன்று ஸகல திவ்ய தேசங்களிலிருந்தும் அத்யாபக வேதபாராயண ஸ்வாமிகளும் பலபல வித்வான்களும் எழுந்தருளி கோஷ்டிகளே அலங்கரித்தனர். "காஞ்சி முதலாயிய நன்னகரி யெல்லாம் நம் காஞ்சீ நம்பிள்ளை கோஷ்டிக்கொவ்வா" என்று சொல்லும்படி மிகவே கோஷ்டி யிருந்தது.

ஶ்ரீரங்கம், திருமலை திருப்பதி, திருநாராயணபுரம், திருவல்லிக்கேணி, ஆழ்வார்திருநகரி, ஶ்ரீபெரும்பூதூர் முதலான ஸகல திவ்ய தேசத் தெம்பெருமான்களிடமிருந்து நம்பிள்ளைக்கு பஹுமானங்கள் வந்தன. ஸம்ப்ரோக்ஷண தினத்தில் திருவெஃகா ஶ்ரீ யதோக்தகாரியெம்பெருமான் நம்பிள்ளை ஸந்நிதிக்கு எழுந்தருளி ஸேவை சாதித்த வைபவம் வாசாமகோசரம். கார்த்திகைமீ கார்த்திகை நக்ஷத்திரத்தன்று ஶ்ரீ நம்பிள்ளை திருநக்ஷத்திரமானதால் திருப்பரிஷ்டைக்கு அடுத்தபடி மூன்றாள் ஶ்ரீ நம்பிள்ளைக்கு மஹோத்ஸவம் அதி விமர்சையாய் நடந்தேறியது. பெரிய திவி தேசத்திலுள்ள இந்த ஸந்நிதி மேன்மேலும் அபிவிருத்தியடையும் படி பாகவதர்கள் மங்களாசாஸனம் செய்தருள வேணுமென மைலாப்பூர், ஸ்கூல் டீசர், எ. கிருஷ்ணசாமி ஐயங்கார் எழுதுகிறார்.

உ

ஶ்ரீ காமாக்ஷ்யை நமः

மூகபஞ்சசதி.

மந்தஸ்மித சதகம்.

80. காமாக்ஷ்யா ம்ருதுலஸ்மிதாம்சு நிகராः தாக்ஷாந்த [தகே வீக்ஷணே |
மந்தாக்ஷக்ரஹிலா ஹிமத்யுகி மயூகாகேஷபதீக்ஷாங் [குராः |
தாக்ஷ்யம் பக்ஷ்மளயந்து மாகஷிகுடத்ராகஷபலம் [வாக்ஷுமே |
வஷ்யக்ஷமம் மோக்ஷபதம் நிரீக்ஷிதுமபி ப்ரக்ஷாள [யேர்மதः |

தாக்ஷாந்தகே - தக்ஷசத்ருவான. பரமசிவனுடைய, வீக்ஷணே - பார்வை ஏற்படும்போது, மந்தாக்ஷக்ரஹிளாः - வெட்கத்தை அடையக்கூடியவைகளாயும், ஹிமத்யுங்மயூகாகேஷபதீக்ஷாங்குராः - சந்திரனுடைய காந்தியைப் பழிப்பதில் தீக்ஷைகொண்டவைகளுமான, காமாக்ஷ்யாः - காமாக்ஷியினுடைய, ம்ருதுலஸ்மிதாம்சுகிகராः - மனோக்ஞமான புன்சிரிப்புக்காந்தியின் கூட்டங்கள், மே - எனது, வாக்ஷு - வாக்குகளில், மாக்ஷிககுடத்ராக்ஷாபலம் - தேன், வெல்லம், நிராசைஷ இவைகளிலிருந்து உண்டாகக்கூடிய தாக்ஷ்யம் - இனிப்பை, பக்ஷ்மளயந்து - அதிகரிக்கச்செய்யட்டும், அபி - மேலும், ஸுக்ஷ்மம் - ஸூக்ஷ்மமான, மோக்ஷபதம் - மோக்ஷமார்க்கத்தை, நிரீக்ஷிதுமபி - பார்ப்பதற்குக்கூட, மனः - மனதை, ப்ரக்ஷாளயேத் - சுத்தப்படுத்தவேண்டும்.

81 ஜாத்யா சீதளசீதளாதி மதுராண்யேதாதி பூதாதி [தே |
காங்கராதீவ பயாம்ஸி தேவி! படலாந்யல்பஸ்மித [ஜ்யோதிஷாம் |
ஏனः பங்கபரம்பரா மலினீதாம் ஏகாம்ரநாதப்ரியே! [யந்து க்ஷணாத்
ஶ்ரீ காமாக்ஷி! பரம் மதீய திஷணாம் ப்ரக்ஷாள

ஏகாம்ரநாதப்ரியே! ஏகாம்பரேச்வர பத்னியும், தேவி! விளங்குகிறவளுமான, ஶ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே, காங்காரி பயாம்ஸி இவ - கங்கை ஜலம்போல், ஜாத்யா - ஸ்வபாவத்தினாலே, சீதளசீதளாதி - மிகவும் குளிர்த்தலைகளும், மதுராணி - இனியதுகளாயும், பூதாதி - பரிசுத்தமானவைகளாயுமுள்ள, எதாநி - இந்த, தே - உன்னுடைய, அல்பஸ்மித்ஜ்யோதிஷாம் - மந்தஹாஸ்மிதங்களுடைய, படலாநி - ஸமூகங்கள், ஏனः பங்கபரம்பராம் - பாபஸமூகமாகிற சேற்றால் அழுக்கடைந்துள்ள, மலினீதாம் - பரபஸமூகமாகிற சேற்றால் அழுக்கடைந்துள்ள, மதீய திஷணாம் - எனது மனதை, க்ஷணாத் - சீக்கிரத்தில், பரம் - கன்முக, ப்ரக்ஷாளயந்து - பரிசுத்தப்படுத்தட்டும்.

82. ஶ்ரீ காமாக்ஷி! பவப்ரியே! ம்ருதுவசஸ் ஹௌள [ரப்ய முத்ராஸ்பதம் |
ப்ரௌடப்ரேமலதா நவீனகுஸுமம் மந்தஸ்மி [தம் தாவகம் |
மந்தம் கந்தளதி ப்ரியஸ்ய வதனு லோகே ஸமா [பாஷணே |
ச்லக்ஷ்ணே குட்மலதி ப்ரரூட புளகே சாச்லே [ஷணே புல்லதி

பவப்ரியே - சிவபத்னியான, காமாக்ஷி - காமாக்ஷியே, ம்ருதுவசஸ்ஸௌரப்யமுத்ராஸ்பதம் - ம்ருதுவான வார்த்தையில் வாசனைக்கு இருப்பிடமாயும், ப்ரௌடப்ரேமலதா நவீனகுஸுமம் - உயர்ந்த அன்பாக கொடியின் புதிய புஷ்பமாயுமுள்ள, தாவகம் - உனது, மந்தஸ்மிதம் - புன்சிரிப்பானது, ப்ரியஸ்ய - பர்த்தாவினுடைய, வதனுலோகே - முகத்தைப் பார்க்கும்போது, மந்தம் - மெதுவாக, கந்தளதி - அங்குரிக்கிறது. ச்லக்ஷ்ணே - ஸமாபாஷணே - மனோஹரமான பேச்சு ஆரம்பிக்கும்போது, குட்மலதி - மொட்டுவிடுகிறது, ப்ரரூடபுளகே - மயிர் கூச்சல் மேலிட்ட, ஆச்லேஷணேஷதி - ஆலிங்கனம் நேரும்போது, புல்லானிச - மலர்ந்துவிடுகின்றன.

83. கிம் த்ரைஸ்ரோதலமம்பிகே பரிணதம் ஸ்ரோ [தச்சதுர்த்தம் நவம் |
பீயூஷஸ்ய வமஸ்த தாபஹரணம் கிம்வா த்விதீ [யம் வபுः |
கிம்ஸ்விந்நைகடிகம் கிரோ மதுரிமாப்யாவராய [நவ்யம் பயः |
காமாக்ஷி! ஸ்மர சாஸனப்ரியதமே மந்த ஸ்மிதம் தாவகம்!

அம்பிகே - தாயாராயும், ஸ்மரசாஸன ப்ரியதமே - மன்மத சத்ருவான பரமசிவபத்னியுமான, காமாக்ஷி! காமாக்ஷியே, தாவகம் - உனது, மந்தஸ்மிதம் - புன்சிரிப்பானது, நவம் - புதிதாக, பரிணதம் - ஏற்பட்ட, த்ரைஸ்ரோதஸம் - மூன்றுவழியில் பிரவஹிக்கும் கங்கையின், சதுர்த்தம் - நாலாவதான, ஸ்ரோதः கிம் - பிரவாஹமா என்ன? கிம் வா - அல்லது, ஸுதாதாபஹரணம் - ஸர்வதாபங்களையும் நிவர்த்தி செய்யக்கூடியதான, பீயூஷஸ்ய - அமிருதத்தினுடைய, த்விதீயம் வபுः - இரண்டாவது உருவமோ? கிம்ஸ்வித் - அல்லது, கிரः - உனது வாக்கின், மதுரிமாப்யாவராய - இனிமையைப் பழக்கிக்கொள்ளுவதற்காக, நைகடிகம் - தானாக ஏற்பட்ட, நவம் பயः - புதிய பாலோ?

84. பூஷா வக்த்ர வரோருஹஸ்ய வஹஜா வாசாம் [ஸகீ சார்வதி |
நீவீ விப்ரமஸந்ததேः பசுபதேः வைளதீ த்ருசாம் [பாரணு |
ஜீவாதுः மதனச்ரியः சிரிருசே ருச்சாடநீ [தேவதா |
ஶ்ரீ காமாக்ஷி! கிராமபூமிரயதே ஹாவப்ரபா [மஞ்ஜரீ

ஶ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே, வக்த்ரஸரோருஹஸ்ய - தாமரைப்பூபோன்ற முகத்திற்கு, ஸஹஜா - ஸ்வபாவமாக ஏற்பட்ட, பூஷா - அலங்காரமாயும், வாசாம் - வாக்குகளுக்கு, சார்வதீ - விட்டுப்பிரியாத, ஸகீ - தோழியாயும், விப்ரமஸந்ததேः - விலாஸங்களுக்கு, நீவீ - மத்யமஸ்தானமாயும், பசுபதேः - பரமசிவனின், த்ருசாம் - கண்களுக்கு, வைளதீபாரணு - அமிருதபரமாணுவாயும் மதனச்ரியः - மன்மதசோபைக்கு, ஜீவாதுः - உயிர்நாடியாயும் சிரிருசே - சந்திரகிரணத்திற்கு, உச்சாடநீதேவதா - தூரத்திலிற தேவதையாயுமிருக்கிற, ஹாவப்ரபாமஞ்ஜரீ - புன்சிரிப்புக்காந்திக் கூட்டமானது, கிராம் - வாக்குகளுக்கு, அபூமிம் - எட்டாத நிலைமையை, அயதே - அடைகிறது.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஹ கார்த்திகை-மீ 22உ

ஹிந்தி பிரசாரத்தில் விபரீத நோக்கம்!

நமது தேசத்தில் ஹிந்தி பாஷையின் பிரசாரம் வேகமாக அதிகரித்து வருவதைக் காண்கிறோம். இந்தியாவிற்கு, ஆங்கிலத்தைவிட வேறு ஒரு தேசிய பொதுபாஷை எற்படவேண்டுமென்ற உத்தேசத்துடனே ஹிந்தியின் பிரசாரம் ஆரம்பிக்கப்பட்டிருப்பதாக தலைவர்கள் சொல்லிவருகிறார்கள். சென்னையில் ஸ்ரீமான் வி. ராஜகோபாலாசாரியர் கட்டாய ஹிந்தியை எற்படுத்தம் காலையிலும் மேற்கண்ட ஸாதாரண காரணத்தையே குறிப்பிட்டார். இதை நம்பியே அனேகர் ஹிந்தியை அபிமானிக்கவும் படிக்கவும் முற்பட்டிருக்கிறார்கள்.

ஆயினும் ஹிந்தி பிரசாரத்திற்கு அபாய கரமான உள்நோக்கம் வேறு இருப்பதாக இதுவரையில் ஒருவரும் தெரிந்துகொள்ளவில்லை. சில தினங்களுக்கு முன் மங்களூரில் ஸ்ரீமான் கே. ஸந்தானம் எம். எல். ஏ. ஹிந்திபிரசாரத்தின் உண்மையான நோக்கத்தைப்பற்றி திடுக்கிடக்கூடிய அபிப்பிராயத்தை வெளியிட்டிருக்கிறார். இது பாரத தேசத்தின் உண்மையான பிரஜைகளுக்கு பெருத்த கலக்கத்தைக் கொடுக்கக்கூடியதாயிருக்கிறது. ஹிந்தி ஒரு பொது பாஷையாக இருக்கவேண்டுமென்ற எண்ணமிருக்கபோதிலும் அதன்மூலம் அவர் எதிர்பார்க்கும் உத்தேசம் வெகு அபாயமாயிருக்கிறது.

ஹிந்தி பேசுவதன்மூலம், ஹிந்துக்கள் கிறிஸ்தவர், மஹம்மதியர், என்ற எல்லா ஜாதி வகுப்பு பேதங்களும் அடியோடு மறைந்து யாவரும் "இந்தியர்" என்ற ஒரே வகுப்பினராக ஆகிவிடவேண்டுமென்றே ஹிந்தியின் பிரதானமான நோக்கமென்று அவர் கூறினர். அதாவது தனித்தனியான ஜாதிகளும், அவைகளின் நாகரிகாதிகளும் மறைந்து எல்லாம் ஒன்றுகிவிடவேணுமென்கிற கொள்கையுடனேயே ஹிந்தி பிரசாரம் நடப்பதாக அவர் சொன்னர். ஆகையால் ஜாதிகளையும், ஜாதிகுலதர்மங்களையும் அழிப்பதே அதன் நோக்கமென்பது தெளிவாகிறது.

காங்கிரஸ் ஸ்வராஜிகாரிகளுடன் கெருங்கிப் பழகிய ஸ்ரீமான் ஸந்தானம் கூறுவதே உயர்தர காங்கிரஸ் ஸ்தாபனத்தின் உள் நோக்கமாயிருக்குமென்பதில் ஸந்தேஹிக்க இடமில்லை. ஹிந்தி பிரசார வேலையின் போக்கும் இந்த நீதியிலேயே கடைபெற்று வருவதையும் கவனிக்கையில் ஸ்ரீ ஸந்தானத்தின் கூற்றை லகுவாகத் தள்ளிவிடமுடியாது. ஆனால் இத்தகைய விபரீத நோக்கத்துடன் செய்யப்படும் ஹிந்தி பிரசாரத்தை எல்லோரும் ஆதரிக்கவேண்டுமென்று கேட்க நியாயமென்ன? ஸ்ரீ ஸந்தானம் கூறிய உத்தேசத்தை ஒப்பாத கோடிக் கணக்கானவர்கள் ஹிந்தியை ஏன் ஆதரிக்கவேண்டுமோ? ஜாதிகுல தர்மங்களையும், நாகரிகத்தையும் அழிக்க ஹிந்தியை ஒரு ஸாதனமாக உபயோகிக்க விரும்பினால், அதன் பிரசாரத்தை எதிர்க்கவேண்டியவர்கள் எல்லா மதத்தினரிலும் ஏராளமாக இருக்கிறார்கள். சென்னையில் கட்டாய ஹிந்தியால் தமிழ்பாஷைக்கு ஆபத்து ஏற்படுமென்ற அச்சம் சிலருக்கு ஒருபுறமிருக்க, ஹிந்து ஸமூஹத்தின் நாகரிகாதிகளே அழிந்து போகவும், இடமிருப்பதாக இப்போது வெளியாகிறது. ஆதலால் ஜாதிகுல தர்ம நாசத்தை விரும்பாத ஜனங்கள்மீது பலாத்காரமாக ஹிந்தியைத் திணிக்க என்ன நியாயம்? ஹிந்தியை [எதிர்ப்பதே தார்மிகர்களின் கடமையாயிருக்குமல்லவா?

மேலும் ஜர்மனி, இடாலி முதலிய விடங்களில், தனிப்பட்ட மனிதனின் ஆட்சி நடப்பதாயும், அவனுடைய ஒரு புத்தியில் தோன்றும் யோஜனையையே ப்ரஜைகள் நிர்ப்பந்தமாக அனுசரிக்கவேண்டிய கொடுமை எற்பட்டிருப்பதாயும் காங்கிரஸ்காரர் கூட தோஷம் சொல்லிவருகிறார்கள். ஆனால் இந்த ஹிட்லர் முறையானது காங்கிலிலும் இருப்பதை மறைக்க முடியுமா? வார்தாவில் ஒருவர் தனது புத்தியாலுல் ஒன்றை நிர்ணயித்தால் உடனே தேச ஜனங்களீவரும் கண்மூடித்தனமாக அதைப் பின்பற்ற வேண்டுமென்ற முறை இப்போது அங்கிகரித்திருக்கிறது. ஜனங்கள் தங்கள் ஸொந்த, நன்மை தீமைகளை, நிச்சயித்துக் கொள்ளவோ, நீண்ட காலமாகவுள்ள விய வஸ்தைகளை அநுஸரித்து நடக்கவோ, இடமில்லாமல், வார்தாத்தலைவர்களோ, அவர்களது உயர்ந்த ஸ்தாபனமோ, உத்தரவு போடுவது விந்தையல்லவா? நமது ஜனஸமூஹமானது பகுத்தறிவற்ற ஆட்டுமந்தை என்றுவார்தாக்கூட்டம் நினைக்கிறதா? இந்த மாதிரி கேழ்வி முறையற்ற நிலைமையில் தேசத்தை ஒரு மனிதருடைய புத்திக்கு அடிமைப்படுத்தி, தேசத்தின் ஜீவகாடியான மதம், நாகரிகம், முதலியவை அழிந்துபோக உடந்தைப்படுவது பெரும்பாபமாகும். ஆதலால் ஹிந்தி பிரசாரம் போன்ற அபாய உள்நோக்கமுள்ள விஷயங்களிலிருந்து தேசத்தைக் காப்பாற்றப் பெருத்த முயற்சி எடுக்கவேண்டியது அவஸரமென நினைக்கிறோம்.

குறிப்புகள்.

காங்கிரஸை நம்பிய மிராசுதார்களின் கதி

சென்ற வருஷங்களைப் போலவே மீண்டும் 75 லக்ஷ ரூபாய் நிலவரி வஜா செய்யப் போவதாக சென்னை கவர்ன்மெண்டார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் அவர்கள் சாச்வத நிலவரிக் கொள்கையை பற்றியும் சிறிது பிரஸ்தாபித்து மாஜி மந்திரி ஸபை இவ்விஷயமாக முடிவு ஒன்றும் செய்யாமல் ராஜிநாமா செய்து விட்டுப் போய் விட்டதாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். 75 லக்ஷ வஜாவின் பலன் மிராசுதார்களுக்கு நன்கு தெரிந்ததே. ஆயிரக்கணக்கான ஏழை மிராசுதார்களுக்கு இதன் பலன் கிட்டுவதில்லை. ஆதலால் புதிய வருஷத்திலும் எப்போதும்போல் மிராசுதார்கள் நிலவரி பளுவைத் தாங்க வேண்டிய கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கிறார்கள். சென்னைமாகாணத்தில் வெகு நீண்டகாலமாக விவாதிக்கப்பட்டுவருவதும், கவர்மெண்டாரும்எல்லாரகக்ஷியாராலும் நிச்சயமாக ஒப்புக்கொள்ளப்பட்டதுமான நிலவரிக்குறைவு விஷயத்தில், ஜனநாயக அரசாக்ஷி செய்த காங்கிரஸ் மந்திரி ஸபை என்ன செய்தது? காங்கிரஸ் மந்திரி ஸபையின் நன்றி கெட்ட செய்கையை மிராசுதார்கள் இப்போதாவது உணர்வார்களா? காங்கிரஸ்வாதிகள் நிலவரி விஷயமாக உடனே எற்பாடு செய்யப் போவதாகவாக்குமிராசுதார் வோட்டுகளைப்பெற்றார்களே? சட்டஸபைக்குப்போனதும் காங்கியைநிருப்தி செய்யவேண்டி தங்கள் கக்ஷி வேலையாகிய மதுவிலக்கு, ஆலயபிரவேசம் போன்ற உபயோகமற்ற வழிகளில் இறங்கி மிராசுதார்களையே மறந்தார்கள். இம்மட்டுமில்லை, காங்கிரஸ் மந்திரிகளும், சட்டஸபை மெம்பர்களும் ஊருராய் சுற்றிக்கொண்டு பேசுகையில், வரியைக் குறைக்க முடியாதென்றும், வரி பளுவைத் தாங்கவேண்டியதே நியாயமென்றும் கக்ஷி பேசவில்லையா? கடையாகப் புகார் அங்கிகரித்த பிறகு, எதோ ஒரு மகேதாகர்ப்பத்தில் இருப்பதாக ஆர்பாட்டம் செய்துவிட்டு இப்போது திடீரென ஒடிபோய்விட்டார்கள். இரண்டரை வருஷத்திற்குள் இந்த முக்ய வேலையை அவர்கள் என் செய்திருக்கக்கூடாது? உண்மையில் அவர்களுக்கு நில வரியைக் குறைப்பதில் இஷ்டமில்லை யென்று பல தடவை வெளிப்பட்டிருக்கிறது.

எலெக்ஷன் காலத்தில் காங்கிரஸை கம்பாதீர்களென்று வோட்டாகளுக்கு அநேக தீர்க்கதரிசிகள் சொன்னர்கள். ஆயினும், பிரபல ஸனாதனிகளும், ஆஸ்திக்களுமாகிய அநேக மிராசுதார்கள் கூட நில வரி விஷயமாக கதிமோக்ஷம் பிறக்குமென்றும்பியே காங்கிரஸுக்கு மெஜாரிடியேற்படுத்திக் கொடுத்தார்கள். காங்கிரஸ் உடனே நன்மை செய்துவிடப்போவதாக அவர்கள் கனவு கண்டார்கள் எல்லாம் ஏமாற்றமாகவே முடிந்து விட்டது. ஜனநன்மையான கார்ய மெதையும் செய்யாமல்மந்திரிகள் "காங்கிரஸ்கட்டளை" என்று சொல்லிக் கொண்டு வெளியே ஒடிவிட்டார்கள். இத்தகையமண் குதிரைகளை பெரிய ராஜ்ய நிர்வாஹத்தில் வைப்பது எவ்வளவு அபாய மென்பதை இனியாவது மிராசுதார்கள் உறுதியாக நினைப்பார்களா?

ஆலயப்பிரவேச எதிர்ப்பு

மதுரையில் விசேஷ கான்பரன்ஸ்

ஆலயப்பிரவேச இயக்கத்தை எதிர்க்கவும் சட்டத்தை ரத்து செய்யவும் என்ன வழியை கைகொள்ளலாமென்பதை யோஜிக்க மதுரையில் ஸநாதனிகளின் ஸ்பெஷல் கான்பரன்ஸ் ஒன்று வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் ஆதரவில் ஸனாதன தர்ம வித்யாலயத்தில் 3, 4தேதிகளில் நடைபெற்றது.

சென்னை, ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸய்யங்கார் இதில் தலைமை வகிப்பதாயிருந்ததனுல் அவர் வர இயலவில்லை யென்று தெரிவித்து விட்டதின் மேல், ஜோதிர் மடாதிபதிகளான ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள் அத்ராஸனம் வகித்தார்கள். இந்தியா சட்ட சபை மாஜி மெம்பரான அட்வகேட் ஸ்ரீமான் கே. ராம அய்யங்காரவர்கள் உபசரணைக் கமிட்டித் தலைவராயிருந்து பிரதிநிதிகளை வரவேற்றுப் பேசுகையில் ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்யவேண்டிய அவச்யத்தை வற்புறுத்தினர்.

ஸ்ரீமான்கள் அட்வகேட் எஸ். எஸ். விச்வநாதய்யர், கெ. ஆர். வெங்கட்டராமய்யர் ஆகியவர்கள் பேசியபின், தலைவரான ஸ்ரீ சங்கராசாரியஸ்வர்மிகள் தமது தலைமை பிரஸங்கத்தைச் செய்தார்கள். மறு தினத்தில் கான்பரன் மீண்டும் கூடி முக்கியமான தீர்மானங்களை நிறைவேற்றியது. விவரம் பிறகு.

வாரக் குறிப்பு

[ஸ்ரீவத்ஸ வே. ஸோ. சர்மா]

பின் பலத்தைத் திரட்டுகே!:— திருநெல்வேலியிலிருந்து ஓர் தர்மவீரன் இரண்டு மாங்களுக்குள் ஆலயபிரவேச சட்டத்தை ரத்து செய்யா விடில் சென்னை கவர்னர் கார்யாலயத்திலும் மற்ற விடங்களிலும் ஸத்யாக்ரஹம் செய்வதாய் ராஜப்ரதிநிதிக்கு நோட்டீஸ் கொடுத்திருக்கிறார். தக்க பின் பலத்தைத் திரட்டிக் கொண்டு ஜயப்ரதமாக நடத்தும் படி வேண்டுகிறேன்.

பின்னர் ப்ரசாரம் வசயம்! இந்த ஸத்யாக்ரஹம் ஆரம்பிக்கு முன் ஸ்ரீ பஜோரியா போன்ற வட நாட்டுத் தலைவரை அழைத்து பலத்த ப்ரசாரம் செய்தல் மிக மிக அவச்யம் இவ்விரண்டு மாஸத்தில் தொண்டர் படை போதிய தனம் நிரட்ட வேண்டும்.

மானேஜர் முயற்சி! ஒவ்வோர் மதாபிமான பைகளையும் பூர்ண விவரத்துடன் அச்சிட்டு பயனுமாறு செய்ய இவர் ஆரம்பித்த முயற்சி பலமாகும் படியும் அவர் மூயற்சிக்கு பூர்ண ஆதரவுடன் நன்றி அறிவிக்கவும் கடமைப் பட்டு ளோமென நினைவூட்டுகிறேன்.

இரு நேத்ரங்களை இழந்தோம்!! சென்னை அ. க. வி. பைனெண்ணி புராண ப்ரவசன ஸபை மு. வ. ஸ்வராஜ்ய ஸபை வைதிக ஸேவக ஸபை இவைகளின் ஆதரவில் ஓர் கூட்டம் நடை பெற்றது. ம. ம. சேட்டூர் ஸ்வாமியும், டாக்டர் சங்கரய்யரும் வித்வானும் தர்மஸ்தம்பமும், ஆவார்கள். இருவரும் இச்சபைகளிலும் சபை தலைவரிடமும் சபை நோக்கங்களிலும் அன்பு கொண்டவர். இந்த ஸங்கடமான காலத்தில் இருவர் மறைந்ததும் பெரும் நஷ்டமாம்.

அறியாதவர் பிதற்றல்! வைதிக மதத்தை பலவகையில் தாக்கும் போது சுகாதார வீழா என்ற வியாஜத்தால் விஷய மறியாத சில வைத்ய கன்று குட்டிகளும் ஆசாரத்தின் உட்கருத்தை உணராமல் குருட்டு வழக்கம். மூடநம்பிக்கை என்ற கடுமையான சொற்களால் துஷ்ப்ரசாரத்திற்காம் பித்தது விந்தையிலும் விந்தை.

முடிவிற்கே முற்றுகிறது! ஜர்மன் போலந்து சண்டை ஆரம்பித்து பல விடங்களில் பரவுகிறது. ருஷ்யாவும் பின்வந்து சண்டைக்காரம்பித்தவுடன் அமெரிக்கா உறுமுகிறது. விரைவுலாவது முடிந்தால் சேஷமம்.

வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

ஆழ்வார் திருநகரியில் பொதுக் கூட்டம்

22—11—39ல் ஆழ்வார் திருநகரி உபய வேதாந்தகலாசாலைக் கட்டிடத்தில் ஸ்ரீ உ. வே. ஆத்தான் வெங்கட வரதாசாரிய ஸ்வாமி அக்ரஸனத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது.

சென்னை "ராமானுஜ ஸித்தாந்த வைஜயந்தி" பத்ரதிபரான வடகலை ஸ்ரீ ராமானுஜாசாரியார், ஸ்ரீ ஆனந்தராவ் மதுரை தேனிக்குளம், ஸ்ரீ முத்துஸாமி அய்யர், ஸ்ரீமதி. ருக்மணி அம்மாள், ஸ்ரீமதி வீதாலக்ஷ்மி அம்மாள், ஸ்ரீ பிரம்மானந்த ஸரஸ்வதி ஸ்வாமிகள், ஸ்ரீமான்வக்கீல், டி. எஸ். தாதாசாரியர் முதலிய பலர் அனேக முக்ய விஷயங்களைப்பற்றி விவரமாகப் பேசினர்கள்.

முஸ்லீம், கிறிஸ்வ, மதங்களுக்குப்போல் ஹிந்துமதத்திற்கும் ஆலய வழிபாடு போன்றவைகளில் பாதுகாப்பு எற்படுத்தவேண்டுமென்றும், சட்டஸபைகளை அடிக்கடி கலைக்கவேண்டுமென்றும், மதஸ்தாபன போர்டை எடுத்துவிடவேணுமென்றும், நிர்வாஹ அதிகாரிகளை நியமிக்கும் வழக்கத்தை ரத்துசெய்யவேணுமென்றும் குருவாயூர் கோவில் வழக்கில் வெற்றிபெற்ற ஜாமோரின் அவர்களைப் பாராட்டுவதாயும் வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்களை பிரேரேபித்தும், ஆதரித்தும் பல கனவான்கள் பேசினர்கள்.

(ர. கி.)

ஸ்ரீ ரங்கம் வாஸ்தனிகளின் பெரிய பொதுக் கூட்டம்.

4உ இரவு 7-½மணிக்கு ஸ்ரீ ரங்கம் கீழச் சித்திரை வீதியிலிருக்கும் ஸ்ரீ வான மாமலை மடத்தின் முன்பு ஸ்ரீமான் எம்பார் திருஷ்ணமாசாரியார் ஸ்வாமியின் அக்ராஸனத்தின்கீழ் ஏராளமான ஆஸ்திக்கர்கள் குழுமியிருந்த மஹாஸதஸ்ஸில் ஸ்ரீமான்கள் பி.அய்யஞசாரியார், புத்தங் கோட்டம் ஸ்ரீ நிவாஸாசாரியார், ஸாங்கி மிராசு கைங்கரியம் ஆர்.ராம்சாமி அய்யர், வக்கீல் கஸ்தூரி ரெங்காசாரியார், வரயோகி ராமானுஜதாஸர் முதலியவர்கள் ஆலய்ப்பிரவேச எதிர்ப்பு சம்மந்தமாய் இதுவரை நடந்த விஷயங்களைப் பற்றியும் இனி நடந்து கொள்ள வேண்டியதைப்பற்றியும் பல மேற்கொள்களுடன் வெகுநிறமையுடன் பேசினர்கள். ஆண் பெண் அடங்கலாக சுமார் 2000 ஆஸ்திக்கர்கள் குழுமியிருந்த கூட்டம் நோக்கத்தக்கது.

இன்னும் இருபது தினங்களில் இதுசம் மந்தமாய் ஸ்ரீரங்களின் பொதுக் கூட்டமும் நடக்கப் போவதாய்த் தெரிவிக்கப்பட்டது. பிறகு ஆயதர்மம் ரக்ஷண சபைக்கும் வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தாருக்கும், மற்றும் ஆஸ்திக பொது ஜனங்களுக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு பிறகு தீர்மானங்கள் ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டு கூட்டம் இரவு 10-½மணிக்கு இனிது முடிவடைந்தது.

ஸ்ரீரங்கம் கோவிலுக்குச் சர்க்காரால் ஆலயப்பிரவேசத்தடை இருப்பதாகத் தெரியவருகிறது.

தீர்மானங்களாவன:—

1. இக்கூட்டம் தனது ராஜபக்தியைக் காட்டுகிற தென்றும், யுத்தத்தில் பிரிட்டிஷாருக்கு ஜயம் விடைக்க வேண்டும் என்றும், ஆலய்ப்பிரவேசத்தை எதிர்த்துப் போராடின ஸ்ரீ ரங்கம் வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் கமிட்டி மெம்பர்களுக்கும், மேற்படி சங்கத்தின் அத்யக்ஷர் பிரம்ம ஸ்ரீ டி. கே. பாலசுப்பிரமண்ய அய்யருக்கும் நன்றி செலுத்தவதாயும், மிகவும் தைரியத்துடன் ஸனாதன தர்மத்தைக் காபாற்றுவதற்கே தங்கள் சேவையைத் தொண்டாற்றி வீரதியாகிகளாக நிலை நின்ற ஸ்ரீரங்கமான்களுக்கு பெரிதும் நன்றி பாராட்டுவதாயும், குற்றவாளிகள் என்ச் செல்லப்பட்டு சார்ஜ் செய்யப்பட்ட நிரபராதிகளான ஸ்ரீரங்கமான்களை விடுவிக்க வேண்டி மிகவும் பாடுபட்டு உழைத்த பிரபல வக்கீல்களான திருச்சி ஸ்ரீ மான், எஸ். கே. சர்மா, எஸ். கஸ்தூரிரெங்காசாரியார், திருச்சி ஸ்ரீ மான் கிருஷ்ணமூர்த்தி அய்யர் ஆகிய கனவான்களுக்கும் நன்றி செலுத்துவதாயும் ஸ்ரீமான் ராவ்சாஹிப் எஸ். கடேசய்யர் தலைமையிலும், ஸ்ரீமான் கே. ஆர். வெங்கட்டராமய்யர் தலைமையிலும் நடந்து வரும் சத்யாக்ரஹத்திற்கு இக்கூட்டம் பெரிதும் ஆதரவு காட்டுகிறதாயும், ஸ்ரீ மீனாக்ஷி கோவிலுக்கும் மற்றும் இதர கோவில்களுக்கும் ஸம்ப்ரோக்ஷணை நடத்தும்படி உத்தரவு பிறப்பிக்க வேணுமாய் அரசாங்கத்தாரை வேண்டுவதாயும், 1939-ம் வருஷத்திய மதராஸ் ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்யுமாறு மாகஸ்மை தங்கிய மன்னர் பிரானையும் அரசாங்கத்தாரையும் வேண்டிக் கொள்கின்றதாயும், அரசாங்கத்தாரை கோவில் கணக்குகளைச் சரிவர பரிசோதிக்க வேணுமென்றும் அது விஷயமாய் கோவிலின் சொத்தை வீணுக்குவதைத் தடுப்பதன் நிமித்தம் ஒரு பகிரங்க விசாரணை எற்படுத்தவேணுமென்றும் வேண்டிக் கொள்ளுகிறதாயும், ஸ்ரீ ரங்காச்சியார் சன்னதியில் ரிப்பர் செய்யும் பொழுது பாலாலயம் இல்லாமல் கடத்தியதால் அதை சுத்தம் செய்வதற்காக சரியான ஸம்ப்ரோக்ஷணத்தை சாஸ்திரவிதியின்படி நடத்தும் படிக்கு கேட்டுக் கொள்ளுவதாயும், தீண்டாதார் ஆலய நுழைவுக்கு எதிரடையாக தங்களுடைய சுயஉரிமைகளை ஸ்தாபிப்பதற்கு, தைர்யத்துடனும், உற்ச்சாகத்துடனும் டி. மூ. கோர்ட்டில் தாவா செய்ய முன்வந்திருக்கும் தர்மகர்த்தாவான ஸ்ரீ. கோ. க. வர. ரெங்காச்சார் ஸ்வாமிக்கு இக்கூட்டம் பெரிதும் நன்றி பாராட்டுகிறதாயும், அமூலிரிருக்கும் ஸ்தலத்தார் தர்மகர்த்தாவுக்கும் மற்றொரு பொது தர்மகர்த்தாவான ஸ்ரீ. கோ. க. வர. ரெங்காச்சார் ஸ்வாமிக்கு இக்கூட்டம் பெரிதும் நன்றி பாராட்டுகிறதாயும், அமூலிரிருக்கும் ஸ்தலத்தார் தர்மகர்த்தாவுக்கும் மற்றொரு பொது தர்மகர்த்தாவான ஸ்ரீ. கோ. க. வர. ரெங்காச்சார் ஸ்வாமிக்கு இக்கூட்டம் பெரிதும் நன்றி செலுத்துவதாயும் ஸ்ரீமான் ராவ்சாஹிப் எஸ். கடேசய்யர் தலைமையிலும், ஸ்ரீமான் கே. ஆர். வெங்கட்டராமய்யர் தலைமையிலும் நடந்து வரும் சத்யாக்ரஹத்திற்கு இக்கூட்டம் பெரிதும் ஆதரவு காட்டுகிறதாயும், ஸ்ரீ மீனாக்ஷி கோவிலுக்கும் மற்றும் இதர கோவில்களுக்கும் ஸம்ப்ரோக்ஷணை நடத்தும்படி உத்தரவு பிறப்பிக்க வேணுமாய் அரசாங்கத்தாரை வேண்டுவதாயும், 1939-ம் வருஷத்திய மதராஸ் ஆலயப்பிரவேச சட்டத்தை ரத்து செய்யுமாறு மாகஸ்மை தங்கிய மன்னர் பிரானையும் அரசாங்கத்தாரையும் வேண்டிக் கொள்கின்றதாயும், அரசாங்கத்தாரை கோவில் கணக்குகளைச் சரிவர பரிசோதிக்க வேணுமென்றும் அது விஷயமாய் கோவிலின் சொத்தை வீணுக்குவதைத் தடுப்பதன் நிமித்தம் ஒரு பகிரங்க விசாரணை எற்படுத்தவேணுமென்றும் வேண்டிக் கொள்ளுகிறதாயும், ஸ்ரீ ரங்காச்சியார் சன்னதியில் ரிப்பர் செய்யும் பொழுது பாலாலயம் இல்லாமல் கடத்தியதால் அதை சுத்தம் செய்வதற்காக சரியான ஸம்ப்ரோக்ஷணத்தை சாஸ்திரவிதியின்படி நடத்தும் படிக்கு கேட்டுக் கொள்ளுவதாயும், தீண்டாதார் ஆலய நுழைவுக்கு எதிரடையாக தங்களுடைய சுயஉரிமைகளை ஸ்தாபிப்பதற்கு, தைர்யத்துடனும், உற்ச்சாகத்துடனும் டி. மூ. கோர்ட்டில் தாவா செய்ய முன்வந்திருக்கும்

நமது மதம்.

(ஸ்ரீ எல். சுப்பிரமணிய சாஸ்திரிகள் வீணை வித்வான்)

(சென்ற வாரத் தொடர்ச்சி)

இப்படி உண்மையை அறியாமல் மிருகவதை எப்படி என்றால் ஒரு கிராமத்தில் ரயில்வேயே பார்த்திராத ஒருகுடியானவன் அகஸ்மாத்தாய் ரயில்ஸ்டேஷனுள்ள ஊருக்கு மாட்டு வண்டியை ஒட்டி கொண்டுவந்தான். வரும் வழியில் ரயில் ரோட்டிற்கு அருகிலுள்ள வண்டிப் பாதை வழியாக வரும்போது எதிராக ரயில் வண்டி தூரத்திலிருந்தே புகையை ஆகாயத்தில் இளப்பி கொண்டு "குபு குபு" வென்று பேரிரைச்சல் போட்டு வேகமாய் ஓடி வருவதைக் கண்ட அந்த குடியானவன் "பூதமோ", வென்று நடுங்கி மிரண்டு விட்டான். மாடுகளும் மிரண்டுகயிற்றை அறுத்துக்கொண்டு மூலைக்கு ஒன்றாக ஓடிவிட்டது. அந்த நாட்டுப்புறத்தான் வந்த வழியைப்பார்த்து ஓடி கொண்டே இனி ஜன்மஜன்மத்திலும் இந்த ஊருக்கு வரப்போகிறதில்லை என்று ஓடினானும். பிற்பாடு பார்த்தவர்களெல்லாரும் சிரித்து ரொம்ப ஸமாதானப் படுத்தினார்களாம். பிறகு அவன் ரயிலின் விஷயத்தை விரிவாகத்தெரிந்து கொண்டானும். அதுமாதிரி இனி மேலாவது இதனுண்மையை உணர்வார்களா?

சிலர் வேதத்தை ஒப்புக்கொள்பவர் போல மனங் கூசாமல் கேழ்ப்பதாவது, வேதத்தில் ஆலய நிர்மாணமும், தீண்டாதார் பிரவேச விலக்கும் கூறியிருக்கின்றதா? என்று கேட்கின்றார்கள்.

அதற்கு சரியான விடையளிப்போம். வேதத்தில் அவரவர் அதிகாரங்களுக்குத் தக்கபடி ஸ்வரோபாஸனைகள் கூறப்பட்டிருக்கின்றன, அவ்வுபாஸனைகள், ஸூக்ஷ்மமாகவும், ஸ்தூலமாகவும் கூறப்பட்டிருக்கின்றன. ஆனால் அந்த உபாஸனைகளை செய்யும் முறைகளை ஆகமங்கள் ஸ்தூலமாக நன்கு விளக்கிக்காட்டியிருக்கின்றன. இவ்வாகமாதிகளும் இல்லாஞலே கூறப்பட்டன. இதற்கு ஆதாரம் "ஈசாநஸ்ஸர்வ வித்யாநாம், ஈஸ்வரஸ்ஸர்வபூதாநாம்" என்று வேதத்திற்கூறியிருக்கின்றது. இதன் கருத்தை "வேதாம்ஸ்ச தஸ்மை" "வேதங்களையும்" என்று "உம்" என்ற அர்த்தமுள்ள "சகார" த்தால் புராணமாதிகளையும் பிரம்மதேவனுக்கு எககாலத்தில் உபதேசிக்கப் பட்டதாக வேதங் கூறுகின்றது.

ஆகையால் மேற்கூறியிருக்கின்ற "அசுத்தி" யுள்ளவர்கள் விட்டிலுள்ள, பாத்திரம் பண்டங்களை ஸ்பர்சிக்காமலும், ஆலயப்பிரவேசம் முதலான காரியங்களைச் செய்யாமலுமிருக்க வேண்டியதென்று சாஸ்த்ர விதி. இவ்விதியை மீறினல் ஏற்படும் ஆபத்துக்களாவன. கண் கெட்டும், அங்கமெல்லாம் நிடீரென்று புழுத்தும், அபஸ்மார ரோகம் (காக்கா வலிப்பு) முதலிய நோய்களால் பீடிக்கப்படுவார்களென்று வேதாகமங்கள் கூறுகின்றன. மேற்கூறியரோகங்கள், மேற்கூறிய விதிகளை மீறியதால் ஏற்படும் பலன்கள் என்றறியத்தக்கது. இது மத விஷயமான தத்வம். இதற்கும் அரசியல் விஷயத்திற்கும் ஏதாவது ஸம்பந்தமிருக்கின்றதா? ஆலோசித்துப்பாருங்கள்.

பொதுவாக மனிதவர்க்கத்துக்குப்போஜனமென்பது மிருகாதிகளைப் போல் பசி எடுக்கும் வேளையில் சுசி ருசியையும் பக்குவத்தையும் கவனியாமல் வயிற்றை நிரப்பிக் கொள்ளும் கார்யமல்ல. மற்றென்னவென்றால்,

"அன்னம்" என்பது ஜீவாதாரமாயும் பிரம்மத்தின் அம்சமாயுள்ளபடியால் அதை ஈசுவரனுக்கு நிவேதனம் செய்து, பிரம்மன் வருபமாக பாவித்துஸுவர்ணரான விருந்தினரோடு விதிப்பிரகாரம் அன்னமருந்த வேண்டியது. அவ்விதம் அருந்துங் காலத்தில் அவ்வர்ணத்தாரைத் தவிர மற்ற வர்ணத்தார் பார்க்கலாகாதென்பது விதி. இவ்விதி எல்லா வர்ணத்தாருக்கும் பொதுவானது. அதினும் ஆர்யனெப்படும், பிரம்ம, க்ஷத்ரிய, வைசிய,என்ற, மூவர்ணத்தாருக்கு விசேஷ விதி எற்பட்டிருக் கின்றது.

இதற்கு எவ்வளவோ மந்த்ர பூர்வகமான காரியங்கள் முடிந்த பிறகு அன்னத்தை ஸ்வர்ணரான விருந்தினரோடு உண்ண வேண்டு மென்றும், இந்த ஆகாரத்திற்கு "ப்ராணாக்னி ஹோத்ர" மென்றும், ஹோமக்கியைகளில் ஒன்றாக வேதங் கூறுகின்றது. இப்பிராணாக்னி ஹோத்ர காலங்களில், ஸவர்ணர்களோத்தவிர மற்ற வர்ணத்தாருடன் ஸமமாக போஜனம் செய்யக்கூடாதென்று விதி எற்பட்டிருக்கிறது.

எவ்வர்ணத்தாராயினும் அன்னமருந்தும் போது, மற்ற வர்ணத்தார் பார்க்கலாகாது. பூனை நாய் முதலியவைகள் ஸபீபத்திலிருக்கக் கூடாது என்றும் விதிக்கப்பட்டிருக்கின்றது. ஏனென்றால்; பூனை முதலிய மிருகங்கள், சபீபத்திலிருந்தாலும், கொஞ்சதூரத்திலிருந்தாலும், "ஆக்ராண" தோஷத்தினுல் (அதாவது முகருவதினுல்) அன்னம் முதலியவைகளின் ஸாரத்தை இழுக்க கூடிய சக்தி அவைகளுக்கு இருக்கின்றது. தன் வர்ணத்தாரைத் தவிர இதரவர்ணத்தாரின், த்ருஷ்டிதோஷத்தினுல் ஸாரம் கெட்டுவிடுகின்றது. இப்படி ஸ்பரிச தோஷம் க்ராண தோஷம் இவைகளினுல் ஸாரம் கெட்டுப்போன உணவுகளை ஈசுவரனுக்கு அர்ப்பணம் பண்ணுவதினுலும், அருந்துவதினலும் பொருள்கள் அசுத்தியாவதோடு பாபங்களேற்பட்டு சரீரத்தின் தாதுக்களும் கெட்டு நோய்கள் உண்டாவதற்குஹேதுவாகிறது. இவைகள் சாஸ்திரத்தாலறியப்படுகிற மத விஷயமான தத்வம்.

இதற்கு லௌகிக திருஷ்டாந்தச் சூடு. பொதுவாக பாங்கிகளினும், போஸ்டாபீஸ்களிலும், மின்ஸார யந்த்ர காரியாலயங்களிலும், மற்றும் ஸர்க்கார் இதர காரியாலயங்களிலும் "உள்ளே வரக்கூடாது" என்று போர்டு பலகை தொங்கவிட்டிருப்பதைப் பார்க்கிறோமல்லவா?

என் உள்ளே போகக்கூடாது? ஜனங்களிடத்தில் பகையினுலா? அல்லது பொறுமையினுலா அப்படி போர்டு போட்டிருக்கிறார்கள்? அல்லது தன் வயிறு வளர்க்கவா? அதன் கருத்தென்ன? அந்தந்த காரியாலயங்களைச் சேர்ந்தவர்களைத் தவிர மற்றவர்கள் உள்ளே வரக்கூடாதென்றல்லவா அதன் கருத்து? ஏனென்றால் உள்ளே பணம், ரிகார்டு, ஸ்டாம்பு முதலிய முக்ய பொருள்கள் இதரர்கள் எவ்வளவு நல்லவர்களாலும் அவர்கள் திருஷ்டியில் படும். எதாவது கெடுதல்கள் ஏற்படும். மேலதிகாரியின் கோபமும், தாபமும் ஏற்படும். அப்படி ஏற்பட்டால் அந்தந்த காரியாலயத்தைச்சேர்ந்தவர்களல்லவா உத்திரவாதிகள்? இந்த அநர்த்தம் வராமலிருப்பதற்குத்தான் "உள்ளே வரக்கூடாது" விதி எற்பட்டிருக்கிறது

அதுபோல் இந்த வைதிக, தைவிக, கார்யங்களில் மந்த்ரம், பூஜை, ஹோமம், அக்னி ஹோத்ரம், ப்ராணாக்னி ஹோத்ரம், இவைகள் இதரர்களின் திருஷ்டியாதி தோஷங்களினுல்கெட் டுவிடும்.

அதினுல் ஈஸ்வர கோபமும் ஏற்பட்டு விடும். அதனுல் பாபங்களும் அதன் பலன்களாகிய அனர்த்தங்களையும் அனுபவிக்கநேரிடுமென்பது சாஸ்திரத்தின் முடிவு. மற்றொரு திருஷ்டாந்தம்.

பொதுவாக சரீரத்தில் ஏற்படுகின்ற நோய்களை நிவர்த்தி செய்வதற்கு தக்க மருந்துகளை வைத்ய சாஸ்திர மூலமாகத்தான் தெரிந்து கொள்கிறோம், வெறும் யுக்தி வாதங்களினுல் நோய்கள் நிவர்த்தியாகுமா? கடுமையான நோயுள்ளவன் கருணையுள்ளவைத்யனை நம்பத்தான் வேண்டும் அவர் கொடுக்கும் மருந்துகளை நம்பித்தான் சாப்பிட வேண்டும். அவ்வைத்யன் சொல்லும் பத்யத்தை நம்பித்தான் அனுஷ்டிக்க வேண்டும். அவ்விதம் நம்பாமல் வீணுகுயுக்தி வாதங்களினுல் மீறினுல் அனர்த்த பரம்பரைதான். அது எப்படி வைத்ய விஷயமான தத்வமோ அப்படியே இதுவும் மதவிஷயமான தத்வம். இதற்கும் அரசியல் விஷயத்திற்கும் ஏதாவது ஸம்பந்த மிருக்கின்றதா? சற்றே யோசித்துப் பாருங்கள்.

பொதுவாக மனிதவர்க்கத்தில் "விவாஹம்" என்பது. ஆடுமாடு முதலிய மிருகங்களைப் போல் காதலித்து காமக்ரோதாதிகளினுல் ஸம்யோகிதமாக கூடிக் கொண்டும், பிரிந்து கொண்டும், வாழ்வாவர்ஜ்யமில்லாமல் திரியும் கார்யமல்ல. மற்றும் தாத்காலிகமாக பணத்தாசையால் ஆணும் பெண்ணும் ரிஜிஸ்தர் செய்து கொண்டும், மோதிரங்கள் மாற்றிக் கொண்டும், வேண்டாத சமயங்களில் ரத்து பண்ணிக் கொண்டும், பணத்தைப் பறிப்பதற்காக ந்யாயஸ்தலம் வரை தம்தம் சீர்கேடான கார்யத்தையும், மதிப்பையும், குடித்தனத்தையும், இழக்கும் வரை, போராடித் தீர்த்துகொள்ளும் கார்ய மல்ல.

மற்றென்னவென்றால்? வேத மந்த்ர பூர்வமான தேவ கார்யங்களுக்கும், பிதுர் கார்யங்களுக்கும், தூணேயிய யிருப்பதற்கும் ஸத் ஸந்தானத்திற்காகவும் அதினுல் வைதிக, தைவிக காரியங்களுக்கு அர்ஹதை உண்டாவதற்கும் எற்பட்ட மந்த்ர பூர்வகமான விதி. பிதா புத்ரன், அண்ணன் தம்பி, குரு, சிஷ்யன், என்ற முறை எப்படி ஆயுள் முடியும் வரையிலும் தொடர்ந்திருக்கின்றதோ அவ்விதம் ஆயுள் பூராவும் பிரியாத, ஸகோதர்மத்வித்து ஸவர்ணர்களான அன்புள்ள ஸதி, பதி, என்ற முறையுள்ள மந்த்ர பூர்வகமான விசேஷ விதியைத்தான் "விவாஹம்" என்று கூறப்படுகின்றது.

மேற்கூறிய எல்லா விதிகளையும், அதற்கு அங்கமாயுள்ள க்ருஹ க்ருத்யாதி கார்யங்கள் ஸதி, பதிகளால் விசேஷமாய் வஹிக்கப்படுகின்றபடியால் "விவாஹம்" என்றபதப்பொருள். வேத விதிப்ரகாரம் நடக்கின்ற இந்த "விவாஹ" ஸ்கர்மத்தினுல், இவ்வுலகில் நல்ல ஸந்தான விருத்தியும் ஆயுரா ரோக்ய ஐஸ்வர்யங்களும், பிறகு நல்லலோகத்தில் நித்யானந்த வாழ்வும் எற்படுமென்றும் வேதங் கூறுகின்றது.

இவ்விதிக்குமீறி விவாக ரத்து, கலப்பு மணம், விதவை விவாஹம், இவைகளுக்கு அனுகூல மான சட்டங்களைச் செய்தல் இப்போர்ப்பட்ட, துஷ்கர்மங்களைச்செய்தால் இந்த உலகத்திலேயே ஆயுராரோக்யாதி நன்மைகளுக்கு நேர் விபரீதமான கொடிய தன்பங்களை அனுபவித்து ஜன்மஜன்மாந்திரங்களிலும் தொடர்ந்து வரும் துன்பங்களை அனுபவிப்பார்களென்று அவ்வேதமே கூறுகின்றது. (தொடரும்)

விழுப்புரம்

தெய்வநெறிக்கழகத்தின்

சென்னை மாகாண முதலாவது மகாநாடு

24உ-முதல்ஒரு வாரம் நடைபெறும்.

ரிஷிகேசத்தில் ஆனந்த குடீரத்திலிருக்கும் சுவாமி சிவானந்தர், தீர்த்தவாய்க்த தென்னூட்டு மகானுகிய, அப்பய்ய தீக்ஷிதர் பரம்பரையில் அவதரித்தவர். ஆங்கிலக்கல்லூரியில் கல்வி பயின்ற அவர், சிலகாலம் மலேயா நாட்டில் டாக்டராயிருந்து அரிய தொண்டாற்றி, திருங்கேரி மடத்தின் ஆதரவில் ஸ்ரீ விசுவானந்தாஜி சுவாமிகளினிடம் சந்நியாச தீக்ஷை பெற்று, பொதுமக்களின் நன்மைக்காகவே ஹிமாலயத்தில் அரிய தவமாற்ற அவதரித்தனர்போலும் இவரால் ஸ்தாபிக்கப்பட்ட தெய்வநெறிக்கழகமானது ஆத்மீக அறிவைப்பரப்பு, அப்யாசத்தினுல் மனித சமூகத்தின் அமரத்தன்மையைக்கண்டு வெளியிட, இவ்வுலகத்தின் எல்லாப்பாகங்களிலும் மிகவும் தீவிரமாக வேலைசெய்து வருகிறது. பிரமசரியத்தையனுஷ்டிக்க முன் வருகிறவர்களும் (கிருகஸ்தர்கள்கூட பிரமசரியத்தையனுஷ்டிக்கலாம்) உண்மையே பேசுவதெனத் தீர்மானித்திருப்பவர்களும், உயிர்வாழுமெவற்றிற்கும் சிறிதும் துன்பமியற்றாமலிருக்கப் பிரியப் படுமவர்களும், கழகத்தின் அங்கத்தினர்களாய் சேர்க்கப்படுகிறார்கள். அங்கத்தினர்கள் யாதொரு சந்தாவும் செலுத்த வேண்டிய தில்லை. இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் சுமார் 300 கிளைகள் எற்படுத்தப்படுகின்றன. இன்னும் அனேக கிளைகள் சமீப காலத்தில் எற்படுத்தப்படும். இக்கழகம் ஓர் தனிப்பட்ட கொள்கைகளை மேற் கொண்டதல்ல. எல்லோருக்கும் சம்மதமான கொள்கைகளையும் அன்பையும் உபதேசிக்கிறது.

கழகத்தின் ஸ்தாபகரான தலைவர் சுவாமி சிவானந்தர், அவருடைய தெய்வீகமான எழுத்துப்பிரசாரத்தினுல் அநேகருக்கு பக்தி ஞானதன தர்மம், வேதாந்தம், யோகம் முதலிய யோகமார்க்கங்களில் வழிகாட்டி வருகிறார். சமீபத்தில் தெய்வநெறிக்கழக மகாநாடு, விச்வப்ரேமையையும், மனிதனின் அமரத்தன்மையையும் விளம்பரப்படுத்த ரங்கூனிலும் லாகூரிலும் கூட்டப்பட்டன

இம்மகாணத்தின் கிளைகள் விழுப்புரத்தில் கூட்டப்படும். அனைவரும் மகாநாட்டிற்கு வந்திருந்து, மனைவிருத்தி, தருமம் ஆசாரம், ஆத்மீகத்தரை முதலியவைகளில் மேம்பாடு அடைவார்களென கோறப்படுகிறது.

மகாநாட்டின்போது, சிறப்புள்ள வித்வான்களால், யோகாப்பியாசம், பிரேம யோகம், ஜபயோகம், சதாசாரயோகம் முதலியவைகளைப்பற்றி உபன்யாசங்கள் நடத்தப்படும். கீர்த்தனைகளும் பஜனைகளும் நடக்கும். பொதுஜனங்களும், ஆத்மீகத்துரையினும் தருமத்தினும் பேற்பெற்ற இத்தேசத்தின் பெருமைக்கிணங்கி தங்களாலான பொருளுதவிசெய்ய முன்வருவார்களென எதிர்பார்க்கப்படுகிறது. கீழ்க்கண்ட விலாசத்திற்கு அனுப்பப்படும் எவ்வளவு சிறிய தொகையானுலும் தியுடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

டிசம்பர் 24உ காலை:—ஹோமம், கணேசபூசை; மஹாமாந்திர கீதம் வேதபாராயணம் ஆரம்பிக்கப்பட்டு, பிரதிதினமும் நடைபெறும். மதி மாலை:— திவான் பகதூர் K. S. ராமசாமி சாஸ்திரிகளால் மகாநாடு திறந்து வைக்கப்படும். கழகத்தின் பிரசாரக ஸ்ரீ மகாதேவஸ்வாமிகள், வரவேற்புக் கமிட்டி அக்ராசனருக்கு கமிட்டியின் சார்பாக வரவேற்புபத்திரம் வாசித்துக் கொடுப்பார். மதி இரவு:—ஸ்காந்த புராண சப்தாஹம், பிரவசனதூணை வைதீக தர்ம சம்ரக்ஷக பிரம்மஸ்ரீ சேங்காலிபுரம் அனந்தராம தீக்ஷிதால் ஸ்கந்தபுராண பிரவசனம் நடைபெறும். பின்பு மகாமந்திரம் யாவராலும் கீதம் செய்யப்படும். திங்கட்கிழமையிலிருந்து பிரதிதினமும் விடியற்காலை4-மணியினின்று 7-மணிவரை நியானம் பிராதஸ்மரணம் முதலியவை நடக்கும். காலை8-மணியிலிருந்து12-வரை மாலை3லிருந்து 7-மணிவரை உபன்யாசங்களும், பிரசங்கங்களும் நடைபெறும்ஒவ்வோரிரவிலும் சேங்காலிபுரம் பிரம்மஸ்ரீ அனந்தராம தீக்ஷிதர் அவர்களால் கந்தபுராண பிரவசனம் நடைபெறும். இந்தவாரத்தில் குறைந்த 24-மணி நேரமாவது கழகத்தின் கட்டிடத்தில் அகண்ட கீர்த்தனம் நடைபெறும். கடைசி தினத்தில்எழைகளுக்கு கஞ்சிவார்க்கப்படும். மகாநாடு விழுப்புரம் தெய்வநெறிக்கழகமிருக்கும் பிரேம்ஜி கட்டிடத்தில் ஸ்பெஷலாக போடப்பட்ட கோட்டகையில் நடத்தப்படும். K.S.ராமசாமிசாஸ்திரிகள். திருப்புகழ் மணி.T.M கிருஷ்ணசாமி அய்யர். K.பாலசுப்ரமண்ய அய்யர் A.சிவராமகிருஷ்ணையர் R. S. சங்கரய்யர், ரிடையர்ட் ஜில்லாஜட்ஜ்.K. R. வெங்கட்ராமஅய்யர் வி. சர்மா. மகாதேவ முதலியவர்கள் உபன்யாசங்கள் செய்வார்கள்.

ஸ்ரீ வைகுண்டத்தில் கண்டனக் கூட்டம்

ஸ்ரீ வைகுண்டம் ஸ்ரீ வைகுண்டபதி கோயில் வாசல் முன் மண்டபத்தில் வேதாகமதர்ம வித்யா புத்தக ஆசிரியர் பிரும்மஸ்ரீ என். சாம்பசிவ சாஸ்திரி தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தேனிக்குளம் ஸ்ரீமான் மிராசுதார் டி. எம். முத்துஸ்வாமி அய்யர் மதுரை ஸ்ரீ எல் ஆனந்தராவ் கெல்லி ஸ்ரீமதி ருக்மணி தொலக்ஷ்மி முதலியோர் ஆலயப்பிரவேச சட்டத்தை எதிர்த்தும் இனி சனதனிகள் செய்யவேண்டிய வேலைகள் பற்றியும் மிகரமணியமாய் பிரசங்கித்தார்கள். ஸ்ரீ வைகுண்டம் தாலூகா காங்கிரஸ் செகரெட்டரியால் சில கேள்விகள் கேழ்க்கப்படவே தலைவர் ஸ்ரீ என். சாம்பசிவ சாஸ்திரிகளால் ஆனித்தரமாக ரமணீயமாய் பதிலுரைக்கப்பட்டது. மறுநாள் காலையில் போலீஸ் பந்தோபஸ்துடன் ஸ்ரீமான் என். எ. கணபதி அய்யர் தலைமையிலும் ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது அன்று மத்தியம் 1-30 க்கு ஆழ்வார் திருநகரில் ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் ஆத்மான் வடக்குத் திருமாளிகை ஆதீனம்ஸ்வாமிகள் தலைமையில் பிரும்மாண்டமான ஓர் பொதுக் கூட்டமும் நடைபெற்றன. (ந-வி-தி.)

பிரபல வனுதன தர்மி காலமானர்.

ஆழ்வார் திருநகரி உபய வேதாந்த கலாசாலை ஆன்ரரி ஸுப்ரண்டெண்ட் ஸ்ரீ மான் டி. கோவிந்த அய்யங்கார் 27—11—39 திங்களன்று மரணமானர். பிரபல சனதனியான மேற்படியார் திருநெல்வேலி ஜில்லா விஷ்ணுதேவஸ்தான கமிட்டி வைஸ் பிரஸிடெண்டாயிருந்து அநேகநற்காரியங்கள் செய்திருக்கிறார். சமீபத்தில் ஸ்ரீ வில்லிபுத்தூர் கோயில் உள்துரை மானேஜராயிருந்து வந்தார் ஆழ்வார் திருநகரில் பல ஆண்டுகளுக்கு முன் மைசூர் ஸ்ரீ சிருங்கேரி குருசேவா ப்ரவீண ஸ்ரீ கண்டசரஸ்திரி தலைமையில் ஓர் சனதன மகாநாட்டையும் நிறம்பட நடத்தியுள்ளார். இவரது மரணத்தால் பொதுவாக சனதனிகளுக்கும் குறிப்பாக ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் நஷ்டமாகும். ஆழ்வார்திருநகரி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீமத் ஆத்மான் வடக்குத் திருமாளிகை ஆதீனம் ஏஜண்டாயிருந்துவந்த பிரபல சனதனி ஸ்ரீமான் எஸ். ராகவய்யங்கார் 27—11—39ல் காலமானர். (ந. வி. தி.)

ஆனந்த தாண்டவபுரம்

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் விஜயம்.

இவ்வூரில் பிரமாதிஉ கார்திகைமீ 15உ முதல் 18உ வரை ஸ்ரீ மத் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகள் விஜயம் செய்து இக்கிராமவாசிகளின் சிரத்தா பக்திக்கு அன்புடன் ஈடுபட்டு, தான்கு தினங்கள், பூஜா மஹோத்ஸவத்தை நிகழத்துக் கொண்டும் அரிய விஷயங்களை உபன்யஸித்துக் கொண்டும் வசித்து வந்தார்கள்.

லர்வஹித ஸாகித்ய மண்டலம்

தேப்பக்குளம் போஸ்ட், திருச்சி.

2-வது கட்டுரைப் போட்டி.

(மண்டலத்திற் சேர்ந்தவர் எல்லோரும் போட்டியிடலாம்)

விஷயங்கள் :—1. நவீன வாழ்க்கையில் மதம். 2. என் பிரச்சனைகளும் சந்தேகங்களும். 3. என் தின்சரியையும் பொழுதுபோக்கும். 4. ஏதேனுமொரு (மத, சமூகத்) திருநாள்.

வயதும், விலாசமும் தெளிவாகக் குறிப்பிடவும்.

பரிசு பெறுதவரினவர்களும் உற்சாகப் பரிசுகளளிக்கப்படும்.

5—2—41-ல் கட்டுரைகள் கடைசியாக எம்மிடம் சேரவேண்டும்.

அங்கத்தினர்: அணு 4. (வருடத்திற்கு) கோடையாளர்: ரூ 1.

முதற் பேட்டியில் ரூ. 10/- பரிசு பெற்றவர்,

1. கடவுள் அல்லது முதற் காரணம்—ஸ்ரீமான் S. V. ராமமூர்த்தி, ராஜாஸ்மஸ்க்ருத பாடசாலை கும்பகோணம். (வயது 18). 2. என் வாழ்க்கையின் இலக்கு—ஸ்ரீமான் U. N. ராமஸ்வாமிகாயுடு, போர்டு ஸ்கூல், உடுமலைப்பேட்டை. (வயது 32).

இவர்கள் கௌரவ அங்கத்தினராகவும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் ஆங்கிலத்திற் கட்டுரைகள் எழுதிப் பரிசு பெற்றவர் தொகை 10.

புஸ்தகங்களின் விலை ரூ. அ.

ஆர்யாவர்த்த ஜோதி வருடசந்தா	....	1	0
ஸம்ஸ்க்ருத ஸ்தோத்திரங்கள் (தமிழில்) (அச்சில்)	....	0	1
தோத்திரத்திரட்டு	,,	....	0	1
இஷ்கிர்தையில் ஏகாதசி	....	....	0	½

215310

ஹிமாலயம், திபேத், நேபால்
கஸ்தூரி, சிலாஜிட், குங்குமப்பூ

(சுத்தமானதென்றும், கலப்பற்றதென்றும் உத்திரவாதம் செய்கிறோம்).

கஸ்தூரி	ஒரு தோலா.	ரூ 25—0—0
சிலாஜிட் (புடமிட்டது)	,,	ரூ 1—0—0
குங்குமப்பூ (கேசர்)	,,	ரூ 2—8—0.

(ஒரு தோலா என்பது ஒரு ரூபாய் எடையாகும்) ஏற்படும் தபால் சார்ஜ்—பாக்கிங் சார்ஜ் தனியாக உண்டு. கடிதப்போக்குவரத்து ஹிந்தியிலாவது, ஆங்கிலத்திலாவது கடத்தவும்.

கிடைக்குமிடம்:— PREM LAL SHAH GANGOLA,
ALMORA (Himalayas) U. P.

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியமருந்து இதுவே.

லயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

ஓர் சந்தேகம்

(ரா. ரா.)

அத்வைத பரமாக ப்ரபோத "சந்த்ரோதயம்" என்னும் நாடகத்தை ஸ்ரீ கிருஷ்ண மிச்ர இயற்றினர். 'சந்த்ரோதயம்' என்பதற்குப் போட்டியாக ஸூர்யோதயம் என்னும் பதத்தை யுபயோகித்து "ஸங்கல்ப ஸூர்யோதயம்" என்னும் நாடகத்தை விசிஷ்டாத் வைதபரமாக ஸ்ரீ வேதாந்த தேசிகர் சாதித்துள்ளார். இந்த இரண்டு நாடகங்களுக்கும் போட்டியாக த்வைதத்தைஸ்தாபித்து ஓர் மத்வாசாரியார் "ததுபயக்ரஸ்த ராஹூதயம்" என்னும் நாடகத்தை எழுதியிருக்கிறாம்; அதாவது அந்த சந்த்ரன் ஸூர்யன் என்ற இரண்டையும் பிடிக்கும் ராகுவின் உதயம் என்று தாத்பர்யம். இந்த மூன்றுவதான நாடகம் பிரசார நிலிருந்து வருகிறதா? இதுவிஷயம் உண்மையானதா? (ஒ.கி.)

ஆர்யதர்மம்: ஆசிரியர். அவர்கள்.

சமுகத்திற்கு:—

இந்த கார்த்திகை மீ 8-ம் தேதி வந்த ஆர்ய தர்மத்தில் 7வது பக்கத்தில் ஐம்பெரும் வேழ்வி என்ற வியாசத்தில் பஞ்சமகாயக்ஞத்தில் பிதார்களுக்கு அன்னத்தினும் ஜலதர்ப்பணத்தினும் திருப்தி செய்ய வேண்டும் என்று இருந்தது. அன்னத்தினல் திருப்தி செய்வது எப்படி. ஜலதர்ப்பணம் என்றால் எள் சேர்த்து. கூர்ச்ச ஆவாஹந் தொடர்.

"காங்கிரஸ் கொடியின் கீழ்பேசமாட்டேன்"

ஐக்ய மாகாண கவர்னர் மறுப்பு

அலஹாபாத் யூனிவர்ஸிடியின் பட்டமளிப்பு விழாவில் வைஸ் சான்ஸலர் என்ற நோதாவில் கவர்னர் தலைமை வகிப்பதாயிருந்தார்.

ஆனல் காங்கிரஸ்காரர்கள் யூனிவர்ஸிடிக் கட்டிடத்தில் காங்கிரஸ் கொடியை பறக்க விடவேண்டுமென்று பிடிவாதமாகத் தீர்மானித்ததின் காரணமாக கவர்னர் அக்ராசனம் வகிக்கமுடியாதென்று கூறி எழுதி விட்டார்.

யூனிவர்ஸிடி பொதுஸ்தாபனமென்றும், அங்கு காங்கிரஸ் கொடி போடுவது பொதுத் தன்மைக்கு விரோதமென்றும், கவர்னர் என்ற முறையில் தாம் ஒரு ராஜீயக் கக்ஷியின் கொடியின்கீழ் நடக்கும் கார்யத்தில் கலந்துகொள்ள முடியாதென்றும கவர்னர் கூறிவிட்டார்.

அல்லது எள் இல்லாமலா. அப்படி செய்தால் ராத்திரி உபவாஸம் உண்டாஇல்லையா. அப்படியானல் கிரகஸ்தன். ஒரு வேளை போஜனத்தால் எப்போதும் செய்ய வேண்டுமா இந்த சந்தேகங்களை விபரமாய் ஆர்ய தர்மத்தின் மூலமாய்த் தெரிவிக்க பிரார்த்திக்கிறேன். செய்ய வேண்டிய விதியை விபரமாக தெரிவிக்க கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஏ சுப்ரமண்ய குருக்கள்.

மஹாமஹோபாத்யாய ஸ்ரீ நரஸிம்மாச்சாரியார்

பரமபதம் சேர்ந்தார்

மஹாமஹோபாத்யாய சேட்டனூர். ஸ்ரீ நரஸிம்மாசாரிய ஸ்வாமிகள் திருப்பதியில் மாரடைப்பு காரணமாக திடீரென்று காலமானர். அவர் நல்ல வித்வானுமிருந்ததுடன் வைஷ்ணவ ஸம்பிரதய தத்வங்களை விசேஷமாக அறிந்து பிரவசனமும் செய்து வந்தார். அநேக கிரந்தங்கள் இயற்றியிருக்கிறார் பல சிஷ்யர்கள் அவருக்கு உண்டு. ஸமீபத்தில் தான் அவர் திருப்பதி ஸ்ரீ வெங்கடேச்வர ஸம்ஸ்கிருத காலேஜில் ஒரு பிரதான உபாத்யாயராக நியமிக்கப்பட்டு வேலை பார்த்து வந்தார்.

ஆழ்வார் திருநகரி
வைகுண்ட ஏகாதசி மஹோத்ஸவம்

ஆழ்வார் திருநகரி ஸ்ரீ ஆதிநாதர் ஆழ்வார் தேவஸ்தானத்தில் மார்கழி மாதத்திய திருவத்யயன (ஸ்ரீவைகுண்ட ஏகாதசி) மஹோத்ஸவம் 11—12—39 ல் ஆரம்பமாய் 2—1—40 வரை அதி விமர்சையாய் நடைபெறும். 22—10—39 ல் ஸ்ரீவைகுண்ட ஏகாதசி தினம் தாம்பிரவர்ணியைச் சுற்றிலும் 15 மைல் சுற்றளவிலும் ஸ்ரீவைகுண்டம் தெற்திருப்பேரை ஆழ்வார் திருநகர் முதலிய நவதிருப்திகளிலும் நடைபெறும் சயனசேவை மிக விசேஷமாகும் இம்மஹோத்ஸவத்தையொட்டி மத சம்பந்தமான அரிய உபன்யாஸங்களும் சனதனிகள் பொதுக்கூட்டங்களும் சிறப்பாக நடைபெறுமெனத் தெரிகிறது. ந. வி. கி.

Printed by S. Kalyanasundram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundram.

215311

-3 JAN 1940 MADRAS

653

REGD No. M. 2919 ARYADHARMAM TAMIL WEEKLY Estd. 1915

ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை)

வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

ஸ்வஸ்தி ப்ரஜாப்யः பரிபாலயந்தாம் ந்யாய்யேன மார்கேண மஹீம் மஹீசாः ।
கோப்ராஹ்மணேப்யஶுபமஸ்து நித்யம் லோகாஸமஸ்தாஸுகினோ பவந்து ॥

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணு.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

பு-24 | கும்பகோணம் பிரமாதி-ஞெ கார்த்திகை-மீ 29உ 1939 ஞெ டிசம்பர்-மீ 14உ | வ-49

மீண்டும் காங்கிரஸ் ஆக்ஷியாம்!

பிரிட்டன் காங்கிரஸுக்கு இணங்குமாம்.

பத்திரிகை நிருபர் ஹேஷ்யம்.

டில்லி, பம்பாய் பத்திரிகை நிருபர்கள் தர் முக்யமான செய்தியை பத்திரிகைகளுக்கு அனுப்பியுள்ளார்கள்.

இந்த மாத-முடிவுக்குள் இந்திய ராஜ்ய நிலைமையில் பெரிய மாறுதல் ஏற்படுமென்றும், பிரிட்டிஷ் மந்திரிகள் காங்கிரஸ் கோரிக்கைக்குக் கூடியவரையில் இணங்கி விடுவார்களென்றும், அரசியல் நிர்ணய ஸபையை யுத்தமுடிவுக்குப் பிறகு கூட்டி வைப்பதாக பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட் ஒப்புக்கொள்ளுமென்று லண்டனிலிருந்து நம்பத்தக்க செய்தி கிடைத்திருப்பதாயும், அதன் மீது, காங்கிரஸ் கார்யக்கமிட்டிக் கூடி மறுபடி காங்கிரஸ் மந்திரிகள் பதவி ஏற்கும்படி அநுமதிக்குமென்றும், ஜின்னா ளரர்ச்சியில் பிரிட்டனுக்கு சிரத்தைஎற்பட வில்லையென்றும், இந்தியா சட்டஸபைக்கு மறு எலெக்ஷன் நடத்தப்பட்டு வைஸ்ராய் நிர்வாஹ ஸபையும் விஸ்தரிக்கப்படுமென்றும் அந்த நிருபர்கள் தங்கள் செய்தியில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

காங்கிரஸ் ஆக்ஷி மறைந்ததில் மகிழ்ச்சி!

ஜின்னா கொண்டாடச் சொல்லுகிறார்

ஜின்னாவுக்கு காந்திஜீ வேண்டுகோள்.

காங்கிரஸ் மந்திரிகளின் ஆக்ஷியானது ஒழிந்துவிட்டதைக் குறித்து முஸ்லிம் ஸமூகத்தினர், முக்யமாக முஸ்லீம்கள் 22உ யன்று எங்கும் கூட்டம்போட்டு ஸந்தோஷத்தை வெளியிட்டு ஆண்டவனுக்கு நன்றி செலுத்தவேண்டுமென்று, ஜின்னா ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

அதில் அவர், காங்கிரஸ் மந்திரிகள் கொடுமையாயும், அநியாயும், அக்ரமமாயும் நிர்வாஹம் நடத்தியதாயும் காங்கிரஸ் காரரல்லாதவர்களைத் துன்புறுத்தியதாயும், முஸ்லீம்களுடையவும், மற்ற இதர மைனரிடி வகுப்பார்களுடையவும், மத, ஸமூஹ விஷயங்களை காங்கிரஸ் மந்திரிகள் மதிக்காமல் காசமாக்கியதாயும், ஆகையால் அந்த மந்திரிஸபை ஒழிந்ததில் மைனரிடிகள் ஸந்தோஷக்கொண்டாட்டம் நடத்த வேண்டியது அவச்யமாகிறதென்றும், குறிப்பிட்டிருக்கிறார். ஆயினும், முஸ்லீம் லீக்குக்காரர்களிலேயே பலர், ஜின்னாவின் இந்த வேண்டுகோளைக் கண்டிக்கிறார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தால் வேற்றுமையே அதிகரிக்கும் என்றும், கண்டிக்கப்படுகிறது.

காந்திஜீ ஜின்னாவுக்கு ஒரு வேண்டுகோள் வெளியிட்டு இத்தகைய கொண்டாட்ட ஆர்பாட்டங்களை நடத்தவேண்டாமென்று ஜின்னாவை பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறார். கவர்னர்களும், வைஸ்ராயும் ஜின்னாவுகார்களைப்பற்றி அபிப்பிராயம் வெளியிட்டு உண்மையை தெரிவிக்கவேண்டுமென்றும் காந்திஜீ கேட்டுக்கொண்டிருக்கிறார்.

முஸ்லீம்களே ஜின்னாவின் அபிப்ராயத்தை பலமாக ஆக்ஷேபிப்பதால் ஜனாப் ஜின்னா தமது அறிக்கையை வாபீஸ் பெற்று கொண்டாட்டம் நடத்தவேண்டாமென்று சொல்லிவிடக்கூடுமென்று நம்பப்படுகிறதாம்.

ஜின்னா அறிக்கை காரணமாக தேசமெங்கும் ஸாதகமாயும், பாதகமாயும் பலத்த சர்ச்சை இப்போதே எற்பட்டுவிட்டது.

மதுரையில் ராஜபக்தி ஊர்வலம்.

மதுரையிலுள்ள பொது ஜனங்களுகளான ஆஸ்திக ஸமூஹத்தினர், இந்த ஐரோப்பிய யுத்தத்தில், நமது ராஜசக்ரவர்த்திக்கு ஜயம் கிடைக்கவேணுமென்று பிரார்திக்கவும், யுத்தத்தில் தங்களுடைய ஸல்வாவிதமான உதவியையும் செய்யத்தயாராயிருப்பதாகத் தெரிவிக்கவும் பெரிய ஊர்வலத்தையும், பொதுக்கூட்டத்தையும் நடத்தினார்கள். ராஜ சக்ரவர்த்தியின் படத்தைவைத்து மூக்யத் தெருக்கள் வழியாகப் பெரிய ஊர்வலம் நடத்தப்பட்டது. ஜ்யோதிர் மடாதிபதி ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் போன்ற பிரபல பெரியோர்களும், பொது ஜனங்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர். முடிவில் ஸனாதனதர்மவித்யாலயத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. இதைப்போல் ஸ்ரீ கே. ஆர். வெங்கட்ராமய்யர் அவர்கள் கிரஹத்திலிருந்து புறப்பட்டு ஸ்திரீகளின் ஊர்வலமும் ஒன்று முக்யத்தெருக்கள் வழியாக சென்று ஸனாதர்ம வித்யாலயத்தில் முடிந்தது. கூட்டமும் தீர்மானமும் நடந்தன.

பம்பாய் விற்பனை வரியின் கதி.

கவர்னர் தள்ளிவிட்டார்.

பம்பாய் காங்கிரஸ் மந்திரிஸபை, துணிகள் மீது விதித்த விற்பனைவரியை கவர்னர் தமது விசேஷ அதிகாரபலத்தினால் அநுஷ்டானத்திற்கு வராமல் தடுத்து வைத்துவிட்டார்.

விலைவாசிகள் ஏற்றம்.

வட இந்தியாவில் கொள்ளைகள்.

விலையைக்கட்டுப்படுத்த சர்க்கார் யோஜனை.

யுத்தம் காரணமாகச் சில சுயநலம் கருதிய வியாபாரிகள் இந்தியாவில் அநேக பண்டங்களின் விலையை, முக்யமாக உணவுப்பொருள்களின் விலையை உயர்த்திவிட்டார்கள். இதனால் ஜனங்களுக்கு கஷ்டம் அதிகரித்துவருகிறது. எல்லா மாகாண கவர்ன்மெண்டாரும் விலையைக் கட்டுப்படுத்த தீவ்ரயோஜனை செய்து வருகிறார்கள்.

விலைவாசியேறிய காரணமாக வட இந்தியாவில் சிலவிடங்களில் தொழிலாளிகளும், பாமர ஜனங்களும் கடைகளைக் கொள்ளையிட்டதாகத் தெரிகிறது.

பல விடங்களில் கடைகள் மூடப்பட்டுக்கிடக்கின்றன.

ஸ்ரீ சங்கராச்சார்யாள் பகவத்

ஸ்ரீ சங்காவதாரம்.

ஸ்ரீ ஆசார்யவர்யாள் உபந்யாஸம்.

கும்பகோணம் ஸ்ரீமடத்தில் 1939-ஆவ அக்டோபர்-மீ 29-உ ஞாயிற்றுக்கிழமை நமது ஆச்சார்யவர்யாள் செய்த உபந்யாஸம்.

P. சங்கரநாராயணன். (கவர்ண்மென்ட் காலேஜ் லெச்சரர்.)

I

பிரநிஷ்டை சிவராத்ரி ஸமயத்தில் அபிஷேகத்திற்கு முன் நாம் அனுஷ்டானம் பண்ணும் த்யானச்லோகம் ஒன்று உண்டு. அதைச் சொல்லிக்கொண்டு, அதில் சொல்லியபடி மனதில் த்யானம் பண்ணிக்கொண்டு, பிறகு லிங்கத்திற்கு அபிஷேகம்பண்ண ஆரம்பிக்கவேண்டும். அந்த ச்லோகம்,

आपाताल नभस्थलान्त भुवन ब्रह्माण्डमाविस्फुरज्ज्योतिः
स्फाटिक लिङ्गमौलि विलसत्पूर्णेन्दु वान्तामृतैः ।
अस्तोकाप्लुतमेकमीशमनिशं रुद्रानुवाकान्जपन्
ध्यायेत ईप्सित सिद्धयेऽद्रुतपदं विप्रोऽभिषिञ्चेत शिवम् ॥

என்பது. இந்த ச்லோகத்தில் ஸாக்ஷாத் பரம சிவனுடைய ஸ்வரூபம், பூஜாகாலத்தில் செய்யவேண்டிய ஜபம், பகவானை த்யானம் பண்ணவேண்டிய விதி, அந்த த்யானத்தால் உண்டாகும் பலன் இவைகளே சிருபித்திருக்கிறது. பாதாளம் முதல் நபஸ்தலம் வரைக்கும் வ்யாபித்திருக்கிறார் ஸர்வேச்வரன். அவர் காலதேசம்போல்[1] ஆத்யந்தரஹிதர். அவர் ஸர்வவ்யாபி. ஈச்வர ஸ்வரூபம் ஆதியும் அந்தமும் இல்லாமல் பரிபூர்ணமானது. அது ஜ்யோதிர்மயமானது. சந்திரனுடைய கிரணங்களாகிய ப்ரகாசமும் குளிர்ச்சியுமுள்ள அமிர்த கிரணங்களால் அலங்கரிக்கப்பட்ட மௌளியோடு கூடியது. இப்படி பரமசிவனை த்யானம்பண்ணி, இச்சிக்கப்பட்டவைகளையெல்லாம் அடைய ஸ்ரீருத்ரம் முதலியவைகளை ஜபம் பண்ணிக்கொண்டு அபிஷேகம் செய்யவேண்டும்.

II

இப்படி ஆத்யந்த ரஹிதமாய் பரிபூர்ணமான ஸ்வரூபத்தையுடைய ஸர்வேச்வரனை ஸ்படிகலிங்கத்தில் த்யானம்பண்ணுகிறோம். ஈச்வராராதனத்திற்கு லிங்கத்திற்கு விருத்தாகாரமும், அதை ஸ்படிகமாயும் ஏற்படுத்தினதற்கு காரணமுண்டு. கணிதத்தில் வயக்த கணிதம் என்றும், அவ்யக்த கணிதம் என்றும், இரண்டு விதம். வ்யக்தகணிதத்தை இங்கிலீஷில் arithmetic என்பார்கள். அவ்யக்தகணிதத்தை algebra என்பார்கள். நம் மனதுக்கு ஸுலபமாக வ்யக்தமாகாத விஷயத்தை ஒரு ஸங்கேத அக்ஷரத்தைக்கொண்டு வ்யவகாரம் செய்து முடிவிற்கு வருகிறோம். ஆத்யந்தரஹிதமான ஸர்வேச்வரனுக்கு ஒரு பிம்பம் ஏற்படுத்தவேண்டுமானால், அந்த பிம்பத்தின் ஆகாரம் சதுரம் முதலிய ரூபமுள்ளதாக இருக்கக்கூடாது. இந்த மாதிரி ரூபத்திற்கு ஆரம்பன்தானம், முடிவுஸ்தானம் என்பவை உண்டு. ஆனால் விருத்தாகாரமான பிம்பத்திற்கு எது ஆரம்பம், எதுமுடிவு என்று சொல்லமுடியாது. ஆகையால்தான் ஈச்வரனின் லிங்கத்திற்கு விருத்த ரூபமான ஆகாரம் ஏற்படுத்தப்பட்டது.

இந்த லிங்கம் ஸ்படிகமாய் இருப்பது ஒரு விசேஷம். மற்ற வர்ணங்களுள்ள லிங்கங்களுக்கு அபிஷேகம் பண்ணும் பொழுது கூட அவைகள் ஸ்படிகமாய் இருப்பதாய்த்தான் த்யானம் பண்ணவேண்டும். ஏனென்றால் ஸ்படிகம் பரப்ரும்ம ஸ்வரூபம்போல் களங்கமில்லாதது. நிர்மலமானது. சுப்ரமானது. ஆராதகன் எந்த வர்ணமுள்ள புஷ்பங்களையோ, இதர வஸ்துக்களையோ அதன் சமீபத்தில் வைத்தாலும், அதன்மேல் போட்டாலும், அது அந்த வர்ணத்தையடைந்ததுபோல் அவன் புத்திக்குத் தோன்றுகிறது. அது ஸ்வச்சமாய், சுப்ரமாய்த்தான் இருக்கிறது. ஆராதகன், பூஜாகாலத்தில் அதில் ஆரோபிக்கும் வர்ணாதி குணங்கள் அதில் பிரதிபலிக்கின்றன. இதே மாதிரி ஈச்வராஸ்வரூபம் எல்லோருக்கும் ஒன்றுபோல் த்ரைகுண்யாதீதமாய் பிரகாசிக்கிறது. ஆனால் நம்முடைய மனதிலுள்ள சத்வ, ரஜஸ், தமோகுணங்களுக்குத் தகுந்தபடி ஈச்வராஸ்வரூபம் இந்த குணங்களில் ஒன்றோடு கூடினதாய் விளங்குகிறது.

சுப்ரமாயும், ஸ்வச்சமாயும் இருக்கும் ஸ்படிக லிங்கத்திற்கு, ஸாக்ஷாத் சந்த்ரமௌளியாகிய பரமசிவன் குளுமையான அமிர்தகிரணங்களால் ஜ்யோதிர்மயமாய் இருப்பதுபோல், பூஜாக்ரமத்தில் அபரிமிதமான கூர்ரதாரைகளிலுல் அபிஷேகம் பண்ண வேண்டும். அந்த சம்பத்தில் ருத்ராநுவாகங்களை ஜபம்பண்ண வேண்டும்.

III

இப்படி அபிஷேகம் பண்ணும் சமயத்தில் சமகம், ஸ்ரீ ருத்ரம் இவைகளை ஜபம் பண்ணுகிறோம். இவை யஜுர் வேதத்தில் உள்ள மந்த்ரங்கள்.[2] இந்த மந்த்ரங்களில் கவனிக்கவேண்டிய ஒரு விசேஷமுண்டு. சமகத்தின் அனுவாகம் शं च मे, मयश्च मे என்று ஆரம்பிக்கிறது, ஸ்ரீ ருத்ரத்தில் शंभवे मयो भुवे என்றும் शंकराय च मयस्कराय என்றும் சொல்லியிருக்கிறது. இந்த பதங்களுக்கு அர்த்தம் தெரிந்துகொள்ள வேண்டும்.

இவைகளெல்லாம் வேத மந்த்ரங்கள். ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்ற நான்கு வேதங்களில், யக்ஞங்களுக்கு உபயோகப்படும் வேதங்கள் முதல் மூன்றே. அதர்வண வேதம் शान्तिकं पौष्टिकं இவைகளுக்கு மார்க்கங்களைக்காட்டுகிறது. யக்ஞ மூர்த்திக்கு ருக், யஜுஸ், ஸாமம் என்ற முதல் மூன்று வேதங்களும் போதுமானதாகையால் அவைகளுக்கு த்ரயி என்று பெயர்.

இவைகளில் யஜுர்வேதத்தில் शं, शंभु, शंकर என்றும் मयः, मयोभूः मयस्कर என்றும் காணப்படுகிறது. இந்த வேத மந்த்ரங்களின் அர்த்தத்தைப் பற்றி விசாரிக்கும் பொழுது, வேதங்களின் பல பாகங்கள் பலவிதமான தாத்பர்யத்தைக் கொண்டவைகளென்று

[1] காலம் தேசம் இரண்டும் ஆதியும் அந்தமும் இல்லாதவை. காலத்திற்கு ஒரு ஆரம்ப சமயம் சொன்னால், அதற்கு முன் இருக்காது என்ன வென்று ஒரு கேள்வியுண்டாகும். அப்படியே தேசத்திற்கும்.

[2] வேதங்கள் ருக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என்ற நான்கு. வேதங்கள் 4, வேதாங்கங்கள் 6, உபாங்கங்கள் 4, உபவேதங்கள் 4, இவைகளெல்லாம் சேர்ந்து 18 வித்தைகள். ஒருவன் சாங்கோபாங்கமாய் வேதாத்யயனம் பண்ணியிருப்பதாய்ச் சொல்லுகிறோமல்லவா? அப்படிச் சொல்லும் பொழுது வேத, வேதாங்க, உபாங்கங்களைக் குறிக்கிறோம். சிக்ஷா, வ்யாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜ்யோதிஷம், கல்பம் இவை வேதாங்கங்கள். ஒரு புருஷனுக்கு அங்கங்கள் போல் இவை வேதத்திற்கு அங்கங்கள் சிக்ஷா என்பது மூக்குக்கு சமானம்; வ்யாகரணம் வாய்! சந்தஸ், பாதம்; நிருக்தம், காது, ஜ்யோதிஷம், நேத்ரம், கல்பம், ஹஸ்தம், மீமாம்சா நியாயஸிஸ்தாரம், புராணம், தர்ம சாஸ்திரம் இவைகள் உபாங்கங்கள். கந்தர்வ வேதம் தனுர் வேதம், ஆயுர் வேதம், அர்த்த சாஸ்திரம் இவை உபவேதங்கள் என்று சொல்லப்படும்.

இந்த 4 வேதங்கள், 6 வேதாங்கங்கள், 4 உபாங்கங்கள், 4 உபவேதங்கள், ஆக பதினெட்டும் ஒரு ப்ராம்மணன் தெரிந்துகொள்ளவேண்டிய சகல வித்யைகளுக்கும் அடங்கியவை. எல்லா வித்யைகளும் இவைகளுக்குள் அகப்பட்டுவிட்டன. ஒவ்வொரு ப்ராம்மணனும் ஸ்வசாகையான வேதத்தையும், மற்ற வித்யைகளில் ஏதாவது ஒன்றையுமாவது அப்யஸித்து மற்றவர்களுக்கு ப்ரவசனம் பண்ணவேண்டும். இப்படிச்சொன்னதால், வேறு பாஷைகளிலோ, அல்லது வேறு தேசங்களிலோ உள்ள வித்யையை அப்யஸிக்கக் கூடாது. என்றில்லை. ஆனால் வைதிகவித்யையை அப்யஸம் பண்ணாமல், மற்றதைக் கற்றுக்கொள்வது உசிதமில்லை. இந்த வைதிக வித்யைகளில் எதையும் அப்யஸிக்கலாம். ருக்யம், தேம், வாச்யம் முதலிய காந்தர்வ வேதத்தையோ, அல்லது தனுர் வேதத்தையோ வேண்டுமானாலும் ப்ராம்மணன் அப்யஸிக்கலாம். ஆனால் அதை ஜீவனோபாயமாக வைத்துக்கொள்ளக்கூடாது.

தொடர்ச்சி 3-பக்கம்)

(2ம் பக்கத்தொடர்ச்சி)

சிலர் சொல்லுகிறார்கள், எல்லா வேதங்களுடைய பரமதாத்பர்யம் என்னவென்பதில் சிலருக்குள் அபிப்ராயபேதம் இருக்கிறது.

வேதங்களின் வெவ்வேறு பாகத்திற்கு வெவ்வேறு அபிப்ராயம் என்பதும், வேதங்களின் பரமதாத்பர்யம் பலவிதமானது என்பதும் ஸரியில்லை. எல்லா வேதங்களும் ஒருமுகமாக ஒரே தாத்பர்யத்தைத்தான் சொல்லுகின்றன. வேதத்தின் முக்கிய தாத்பர்யம் என்னவென்று நாம் தெரிந்துகொள்ள, வேதத்திலிடத்திலேயேபோய் நாம் கேட்டால் ஒரு ச்ருதி சொல்லுகிறது:

सर्वे वेदा यत्पदमामनन्ति
तपांसि सर्वाणि च यद्वदन्ति ।
यदिच्छन्तो ब्रह्मचर्यं चरन्ति
तत्ते पदं सङ्ग्रहेण ब्रवीमि ॥

இது நசிகேதஸுக்கு யமனுடைய வசனம். "எல்லா வேதங்களும் எந்த பதத்தைக் குறிக்கின்றனவோ, எல்லா தபஸ்களும் எதைப்பற்றி விஸ்தரிக்கின்றனவோ, எதை விரும்பி முமுக்ஷுக்கள் ப்ரம்மசர்யத்தை அனுஷ்டிக்கின்றார்களோ, அந்த பதத்தை உனக்கு ஸங்க்ரஹமாய் சொல்லுகிறேன்" என்று சொல்லி அடுத்தாற்போல ओमित्येतत् என்றதால் எல்லா வேதங்களும் முக்ய தாத்பர்யமாய் குறிக்கும் பதம் ஓங்காரம் என்று காட்டப்பட்டது. இந்த ओम् என்ற அக்ஷரத்தின் வ்யாக்யானத்தை மாண்டுக்யோபனிஷத்தில் காண்கிறோம். அதில்

सर्वं ह्येतद्ब्रह्म, अयमात्मा ब्रह्म, सोयमात्मा चतुष्पात्

என்று சொல்லி, ஜாகரிதஸ்தானம் முதல் பாதம் என்றும், ஸ்வப்னஸ்தானம் இரண்டாம் பாதம் என்றும், ஸுஷுப்தஸ்தானம் மூன்றும் பாதம் என்றும், நான்காவதான துரீயஸ்தானத்தைப்பற்றி விவரிக்கும் பொழுது अदृष्ट, अव्यवहार्य, अग्राह्य, अलक्षण, अचिन्त्य, अव्यपदेश्य, एकात्मप्रत्यय-सार, प्रपञ्चोपशम, शान्त, शिव, अद्वैत चतुर्थं मन्यन्ते

என்றும் स आत्मा स विज्ञेयः என்று சொல்லுகிறது. ஆகவே, எல்லா வேதங்களுடைய முக்ய தாத்பர்யமாயுள்ளது ஓங்காரம். இந்த ஓங்காரம் மனஸுக்கும் வாக்குக்கும் எட்டாமல் அத்வைதமாய் எங்கும் வ்யாபித்து அகண்டாகாரமாய் இருக்கும் ப்ரும்மஹத்தைத் தான் வ்யபதேசம் பண்ணுகிறது என்று ச்ருதியினாலேயே தெளிவாய் தெரிகிறது. இதே விஷயத்தை நம் பரமாசாரியார்கள் தசச்லோகியில் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள்.

न चोर्ध्वं न चाऽधो न चान्तर्न बाह्यं
न मध्यं न तिर्यक् न पूर्वापरा दिक् ।
वियद्व्यापकत्वात् अखण्डैकरूपः
तदेकोऽविशिष्टः शिवः केवलोऽहम् ॥

என்ற ஐந்தாவது ச்லோகத்திலும்,

न जाग्रन्मे स्वप्नको वा सुषुप्तिः
न विश्वो न वा तैजसः प्राज्ञको वा ।
अविद्यात्मकत्वात् तयाणां तुरीयः
तदेकोऽविशिष्टः शिवः केवलोऽहम् ॥

என்ற பத்தாவது ச்லோகத்திலும் துரீயபாதமாய் ஓங்காரப்ரதிபாத்யமான ப்ரும்மஹத்தின் அகண்டாகாரத்தைச் சொல்லியிருப்பதைக் கவனிக்கவேண்டும்.

IV

இந்த அகண்டாகாரமான, शान्त, शिव, अद्वैत என்று சொல்லப்பட்ட ப்ரும்மஹத்தான आपाताल नभस्थलान्त भुवन ब्रह्माण्ड आविस्फुरत ज्योतिயாய் விராட் ஸ்வரூபத்துடன் ப்ரகாசித்து சிவ என்ற நாமாவால் வ்யவஹரிக்கப்பட்டு த்யானத்திற்கும் ஆராதனத்திற்கும் ஸுலபமாய் விளங்குகிறது.

சாதாரணமாக ஒரு வஸ்துவின் முக்யஸ்தானம் அதன் மத்ய ப்ரதேசத்தில்தான் இருக்கும். உதாரணமாக ஸ்ரீரங்கம் கோவிலை எடுத்துக்கொள்வோம். அதில் ஸப்தப்ராகாரங்களும், கோவிலில் பல இடங்களில் பல விக்ரஹங்களும் இருக்கின்றன. இந்தக் கோவில் எந்த மூர்த்திக்காகக் கட்டப்பட்டது, எது ப்ரதான விக்ரஹம் என்று தெரிந்துகொள்ள ஒருவன் என்ன பண்ணுவான்? அவனுக்குச் சொல்ல அங்கே ஒருவரும் இல்லை என்று வைத்துக்கொள்ளுவோம். விழுகு மேற்கில் கோவில் எத்தனை அடி, தெற்கு வடக்கில் எத்தனை அடி என்று அளந்து பார்த்து இதற்கு மத்யை கணக்குப் பார்த்து, அந்த மத்யப்ரதேசத்தில் இருக்கும் மூர்த்தி ப்ரதானமூர்த்தி என்று தெரிந்துகொள்வான். இதில் கவனிக்கவேண்டியது ஒன்றிண்டு. மத்யப்ரதேசத்தில் ப்ரதான விக்ரஹத்தின் மண்டபத்தின் மேல்தான் கோவிலின் முக்ய சிகரமும் காணப்படும். ஆகவே மத்யஸ்தானமாய் விளங்குவதுதான் சிகரமாய் ஸ்ரேஷ்டமாய் விளங்குவது. அது போல் त्रयी என்று சொல்லப்பட்டருக், யஜுஸ், ஸாமம் என்ற மூன்று வேதங்களின் முக்ய தாத்பர்யத்தைத் தெரிந்துகொள்ள, அவைகளின் மத்யவேதமாகிய யஜுர் வேதத்தைப் பரீக்ஷிக்க வேண்டும். யஜுர் வேதத்தில் மொத்தம் 7 காண்டங்கள். இந்த ஏழில் நடுபாகம் 3½ அதாவது நாலாவது காண்டத்தின் மத்யிமம். 4வது காண்டத்தின் மத்ய மந்த்ரம் பஞ்சாக்ஷர மந்த்ரம். இந்த பஞ்சாக்ஷரத்தில் முக்யமாய் உள்ளது शिव इत्यक्षरद्वयम् ஆகவே எல்லா வேதங்களுக்கும் சிகரமாய்விளங்கும் ஓம் என்று பதமும் பஞ்சாக்ஷரமந்த்ரத்தின் முக்யபதமாகிய शिव என்பதும் ஒரே பரப்ரும்மமத்தைத்தான் வ்யவஹரிக்கின்றன என்பது வ்யக்தமாகிறது. இந்த அகண்டாகாரமாய் एकरूपமாய் இருக்கும் ப்ரும்ம ஸ்வரூபத்தான் आपाताल नभस्थलान्त व्யாபித்திருக்கும் சம்புவாய் ஸாக்ஷாத் சர்வேஸ்வரனுப் த்யானம் பண்ணப்பட்டு ஆராதிக்கப்படுகிறது.[3]

V

இப்படி ஆராதிக்கப்படும் ஸாக்ஷாத் பரமசிவனே சம்பு என்றும் சங்கரர் என்றும் சொல்லப்படுகிறார். शंभवे, मयोभुवे शङ्कराय, मयोभुवे, என்றும் பொழுது शान्तं शिवं अद्वैतं என்று எந்த பதத்தை எல்லா வேதங்களும் குறிக்கின்றனவோ அந்த சாந்தமாய் சிவ ஸ்வரூபமான பரம தத்வத்தைத் தான் இந்த வார்தைகளால் சொல்லுகிறோம். பாதாளம் முதல் ஆகாசம் வரைக்கும் வ்யாபித்து ப்ரும்மாண்டமான விராட் ஸ்வரூபத்துடன் விளங்கும் ஜ்யோதிர்மயமான ஸ்ரீ பரமசிவனே தான் நமது பரமாசார்யாளாகிய ஸ்ரீ சங்கராசார்யரால் அவதாரம் பண்ணினார் என்று ஸ்ரீ சங்கர விஜயங்களில் தெளிவாய் சொல்லப்பட்டிருக்கிறது.

[பூலோகத்தில் மிகவும் அரிதான உண்டாக்கும் பல அவைதிக மதங்கள் இளம்பி ச்ருதி ப்ராமாண்யத்தைக்கெடுத்து ஜபம், தபஸ், சதாசாரங்கள் இவைகளெல்லாம் இல்லாமல் போய்விட்டதால், தேவர்கள் கருணை மூர்த்தியான சம்புவிடம் சென்றார்கள். அவரையடைந்து

तद्वाँल्लोकरक्षार्थं मुत्सृज्य निखिलम्खलान् ।
वर्त्म स्थापयतु श्रौतं जगद्येन सुखं व्रजेत् ॥

என்று லோகரக்ஷணத்திற்காக வேதப்ரோக்தமான ஸன்மார்க்கத்தை பூலோகத்தில் ஸ்தாபிக்க வேண்டுமென்று ப்ரார்த்தித்தார்கள்.

इत्युक्त्वोपरतान्देवानुवाच गिरिजाप्रियः ।
मनोरर्थं पूरयिष्ये मानुष्यमवलम्ब्य वः ॥
दुष्टाचारविनाशाय धर्मसंस्थापनाय च ।
भाष्यं कुर्वन्ब्रह्मसूत्रतात्पर्यार्थविनिर्णयम् ॥
मोहनप्रकृतिद्वैतध्वान्तमध्याह्नभानुभिः ॥
चतुर्भिः सहितः शिष्यैश्चतुर्हरिरिवद्रुजैः ।
यतीन्द्रः शंकरो नाम्ना भविष्यामि महीतले ॥

என்று ஸ்ரீ கிரிஜாப்ரியனான சம்பு, தேவதைகளின் ப்ரார்த்தனைக்கு இணங்கி "லோகத்தில் துஷ்டாசாரங்களைத்தொலைத்து தர்மத்தை ஸ்தாபிக்க நான்கு சிஷ்யர்களோடு, யதீந்திரராய் சங்கரர் என்ற பெயரோடு அவதாரம் பண்ணுகிறேன்" என்று சொன்னார். அந்தப்ரிதிக்ஞையின்படி, கேரள தேசத்தில் காலடி க்ஷேத்ரத்தில்

[3] அப்படி த்யானம் பண்ணும் பொழுது அந்த ஸ்வரூபத்தை பஞ்சமுகியோடு கூட பரிசுத்தமாய் இருந்து, இந்த சம்புவே தான் பஞ்சாக்ஷர ப்ரதிபாத்யமான வஸ்து என்று த்யானம் பண்ணவேண்டும். ஐந்து விதமான முகை ஹஸ்தம், கண்டம், வக்ஷஸ், ஹ்ருதயம், பாஷ்யமானபிம்பம் இவைகளுக்கு சம்பந்தப்பட்டது. ஹஸ்தத்தில் பில்வம், கண்டத்தில் ருத்ராக்ஷம், வாயில் பஞ்சாக்ஷர ஜபம், ஹ்ருதயத்தில் த்யானம், பாஷ்யத்தில் லிங்காகாரமான பிம்பம் ஆகிய இவைகள். இந்த பஞ்ச முகியுடன் சிவாராதனம் பண்ணவேண்டும் என்ற விதி.

(தொடர்ச்சி 6பக்கம் பார்க்க)

பரித்ராணாய சாதூனாம் விநாசாய ச துஷ்கதாம்
தர்மஸம்ஸ்தாபனார்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥

ஆர்யதர்மம்

பிரமாதி-ஹே கார்த்திகை-மீ 29உ

ஹிந்து மஹா ஸபையும் ஸ்நேதனிகளும்.

இந்த மாதம் 28உ முதல் மூன்று தினங்கள் வரையில் ஹிந்து மஹா ஸபையின் அகில இந்தியக் கூட்டமானது கல்கத்தாவில் நடை பெறப்போகிறது. வங்காளத்தில் ஸர். என். என். ஸர்க்கார் போன்ற மிகப் பிரபல ஹிந்து கனவான்கள் ஹிந்து மஹா ஸபை விஷயத்தில் மிகுந்த சிரத்தை காட்டி வருகிறபடியால் கல்கத்தா ஸம்மேளனம் முக்யத்தன்மையுள்ளதாக விருக்கும். மேலும் வங்காளமானது வகுப்புத் தீர்ப்பினாலும், அது விஷயமாகக் காங்கிரஸ் காட்டிவரும் விபரீத மனோபாவத்தினாலும் பெரும் வருத்தமடைந்திருக்கிறது. தவிர வும் இந்திய ராஜீய நிலைமையானது இதற்கு முன் எப்போது மில்லாத ஒரு பெரிய நெருக்கடியில் இருந்துவருகிறது. முக்யமாக ஹிந்து ஸமூஹமானது தனது உரிமையை, பற்பலவித எதிரிகளிடமிருந்து காத்துக் கொள்ள வேண்டிய நிலைமையிலிருக்கிறது.

கல்கத்தா ஸம்மேளனத்தின் போது அங்கேயே ஸ்நேதனிகளின் கூட்டமும் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது. அகில இந்திய வர்ணச்ரமஸ்வராஜ்ய ஸங்கத்தின் கார்யக்கமிட்டிக் கூட்டமும் அங்கு அச்சமயம் நடைபெறப் போகிறது. ஹிந்துஸபைத் தலைவர்களும் ஸ்நேதனத் தலைவர்களும் சேர்ந்தியோஜித்தே இந்த ஏற்பாட்டைச் செய்திருப்பதாகத் தெரிகிறது. இது வரவேற்கத்தக்க ஏற்பாடுதான்.

ஹிந்துமஹா ஸபையானது ஹிந்து ஸமூஹத்தின் ராஜிய, ஸமூஹ உரிமைகளுக்குத் தீங்குநேராமல் காத்து ஹிந்துக்களின் நிலைமையை உயர்த்த முயற்சிக்கிறது. ஸ்நேதன தர்மிகளும், ஹிந்து ஸமூஹத்தின் மத உரிமைகளுக்கு இதரர்களால் பங்கம் நேராமல் ஸம்ரக்ஷித்து ஹிந்து ஸமூஹத்தின் பெரிய கௌரவத்தை நிலைநாட்ட விரும்புகிறது. ஆகவே இரண்டு கக்ஷிகளும் ஹிந்து ஸமுதாய ரிரேயஸ்ஸை ரக்ஷிக்கும் அடிப்படையான கொள்கையைக் கொண்டிருப்பதால் இனி இரண்டும் சேர்ந்து வேலை செய்ய ஸந்தர்ப்பம் ஏற்பட்டிருப்பதாகத் தலைவர்கள் நினைக்கிறார்கள்.

ஹிந்துஸமூஹ ராஜீய உரிமைகளை இதர வகுப்பார்மட்டும் கெடுக்கிறார்களென்பது இல்லை. ஹிந்துக்களுக்குள்ளேயே ஒரு பெரிய ஸ்தாபனமாயிருக்கும் காங்கிரஸானது ராஜீய நன்மையைக்கருதி இதரர்களுக்கு வெகுதூரம் விட்டுக் கொடுத்து ஹிந்துஸமூஹத்தின் உரிமைகளுக்கு தீங்கு செய்யும் மனோபாவமுள்ளதாயிருக்கிறது. இது நீண்டகாலமாயுள்ள நிலைமையாயினும் ஸமீப்காலத்திலும், எதிர்காலத்திலும் இது அதிக அபாயம் விளைக்கக்கூடிய ஸ்திதிக்கு வந்துகொண்டிருக்கிறது.

காங்கிரஸானது ஹிந்து ஸமூஹ ராஜீய உரிமைக்குப்போல், மத உரிமைக்கும் கேடு செய்ய முற்பட்டிருப்பது ஸமீபகால ஸம்பவங்களால் தெளிவாயிருக்கிறது. பற்பல இதர மத வகுப்பினர் நிறைந்த சட்டஸபைகளில், இதர மதஸ்தர்களுடைய வோட்டு பலத்தைக் கொண்டு ஹிந்துமதத்தைச் சீர்குலைக்க காங்கிரஸ் முற்பட்டிருப்பதை உடனே தடைசெய்யவேண்டியது ஹிந்து ஸமூஹத்தின் பெரிய கடமையாயிருக்கிறது. இதைத் தற்போது ஹிந்து ஸபையாரும், ஸ்நேதனிகளும் உணர்ந்துகொண்டிருப்பது ஸந்தோஷிக்கத் தக்கதே.

ஸ்நேதனிகள், ஆசாரத்திருத்தக்காரர்களுடைய பிரசாரத்தைத் தடுக்க விரும்பவில்லை. ஹிந்து மதத்தில் சட்டமூலமான நிர்பந்தங்களை உண்டு பண்ணுவதையே அவர்கள் ஆக்ஷேபிக்கிறார்கள். ஹிந்து மகா ஸபையினரில் பலர் தீண்டாமை விலக்கு, ஆலயப்பிரவேசம் போன்ற சீர்திருத்தங்கள் ஹிந்து ஸமூஹ ஒற்றுமைக்கு அவச்யமென்று நினைப்பவர் இருக்கலாம். ஆயினும் ஹிந்து மகாஸபையின் அடிப்படையான கொள்கையில் மேற்கண்ட மதவிருத்த அம்சங்களைப் புகவிடாமலிருந்தால் ஸ்நேதனிகளும் ஹிந்து மஹா ஸபையில் சேர்ந்து உழைக்க ஸந்தர்ப்பம் ஏற்படும்.

காங்கிரஸில் இத்தகைய ஸௌகர்யம் இல்லை. அது மத விருத்த சீர்திருத்தங்களே அடிப்படையான கொள்கையாகக் கொண்டிருக்கிறது. மேலும் ஹிந்து மகாஸபை போன்ற ஸ்தாபனங்களில் சேர்ந்தவர்கள் காங்கிரஸில் மெம்பர்களாகச் சேர வழியின்றி தடையும் செய்திருக்கிறார்கள். ஆதலால் ஹிந்து மஹா ஸபையினர் ஹிந்து மத விருத்தமான அம்சங்களை நீக்கியும், சட்ட ஸபைகளின் மூலம் நிர்பந்தம் செய்வதை எதிர்த்தும் ஸௌகர்யம் செய்து கொடுப்பதாயிருந்தால் ஹிந்து ஸபையுடன் ஸ்நேதனிகள் சேர யாதொரு தடையுமிராது.

கல்கத்தாவில் கூடும் ஹிந்து மஹா ஸபையார் இந்த முக்ய விஷயத்தில் கவனம் செலுத்தி ஹிந்து ஸமூஹத்தில் சிதறிக்கிடக்கும் பல பிரிவுகளையும் ஒன்று சேர்த்து அச்சமூஹத்தின் சக்தியை பலப்படுத்த வழி தேடுவார்களென்று எதிர் பார்க்கிறோம்.

ஸ்நேதனிகளும் ராஜீய நிட்டமுள்ள ஒரு கக்ஷியுடன் சேர்ந்து தங்கள் கொள்கையை நிறைவேற்றிக் கொள்ள முயற்சிப்பதே தற்போது பலன் தரத்தக்க வழியென்பதை உணரவேண்டும்.

சென்னை ராஜாங்கஸபை

தேர்தல் நடத்தப்படும்

சென்னை ராஜாங்க ஸபையில் 3 வருஷ காலாவதி காரணமாக காலியாகும் 16 ஸ்தானங்களுக்கு வருகிற மார்ச்சு மாதம்எலெக்ஷன் நடத்தப்படவேண்டுமென்று சென்னை கவர்னர் முடிவு செய்திருக்கிறார்.

இந்த எலெக்ஷனில் காங்கிரஸ் வாதிகள் அபேக்ஷகர்களாக நிற்பார்களாம்.

வாரக் குறிப்புகள்.

(ஸ்ரீ வத்ஸ வே. ஸோ. சர்மா.)

நல்வழிகாட்டுமோ? சிதம்பரத்தில் கூடும் அ. இ. வ. ஸ்வராஜ்ய ஸபை கூடிக் கலைவதோடு நிற்காமல் உடனே அரசாங்கம் அதர்ம சட்டங்களை அகற்றும்படியும் எளிய தார்மிகர்கூட இக்கிளர்ச்சியில் சேர்ந்து ஊக்கத்துடன் வேலை செய்யும்படியும், சுமூ கூறப்பான ஓர் ப்ரசார ஸபை வேலை செய்யும்படியும் தக்க ஏற்பாடு செய்யவேணும்.

வெற்றிவீரர் மறப்பரா? சிதம்பர க்ஷேத்ரத்திலே முன்னம் ஓர் பெருங் கிளர்ச்சி தோன்றியபோது ஸ்ரீ தீக்ஷிதஸமூஹத்தின் ஒற்றுமையால் பஞ்சமர் உள்ளே தலை காட்டாததுடன் அவர்களுக்கென கூடிய ஸபையில் ஆட்களே இல்லாமல் ஸபை கலைந்தது. இச்சமயமும் பஞ்சமர் கூட்டம் கடக்கிறதாம்.

தெய்வநெறி கற்பகம் முயற்சிக்குமா? மீழுப்புரத்தில் இதன் முதல் மஹாநாடு ஓர் வாரம் கூடுகிறது. பக்திமார்க்க ப்ரதானமான இச்சபை ஆலயவிஷயத்தை அவச்யம் கவனிக்கவேண்டும். ஆதலால் தலைவர் ஆலயரக்ஷண தீர்மானங்களைக் கவனிக்க வேண்டுகிறேன்.

சிறுபான்மையோரை மதித்தனரா? ஜின்ஜி தேசீய சபை மந்திரிபதவியை விட்டதற்கு பெருமகிழ்ச்சிக் கொண்டாட நாள் குறிப்பிட்டார். அளவிற்குமிஞ்சி மஹம்மதியருக்குச் சலுகைக் காட்டப்பட்டது. ஆனல் அவைகளை அவமதித்து அதர்ம சட்டம் செய்ததால் ஓர் புறம் மஹம்மதியரும், மற்றோர் புறம் பஞ்சமரும் அச்சபையைத் தாக்குகின்றனர். உண்மையாக ஸந்தோஷிக்க வேண்டியவர் வேறு. இது இறைவன் பிரேரணையோ?

ஸ்ரீ ஸத்யமூர்த்திக்கு நல்லபாடம்! தேசிய ஸபையில் வெகு சிலரே மதநம்பிக்கையும் அனுஷ்டானமுமுள்ளவர். ஸ்ரீ எஸ். சத்யமூர்த்தி வைதிகவேஷத்தை விடாதவர். ஸ்ரீ பார்த்தஸாரதி குளத்திற்கு பஞ்சமரை விட்டால் ஜலம் விடுவதாகக் கூறினாரவர். அதற்கு கூ. மி. வாரப்பத்திரிகையார் நல்ல பதில் அங்கேயே கூறினர். "மஹம்மதியருக்கும், பஞ்சமருக்கும் தனி உதவிசெய்வது ஓர் வகுப்புக்குச் சலுகைகாட்டியதாகாதோ" என்பது ஆணித்தரமான பதில்.

உத்ஸாஹப்படுத்தலவச்யம்! ஜோதிர் மடாதிபதிகள் தென்ஜுட்டில் ப்ரசாரம் செய்வதுடன் ஓர் அப்ராம்மண ஆஸ்திகருக்கு "ஆஸ்திகரத்ன" மெனப் பட்டமளித்தார்.

வருக! வருக! எல்லோரும் வருக! சிதம்பரத்தில் நடக்கும் தர்மஸபைக்கு ஒவ்வோர் ஆஸ்திக ஸபையும் ப்ரதிநிதிகளை அனுப்பி எண்ணிறந்த ஆஸ்திகர் ஒன்றுகூடி வைதிக பலத்தைக் காட்டவேண்டும். நடராஜர் தர்சனமும் சாலச்சிறந்ததன்றே!

கும்பகோணத்தில் வனபோஜனம்.

நமது நகர் யாகசாலைத்தெருவில் ஸ்ரீமான்கள் சதுர்வேதி வெங்கடேசாசாரியார் நாராயணசாரியார், அண்ணு ஆசாரியார் முதலியவர்களின் முயற்சியால் சென்ற வருஷம் போலவே இவ்வருஷமும் 2—12—39 சனிக்கிழமையினம் கார்த்திக மாதத்தில் அவசியம் செய்யப்படவேண்டிய வனபோஜனம் சிறப்பாக நடத்தப்பட்டது. மத்தியானம் பூஜை, தர்பிஹோமம், ப்ராம்மண போஜனம் முதலியன செய்யப்பட்டு அனைவரும் ஸ்ரீ கார்த்திக தாமோதரனின் அனுகிரகத்திற்குப் பாத்திரர் களானார்கள் என்று ஸ்ரீ எம். ராமராவ் பி. ஏ. எழுதுகிறார்.

75 ரூ சம்பளம்

கோபால ரெட்டியார் வாங்க மாட்டாராம்

டாக்டர் ராஜன் சம்பளத்தை அனுப்பக்கோருகிறார்

சட்ட ஸபை மெம்பர்களுக்கு வேலையில்லாத இந்த ஸமயத்தில் 75 ரூ மாதச் சம்பளம் கொடுப்பது அநியாயமென்று ஸ்ரீ ஸ்ரீநிவாஸஅய்யங்கார் கூறினாரல்லவா? அதன் மீது மாஜி மந்திரி கோபால ரெட்டி தாம் அந்தச் சம்பளத்தை வாங்க மறுத்து விடப்போவதாகக் கூறுகிறார்.

டாக்டர் ராஜன் தமது 75ரூ சம்பளத்தை ஹரிஜன நிதிக்கு அளிப்பதாக சென்னை மெயில் பத்திரிகையில் பிரசுரமாயிருக்கிறது.!

கொடிச் சண்டை

ஹிந்து-முஸ்லீம் வேற்றுமை

லக்ஷ்மணபுரி கலாசாலையில் காங்கிரஸ் கொடியுடன், மூஸ்லீம் லீக் கொடியும் பறக்கவிடப்பட்டது. அனல் காங்கிரஸ் காரர்கள் லீக் கொடியை அப்புறப் படுத்திவிட்டார்கள். உடனே முஸ்லீம் மாணவர்கள் கூடி காங்கிரஸ் கொடியையும் பிடுங்கி எறிந்து விட்டார்களாம்.

மேல்மங்கலம்

ஆஸ்திக மஹா ஜன சபை

மூன்று வருஷ காலமாய் இவ்வூர் ஆஸ்திக மஹா ஜனங்களால் ஸ்தாபிக்கப் பெற்று ஆஸ்திக மஹா ஜன சபை என்ற பெயருடன் ஸ்நேதன தர்மத்தை பிரசாரம் செய்துவருகிற இந்த சபையானது (அகில இந்திய வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத் தலைவர் ஸ்ரீ என். நடேசய்யர் முதலியவர்கள் தீர்மானித்தபடி) வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் என்ற பெயரால் இன்று முதல் வழங்க படவேண்டுமென்று இச்சபை ஏகமனதாக தீர்மானிக்கிறது.

பிரமாதிஹே ஐப்பசிமீ 13உ ஸ்ரீ பிரசாதராவ் அவர்கள் விஜயம் செய்திருந்தனர். அவர்களிடம் ஆலயஸம்ரக்ஷண ஸமிதிக்கு பணம் வசூல் செய்து கொடுக்கப்பட்டது. வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்க உறுதிமொழி ஸிட்டில் 76பேர்கள் கையெழுத்திட்டு மெம்பர்கள் சேர்க்கிருக்கிறார்கள். இன்னும் சேர்க்கப்பட்டும் வருகிறது. அத்துடன் தர்ம ஸேவகதளம் ஒன்றும் இவ்வூரில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

கார்த்திகைமீ 15ம் தேதி கூட்டத்தில் ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி சாஸ்திரிகள் தளத்தின் பதியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்கள்.

ஸ்ரீ பிரஸாதராவ் அவர்களின் முயற்சியால் மேற்படி ஸ்தாபனத்திற்கு பஞ்சமர் கோவில் தலைவர் ஸ்ரீ ராமச்சந்திர ஐயர், ஸூபர்வைஸர் ஸ்ரீ கணேசஐயர் முதலியோர் பெற்றோர்களின் கடமைகளைப்பற்றிப்பேசினர். அப்பள்ளிக்கூட மாணவிகளால் சுகாதார கீதங்களும் தேசீய கீதங்களும் பாடப்பட்டன. முடிவில் தலைவர் தமிழ் நூல்களிலிருந்து பெற்றோர், ஆசிரியர்களின் கடமைகளை எடுத்துக் காட்டினர். பள்ளிக்கூடத்தலைவர் ஸ்ரீமான் சுப்ரமணிய ஐயரும் ஸ்ரீ ராமபத்ர ஐயங்காரவர்களும் மற்ற உபாத்தியாயர்களின் சார்பாக அனைவருக்கும் வந்தனோபசாரம் கூறி தலைவருக்கும் உபன்யாஸகருக்கும் மாலை சூட்டினர்கள். கூட்டம் இனிது கலைந்தது. [நமது நிருபர்]

திருத்துரைப்பூண்டி பட்டாபிஷேக மஹோத்ஸவம்

இந்த ஊர் நிருக்குள, ஸ்ரீ ராமபஜனை மடத்தில், வேதாந்த விநூஷணம் பிரும்ம ஸ்ரீ எ. ஆர். வெங்கட்ராம சாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ மத்ராமாயணம் உபன்யஸிக்கப் பட்டு வந்தது. அதில், அநேகச்ருதி ஸ்மிருதி பிரமாணங்களுடன், அநேக வேதாந்தரகஸ்யங்கள், ஸ்ரீமத் சங்கராசார்ய மதஸித்தாந்தங்கள், ஸ்ரீ ஆசார்யபக்தி முதலிய விஷயங்கள் எல்லோரும் எளிதில் உணரு மாறுகள் அநேக உதாரண பூர்வமாக நிரூபிக்கப்பட்டன.

3—12—39 ஞாயிற்றுகிழமை ஸ்ரீ ஸீதாராமபட்டாபிஷேகமகோத்ஸவம் வெகு விமரிசையாய் கொண்டாடப்பட்டது. அக்காலத்தில், ஸ்ரீ காஞ்சிகோகேர்டிபீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகளால் நிர்வியாதுக்ரஹ பூர்வம் அனுப்பப்பட்டபிரசாதத்தையும் ஷே. ஊர் ஸிவன்கோவில் ஸ்ரீ நடராஜ ஸன்னிதானத்திலிருந்து, வேத பாராயணம். வாத்யகோஷம் பூர்ணகும்பம் இவைகளுடன் புறப்பட்டு ஷேபஜனைமடத்திற்கு கொண்டுவந்து, ஸ்ரீ ராமஸன்னதியில் ஷே. மஹோத்ஸவம் ஆரம்பம் செய்து நடத்தப் பட்டது. ந. நி.

பிள்ளையார் பட்டி.

நிகழும் பிறமாதி ஹே கார்திகைமீ 19உ சோமவாரம் மஹாதேவ அஷ்டமியினம் குன்னக்குடி ஸ்பெஷல் மாஜிஸ்டிரேட் ஸ்ரீ மான் ஸிவராமு அய்யர் அவர்கள் அவ்விடம் விஜயம் செய்து ஸ்ரீ மஹா தேவருக்கு அபிஷேகங்கள் ஸஹஸ்ர நாமங்கள் செய்ய செய்து மஹா ஜெனங்களுடன் ஸந்தர்ப்பணம் செய்து ஸ்ரீ மகா தேவர் வைபவத்தை ஸ்வ அனுஷ்டானத்தைக் கொண்டு உபன்யஸித்தது எல்லாருமும் போற்றப்பட்டது. அப்பால் மேற்படி தேவஸ்தானம் பேஷ்கார் ஸ்ரீ மான் ரமச்சந்திர அய்யர் அவர்களால் வந்தன உபசாரம் சொல்லப் பெற்று வைபவம் இனிது முடிந்தது.

பெற்றோர்களின் லக்ஷ்யம்.

குடந்தை.

நமது நகர் ரெட்டிராயர்குளம் கீழ்கரையிலுள்ள சோலையப்பா முனிஸிபல் பள்ளிக்கூடத்தில் 10—12—39 மாலை கேடிலியஸ் ஸ்கூல் தமிழ்ப்பண்டிதர் ஸ்ரீ பி. ஜீனிவாஸய்யர் அவர்களின் தலைமையில் பெற்றோர்களின் சங்கம் கூடியது. அநேக பெற்றோர்களும் மாணவ மாணவிகளும் கூடியிருந்தனர். கடவுள் வணக்கத்துக்குப்பிறகு டவுன் ஹைஸ்கூல் ஆசிரியர் ஸ்ரீ எம். ராம் ராவ் பி. ஏ. அவர்கள் பெற்றோர்களின் சங்கத்தின் அவசியத்தைப்பற்றியும் தற்காலி கல்வியின் போக்கையும் வார்தா நிட்டத்தைப் பற்றியும் பேசும்போது 1917ஹே சுமார் 1½ லக்ஷம் பள்ளிக்கூடங்களும் 3 கோடி ரூபாயும் 1931 ஹே 2 லக்ஷம் பள்ளிக்கூடங்களும் 8 கோடி ரூபாயும் செலவழிக்கப்பட்டிருந்தும் படிக்கத்தெரிந்தவர்களின் சங்கியை நூற்றுக்கு ஒன்று தான் விருத்தியாயிருக்கிறதென்றும் உண்மையான சிரித்த முகமாகும் முறைகளைப் பெற்றோர்களும் உபாத்தியாயர்களும் இச்சங்கங்களின் மூலம் கடைபிடிக்க முடியுமென்றும் கூறினர். பிறகு ஸ்ரீமான்கள் பஞ்சாப்கேசரி, ரகுநாத சாஸ்திரிகள், டிப்டி இன்ஸ்பெக்டர் ஸ்ரீ ராமச்சந்திர ஐயர், ஸூபர்வைஸர் ஸ்ரீ கணேசஐயர் முதலியோர் பெற்றோர்களின் கடமைகளைப்பற்றிப்பேசினர். அப்பள்ளிக்கூட மாணவிகளால் சுகாதார கீதங்களும் பாடப்பட்டன. முடிவில் தலைவர் தமிழ் நூல்களிலிருந்து பெற்றோர், ஆசிரியர்களின் கடமைகளை எடுத்துக் காட்டினர். பள்ளிக்கூடத்தலைவர் ஸ்ரீமான் சுப்ரமணிய ஐயரும் ஸ்ரீ ராமபத்ர ஐயங்காரவர்களும் மற்ற உபாத்தியாயர்களின் சார்பாக அனைவருக்கும் வந்தனோபசாரம் கூறி தலைவருக்கும் உபன்யாஸகருக்கும் மாலை சூட்டினர்கள். கூட்டம் இனிது கலைந்தது. [நமது நிருபர்]

விருத்தாசலம்

அதிகாரிகளின்சரித்தை

21.7.39.ல் இந்தக்ஷேத்ரத்தில் ஆலயப்பிரவேச கிலிகோர்த்து. உடனே 10.8.39ல் ஒரு ஆஸ்திக மஹா ஸபைக் கூட்டம் ப்ரபலமாய் நடந்ததின் மூலம், நகர மஹாஜனங்களுக்கு ஏற்கனவே உள்ள ஆஸ்திக பக்தினியை பலப்படுத்திற்று.

இதற்கு ப்ரத்யக்ஷபலனாக தக்காலம் பழமலை நாதர் தேவஸ்தான ஆபீஸர் திரு நெல்வேலிவாஸி, ஒம். ஷண்முகம் பிள்ளை அவர்கள் சரித்தையோடு கூடின தீவ்ரமுயற்சியாலும் ஷே. தேவஸ்தான. டிரஸ்டிகள் ஆதரவாலும் அது முதல் 1. 8. 39. ப்ராதக்காலத்தில் பஞ்சகலச ஸ்தாபனம் விசேஷஹோமங்கள். ஏகாதசகலஜபம். பிறகு மூலவருக்கு விசேஷ அபிஷேகங்களுடன். ஷே. பஞ்சகலச அபிஷேகமும் ஆகமவிதிப்படி அமுகாயும். சரித்தையாயும் நடந்து வருகிறது. விச்சின்ன மன்னியில் நிரந்தரமாய் நடக்கவும். ஏற்பாடும் இருக்கிறது. இவர் நாளில் இதுபோன்ற அநேக ஸத்காரியங்கள் செய்வாரென்றும் நகர மகாஜனங்களால் எதிர்பார்க்கப் படுகிறது. தத்ஸமயம் நம் ஹிந்து மதத்திற்கும் கோர்திருக்கும் கஷ்டங்களுக்கு ஆங்காங்குள்ள டிரஸ்டிகளும், ஆபீஸர்களும், ஆஸ்திக மஹாஜனங்களும் அவரவர்களால் இயன்ற (மார்க்கத்தில்) மட்டில் இதுபோன்ற பலவித ஸத்காரியங்களையும் ப்ரசாரங்களையும் செய்து ஸர்வேசுவரனுடைய கடாக்ஷத்தையும் அடையும்படி. ஸ்ரீ ஆசார்யாளின் அனுக்ரஹத்தையும் அடையும் படி, மிகவும் தாழ்மையுடன் கேட்டுக் கொள்ளுகிறேன்.

(ஒரு. கிருபர்)

கல்வி வரி உயர்த்தப்பட்டது

தஞ்சை போர்டு தீர்மானம்

டிஸம்பர் மீ 9உ நடந்த தஞ்சை ஜில்லா போர்டு கூட்டத்தில், தற்போது ரூபாய்க்கு 2 பைசா வீதமுள்ள கல்வி வரியை 3 பைசா வீதம் உயர்த்தி வசூலிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

தர்ம சாஸ்திரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், 'வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்திரத்தின் ஆதாரத்துடன் கூடியும் சுலோகமாய் தமிழில் மொழிபெயர்க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு பிராமணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. பிரத்யேகம்.)

கிடைக்குமிடம்:— பப்ளிஷர்,

தர்மசாஸ்திரச் சுருக்கம்,
கீழவிடையல், திருச்சிரை
&
ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்

(3ம் பக்கத் தொடர்ச்சி.)

சிவகுரு என்ற ப்ரம்மச்சரேஷ்டருக்கு புத்ராய் பகவான் சம்பு அவதரித்தபொழுது, அந்த சிசுவின்

मूर्धनि हिमकरचिह्नं निटले नयनाङ्कसंशयोः शूलम् ।
वपुषि स्फटिकसवर्णं प्राज्ञास्तं मेनिरे शंभुम् ॥

சிரஸ்ஸில் சந்திரனின் அடையாளத்தையும், நெற்றியில் நேத்ரத்தின் அடையாளத்தையும், தோள்களில் சூலத்தின் அடையாளத்தையும் சரீரத்தில் ஸ்படிகத்துக்கு சமானமான வர்ணத்தையும் பார்த்து ப்ராக்ஞர்கள் அந்த சிசுவை சாக்ஷாத் சம்புவென்றே நினைத்தார்கள்.][1]

अज्ञानान्तर्ग्रहनपतितानात्मविद्योपदेशै-
स्त्रातुं लोकान्भवदवशिखातापपापान्यमानान् ।
मुक्त्वा मौनं वटविटपिनो मूलतो निष्पतन्ती
शंभोर्मूर्तिश्चरति भुवने शंकराचार्यरूपा ॥

"அக்ஞானமென்கிற மிகவும் பெரிய காட்டில் விழுந்து ஸம்சாரமாகிய தாவாக்கினியில் மிகவும் எரிக்கப்படும் மனிதர்களை ரக்ஷிக்க மௌனத்தை விட்டு விட்டு, வட விருக்ஷத்தின் அடியிலிருந்து இரங்கிவந்த சங்கராசார்ய ரூபத்துடன் சம்புவின் மூர்த்தி பூலோகத்தில் சஞ்சரிக்கிறது." என்றபடி ஸ்ரீ கைலாஸபதியாகிய சம்புவே தான் நமது க்ஷேமத்திற்கு ஸ்ரீ சங்கராசார்யராய் அவதாரம் பண்ணினர் என்று வ்யக்தமாகிறது.

VI

சுருதியில் शंभु, शङ्करः என்ற பதங்கள் ஒரே மூர்த்தியைத் தான் குறிக்கின்றன என்பது நிச்சயமாய் தெரிகிறது. शंभु என்ற பதத்திற்கு शं भावयति उत्पादयति इति शंभुः என்று அர்த்தம். शं करोति इति शंकरः.शं என்றால் ஸுகம் என்று அர்த்தம். இந்த ஸுகத்தின் உத்பத்தி ஸ்தானத்திற்கு நாம் போய் அதை அடைய வேண்டும். शं करोति என்கிறபொழுது, ஸ்வஸ்தானத்தை விட்டுப் பல இடங்களுக்கு வந்து இந்த நித்யஸுகப்ராப்தியைச் செய்கிறார் என்று எற்படுகிறது. உதாரணமாக ஊத்து இருக்கும் இடத்திற்கு நாம் போய் ஜலம் கொண்டுவரவேண்டும். ஆனால் நதி உத்பத்தி ஸ்தானத்திலிருந்து கிளம்பி பல இடங்களுக்கு வந்து ஜலம் கொடுக்கிறது.

இதில் சில விசேஷங்களை கவனிக்கவேண்டும். சம்புவைப் பற்றிச் சொல்லும்பொழுது. कपर्दिने व्युप्तकेशाय च என்று சொல்லப்பட்டிருக்கிறது. कपर्दि ஜடையை தரித்தவர். व्युप्तकेशः கேசத்தை முண்டனம் பண்ணினவர். தவிர, சம்புவை स्थाणु வென்றும் मौनि யென்றும் சொல்லியிருக்கிறது. स्थाणु வாகிய சம்பு, அசையாமல் வட விருக்ஷத்தின் அடியில் மௌனமாய் விளங்குகிறார். शंभु நித்ய ஸுகத்திற்கு உத்பத்தி ஸ்தானமானதால் அவரை தபஸ்ஸினாலும் யோகத்தாலும் நாம் போய் அடைய வேண்டும். शंकरः என்றதால், நம் வாசலில் வந்து கொடுப்பது போல் தாமாக வந்து நித்யஸுகப்ராப்தியைக்கொடுக்கிறவர். शंभुः कपर्दिस्थाणुः मौनि சம்பு ஜடையுடன் கூட அசையாமல் வட விருக்ஷத்தின் அடியில் மௌனியாய் இருக்கிறார். शङ्करः व्युप्तकेशः, आत्मविद्योपदेशैः लोकान् त्रातुं चरति. சங்கரர் கேசத்தை முண்டனம் பண்ணிக்கொண்டு சிஷ்யர்களுக்கு உபதேசம் பண்ணி பல இடங்களில் சஞ்சரிக்கிறார். இப்படி உபதேசம் பண்ண யதிரூபத்துடன் சங்கரர் சஞ்சரிப்பதாக சொல்லப்பட்டது. இந்த யதி ரூபத்தைக் கொண்ட தில் ஒரு விசேஷம் உண்டு. ஆஸ்ரமங்கள் நான்கில் சன்யாஸாச்ரமம் தான் சஞ்சாரத்துக்கு யோக்யமான ஆச்ரமம். ப்ரும்ம சாரி குருவினிடத்தில் சதா अन्तेवासि யாய் இருந்து குரு குல வாசம் செய்ய வேண்டியதாகையால் அவன் வெளியில் சஞ்சரிக்கமுடியாது. கிருஹஸ்தன் மற்ற ஆச்ரமிகளை ஆதரித்தும், தன் குடும்ப பரணம் செய்யவேண்டியிருப்பதால் அவனும் சஞ்சரிக்க முடியாது. வானப்ரஸ்தன் தபஸ்வியாய் காட்டிலேயே இருக்க வேண்டியவன். ஸன்யாஸி ஒரிடத்திலும் அதிக நாள் தங்காமல் ஊரைவிட்டு ஊர் சஞ்சரித்துக்கொண்டே இருக்கவேண்டியவனு கையால் சன்யாஸாச்ரமம்தான் ஸஞ்சாரத்திற்கு யோக்யமான ஆச்ரமம். இந்த ஆச்ரமத்தை எற்றுக்கொண்டு யதிக்ரராய் சங்கரர் என்ற நாமதேயத்தோடுகூட ஜனங்களுக்கு ஆத்ம வித்யை உபதேசம் பண்ணி அவர்களை ரக்ஷிக்க சம்பு உலகத்தில் ஸஞ்சரித்தார்.

VII

முன் சொன்ன மந்த்ரங்களில் मयश्चमे, नमो मयोभुवे, नमोमयस्कराय என்ற காணப்படுகிறது. मयः, मयोभूः मयस्करः என்ற பதங்களில் मयः என்பதற்கு என்ன அர்த்தம் என்று தெரிந்து கொள்ளவேண்டும். मयस् என்பது மோக்ஷஸுகத்தைக் குறிக்கிறது. मयः सुखं भावयति इति मयोभूः । आचार्य शास्त्रादिरूपेण मोक्षसुखं करोति इति मयस्करः मयोभू என்றதால் நித்யமான மோக்ஷ ஸுகத்தை உத்பாதனம் பண்ணுவதையும் मयस्करः என்றதால் ஸாக்ஷாத் ஸுக காரித்வத்தையும் சொல்லுவதால் मयः என்றால் நித்யமான மோக்ஷ ஸுகம் என்று தெரிகிறது. "यद्वै शिवं तन्मयः" என்ற யஜுர் வேத சுருதியின்படி शान्तं शिवं अद्वैतं என்று சொல்லப்பட்ட பரப்ரும்மஹாநந்தத்தான் मयः என்ற பதத்தால் வ்யவஹரிக்கப்படுகிறது. இந்த நித்ய ஸுகத்தை அடைய சாந்தி எற்படவேண்டும்.

இந்த சாந்தி என்பது என்ன? இது நாம் அடைய ப்ரயத்தனம் பண்ணவேண்டிய உத்தம பலம். சாதாரணமாக விருக்ஷங்களில் அநேக ரஸங்கள் இருப்பதைப்பார்க்கிறோம். இந்த ரஸங்கள் 6 விதமாக பிரிக்கப்பட்டிருக்கின்றன. இவை அம்ல, லவண, கடு கஷாய, திக்த, மதுர என்பவை. வேவ்வேறு பழங்களுக்கு வெவ்வேறு ரஸங்கள் உண்டு. மரத்தின் கடைசி அவஸ்தை பலாவஸ்தை. இந்த பலம் பக்குவமானால், அதன் பிறகு அந்த விருக்ஷத்திற்கு வேறு அவஸ்தையோ மாறுதலோ கிடையாது. ஷட்ரஸங்களின் கடசியில் மதுர ரஸத்தை சொன்னபடி மதுரந்தான் ரஸங்களுள் ஸ்ரேஷ்டமானதும் முடிவானதுமான ரஸம். (போஜனத்தில்கூட मधुरेण समापयेत् என்கிறோம்) பக்வமான பலங்களுக்கு மாதுர்யம் உண்டு. வேப்பம்பழம் எட்டிப்பழம் இவைகளிலுங்கூட ஒரு அசட்டுத்திப்புண்டு. மாம்பழம் முதலியவைகளைப்பற்றியோ சொல்லவேண்டியதில்லை.

பழங்களுக்கு ஷட்ரசங்கள் இருப்பது போல் நம் மனஸின் விகாரங்களில் நவரசங்களைப்பற்றி சொல்லவருகிறது. அவை ஸ்ருங்கார வீர, கருணை, அத்புத, ஹாஸ்ய, பயானக, பீபத்ஸ, ரௌத்ர, சாந்த என்ற 9விதமான ரசங்கள். இவைகளில் கடைசி ரசம் சாந்தரசம். எப்படி மதுர ரஸத்தை ஷட்ரசங்களில் முதலில் வைத்தோமோ அப்படி சாந்த ரஸமும் கடைசியானது. அதுதான் உத்தமமானதுங்கூட. அம்மாதி ஐந்து ரசங்கள் ஆறுவதான மதுர ரஸத்தில் கொண்டுவிட்டு அதில் சமனமடைவது போல் ஸ்ருங்காராதி அஷ்டரசங்களும் சாந்தரசத்தில் பூர்த்தியடைந்து அதில் சமனமடைகின்றன. இந்த சாந்திதான் நமது மனதாகிய பலத்தின் பக்வாவஸ்தை யின்லக்ஷணம். சாந்தி சித்த விருத்தியே இல்லாமல் இருக்கும் ஸ்திதி. மற்ற ரசங்கள், விஷயங்களால் மனஸுக்கு விருத்திகள் உண்டாவதால் எற்படும் மாறுதல்கள். புலியைக்கண்டால் ஒருவன் பயப்படுகிறான். ஸ்ருங்கார காரணமான ஒரு வஸ்துவைப்பார்த்தால் காமம் எற்படுகிறது. புலியைப்பார்த்தால் பயத்தையும், ஸ்திரீயைப்பார்த்தால் காமத்தையும் அடையாமல் இன்னும் மற்ற வஸ்துக்களாலும் யாதொரு மாறுதலு மில்லாமல் மனஸ் ஸ்வச்சமாய் தனியே இருக்கும் ஸ்திதிக்கு சாந்தி என்று பெயர். சித்தவிருத்திகள் குணபேதத்தால் சாத்விக, ராஜஸ, தாமஸ மென்று மூன்று விதமானவை, ஆனால் இவைகளில் சாத்விக சித்த விருத்தி தான் மேலானது. எனென்றால் சாத்விகசித்த விருத்தியின் உத்பாதனம் மற்றவைகளின் நாசகமாக எற்படும். பிறகு இந்த சாத்விக விருத்தியும் இல்லாமல் இருக்கும் ஸ்திதிக்கு சாந்தி என்று பெயர். இந்த சாந்தியால் தான் நித்ய ஸுகமாகிய मयस् என்பதை அடையமுடியும். இந்த सुखकारियாய், मयोभू என்றும் मयस्करः என்றும் சொல்லப்பட்ட ஸாக்ஷாத் சங்கரர் யதி ரூபத்துடன் லோகரக்ஷணத்திற்காக ஸ்ரீசங்கராசாரியராய் அவதரித்தார்.

(தொடர்ச்சி 7பக்கம்)

[1] [இதனுன் காணப்படுவது ஸ்ரீ ஸ்வாமிகள் அவர்களின் உபன்யாஸத்தில் கூறப்படவில்லையானாலும் உபன்யாஸத்தில் இந்த பாகத்தின் ப்ரமாணத்தை விளக்க 'சங்கர திக்விஜயம்' என்னும் க்ரந்தத்திலிருந்து சேர்க்கப்பட்டது.]

VIII

இந்த சாந்தியை அடைய நாம் எல்லோரும் ப்ரயத்தனம் பண்ணவேண்டும். இதை அடைவதுதான் முக்தி என்று சொல்லப்படுகிறது. முக்தியை யடைந்தவன் புனர்ஜனனமில்லாமல் ஸம்சாரத்திலிருந்து விடுபடுகிறான்.

तमेवं विद्वान् अमृत इह भवति என்று சுருதி சொல்லுகிறது. इह भवति என்றதால், இங்கேயே இந்த ஜன்மாவிலேயே முக்தியை அடைகிறன் என்பது சுருதியின் தாத்பர்யம். இந்த சுருதி ஜீவன் முக்தியைச் சொல்லுகிறதே தவிர விதேகமுக்தியைச் சொல்லவில்லை. மரண காலத்தில் ஒருவன் எந்த ஞாபகத்தோடும், எந்த மனோ விகாரத்தோடும் தேகத்தை விடுகிறானோ, அதை அனுஸரித்து புனர்ஜன்மம் எற்படும் என்று சாஸ்திரம் சொல்லுகிறது. விதேக முக்திதான் உண்மையானால் இறந்த பிறகு சாந்தி எற்பட்டு அதனால் முக்தி கிடைக்கவேண்டும். ஆனால் மரணத்திற்குமுன் சாந்தியில்லாவிட்டால், மரணத்திற்குப் பிறகு அது எப்படி ஏற்படும்? ஆகையால் புனர்ஜனமில்லாமல் முக்தி ஏற்பட தேக பதனத்திற்குமுன் னாலேயே इह भवति இங்கேயே, இந்த ஜன்மாவிலேயே ப்ரும்மக்ஞானத்தை அடைந்து சாந்தியைப் பெற்று முக்தனாகவேண்டும். இது தான் சுருதியின் தாத்பர்யம்.

तमेवं विद्वान् अमृत इह भवति என்ற சுருதியில் காணப்படும் इह என்ற பதத்தை உபயோகித்து பகவான் ஸ்ரீ கீதையில்

शक्नोतीहैव यःसोढुं प्राक्शरीरविमोक्षणात् ।
कामक्रोधोद्भवं वेगं स युक्तः स सुखी नरः ॥

என்று சொல்லி इह என்பதற்கு அர்த்தத்தை வெகு தெளிவாய் प्राक्शरीरविमोक्षणात என்று அந்த சுலோகத்திலேயே வ்யாக்யானம் பண்ணுகிறார். சரீரம் விழுவதற்குமுன், அதாவது மரணத்திற்கு முன்னுலேயே காமக்ரோதாதிகளை ஜயித்தவன் நித்ய ஸுகத்தையடைந்து முக்திநிலையை அடையவேண்டும் என்று பகவான் ஸ்பஷ்டமாய் உபதேசிக்கிறார்.

IX

இப்பேர்ப்பட்ட சாந்திஸ்வரூபமான நித்யஸுகத்தை அடைய ப்ரதிஜனமும் ஒவ்வொருவனும் ப்ரயத்னம் பண்ணவேண்டும். விஷயங்கள் மனஸுக்கு மற்ற விகாரங்களை உண்டாக்காதபடி சித்தத்தை அவைகளிலிருந்து இழுத்துப்பழக்கிக் கொள்ள வேண்டும். அதற்கு ப்ரதிஜனம் நம் அப்யாஸமும் நம்முடைய பரமாசார்யாளிடத்யானம் பண்ணி அவர்களின் அனுக்ரஹத்தைப் பெறுவதும்தான் மார்க்கங்கள்.

சாதாரணமாய் எந்த வித்யை லித்திக்க வேண்டுமானாலும் ஆசார்யானுக்ரஹமும் சிஷ்யனுடைய அப்யாஸமும் அவசியம். ஆசார்யனிடத்தில் சிஷ்யனுக்கு தெய்வபக்தி ஏற்படவேண்டும். இல்லாவிட்டால் உபதேசியுண்டாய் விடும். ஆசார்யன் ஸாக்ஷாத் தெய்வம் என்ற மனோபாவம் வரவேண்டும். மற்ற ப்ராக்ருதமான ஆசார்யர்களிடத்தில் இந்த மனோபாவம் சிரமப்பட்டு கல்பித்துக்கொள்ளவேண்டியிருக்கும். ஆனால் நமது ஆசார்யாளிடத்தில் இந்த தெய்வபுத்தியை சுலபமாக கல்பனை செய்து கொள்ளவேண்டிய தில்லை. எனென்றால் சர்வேஸ்வரனுடைய சம்புவே சங்கராச்சாரியராய் அவதாரம் பண்ணினதால் அவர் ஸாக்ஷாத் ஈஸ்வரனே. ஆகையால் நம் ஆசாரியாளிடத்தில் தெய்வபுத்தி வெகு சுலபமாய் நமக்கு ஏற்படும். நம் ஆசார்யாளுக்கு பகவத்பாதாள் என்ற பெயர் ஒன்று உண்டு. இந்த மாதிரி நமது பரமாச்சாரியாளிடத்தில் த்ருடமான பக்தியுடன் சித்த விருத்தி நிரோதத்தை அப்யஸித்து வந்தால் முடிவில் ப்ரும்ம ஞானத்தால் இந்த ஜன்மாவிலேயே முக்தி யடையலாம்.

X

சிலர் இந்த மாதிரி ப்ரயத்னம் மஹா மேதாவிகளால்தான் முடியும், மந்த புத்திகளாகிய தங்களால் முடியாது என்ற எண்ணத்துடன் இந்த விஷயத்தில் ஒருவிதமான ப்ரயத்னமும் பண்ணமல் இந்த ஜன்மாவை வீணுக்குகிறார்கள். இது தப்பான அபிப்ராயம். கொஞ்சம் கொஞ்சமாக ப்ரயத்னம் பண்ணி, நிர்மலனாவது சித்த சுத்தி ஏற்பட்டு, இந்த ஜன்மாவின் ஆரம்பகாலத்தை விட மரணகாலத்தில் ஒருவன் ச்ரேஷ்டமான மனோபாவத்தோடு இறந்தால் அது மறு ஜன்மாவில் நல்ல வாஸனையையும் நல்ல கதியையும் கொடுத்து அவனுக்கு மஹோபகாரத்தைச் செய்யும். இந்த ப்ரகாரமாக நாம் ஒவ்வொருவரும் ஆசார்யானுக்ரஹத்தால் ப்ரயத்னம் பண்ணி இந்த ஜன்மாவை ப்ரயோஜனப் படுத்திக்கொண்டு நல்ல கதியை அடையவேண்டும்.

ஓம் தத்ஸத் ॥

மாணவர்களுக்கு ஸ்ரீஜகத்குரு உபதேசம்.

ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு, ஸ்ரீ சங்கராசாரியஸ்வாமிகளவர்கள் மாயவரம் ராஜான் தோட்டமைதானத்தில், டிஸம்பர் 7 மாலை பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்கு செய்த உபதேசத்தின் ஸாராம்சம்:-

நாம் தினம் ஸ்நானம் பண்ணுகிறோம். எதற்காக? உடம்பின் மேல் உள்ள அழுக்குபோவதற்காக. குடும்பத்துக்கு கடன் இருந்தால் அதைத் தீர்க்கவேண்டும். கடன் குடும்பத்துக்கு அழுக்குப்போல. அதை நீக்கவேண்டும். வீடு பழுதாயிருந்தால் உடனே பழுது பார்க்கிறோம். அப்போதுதான் அது கெட்டியாக, சுத்தமாக இருக்கும். அது மாதிரி நாம் பிறந்ததுமுதல் நமக்கு ஒரு குறை இருக்கிறது. நாம் ஒவ்வொருவரும் சில வேளை சுகப்படுகிறோம். சிலவேளை துக்கப்படுகிறோம். எதாவது ஒருவித கஷ்டமில்லாதவர் கிடையாது. துக்கம் என்பது பாபத்தின் பலன். சுகம் என்பது புண்யத்தின் பலன். எல்லோருக்கும் சுகமும் துக்கமும் கலந்தே வருகின்றன. ஏற்கனவே புண்யங்களும் பாபங்களும் பண்ணியிருக்கிறோம். அந்த பலன்களை அனுபவிப்பதற்காக இந்த ஜன்மம் எடுத்திருக்கிறோம். புண்யம் அதிகமாகப் பண்ணினவர்கள் சுகங்களை அதிகமாக அடைகிறார்கள். பாபம் கூடப்பண்ணினவர்கள் அதிகமடைகிறார்கள். நமக்கு எப்படி இந்த ஜன்மா கிடைத்தது? அதற்குக் காரணம் இருக்கவேண்டும். பாபம் பண்ணி இந்த ஜன்மம் வந்திருக்கிறது. அதைப் போக்கவேண்டும். நீங்கள் படிப்பது எதற்காக? பணம் சம்பாதித்து பசி தீர்த்துக்கொள்வதற்காகவா? பள்ளிக்கூடத்துப் படிப்பில்லாமல் பசி தீர்த்துக் கொள்ளமுடியாதா? ஜீவனம் பண்ணுவது அவ்வளவு அசாத்யமான காரியமில்லை. படிப்பில்லாதவர்கள் எத்தனையோ சரீர புஷ்டியாயிருக்கிறார்கள். படித்தவர்களைக் காட்டிலும் நன்றுப்ச் சாப்பிட்டு சுகமாயிருக்கிறார்கள்.

பார்க்கபோனால், படித்தவர்கள் தான் சாப்பாட்டுக்கில்லாமல் அனேகர் நிண்டாடுகிறார்கள். படித்தவர்கள்தான் அதிகமாய் வியாதிகளால் கஷ்டப்படுகிறார்கள். ஜீவனம் சம்பாதிப்பது படிப்புக்குப் பிரயோஜனம் அல்ல. நமது பாபங்களைப் போக்கிக்கொள்ள படிப்பு உபயோகப்படவேண்டும். நம்மைப் படைத்தவர் ஒருவர் இருக்கிறார். அவரிடம் நாம் ப்ரார்த்திக்கவேண்டும். பாபம் செய்யாதிருக்கும்படியான புத்தியை நமக்குத் தரவேண்டி பகவானைப் ப்ரார்த்திக்கவேண்டும். நமக்கு பகவான் இந்த சரீரத்தைக் கொடுத்திருக்கிறார். சூர்ய சந்திரர்கள் ப்ரகாசிப்பது அவருடைய மஹிமையால் தான். நமது புத்திக்குள்ளேயும் அவர் இருக்கிறார். நம்மிடத்தில் அளவில்லாத கருணையுடன் இருக்கிறார். பாபம் செய்யாமலிருக்கும் புத்தியைக் கொடுக்கும்படி அவரை ப்ரார்த்திக்க வேண்டும். ஒவ்வொரு நாளும் பள்ளிக்கூடத்துக்குப் போனவுடன் முதல் காரியமாக நீங்கள் பகவானை அவ்விதம் ப்ரார்த்திக்கவேண்டும். அப்போது தான் உங்கள் கல்விக்கு சரியான ப்ரயோஜனம் உண்டாகும். இப்படி ஒவ்வொரு நாளும் ப்ரார்த்தித்துக்கொண்டு வந்தால் நமது புத்தியிலுள்ள தோஷங்கள் குறையும். புதிதாக பாபங்கள் பண்ணுமலிருப்போம். பாபங்கள் எல்லாம் போனால், நாம் சுத்தமாய் விடுவோம். பூர்ணமாக சுத்தமாய் விட்டால் பிறகு ஜன்மம் கிடையாது. படிப்பை சரியாக உபயோகப்படுத்தினால் இனி ஜன்மம் இல்லாமல் பண்ணிக் கொள்ளமுடியும். ஆகையால், ஒவ்வொரு நாளும் பாபம் பண்ணுமலிருக்கும் புத்தியைத் தரவேண்டுமென்று நீங்கள் ப்ரார்த்தித்துக்கொண்டு வந்தால் பரம ச்ரேயஸ்ஸை அடைவீர்கள்.

காமகோடி பீடாதிபதிகளான ஜகத்குரு
ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகள்
அருளிய நன்மொழிகள்
முதல் பாகம் ரூ. 1—8—0
இரண்டாம் பாகம் அணு 10.
கிடைக்குமிடம்:—ஸ்ரீ ஜனார்தன அச்சுக் கூடம் லிமிடெட், கும்பகோணம்.

ஹிமாலயம், திபேத், நேபால்
கஸ்தூரி, சிலாஜிட், குங்குமப்பூ

(சுத்தமானதென்றும், கலப்பற்றதென்றும் உத்திரவாதம் செய்கிறேம்).

கஸ்தூரி	ஒரு தோலா.	ரூ 25—0—0
சிலாஜிட் (புடமிட்டது)	,,	ரூ 1—0—0
குங்குமப்பூ (கேசர்)	,,	ரூ 2—8—0.

(ஒரு தோலா என்பது ஒரு ரூபாய் எடையாகும்) ஏற்படும் தபால் சார்ஜ்—பாக்கிங் சார்ஜ் தனியாக உண்டு. கடிதப்போக்குவரத்து ஹிந்தியிலாவது, ஆங்கிலத்திலாவது நடத்தவும்.

கிடைக்குமிடம்:— PREM LAL SHAH GANGOLA,
ALMORA (Himalayas) U. P.

மைலாப்பூர்
ஸ்ரீ ஸ்காந்த உபன்யாஸம்.

சென்னை மைலாப்பூர் கபாலீச்வரர் கோவிலில் ஸ்ரீ கல்பகாம்பாள் சக்திபீடத்தில் தேதியூர் சாஸ்திர ரத்னம் பிரம்மஸ்ரீ சுப்ரமண்ய சாஸ்திரிகளால் பிரதி செவ்வாய், புதன், வியாழன் ஸ்ரீ ஸ்காந்தம் உபன்யஸிக்கப்பட்டு வருகிறது. தர்ம ரக்ஷாமணி கே. பாலசுப்ரமணிய அய்யரவர்களும் இன்னும் மற்ற பிரமுகர்களும், வித்வான்களும் பக்த கோடிகளும் வெகு சிரத்தையுடன் விஜயம் செய்து ஸ்ரீ ஷண்முகனின் திவ்ய சரித்ராநந்தத்தை யனுபவித்து வருகிறார்கள்.

சாஸ்திரத்தில் அபாரபாண்டித்யமுடைய சாஸ்திரிகளவர்கள் வேதம், உபநிஷத், புராணங்கள் முதலியவைகளிலிருந்து அநேக கோட்பாடுகளுடன் சிவோத்கர்ஷத்தை வெகு விரிவாக உபன்யஸித்து ஸ்ரீ பராசக்தியின் உண்மையான தத்வத்தைப் பாமரர்களும் அறியும்படி விளக்கிக்காட்டி வைதிக சிரத்தையையும் தெய்வ பக்தியும் புகட்டி வருகிறார்கள். சீர்திருத்தக்காரர்க ளென்று பெயர் வைத்துக் கொண்டு நம் வைதிக ஆசாரங்களைக் குலைக்க முயற்சி செய்பவர்களைக்கண்டித்தும், வர்ணச்ரம தர்மத்தின் மேன்மையை யெடுத்துச் சொல்லியும் சாஸ்த்ரிகள் மஹோபதேசம் செய்து வருகிறார்கள்

ஹரிகதா காலக்ஷேபங்கள்

பெங்களூர் பிரம்மஸ்ரீ கிருஷ்ண பாகவதர்கள் மைலாப்பூர் வெங்கடேச அக்ரகாரத்தில் 30-11-39 லிருந்து ஒன்று விட்ட ஒருநாள் ஹரிகதா காலக்ஷேபம் செய்து வருகிறார். ராமாயணம், பாகவதம், பாரதம், பக்த விஜயம் முதலியவைகளிலுள்ள சரித்திரங்களை கன்னட சம்பிரதாயத்தில் அநேக கன்னட கீர்த்தனைகள் சுலோகங்களுடன் வெகு ஆச்சர்யமாக உபன்யஸித்து பக்திமார்க்கத்தைப் பாமரர்களும் தெரிந்து கொள்ளுமாறு உபதேசித்து வருகிறார். வைதிக அனுஷ்டானமும் ஆசாரமும் பக்திக்கு அங்கமென்றும், அனுஷ்டானம் இல்லாவிடில் பக்தி கிருத்ரிமாகதென்றும் பாகவதர் வற்புறுத்தி வருகின்றார். ஆயிரக் கணக்கில் மகா ஜனங்கள் விஜயம் செய்து வருகிறார்கள். (ந. நி)

வால் நக்ஷத்திரம்

கோரக்பூரில் தோற்றம்

கோரக்பூரில் பகல் 4 மணிக்கு இரண்டு முழ நீளமுள்ள பிரகாசமான வால் நக்ஷத்திரமொன்று காணப்பட்டது ஜனங்கள் அதிசயத்துடன் பார்த்தனர். 45 நிமிஷத்திற்குப்பின் அது மறைந்தது!

டாக்டர் சங்கரய்யர் மரணத்திற்காக
அனுதாபம்

ஸ்ரீகாஞ்சீ ஸனாதனதர்ம ஸேவா சங்கத்தின் விசேஷ ஸபை

1939ஹு டிசம்பர் மாதம் 9உ சனிக்கிழமை மாலை ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்ய மடத்தில் கூடிய விசேஷ ஸபையில் பின் வரும் தீர்மானம் செய்யப்பட்டது ஸபைக்கு பிரம்மஸ்ரீ வ ள ய பி த் தூ ர் கிருஷ்ண சாஸ்திரிகள் அக்ராஸனம் வஹித்தார்கள்.

கேரள தேசத்தில் ஸனாதன தர்மத்திற்கு நேர்ந்து வந்த பல ஆபத்துகளிலிருந்து உடல், பொருள், ஆவி இவைகளின் நியாகத்தால் காப்பாற்றிவரும், டாக்டர் தொழிலில் னேபர்துவாயும், உதாரியரயும், ஸ்ரீ காஞ்சி ஸ்ரீ காமகோடி பூடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கர பகவத் பாதாசார்யாளுடைய பரம பக்தருமான டாக்டர் சங்கரய்யர் அவர்கள் சென்ற நவம்பர் மீ 25உ காலமானதை கேட்டு இச்சங்கம் மிக்க வருந்துவதுடன் தங்கள் அனுதாபத்தை மேற்படியார் குடும்பத்திற்கும் தெரிவிக்கும்படி தீர்மானிக்கப் பட்டது.

ராமசந்திர சர்மா,
காரியதர்சி.

மேல்மங்கலம்
வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

பிரமாதிஸு கார்த்திகைமீ 22ம் தேதி மாலை4-மணிக்கு ஸ்ரீ பிலாஞ்சேரி சுப்பிரமணிய அய்யர் அவர்கள் தலைமையின் கீழ் ஸ்ரீ ராமனுத சர்மா அவர்கள் வேதம் என்னும் விஷயம் பற்றி உபன்யஸித்தார்கள். காரியதரிசியால் வந்தனம் கூறப்பெற்று சபை மாலை6½மணிக்கு இனிது நிறைவேறியது.

கார்திகைமீ 23ம்தேதி வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி சாஸ்திரிகளால் ஸ்ரீ ருத்ரபாஷ்யம்,ஸ்ரீ ஸ்ரீதர (ஆசார்யாள்) பாஷ்யப் ரவசனம் ஆரம்பம் செய்யப்பட்டது. பிரதினமும் (அமாவாஸை, பிரதமை தவிர மற்ற நாட்களில் காலை 9 மணி முதல் 10½ மணிவரை பாஷ்ய பிரவசனம் செய்வார்கள்.

சிவராம கணபதி கனபாடிகள்
காரியதரிசி

தாகூர்
ஷஷ்டி அப்த பூர்த்தி வைபவம்

நாகூரில் ஸ்ரீமத் ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசாரியார் ஸ்வாமிகள் அவர்கள் பூர்ணுக்ரஹம் பெற்றவரும் அவர்கள் முக்கிய சிஷ்யரும் நாகப்பட்டணம் ஸ்பெஷல் மாஜிஸ்ரேட்டாக இருப்பவரும் ஞானதனியுமான ஸ்ரீ டி. வீராசாமி அய்யர் அவர்களுக்கு நாளது பிரமாதி ஹு கார்த்திகைமீ 23உ 8—12—39 சுக்கிரவாரம் ஷஷ்டி அப்த பூர்த்தி கல்யாணம் நடைபெற்றது. 7-12-39 காலை வேதவியாஸர் கடம் வைத்து யஜுர்வேதமும், ஸாமவேதமும் பாராயணங்கள் அன்று முழுவதும் நடத்தப்பட்டது. காளியாக்குடி பிரம்மஸ்ரீ நடேசாஸ்திரிகள் அவர்களால் ஸ்ரீ ராம பட்டாபிஷேக பிரவசனம் நடந்தது. ஸ்ரீமத் ஜெகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் அவர்கள் முகாமுலிருந்து அனுக்கிரஹ பிரஸாதங்கள் வந்தன. பிராம்மண சந்தர்ப்பணையும் நடைபெற்றது. மன்னார்குடி பிரம்மஸ்ரீ ராமய்யா பாகவதர் அவர்களால் அஹிமஹி ராவணன் சரித்திரம் கதாகாலக்ஷேபமும் பிரம்மஸ்ரீ மத்வாசாரியார் அவர்களால் ருக்மணி கல்யாண கதாகாலக்ஷேபமும் நடைபெற்றது.

நமது நிருபர்

அனந்தப்பூர்
அத்வைத வபை

மேல்கண்ட சபையின் ஆதரவில் பிரம்மஸ்ரீ பாரத ரத்னகர பி. சுந்தரசாஸ்திரிகள் அவர்கள் வேதவியாஸர் எழுதிய தேவி பாகவதத்தைப்பற்றி உபன்யாஸம் செய்து வந்தார். 1936ல் சந்திர வம்ச சரித்திரத்தை தெரிய்ப்படுத்தும் இதிஹாஸமாகிய மஹாபாரதம் முதல் வதாத நடைபெற்று முடிந்தது. இரண்டாவதாக ஸ்ரீ கிருஷ்ண னுடைய குணதிசயங்களை தெரியப்படுத்தும் ஹரிவம்ச சரித்திரம் நடைபெற்றது. இப்போது தேவிபாகவதம் நடந்து 1939ம் வருஷம் நவம்பர்மீ 26உயோடு முடிந்தது. தேவி பக்தியைப் பற்றி பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் ரொம்பவும் அழகாகவும் தெளிவாகவும் எடுத்துக்காட்டினர். நவம்பர் 26உ காலை ராமாலயத்தில் பிரம்மஸ்ரீ சாஸ்திரிகளால் தேவி பூஜை, குமாரி சுவாலினி பூஜைகளும் நடத்தப்பட்டது. பிராம்மண சந்தர்பணையும் நடைபெற்றது. தேவி படத்துடன் ஊர்வலம் நடந்தது. இதற்கு பிறகு தேவி சப்தசதி இருக்கும் மார்கண்டேய புராணம் இந்த சபையின் ஆதரவில் நடைபெறும். (ந. நி.)

Printed by S, Kalyanasundram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundram,





215312

-3 JAN 1940

MADRAS

REGD No. M. 2913.

ARYADHARMAM
TAMIL WEEKLY

ஆர்யதர்மம்

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலாசாரியார்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓரணா.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விகிதம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணா 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

புத்தகம் 24 | கும்பகோணம் பிரமாதி-ஆவது மார்கழி-மீ 6உ 1939 ஆவது டிசம்பர்-மீ 21உ | வாரம்-50

ராயல் கமிஷன் வேண்டும்

ஜின்னா கூற்று

முஸ்லீம்களுக்கு காங்கிரஸ் மந்திரிகள் திவாஹாத்தில் ஏற்பட்ட குறைகளை விசாரிக்க, ஸ்வராஜ்யாதிகாரம் படைத்ததும், வெள்ளைக்காரர்களைக் கொண்டதுமான ஓர் ராயல் கமிஷனை நியமிக்கவேண்டுமென்று ஜனப் ஜின்னா கட்டாயமாகக் கேட்டிருக்கிறார். காங்கிரஸ்காரரல்லாத முஸ்லீம்களும் 22உ ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள வேணுமென்றும் ஜின்னா கூறுகிறார். ஜின்னா அறிக்கையை பிரபல முஸ்லீம் பிரமுகர்களான ஹிந்து முஸ்லீம் பிரமுகர்கள் கண்டிக்கிறார்கள்.

பலர் அந்த ஆலோசிக்கிறார்கள். சென்னை சட்ட ஸபை எதிர்க்கட்சி தலைவரான ஸ்ரீமான் முத்தையா செட்டியாரும், மாஜி மந்திரி ஸ்ரீ முத்தையா முதலியாரும் 22உ கொண்டாட்டத்தை ஆதரித்து அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். தாழ்ந்த வகுப்புத் தலைவரான டாக்டர் அம்பேத்காரும் ஜின்னா அபிப்பிராயத்தை ஆதரிக்கிறார்.

நேரு—ஜின்னா சந்திப்பு நின்று விட்டது

ஸ்ரீமான் நேரு பம்பாய் வந்திருந்தார். ஏற்கனவே பிரஸ்தாபித்த படி அவர் ஹிந்து முஸ்லீம் ஒற்றுமை விஷயமாக ஜின்னாவுடன் கலந்து பேசுவாரென்று எதிர்பார்க்கப் பட்டது.

ஆனால் ஜின்னாவின் ஸமீபகால அறிக்கை காரணமாக அவருடன் நாம் கலந்து பேசுவதை நிறுத்தி விட்டதாக நேரு தெரிவித்தார்.

லீவாசி ஏற்றம்

தாலுக்கா கமிட்டிகள் ஏற்படுத்த உத்தரவு

நமது மாகாணத்தில் பல இடங்களில் லீவாசிகள் ஏறிவருவதை விசாரித்துத் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதற்காக அங்காங்கு தாலுக்காகமிட்டிகளை ஏற்படுத்தும்படி ஜில்லா கலெக்டர்களுக்கு கவர்மெண்டார் உத்திரவிட்டிருக்கிறார்கள்.

நாகபுரியில் மதுவிலக்கில்லை

கவர்னர் தீர்மானம்

காங்கிரஸ் மந்திரிகள் நாகபுரியிலும், அந்த ஜில்லாவிலும் மது விலக்கு அநுஷ்டிக்கத் தீர்மானித்த இடம் போட்டிருந்ததை கவர்னர் நிறுத்தி விட்டார். பணச் சிலவு அதிகமாவதே காரணமாம்.

ஆந்திர-தமிழ் மாகாண பிரிவு விவாதம்

காங்கிரஸ்காரரிடம் பிளவு

தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் கண்டன தீர்மானம்

ஆந்திர மாகாணப் பிரிவினை விஷயமாயும் சென்னையாருக்குச் சொந்தமென்கிற விஷயமாயும் ஆந்திர-தமிழர்களுள் விவாதம் வலுப்பட்டுவருகிறது. இந்த விவாதம் காங்கிரஸ்காரர்களுக்குள்ளும் பரவிட்டது,

சென்னை ஆந்திர ஜில்லா காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஆந்திர மாகாண பிரிவினையை வற்புறுத்தி பிரசாரம் செய்வதுடன் சென்னையை ஆந்திர மாகாணத்தின் தலைநகராகச் செய்து விடவேண்டுமென்றும் பேசிவருகிறார்.

11உ கூடின தமிழ் மாகாணக்காங்கிரஸ் கமிட்டிக் கூட்டத்தில் இதைப் பற்றி ஓர் கண்டனத் தீர்மானம் செய்யப்பட்டிருக்கிறது. ஆந்திர காங்கிரஸ் கமிட்டித் தலைவர் இம்மாதிரி பிரசாரம் செய்வதை கண்டிப்பதாயும், சென்னையை தமிழர்கள் ஒருகாலும் விட்டுக் கொடுக்கமாட்டார்களென்றும் தீர்மானிக்கப்பட்டது. ஸ்ரீமான் முத்துரங்க முதலியாரும் ஆந்திர காங்கிரஸ்காரர்களின்போக்கைக் கண்டித்து ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்.

குடந்தையில்

ஸனாதன பிரசாரம்

டிசம்பர்16உயன்று திருநெல்வேலி ஸனாதன தர்மசபையைச் சேர்ந்த ஸ்ரீ ருக்மணி அம்மாளும் ஸ்ரீ மான் ஆனந்தராவும் குடந்தைக்கு வந்தார்கள் அன்று இரவு ஸ்ரீ சாரங்கபாணிஸ்வாமி கோவிலில் பண்டிட் ராஜாஜிதாசாரியர் தலைமையில் கூடின பொதுக் கூட்டத்தில் மேற்படி இருவரும் ஸனாதனிகளின் தற்கால நிலைமையைப் பற்றியும், தீவிரமாகப் பேசினார்கள்.

ஸ்ரீ மான் ராவ் தாம் ஆரம்பித்துள்ள ஸத்யாக்ரக பக்கத்திற்கு யாவரும் உதவி செய்யும் படி வேண்டினர். கூட்டத்திற்கு அதேக ஸ்திரீகள் வந்திருந்தனர். வந்தனே பசாரத்துடன் கூட்டம் பூர்த்தியாயிது.

காங்கிரஸ் பிரலிடெண்ட் வனுதரியானர்

ஆழ்வார்திருநகரி காங்கிரஸ் பிரலிடெண்ட் ஸ்ரீமான் பி. ராமாநுஜம் கவிராயர் ஆலயப் ரவேச எதிர்ப்பு ம்ஹாஜர்களிலும் கையொப்பமிட்டு ஸனாதன வர்ணாச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின். அங்கத்தினராயும் சேர்ந்து கொண்டார் 11—12—39ல் நடைபெற்ற ஆழ்வார்திருநகரி பஞ்சாயத்துக் கோர்ட் எலக்ஷனில் ஸனாதனிகள் ஆதரவால் எதிர் அபேக்ஷகரைக் காட்டிலும் 180 ஓட் அதிகம் பெற்று கவிராயர் வெற்றி பெற்றார் இவருக்கு 689ம் போட்டியாளர்க்கு 509ம் பதிவாயின. (ந. வி. மி.)

மஹாதானபுரம்

நாளது பிரமாதிஆவது மார்கழிமீ 2உக்குச் சரியான 17—12—39 ஞாயிற்றுக்கிழமை நின்த்தில் மேடி ஊரில் காவேரிதீரத்தில் அதிஷ்டான வாசியாக அமர்ந்திருக்கும் ஸ்ரீ லெலமாவு மடாதிபதி, ஸ்ரீ கமலானந்த நரஸிம்ம பாரதி, சித்த சுவாமிகளின் வருஷாந்திர 11 வது ஆராதனை பூர்வாங்கமாக லக்ஷார்ச்சனைகள் 11-12-39 முதல் துவக்ஷகம் செய்து 17—12—39ல் முடிவுஅடைந்த 16 ஆறுதனி பிரும்மணர்களுக்கு சோமன ஜோடி சஹிதமும் சுமார் 1000 பேர்களுக்கு அன்னதானமும் பக்த சிஷ்யகோடிகளின் வருவின் மூலம் நடைபெற்றது. முக்கியமாக ஸரோடு வக்கீல் கணபதி அய்யர்வர்களுடைய கைங்கரியம் போற்றத்தக்கது சிஷ்யகோடிகளுக்கு இந்த கைங்கரியத்தை நீடித்து நடத்துவதற்கு ஆஸ்திகத்தை கொடுக்கும்படி குருவை பிரார்த்திக்கிறோம். (ந-தி)

சென்னை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

மாகாண மகாநாடு சிதம்பரத் தில் டிசம்பர் 23, 29உகளில் நடைபெறும்.

திவான் பகதூர் ஸ்ரீ மாசிலாமணி பிள்ளை, ரிடையர்டு ஹைகோர்ட்டு ஜட்ஜு அவர்கள் சென்னை, ஷை மகாநாட்டிற்கு தலைமை வகிக்க இசைந்துள்ளார்.

ராவ் சாகேப் ஸ்ரீ எஸ். ரத்தினம் பிள்ளை, மிராசுதார், மாயவரம் சனாதன சங்கத் தலைவர் அவர்கள் மகாநாட்டை திறந்து வைப்பர்.

கூடலூர் அட்வகேட் ஸ்ரீ டி. இ. சட கோபாச்சாரியார், மகா நாட்டு வரவேற் புக் கமிட்டித் தலைவராகவும், கே. ராஜபால சுப்ரமணிய ஐடாவல்லபர், எஸ். டி. என். தாண்டவ தீக்ஷிதர், காரியதரிசிகளாகவும், எ. ஸி. வெங்கடசுப்ரமணிய தீக்ஷதர் கஜா ன்ஜியாகவும், மற்றும் அநேக பிரபல மிரா சுதார்களும், பிராம்மண ரல்லாத நண்பர் களும், வரவேற்புக் கமிட்டி அங்கத்தினர் களாகவும் தேர்ந் தெடுக்கப் பட்டிருப்ப தாகவும் அறிகிறோம். சிதம்பரத்தில் மற் றும், வெள்ளாழ பட்டரை, படையாட்சி பட்டரை, வாணிய பட்டரை, முதலிய பெருமை வாய்ந்த எல்லா பட்டரைகளின் சார்பாக ஷை காட்டாண்மைக் காரர்களும் வரவேற்புக் கமிட்டியில் சேர்ந்திருப் பதாகவும் அறிகிறோம்.

அகில இந்திய தலைவர்கள் ஸ்ரீ. சென்னை ராவ் சாகேப் நட்சேய்யர் டி. எஸ். ராமசாமி அய்யர் மற்றும் வெளியூர் பிர பல சனாதன தலைவர்கள் எல்லாம் ஷை மகாநாட்டிற்கு விஜயம் செய்யப்போவதாக தெரிகிறது. ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள், காமகோடிபீடம், அவ்வம யம் சிதம்பரத்திற்கு விஜயப் செய்யப்போ வதாகவும் அறிகிறோம்.

சென்னை மாகாணத்தில் ஆங்காங்குள்ள சனாதனிகளும், ஆஸ்திகர்களும், வேதாகம சாஸ்திரம், முதலானவைகளின் அபிவிருத்தி யில், பற்றுள்ளப் பெரியார்களும், வைணவ சைவ சமய மடாதிபதிகளும், தயவு செய்து மகா நாட்டிற்கு விஜயம் செய்து சிறப்பிக் வேணுமாய்க் கேட்டுக் கொள்ளப் படு கிறது. நமது பிரபல ஸனாதன பத்திரிகை ஆர்ய தர்மத்தை வாசிக்கும் நண்பர்களும் ஷை மகா நாட்டிற்கு விஜயம் செய்யும் படி தங்கள் தங்களது நண்பர்களுக்கும் தெரி விக்கும்படியும் மகாநாட்டின் உப சரணைக் கமிட்டியார் வேண்டிக் கொள்கிறார்கள். மகாநாட்டிற்கு வரும் பிரதிநிதிகளுக்கு இடவசதி, சாப் பாடு வசதிகள் செய்யப்பட்டுவருகிறது. பிரதிநிதிகள் தாங்கள் சிதம்பரத்திற்கு வரும் காலத்தை, மாகநாட்டு காரியதரிசி, 32 கெ. வடக்கு வீதி சிதம்பரம், விலாசத் திற்கு முன்னதாக தெரியப்படுத்தினால், வாலண்டியர்கள் ஷையார்களை ஸ்டேஷ னில் வரவேற்று அழைத்துக் செல்லுவார் கள்.

வி. நாராயண அய்யர்,
சிதம்பரம்.

சிதம்பரம் ஸ்ரீ நடராஜர் ஆருத்ரா தரி சனம் டிசம்பர் 27உ நடைபெறும் மறு தினம் புஷ்ப பல்லக்கு உற்சவம்.

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீ வத்ஸ. வே. ஸோ. சர்மா)

பட்டால் தேரியும்! சென்னை நகர பரிபா லன ஸபை பெரும் செலவில் பஞ்சமருக்கு பங்களா போல் வீடு கட்டி ஸ்வல்ப வாட கைக்கு விட்டது. பலர் அது அதிக வாட கை என அங்கு வலிப்பதில்லை. தற்கால மேயர் ஸ்வல்ப செலவில் நிறைய பல வீடு கட்டிவிடலா மென்கிறார்.

இந்தியாவில் என்றுமில்லையாம்! காந்திஜி சொல் வேதமாயிருந்த காலமுண்டு. விஷ யம் புரியாமலும் பிடிக்காமலுமே பல ர் பிறர் தடுக்கின்றன்றே என்று அவருக்குப் பல்லாண்டு பாடினர். ஸர். வி. பி. அவர்கள் காந்திஜி காட்டும் அஹிம்சா வழி என் றைக்கு இருந்ததென கேட்கிறார்.

கடன் வாங்கியும் பட்ணி! சென்னை அர சாங்கம் பற்பல வரிகளைப் போட்டும் வரு மானம் எதிர்பார்த்த அளவு கிடைக்காத தால் பசி ஆறவில்லை என்கிறது! வரவுகுறை யும் போது செலவைக்குறைப்பது நீதி. இக் கனதீர்ஷ்டியோடு பார்த்தால் அநாவசிய மாக பலவிடங்களில் பணம் விணுவதைக் காணலாம்.

கோச்சியிலுமா அநீதி? தார்மிக சக்ரவர்த் தியின் ஆளுகையின்கீழ் நடக்கும் கொச்சி ஸபையில் ருதுமதி விவாஹ சட்டம் தலை காட்டுகிறது. ஜனப்பிரதிநிதியாக நியமிக் கப்பட்ட மந்திரி அதை ஆமோதிப்பதும் அரசாங்கம் மத்யஸ்தமாயிருப்பதும் நன் றல்ல. தார்மிகர் அதை ஆக்ஷேபித்ததும் இன்னும் சிலகாலம் அது வராமல் செய்த தும் கொண்டாடத்தக்கதே!

எண்ணிறந்த கூட்டங்கள்! எங்கும் ஊர்களில் ஒரே கூட்டமயந்தான். தர்மத்தை அபிவிருத்தி செய்ய இரண்டொரு ஸபை கூடுமோ அதுவும் இல்லையோ! தர்மவீரோத மில்லாதஆசாரங்களை நாம் பின்பற்றவதில் என்ன ஆக்ஷேபம்? தார்மிக ஸபைகள் அதிக செலவின்றி தாலுக்கா ஜில்லா மகா நாடுகளைக் கூட்டி அதர்ம சட்டத்தைக் கண்டிக்க வேண்டுகிறோம்.

500 மாணவர் யாத்ரை சென்னை நியலாஜி கல் கலாசாலை தனி ரயலில் அறுபது உபாத் யாயர்களும் 500 மாணவர்களும் பீச்சை விட்டு ஞாயர் காலை இளம்பி வீருத்தாஜலம் மதுரை திருப்பரங்குன்றம் பழனி ராமேச் வரம் முதலியவிடம்செல்கின்றனர். 5 ஆயி ரம் நண்பர் அவர்களை ஆசிகூறி அனுப்பினர்.

ஒரு வாரம் கதை இல்லை! அஷ்டாதச புராண ப்ரவசந ஸபைத் தலைவர் விழுப்புரம் ஸபை தெம்ப்ர ஸபை இவைகளுக்குச் சென்று ஸ்ரீ ஜகத்குரு காஞ்சி காமகோடி பீடாதிபதிகளையும் தரிசிக்கப் போவதால் புராணகதைகள் 23உ முதல் 1 வாரம் நின்று பின்னர் ஆரம்பிக்கப்படும்.

ஸத்யாக்ரஹிகளின் புறப்பாடு

சென்னை கவர்ன்மெண்ட் மாளிகை முன்பாகஸத்யாக் ரஹம் செய்ய அமைக் கப்பட்டிருக்கும் கமிட்டியின் தலைவர் ஸ்ரீ மான். ஆர். ஆனந்தராவ் பின்வருமாறு எழுதுகிறார்:—

நானும் திருநெல்வேலி ஸ்ரீமதி ருக்மணி யம்மாளும் ஷை ஸத்யாக்ரஹ விஷயமாக மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி முத லிய பல விடங்களுக்குச் சுற்றுப்பிரயா ணம் போய் தார்மிக ஹிந்து ஸ்ஜரீ, புருஷர் களடங்கிய பல கூட்டங்களில் பேசி அவர் களுடைய் ஆதரவுடன் இதுவரை ஆயிரம் தொண்டர்களைச் சேர்த்திருக்கிறோம். 10 ஆயிரம் ஜாதி ஹிந்துக்கள் தொண்டர்களாக் சேரவாக்குக் கொடுத்துள்ளார்கள்.

இந்த ஸத்யாக்ரஹத் தொண்டர்கள் பிப் ரவரீ முதல் வாரத்தில் திருச்செந்தூரில் ருந்து புறப்பட்டு, ஆழ்வார் திருநகரி, ஸ்ரீ வைகுண்டம், திருநெல்வேலி, ஸ்ரீவில்லிபுத் தூர், ஸ்ரீரங்கம், கும்பகோணம், மாயவரம் சிதம்பரம், காஞ்சீபுரம், திருப்பதி ஆகிய ஊர் வழியாக பிப்ரவரி 2 வது வாரத்தில் சென்னையை அடைவார்கள். பிப்ரவரி கடைசிவாரத்தில் ஸத்யாக்ரஹ இயக்கம் ஆரம்பிக்கப்படலாம். ஹிந்துதர்ம ஸம்ரக்ஷ ணத்திற்காக தார்மிகர் அனைவரும் ஸகலவித உதவியும் செய்யக் கோரப்படுகிறது. மற்ற விவரங்கள் அவ்வப்போத அறிவிக்கப்ப டும்.

ஹிந்து தர்ம பரிபாலன ஸங்கம்

திருநெல்வேலி

முக்யத்தீர்மானங்கள்.

கார்த்திகைமீ 18உ (3—12—39) ஞா யிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு கூடின ஸ்ஜரீ புருஷர்களின் கூட்டத்தின் தீர்மான ங்களாவன:—

வித்வான் சங்கர சாஸ்திரிகள் அவர்கள் அக்ராஸனம் வஹித்தார்கள். திருப்பதி ஸ்ரீ வெங்கிடாசலபதி ஸ்வாமி கோவிலுக்குள் நீண்டாதார் பிரவேசம் நடத்த ஷை தேவஸ் தான அதிகாரிகள், ஷை கோவில் அர்ச்சகர், ஸ்தானீகர், சிப்பந்திகள் இவர்களின் அபிப் பிராயத்தை அறிந்து கவர்மெண்டாருக்கு தெரிவித்து உதிரிவு வாங்க பிரயத்தனம் செய்துவருகிறதாக பேப்பர்கள்மூலம் அறி கிறோம் திருப்பதி வெங்கிடாசலபதி ஸ்வாமி யை வழிபாடு செய்பவர்களும், கட்டளைக் காரர்களும், உபயக்காரர்களும் இந்தியா முழுவதும் இருப்பதாலும், திருப்பதியில் மட்டும் இல்லையென்ற காரணத்தாலும், ஷை வழிபாடு செய்பவர்களாகிய இந்தியா முழு வதும் வசிக்கப்பட்ட லெக்ஷக்கணக்கான மக்களின் அபிப்பிராயத்தையும், கோவில் அர்ச்சகர்கள் முதலியவர்களின் அபிப்பிரா யத்தையும் சரியானபடி உண்மையாய் அறி ந்து கவர்மெண்டாருக்கு தெரிவிக்கும்படி ஷை திருப்பதி தேவஸ்தான கமிஷனர் முத லிய அதிகாரிகளையும் திருப்பதிகோவில் மக ந்து ஸ்வாமிகள் அவர்களையும் இச்சபை யார் கேட்டுக்கொள்கிறார்கள்.

நமது திருநெல்வேலி ஸ்வாமி நெல்லையப் பர் ஸ்ரீ காந்திமதியம்பாள் கோவிலில் புரா தனமான பழக்க வழக்கப்படி நான் கு வர்ணத்தார்களும் அவரவர்கள் ஸ்தானத் தில் நின்று தெரிசனம் செய்வதைப் பற்றி வழக்கு எற்பட்டு மதுரை ஹைக்கோர்ட் டார் உத்திரவுப்படி திருநெல்வேலி, முனிசிப் கோர்ட்டில் ஷை கேஸ் புனர் விசாரணைக்கு ஏற்பட்டிருப்பதை அனுசரித்து, ஷை கேஸ் வாதிக்கு இந்த சபையார் வேண்டும் உதவிசெய்யவும், இங்கர்; ஜில்லா வாசி களையும் வேண்டும் உதவி செய்யவும் நாங் கள் கேட்டுக்கொள்கிறோம். மேலேகண்ட தீர்மானங்கள் எல்லோராலும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

வித்வான் கே. சங்கர சாஸ்திரிகள்
பிரசிடெண்ட்.

உ

ஸ்ரீ காமாக்ஷ்யை நம:

மூகபஞ்சசதி.

மந்தஸ்மித சதகம்.

85. வ-ஏதி: ச்வேதிம கந்தளஸ்ய வஹ்நி: ச்ருங்கார ஸாரச்ரிய: பூர்த்தி: வ-ஏதிஜரீரவஸ்ய லஹரீ
[காருண்ய பாதோ நிதே; |
வாடு காசன கௌவ-ஈமீ மதுரிம ஸ்வாராஜ்ய லக்ஷ்ம்யாஸ்தவ ஸ்ரீ காமாக்ஷி மமாஸ்து மங்கள கரீ ஹாலப்ரபாமஞ்ஜரீ||

ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே. ச்வேதிமகந்தளஸ்ய- வெண் மைநிறத்தின் கூட்டத்திற்கு. வஹ்நி:- உற்பத்தி ஸ்தானமாயும். ச்ருங்கார ஸாரச்ரிய:- ச்ருங்காரஸாரத்தின் சோபைக்கு. வஹ்நி:- இருப்பிடமாயும் வ-ஏகஜரீரஸ்ய- உயர்ந்த கவிதாரஸப்பெருக்கு க்கு. பூர்த்தி:- பூர்த்தியைக் கொடுப்பதும். காருண்ய பாதோ நிதே:- தயையாகிற ஸமுத்ரத்திற்கு. லஹரீ- அலை போன்றதாயும் மதுரிமஸ்வாராஜ்ய லக்ஷ்ம்யா:- மாதுர்யமென்கிறதின் ஸ்வாராஜ்ய லக்ஷ்மிக்கு. காசன- ஓர் உயர்ந்த, கௌவ-ஈமீ, வாடு புஷ்ப ச் சேஷ்டையாகிறதான- உன்னுடைய. ஹாலப்ரபாமஞ்ஜரீ- மந்தஸ்மித சதகம்.

ஸ்ரீ காமாக்ஷி! காமாக்ஷியே. ஜக்தானும்- பிராணிகளுடைய. ஜனித்துக்கம் ருத்யுலஹரீ ஸந்தாபனம்- பிறப்பு, துக்கம், மரணம் என்ற அலையின் தாபத்தை. க்ருந்தத:- போக்கடிப்பதாகளாயும். ப்ரௌட்டானுக்ரஹ பூர்ணசிதளருச:- உயர்ந்த அனுக்ரஹமென் கிற பூர்ண சந்திரனுடைய குளிர்ந்த கான்தியின், நித்யோதயம்- மறைவில்லாத உதயத்தை, பிப்ரத:- வஹிப்பவைகளுமான. தே- உன்னுடைய. ஹாஸாங்குரா:- புன்சிரிப்புக்கள், விஸ்ருத்வரா:- பரவுகிற. கரா இவ- கிரணங்கள் போல. ஆலோகேனன- பார் வையினல், மே- எனது. அந்ததமஸஸ்தோமஸ்ய- பெரிய இருட்டுக் கூட்டத்தின். ஸந்தமிம்- ஸமூஹத்தை. ஹடாத்- பலாத்காரமாக. நிஹந்யு:- விலகட்டும்.

88. ஸ்வாபாவ்யாத் தவ வக்த்ரமேவ லலிதம் வந் தோஷ்டமம்பாதனம் சம்போ: கிம்புன: அஞ்சித
[ஸ்மிதருச: பாண்டித்ய பாத்ரீக்ருதம் |
அம்போஜம் ஸ்வத ஏவ வர்வஜகதாம் சகு-: ப்ரியம் பாவுகம் காமாக்ஷி! ஸ்புரிதே சரத் விகஸி
[தே கீர்ருக் விதம் ப்ராஜதே||

காமாக்ஷி! காமாக்ஷியே. தவ- உனது. லலிதம்- அழகிய. வக் த்ரம்- முகமானது. ஸ்வாபாவ்யாத் எவ- இயற்கையாகவே. சம் போ:- பரமசிவனுக்கு. ஸந்தோஷமம்பாதனம்- ஸந்தோஷத்தை உண்டுபண்ணுவதாயிருக்கிறது. அஞ்சிதஸ்மிதருச:- அழ கிய புன் சிரிப்பின் காந்தியினுடைய, பாண்டித்யபாத்ரீக்ருதம்- பாண் டித்தியத்திற்கு உள்பட்டிருப்பதான அந்த முகமானது. கிம்புன:- சொல்லவேண்டுமா? அம்போஜம்- தாமரைப்பூவானது. ஸ்வதஏவ- பிறவியிலேயே ஸர்வஜகதாம்- எல்லா உலகத்திற்கும் பாவுகம்- கொண்டாடக் கூடிய சகு-: பிரியம்- நேத்திரானந்தமாயிருக்கபோதிலும், சரத் விகஸிதே- சரத்காலத்திய மலர்தலானது. ஸ்புரிதே- உண்டாகும் போது தீர்ருக்விதம்- எத்தகையதாக. ப்ராஜதே- விளங்குகிறதோ, அப்படியே இதுவும்.

89. பும்பி; நிர்மலமானஸை; விததே மைத்ரீ ரஸம் நிர்மலம் கர்த்தும் கர்மலயம்ச நிர்மலதமாம் கீர்த்
[திம் லபந்தேதராம் |
ஸலக்ஷ்மிம் பக்ஷ்மளயந்தி நிர்மலகுணாம் யத்தவ கா: ஸேவகா: தத்காமாக்ஷி தவஸ்மிதஸ்யகலயா
[நைர்மல்ய வீமாநிதே;||

காமாக்ஷி! காமாக்ஷியே. தாவகா: ஸேவகா:- உனது ஸேவ கர்கள். நிர்மலமானஸை:- பரிசுத்தமனதுள்ள. பும்பி:- புருஷர்க ளோடு. நிர்மலம்- சுத்தமான. மைத்ரீரஸம்- ஸ்னேஹ ரஸத்தை. விததே- செய்கிறார்கள். கர்மலயம்ச- கர்ம நாசத்தையும், நிர்மலத மாம்- மிகவும் சுத்தமான. கீர்த்திம்- கீர்த்தியையும். லபந்தேதராம்- அடைகிறார்கள். நிர்மலகுணம்- உயர்ந்த குணமுள்ள. ஸலக்ஷ்மிம்- வாக்கை. பக்ஷ்மளயந்தி- வெளிப்படுத்துகிறார்களென்பதும். யத்- யாதொன்று உண்டோ. தத்- அதெல்லாம் நைர்மல்யவீமாநிதே:- பரிசுத்தியின் பரம எல்லை ஸ்தானமாயுள்ள. தவஸ்மிதஸ்ய- உனது புன் சிரிப்பின். கலயா- ஒரு கலையின் மஹிமையால்தான்.

परित्राणाय साधूनां विनाशाय च दुष्कृतां
धर्मसंस्थापनार्थाय संभवामि युगे युगे ॥

ஆர்யதர்மம்

பிரமாதி-ஹே மார்கழி-மீ 6உ

கீதை போதிப்பதென்ன?

நமது பாரததேசமெங்கும் 22வயன்று தோ ஐயந்தியைக் கொண்டாடும்படி ஹிந்து ஸமூஹத்தலைவர்கள் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். இந்த வேண்டுகோளின்படி அக்கொண்டாட்டம் எங்கும் விசேஷமாக நடைபெறுமென்று எதிர்பார்க்கிறோம். கீதையானது ஹிந்துமதத்திற்கு ஓர் அழிவில்லாத பொக்கிஷமாகும். ஹிந்து ஸமூஹத்திலுள்ள ஸகல வகுப்பினரும் கீதையைப் புனித நூலாகக் கொண்டாடுகிறார்கள். அதிலுள்ள உபதேசங்களைப் பின் பற்றி நடக்கப் பிரியப்படுகிறார்கள். ஹிந்துக்களல்லாத வேறு பற்பல ஜாதி மதஸ்தர்களும் கூட கீதையின் மஹத்வத்தை அறிந்து கொண்டாடி வருவதைக் காண்கிறோம். மனித உலகத்திலேயே இத்தகைய உயர்ந்த உபதேசங்களடங்கிய திரந்த மொன்று எற்பட்டதில்லை, எற்படபோவதில்லையென்றும் யாவரும் ஒப்புக்கொண்ட விஷயம். ஆகையால் ஹிந்து ஸமூஹத்தினர் தங்களுடைய, இதர-பரதேசியஸ்கள் விஷயமாகக் வழிதெரியாமல் தடுமாறவேண்டியதில்லை. எந்த தனிப்பட்ட மனிதர்களுடைய அபிப்பிராயங்களையோ, விபரீத உபதேசங்களையோ கேட்டுக் குழப்பமடைய வேண்டியதில்லை. கீதையின் உபதேச மொழிகளை உண்மையாக ஆராய்ந்து அதன்படி நடந்தாலே எல்லா நன்மைகளும் கிடைக்கத் தடையில்லை. கீதையொன்றையே நாம் சரணமாகக் கொண்டால் போதும். மற்றவைகளை நாம் கவனிக்க வேண்டாமென்று கூடப் பல நினைக்கிறார்கள்.

தற்காலம் இந்தியாவில் ஹிந்துக்களின் மத, ஸமூக சேமங்களைப்பற்றி அவரவர் தமது மனம்போனபடி யெல்லாம் பேசி குழப்பம் விளைத்து வருகிறார்கள். விய வஸ்தையற்றதும், நிலையற்றதுமான அபிப்பிராயங்கள் பலவிதமாக வெளியிடப்படுகின்றன, கீதா ஜயந்தியைக் கொண்டாடச்சொல்லும் ஹிந்து ஸமூஹத் தலைவர்கள் கீதையின் உண்மையான உபதேசத்தையே நமது ஸமூகம் பின் பற்றி நிற்க வேண்டுமென்று உறுதியாகச் சொல்லுவார்களா?

தற்போது நமது தேசத்தில் இளம்பிள்ளை பற்பல முக்யபிரச்னைகள் விஷயத்தில் கீதையானது ஸரியான நிர்ணயத்தை வெளியிட்டிருப்பதை நம்மவர்கள் முக்யமாக கவனிக்கவேண்டும் கீதையை சீர்திருத்தக்காரர் போன்ற பற்பல எண்ணமுள்ளவர்களும் தங்கள்தங்கள் நோக்கப்படி விபரீத அர்த்தம் செய்வதை நாம் பார்க்கிறோம். ஆனால் அது ஒரு நிமிஷம் கூட ஜனத்துக்கு நிற்கக்கூடியதில்லை. வேண்டுமென்றே விபரீத அர்த்தம் செய்தாலல்லது கீதையின் வாக்ய சைலியாலும் நிச்சயமான கொள்கையாலும் அது தீவ்ரமாக வர்ணாச்ரம தர்மங்களைப் போஷிக்கும் மூலம் தேசத்தில் சாந்தி முதலிய க்ஷேமங்களுக்கு வழிகாட்டுவதாயிருக்கிறது. மேலும்,

"எது, கார்யம். எது அகார்யம், என்ற வியவஸ்தை செய்வதில் சாஸ்திரமே உனக்கு பிரமாணமாகும்"

என்ற உபதேசத்தால் எந்த விஷயத்திலும் மனித புத்தியை தள்ளி, ச்ருதி, ஸ்மிருதி முதலிய சாஸ்திரங்களின்படியே நடக்க வேண்டுமென்று தெளிவாய் தை வெளியிடுகிறது. இந்த ஒரு உபதேசத்தை ஸரியாக நிறைவேற்றினாலேயே இப்போது ஏற்பட்டுள்ள ஸகல குழப்பங்களும் நீங்கிவிடுமல்லவா? தவிரவும், கீதையின் ஆரம்பத்திலேயே ஜாதி தர்மம், குலதர்மம், ஜாதி ஸாங்கர்யம், நரகம், பித்ருக்களுக்கு பிண்டதானம், உதகதானம் போன்ற பதங்களையும், தர்மங்களையும் குறிப்பிட்டிருப்பது சிந்திருத்தவாதிகளுக்கு எப்படி ஏற்கக்கூடும்? அதி வர்ணச்ரமிகளாயிருப்பவர்களுக்கு கீதை இடமளிக்காதென்பதை கீதையின் ஒவ்வொரு எழுத்திலும், வாக்யத்திலும், வரியிலும் காட்ட முடியும். ஜாதி தர்மங்களையும், குல தர்மங்களையும் சாஸ்திர விதிப்படி அநுஷ்டித்து எல்லா ஜாதியினரும் க்ஷேமம் அடையவேண்டுமென்பதே கீதையின் பிரதான உத்தேசமல்லவா?

தற்போது, ஹிம்ஸை அஹிம்ஸை என்ற விஷயமாக ஹிந்து மததத்வத்தை அறியாதவர்கள் செய்துவரும் குழப்பத்திற்கும் கீதையானது தக்க பதில் அளித்திருப்பதைக் காணலாம். பூர்ண அஹிம்ஸையே ஹிந்து மதத்தின் தத்வமென்று காட்டி, வலுவான பிரசாரம் நடக்கிறதல்லவா? இதனால் ஹிந்துக்களின் ராஜீய, ஸமூஹ, மத, விஷயங்களுக்குப் பாதகம் ஏற்பட்டு விடுவதாகப் பலர் நினைக்கிறார்கள். பூர்ண அஹிம்ஸையானது ஹிந்து மதத்திற்கு ஏற்றதல்லவென்று நிருபணம் செய்ய அவர்கள் முன் வந்திருக்கிறார்கள். இந்தப் பெரிய விவாதத்தில் கீதையானது தெளிவான லித்தாந்தத்தை வெளியிடுகிறது. வைதிக ஹிந்து மதத்தில், அஹிம்ஸை எப்படி முக்ய தர்மமோ, அதுபோல சிற்சில அவச்ய ஹிம்ஸைகளும் சாஸ்திரீய தர்மங்களாகுமென்பதே கீதையின் லித்தாந்தம். கீதை அவதரித்தஸந்தர்ப்பமே இதைத் தெளிவாக்குகிறது. அர்ஜுனன் அஹிம்ஸைப் பைத்யம் பிடித்து யுத்தம் செய்ய மறுத்தான். தகாத ஸந்தர்ப்பத்தில் அவனுக்கு ஏற்பட்ட ஜீவகாருண்ய புத்தியை மாற்றி யுத்தம் செய்யத்தூண்டுவதற்கல்லவோ கீதை அவதரித்தது? யுத்த ஹிம்ஸையானது உயர்ந்த தர்மமென்றும், அது அவச்யம் செய்யத்தக்க தென்றும், அதைச் செய்ய மறுத்தால் பாபம் ஏற்படுமென்றும் பகவான் இரண்டாவது அத்யாயத்தில் கீர்தமாக உபதேசிக்கிறார்.

"நீ, தர்மமான இந்த யுத்தத்தைச் செய்ய மறுத்தால், ஸ்வதர்மத்தையும் கீர்த்தியையும் இழந்து பாபத்தை அடைவாய்,,

என்று பகவான் சொல்லுவதிலிருந்து யுத்த ஹிம்ஸையைச் செய்யாமல் விடுவது பாபமென்று ஏற்படுவதால் இந்த அவச்ய ஹிம்ஸையை ஓர் தர்மமாகவே ஹிந்து மதம் மதிக்கிறதென்பது தெளிவு.

இன்னும் மிதுபோல் யாகம் முதலிய அனேக கார்யங்களில் அவச்ய ஹிம்ஸைகள் புனிதமான தர்மங்களாக ஹிந்து மதத்தில் அங்கீகரிக்கப்பட்டிருப்பதும் கீதையிலிருந்தே தெரிந்து கொள்ளக் கூடியதாயிருக்கிறது. இப்போது நடக்கும் மேற்றிசை யுத்தத்தில் கூட "தர்ம யுத்தம்" என்ற அடை மொழியை உபயோகிப்பதை யாவரும் பார்த்து வருகிறோம். ஆதலால் பூர்ண அஹிம்ஸையானது ஹிந்து மத தத்வத்திற்குப் பொருத்தமான தல்லவென்ற முக்ய விஷயத்தையும் ஏதோ ஜயந்தி தினத்தில் வெளியிட்டு மீண்டு முப்பங்களைப் போக்குவதும் ஸமயோசித கார்யமாகும்.

டாக்டர் ராஜன் சிற்றம்!

ஆஸ்திகர்களைப்பழிக்கிறார்

காரைக்குடியில் 11உ ஹிந்துமதாபிமான ஸங்கக் கூட்டம் நடந்தது. அதற்கு டாக்டர் ராஜன் தலைவராக விளங்கினர். இதன் பொருத்தத்தை நேயர்களே கவனித்துக் கொள்ளவும். அச்சமயம் அவர் ஹிந்து மதத்தின் உயர்வைப்பற்றி எவ்வளவோ பேசியிருக்கலாம். அப்படியொன்றுமில்லை. தனது பிறவி எதிரிகளாகிய ஆஸ்திகர்களை அவர் கேலி செய்து பேசினார். இதுதான் அவர் கண்ட ஹிந்து மத தர்மம் போலும்!

ஒவ்வொரு ஜாதியாரின் குறுகிய மத அனுஷ்டானங்களை அவரவர் வீடுகளிலே பேசுகிறபடி வைத்துக்கொண்டே ஜனமேயல்லது அவைகளை வெளியில் கொண்டுவரக்கூடாதென்று உபதேசித்தார். ஹிந்து மதமானது நிரைக்குள் மறைந்து கிடக்க வேண்டிய அவ்வளவு கொடுமையானதா?

மேலும் அவர் பேசியதாவது:—

"எனக்குமதஸ்தாபன இலாகா மந்திரியாயிருந்து அநுபவமுண்டு. கோவில்களில் அகேகர் வெளிப்படையாக நாமம், விபூதி முதலிய ஜாதிக்குறிகளைப் போட்டுக்கொண்டு கடவுளிடம்பக்தி கொண்டிருப்பதாக வேஷம் போட்டுக்காட்டுகிறார்கள்

ஆனால் அவர்கள் வீடுகளிலும், கோவில்களிலும் செய்யும் கார்யங்கள் ஜனிக்கமுடியாமலிருக்கின்றன"

என்று டாக்டர் ராஜன் பேசியதாகப் பத்திரிகைகளில் வெளியாயிருக்கிறது. டாக்டர் ராஜன் தனது அனுபவத்தையேசொன்னார். இவர் போன்ற சீர்திருத்த வாதிகளைப்பற்றிய அனுபவம் பலருக்கு உண்டு. அதை அவர்கள் வெளியிடுவார்களல்லவா?

எப்படியும், தமது கோவில்நாச வேலை பலிக்காமல் செய்த ஆஸ்திகர் மீது ராஜன் சீறிவிழுகிறரென்பதே வெளிப்படை.

(அநுதாபி)

SECULAR STATE—NEHRU'S IDEAL.

"The future Indian States after we have gained Independance, must necessarily be a secular state, which cannot represent any one religion. While it is a secular State, it must give the fullest freedom in the matter of conscience and religious observances subject to public order and morality".

Pandit Nehru's letter-Indian Christian Conference.

கும்பகோணத்தில் ஸ்ரீமான் பராண்டே. பொதுக்கூட்டதில் பிரஸங்கம்.

தர்மமே ராஜ்யத்திற்கு உயிர்.

வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்க ஸ்தாபனம்.

அகில இந்திய வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்தின் பொதுக் கார்யதரிசியும் மாஜி ஜில்லா ஜட்ஜுமாகிய நாகபுரி ஸ்ரீமான் ராவ் பகதூர் ஸதாசிவ மாதவ பராண்டே அவர்கள் 15உ குடந்தைக்கு விஜயமாகி ஸனாதன பிரமுகர்களைக் கண்டு தற்கால நிலைமையைப் பற்றியும், கல்கத்தாவில் நடைபெறப் போகும் அகில இந்திய ஸனாதன தர்ம மஹா ஸம்மேளனத்தைப் பற்றியும் கலந்து பேசினார்.

அன்று இரவு 7 மணிக்கு ஸ்ரீ சார்ங்க பாணிஸ்வாமி கோவிலில் ஆஸ்திகர்களின் பொதுக் கூட்ட மொன்று நடைபெற்றது ஸ்ரீ. எம். கே. வைத்யநாதய்யரவர்களின் பிரேரணையின் மேல் மஹாமஹோபாத்தியாய பண்டிதராஜ ஸ்ரீ கிருஷ்ணமாசாரிய ஸ்வாமிகள் அக்கிராஸனம் வகித்த ஸ்ரீ பராண்டேயை ஸபையோருக்கு அறிமுகம் செய்துவைத்தார்.

ஸ்ரீமான் பராண்டே ஆங்கிலத்தில் பேசியதை ஸ்ரீமான் எஸ். மஹாலிங்க அய்யரவர்கள் தமிழில் மொழிபெயர்த்துக்கூறினர்கள்

ஸ்ரீ பராண்டே பேசுகையில்—தற்காலம் வர்ணச்ரமிகளின் நிலைமையை நாம் கவலையுடன் கவனிக்கவேணும். நம்க்குள் ஒற்றுமை அவச்யம் வேணும். கதாஸரித் ஸாகரத்தில் ஒரு கதையுண்டு. ஒரு ஆற்றில் ஐந்து விரல்களுடன் ஒரு கை காணப்பட்டது. இதன் உண்மையை அறிய விரும்பி அரசன் குணுட்யனென்பவரை அழைத்துக் காட்டினான். குணுட்டியர் தனிதனிண்டுவிரல்களே காட்டியதும் அந்த ஐந்து விரல் கொண்ட கையானது ஜலத்தில் மறைந்து விட்டது. இதன் அதிசயத்தை குணுட்யன் அரசனிடம் விளக்கினான். ஒற்றுமையுடன் ஐந்து பேர் இருந்தாலும் போதுமென்று அந்த விரல்கள் போதித்தனவென்றும், தாம் இரண்டுபேர் ஒற்றுமையாயிருந்தாலும் போதுமென்று காட்டியதாயும் அதை அந்த விரல்கள் அங்கீகரித்து மறைந்ததாயும் குணுட்யன் கூறினான். இது போல் நம் தேசத்தில் இரண்டு பேர் இருந்தாலும் ஒற்றுமையிருந்தால் எதையும் ஸாதிக்கலாம்.

தேச ராஜ்யத்திற்கு உயிர் ஸ்தானமான மூலாதாரமானது தர்மமேயாகும். அர்த்த சாஸ்திரம், நீதி சாஸ்திரம் வைத்ய சாஸ்திரம்போன்ற ஸகல லௌகிக சாஸ்திரங்களும் தர்மமே மூலமென்பதை வற்புறுத்துகின்றன.

வைத்யசாஸ்திரத்தில்ஸ்ரீவாக்படாசாரியர் ஆரோக்ய வாழ்க்கைக்கு தர்மமே மூலமென்று ஆரம்பத்தில் சொல்லுகிறார். காமந்தகர், கௌடில்யர் போன்ற, அர்த்த நீதி, கிருத்தகாரர்களும் தர்மமூலமாகவே அர்த்தம், முதலியவை லித்திக்குமென்கிறார்கள். கிராதார்ஜுனீயமென்ற காவ்யத்தில் ஸ்ரீ பாரவிகவியும். அக்காலத்தில் தர்மபுத்ரரிதிகள் தர்மத்திற்கு முக்யத்வம் கொடுத்திதை முன்னிட்டே மற்ற ராஜ்யகார்யங்களை கவனித்ததாகக்கூறியிருக்கிறார். மஹாபாரதத்தில் ஸ்ரீ வியாஸரும்,

ऊर्ध्वबाहुः विरौम्येषः न च कश्चित् शृणोति मे।
धर्मादर्थश्च कामश्च स किमर्थं न सेव्यते ॥

என்பதால் "கையிரண்டையும் தூக்கிக் கொண்டு தர்மமே மூலமென்றும், அதிலிருந்தே அர்த்த கரமாதிகள் தானுக உண்டாகுமென்றும் தாம் கதறுவதாயும், அத்த தர்மத்தை என் அநுஷ்டிக்கக்கூடாதென்றும்" கேட்கிறார், நமது தர்மதேசத்தில் இந்த கொள்கையே இருந்து ஸகல நன்மைகளும் ஏற்பட்டுவந்தன.

தற்போது நம் தேசத்தின் தர்மத்தை நசுக்க முயற்சிக்கிறார்கள். அன்னிய பாஷையும், அன்னிய காகரிகமும் நம்மவர்களிடம் பரவி அதனால் மயங்கி நம் தேச தர்மத்தை கைவிட்டு விட்டார்கள். அதைத் தொலைத்து விடவும் பாடுபடுகிறார்கள். அந்திய தேசங்களில், மதம், தர்மம், இரண்டிற்கும் வித்யாஸம் தெரியாமல் இரண்டையும் ஒன்றாக நினைக்கிறார்கள். அதையநுசரித்து ஹிந்து ராஜீய வாதிகளும் மதத்தையும், தர்மத்தையும் ஒன்றாக நினைத்துக் குழப்பம் செய்கிறார்கள். மேற்றிசைகளில் மதத்தின் பெயரால் அடிக்கடி கோரமான பல சண்டைகள் நடந்ததும், நடப்பதும் பிரஸித்தம். இந்திய ராஜீய வாதிகளும் அதைப்பார்த்து எமாந்து போனார்கள். இந்தியாவிலும் மதத்தால் சண்டை வளருமென்றுநினைத்து மதத்தையே அழிக்க விரும்புகிறார்கள். ஆனால் மதத்திற்குப் பதிலாக தர்மத்தையே அவர்கள் அழிக்க முற்பட்டிருப்பதை தெரிந்து கொள்ளவில்லை. இரண்டையும் ஒன்றாக நினைப்பதே காரணம்.

இந்தியாவில் உள்ள ராஜீயக்கக்ஷிகளில் இலது தர்மத்தால் தேசத்தில் பிளவும் சண்டையும் ஏற்படுவதாக நினைத்து அதை அடியோடு தொலைத்து விடப்பாடுபடுகின்றன. மற்றும் சில ராஜீயக்கக்ஷிகள் தங்களிஷ்டப்படி தர்மத்தை புதிய வழியில் திருத்தப்பாடுபடுகின்றன. தர்மத்தினுல் ராஜ்யம் உயிர் வாழவேண்டுமென்ற தத்வம் போக, தர்மத்தால் ராஜ்யத்திற்கு குந்தகம் ஏற்படுகிறதென்ற விபரீத எண்ணம் பரவிவருகிறது. இந்த நிலைமையில் வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம் ஒன்றுதான் பாரததேச தர்மத்தை முன்னிட்டு ஸ்வராஜ்யம் வேண்டுமென்று கேட்கிறது. தர்மத்தை அடிப்படையாகக்கொண்ட ஸ்வராஜ்யத்தை ஸ்தாபிக்க விரும்பும் ராஜீயக்கக்ஷி வர்ணச்ரம தர்ம ஸ்வராஜ்ய ஸங்கமொன்றுதான். ஆகலால் தேசம் முழுவதும் அந்த ஸங்கத்தை ஸ்தாபித்து நாம் தர்மத்தையும் ஸ்வராஜ்யத்தையும் அடையவேணும்" என்று ஸ்ரீ பராண்டே பேசி கல்கத்தாவில் நடைபெறும் ஸனாதன ஸம்மேளனத்திற்குப் பலர் வரும்படி வேண்டிக்கொண்டார்.

இந்த பிரஸங்கத்தை ஆமோதித்துஸ்ரீமான் எம். கே. வைத்யநாதய்யரவர்கள் சில வார்த்தைகள் கூறினர்கள்.

பிறகு கும்பகோணத்தில் வர்ணச்ரமஸ்வராஜ்ய ஸங்கத்தின் கிளையொன்றைஸ்தாபிப்பதாகத் தீர்மானிக்கப்பட்டது. கூட்டத்திலிருந்தபலர் உடனே மெம்பர்களாகப்பதிவு செய்து கொண்டனர். ஸ்ரீ எம். கே. வைத்யநாதய்யர் தலைவராயும், ஸ்ரீ ராமாநுஜதாதாசாரியர், ஸ்ரீ ஆர் கடாரு சாஸ்திரிகள் காரியதர்சிகளாயும் தெரிந்தெடுக்கப்பட்டனர்.

ஸ்ரீ நடராஜ சாஸ்திரியால் யாவருக்கும் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனிது முடிந்தது.

(ந. கி)

சந்தாதார்களுக்கு முக்கிய அறிவிப்பு

நமது ஆர்யதர்மம் பத்திரிகையின் 24-வது வருஷம் பூர்த்தியாகிறது. இன்றுடன் 50 வஞ்சிகைகள் வெளிவந்துவிட்டன. அடுத்த வஞ்சிகையுடன் பூர்த்தியாகி விடுகிறது. ஆதலால் நமது சந்தாதார்கள் இனி வரப்போகிற புதிய வருஷத்திற்கான சந்தாத்தொகையை கூடிய சீக்கிரத்தில் நமக்கு அனுப்பி, எப்போதும் போல் பத்திரிகையை ஆதரிக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

மானேஜர்.

ஹிந்து முஸ்லீம் ஒற்றுமைக்குப்புதிய வழி

ஹிந்து மதத்திற்கு கேடு காலம்

" மௌல்வி வால்மீகி. பீகம்ஸீதா "

பீஹார் மாகாணத்திய பள்ளிக்கூடங்களில் விசித்ரமான பாட புஸ்தகமொன்று வைக்கப்பட்டிருக்கிறது. அந்த பாட புஸ்தகத்தை எற்கனவேயிருந்த காங்கிரஸ் மந்திரி ஸபையானது அங்கீகரித்து கவர்ன்மெண்டின் அனுமதியும் கொடுத்திருக்கிறதாம்.

ஹிந்து-முஸ்லீம் ஒற்றுமைக்கு இந்த பாட புஸ்தகம் மிகுந்த உதவியாயிருக்கும் என்று காங்கிரஸ் மந்திரிகள் கருதியதாகத் தெரிகிறது.

இந்த பாட புஸ்தகத்திற்கு காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ ராஜேந்திர பிரஸாத்தின் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறது. "ராஜேந்திர ப்ரஸாதி புஸ்தகம்" என்ற அதன் பெயர். அந்தப் புஸ்தகத்தில், நமது பரதேவதையாகிய ஸ்ரீஸீதா தேவியை "பீகம் ஸீதா", என்று பலவிடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. மஹர்ஷி வால்மீகியை "மௌல்வி வால்மீகி" என்றும் ஷே புஸ்தகத்தில் எழுதப்பட்டிருக்கிறதாம்.

பீஹார் காங்கிரஸ் மந்திரி ஸபையானது ஹிந்து தர்மத்தையும், தெய்வத்தையும் கீழ்படுத்தி நாசமாக்கும் இந்த விபரீத முயற்சிக்கு எப்படி அநுமதி கொடுத்தென்று தெரியவில்லை, ஸ்ரீ ராஜேந்திர பிரஸாத்தும் இப்புஸ்தகத்திற்கு தனது பெயரை வைக்க எப்படி ஸம்மதித்தார்? ஹிந்து தெய்வங்களைப் பழிக்கும் இக்கார்யம் நெஞ்சுத் துணிவுடன் பீஹாரில் காங்கிரஸ் சர்கார்களால் செய்யப் பட்டிருப்பதை ஹிந்துக்கள் ஸஹிக்கப் போகிறார்களா? பிரதம மந்திரி ஸ்ரீ கிருஷ்ண வின்னு இனிமேல் "மியான் கிருஷ்ணலின்னு" என்றும் பாபு ராஜேந்திர "மௌல்வி ராஜேந்திரர்" என்றும் பெயர் வகிப்பது கூடஸம்பவிக்கலாம்.

இந்தமாதிரியான விஷம ஒற்றுமைகளுக்கு முஸ்லீம்கள் ஸம்மதிப்பார்களோ?

வங்கீத வித்வத் ஸபை சென்னை

மைலாப்பூர் லஸ் "ராணடே" ஹாலில், 1939 ஹே டிசம்பர் மீ 28, 29 உ களில் மாலை 4-30 மணிக்கு ஸ்ரீவான்கதூர் K. S ராமஸ்வாமி சாஸ்திரிகள் மகாகாட்டைத் திறந்து வைப்பார். (சேர்மாதேவி, வீணை வித்வான், ப்ரம்மஸ்ரீ) எல். சுப்பிரமணிய சாஸ்திரிகள் தலைமை வஹித்துப் பேசுவார்.

சாந்தி பர்வம்

(ஸம்பாஷணை)

[முன் தொடர்ச்சி]

ஆங்கரை ரங்கஸ்வாமி சாஸ்திரிகள்.

கி. ராமா! என்ன இன்றைக்கு இவ்வளவு தாமதம் இங்கு வந்து சேர. நான் அரை மணி நேரமாகக் காத்துக்கொண்டிருக்கிறேன். மேற்று நடந்த பாரத கதையை மிமரிசனம் செய்ய வேண்டாமா?

ரா. நான் குறித்த காலத்திலேயே வந்திருக்கிறேன். உனக்குக்கதையை விசாரிக்க வேண்டு மென்கிற உத்ஸாக மேலீட்டினல் காழிகை தெரியவில்லை. ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதர்

आनन्दयन्त्रनप्रविश्यसूक्तिः कवेरेव सुधासगन्धा'

என்றுரைத்தது்மையே. ஒரு நாள் கதை கேட்டமாத்திரத்தில் உனக்கு இவ்வளவு ஆனந்தம் உண்டாயிற்றன்றே.

கி. மேற்றயதினம் என்ன ராமா! பெரியோர் சிற்யோர் என்ற வரம்பில்லாமல் பிதாவுக்குப்புத்திரன் பெரியதோர் உபதேசம் செய்யலுற்றனர்,

ரா. பிதாவென்பதினல் பெரியவனல்ல. புத்திரன் என்பதினல் சிறியவனல்ல. எவன் ஞானமுதிர்ச்சியுள்ளவனே அவனே பெரியவன். சுவாமிமலையில் சிவபெருமானுக்கு சுவாமிநாதன் பிரணவப்பொருளைக் காதினுபதேசிப்பதை யுணர்வாய்.

கி. பிதா சொன்னது ரொம்பவும் நியாயமாகவே தோன்றிற்று. பையன் அவ்வளவையும் தூண்டித்துப்பெயத அச்சரியமாயிருக்கிறது.

ரா. பிதாவினுபதேச மொழிகளே முதலில் கூறு பார்ப்போம்.

கி. 'வேதாधीत्य' என்றரம்பித்து இரண்டு சுலோகம், அதாவது வேதத்தை விதிப்படி ஓதி சாஸ்திர முறைப்படி வேள்விகளைச் செய்து புத்திரர்களைப்பெறுவதினல் பிதிரு ருணம் தீர்க்கப்பின்னர் வனஸ்தனுயிருந்து வைராக்கியம் முதிர்ந்து முறவு பூணவேண்டும் என்றுளார். இது உலகினியல்பே.

ரா. அதற்கு மகனென்ன பகர்ந்தான்?

கி.'एवमभ्याहृते लोके' என்று தொடங்கி நீண்டதோர் பிரசங்கம் செய்தான். அதாவது ஓ. தந்தையே! மிருத்தியுவால் உலகம் நாசம் செய்யப்பட்டு கண், காது, நரை, நிரை, மூப்பு, பிணி, மிருதி இவ்வாறிருக்கையில் ரொம்பவும் தெம்புள்ளவர்போலப் பேசுகிறீரே. எவ்வாறு முடியும். அலை ஓய்ந்தபின் கடலில் ஸ்நானம் செய்ய விரும்புவனை உலகம் பழிக்காதோ? காற்றுள்ள போதே தூற்றிக்கொள்ள வேண்டும், என கர்ஜித்தான். இவன் குருவுக்கு மிஞ்சின சிஷ்யனேயாகும்.

ரா. அல்ல கிருஷ்ண! நீ என்ன கருதுகிறாய்? புத்திரவித்தாதிகளினுல் இம்மை மறுமைப்பயனை அனுபவித்த பின்னரே மோக்ஷத்திற்கு முயலவேண்டுமென்கிறாய். வித்த மென்பது பிறமணனுக்கு இன்னதுதா னென்பதை மேலே விளக்கியுள்ளார் கவனிக்கவும்.

'नेतादृशं ब्राह्मणस्यास्ति वित्तं यथैकता समता सत्यता च। शीलं स्थितिर्दण्डनिधानमार्जवं ततस्ततश्चोपरमः क्रियाभ्यः॥'

என்று பிறமணனுக்கு இவைகளே உயர்ந்த செல்வமென விடைதந்தார்.

கி. ஒவ்வொன்றுக விவரிப்பாய். ஒரு மிக்க அஷ்டைச்வரியங்களையும் வர்ணித்து விட்டாயே.

ரா. ஆம். இவைகளே அஷ்டவித ஐசுவர்யங்கள்

"ब्राह्मणस्य हि देहोयं क्षुद्रभोगायनेष्यते। इह क्लेशाय महते प्रेत्यानन्त सुखाय च॥"

என்ற வசனத்தை எண்ணிப்பார். அளவற்ற சுகத்தை கொடுப்பதே ஐசுவரியம். சுகத்துக்கு ஸாதகமல்லாதது எப்படி ஐசுவரியமாகும். நல்லது கிருஷ்ண! ஒவ்வொன்றுய் விவரிக்கிறேன்.

ஏகத்வம்:-எங்கும் ஒரேஆத்மாவியாபித்திருத்தலால் பரிச்சின்னமென்ற புத்தி விலகி ஸமஷ்டி பாவனையினுல் ஒருவனுக்குத்தீங்கு வினவிக்கவோ ஒருவனிடம் அசூயை கொள்ளவோ இடமில்லை.

'तं वेधा विदधे नूनं महाभूतसमाधिना। तथाहि सर्वे तस्यासन् परार्थैकफला गुणाः॥'

என்று மகாகவியான காளிதாஸன். ஸமஷ்டிக்கு ஸர்வஸித்தி யுண்டெனக்கூறியுள்ளான்.

ஸமத்வம்:-சுகதுக்கங்களில் ஹர்ஷவிஷாதங்களையடையாமல் ஸமமாகவிருத்தல்.

ஸத்யதா:— எப்பொழுதும் உண்மையிலிருந்து நழுவாதிருத்தல்

'अश्वमेधसहस्रं च सत्यं च तुलयाधृतं। अश्वमेध सहस्रात्तु सत्यमेकं विशिष्यते॥'

என்றமை காண்க.

சீலம்:நல்லொழுக்கம்'ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும்.' என்றுர் பொய்யாமொழிப்புலவர். என்றும் திருவள்ளுவர் 'ஒத்தமறப்பினும் கொளல் ஆகும் பார்ப்பான் தன்னெழுக்கம் குன்றக் கெடும்' என்றும் [எதிர்மறையாலும் கூறினர்.

ஸ்திதி:- நிதானம் தன்னிலையிலிருத்தல்

'धृत्या यथा धारयते मनः प्राणेन्द्रियक्रिया

என்ற மனுவாக்கு காயங்களைத் தன்னிலையில் வைத்தல்

தண்டநிதானம்:-மனைதண்டம், வாக்தண்டம், காயதண்டம்என்று. அவைகளே பாவச் செயல்களில் போகவிடாமல் மன்தை காமகுரோதாதிகளினின்றும், வாக்கை பொய்யினின்றும், காயத்தை பிறர் ஹிம்ஸையின்றும் தடுத்தல்.

ஆர்ஜவம்:- ஒழுங்கான ஸ்வபாவம் கபடம் வஞ்சனை தவிர்த்தல் 'न येपुजिह्मनृतं न माया चेति॥' என்பதாக கபடம் உள்ள விடத்தை பிரும்மம் நிலைத்திருக்காது.

'ततस्ततश्चोपरमः क्रियाभ्यः' கொஞ்சங் கொஞ்சமாக பிரவிருத்தி மார்க்கத்தினின்றும் ஒழிவடைதல். 'यतो यतोनिश्चरति मनश्चञ्चलमस्थिरम्। ततस्ततो नियम्यैतदात्मन्येव वशं नयेत्॥' शनैरुपरमेद्बुध्या धृतिगृहीतया॥' என்றும் ஸ்ரீ பகவான் கூறியபடி எங்கெங்கே மனது பாய்கின்றதோ அங்கங்கிருந்து உபரியடைய வேண்டும், அவனுக்கே சுகம் என்றுர். ஸ்ரீ வேதவியாஸமுனிவரும்

'यतो यतो निवर्तते ततस्ततो विमुच्यते'

என்றுசுகோபதேசப்பிரகரணத்தில். இவைகளே மேலான செல்வம். மனதில் பதித்தாயா கிருஷ்ண!

கி. ஆகா. நன்கு புரிந்தது இவைகளையே கைக்கொள்ள முயல்வேன். (தொடரும்)

டாக்டர் சங்கரய்யருக்கு அநுதாபம்

கும்பகோணம்

கும்பகோணம் காவேரி டபீர் சட்டத்தில் 14-12-39 மாலை 6½ மணிக்கு ஹிந்துக்களின் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

ராவ்சாகேப் ஆர். ஸ்வாமிநாதய்யர் அவர்கள் கூட்டத்திற்கு தலைவராக அட்வகேட் எம். கே. வைத்யநாதய்யர் அவர்களால் பிரேரேபிக்கப்பட்டு, ஸ்ரீ ஆர். நடராஜன் அவர்களால் ஆமோதிக்கப்பட்டது.

கேரள மாகாண வர்ணச்ரம ஸ்வராஜ்ய சங்கத்தின் பொது கார்யதரிசியாக இருந்த டாக்டர் கே. எ. சங்கரநாராயணய்யர் அவர்கள், ஸ்ரீ காந்தியின் குருவாயூர் பஞ்சம ஆலயபிரவேச ஸத்யாக்ரஹத்தையும், சென்னை காங்கிரஸ் மந்திரி சபையில் நிறைவேற்றப்பட்ட மஹாளர ஆலயப்பிரவேசச் சட்டத்தையும் தீவிரமாக எதிர்த்துப்போராடி, அவைகளை தோல்வியுறும்படி செய்த விபரத்தையும், வர்ணச்ரமஸ்வராஜ்ய சங்கத்திற்கு அவரால் செய்யப்பட்ட சிறந்த ஊழியங்களையும் ஸ்ரீ எம். கே. வைத்யநாதய்யர் அவர்களும், பண்டிட் ராமானுஜதாதாசாரியார் அவர்களும், விவரமாக எடுத்துரைத்தார்கள்.

ஹிந்துக்களுடைய மததர்ம ஸம்ரக்ஷணத்திற்காக பெரிய நியாகங்களைச் செய்த அவரது அகால மரணத்திற்கு வருந்துவதாக ஒரு அனுதாப தீர்மானம் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. இந்த அனுதாப தீர்மானத்தை அவருடைய குடும்பத்தாருக்கு தலைவரால் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

(ந-கி.)

கெணப்தி அக்ராகாரம்

பாகவத ஸப்தாஹம்

நாளது பிரமாதி ஐப கார்த்திகை மீ 22 தேதி (7—12—39) முதல் ஷை மீ 28ஆ (13—12—39) முடிய 7 நாளைக்கு பிரதி தினமும் காலை 7 மணி முதல் 10½ மணி வரையில் ஸ்ரீமத் பாகவத கிரந்த மூலபாராயணமும் மாலை 2½ மணி முதல் 9½ மணி வரையில் தஞ்சாவூர் பிரம்மஸ்ரீ வெங்கடரமசாஸ்திரியர் அவர்களைக்கொண்டு கதாப்ரவசனமும் கெணபதிஅக்ரகாரம் வடக்கு தெருவில் கடைபெறுவதால் ஆங்காங்குள்ள ஸாதக்கள் அனைவரும் வந்திருந்து கதா சிரவணம் செய்து கிருதார்த்தர்கள் ஆகும்படிகேட்டு கொள்ளப்படுகிறார்கள்.

கீர்வாணவாணீ பரிஷத் பழுஹர்

10—12—39 ஞாயிறு பகல் 12-30மணிக்கு மேலேகண்ட பரிஷத்தின் கூட்டம் முத்தரசனல்லூர் பர்ணசுடீரத்தில் நடைபெற்றது. அவ்வமயம் கொல்லம் ஸ்ரீ. வெங்கடரமய்யர் அவர்கள் தலைமை வகித்தார்கள். ஸ்ரீ. எஸ். வி. சுப்ரமணிய சாஸ்திரிகள் "ஸத்யோபாஸனம்" என்னும் விஷயம் பற்றி ரொம்பவும் அழகாக சிறு குழந்தைகளும் நன்கு தெரிந்து கொள்ளும்படி உபன்யஸித்தார்கள். இது மேன்மேலும் அபிவிருத்தியடையக் கூடிய நிலைமையில் கிரமத்தாருக்கு விசேஷ உத்ஸாஹம் இருந்துவருகிறது. ஸாதனைகளுக்கு இந்த பரிஷத்து ஒரு அவலம்பமாக இருந்து வருகிறது என்பது திண்ணம்.

என். ஒய். சுப்ரமணிய சாஸ்திரிகள்

தீண்டாதார் ஆலயப்பிரவேசம்

ஏ. வைத்யநாதய்யர் மாஜி ஸ்டேஷன் மாஸ்டர்

இது பெரிய ஆவேசம். ஹரிஜனங்கள் என்றுல் யார்? எந்த வகுப்பைச் சேர்ந்தவர்கள். இந்தியாவில் பிறந்தவர் களெல்லாம் இந்தியர்களே. இந்த ஹரிஜனங்களுக்கு தெய்வம் யாது? இது வரையில் எந்த சுவாமியை தொழுதார்கள். அவர்களுடைய ஜாதி குறி என்ன? நாமமா? விபூதியா?

அவர்கள் விஷ்ணுவைச் சேர்ந்தவர்களா. சிவனைச்சேர்ந்தவர்களா. அவர்களே ஆலயத்தில் விட்டு விட்டால் உடனே சுயராஜ்யம் கிடைக்குமா? அல்லது ஹரிஜனங்கள், சிவ ஜனங்களாய் விடுவார்களா. அவர்கள் அஸ்தமனம் வரையில் கஷ்டப்பட்டு வேலைசெய்து விட்டு நிரம பரிகாரம் செய்து கொள்ள வேண்டாமா? அவர்கள் கோவிலுக்குள் போவதாயிருந்தால் ஸ்நானம் பண்ணி சுத்தமாய் போகவேண்டும். அவர்களுக்கு குளிக்கக் கிணறு ஆறுண்டா? கட்டத் துணி உண்டா? சாப்பிடச்சாதம் உண்டா? ஸ்ரீ சூர்ணம் விபூதி வாங்க கையில் காசுண்டா? எந்த நிலைமையில் அவர்கள் கோவிலுக்குள் போய் சுவாமி தரிசனம் பண்ணுவார்கள். சீர்திருத்தக்காரர்கள் பழைய வழக்கங்களை மாற்றி, சுத்தமாய் இருக்கச் செய்து பின்பு கோவிலுக்குள் புக அனுமதி கொடுக்க பொது ஜனங்கள் அபிப்பிராயத்தை நாடவேண்டும். அவர்களே கோவிலுக்குள் விடாதலினல் உலகமே முழுகிப்போய் விட்டதென்கிறார்கள். ஜாதி ஹித்தக்கர் பிராயசித்தம் பண்ணிக்கொள்ள வேண்டுமென்கிறார்கள். மதுரை, பழனியாகிய கோவிகளில் ஹரிஜனங்கள் புகுந்த தினல் யார் என்ன லாபத்தை அடைந்தார்கள். அதனல் கிடைத்த பலன்களை காதினல் கேட்டுக் கொண்டே இருக்கிறோம். இதுவரையில் ஹரிஜன் என்பதற்கு நாமமாவது சிவஜனம் என்பதற்கு விபூதியாவது அணிந்தார்களா, இப்பொழுதாவது அணிகிறார்களா? இவர்களே ஆதிஸைவர்கள் என்று அழைப்பது புது வழக்கம். இந்தப் பேரையே Leader கள் ஒப்புக்கொள்ளுகிறார்கள். இவ்வளவு கஷ்டப்பட்டு தெருத் தெருவாய் உபந்நியாஸம் செய்து ஜாதி துவேஷமும் ஏறுமானுக்கும் வேலைக்காரர்களுக்கும் துவேஷமும் உண்டாக்கினர்களே தவிர அவர்களுக்கு இதுவரையில் என்ன உபகாரம் செய்திருக்கிறார்கள். அல்லது செய்யப்போகிறார்கள். கொஞ்சங்கூட இஷ்டமில்லாத சாதுக்களை கட்டியழுத்துத் தொந்திரவு செய்கிறார்கள். இதையெல்லாம் எல்லாரையும்காப்பாற்றக்கூடிய பகவான் கவனிக்காமலிருக்கவில்லை.

தீண்டாமை, நெருங்காமை எந்த ஜாதியாராயிருந்தாலும் உண்டு. ஒருவரை யொருவர் தொடவேண்டிய அவசிய மென்ன? சமீபத்தில் நெருங்க வேண்டிய அவசிய மென்ன. எந்த ஜாதியராயிருந்தாலும் ரொம்பவும் அசுசியாயிருந்தால் ஒரே ஜாதியிலும் ஒருவரையொருவர் தொடமாட்டார்கள். நெருங்கவும் மாட்டார்கள். சீர்திருத்தக் காரர்கள் முதலில் தன்னையும். தன் வீட்டையும் சீர்திருத்திக் கொள்ள வேண்டும். அசுத்தமாயிருப்பவர்கள் சுத்தமாய் வெளிக் இளம்பினல் சீர்திருத்தக் காரர்களுடைய கட்டாயமில்லாமலே சுத்தக் காரர்களோடு சேர்ந்து விடுவார்கள். இதற்காக ஒரு கலகமும் பிரயத்தனமும் வேண்டாம். எல்லாரும் ஸஜாதியிருந்தால் சேவகனுய் யாரிருப்பது. எல்லாரும் பல்லக்கு ஏறுனல் தூக்குகிறவர்கள் யார்? வேலைக்காரர்களை சுத்தமாயிருக்கும் படி வற்புறுத்த சாத்தியப் படாது அவர்கள் செய்யும் வேலையானது சுத்தமாயிருக்க முடியாது. ஆகையால் தீண்டாமையையும், நெருங்காமையையும் பற்றி பிரசாரம் பண்ணுவது ஜாதிக்கு ஜாதித் வேஷத்தை உண்டாக்கு வதைத் தவிர வேறில்லை.

வெள்ளை வேஷ்டி கட்டி சுத்தமாயிருக்க ஆரம்பித்தால் ஒரு வேலையும் நடக்காது. எஜமான் வேலைக்காரன் என்கிற வித்தியாஸம் இல்லாவிட்டால் ஒரு தொழிலும் ராஜாங்கமும் நடைபெறுது. எல்லாரும் பகவானுல் சிருஷ்டித்த மக்கள் என்றும் ஜாதி வித்தியாஸமில்லையென்று சொன்னல் ஒவ்வொருவரும் அவரவர் வீட்டிலேயே யிருந்தால் எப்படி வேண்டுமானுலும் சொல்லிக் கொள்ளலாம்.

பகவானுல் ஜாதிகள் அநேக வகுப்புகளாக சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. எறும்புகள், ஈக்கள், மிருகங்கள், பக்ஷிகள், விருக்ஷங்கள் ஒவ்வென்றிலும் எத்தனை நினுசுகளிருக்கின்றன. ஒவ்வொன்றும் அதனதன் ஜாதியோடு சேருகின்றது. மனிதர்களோ அவ்விதமில்லை, எல்லாவற்றுடனும் கடை, உடைபாவனைகள் வேறு. அதே மாதிரி மனிதர்களும். மனிதனுடைய சரீரத்தை எடுத்துக் கொள்வோம். எண் சாண் உடம்பிற்கு சிரஸே பிரதானம். எந்த அவயவங்களிலாவது உருப்புகளிலா எதாவது பின்னம் அல்லது வலி ஏற்பட்டால் மனிதன் கஷ்டப் படுகிறான். எல்லா அவயவங்களுக்கும் பிரதானம் தலை. தலையை வெட்டி விட்டால் மனிதனுடைய உயிர் போய்விடுகிறது. மற்றைய அவயவங்களில் எதாவது பின்னம் ஏற்பட்டால் மனிதன் பிழைத்து ஜீவித்திருக்கிறான். எப்படி எண்சாண் உடம்பிற்கு சிரசு பிரதானமோ அதுபோல ஜாதிகளில் பிராமணன் முக்கிய வானென்று சாஸ்திரம் சொல்லுகிறது. மனிதனுக்கு தன் அவயவங்களெல்லாம் சமம்தான். ஒருவனுக்கு எந்த வஸ்துவையாவது இடது கையால் கொடுத்தால் கோபிக்கிறான். இந்த மாதிரி வித்தியாஸம் பாராட்டுவதில் அனேக உதாரணங்கள் உண்டு. ஆகையால் ஜாதி வித்யாஸமில்லையென்று பிரசாரம் பண்ணுவதானது ஜாதிக்கு ஜாதித்துவேஷத்தை உண்டாக்குகிறது அதைப் பற்றி பிரசாரம் பண்ணி கலகம் பண்ண வேண்டிய அவசியமேயில்லை. எந்த ஜாதியினராயிருந்தாலும் ஒருவருக்கொருவர் ஒத்தாசையும் நேசமாயிருக்க வேண்டுமென்பதையே பிரசாரம் பண்ண வேண்டும். யாராயிருந்தாலும் மதத்தில் பிரவேசித்த சட்டம் செய்யக்கூடாது. அவரவர்களுடைய மதத்திற்கு முயற்சி இருக்க வேண்டியது. மதத்திற்கும் ராஜீயத்திற்கும் சம்மந்தமில்லை. மதத்தில் பிரவேசிக்காமல் ஒவ்வொருவரும் ஒற்றுமையாயிருக்கவேண்டுமென்றும் அவரவர்கள் குலாசாரங்களை சரிவர நடத்தவேண்டுமென்றும் சீர்திருத்தக் காரர்கள் பிரசாரம் பண்ணவேண்டியது. அப்பொழுது தான் ஒற்றுமையுண்டாகும். அப்படி செய்யாவிட்டால் சுயராஜ்யம் என்பது ரொம்ப தூரத்திலேயே நிற்குமென்று அறியவும்.

பம்பாயில், ஹி. ஆர். பேச்சு

இவ்விடம் 29—11—39ல் இரவு 9½ மணிக்கு மாதுங்கா நெப்போ ஆல் மைதானத்தில் மாஜி மந்திரி ராஜகோபாலாசாரியார் உபந்யாசம் செய்தார். தான் 2 வருஷகாலம் மந்திரி வேலைபார்த்த வகுப்பில் மதுரை மீனுக்ஷி அம்மன் கோவிலுக்கும் பழனி சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கும் ஹரிஜனங்களை அழைத்துக் கொண்டு போய் தெரிசனம் செய்து வைத்த அவர்களுக்கு மோக்ஷத்தை கொடுத்த பெருமையைப் பற்றி இவ்விடம் இருக்கும் பிராமண சமூகத்தினிடை புகழ்ந்து பேசிக்கொண்டார். வார்தாவில் வந்து காந்தியுடனும் மற்ற மந்திரி மார்களுடனும் சேர்ந்து தயிர் கடைந்து வெண்ணெயை யெடுத்த கொண்டு இருக்கிறார்களாம்.

காந்திஜீ இங்கிலாந்துக்கு ரவுன்டேபிள் கான்பிரன்ஸுக்கு போய் இருந்த ஸமயம் அவ்விடம்இருக்கும்ஒருவெள்ளைக்காரன்உம் மால் இங்கியாவில் தீண்டாமையை விலக்க முடியவில்லை. இவ்விடம் வந்து சுயராஜ்யம் கொடு என்பது வெட்கக் கேடாக இருக்கிறது என்று சொன்னாராம்.

அது முதல் மிஷ காந்தி தீண்டாமையை விலக்க தன்னுடைய இஷ்டமித்திர பக்தவான முஜகோபாலசாரி மூலம் நீடுழிகால மாக எத்தனையோ அரசாங்கி செய்து வந்தும் மரித்துபோன ராஜாக்களால் கூட செய்யாத இந்த அரிதியான கார்யத்தை செய்து விட்டதாக பெருமை கொள்கிறார். ஆனுலும் இவர்கள் செய்த காரியம் ஒரு காலத்தில் தென்னுலிராமன் செய்த கதை போல இருக்கிறது.

ஆனுலும் நமது இங்கிலீஷ் கெவர்மென்டார் இவர்கள் எத்தனை கோவில் திறந்துவிட்டாலும் சுயராஜ்யம் கொடுக்கபோகிறதில்லை. வெள்ளைக்காரர்கள் பிரித்து ஆளும் தந்திரத்தில் கெட்டிக்காரர்கள் என்பது யாருக்கும் தெரிந்தவிஷயம். தர்மம் தவறி நெறிதவறி பேசும் முஜகோபாலாசாரியார் உபந்சாசங்களை கேட்டு ஆமோதிக்கூடியவர்கள் பம்பாயில் வெகு சிலர் பேர்கள்தான். பெரும்பாலோர்இங்கு தவருமல் நித்திய கர்மானுஷ்டானம் செய்து கொண்டு கர்மாக்களை டிமால் செய்து வருகிறார்கள். அப்பேர் பட்டவர்கள் இவர் உபந்யாசத்தை கேட்டு ஏமாற மாட்டார்கள் என்பது சத்தியம்.

இது சமயம் சனுதன தர்மிகளாய் இருப்பவர்கள் அங்கே அங்கே சென்று மோகத்தில் ஈடுபட்டு அந்தகாரத்தில் மூழ்கிடக்கும் நமது இந்துக்களுக்கும் பிராமணர்களுக்கும் உபந்யாச மூலம், அதர்மிகளாயும் பிரபுக்களாயும் இருக்க பட்டவர்கள் செய்யும் உபந்யாசங்களை கேட்டு ஏமாறுதீர்கள் என்றுதெரியப்படுத்தவேணும்.

இவர்கள் மதுரை குலதெய்வமாகிய மீனுக்ஷி அம்மன் கோவில் என்று அசுத்தம் செய்தார்களோ அன்று காங்கிரஸ் மந்திரிசபையை விட்டுவிட்டது. தர்மம் எங்கேயோ அங்கே தான் தெய்வம் இருக்கும் என்பது சத்தியம்.

கே சுப்ரமண்ய சாஸ்திரிகள்

பம்பாய்.

Mr. N. E வெங்கடேச சர்மா, எழுதியது.

ஸம்ஸ்கிருத ஸ்வபோதினி.	1	0	0
சுத்த தமிழ் அகராதி.	1	0	0
ஸம்ஸ்கிருத தமிழ் அகராதி	1	8	0
தமிழ் ஸம்ஸ்கிருத அகராதி	0	8	0

கிடைக்குமிடம் :— ஜனார்தன அச்சுக்கூடம், கும்பகோணம்.

ஹிமாலயம், திபேத், நேபால்
கஸ்தூரி, சிலாஜிட், குங்குமப்பூ

(சுத்தமானதென்றும், கலப்பற்றதென்றும் உத்திரவாதம் செய்கிறோம்).

கஸ்தூரி	ஒரு தோலா.	ரூ 25—0—0
சிலாஜிட் (புடமிட்டது)	,,	ரூ 1—0—0
குங்குமப்பூ (கேசர்)	,,	ரூ 2—8—0.

(ஒரு தோலா என்பது ஒரு ரூபாய் எடையாகும்) ஏற்படும் தபால் சார்ஜ்—பார்கிங் சார்ஜ் தனியாக உண்டு. கடிதப்போக்குவரத்து ஹிந்தியிலாவது, ஆங்கிலத்திலாவது நடத்தவும்.

கிடைக்குமிடம்:— PREM LAL SHAH GANGOLA.
ALMORA (Himalayas) U. P.

போலிகள் ஜாக்கிரதை!

அமிர்தாஞ்சனம்

எல்லா வலிகளுக்கும் துன்பங்களுக்கும் கைகண்ட இந்தியமருந்து இதுவே.

ஆயிரக்கணக்கானவர்கள் விற்கிறார்கள்

* * *

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
படை மருந்து

தேம்பல், படை முதலிய வியாதிகளைத் தீர்க்கும்.

ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலய வருதன தர்ம பாடசாலை ஆரம்ப விழா வைபவம்.

கும்பகோணம்.

பிரமாதி வருஷம் கார்த்திகை மாதம் 30 தேதி (15—12—39) வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு, இங்கர் சோலையப்பமுதலியார் அக்ரஹாரம் ஸ்ரீ ராமகிருஷ்ண வித்யாலய சங்கத்தின் ஆதரவில், சகல ஜனங்களும் கர்மானுஷ்டானத்திற்கு முக்யமான வேதங்களை அத்யயனம் செய்யும் பொருட்டு வேத பாடசாலையும், சகல ஜனங்களும் கூடமத்தை யடையும் பொருட்டு பாஷ்ய பாடசாலையையும், ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ ஆசாரியாவின் அனுக்ரஹத்தோடு பிரம்மஸ்ரீ எ. சுப்பிரமணிய அய்யர் அவர்களின் அக்ராசனத்தின்கீழ் ஆரம்பிக்கப்பட்டது. மேற்படி அக்ரஹார வாசிகள் அனைவரும் காலை 6 மணிக்கு ஆசார்யாளின் ஸ்ரீமுகத்தை எடுத்துக்கொண்டு வேத கோஷத்தோடும் மேள வாத்யங்களோடும் ஊர்வலமாகவந்தார்கள். அது சமயம் பிரம்மஸ்ரீ கே. ஆர். ரகுநாத ராவ் அவர்களும், முனிசிபல் சேர்மன் டாக்டர் எம். வி. நியாகராஜ அய்யர் அவர்களும் வேதாந்த பாடசாலை உபாத்யாயர் பிரம்மஸ்ரீ ரங்கசாமி சாஸ்திரிகள் அவர்களும், மற்றும் பல பிரமுகர்களும் விஜயம் செய்தார்கள். ஆரம்பத்தில் ஸ்ரீ ஆசாரியாளால் அனுப்பப்பட்ட ஸ்ரீ முகம் கீரனூர் பிரம்மஸ்ரீ ராகவ சாஸ்திரிகள் அவர்களால் படிக்கப்பட்டது. பிறகுமெலட்டூர்வேதாந்த சிரோமணி பிரம்மஸ்ரீ கே. ரகுநாத சாஸ்திரிகள் அவர்களால் சாந்திபாடம் சொல்லி தீதாபாஷ்யம் ஆரம்பிக்கப்பட்டது. பிரம்மஸ்ரீ ரகுநாத சாஸ்திரிகள் கீதையைப்பற்றியும் ஸ்ரீ ரங்கசாமி சாஸ்திரிகள் சனதன தர்மத்தை பற்றியும் உபன்யாசம் செய்தார்கள் பிறகு அக்ராஸனாதிபதி அவர்கள் இந்த பெரிய அக்ரஹாரத்தில் பாஷ்ய வேதபாடசாலை ஏற்பட்டதானது மிகவும் சந்தோஷிக்கத்தக்கதென்றும். இப்பாடசாலையானது மேன்மேலும் அபிவிருத்தியடை வேண்டுமென்றும் எல்லோரும் இதில் சேர்ந்து அத்யயனம் செய்து சனதனதர்மத்தை விருத்தி செய்யவேண்டுமென்றும் மிக விஸ்தாரமாக உபன்யாஸம் செய்தார். பிறகு அக்ராஸனாதிபதி அவர்களுக்கும், சாஸ்திரிகளுக்கும் மாலை சூட்டப்பட்டு; சந்தன தாம்பூலம் வழங்கப்பட்டு வைபவம் இனிது நடந்தேறியது.

T. V. நாகராஜ சாஸ்திரிகள்

திருவல்லிக்கேணி.

ஸீதா கல்யாணம்

சென்ற வெள்ளிக்கிழமை இரவு 8 முதல் 10 மணிவரை திருவல்லிக்கேணி நாகப்பையர் தெரு 57 கே. ரத்ன விலாஸ் கட்டிடத்தில் பிரம்மஸ்ரீ சிரோமணி சாத்தனூர் முத்துகிருஷ்ண சாஸ்திரிகள் அவர்களால் நடைபெற்று வரும் ஸ்ரீமத் வால்மீகி ராமாயண பிரசங்கங்களை யொட்டி ஸ்ரீ ஸீதா கல்யாணம் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. பிரம்மஸ்ரீ சாஸ்திரிகள் சாஸ்திர ஞானத்துடனும், தெளிவான பொது அறிவுடனும் பிரசங்கம் செய்வது எல்லோருக்கும் சந்தோஷமாயிருந்து வருகிறது. உபன்யாஸ முடிவில் சாஸ்திரிகளுக்கு பல ஆங்கில மஹாஜனங்களால் சன்மானங்கள் செய்யப் பட்டன. முக்யமாக "ஹிந்து" ஆசிரியர் ஸ்ரீமான் கே. ஸ்ரீனிவாஸன் அவர்கள் ரூ 10 அனுப்பி தமது அபிமானத்தை தெரிவித்திருந்தார். ஹிந்து ஹை ஸ்கூல் ஹெச்சர் ஸ்ரீமான் பி. எஸ். வைத்தினாதஸ்வாமி அய்யர் பி. ஏ, எல். டி., முதலியோர் சில வார்த்தைகள் கூறினர். பிறகு கூட்டம் கலைந்தது. (ந.மி)

ஆப்பக்கூடல்

பஜனோத்ஸவம் ஸ்ரீ ப்ரமாதிஞ்மார்கழி 10உ ஸோமவாரம் முதல் உத்ஸவம் ஆரம்பித்து 9-நாள் வரை கீழ்க்கண்ட விபரப்படி பஜனோத்ஸவ ரீதியாய் பவானிக்குச் சமீபமான ஆப்பக்கூடல் என்ற திருவாவுகூட்டில் எனது ஜாகையில் நடைபெறும் உபன்யாஸங்களும் மற்ற பிரவசனங்களும் நடைபெறும். சேஷகிரி சாஸ்திரி

Printedby S, Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram.



215313

THE REGISTRAR OF NEWS
-3 JAN 1940
MADRAS

677

REGD No. M. 2913 ARYADHARMAM Estd. 1915
TAMIL WEEKLY

ஆர்யதர்மம்.

(தமிழ் வாரப்பத்திரிகை)
வியாழந்தோறும் வெளியாகும்

ஆசிரியர்:- அக்நிஹோத்ரம் கோபாலதேசிகாசாரியார்.

சந்தா விபரம்.
[தபால் சிலவுள்பட]
ஜீவிய சந்தா .... ரூ. 50
ஒரு வருஷ சந்தா ரூ. 3
ஆறுமாத சந்தா.... ரூ. 1½
தனிப்பிரதி ஓணு.
மாதிரிப்பிரதிக்கு எழுதவும்.

விளம்பர விஸ்தரம்.
ஒரு முழுப்பக்கம்
ஒரு தடவை ரூ. 20
அரைப்பக்கம்
ஒரு தடவை ரூ. 12
ஒருபத்தி ஒருதடவை ரூ. 8
இஞ்சு 1-க்கு ஒரு பத்திக்கு
ஒரு தடவை அணு 8
நீண்டகால விளம்பரங்களுக்குத் தனி சார்ஜ்.

வெளிவரும் தின

ஓர் உருவப்படத் திறப்பு விழா

சு'–ந்தை

நமது நகர் பாணுதரை ஹை ஸ்கூலில் சென்ற 30 வருட காலமாய் ஹெட்மாஸ்டராகவிருந்து பெரும்புகழ் படைத்த காலஞ் சென்ற ஸ்ரீ எஸ். கிருஷ்ணஸ்வாமி அய்யங்காரின் உருவப்படத்திறப்புவிழா 15-12-39 மாலை 5 மணிக்கு ஹெட்மாஸ்டர் ஹாலில் மிகச் சிறப்புடன் கொண்டாடப்பட்டது. பல பழைய மாணவர்களும் சிநேகிதர்களும் பிரமுகர்களும் குழுமியிருந்தனர். பழைய மாணவர்களில் ஒருவரும் மதுரை அட்வகேட்டுமான ஸ்ரீ எ. ரங்கஸ்வாமி ஐயர் தலைமை வகித்தார். கடவுள் வணக்கம், ஆங்கிலம், ஸம்ஸ்கிருதம், தமிழ், ஹிந்தி பாஷைகளில் ஒப்புவித்தல் இவைகளுக்குப் பிறகு தலைவர் ஸ்ரீ ஆர். ஸ்வாமிநாதய்யரை ஸ்ரீ கிருஷ்ணஸ்வாமி ஐயங்காரின் குணாதிசயங்களைப்பற்றிப் பேச வேண்டினர். அதன் பின்னர் தலைவர் அன்னவரின் உருவப்படத்தை நீண்ட கரகோஷத்தினிடையே திறந்து வைத்தார்.

ஸ்ரீ மான்கள், டி. எஸ். சுப்பிரமணிய ஐயர் பி. ஏ, எல். டி., (ரிடையர்டு); கே. எஸ். பரட்நாசாரியார், எம். ஏ. எல். டி. ஆர். நடேச ஐயர் பி. ஏ. எல். டி., எம். ராமராவ் பி. ஏ. ஸ சா. வேங்கடராமய்யர், ராமச்சந்திர சாஸ்திரிகள் முதலியோர் அன்னரின் அரும் பெரும் குணங்களைப்பற்றி விஸ்தாரமாக எடுத்துரைத்து எளிய உபாத்தி தொழிலிலுள்ளவர்களுக்கு மேல் நாகரிகமே காண்பிக்கப்படும் கௌரவம் நமது நாட்டில் இப்பால் காட்டப்படுவது போற்றத் தக்கதென்று பேசினர்கள். ஸ்ரீ எஸ். ஸ்வாமிநாதய்யர் ரிடையர்ட் முன்ஸீப் இவ்வருவப்படத்திறப்பு விழா சம்பந்தமாக ரிபோர்டை வாசிக்கையில் குறைந்த பக்ஷம் ரூ. 100 முதலீக்கொண்டு ஹெட்மாஸ்டர் பெயரால் அப்பள்ளிக்கூட மாணவர்களுக்குப் பரிசுகள் வழங்கும்படி அனைவரும் உதவி புரியுமாறு வேண்டினர். பானுதரை ஸ்ரீ பாலகிருஷ்ண தீக்ஷிதர் (ஸம்ஸ்கிருத வித்வான்) அவர்களும் கல்வியைக்கற்கும் ஸாதனங்களே பல மேற்கோள்களுடன் விளக்கி ஓர் சாசுவத பரிசு நிதியை ஏற்படுத்த வற்புறுத்தினர்.

முடிவில் தலைவர் தாம் 60 வருஷங்களுக்கு முன் ஹெட் ஆசிரியரிடம் மாணவனாயிருந்ததாயும் அக்காலத்திய கல்வி முறையையும் தமது நீண்ட மேனேட்டுச்சுற்றுப் பிரயாணத்தினால் அறியப்பட்டநவீன கல்வி முறையையும் ஒப்பிட்டார். ஸ்ரீமான் டி. எஸ் ஆராவமுதய்யங்கார் ஹைஸ்கூலின் பழைய மாணவர் சங்கம் ஒன்றை ஸ்தாபிக்க இதுவே தருணமென்று கூறினர். தலைவருக்கும் பள்ளிக்கூட அதிகாரிகளுக்கும் ஸ்ரீமான்களுக்கும் வந்தனோபசாரம் கூறி சந்தனம், பழம், தாம்பூலம் முதலியன வழங்கப்பட்டு கூட்டம் சிறப்பாய்கலைந்தது. (நமது நிருபர்)

புதக்கோட்டை

ஸ்ரீ A. ஸ்ரீனிவாஸராகவய்யங்கார் பிரசாரங்கள்.

ஸ்ரீ சூக்தபாஷ்யம்	1	8	0
பதினேரு சில்லரை ரஹஸ்யங்கள் ஸாரஸாரம் முதலியன	2	12	0
அதிகரண ரத்நமாலை	3	0	0
பரமபத ஸோபானம்	0	6	0

கிடைக்குமிடம்:– ஸ்ரீ ஜனார்தந பிரிண்டிங் ஓர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

குடிகளிடம் வரி வாங்கும் முறை

[மகாபாரதம்]

மேலக்காவேரி

(கே. ஆர். வைத்யனாத சாஸ்திரி)

பீஷ்மர் தர்மருக்கு குடிகளிடம் வரிவாங்கும் முறையை உபதேசித்ததாவது:— தர்மத்தை விரும்பும் அரசன் ஜனங்களின் ஹிதத்தில் ஆசையுள்ளவனுய் தேசம், காலம், பலம், புத்தி இவைகளுக்குத்தக்கபடி பிரஜைகளே கட்டளையிட வேண்டும். அரசன் பிரஜைகளுக்கும் தனக்கும் எவ்விதம் க்ஷேமத்தை விரும்புகிறனே, அப்படியே ராஜ்யங்களில் எல்லா தர்மங்களையும் நடத்தி வரவேண்டும். அட்டை போல எளிய உபாயத்தால் ராஜ்ய பரிபாலனம் செய்யவேண்டும். பெண் புலியானது தனது குட்டிகளை எடுப்பது போல ஹிம்ஸிக்காமல் கப்பத்தை கிரஹிக்க வேண்டும். கொஞ்சம் கொஞ்சமாய் வரியை விருத்தியாகும்படி கொடுக்கச்செய்யவேண்டும். யுக்தமான உபாயத்தாலேயே முயற்சியின்றி அவைகள் அதுபவிக்கத்தக்கவை. அஸ்தானத்தில் ஜனங்களிடம் வரிவாங்கலாகாது. கிரமமாகவும், நல்ல வார்த்தையாலும் காலத்திற்குத்தக்கபடியும் விதிப்படியும், வரிகளை வாங்கவேண்டும். ஆபத்தில்லாத ஸமயத்தில் எவனும் எந்த மனிதனையும் எதையும் யாசிக்கக்கூடாது, என்னும் வ்யவஸ்தையானது முன் காலத்திலேயே, மனுவினுல் பிராணிகளுக்குச் செய்யப்பட்டது. யாவரும் அப்படியே ஒத்து ழைத்துப் பிழைக்கவேண்டும். அப்படி செய்கையை நடத்தாவிட்டால் உலகங்கள் யாவும் அழிந்து விடும்.

அடக்கும் அதிகாரம் பெற்ற அரசன் இவர்களை அடக்கவில்லையாகுல் அவன் அப்பாகத்தில் நாலில் ஒரு பாகத்தை அனுபவிப்பானென வேதம் கூறுகிறது. புண்ணியத்தை புஜிப்பதுபோல பாபத்தையும் புஜிப்பவனுவான். அரசன் எப்பொழுதும் பாபிகளை அடக்கவேண்டும். அவர்களை எந்த அரசன் அடக்கவில்லையோ, அவன் பாபம் செய்தவனுகிறன். அவ்விதம் அடக்குபவன் அவர்கள் செய்த தர்மத்தில் நாலிலொரு பாகத்தையடைகிறன். தயையாலும் தர்மத்தாலும் தானஞ்செய்வதன்றி பயமுறுத்தல் கூடாது. ஓ அரசனே! அதிகமாக கப்பத்தை வாங்கச் செய்யும் அதிகாரிகளைத் தண்டிக்கவேண்டும். அவர்கள் எவ்விதம் வரி கொடுப்பார்களோ அவ்விதம் நீ செய்விக்க வேண்டும். கிருஷிபசுக்களைக்காத்தல், வர்த்தகத்தை விருத்தி செய்தல், முதலிய வேலைகளையும் பல மனிதர்களைக்கொண்டு நடத்த வேண்டும். இதைச்செய்யும் மனிதன் நிறுதும் ஸ்தேதஹமடைவானுகில் அதனுல் அரசன் இகழ்ச்சியுள்ளவனுகான். தனமுள்ளவர்கள் ராஜ்யத்திற்குப் பெரிய அங்கமென்பது பிரஸித்தம். ஆகையால் எல்லா பிராணிகளிடத்திலும் பிரியுள்ளவனுயிரு. ரீசுகத்தையும் நேர்மையையும் கோபமில்லாமையும் கொடுமையில்லாமையையும்கைப்பற்று. இவ்விதம் உண்மையைப் பெரிதாகக் கொண்ட நீ நண்பர்களையும் பொக்கிஷத்தையும் ஸைனியையும் தண்டத்தையும் கோசத்தையும் இனேகிதர்களையும் பூமியையும் இன்னும் அதிகமாய் அடைவாய். என்றார்.

ஸ்ரீ N. சுப்ரமண்ய அய்யர் அவர்கள் எழுதியது.

ஸ்ரீ நாகரிஹ்சனம்	0	12	0
ஸ்ரீ குரு விம்சனம்	0	5	0
வரிவஸ்யா ரஹஸ்யம்	1	0	0
ஸ்ரீ லலிதாத்ரிசதீ பாஷ்யம்	1	0	0

கிடைக்குமிடம்:– ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஓர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

அஹிம்ஸை ஹிந்து மதக் கொள்கையல்ல

ஸ்ரீ, வி. பி. பிரசங்கம்

டிசம்பர்14உ யன்று சென்னையில் திருவாங்கூர் திவான் ஸர். வி. பி. ராமஸ்வாமி அய்யர் யுவர்களுக்கு ஒரு உபன்யாஸம் செய்கையில் குறிப்பிட்டதாவது:—

"தற்காலம் நமது யுவர்களிடம் போதிய புரட்சி மனோபாவம் ஏற்படவில்லை.அஹிம்ஸை கொள்கையைப் பற்றியும் இக்காலத்தில் நமக்கு எவ்வளவோ வற்புறுத்தப் பட்டு வருகிறது.

இந்தியர் எந்தக் காலத்திலாவது அஹிம்ஸையைஅனுஷ்டித்திருக்கிறதா? இல்லவே இல்லை யென்றுதான் நான் சொல்லுவேன். இந்தியா வீரத்துடன் இருந்தது. இந்தியா பல நாடுகளை ஜயித்தது. இந்தியா ஒரு மஹிமை பொருந்திய தேசமாயிருந்தது, எல்லாவற்றையும் ஜயித்து அனுபவித்த விட்டு இப்போது ,'ஹிந்து மதத்தின் லக்ஷ்யம் அஹிம்ஸைதான்" என்பதுஸரியாகாது. அஹிம்ஸை ஹிந்து மதக் கொள்கையல்ல. ஹிந்து மதத்வம் அதல்ல. அது ஜைன மதக் கொள்கையேயாகும்.

ஆனல் அது எப்படியிருந்தாலும் பெரிய மனிதர்கள் அப்படிச் சொல்லுகிறர்கள். அதை எதிர்த்து ஒரு வார்த்தையும் ஒருவரும் சொல்லக்கூடாதாம். யார் எது சொன்னலும் அதை நாம் உடனே அப்படியே ஒப்புக்கொள்ளுகிறோம், ஹிந்து ஸித்தாந்தத்தின்படி, பிரம்மசர்யம், கிருஹஸ்தம், வானப்பிரஸ்தம், ஸன்னியாஸம், என்று நான்கு ஆச்ரமங்களுள. கீழேயுள்ள மூன்று ஆச்ரமிகளும் ஹிம்ஸையைத்தவிர்க்க முடியாது. இந்த மூன்றிலுமிருந்து உலக அநுபவங்கள் பெற்றபிறகு ஸந்நியாஸம் பெறவேண்டும். அவனுக்குத்தான் அஹிம்ஸை அவச்யமாக விதிக்கப்படுகிறது. அது கடைசி கட்டமாகும். இதையெல்லாம் நாம் ஆராயவேணும். பெரிய மனிதர் ஒருவர் சொல்லுகிறரென்பதற்காக நாம் எதையும் ஒப்புக்கொண்டுவிடக்கூடாது.

தனக்குப்பிடித்த ஒரு மனிதரைத் தூக்கிக்கொண்டிருப்பது இக்காலத்தில் ஸஹஜமாயிருக்கிறது. பத்திரிகைகளும், கூட்டங்களும் இதே வேலை செய்கின்றன. ஆனல் நாம் பகுத்தறிவை உபயோகிக்க வேண்டும்.

இன்று ஒன்று சொல்லுவது, நாளைக் கொன்று கோர்விரோதமாக வேறு மாதிரியாகப் பேசுவது என்றிருந்தால் அத்தகைய மனிதரை நம்புவதிலோ, தூக்கிப்பதிலோ பிரயோஜனமில்லை,,

செங்கற்பட்டு

டிஸம்பர் 14 15வுகள் இவ்வூர் டிஸ்ட்ரிக்ட், மெடிகல் ஆபீஸர் ஸ்ரீ நாராயணஸாமி அய்யர் தான் ரிடைர் ஆவதைக் குறித்து ஹை யர் க்ருஹத்தில் பிர்ம்மஸ்ரீ வைதிக ஸம்ரக்ஷக ப்ரவசன தூரீண சேங்காலிபுரம் அனந்தராமதீக்ஷிதர் அவர்களால் முறையே குசேலோபாக்யானம் ஸ்ரீ த்ருவ சரித்ரம் இவைகள் உபன்யலிக்கப்பட்டது. டிஸம்பர் 24உ முதல் ஒருவாரம் விழுப்புரத்தில் நடைபெறும். தெய்வநெறிக்கழகம் மகாகாட்டில் ஸ்ரீஸ்காந்தஉபன்யாஸம் நடைபெறுமென்று தெரிகிறது. (ந-கி)

வாரக் குறிப்புகள்

(ஸ்ரீ வத்ஸ. வே. ஸோ. சர்மா)

ராஜ்ய தந்த்ரம் ஓர் ஆட்டம்!! பாரதபூமி ஸ்வராஜ்யத்தைப் புருஷார்த்தமாக கருதாது தர்மத்தை ஸதா அநுஷ்டித்து மோக்ஷத்தையே லக்ஷ்யமாகக் கொண்டது. எனினும் அர்த்தசாஸ்த்ரம் எழுதிய சுக்ராதிகள் தர்ம வழி அதர்மவழி என இரண்டு காட்டி எதிரிக்கேற்ற வண்ணம் நடக்கச் சொன்னர்கள். ஆதலின் நிர்க்கதியாய் நிறுத்தப்பட்ட தார்மிகர் ஓர் எதிரியை வசப்படுத்த மற்றோர் சத்ருவிடம் காரண கட்டுகொன்ன நேருகிறது.

ராம வீராத நாயம் 1 நாம், மிலேச்சரையும் நாஸ்திகரையும் வெள்ளையரையும் ஆமோதிக்கலாமா! என இல அஸ்திக ராஜ்ய வாதிகள் மனம்புண்படுகிறது. ராகவன் தன்னையும் தம்பியையும் வீராதன் தூக்கிசென்றபோது நாம்போகிற வழிக்கு அநுகூலமானவரையில்பேசாதிருப்போம், விபரீதமானபோது அவனை சிக்ஷிப்போம் என்றர். அங்ஙனம் சிறிது நேர்க்கிருக்கலாம். அதுகூட இல்லாதிருப்பது சிறந்த தர்மமே.

நன்றிசெலுத்துவாம்!! திருநெல்வேலி கல்லெயப்பர் கோவில் சண்டாளருக்கு விடுவதில்லை என்ற முடிவிற்கு வந்த சென்னை கவர்னருக்கு நன்றி செலுத்தல் வச்யம். தார்மிகர்களது உணர்ச்சியை உணர்ந்து இதர ஆலயங்களையும் அந்நஷ்ட ரக்ஷிப்பதுடன் மதுரையையும்பழனியையும் ஸம்ப்ரோக்ஷணம் செய்ய உத்திரவளிக்க வேண்டுகிறோம்.

குருவாயூர் உத்தேசமென்ன? ஏற்கனவே ஒரு முறை காந்திஜி குருவாயூர் ஆலயப்பிரவேசத்திற்கு முயற்சி செய்து முழுத்தோல்வியுற்றார். சென்னை தேசிய சட்ட ஸபை மலையாள சட்டம் செய்ததே தவிற அங்கு உண்டாகும் தோல்வியைக் கருதி மௌனமாயிருந்தது. ஸபைபத்தில் வாக்காளர் ஜாபிதா தயாராகிறது என்று கூறுகிறது. அது உண்மையாயின் இப்போதே அங்கு தர்மப் பிரசாரம் ஆரம்பிக்கவேண்டும்!

நடராஜனருள்புரிவாராக! மயூரு பிலில் பல விடங்களில் நமது ஸபை கூடி சில நாள் பேசி கலைவதும், பின்னர். எப்போதாவது எவரேனும் விழித்து முயற்சித்தால் அடுத்த ஸபை நடக்கும். காங்கரஸும் இப்படித்தானிருந்தது. சிதம்பரத்தில் நடக்கும் ஸபை சுமாராகப்பாக ஆண்டு தோறும் கல்ல வேலை செய்துவருகிறது. ஜகத்குரு ஸ்ரீ னித்யமும் நடராஜரும் அருள் புரிவர்!

கீதா தினம்!! சென்னை அமர கலாநிலய வினாஸபையார் வெள்ளிக்கிழமைகளில் தவறாமல் பூஜை பஜனைபுடன் ஸ்ரீமத்பகவத்கீதை செய்து 7 மணிக்கு ஸ்ரீ கிருஷ்ணன் ஆலயத்தில் பூர்ணமாக கீதை 18 அத்யாயங்களையும் பாராயணம் செய்து முடிவில் தலைவர் சுருக்கமாக கீதையின் ஸாரத்தை உபன்யஸித்தார். பலருக்கு கீதையும் ஸைஸ்காரமும் சேர்ந்த புத்தகம் இலவசகாக வழங்கப்பட்டது.

ஸ்ரீ ஸ்தவம்.

ஸ்ரீமணி ஸ்ரீநிவாஸாசாரியார் எழுதியது மூலம் நாகரத்திலும் தமிழிலும் உரையுடன் விலை 0 4 0

கடைக்குமிடம்:– ஸ்ரீஜனார்தந பிரிண்டிங் ஓர்க்ஸ் லிமிடெட், கும்பகோணம்.

திருநெல்வேலி ஜில்லா ஸனாதன தர்ம மகாநாடு

ஆலயப்ரவேசச்சட்ட கண்டனம்

(நமது விசேஷ நிருபர்)

ஆழ்வார்திருநகரி உபய வேதாந்த கலாசாலே மண்டப ஹாலில் 24–12–39 ஞாயிறன்று காலே கெல்லே ஜில்லா நான்காவது ஸனாதன மஹா நாடு சிறப்பாக ஆரம்பமாகியது. உள்ளூர் வெளியூர் பிரமுகர்களும் ஸ்திரீகளும் மஹா ஜனங்களும் திரளாக விஜயமாயிருந்தனர். ஸனாதன தர்மஜே! ஆலயப்பிரவேச சட்டம் ஒழிக என்ற வாக்யமுள்ள அட்டைகள் தாங்ஸ்தம்பங்களில் ஒட்டப்பட்டிருந்தன.

கோயில் யானே விருதுகள் முன் செல்ல 8–30க்கு தலைவர்கள் ஊர்வலமாய் அழைத்துவரப்பட்டனர். வேதபாராயணம் பிறுர்த்தனையுடன் மகாநாடு ஆரம்பமாகியது. வரவேற்புக்கமிட்டித்தலைவர் இளையவல்லி ஸ்ரீ சடகோபாசாரியாரால் மகாநாட்டுத்தலைவர் நிறுப்பரர்களான ஸ்ரீமான்கள் டி. ஆர். கணபதிராமய்யர், ஸாது கணபதி பந்துலுவுக்கும் தேனீர்குளம் ஸ்ரீமான் முத்துசாமி அய்யர் மதுரை ஸ்ரீ ஆனந்தராவ்களும் உபசாரப்பத்திரம் படித்துக் கொடுக்கப்பட்டன.

வரவேற்பு தலைவர் பிரசங்கம்முடிவானதும் ஸ்ரீமான் பந்துலு மகாநாட்டை நிறுத்துவதற்கு பேசியதாவது:– அந்திய ராஜாக்களும் செய்யத்தணியாத ஆலயப்பிரவேச அதிக்ரம சட்டத்தை நமது நண்பர்களான காங்கிரஸ்வாதிகள் செய்துவிட்டனர். நான் பழுத்த காங்கிரஸ்வாதியாக இருக்கும் இங்கு வர ஒப்புக்கொண்டதற்கு இவ்விதயாச்சட்டமே காரணமாகும். தற்போதைய கவர்னர் ஆட்சியில் அதிக இடஞ்சலாயிராதாயினும் சட்டத்தை ஒழிக்க முயற்சிப்பது அவசியமேயாகும். சர்க்கார் ஹவுஸில் கவர்னர் ஜாகையில் சத்யாக்ரஹம் செய்யப்போவதான பிரஸ்தாபம் எனக்கு அவ்விபமாய் தெரியவில்லே. ஸ்ரீமான் டி. ஆர். கணபதிராமய்யர் தலைமை வகிக்க ஏற்றுக்கொண்டது விசேஷமாகும். அவர் தலைமானேஜர் காகராஜய்யா முதலியோர்களாலும் ரஸ்மாக பிரசங்கிக்கப்பட்டன மதுரை ஸ்ரீமான் ஆனந்தராவவர்களால். வந்தனம் சொல்லப்பட்டது.

மதுரை பகல் 2 30க்கும் மஹாநாடு கூடி பல முக்ய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன, திருவாலங்காடு ஸ்ரீசச்சிதாநந்த ராஜயோகிகள் பிரசங்கம் நடைபெற்றது. ஸ்திரீகள் மகாநாடு நடைபெறுவதால அதன் விவரங்கள் வருகிற வார ஆர்ய தர்ம பத்திரிகைகளில் காணலாம்.

ஆழ்வார் திருநகரி.

ஆலயத்தில் நாடார்கள் பிரவேசம்

போலீசார் வசம் ஒப்படைக்கப் பட்டனர்.

ஸம்ரோக்ஷணை சடங்குகள் நடைபெற்றன.

(நமது விசேஷ நிருபர்)

ஆழ்வார்திருநகரி நிவ்ய க்ஷேத்ரத்தில் ஸ்ரீ வைகுண்ட ஏகாதசி தினம் சயன சேவை நிமித்தம் பக்தர்கள் கூட்டம் ஏராளமாய் வந்திருந்தது அன்று மாலே 5-½க்கு கூட்டத்துடன் வெளியூர் நாடார் இருவர் கோவிலுக்குள் சென்றுவிட்டனர். கோவில் சேவகனுலும் மற்றும் சிலராலும் இருவர்களும் கண்டு பிடிக்கப் பட்டனர். தாங்கள் பழனி ஆலயத்திலும் மதுரை கோவிலிலும் சென்று தரிசனம் செய்து இருப்பதாயும் அதுபோல் இங்கும் வந்ததாயும் இருவர்களும் சொன்னதாகத் தெரிகிறது. இருவர்களும் போலீசார் வசம் ஒப்புவிக்கப் பட்டனர். அதன் மேல் கோவிலில் சம்ரோக்ஷணை சடங்குகள் நடைபெற்றன இரவு 1மணி சுமாருக்கு நடைபெறவேண்டிய பரமபத வாயிற் கதவு திறப்பு வைபவம் மறுநாள் காலே சுமார் 7 மணிக்கு நடைபெற்றது.

ஸர் குருசாமி நாய்டு, கோவில் ஸ்தலத்தார் மிராசுதார் பெரியன் வி. என். ஸ்ரீனிவாஸய்யங்கார் ஸ்ரீவைகுண்டம் வக்கீல் ஸ்ரீமான் டி. எஸ். தாதாசாரியார் நெல்லே ஸ்ரீமான் ஸெவசுப்ரமண்ய பிள்ளே மாஜி காங்கிரஸ் பிரஸிடெண்ட் ஸ்ரீமான் பி. ராமநுஜாசாரியர் முதலியோரும் வந்திருந்தனர்.

மீண்டும் 2 30 க்கு மாகாநாடு ஆரம்பமானது. ஸ்ரீமத் வடக்குத் திருமாளிகை ஆதீனம் ஸ்வாமிகள் ஸனாதன தர்மம் என்பது பற்றியும், ஆத்தான் வெங்கடாசாரியஸ்வாமி ஆலய விஷயமாயும் என்னும் விஷயமாயும் உபன்யாஸித்ததுடன் ஸ்ரீமான்கள் நாட் நாராயண ராவ் தேனீர்குளம் முத்துசாமி ஐயர் ஸ்ரீ ராமாநுஜவித்தாந்த வைஷ்ணவ பத்திராதிபர் வடகரை ராமாநுஜாசாரியர் ஆர்யதர்மம் பத்திரிகை மானேஜர் காகராஜய்யா முதலியோர்களாலும் ரஸ்மாக பிரசங்கிக்கப்பட்டன மதுரை ஸ்ரீமான் ஆனந்தராவவர்களால். வந்தனம் சொல்லப்பட்டது.

மறுநாள் பகல் 2 30க்கும் மஹாநாடு கூடி பல முக்ய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன, திருவாலங்காடு ஸ்ரீசச்சிதாநந்த ராஜயோகிகள் பிரசங்கம் நடைபெற்றது. ஸ்திரீகள் மகாநாடு நடைபெறுவதால அதன் விவரங்கள் வருகிற வார ஆர்ய தர்ம பத்திரிகைகளில் காணலாம்.

INDEPENDENCE PLEDGE.

The Pledge taken on the Independence day (26 th January) contains the following:- "We believe that non-violent action in general and preparation for non-violent direct action in particular require the successful working of the constructive programme of Khadi, communal harmony and the removal of untouchability.....: We know that distinctions between the caste Hindus and Harijans must be abolished.

The Sanatanists must consider the above as irrelevant inclusion, and will refuse to sign such a pledge.

பரித்ராணாய சாதூனாம் விநாசாய ச துஷ்கதாம்
தர்மஸம்ஸ்தாபனார்தாய ஸம்பவாமி யுகே யுகே ॥

ஆர்யதர்மம்
பிரமாதி-ஞ மார்கழி-மீ 13உ

அரசியல் நிர்ணயஸபை பலன் தராது

இந்தியாவிற்கு ஏற்றதான அரசியல் இந்தியர்களே நிர்ணயித்தக்கொள்ள வேண்டுமென்ற ஸ்வயநிர்ணயக் கொள்கையை முன்னிட்டு ஓர் அரசியல் நிர்ணய ஸபையைக் கூட்ட வேண்டுமென்கிற அபிப்பிராயம் காங்கிரஸ் ராஜீயவாதிகளிடம் வெகுகாலமாக இருந்து வருகிறது. தற்போது மந்திரி ஸபை ராஜிநாமாவுக்குப் பிறகு இந்த சர்ச்சையானது மிகவும் பிரபலப்பட்டு நிற்கிறது. காங்ஜிஜியின் ஆலோசனைக்குட்பட்டு காங்கிரஸ் கமிட்டியானது மற்ற விஷயங்களை விட இந்த அரசியல் நிர்ணய ஸபை விஷயத்தையே முக்யமாக வற்புறுத்தி வருகிறது. காந்திஜியும் பலகட்டுரைகள் மூலமாக அரசியல் நிர்ணய ஸபை கூட்டவேண்டியதற்கான நியாயங்களை பலதடவை பலவாறாக எழுதி பிரசாரம் செய்து வருகிறார்.

இந்த நிலைமையில் தேசத்திலுள்ள அறிவாளிகளான, தீர்க்கதர்சிகளான ராஜதந்திரிகள் பலரும், இதன் நியாயத்தைப் பற்றிசர்ச்சை செய்ய முன்வந்திருக்கிறார்கள். அரசியல் நிர்ணயஸபை ஸாத்யமா, பயன் படக்கூடியதா, இத்யாதிவிஷயங்களைப்பற்றி அவரவர் தங்களுக்குள்ளேயும், பூர்வ ஆதாரங்களையும், தங்கள் புத்திப் போக்கையும் அனுசரித்து, ஸாதக பாதக அபிப்பிராயங்களை வெளியிடுகிறார்கள். ஆயினும் தேசத்திலுள்ள பெரும்பாலான ராஜியக்கக்ஷிகளோ, ராஜீயவாதிகளோ அரசியல நிர்ணயஸபை கூட்டுவதை ஆதரிப்பதாகத் தெரியவில்லை. ஜின்னாகோஷ்டியார் வகுப்புவாத ஆதிக்கத்தின்கீழ் அரசியல் நிர்ணயச் சபையை எதிர்ப்பதாகக் கூறிவிட்ட போதிலும், அவர்களன்றி ஒருகக்ஷியிலும் சேராதவர்களும்; நீதி நிபுணர்களும், ராஜீய அனுபவம் மிருந்தவர்களுமான அனேகர் இந்த அரசியல் நிர்ணய ஸபையை ஆதரிக்காதது முக்யமாய் கவனிக்கத்தக்கது.

காங்கிரஸ்காரர் எதோ ஸ்வயநலநோக்கத்துடன்தான் அந்தஸபை கூட்டுவதை விரும்புவதாக நினைக்கப் படுகிறது. வயது வந்தவர்களுக் கெல்லாம் ஓட்டுரிமை யளித்து, அவர்களுடைய பிரதிநிதிகளைக் கொண்டு அரசியல நிர்ணயித்தால், அப்போது காங்கிரஸ் காரர்களுக்கு மற்றவர்களை விடப் பாமரமக்களுடைய ஆதரவு அதிகமிருக்குமென்ற காரணத்தால் அரசியல் நிர்ணய ஸபையில் மெஜாரிடி ஸ்தானம் கிடைக்கக்கூடும் அப்போது தங்களுக்குப் பிரியமான காங்கிரீய நிட்டங்களை யெல்லாம் தேசத்தின் பெயரால் கிறை வேற்றிக் கொண்டு உதேச்சாதிகாரம் நடத்தலா மென்பது காங்கிரஸ்காரர் நோக்க மென்று கூறப் படுகிறது. காங்கிரஸ் எதிரிகள் மேற்கண்ட காரணத்தைக் கொண்டு அரசியல் நிர்ணய ஸபையை எதிர்த்தபோதிலும், ஒருகக்ஷியிலும்சேராத நிறந்த ராஜீய வாதிகள் அச்சபையை எதிர்ப்பதிலிருந்து அரசியல் நிர்ணய ஸபை யோஜனை எற்கக்கூடியதல்ல வென்று தெரிகிறது.

ஸமீப காலத்தில் அரசியல் நிர்ணய ஸபை கொள்கையை எதிர்த்தவர்களுள், இந்தியாவின் முக்ய ஜட்ஜாக விளங்கும், ஸர்மாரிஸ் க்யவர், ஸ்ரீ எஸ். ஸ்ரீ நிவாஸ அய்யங்கார், முதலியவர்களுடைய அபிப்பிராயம் கவனிக்கத்தக்கது. அரசியல் நிர்ணய ஸபைக்கொள்கையானது மேற்றிசை நாகரிகத்திலிருந்து நம் தேசத்திற்கு காங்கிரஸ் வாதிகளால் இறக்குமதி செய்யப்பட்டது. ஆனல் மேற்றிசை ஜனகாயக நாடுகளில் சிலவற்றில் அரசியல் நிர்ணய ஸபை முயற்சியானது பலிக்காமல் போய் விட்டதை ஸர் மாரிஸ் குயர் சுட்டிக்காட்டுகிறார். இங்கியாவில் அரசியல் நிர்ணய சபை ஏற்படுத்துவதாயிருந்தால் தேசஜன சங்கையைக் ஏற்றபடி அத்தசபையில் சுமார் 5 ஆயிரம் பேர்கள் பிரதிநிதிகளாக அமைய வேண்டியிருக்கும்.

இவ்வளவுபெரும் கும்பலாகக்கூடிக்கொண்டு நுட்பமான ராஜீயஸமூஹவிஷயங்களை உருப்படியாக நிர்ணயிப்பது ஒருகாலும் ஸாத்யப்படாது. பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும்போதே தேசத்தில் பலத்த வேற்றுமைகள் அதிகரித்து மனக்கசப்புமிகுதியாகுமென்பதில் ஸந்தேஹமில்லை. அந்தந்த வகுப்புகளின் பிரதிநிதிகளுடைய வீதாசாரம், அந்தஸ்து ஆகியவிஷயமாகவும் பெருத்த அபிப்ராய பேதமும் ஏற்படக்கூடும். மேலும் அரசியல் நிர்ணயஸபைக்கு அபேக்ஷகர்களாக நிற்பவர்கள், தங்கள் மனம்போனபடியெல்லாம், ஸாத்யஸாத்ய விவேகமின்றி உத்ஸாஹகரமான வாக்குறுதிகளைக்கொடுத்துவிட்டு அவைகளையேநிறைவேற்றும்படி ஸபையில் நிர்ப்பந்தம் செய்யக்கூடும். சாந்தமானதும் நிஷ்பக்ஷபாதமானதுமானமனதுடன் சிக்கலான ராஜீயகேஷமங்களைகவனிப்பதைவிட்டு, கக்ஷிதோரணியிலேயே புத்தி நாட்டம் பெறக்கூடும். இதனால் உத்தேசகல்பலன்கிட்டாமல் விபரீதமும் ஏற்படக்கூடும். மேலும் ஆயிரக்கணக்கான பிரதிநிதிகளில் எவ்வளவுபேர் படித்தவர்கள் இருப்பார்கள்? எவ்வளவு பேருக்கு ராஜீயஞான மிருக்கும்? முனிஸிபாலிடி, ஜில்லாபோர்ட்போன்றவைகளில் போல், தன் மதிப்பிற்காகவும், கௌரவத்திற்காகவும் எவ்வளவோ பேர்கள் அலங்கார புருஷர்களாகவந்து வீற்றிருப்பார்கள். ராஜீயஞான சூன்யர்களான அத்தகைய பேர்களிலை வைத்துக்கொண்டு அரசியலநிர்ணயிப்பது நகைப்பிற்கிடமாகாதோ? அதில் எற்படும் நிர்ணயம் உண்மையில் ஜனஸம்மதி வாய்த்ததாயிருக்குமா?

மேலும் ஸ்ரீமான் ஸ்ரீனிவாஸ அய்யங்கார் சொல்லுவதுபோல் அதிகாரபலமானது பிரிட்டிஷ் கவர்ன்மெண்ட்வசம் கொடுத்துவிட்டிருக்கையில், நாமாக ஒன்றுகூடி பாகம் போட்டுக்கொள்ளுவது நகைப்பிற்கிடமல்லவா? அதிகாரம் கிடைத்த பிறகு அரசியல் நிர்ணய ஸபை கூட்டி நாம் பங்கிட்டுக் கொள்வதல்லவோ விவேகமாயிருக்கும்? ஆகையால் அரசியல் நிர்ணயஸபையை இப்போது கூட்டுவது ஸாத்யமோ, பலன்தரக்கதோ ஆகாதென்று அவர் கூறுகிறார். நம்தேசத்தில், பெரிய ராஜீய, ஸமூஹ விஷயங்களையெல்லாம் படிப்பும், அந்தஸ்தும், பக்ஷபாதமின்மையும், பொறுப்புமுள்ள சில விவேகிகளே சேர்ந்து ஆலோசித்து தீர்மானிப்பது வழக்கமாயிருந்து வந்திருக்கிறது. மனு முதலியவர்களுடைய ராஜ நீதி முறையிலும் இது தெவ காணப்படுகிறது. இந்த முறையே தேசத்தில் சாந்தியை நிலவச் செய்தது.

நிற்க, அரசியல் நிர்ணய ஸபையில் பிரதிநிதிகளின் தொகையை, மறைமுகமான தேர்தல் மூலம் குறைத்து விடலாமென்று ஸ்ரீ மான் ராஜகோபாலாசாரியார், ஸர் சுவய ருக்குப் பதில் கூறுகிறார். இந்தியா சட்ட ஸபை முதலியவைகளுக்கு மறைமுகமான தேர்தல் கூடாதென்ற காங்கிரஸ் கொள்கையை அவர் கைவிட்டுவிட்டாரா? அப்படியானல் வயது வந்தவர்களுக்கெல்லாம் ஓட்டுரிமை வழங்கவேண்டுமென்று கேட்பது எதெற்காக? மறைமுக வோட்டு மூலம் வந்த பிரதிநிதிகள் ஜனங்களின் நேரான பிரதிநிதிகளாக எப்படியாவார்கள்? அவர்கள் வருக்கும் அரசியல் ஜனஸம்மதம் பெற்றதாக எப்படி ஆகமுடியும்? தகுதி மைனரிடிகளின் நன்மைகளைப் பாதுகாத்த வேண்டுமென்ற எண்ணத்துடன் காங்கிரஸ் ஸானது அரசியல் நிர்ணய ஸபையைக்கூட்டும்போது ராஜாஜி கூறுவதை யார் நம்புவார்கள்? அதற்குள் முன் அநுபவம் மறந்துவிடுமா?

"மைனரிடிகளின் நன்மைகள் ஸம்பந்தப்பட்ட வரையில், அந்தந்த மைனரிடியாரின் தீர்மானத்திற்குத்தான் மதிப்புக்கட்டப்படுமேயொழிய மெஜாரிடிகளின் தீர்மானங்களுக்கு மதிப்பிருக்கா"தென்று ஆசாரியார் கூறுவதும் தந்திரமாயும் ஸமயோஜித விஷமமர்த்தம் செய்யக் கூடியதாயு மிருக்கிறது. ஆகலால் அரசியல் நிர்ணய ஸபையைக்கூட்டும் ஆலோசனையானது அனாத்யமாயும் பிரயோஜனமற்றதாயும், விபரீத பலனுகவும் முடியுமென்று தோன்றுகிறது. இதை ஜனநாயகிகள் எதிர்ப்பது அவசியமென்று நினைக்கிறோம்.

ஆலயப் பிரவேசத்தைப் பற்றி ஸ்ரீ எஸ். ஸ்ரீனிவாஸ அய்யங்கார் கண்டனம்

தடந்தையில் நடந்த வாக்குவாதம்

18—12—39ல் கும்பகோணம் பார்லிமெண்டில் பிரஸங்கம் செய்ய ஸ்ரீமான் எஸ் ஸ்ரீநிவாச அய்யங்கார் அவர்கள் வந்திருந்த போது பிரம்மவித்யா லாட்ஜில், குடந்தை காங்கிரஸ் வாதி, வக்கீல் ஸ்ரீ வீ. கல்யாண மய்யருக்கும், ஸ்ரீமான் அய்யங்காருவர்களுக்கும் ஆலயப்பிரவேச விஷயமாக நடந்த வாக்குவாதத்தின் விவரமாவது:—

வி. கல்யாணமய்யர்:— ஆலயப்பிரவேச அனுமதிச்சட்டத்தைப்பற்றி தங்கள் அபிப்ராயம் என்ன?

எஸ். ஸ்ரீநிவாஸ அய்யங்கார்:— அது ஓர் ராஜீய ஏமாற்றம். அச்சட்டத்தை யாரும் விரும்பவில்லை.

கு:— ஸமூக நன்மைக்காக அது அவசியம் என்று தங்களுக்கு தோன்றவில்லையோ? பெரும்பான்மையோர் அதை இச்சிக்கிறார்கள். சிறு பான்மையோர் தங்களுடைய சொந்த சௌகர்யத்திற்காக அந்த சீர்திருத்தத்தை தடை செய்வது சரியல்ல.

ஸ்ரீ:— இம்மாதிரி விஷயங்கள் கோவிலுக்குச் செல்லுமுன்பழக்கமற்ற ராஜீய ஹிந்துக்களின்அபிப்பிராயமே தவிர, பெரும்பான்மையோரான ஹிந்துக்களுடைய அபிப்பிராயமில்லை. இக்கட்டாய ஆலயப்பிரவேசமானது மனபூர்வகமானதுஎன்று நான் எண்ணவில்லை.

இதற்கு உத்திரவாதியாயிருப்பவர்களே கோவிலுக்கு செல்பவர்களல்ல.

கு:— நீங்கள் இவ்வாறு அபிப்பிராயப்படுவதற்கு வருந்துகிறேன். அவர்கள் எல்லோரும் உண்மையாகவே பக்தியோடிருக்கிறார்கள். நீங்கள் சொல்லும் அந்த உத்திரவாதிகள் ரொம்பவும் மதப்பற்றுள்ளவர்கள். அவர்கள் நல்ல எண்ணத்துடனேயே செய்கிறார்கள். உண்மையில் கடவுளே நேரிலேயே பார்க்குறார்கள்,

ஸ்ரீ:— அது முற்றிலும் வேறு விஷயம். இப்பொழுது நான், கோவிலிலுள்ள பிம்பத்தை மட்டும் தெய்வமாய்வைத்தக்கொண்டு சொல்லுகிறேன். நான் ஒரு உண்மையான ஹிந்து. கர்மாக்களில் எனக்கு நம்பிக்கை கிடையாது.

இந்த முறையில் நான் ஓர் அதிவர்ணாச்ரமி. ஆனல், என்னுடைய, ஸஹோதரர்களுடைய மத நம்பிக்கையை ஹிம்ஸிக்கும் வேலை எனக்கு கிடையாது, என்னுடைய அபிப்பிராயங்களையும் அவர்கள் மீது சுமத்தமாட்டேன். அது முற்றிலும் தனிப்பட்ட விஷயம், மிக்கப் பெரும் பான்மையான மனிதர்கள், ஆலயங்களிலேயே தங்களுக்கு சாந்தி எற்படுவதாகநினைக்கின்றனர். நம்முடைய பொது மக்களில், பெரும் பான்மையோர்கள் இவ்வித மதத்தையே அறிந்துள்ளார்கள். அவர்களுடைய நம்பிக்கையை நாம் புண் படுத்தக் கூடாது.

கு:— மற்ற ஜாதி ஹிந்துக்களோடு ஆலயங்களில் சென்று தொழுவதும் பிரவேசிப்பதும் ஓர் நல்ல காரியம். அது அவர்களே தன்னுடை உள்ள மற்றவர்களுக்கு ஸமமாக உயர்த்தும். அது மிகவும் அவசியமான சீர்திருத்தம். இதை தாமதிக்காமல் அநுஷ்டானத்திற்குக் கொண்டு வர வேண்டும்.

ஸ்ரீ:— ஹரி ஜனங்கள், ஆலயப்பிரவேசத்தில் ஆசை உள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்று நான் நிச்சயமாய்ச் சொல்ல முடியாது. எப்படியேனில் இந்த இயக்கமானது ஆலயப்பிரவேசத்தை செய்யக கூடாது என்று கிளப்பவர்களிடம், நம்பிக்கையோ கவலையோ, இல்லாத சீர்திருத்தக் காரர்களால் நடத்தப்படும் இயக்கமே. புதிதான இந்த இயக்கம் முடிந்த பிறகு புதிதாக ஆலயத்திற்கு வருபவர்கள், ஐம்பது நிக்கிறார்களோ இல்லையோ. ஹரி ஜனங்களோடு நான் ஸம்பாஷணை செய்திருக்கிறேன், அவர்களுக்கு அதிகமான ஆகாவிஷயத்தில் தேவை பிரப்பதாகஅறிகிறேன். இது போன்ற சீர்திருத்தங்களை அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் தாண்டப்பட்டவர்களே. போலீஸ் பந்தோபஸ்தை பின் பலமாகக் கொண்டு இத்தப் பிரவேசத்தை அவர்கள் விரும்பவல்லை. பலாத்காரமாக நடத்துவதை மறுக்க முடியாது.

கு:— ஹரி ஜனங்களுக்கு இப்பொழுது ஒன்றும் செய்ய வேண்டாமா? மலையாளத்தில் ஜன ஸங்கியையில் எற்பட்ட பயத்தினல் போல் மற்ற விடங்களிலும் ஆலயப் பிரவேசத்தை அனுமதிப்பதுஉசிதமாகாதா? ஆலயப் பிரவேசம் பொது ஜனங்களுடைய ஸமூதாய உணர்ச்சியையோ மரியாதையையோ கெடுக்காது.

ஸ்ரீ:— தாங்கள் என்னோடு ஒத்துவருவீர்களோ மாட்டீர்களோ. ஆனல் போப் சொன்னது உண்மை என்று அறிகிறேன் போப் சொன்னதாவது! "காஸ்த்திக்கியமானது படித்தவர்களுக்குமட்டும்,வரவேற்கப்பட்டது. ஆனல் இப்பொழுது, அது பொது ஜனங்களிடமிருந்துவிலகிவிட்டது" இப்பொழுது பொதுவாக ஜனங்கள் நம்பிக்கையை விட்டுவிடுகிறார்கள் என்பதை உணருகிறேன். உண்மையான மார்மானதொழுகையில் நம்பிக்கைஉள்ளவர்களாக இருக்கிறார்களோ! அவர்கள் அவ்விதம் தொழும்படியே விட்டுவிட வேண்டும். அவ்விதத் தொழுகையில் யாருக்கு நம்பிகை இல்லையோ அவர்கள் அதற்கு விரோதமான இயக்கத்தை ஆரம்பிக்கக் கூடாது. அவ்வித இயக்கத்தை அவர்கள் ஆரம்பித்தால் கர்மமார்க்கத்தில் உள்ள நம்பிக்கையை அது நாசமாக்கும். உண்மையில் மதவிஷயத்தில் யாரும் தன்னுடைய நம்பிக்கையைமற்றவர் மீதுசுமத்தக்கூடாது. நான் இவ்விஷயங்களில் ஒதுங்கி நிற்பதற்கும் இதுதான்காரணம். நான் ஓர் வேதாந்திஹரினங்களே வேதாந்தமார்க்கத்தில் அவர்கள்ஸம்மதித்தால் புகும்படி தூண்டிவிட முயற்சிப்பேன்இதுதான் பிறருக்கு ஹிம்ஸை இல்லாதமும் உண்மையானதுமாகும்.

கு:— ஆனல் வைஷ்ணவ சீர்திருத்தம் காரர்கள், அவ்வித இயக்கத்தை ஆரம்பித்தது இருக்கிறார்கள். ஸமூகமும் அதை ஒப்புக் கொண்டுவிட்டது. அதற்குத் தகுந்தாப் போல் தன்னுடைய பழக்க வழக்கங்களை சரிப்படுத்திக்கொண்டு விட்டது.

ஸ்ரீ:— நான் ஓர் வைஷ்ணவன். வைஷ்ணவ கோஷ்டிபோல், கோஷ்டியாகத் தொழுவது ஹிந்து மதத்தின் ஒரு பாகமாக இருக்கவேண்டும் என்று நம்புகிறேன். ஆனல் அவ்விதகோஷ்டியானது, ஒரே கோகமுள்ளதாயும், கோஷ்டியில் உள்ள வர்களுடைய மற்றெரு உணர்ச்சிக்கு விரோதமில்லாததாயுமிருக்கவேண்டும். இது முக்யமானது, புதிதாக வந்து சேர்ந்தவர்களும், வரவேற்கப்பட்டு புதிதாக வந்தவர்கள் ஒற்றுமிவிட்டால் அது சரியாக ஆகிவிடும் ஆனல் உண்மையில் பார்த்தாலோ, இது ஓர் முயற்சியாகத் தெரிகிறது. கோஷ்டியில் உள்ளவர்களிடமே ஏற்பட்ட மனப்பரிபாகமானது, ஹரிஜனங்கள் வேண்டுமென்பதை, தெரிவிக்கும். இதற்குத்தான் அவஸரம்.

கு:— காங்கிரஸ் அரசாங்கமானது இருக்கும் தடைகளை, நிவர்த்திக்கவே முயற்சிக்கிறது. இந்த சீர்திருத்தமானது, பிறருக்கு ஹிம்ஸையைக் கொடுக்காது என்பது மட்டுமல்ல, ஆனல் இது அவசியமானது, என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டது. ஆகவே, அநுதாபம் இப்பொழுது தேவையில்லை. சட்டமே அவசியம்.

ஸ்ரீ:— நான் முன் உங்களுக்குச் சொன்னதுபோல் இந்த விஷயமானது, மெஜாரிடி மைனரிடி இவைகளைக்கொண்டு ஒரு மதத்தில் நம்பிக்கை உள்ள மனிதன், ஒருவன் அதேஷபித்தாலும், அவனுடைய [illegible] முடியாது. அவனிமீது இந்த புதிய சீர்திருத்தை சுமத்தி முன், கௌரவிக்கவேண்டிய தவசியம். எனினில் இது ஓர் மத விஷயம், ஸமூகவிஷயமல்ல. வேறுவிஷயங்களில் எவ்வளவு உயர்ந்தவனுயிந்த போதிலும்,அவன் அதைக்கொண்டு பிறரிடம் தன்னுடைய அபிப்பிராயத்தை பலாத்காரமாக சுமத்தக் கூடாது. ஓர் படித்தவருடைய பண்டித பரிஷத்தானது, இவ்விஷயங்களில் முடிவு செய்யலாம். அது தான் அங்கீகரிக்கத்தக்கது. இது செய்யப்படவில்லை. இது தான் அங்கீகரிக்கப்பட்ட வழி. மத விஷயங்களில் தீர்மானிக்கக்கூடிய சக்தி வாய்ந்தவர்கள் தவிர மற்ற பலதரப்பட்ட அபிப்ராயமுடையவர்கள் நிறைந்த, சட்ட சபையில், இதைப்பற்றி தீர்மானிப்பது தகுந்த உபாயமாகாது.

சாஸ்த்ரிகளும் மதத்திலும், விசேஷ்மான பாண்டித்தியம் உள்ள பண்டிதர்களின் ஸபைக்குப் பதிலாக ஓர் பொது ஜன கூட்டத்தை நாம் பதிலாக உபயோகிக்கக் கூடாது. பண்டிதர்களும் அனுதாபத்தோடும், நல்ல எண்ணத்தோடும், விஷயங்களை சபையில் கவனிப்பார்கள்.

மதுரை வர்ணச்ரம ஸ்வராஜ்ய ஸங்கம்

கவர்னரிடம் தாது செல்லத் தீர்மானம்

ஷெட் ஸங்கத்தின் விசேஷ கூட்டமொன்று 23உ பன்று ஞனதகாம் வித்யாலயத்தில் நடைபெற்றது. மதுரையில் "மீனுக்ஷி ஸ்பெஷல் கான்பரன்ஸ்" என்ற பெயருடன் தனியாக நடந்த ஒரு ஸம்மேளனம் ஸர்வ சாகபூர்த்தியாகாதபடியால் அதன் நடவடிக்கைகள் தள்ளப்படுவதாக தீர்மானிக் கப்பட்டது.

ஆலயப்பிரவேச சட்டத்தின விஷயமாக தக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ளும்படி வைஸ்ராய் அவர்களுக்கு ஆலோசனை கூறும் பொருட்டு, ஒரு ஸ்ரதன டெபுடேஷனை கவர்னரிடமும் அவருடைய ஆலோசக அங்கத்தினரிடம் அனுப்புவதென்று தீர்மானிக்கப்பட்டது. இதற்காகும் செலவு களை யாரை வர்ணாச்ரம ஸ்வராஜ்ய ஸங்கத்திலிருந்து கொடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

டெபுடேஷனில் அடியில் கண்ட கனவான்கள் இருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது:— அவர்களின் பெயர். ஸ்ரீமான்களான வி. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்கார் அவர்கள், சென்னை. நிவான்பஹதூர் ஸி. வி. வெங்கடரமண அய்யங்கார் அவர்கள், கோயமுத்தூர். கே. ராம அய்யங்கார் அவர்கள் அட்வகேட் மதுரை. ராவ்பஹதூர் பி. ஸி. முத்துசெட்டியார் அவர்கள், மதுரை. ராவ்பஹதூர் ஆர். நரஸிம்ம அய்யங்கார அவர்கள், ராவ்சாஹிப் கஸிர்வேலுபிள்ளை அவர்கள் மதுரை. எம். எஸ். வரதராஜலு நாயுடு அவர்கள் மதுரை. எல். கே. தளஸிராம் அவர்கள், மதுரை. ராவ்சாஹிப் நடேச அய்யர் அவர்கள் எம். எஸ். அய்யாஸாமி பிள்ளை அவர்கள் கஜானெலக்ஷ்மண ராவ் அவர்கள். எஸ். ஆர். கிருஷ்ணஸ்வாமி அய்யங்கார் அவர்கள் அட்வகேட் மதுரை.

லஞ்ஞதந பிரசாரம் நடத்த இதுவே தக்க ஸமயம்

மடாதிபதிகளின் கடமை

(திருமலைல்லான் T. ராமகிருஷ்ணய்யங்கார் சிரோமணி ஆழ்வார் திருநகரி.
17—12—39.)

ஆஸ்திகர்களே! நாம் நமது அன்னை அப்பன் ஆலயங்களை இழந்து ஆறுமாதங் களாகிவிட்டன. அவைகளை மறுபடியும் அடைவதற்கு அரும்பாடுபட வேண்டியது அவசியம் என்பதை ஒவ்வொரு மனிதனும அறிந்துகொண்டுவிட்டான். ஆயினும் நாம் இன்னமும் அவதிப்படுகிறோம். வெற்றி பெற்றபாடில்லை. காரணம் என்ன? சக்தி கள் சிதறிக்கிடக்கின்றன. அவைகளை ஒருங்கு திரட்டவேண்டும். அதன் மூலம் ஸமுதாயசக்தி வெளிப்படும். அடுத்த க்ஷணம் வெற்றிபெற்றுவிடுவோம். இது உறுதி. அதற்கேற்ற ஸமயமுமிதுதான். இவ்வேளையை வீணே விட்டுவிடக்கூடாது. உத்ஸாஹத்துடன் தக்க களிர்ச்சிசெய்ய முயற்சிக்கவேண்டும். நகரங்களில் விடக் கிராமங்களில் இவ்விஷயத்திற்குத் தக்க ஆதரவு கிடைக்கின்றது. மந்திரிகள் பண்ணின மாயாஜாலத்தைக் கேட்டு அவர் கள் மனம் புழுங்குகின்றனர். கிராம வாசி களிற் பலர் ஆலயப்ரவேசம் என்கிற அடாத அக்ரமச்செயலுக்குக் காங்கிரஸ் மந்திரிகள் தான் காரணம், என்பதை பதிந்துகொள்ள வில்லையென்ற எனக்குப் பல விடங்களில் தெரிந்தது. இவ்வளவு குறைவான முறையில் ஆஸ்திகர்கள் பிரசார மிருக்கிறது என்பதை இங்குக் குறிக் கொள்ளவேண்டும். இங்கிலியில் தருந்த எதிர்பிரசாரமில்லாதபோது காங்கிரஸ் தேர்தல்களில் பெருவாரியாக வெற்றி பெற்று விடுவதில் வியப்பொன்றுமில்லை. ஆனல் தேர்தல்களின் மூலம் பொது ஜனங் கள் ஆலயப்பிரவேசத்தை ஆதரிக்கிறார்கள் என்று காங்கிரஸ் பிரசாரகர்கள் கூறுவது சரியன்று என்பதை கிராமங்களில் அநுபவ முள்ளவர்கள் எளிதில் அறிந்துகொள்ள லாம். இங்கிலியில் ஆஸ்திகர்கள் செய்ய வேண்டியதென்ன? ஆங்காங்கே கட்டுப் பாடான பிரசாரம் செய்யவேண்டும். அதற்குத் தக்க முறையில் ஆஸ்திகஸ்தா பனம் பலப்படுத்தப்படவேண்டும்.

மடாதிபதிகள் இவ்விஷயத்தில் மிக ஊக்கங்கொண்டிருப்பது நமக்குச் சிறிது ஆறுதல் அளிக்கிறது. ஆனல் அவர்கள் உருவானமுறையில் இவ்விஷயத்திற்குஉதவ வேண்டும். மடாதிபதிகள் தங்கள் தங்கள் ஸ்திதிக்குத் தக்கபடி தாராளமாகப் பொரு ளுதவி செய்து பண்டுசேர்க்கவேண்டும். ஜில்லாவுக்கு இருவராகப் பொறுக்கி எடுக் கப்பட்டவர்கள் அடங்கிய நம்பிக்கைக்குப் பாத்திரமான வொருமாகாண ஆலய ஸம் ரக்ஷணக் கமிட்டியாரிடம் மொத்தமாய் ஒப் படைக்கப்படவேண்டும். பொது ஜனங் களிடமிருந்தும் மொத்த கமிட்டி பொருளுதவி பெற்றுக்கொள்ளலாம். மூன்று மாதங் களுக்கு ஒரு முறையோ, வருஷத்திற்கு இரு முறையோ பத்திரிகைகளின் மூலம் ஒழுங் காகக் கணக்குக்களை மொத்த கமிட்டி பரி சுரித்து விடவேண்டும். அதனதரவில் ஜில்லா வாரியாகப் பிரசாரர்களை நியமிக்கவேண்டும். வைதிகாக்ரஹக ளாகச் சேருகிறவர்கள் குடும்ப ஸம்ரக்ஷ ணைக்கு உதவி செய்ய வேண்டும். ஆபிரக்ஷணக்கான ஸத்யாக்ரஹிகள் சேர்த் துவிடுவார். அத்தகையசத்யாக்ரஹிகள் பொது ஜனவாதரவுடன், நாமிழந்திருக்கும் கோயில் களை நிரும்ப பெற முயற்சிக்கவேண்டும். இதன் மூலம் நமக்கு ஒரு விதம் பரிஹாரம் ஏற்பட்டே தீரும். இதில் சிறிதும் சந்தேக மில்லை. தீரமும் ஊக்கமும் விடாமுயற்சி யும் வாய்ந்த தலைவர்கள் ஒற்றுமையுடன் இவ்வியக்கத்தைப் பொறுப்புடன் நடத்தி னல் பிறக்கப்போகும் புத்தாண்டில் நாம் புத்துயிர் பெற்று வெற்றிக்கொடியை காட்டுவோம்.

இனி என் சிற்றறிவுக்கெட்டிய மற்றொரு வேண்கோள் விடுத்து நிறுத்திக்கொள்கி றேன். இப்புத்தாண்டுப் பிறப்பின் போது நமது மடாதிபதிகள், கவர்னருக்கும், ராஜப்பிரதிநிதிக்கும், அரசருக்கும் ஆசிச் செய் திகள் அனுப்பவேண்டும். அதில் இப் பொழுதேற்பட்ட குறை அகற்றப்பட வேண்டிய அவசியத்தைக் காட்டி, அரசாங்கம் மத சுதந்திரங்களைப் பாதுகாப் பதன் மூலம் உண்டாகும் நன்மைகளையும் விளக்கிக் கூறியிருக்கவேண்டும். மடாதி பதிகள்போலவே மதப்பற்றுள்ள பெரியோர்களும் இங்ஙனம் தனித்தனியே செய்வது நலம்.

விழுப்புரம்
தெய்வ நெறிக்கழக முதல் மஹாநாடு

தலைவர் ப்ரதிநிதி வரவு:ஷை. ஸ்பைதலைவர் பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்யஸ்ரீ வெளதந்த ஸ்வாமிகள் சென்னை மாகாண பிரதம ஸபை விழுப்புரத்தில் 24உ முதல் ஒரு வாரம் கூடுகிறது. ஹிமாலயம் ப்ரயாகை, ஜூப்ந, மெங்களூர், பெங்க ளூர், பெஜவாடா, மலபார் மதுரை திருச்சி சென்னை முதலியவிடங்களிலிருந்து நூற்றுக் கணக்கான சனாதன ப்ரதிநிதிகளும், ஸத்யாநந்தஸரஸ்வதி எனும் தலைவரும் வந்தனர்.

சாலாப்ரவேசம் இரண்டாயிரம்பேர் உட் கார பந்தல் அழகாக அமைக்கப்பட் டிருந்தது 24உ காலை கணபதி பூஜையுடன் அங்கு நவாரஹ ஹோமமும் அருள் பாரா ணமும் நடைபெற்றது. செங்கல்பட்டு குருகுல மாணவர் வேதபாராயணம் செய் தனர். மாலை 3மணிக்கு மேளவாத்யம் தேவார பாராயணமும் முதலியவைகளுட னே அங்கத்தினர் ஊர்வலமாக சாலையில் நுழைந்தனர்.

திறப்பு விழாவும் தலைவருரையும் 4 மணிக்கு மஹோபதேசகர்களான ஸ்ரீ கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகளும் ஸ்ரீ ஸோமதேவ சர்மாவும் வரவேற்றனர். ஸ்ரீ சாஸ்திரிகள் ஆங்கிலத் திலும் தமிழும் வெகு அழகாக பேசி ஸபை நிறைத்தார். ஜஸ்டிஸ் வரதாசாரி, மைசூர் திவான் ஆண்ட்ரூஸ், ஜஸ்டிஸ் மாரிஸ்குயர் முதலியவர்களிடமிருந்து வந்திருந்ததை ஸ்ரீமான் டாக்டர் மணி (ஸபை தலைவர்) படிக்க வரவேற்பு தலைவர் மஹாதேவஸ்வா மிகள் ப்ரஸங்கமும், தலைவர் ஸ்ரீ ஸத்யாநந்த ஸரஸ்வதி உபன்யாஸமும் படிக்கப்பட்டது

பக்தியும் ஸ்காந்தமும் மாலை 6 மணிக்கு திவான் பஹதூர் கே. எஸ். ராமஸ்வாமி சாஸ்திரிகள் மிக கம்பீரமாக பக்தி என் பதை குறித்து 1 மணி உபன்யாஸித்தார் மறு 8 மணிகு பிரமமஸ்ரீ அநந்தராம தீக்ஷதர்வாள் ஸ்ரீ ஸ்காந்த உபன்யாஸம் ஆரம்பித்து மிக அற்புதமாக உபன்யாஸித் தார்.

ஸுதஸ்வ ரூபமும் ஜபமஹிமையும் 24 காலஸ்ரீ சாஸ்திரிகள் முதல் விஷயத்தையும் ஸ்ரீ வத்ஸ லோமதேவ சர்மா இரண்டா வது விஷயத்தையும் குறித்து மிக கம்பீர மாக உபன்யாஸத்தார்கள் மாலையில் யோக விஷயமாக ஓர் உபயாஸம் நடைபெறும், மற்றும் பல விஷயம் நடைபெறும்.

(ந. வி. நி.)

குடந்தை ஆஸ்திக ஸ்திரீகள் கூட்டம்

அரசியல் நிர்ணய ஸபைக்கு எதிர்ப்பு

ஆஸ்திக ஸ்திரீகள் ஸங்கத்தின் சார்பில் ரங்கவிலாஸத்தில்25உ ஒருபொதுக்கூட்டம் நடைபெற்றது ஸ்திரீகள் எராளமாக விஜ யம் செய்திருந்தனர். தலைவர் V.ஜெனபகத் தம்மாள் தற்கால ராஜீய நிலையை சுருக்க மாக எடுத்துரைத்து அரசியல்நிர்ணய ஸபை எலக்ஷன்மூலம் கூடப்படவேண்டு மென் பதைபலமாக எதிர்த்துப்பேசினர் மதத் திற்கு சட்டரீதியான பாதுகாப்பு ஏற்படும் வரை போராடவேண்டுமென்றும் வற்புரு றினர் C. K. ஸ்ரீநிவாஸய்யங்கார் ஸம்ஸாரம் பகவான் இதுவரை நம்மைக்காப்பாற்றி விட்டார் இதுவரைபோல் இனியும் முயற்சி செய்து கொண்டிருந்தால் மதத்திற்கு பாதுகாப்பு ஏற்பட்டுவிடுமென்றார் நிரு நெல்வேலியில் ஆலயபிரவேசத்தை நிறுத்தி யதற்காக கவர்னரை வாழ்த்தியும் இன் னும் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட் டன அரசியல் நிர்ணயஸபை ஆலோச னையை எதிர்த்தும், சுயேச்சையின உறுதி மொழிவாசகத்தைக் கண்டித்தும் கீழ்க் கண்ட தீர்மானங்கள் நிறைவேறின.

(1) This public meeting of the leading Sanatanists of Kumbakonam oppose the idea of calling a constituent assembly for settling the new constitution as such a body will be unwieldy as the elections that may be held therefor will involve enormous expense and also rouse communal, sectional and provincial jealousies and passions to a high pitch, and as smooth discussion, mutual understanding,and Statesmanlike co-operation may not be expected in such a large assembly.

(2) This meeting declares that it has no faith in the so-called constructive programme of the Congress for achieving political independence and swaraj, and this meeting further strongly condemns the Congress High Command for introducing apurely Hindu Religious and social matter (viz) removal of untouchability in the pledge to be taken on the Independence day, 26th January, as irrelevant and unnecessary.

(3) This meeting further declares that no true Sanatanist can sign such a pledge and calls upon all Sanatanists throughout the country to agitate for the removal of the above irrelevancies from the said pledge.

லலிதாத்ரிசதி

நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும் விலை 0—3—0

ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாமம்

நாகரலிபியில் மூலமும்,
நாமாவளியும். விலை அணு 0—5—0
ஆர்யதர்மம் சந்தாதாரர்களுக்கு
விலை அணு 0—4—0.
தபால்செலவு அணு 1.
கிடைக்குமிடம் ஸ்ரீ ஜனார்த்தன அச்சுக் கூடம், லிமிடேட், கும்பகோணம்.

நமது மதம்.

(ஸ்ரீ எல். சுப்ரமணிய சாஸ்திரிகள். வீணை வித்வான்)

(முன் தொடர்ச்சி)

இப்போது ப்ரத்யக்ஷமாகவே, கலப்பு மணம் முதலிய ஆபாஸக்ருத்யங்களினல் அனேக குடும்பங்கள் சொத்து இழந்தும் பணமிழந்தும், மானமிழந்தும் சந்ததியில் தவித் து நிருடனுக்கு தேள் கொட்டியதுபோல் வெளியில் சொல்ல முடியாமல் தவிக்கின் றனர் என்பது கண்ணல் பார்த்துக் கொண்டும் கேட்டுக் கொண்டும் வருகி றோம்.

இது மதவிஷயமானதத்வம். இதற்கும் அரசியல் விஷயத்திற்கும் சிறிதேனும் ஸம் பந்த மிருக்கிறதா? சற்றே யோசித்துப் பாருங்கள்.

பொதுவாய் மேற்கூறப் பட்ட மூன்று பெரிய விஷயங்கள் மந்தர ஸம்ஸ்கார பூர்வ கமாய் ஏற்பட்டுள்ள விதிகள் ஆத்மரக்ஷ ணைக்காக ஏற்பட்டுள்ள விதிகள். இவை பரஸ்பரனமான விதிகள் இந்த மதத்திற்கும் அரசியல் விஷயத்திற்கும் கொஞ்சமும் ஸம் மந்தமே கிடையாது.

பொதுவாக மனிதவர்க்கத்துக்கு "ஆஹா ரஞ்ச ராபயமைதுனஞ்சாமான்யமேதத் பசுபிர் நராணாம், ஏகோவிவேகோப்ய, திகோ, மநுஷ்யே, தேஷாவ, ஹீனா:, பசுபிஸ் ஸமாநா; என்ற படி மேற்கூறிய ஆகாரம் நித்ரை, பயம், மைதுனம், இன்னுங்கும். மிருகாதிகளுக்கும் மனுஷ்யர்களுக்கும், ஸமானமாக இருக்கின்றன. இதில் அவைக ளுக்கும் நமக்கும் என்ன வித்யாஸம்;

மேற்கூறிய நான்கு தொழில்கள் நமக்கு விதிபூர்வமாய் ஏற்பட்டிருக்கின்றன. அதாவது விதிபூர்வமான ஆஹாரம், விதி பூர்வமான நித்ரை, விதிப்பூர்வமாய் பயம் (அதாவது அஸத்யம், அதர்மம், அந்யாயம் லோகாபவாதம், இவைகளுக்கு பயப்படு தல்) விதிப்பூர்வமாய் மனைவியோடு இன்ப மனுபவத்தல்; இவ்விதிகள் மிருகங்களுக்கு கிடையாதல்லவா? இதுதான் அவைகளு க்கும் நமக்கும் வித்யாஸம். நாம் விதியை மீறினல் வித்யாஸமே கிடையாது. அதாவது இரண்டுகால் மிருகங்களாகவே உலகில் ஸஞ்சரிப்பதாகும்.

நம்மவரில், சிலரில் சிலருக்கு வேதபுரா ணங்களில் பற்றுதல் கிடையாது. கேட்ப தும் கிடையாது. கர்மேஸ்வரர் கோவில் குளங்களில் சிறிதேனும் சிரத்தை கிடையாது. கோவில் தத்வமே அறியாதவர் கள். இப்பேர்ப் பட்டவர்கள் நந்தனர் முத லிய வர்களுடைய சரித்திரங்களை சாக்காக வைத்துக் கொண்டு தீண்டத் தகாதவர்கள் என் ஆலயப்ரவேசம் செய்யக்கூடா தென்று மஹா காருண்யமூர்த்திகள்போல் பேசுவதுதான் விசித்ரமாயிருக்கின்றது. ஸனதனதர்மிகளிடை யாருக்குசரித் ரங்களின்தத்வம் தெரியும் போதும்?

நந்தனர் மஹா சிவபக்தன். சிவனும் நந்தனருக்கு அனுக்ரஹம் செய்ய் நிருவுளங் கொண்டார். அவர் அமாநுஷ்யமான செய லை (அதாவது ஒரே இரவில் வயல்களில் அபார தான்யலபிமிருத்தியை) சிலனருளால் காட்டினர். அதனல் அப்பக்தன் ஆலயத் திற்கு வரவாமென்று அவர் விஷயத்தில் ஈச்வர ஸம்மதமிருக்கிறதென்று எல்லோருக் கும் விளங்கிற்று. அப்படியிருந்தும் ஆல யத்திற்கு சிறிது தூரம் நின்று சிவனேயா னம் செய்து தானுகவே ஒதுங்கினன். ஏனென்றல் தீண்டக்கூடாத சரீரமாயிற்றே என்று உணர்ந் தநினல்தான். இல்லேவாழ்நணர்கள் அழைத்துச்சென்று அக்னியில் ப்ரவேசம் செய்வித்து நிவ்ய சரீரத்துடன் ஜ்யோதியில் கலந்து கொள்ள, யாரையாவது தன்னினத் தாளெருவனே அழைத்துச்சென்றார?

நந்தனருக்கு ஜன்மாந்தரீய புண்யவசத் தால் சிவபக்தியும், கிஞ்சித் பாபசேஷத் தால் தீண்டாக்கூடாத ஜன்மமும் நேர்ந்தது. மை ஜன்மத்தின் அனுபவம் நீங்குங்காலம் நெருங்கிற்று. மை ஈச்வராநுக்ரஹமு மேற்பட்டது. பிறவிக்குருடனுக்கு கண் கள் கிடைத்ததுபோல் நந்தனருக்கு சிவ னருள் கிடைத்தது. இதுபோல் மஹாபார தத்தில் விதுரருக்கும், தர்மவியாதனென்ற வேடனுக்கும் பூர்வபுண்ய விசேஷத்தால் மேலான பிரம்மஞானமேற்பட்டது என்று சரித்தரத்தின் உண்மையறிந்தவர்களுக்குத் தான் தெரியும். திருப்பாணாழ்வாரும், ஸ்ரீ சங்காசாரிய ஸ்வாமிகளும் அத்புதமான செயலைக் காண்பித்தார்கள். உலகத்தை வெறுத்து ஸ்வம் பிரம்மமயமாக பார்க் கின்றவனுக்குத் தான் ஜாதிபேதமில்லே. எப்படியெனில்? கறிகாய் கடைகளில் பலவிதமான கறிகாய்கள் விற்கப்படுகின் றன. அவைகளில் பல பல உருவங்களும் ருசிகளுமிருக்கின்றன. இவைகளைப் போலவே கோதுமை, சர்க்கரை பாலேடு களால் செய்து தெருக்களில் "பால்கோவா" என்று விற்கின்றார்களல்லவா? இவைகள் பார்ப்பதற்கு வெவ்வேறு உருவங்களாயிருந் தபோதிலும்அதன் ருசி ஏகாகாரமான மதரமாயிருக்கின்றதல்லவா? அதுபோல ஏகாகாரமாய் ஈச்வரஸ்வரூபமாக இருக் கின்றவர்களுக்கு ஜாதிபேதமில்லே என்றறி யத்தக்கது.

முன்னாளில் நாஸ்திகவாதமுண்டா? நாஸ்திகப்பஞ்சு, ஆஸ்திகச்சுழல் காற்றினல் இருக்கிற இடம் தெரியாமலிருந்தது இக் காலத்தில் நாஸ்திகவாதம் எங்கிருந்தோ தலை காட்டிக்கொண்டிருக்கிறது. இவர்களுக்கு என்ன ஆதாரங்களைச் சொன்னலும், பிடிக் காது. எனென்றல்; அன்னத்தில் தவே ஷம் ஏற்பட்டால் பால் கசப்பாகவிருக்கும். சுரைபுரியான ஆகாரங்கள் பிடிக்காது. மருந்தோ பிடிக்கவே பிடிக்காது. என்? ஆகாத காலத்துக்குத்தான். அதுபோல் பிரம்மத்தில் த்வேஷமுள்ளவனுக்கு சாஸ் நிரம் பிடிக்காது. ஆர்யம் என்ற சொல் லும் தர்மவியாயங்களும்பிடிக்கவேபிடிக் காது ஏன்? என்றல் போதாதகாலத்துக்கு தான் இவைகள்.

உலகில் பொதுவாக மனிதர்களுக்கு சுகமும் தேவன்றும் ஒரு விருப்பமிருக்கின்றது. ஆனல் அந்த சுகத் துக்கு ஹேதுவான ஸத்கர்மங்களைச்செய்ய இஷ்டமில்லே. தான்பங்கள் வேண்டா மென்று வெறுப்பு இருக்கின்றது. ஆனல் அத்துன்பங்களுக்கு ஹேதுவான அதர்மங் களைச் செய்ய சொம்ப விருப்பமிருக்கின் றது. இப்படி இருக்கின்றது உலகரீதி. இதை எப்படி சரிசெய்வது? அங்கங் களுக்குத் தக்கபடி தினைப்பிரித்திக் கொள்வதா? தானிக்குத்தக்கபடி அங்கங் களைத் திருத்துக்கொள்வதா? நீங்களே சொல்லுங்கள்.

தற்காலத்திலோ, நம்தேசத்தில் பஞ்சம் என்ற கஷ்டம் அங்கங்கே பீடிக்கின்றது. வருமைநோய் ஒரு பக்கத்தில் தொத்து வியாதிகள் ஒரு பக்கத்தில் வேலியில்லாத் திண்டாட்டம் ஒரு பக்கத்தில், ஸ்வதேச ஸமஸ்தானங்களோ குடிகளின் சுகதுக்கங் களைக் கவனியாமல் மோஹமடையில் சிக் குண்டு வருகின்றன. உலக யுத்தம் ஒரு பக்கத்தில் திருடர்கள் வேறே ஒரு பக்கம் அங்கங்கே கொலைகள், கொள்ளைகள் நடந்துகொண்டுதானிருக்கின்றன. மத த்வேஷம் பரவிக்கொண்டுமிருக்கின்றது. பல தான்பங்களாகிற நெருப்புப் பற்றி எரி கிற ஸமயத்தில் "எரிகிற வீட்டில் பிடுங்கி னது லாபம்" என்றபடி நம் இந்தியாவி லுள்ள வியாபாரிகள் "உலக யுத்தம்" என்ற சாக்கு வைத்து நம்நாட்டு உணவுப்பொருள் களின் விலைகளை ஏற்றி கொள்ளையடிக்கத் தருணம் பார்த்து ஆரம்பித்துவிட்டார்கள். இது எப்படியிருக்கிறதென்றால் "பலாச குசும ப்ராந்த்ய சுகதண்டே பதத்வனி:" லோபி ஜம்பூப்ல ப்ராந்த்யா தமலிம் ஹர்த்து மிச்சதி". கருமையான வண்டானது கிளி பின் மூக்கைப்பார்த்து புரசம்பூவென்று கினைத்து அதை சாப்பிட மேல்மேல் விழு கின்றது. அக்கிளியோ இவ்வண்டை காவல் பழமென்று பிரமித்து வண்டைவிழுங் கப் பார்க்கின்றது. இப்படித்தான் ஒரு வரை ஒருவர் ஏமாற்றும் உலகமாயிருக் கின்றது. அனுபவத்தில் பார்த்துகொண்டு தானிருக்கிறோம். (தொடரும்)

வேம்பத்தூர்

ஸ்ரீமத் பாகவத புராண சம்பூர்த்தி விழா

வேம்பத்தூர் பிரம்மஸ்ரீ சிவராம கிருஷ்ணய்யரவர்கள் திருநெல்வேலி ஜில் லா வல்லாநாடு கிராமம் சாஸ்திரதனம் லெ. நாராயண சாஸ்திரிகளைக் கேட்டுக்கொ ண்டபடி ஆயிரத்தம் 18000 கிரந்தங்களை யும் நிம்பை வே. ஸ்ரீ. வேதநாராயண சாஸ் திரியாரவர்கள் கையேடு வாசிக்க மை சாஸ்திரதனம் கனம் சாஸ்திரியாரவர்கள் மை சிவராமகிருஷ்ணய்யரவர்கள் கிரஹத் தில் பிரமாதி ஞய சதஷ்டரை மீ முதல் காரத் திகை மீ 26உ வரை புராணத்தியுள்ள அரிய பெரிய விஷயங்களை நன்குபெடுத்துக் கூறி சுபதினத்தில் பூர்த்தி செய்தனர். சுரோதாக்களான ஆஸ்திகர்கள் சர்க்கரை பந்தலிற்றேன் மாரி பொழிந்தது போலிருந் ததென்றுமிருந்தவானத்தமுற்றார்கள். பிறகு கனம் சாஸ்திரியாரவர்களுக்கு மை சிவ ராமகிருஷ்ணய்யரவர்கள் மிருந்த சம்பா வனை செய்தனர். மற்ற ஆஸ்திகர்களும் ம களாலியன்ற சம்மானம் செய்தனர். பாக வத கோஷ்டியினர் நாம சங்கீர்தன கால கோஷம் நடந்து விழா நிறைவேறியது.

ஸ்ரீ, சுப்ரமணிய பாரதி

தர்ம சாஸ்த்ரச் சுருக்கம்

பிராமணர்களின் கர்மானுஷ்டானங்களை விவரிக்கும், 'வைத்தியநாத தீக்ஷிதீயம்' என்ற தர்ம சாஸ்த்ரத்தின் ஆறுகாண்டங் களையும் சங்ரெகமாய் தமிழில் மொழிபெயர் க்கப்பட்ட இப்புஸ்தகம் ஒவ்வொரு ப்ரம ணக் குடும்பங்களிலும் இருக்கவேண்டியது. விலை ரூ. 1—8—0 (வி. பி. ப்ரத்யேகம்.)

கூடக்குமிடம்:— பப்ளிஷர்,
தர்மசாஸ்த்ரச் சுருக்கம்,
கீழவீடையால், திருச்சிரை
&
ஸ்ரீ ஜனார்தன அச்சுக்கூடம், லிமிடெட்,
கும்பகோணம்

ஸ்ரீK. V. சுப்ரமணிய சாஸ்திரிகள் ப்ரசாரங்கள்.
ஸ்ரீமத் அப்பய்ய தீக்ஷிதேந்த்ரர் 1 0 0
ஸுனீதிகுசமாலா 0 8 0

215313

வெளியூர் செய்திகள்

வரகூர்

ஸ்ரீபாகவத பாராயணம்:–நிகழும் பிரமாதிஐ மார்கழிமீ 1உ (16–12–39) சனிக்கிழமைமுதல் ஷெமீ 29உ (13-1-40) சனிக்கிழமை வரையில் ஸ்ரீபாகவத பாராயண கதாப்ரவசனமென்னும் க்ஞானயக்ஞம் வரகூர் கிராமத்தில் ஷெ கிராமம் அசேஷ மஹாஜனங்களின் வேண்டுகோளுக்கிணங்கி ஷெயூர் பாஷ்யபாவக்ஞ ஸ்ம்ருதிபூஷண பிரம்மஸ்ரீ வி. எஸ். வெங்கட்டராம சாஸ்திரிகள் அவர்களால் நடத்தப்படும். அதில் பிரதிதினம் காலையில் ஸ்ரீபகவதாராதன பூர்வகமாக ஸ்ரீ பாகவத மூல பாராயணமும், மாலை மணி 3-30 முதல் 5 வரையிலும், 7-30 முதல் 9 மணி வரையிலும் எளிய தமிழ் நடையில் கதாப்ரவசனமும் நடக்கும். (ந-கி)

காஞ்சியில்

கீதாதின கொண்டாட்டம்.

மே. த. சென்னை கவர்னருக்கு வந்தனம்

இன்றை மாலை ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசார்யஸ்வாமிகள் மடத்தில் கீதாதினம் மிக்க விமரிசையாக ஸனாதன ஸ்ரீ மான்களாளும் ஸ்ரீ மதிகளாலும் கொண்டாடப்பட்டு, பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தர்மத்தை நிலை நாட்டுவதற்காக அப்போதைக் கப்போது உற்பவிக்கிறேனென்று கூறிய வாக்குறுதியை மே. த. கவர்னரவர்கள் துவாரா ஆலயப்ரவேச அவசர சட்டத்தின் அக்ரம அமுலை நிறுத்தி வைத்ததற்காக இச்சபை மே. த. கவர்னரவர்களுக்கு தங்கள் வந்தனத்தைத் தெரிவிப்பதாகத் தீர்மானிக்கப் பட்டது.

கே. எஸ். ரங்கநாதய்யர்.

மன்னார்குடி

ஓர் மஹா யதியின் மறைவு

(நமது நிருபர்)

சென்ற கார்த்திகை மீ 25உ ஞாயிற்றுக்கிழமை புக்ஷசம் ஸ்வாமி யென்று பிரஸித்தராயிருந்த ஸ்ரீ நாராயணஸ்வாமிகள் மன்னார்குடியில் தமது ஆச்ரமத்தில் மோக்ஷ ஸாம்ராஜ்யத்தை அடைந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளுக்கு யோகசாஸ்நிரத்திலும் உபநிஷத்தாகளிலும் மஹா அபாரமான ஞானமுண்டு. கிருஹஸ்தாச்ரமத்தில் ஸ்ரீ ஸ்வாமிகள், கும்பகோணம் அய்யங்கார் வீதியில் பிரஸித்தர்களாகளமுக்தருளியிருந்த அக்னிஹோத்ரம் ஸ்ரீஸுந்தரதாதமஹாதேசிகனிடத்தில் உபயவேதாந்த காலக்ஷேபமும் பரமார்ப்பணமும் செய்துகொண்டவர். சுமார் 35 வருஷங்களுக்கு முன் ஸன்யாஸ ஆச்ரமத்தை அடைந்து அதி தீவ்ரமான வைராக்யம் அநுஷ்டானம் இவைகளுடன் இருந்து வந்தார். திருப்பதி மூதலிய திவ்ய தேசங்களில் வெகு காலம் வஸித்திருந்ததோடு இப்பூமண்டலத்தை பல தடவை பிரதக்ஷிணம் செய்திருக்கிறார்கள். 'தத்வத்ரய நிரூபணம்" என்ற ஓர் கிரந்தம் ஸ்ரீ ஸ்வாமிகளால் செய்யப்பட்டு வேதாந்தத்தில் பரிச்சமப்பட்டார்களுக்கு ரொம்ப உபகாரமாக அமைந்திருக்கிறதென்பதும் பண்டிதர்களால் அறியப்பட்ட விஷயம். இப்படிப்பட்ட பெரியோர்களின் மறைவு ஆஸ்திக ஸமூஹத்துக்கு தக்கத்தைக்கொடுப்பதாகும்.

ஸனாதனதர்ம வீரரின் அநியாய மரணம்.

ஆழ்வார் திருநகரி ஸீய்யர் பெரிய திருவடி ஐயங்கார் 3-12-39ல் திருநெல்வேலி ரெடினியூ டிவிஷனல் ஆபீஸ் ஹெட்கிளார்க் ஸ்ரீ மான் வி. எ. பக்ஷிராஜ அய்யங்கார் ஜாகையில் திடீரென மரணமானார். திருக்குறுங்குடி கைங்கர்ய ஏகாதசி வைபவ சேவார்த்தமாய் சென்று அன்று நெல்லைக்கு வந்தார். இளம்பிராயம் 35 வயதில் அநியாய மரணமானார். ஹரிஜன ஆலயப்பிரவேசத்தை எதிர்த்து உயிர் நியாகம் செய்யவும் தயாராயிருந்தவர், சென்னை கவர்னர் ஜாகையில் சத்யாக்ரஹம் நடப்பதானால் அங்கு செல்ல ஆயத்தமாயிருந்தவரெனச் சொல்லப் படுகிறது. இந்தியாவெங்கும் பத்ரிகாஸ்ரம் வரை பல தடவை யாத்ரையில் சென்றிருக்கிறார். ஆலயப்ரவேச விஷமக் கிளர்ச்சியை ஒழிக்க பிராணத்யாகம் செய்யவும் தயாராயுள்ள ஸனாதன வீரர் காலமானது வருந்தத் தக்கதாம்.

(ந. வி. நி.)

மதராஸ்

சென்ற 14—12—39ல் நொங்கம்பாக்கம் அக்ரகாரத்தில் உடையாளூர் ராமாயணம் பிரம்மஸ்ரீ அப்புஸ்வாமி சாஸ்திரிகளால் அங்குலீயகப்ரதான உபன்யாஸம் செய்யப்பட்டது.

நியாகராஜகர் கிநாயகர் சன்னதியில் ஷெ யாரால் 1—12—39 முதல் மகாஸ்கான்த உபன்யாஸம் நடைபெற்று வருகிறது.

(ந-கி)

வைஸ்ராயிக்கு விண்ணப்பம்

சென்னை "ஸ்ரீ ராமானுஜ வித்தாந்த வைஜயந்தி" பத்ரிராதிபரான ஸ்ரீ வடகரை ராமாநுஜாசாரியர் அவர்கள், சென்னை கவர்னர், வைஸ்ராய், ராஜாங்க ஸபைத்தலைவர் ஆகியவர்களுக்கு ஓர் கடிதம் எழுதியிருக்கிறார்.

அதில், காங்கிரஸ் கவர்ன்மெண்டுகள் ஸனாதன தர்ம விஷயத்தில் பிரவேசித்து நிர்பந்தம் செய்ததைக்குறிப்பிட்டிருப்பதுடன் யுத்த விஷயத்தில் சாம்பெர்லைன்காரர்கள் பேரம் பேசியது போல் ஸனாதனிகள் பேசக்கூடியவர்களல்லவென்றும், எப்போதும் அவர்கள் நிபந்தனையின்றி ராஜபக்தி காட்டுகிறவர்களென்றும், ஆதலால் யுத்தநிதி [illegible] வெற்றி பெறப்பிரார்த்திப்பதாயும், ராஜசக்ரவர்த்தியின் கவர்ன்மெண்டானது, மத விஷயத்தில் பிரவேசிப்பதில்லையென்கிற விக்டோரியாமஹாராணியாரின் வாக்குறுதியை காப்பாற்றி தர்மவிஷயத்திலும், மத விஷயத்திலும் கவர்ன்மெண்ட் பிரவேசிக்காமல் உறுதி செய்யவேணுமென்றும் குறிப்பிட்டிருப்பதாக அறிவிக்கிறார்.

மேல்மங்கலம்

வர்ணஸ்ரம ஸ்வராஜ்ய சங்கம்

பிரமாதிஐ கார்திகைமீ 23ம்உமுதல் 30ம்உமுடிய 8 நாட்களிலும் இச்சபையின் ஆதரவில் மாலை4மணி முதல் 5½ மணி வரை இவ்வூர் ஸ்தலபுராணம் ஸ்ரீ தக்ஷிணமூர்த்தி சாஸ்திரிகளால் பிரவசனம் செய்யப் பட்டு முடிவுஎய்தியது.

சிவராமகணபதி கனபாடிகள்

பம்பாய்

ஸ்ரீ சங்கரமடம் மங்கா,

சென்ற ஜூலை மாதம் முதல் ஸ்ரீ ஜகத்குருசங்கராசாரியஸ்வாமிகளிடத்தில் இருக்கும் பக்தி சிரத்தையினால், ஸ்ரீ சங்கரமடம் ஸ்தாபிக்கப்பட்டு நித்தியமும், வைதிக மெம்பர்களால் தைத்தீய கிருஷ்ண யஜுஸ் ஸம்ஹிதா பாராயணமும், லௌகீகர்களுக்காக ருத்ர சமகம் முதலான வேத சம்பந்தமான பாடங்களும் பிரம்மஸ்ரீ மணக்கால் ஸுந்தரேச தீக்ஷிதர் அவர்களால் நடைபெற்று வருகிறது. மேலும் பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் பிரம்மஸ்ரீ சித்தூரி நாராயண சாஸ்திரிகளால் பிரம்மஸூத்ர பாடம் சொல்லப்பட்டுவருகிறது. நித்தியமும் ஸ்ரீ பகவத் பாதாசார்ய பூஜையும். ஸ்ரீசக்ரபூஜையுடன் வித்யுக்தமாக நடந்துவருகிறது. பக்தர்களுடைய உற்சாகத்தினால் மேன்மேலும் அபிவிருத்தி அடைந்து சீக்கிரத்திலேயே கும்பகோணம் ஸ்ரீ காஞ்சீ காமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்வாமிகளுடைய அநுக்ரஹத்தால், இந்த மடம் சாச்வதமாக நடந்துருமென்று நம்புகின்றோம்.

(ந-கி)

நாகூர்

ஸ்ரீ ராதாகல்யாண மகோத்ஸவம்

நாகூரில் சிவன் கோவில் மேல மடவிளாகத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் பிராமண சங்கத்து கட்டிடத்தில் ஸ்ரீ ராதா கல்யாண மகோத்ஸவத்தை தனுர் மீ 12உ (27-12-39 ஆரம்பித்து 13உ யன்று (28–12–39) ஷெ சங்கத்தாரால் நடத்துவதாக நிச்சயித்திருக்கிறது.

ஸ்ரீ காஞ்சியில்

ஸ்ரீ மத் ராமாயண கதா பிரசங்கம்.

ஸ்ரீ காஞ்சி ஸனாதனதர்ம சேவாசங்கத்தின் சார்பாகவும் ஸ்ரீ காஞ்சி ஸ்ரீ காமகோடி பீடாதிபதி ஸ்ரீ ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் ஆதரவிலும் இந்த டிசம்பர்மீ 22உ முதல் பிரதிதினம் மாலை 3மணி முதல் ஆரணி பிரபல வக்கீலும் பரம ஆஸ்திகருமான ஸ்ரீ மான் காட்டு தேவாஜி ராவ் அவர்கள் பி. ஏ. யால் ஸ்ரீமத் ராமாயண கதை 2 பாகங்களாக சொல்லப் பட்டு வருகின்றன.

கோமயா இளம் பரீ சிதாகோ கலியாண பாகம் நடக்கது. மடம் வர்ணச்ரதர்மிகளால் ஏராளமாகக் கூடப் பட்டு இருக்கது.

ஸ்ரீ ராமபட்டாபிஷேகம் 1940ஐ ஜனவரி 1உ நடைபெறும். அத்தினத்தை மிக விமரிசையாகவும், பக்திச் சிரத்தையுடனும் கொண்டாட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன.

ம. கி. ராமசந்திர சர்மா.

இலந்துரை

ஸ்கந்த மண்டல பூஜை

இந்த உத்ஸவமானது எப்போதும்போல் இவ்வாண்டிலும் விசேஷமாக நடைபெற்றது. கார்த்திகைமீ 27உ ஸரஸ ருத்ரம். ஸ்ரீ கங்கா ஜடேச சர்மா அவர்களின் திவ்ய சந்தானலங்காரங்களுடன் புறப்பாடும் பிராம்மண ஸந்தர்ப்பனைகளும் நடந்து ஷெ பூஜை பூர்த்தியாகியது. (ந-கி)

Printedby S, Kalyanasundaram at the Sri Janardhana Printing Works, Ltd., Town High School Road, Kumbakonam,
Published by A. Gopaladesikachariar and S. Kalyanasundaram,